

மக்கள் மனமறிந்த வங்கி

மக்கள் வங்கி

பெயர் அனைத்தையும் கூறுகின்றது!

ஆண்டறிக்கை 2012

இலங்கை வாழ் மக்களுக்கு...

மக்கள் வங்கி எப்பொழுதும்... மக்களின் வங்கியாக தொடர்ந்து செயற்பட்டு வந்துள்ளது. எமது ஸ்தாபக குறிக்கோள் இன்று வரையில் மாறாமல் அதே நிலையில் நிலைத்து வருகின்றது... மக்களுக்கு பணியாற்றுவதற்கே எமது வங்கி ஸ்தாபிக்கப்பட்டது. உண்மையிலேயே கடந்த பல வருடங்களாக நாங்கள் வளர்ச்சியடைந்து வந்திருக்கின்றோம்... எமது கிளைகளின் எண்ணிக்கையும், திட்டங்களின் தொகுப்பும் விரிவடைந்து வந்துள்ளன/எம்முடன் இணைந்துள்ள வாடிக்கையாளர்களினால் எமது செழிப்பு நிலையும் அதிகரித்து வந்துள்ளது.

இன்னும் பெயரிலும், பாணியிலும் நாங்கள் தொடர்ந்து...
மக்கள் வங்கியாக இருந்து வருகின்றோம்.

அறிக்கை உள்ளடக்கம்



பக்கம் 6
செயற்பாட்டு குறிகாட்டிகள்



பக்கம் 7
நிதிசார் குறிகாட்டிகள்



பக்கம் 8
தலைவரின் செய்தி



பக்கம் 14
பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளரின் மீளாய்வு



பக்கம் 22
பணிப்பாளர் சபை



பக்கம் 26
கூட்டு முகாமைத்துவம்



பக்கம் 32
நிறைவேற்று முகாமைத்துவம்



பக்கம் 34
வலய முகாமைத்துவம்



பக்கம் 35
வணிக மீளாய்வு



பக்கம் 50
நிதிசார் மீளாய்வு



பக்கம் 57
நீடித்திருத்தல் தொடர்பான பிற்சேர்க்கை



பக்கம் 81
புகைப்படத் தொகுப்பு - 2012



பக்கம் 85
இணங்கியொழுகல் அறிக்கை



பக்கம் 87
நிறுவன ஆளுகை



பக்கம் 96
நட்டவச்ச முகாமைத்துவம்




பக்கம் 108
முதன்மை செயலாற்றுகை குறிகாட்டிகள்



பக்கம் 115
நிதிசார் அறிக்கைகள்



பக்கம் 243
பின்னிணைப்புக்கள்



கிராமப் பிரதேசங்களிலிருந்து சேமிப்புக்களைத் திரட்டுவதற்கும், அபிவிருத்திச் செயன்முறையில் அவற்றைப் பயன்படுத்திக் கொள்வதற்குமென 1961 ஆம் ஆண்டில் மக்கள் வங்கி ஸ்தாபிக்கப்பட்டது. முன்னர் நிதிச் சேவைகள் தொழில் துறையிலிருந்து புறமொதுக்கப்பட்டிருந்த மக்கள் பிரிவினருக்கு வங்கித்தொழில் சேவைகளை வழங்குவதற்கென அது ஸ்தாபிக்கப்பட்டது. கடந்து ஐம்பதாண்டு காலமாக கிராமிய மற்றும் நகரப் பிரதேசங்களில் அபிவிருத்தியைத் தூண்டி விடுவதற்கும், நிலைமாற்றம் கண்டு வரும் பொருளாதாரமொன்றுக்கு ஆதரவளிப்பதற்குமென நாங்கள் நிதித் துறைத் திட்டங்களைப் பயன்படுத்தி வந்துள்ளோம்.

வங்கி முற்றிலும் வேறுபட்ட ஒரு பொருளாதாரச் சூழலில் தனது வர்த்தகச் செயற்பாடுகளை ஆரம்பித்தது. அப்பொழுது நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்து 13 ஆண்டுகள் மட்டுமே கழிந்திருந்ததுடன், நிதிச் சேவைகள் தொழில் துறையின் பல பாகங்கள் ஆரம்ப அபிவிருத்திக் கட்டத்தில் இருந்து வந்தன. அரசின் மூலம் நெறிப்படுத்தப்படும் பொருளாதார வளர்ச்சி அக்கால கட்டத்தில் வலியுறுத்தப்பட்டு வந்ததுடன், அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சிகள் பொருளாதாரத்தை முன்னகர்த்திச் செல்லும் உந்து சக்திகளாக நோக்கப்பட்டு வந்தன.

இன்று நாங்கள் முற்றிலும் வேறுபட்ட ஒரு சூழ்நிலையில் செயற்பட்டு வருகின்றோம். நாட்டின் தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி 2500 அமெரிக்க டொலர் மட்டத்தைத் தாண்டிச் சென்றிருப்பதுடன், அபிவிருத்தியை உந்திச் செல்வதற்கென அரச துறையும், தனியார் துறையும் இணைந்து செயற்பட்டு வருகின்றன. அடுத்த ஐந்தாண்டு காலப் பிரிவின் போது மொத்த உள்நாட்டு உற்பத்தியை இரட்டிப்பாக்கிக் கொள்வதற்கும், உலகின் எழுச்சி கண்டு வரும் பொருளாதாரங்களின் குழுவில் இணைந்து கொள்வதற்கும் நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

நாடு அதன் தற்போதைய வளர்ச்சி மட்டங்களை தக்கவைத்துக் கொள்ள வேண்டுமானால் அதற்கென அதி நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய நிதிச் சேவைகள் தொழில் துறையொன்று அத்தியாவசியமாகும். புத்தாக்கம், புதிய சந்தைப் பிரிவுகளுடன் முனைப்புடன் செயற்படுதல் மற்றும் நட்டவச்சங்கள் குறித்து விழிப்பாக இருந்து வருதல் என்பன இன்றைய தருணத்தின் தேவைகளாக இருந்து வருகின்றன. மக்கள் வங்கி இன்று இந்தப் புதிய பாத்திரத்தை வகிப்பதற்கு தயார் நிலையில் உள்ளது. உயரளவில் செயற்தூண்டல் பெற்றிருக்கும் ஓர் ஊழியர் அணி, உறுதியான ஒரு நட்டவச்ச முகாமைத்துவ யுக்தி, 14 மில்லியனுக்கும் மேற்பட்ட வாடிக்கையாளர் அடித்தளம், 728 கிளைகள் மற்றும் சேவை நிலையங்கள், 420 தானியங்கி காசாளும் இயந்திரங்கள் மற்றும் ரூ. 873 பில்லியன் பெறுமதியான சொத்து அடித்தளம் என்பவற்றை அது தன்னகத்தே கொண்டுள்ளது.

நாங்கள் எமது திட்டங்களின் தொகுப்பை இடையறாது பலப்படுத்தி வருவதுடன், வாடிக்கையாளர் சேவையையும் மேம்படுத்தி வருகின்றோம். 2012 ஆம் ஆண்டில் எமது ரூ. 15.2 பில்லியன் வரிக்கு முன்னரான இலாபம், ரூ. 10.9 பில்லியன் வரிக்குப் பிந்திய இலாபம் என்பன, குறைவான 2.8% செயற்படாத கடன்களுடன் இணைந்த விதத்தில் அடுத்து வரும் வருடங்களில் இலங்கையின் வளர்ச்சி வேகத்திற்கு ஆதரவளிக்கக் கூடிய நிலையில் எம்மை வைத்துள்ளன.


எமது நோக்கு

முன்னேற்றத்துக்கான அவாவினைக் கொண்டிருக்கும் இலங்கை வாழ் மக்களின் வங்கியாக இருந்து வருதல்: பெறுமானத்தை உருவாக்குபவர்களாகவும், போட்டித் திறன் மிக்கவர்களாகவும் மற்றும் தற்சார்பு நிலை கொண்டவர்களாகவும் உருவாவதற்கு மக்களுக்கு வலுவூட்டுதல்.

எமது பணி

எமது வாடிக்கையாளர்களுக்கு
அனைவரையும் அரவணைக்கும் விதத்திலும், தேவைகளை நிறைவேற்றி வைக்கும் விதத்திலும், தொழில்சார் விதத்திலும் அதி உன்னத சேவையை வழங்குவதில் பெருமிதமடைதல்.

எமது உரிமையாளர்களுக்கு
சுயாதீனமாகவும், வர்த்தக ரீதியில் இலாபகரமானதாகவும் இருந்து வரும் அதே வேளையில், தேசிய பொருளாதாரத்துக்கு அனுகூலங்களை உருவாக்குதல்.



எமது விழுமியங்கள்

- நாட்டு மக்களுக்கு செல்வத்தை உருவாக்கிக் கொடுப்பது எமது இருப்புக்கான முதன்மைக் காரணமாக இருந்து வருகின்றது என நாங்கள் அங்கீகரிக்கின்றோம்.
- அனைத்துச் செயற்பாடுகளிலும் எமது வைப்புதாரர்களின் நலன்கள் குறித்து உச்சமட்ட அக்கறை செலுத்தும் வகையில் எமது கடமைகளை நாங்கள் நிறைவேற்றி வருகின்றோம்.
- உண்மையான, நியாயமான கொடுக்கல்வாங்கல்களுக்கு ஊடாக நாங்கள் எமது வாடிக்கையாளர்களுடன் நீண்ட கால, தார்மீக உறவுகளை மேம்படுத்தி வருகின்றோம்.
- அதிகார கெடுபிடிகளை குறைத்துக் கொள்வதன் மூலமும், முகாமைத்துவத்தின் வலுவான செயற்பாட்டின் ஊடாகவும், விரைவாக முடிவுகளை மேற்கொள்ளல் மற்றும் அமுல்படுத்தல் என்பவற்றுக்கு ஊடாகவும் நாங்கள் எமது வாடிக்கையாளர்களை முதன்மை ஸ்தானத்தில் வைத்திருக்கின்றோம்.
- நாங்கள் எமது ஊழியர்களுக்கு வலுவூட்டி வருகின்றோம். மேலும், அவர்கள் பொறுப்புக் கூற வேண்டியவர்களாக இருந்து வர வேண்டிய தேவையையும் வலியுறுத்துகின்றோம்.
- தனிநபர்களிலும் பார்க்க வங்கியின் நலன்களுக்கே நாங்கள் முன்னுரிமை வழங்குகின்றோம். அதன் மூலம் அனைத்து மட்டங்களிலும் தனிநபர் நாணயத்தின் அதியுயர் தராதரங்களை நாங்கள் வேண்டி நிற்கின்றோம்.
- பரஸ்பர மரியாதை மற்றும் நம்பிக்கை என்பவற்றைக் கொண்ட ஒரு சூழலை நாங்கள் உருவாக்குகின்றோம். அந்நிலையில், ஊழியர்கள் தமது செயல்திறனை எடுத்துக் காட்டக் கூடியவர்களாகவும், தமது முழுமையான அடைவு மட்டங்களை சாதித்துக் கொள்ளக் கூடியவர்களாகவும் இருந்து வருகிறார்கள்.
- உயரளவில் செயலாற்றுகையை கொண்டிருக்கும் ஊழியர் அணிகளை ஊக்குவிப்பதன் மூலம் நாங்கள் எமது வணிகச் செயற்பாடுகளை அபிவிருத்தி செய்து வருகின்றோம். இந்த அணிகள் ஒவ்வொரு ஊழியரினதும் திறன்களை வளர்ப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குவதுடன், ஓர் அர்ப்பணிப்புணர்வினையும் கொண்டுள்ளன. அவை சமூகத்துடன் பிணைப்புக்களையும் ஏற்படுத்திக் கொண்டுள்ளன.
- அனைத்துச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு முழுமையாக இணங்கியொழுகுவதற்கும், நிறுவன ஆளுகை, வெளிப்படைத் தன்மை, வெளிப்படுத்துகை மற்றும் தார்மீக நடத்தை என்பன தொடர்பான அதியுயர் தராதரங்களை பேணுவதற்கும் நாங்கள் எம்மை அர்ப்பணித்துக் கொண்டுள்ளோம்.
- சுற்றாடல் மற்றும் நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்தி என்பவற்றை மேம்படுத்தும் சிறந்த பிரஜைகளாக நாங்கள் நடந்து கொள்கின்றோம்.

எமது சமூகத்திற்கு

நாடெங்கிலும் கல்வி, கலாசாரம் மற்றும் சுற்றாடல் என்பவற்றின் மேம்பாட்டுக்கு பங்களிப்புச் செய்வதன் மூலம் வலுவூட்டல் மற்றும் நிலையான அபிவிருத்தி என்பவற்றுக்கு ஆதரவளித்தல்.

எமது ஊழியர்களுக்கு

தமது உயர் மட்ட செயலாற்றுகையிலிருந்து பயனடைந்து கொள்ளும் பொருட்டு எமது ஊழியர்களுக்கு வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுத்தல்/ஓர் அணியில் செயற்படும் திறன்மிக்க, தன்னம்பிக்கையுடன் கூடிய, பெறுமதியை உருவாக்கும் தொழில்சார் தனிநபர்களாக உருவாவதன் மூலம் பயன்களை உருவாக்குதல்.




செயற்பாட்டு குறிகாட்டிகள்




வங்கித் தொழிற்துறையில் 50 வருடங்களுக்கு மேல்.



சுமார் 14 மில்லியனுக்கு மேற்பட்ட வாடிக்கையாளர் கணக்குகள்.



இப்போது முழு கிளை வலையமைப்பும் இணையத்தளத்தின் மூலம் இணைக்கப்பட்டுள்ளது.



நாட்டின் அனைத்து பகுதிகளையும் உள்ளடக்கும் விதத்தில் தானியங்கி காசாளரும் (ATM) இயந்திரங்களின் எண்ணிக்கை 420 ஆக அதிகரித்துள்ளது.



இலங்கை அரசாங்கத்துக்கு வரிகள், பங்கிலாபங்கள் மற்றும் விதிப்பனவுகள் என்பவற்றின் வடிவில் ரூ. 12.3 பில்லியன் செலுத்தப்பட்டது.



வங்கியின் குறியீட்டுப் புள்ளிகள் தரமுயர்த்தப்பட்டிருந்தன - பிட்ச் குறியீடு (Fitch Rating) (சாதகமாக) AA+ ஆகவும், RAM குறியீடு AAA ஆகவும் இருந்து வந்தன.



வரிக்கு பின்னர் இலாபம் ரூ. 10.9 பில்லியனை எட்டியுள்ளது.



வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை 347 ஆகவும், சேவை நிலையங்களின் எண்ணிக்கை 381 ஆகவும் அதிகரித்துள்ளதுடன், எமது மொத்த கிளை வலையமைப்பு 728 ஆக விரிவடைந்துள்ளது இது இலங்கையின் மிகப் பெரிய வங்கிக் கிளை வலையமைப்பாகும்.

நிதிசார் குறிகாட்டிகள்

	2012	2011	%
இலாபம் தொடர்பான செயலாற்றுகை			
வரிக்கு பின்னர் இலாபம் (ரூ. மில்)	10,894	10,446	4.3
மூலதனம் மற்றும் ஒதுக்குகள் (ரூ. மில்)	29,205	23,089	26.5
உற்பத்தித் திறன்			
தேறிய வருவாய் (ரூ. மில்)	43,310	36,431	18.9
செலவு/வருமான விகிதம் (%)	55.8	56.1	–
ஊழியர்கள் (நிரந்தரம்)	7,823	8,249	(5.2)
ஊழியர் ஒருவருக்கான இலாபம் (ரூ. '000)	1,393	1,266	10.0
வருட முடிவு தரவு			
மொத்த கடன்கள் மற்றும் வருமதிகள் (ரூ. மில்.)	660,624	508,235	30.0
வைப்புக்கள் (ரூ. மில்)	683,951	550,226	24.3
மொத்த சொத்துக்கள் (ரூ. மில்)	873,107	662,077	31.9
முதன்மை செயலாற்றுகை குறிகாட்டிகள்			
சொத்துக்கள் மீதான ஆதாயம் - வரிக்கு முன்னர் (%)	2.0	2.6	–
பங்கு மூலதனம் மீதான ஆதாயம் (%)	41.7	49.2	–
மூலதன நிறைவு விகிதம் (%)	14.0	14.8	–
நிதிப்படுத்தப்படாத வருமானம்/தேறிய வருமானம் (%)	21.7	16.8	–

தலைவரின் செய்தி



பணிப்பாளர் சபையின் சார்பில் 2012 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான ஆண்டறிக்கையையும், கணக்குகளையும் உங்கள் முன் சமர்ப்பிப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். இந்த ஆண்டறிக்கையும், கணக்குகளும் 51 வருட காலத்துக்கு மேற்பட்ட வங்கியின் வெற்றிக் கதைக்கு சான்று பகிர்கின்றன. இந்த வெற்றிக் கதை, தேச மக்களுக்கான சமூகப் பெறுமதிகளை உருவாக்கும் விடயத்தில் வங்கியின் நிலையான செயற்பாடுகளை பிரதிபலிக்கின்றது.

நிதிச் சேவைகள் துறை நாட்டின் அபிவிருத்தியில் ஒரு முதன்மையான தூண்டுகோல் கருவியாக இருந்து வருகின்றது. வங்கித்தொழில் துறை கொண்டிருந்த ரூ. 5,210 பில்லியன் மொத்தச் சொத்துக்களின் தொகுப்பு இதனை நன்கு நிரூபித்துக் காட்டுகின்றது. 2012 ஆம் ஆண்டின் முடிவின் போது, வங்கித்தொழில் துறை மொத்தம் 2,193 வங்கிக் கிளைகளையும், 4,103 ஏனைய வங்கித்தொழில் சேவை நிலையங்களையும், 2,331 தானியங்கி காசாளரும் இயந்திரங்களையும் (ATM) கொண்டிருந்தது.

பொருளாதாரமும் வங்கித்தொழில் துறையும்

உலகளாவிய ரீதியில் வங்கித்தொழில் துறை, உலகளாவிய நெருக்கடிகள் மற்றும் அதிகளவுக்கு உள்ளூர் மட்டங்களிலான சவால்கள் என்பவற்றுக்கு மத்தியிலிருந்து 2012 இல் எழுச்சியடைந்ததுடன், அது இவற்றுக்கு எதிர்வினையாற்றும் பல்வேறு கட்டங்களுக்கூடாக மெதுவாக முன்னோக்கிச் சென்று கொண்டிருந்தது. வங்கித்தொழில் துறையில் இடம்பெற்று வரும் அமைப்பு ரீதியான மாற்றங்களின் பின்னணியில் இருந்து வரும் முதன்மையான சக்திகளாக ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பா என்பன இருந்து வருகின்றன. ஆசியா மற்றும் ஜப்பான் ஆகிய பிராந்தியங்களைச் சேர்ந்த அதிகாரிகள் பாரிய சீர்த்திருத்தங்களை முன்னெடுப்பது போல் தெரியவில்லை. இலங்கையின் பொருளாதாரமும் 2012 இல் உயர் அளவிலான உலகளாவிய சவால்களையும், உள்நாட்டுச் சவால்களையும் எதிர்கொண்டிருந்தது. உலகளாவிய ரீதியில் ஐரோப்பிய அரசுகளின் கடன் நெருக்கடி, ஐக்கிய அமெரிக்காவில் ஏற்பட்ட அரசிறை நெருக்கடி மற்றும் தொடர்ச்சியாக நிலவி வந்த உயரளவிலான பெற்றோலிய விலைகள் என்பன பொருளாதார அபிவிருத்திக்கு சவால் விடுத்தன. அதே வேளையில், கடனுக்கான மிதமிஞ்சிய கேள்வி, உயர் அளவிலான இறக்குமதிகள் மற்றும் மோசமான காலநிலை போன்ற காரணிகள் என்பன உள்ளூர் மட்டங்களில் பாதிப்புக்களை ஏற்படுத்தியிருந்தன.

இந்த மோசமான நிலைமைகளுக்கு மத்தியில், உள்நாட்டு யுத்தத்தின் முடிவு மற்றும் பொருளாதாரத்தை தூண்டுதல் மற்றும் வளர்ச்சி மூலங்களை பன்முகப்படுத்துதல் என்பவற்றின் மீது அரசாங்கம் முழுமையாக கவனம் செலுத்தியமை என்பவற்றை அடுத்து இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வாய்ப்புக்கள் விருத்தியடைந்து காணப்பட்டன. பொருளாதாரம் 2012 இல் சுமார் 6.5% மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியை பதிவு செய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது. கொந்தளிப்புக்கள் சூழ்ந்த உலக பொருளாதாரம் மற்றும் இந்த வருடத்தின் தொடக்கத்தின் போது எதிர்கொள்ள நேரிட்ட பெரும்பாலான வெளி மற்றும் உள் சவால்கள் என்பவற்றின் பின்புலத்தில் நோக்கும் பொழுது, இது குறிப்பிடத்தக்க ஒரு சாதனையாக காணப்படுகின்றது.

> மக்களின் வங்கியாக இருந்து வருதல் என்ற சிறப்பம்சத்தை சாராம்சப்படுத்தும் விதத்தில் கூட்டுத்தாபனங்கள், அதேபோல தனிநபர்கள் ஆகிய இரு தரப்பினரதும் தேவைகளை நிறைவேற்றி வைப்பதற்கு வங்கித்தொழில் வசதிகளை வழங்கும் எமது ஆணைப்பத்திரத்தை நாங்கள் நிறைவேற்றி வைத்தோம். இது கிராமிய சமூகங்களுக்கு வழங்கப்பட்ட நுண்நிதி வசதிகளையும் உள்ளடக்குகின்றது.

நிதிச் சேவைகள் துறை நாட்டின் அபிவிருத்தியில் ஒரு முதன்மையான தூண்டுகோல் கருவியாக இருந்து வருகின்றது. வங்கித்தொழில் துறை கொண்டிருந்த ரூ. 5,210 பில்லியன் மொத்தச் சொத்துக்களின் தொகுப்பு இதனை நன்கு நிரூபித்துக் காட்டுகின்றது. 2012 ஆம் ஆண்டின் முடிவின் போது, வங்கித்தொழில் துறை மொத்தம் 2,193 வங்கிக் கிளைகளையும், 4,103 ஏனைய வங்கித்தொழில் சேவை நிலையங்களையும், 2,331 தானியங்கி காசாளும் இயந்திரங்களையும் (ATM) கொண்டிருந்தது. அனைவருக்கும் சேவைகளை பெற்றுக் கொடுக்கும் இந்த எண்ணக் கருவை உறுதிப்படுத்துவதில் முனைப்பு மிகுந்த ஒரு பாத்திரத்தை வகித்து வரும் இலங்கை மத்திய வங்கி, இந்தப் புதிய விநியோக நிலையங்களுக்காக ஒப்புதல் வழங்கும் செயன்முறையை துரிதப்படுத்தியதுடன், தொடர்ச்சியான மேற்பார்வையினையும்,

வங்கி மிகச் சிறந்த விதத்தில் அதன் ஒட்டுமொத்த செயலாற்றுகையை சாதித்துக் கொண்டுள்ளது. அது ரூ. 10.9 பில்லியனை வரிக்குப் பின்னரான இலாபமாக பெற்றுக் கொண்டிருந்ததுடன், அத்தொகை கடந்த ஆண்டின் அளவிலும் பார்க்க 4% அதிகரிப்பை காட்டுகின்றது. அதே வேளையில், 2012 இல் குழுமத்தின் வரிக்குப் பின்னரான இலாபம் ரூ. 11.9 பில்லியனாக இருந்து வந்தது

வழிகாட்டுதலையும் வழங்கி வந்தது. அதே வேளையில் அது ஒப்புதல் வழங்கும் நடைமுறைகள், பாதுகாப்பு பொறிமுறைகள் மற்றும் தற்போதைய வங்கித்தொழில் சேவை நிலையங்களை வகைப்படுத்தலை மீளாய்வு செய்தல் என்பவற்றையும் விவேகபூர்வமான விதத்தில் மேற்கொண்டு வந்தது. பாசல் II தரநியமங்கள் அமுல் செய்யப்பட்டு, கண்காணிக்கப்பட்டு வருவதுடன் இணைந்த விதத்தில் மூலதன நிறைவு விகிதம் குறைந்தபட்ச மட்டமான 10% க்கும் மேல் பராமரிக்கப்பட்டு வந்துள்ளது என்பதனை இங்கே முக்கியமாக குறிப்பிடுதல் வேண்டும். பாசல் II முறையின் கீழ் (உள்ளக ஆற்றல் அளவு மதிப்பீட்டுச் செயன்முறை கொண்ட) ICAAP இன் அமுலாக்கல் மற்றும் மேற்பார்வை மீளாய்வு செயன்முறை (SRP) என்பன குறித்த ஆலோசனை பத்திரம் வெளியிடப்பட்டது.

வெளிநாடுகளில் தொழில் புரிபவர்கள் அனுப்பி வைக்கும் பணத் தொகைகளில் குறிப்பிடத்தக்க விதத்திலான ஒரு அதிகரிப்பு ஏற்பட்டதுடன், அது 6 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்து வந்தது. பல முக்கியமான காரணிகள் இதற்கு பங்களிப்புச் செய்திருந்தன. இது 16.8% அதிகரிப்பை பதிவு செய்திருந்ததுடன், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10% ஆக காணப்பட்டது. வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் NRFC கணக்குகளை ஆரம்பிப்பதனை ஊக்குவிக்கும் பொருட்டு பெருந்தொகையான உபாய ரீதியான மேம்பாட்டு முன்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. மக்கள் வங்கியினால் மேற்கொள்ளப்பட்டு வந்த முன் முயற்சிகளும் இவற்றில் அடங்கியிருந்தன. உலகளாவிய ரீதியிலான வலையமைப்பு மற்றும் பிரசன்னம் என்பவற்றின் பாராட்டத்தக்க விரிவாக்கத்தின் மூலம் இந்த முன்முயற்சிகளுக்கு ஆதரவளிக்கப்பட்டு வந்தது. இது குறிப்பாக, மத்திய கிழக்கு, அவுஸ்திரேலியா, பிரான்ஸ், கனடா மற்றும் சிங்கப்பூர் ஆகிய பிராந்தியங்களில் இலங்கையின் பல்வேறு வர்த்தக வங்கிகளினால் முன்னெடுக்கப்பட்ட ஒரு முன்முயற்சியாக இருந்து வந்தது. எமது சொந்த திட்டமான People's eRemittancce திட்டத்தையும் உள்ளடக்கிய விதத்தில் இணையதளத்தை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்ட திட்டங்களும் இந்த அதிகரிப்புக்கு பங்களிப்புச் செய்திருந்தன. 2012 ஆம் வருடத்தின் முதல் அரைப் பாகத்தின் போது, வெளிநாட்டு தொழில்களுக்காக நாட்டை விட்டுச் செல்பவர்களின் எண்ணிக்கையில் 9.9% அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. குடிபெயர்ந்து செல்லும் தொழிலாளர்களில் தொழில்சார் பிரிவுகளைச் சேர்ந்தவர்களில் 33% அதிகரிப்பு காணப்பட்டது.

மக்கள் வங்கி என்ற முறையில் எமது விழுமியங்களை எடுத்துக் காட்டும் விதத்தில் கூட்டுத்தாபனங்களினதும் அதே போல தனிநபர்களினதும் தேவைகளை நிறைவேற்றி வைக்கும் பொருட்டு நாங்கள் வங்கித்தொழில் வசதிகளை வழங்கும் எமது ஆணைப் பத்திரத்தை நிறைவேற்றி வைத்தோம். கிராமிய சமூகங்களுக்கு நுண்நிதி வசதிகளை வழங்குவதனையும் இது உள்ளடக்கியிருந்தது. மக்கள் வங்கி மஹிந்த சிந்தனையை அமுல் செய்யும் மிகவும் முக்கியமான ஒரு ஊக்கியாக இருந்து வந்திருப்பதுடன், அதன் பிரகாரம் எமது கொள்கைகள் நாட்டின் முன்னேற்றத்துடன் இணைந்து செல்லும் கொள்கைகளாக இருந்து வந்தன. அவை உண்மையிலேயே எமது வங்கி ஒரு 'மக்கள் வங்கியாக' செயற்படுவதனை உறுதிப்படுத்தும் விதத்தில் இருந்து வந்தன.

நிதி நிலைமை

வங்கி அதன் ஒட்டுமொத்த செயலாற்றுகையை பொறுத்தவரையில் சிறந்த விதத்தில் செயற்பட்டு வந்துள்ளது என்பதனை இங்கு அறிக்கையிடுவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். அது ரூ. 10.9 பில்லியனை வரிக்குப் பின்னரான இலாபமாக ஈட்டிக் கொண்டிருப்பதுடன், கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் பொழுது இது 4% அதிகரிப்பை காட்டுகின்றது. அதே வேளையில், குழுமம் 2012 ஆம் ஆண்டில் 11.9 பில்லியனை வரிக்குப் பின்னரான இலாபமாக ஈட்டிக் கொண்டுள்ளது. இவ்வதிகரிக்கும் போக்கு வங்கியின் மொத்த வியாபாரத்திலும், அதே போல வங்கி மற்றும் குழுமம் என்பவற்றின் வியாபாரத்தின் புரள்விலும் ஒரு சாதாரண நிலைமையாக தொடர்ந்தும் நிலைத்திருந்து வந்துள்ளது. வங்கி மற்றும் குழுமம் என்பவற்றின் இந்தத் தொகைகளில் முறையே 39% மற்றும் 38% அதிகரிப்புக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதாவது, இத்தொகைகள் முறையே ரூ. 94.8 பில்லியனாகவும், ரூ. 110 பில்லியனாகவும் இருந்து வந்தன. தேறிய செயற்பாட்டு வருமானம் 10% ஆல் அதிகரித்து, வருட இறுதியில் ரூ. 39.4 பில்லியனாக இருந்து வந்தது. அதே வேளையில் எமது மூலதனம் மற்றும் ஒதுக்கு என்பன இவ்வாண்டில் ரூ. 29.2 பில்லியனாக அதிகரித்திருந்தன. திறைசேரிக்குச் செலுத்தப்பட்ட ரூ. 12.3 பில்லியன் பெறுமதியான பங்கிலாபங்கள் மற்றும் வரிகள் என்பன நாட்டின் முன்னேற்றத்திற்கு அத்தியாவசியமான தேசிய அபிவிருத்திக்கான எமது பங்களிப்பாக இருந்து வருகின்றது என்பது இங்கே குறிப்பிடத்தக்கதாகும்.

பிட்ச் ரேட்டிங் லங்கா நிறுவனம் வங்கிக்கு AA+ (உறுதியானது) தரக் குறியீட்டினை வழங்கியுள்ளது. கடந்த இரண்டு வருட காலப் பிரிவின் போது நாங்கள் தொடர்ச்சியாக ஆரோக்கியமான சம்பாத்தியங்களை பதிவு செய்துள்ளோம் என்பதனை இது எடுத்துக் காட்டுகின்றது.

மக்கள் வங்கியினால் எடுத்துக் காட்டப்பட்டிருக்கும் பாராட்டத்தக்க செயலாற்றுகை, அது உண்மையான ஒரு மக்கள் வங்கியாக தனது ஸ்தாபக கோட்பாட்டினை உறுதியாக பின்பற்றி வருகின்றது என்பதனை எடுத்துக் காட்டுகின்றது. இக்கோட்பாடு வங்கியில் ஆழமாக வேரூன்றியுள்ளது. நாட்டின் அனைத்து பாகங்களுக்கும் சேவைகளை வழங்கும் பொருட்டு எமது சேவைகளின் விஸ்தரிப்பை அதிகரிக்கும் விடயத்தில் நாங்கள் முழுமையாக கவனம் செலுத்தி வருவதுடன், எமது பிரஜைகளை பொறுத்தவரையில் தொட்டில் தொடக்கம் சுடுகாடு வரையில் நாங்கள் திட்டங்களை வழங்கி வருகின்றோம். பொருளாதார பங்காளார்களாகவும் நாம் இருந்து வருகின்றோம். நுண்மட்ட, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முனைவோருக்கு உதவுவதற்கூடாக அல்லது பாரிய நிறுவனங்களுக்கு உதவுவதற்கூடாக நாங்கள் இதனை மேற்கொண்டு வருகின்றோம். எமது முதலீடுகளை துல்லியமான விதத்திலும், செயல்முனைப்புடன் கூடிய விதத்திலும் மேற்கொண்டு வருகின்றோம். அந்த நிலையில் முதலீடு மீதான ஆதாயங்கள் எப்பொழுதும் உயர் மட்டங்களிலிருந்து வருவதுடன், அவை அனைத்தும் எமது வெற்றியை எடுத்துக் காட்டுகின்றன.

வங்கி தொடர்ந்தும் போட்டியில் முன்னணியில் இருந்து வருவதற்கான ஒரு சில காரணங்கள் இவையாகும். விசேடமாக 2012 இல் நிலவிய உயர் வட்டி விகிதங்கள் மற்றும் வங்கித்தொழில் துறைக்குள் நிலவிய கடுமையான போட்டி என்பவற்றின் பின்னணியில், ஊசலாட்டத் தன்மையும் சவால்களும் நிறைந்திருந்த ஒரு சூழலில் செயற்பட்டிருந்த போதிலும் வங்கி இதனை சாதித்துக் கொண்டுள்ளது.

நன்றி நவிலல்

நாங்கள் எண்ணற்ற விருதுகளை வென்றிருக்கின்றோம்/தொடர்ச்சியாக ஆறு வருடங்களாக SLIM - நீல்சன் மக்கள் விருதுகள் வழங்கும் வைபவங்களில் இலங்கையின் மிகப் பிரபல்யமான வங்கி என்ற விருதினை நாங்கள் பெற்று வந்துள்ளோம். தேசத்தின் உண்மையான ஒரு பங்காளாராக நாங்கள் செயற்பட்டு வருகின்றோம் என்பதனை இது நிரூபித்துக் காட்டுகின்றது. நிலைத்து நிற்கக்கூடிய செயலாற்றுகை கண்ணோட்டத்திலும் கூட மக்கள் வங்கி ஒரே சீரான விதத்தில் குறியீட்டுப் புள்ளியொன்றை பெற்றுக் கொண்டுள்ளது. பிட்ச் ரேட்டிங் லங்கா நிறுவனம் வங்கிக்கு AA+ (உறுதியானது) குறியீட்டுப் புள்ளியை வழங்கியிருப்பது இதனை எடுத்துக் காட்டுகின்றது. கடந்த இரண்டு வருடங்களாக நாங்கள் ஒவ்வொரு வருடத்தின் போதும் ஆரோக்கியமான சம்பாத்தியங்களை பதிவு செய்துள்ளோம்.

எதிர்கால நோக்கு

எமது 2009 - 2016 உபாய ரீதியான திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு நாங்கள் உரிய தயார் நிலையில் இருந்து வருகின்றோம். வங்கியின் பங்கீடுபாட்டாளர்கள் அனைவருக்கும் நிலையான பெறுமதியை உருவாக்குவதில் நாங்கள் முன்னணியில் இருந்து வருகின்றோம். இவ்வருடத்தின் போது கட்டட நிர்மாணத் துறை குறிப்பிடத்தக்க ஒரு வளர்ச்சியை சாதித்துக் கொண்டிருந்ததுடன், அது நிலையான, மீள்கட்டுமான மற்றும் ஆற்றல் அபிவிருத்தியினால் ஆதரவளிக்கப்பட்ட நிலையில் இக்காலப் பிரிவின் போது 17.9% ஆக விரிவடைந்திருந்தது. துரிதப்படுத்தப்பட்ட உள்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்பாடுகளில் அரசாங்கம் முழுமையாக கவனம் செலுத்தி வரும் நிலையில் கட்டட நிர்மாணத் துறை வளர்ச்சிக்கான உயர் அளவிலான வாய்ப்புக்களை கொண்டுள்ளது. துறைமுகங்கள், விமானப் போக்குவரத்து, சுற்றுலா தொழில்துறை, கப்பல் போக்குவரத்து ஆகிய அனைத்துத் துறைகளும் வளர்ச்சிக்கான பாரிய வாய்ப்புக்களை எடுத்துக் காட்டுகின்றன.

மக்கள் வங்கி எடுத்துக் காட்டிய பாராட்டத்தக்க செயலாற்றுகை, உண்மையிலேயே மக்களின் ஒரு வங்கியாக இருந்து வர வேண்டும் என்ற அதன் ஸ்தாபக குறிக்கோளுக்கு அது தொடர்ந்தும் விசுவாசமாக இருந்து வருகின்றது என்ற விடயத்தில் ஆழமாக வேரூன்றியுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் அபிவிருத்தி மலர்ந்து வருவதுடன் இணைந்த விதத்தில், இப்பிரதேசங்களில் நிலவி வரும் பாரிய அளவிலான உள்ளார்ந்த ஆற்றல்களை இனங்கண்டிருக்கும் நிலையில், வங்கி அதன் வகிபாத்திரத்தை உயர்த்திக் கொண்டுள்ளது. மிகவும் வலுவான தொழில்முனைவுக் கலாசாரம் தொடக்கம் விவசாய வல்லமை வரையில் வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்கள் எப்பொழுதும் ஆற்றலையும், செயல்துடிப்பையும் எடுத்துக் காட்டி வந்துள்ளன.

இது தவிர, 2016 ஆம் ஆண்டு வங்கித்தொழில் துறையையும் உள்ளிட்ட முக்கியமான பல துறைகளை பொறுத்தவரையில் பாரிய மாற்றங்களை எடுத்து வரும் ஒரு ஆண்டாக இருந்து வரும் என்பதில் சந்தேகமில்லை. இந்தத் துறையில் மொத்தச் சொத்துக்கள் ரூ. 9,334 பில்லியனாக இருந்து வரும் என இலங்கை மத்திய வங்கி எறியமிட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டளவில் வங்கித்தொழில் துறையில் வைப்புக்கள் ரூ. 6,500 பில்லியன் புள்ளியை எட்டும் எனவும், கடன்கள் மற்றும் முற்பணங்கள் என்பன ரூ. 6,000 பில்லியனாக இருந்து வரும் எனவும் மத்திய வங்கி மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. தனியார் துறைக்கான கடனளிப்பு ரூ. 4,143 பில்லியனை எட்டும் என மதிப்பிடப்பட்டுள்ளது. பரவலான முதலீட்டு வாய்ப்புக்களையும், தெளிவான முதலீட்டு பிரிவுகளையும் அறிமுகம் செய்வதற்கான உறுதியான ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் பங்குச் சந்தையும் ஒரு புதிய செயல் வேகத்தை பெற்றுக் கொள்ளவுள்ளது. நீண்ட கால நிதிகள் மற்றும் வளர்ச்சியடைந்து வரும் கம்பெனித் துறைக்கான முறிச் சந்தை 2016 இல் ரூ. 1,000 பில்லியனாக இருந்து வரும். நாட்டின் இந்த பொருளாதார செழிப்பு நிலையின் அனுகூலங்களை அறுவடை செய்து கொள்வதற்கென நாங்கள் தயாராக இருந்து வருகின்றோம்.

வடக்கிலும், கிழக்கிலும் துரிதமான அபிவிருத்தி இடம்பெற்று வரும் நிலையில் இந்த இரு பிரதேசங்களிலும் வங்கி அதன் பாத்திரத்தை மேலும் மேம்படுத்தியுள்ளது. இப்பிரதேங்களில் நிலவி வரும் பாரிய அளவிலான வாய்ப்புக்களை இனங்கண்டு கொள்ளும் விதத்தில் அது இதனை மேற்கொண்டு வருகின்றது. மிகவும் உறுதியான தொழில்முனைவு கலாசாரம், விவசாயத் திறமை என்பவற்றை உள்ளடக்கிய விதத்தில் வடக்கு மற்றும் கிழக்கு பிராந்தியம் எப்பொழுதும் வலிமையையும், செயற்துடிப்பையும் காட்டி வந்துள்ளது. அந்த வலிமையையும், செயற்துடிப்பையும் ஆக்கபூர்வமான, நிலைபேறான உற்பத்தித் துறைகளுக்குள் நெறிப்படுத்துவதற்கு நாங்கள் திட்டமிட்டுள்ளோம். இது நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை மேலும் தூண்டி விடும் என நாம் நம்புகின்றோம். உண்மையான ஒரு மக்கள் வங்கியாக இருந்து வருவதன் மூலம் நாங்கள் எங்கள் உண்மையான கடப்பாட்டினை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கு முயன்று வருகின்றோம். நாட்டின் ஒவ்வொரு மூலைமுடுக்கினதும் நிதிசார் உறுதிப்பாட்டினை மேம்படுத்துவதன் மூலம் இதனை சாதித்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கின்றோம்.

பாராட்டுதல்கள்

பிரதம நிறைவேற்று அதிகாரி-பொது முகாமையாளரின் தலைமையில் செயற்பட்டு வரும் வங்கியின் முகாமைத்துவ அணியின் அர்ப்பணிப்பு மற்றும் கடப்பாடு என்பன இல்லாதிருப்பின் இவை எதுவும் சாத்தியமாக இருக்க முடியாது. வங்கியின் 2009 - 2016 உபாய ரீதியான திட்டத்திற்கு செயல் வடிவம் கொடுப்பதில் முகாமைத்துவ அணி மேற்கொண்டு வந்த அயராத முயற்சிகளுக்கு எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும், நாங்கள் அரசாங்கத்தின் பத்தாண்டு நோக்குடன் ஒருங்கிணைந்துள்ள ஒரு பங்காளராக இருந்து வருவதுடன், அதில் பயனுள்ள ஒரு பாத்திரத்தை வகிக்க வேண்டியவர்களாகவும் இருந்து வருகின்றோம். தேவையான அனைத்து விடயங்களும் ஸ்தாபிக்கப்பட்டு, அமுல் செய்யப்படுவதனை உறுதிப்படுத்திக் கொள்வது எமது கடமையாக இருந்து வருகின்றது. முன்னேற்றத்திற்கான இந்தப் பாதையை வடிவமைத்துக் கொள்வதில் எமது வாடிக்கையாளர்கள் மற்றும் பெறுமதிமிக்க வணிகப் பங்காளர்கள் ஆகியோரை உள்ளிட்ட விதத்தில் பல்வேறு பங்கீடுபாட்டாளர்களுடன் நாங்கள் தொடர்பாடல் செயன்முறைகளை முன்னெடுத்து வருகின்றோம். இந்தச் செயன்முறையில் பங்காளர்கள் என்ற முறையில் அவர்கள் முழுமையாக தம்மை அர்ப்பணித்துக் கொண்டுள்ளார்கள். அதன் பிரகாரம், எமது வாடிக்கையாளர்கள், பெறுமதி மிக்க வணிகப் பங்காளர்கள் மற்றும் எம்மைச் சூழ இருந்து வரும் சமூகத்தினர் ஆகிய அனைவருக்கும் அவர்கள் எமக்கு வழங்கிய இடையறாத பின்னூட்டல், எம்முடன் மேற்கொண்ட உரையாடல் மற்றும் கலந்துரையாடல் என்பவற்றுக்காக எனது நன்றியறிதலை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவை அனைத்தும் எமது அடிப்படை கோட்பாடுகளுக்கு நாங்கள் விசுவாசமானவர்களாக இருந்து வருவதனை உறுதிப்படுத்துவதற்கு உதவியுள்ளன.

அதே வேளையில், மக்கள் வங்கியின் முன்னாள் தலைவர் திரு. டபிள்யு.கருணாஜீவ அவர்களின் அகால மரணத்தையிட்டு எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். அன்னாரின் தூர நோக்குடன் கூடிய சிந்தனை மற்றும் வழிகாட்டுதல் என்பன வங்கியின் தற்போதைய வெற்றிக்கு பங்களிப்புச் செய்துள்ளன.

மிக வேகமாக நிலைமாற்றி வரும் சூழ்நிலைகளில் செயற்படுவதானது அவை சவால் மிக்கதாக இருந்து வர முடியும். இலங்கை மத்திய வங்கியின் ஆளுனர் மற்றும் அதிகாரிகள், திறைசேரியின் செயலாளர் மற்றும் பணிப்பாளர் சபையினர் ஆகியோருக்கு ஆளுகை, தார்மீக நெறிமுறைகள், வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புக் கூறும் நிலை என்பவற்றுக்கு எப்பொழுதும் முன்னுரிமை வழங்கி, அவற்றை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு நீங்கள் அனைவரும் வழங்கிய வழிகாட்டுதல்கள் மற்றும் தலைமைத்துவம் என்பவற்றுக்காக எனது முனமுவந்த நன்றிகளை தெரிவித்து கொள்கின்றேன்.

எமது திட்டங்களுக்கு ஆதாரமாக இருந்து வரும் வங்கியின் அனைத்து பங்கீடுபாட்டாளர்களினதும் அர்ப்பணிப்புடன் கூடிய ஆதரவு, எதிர்காலச் சவால்களை நாங்கள் எதிர்கொண்டு வரும் நிலையிலும் தொடர்ந்து எமக்குக் கிட்டும் என நான் நம்புகின்றேன்.



காமினி செனரத்
தலைவர்

மார்ச் 27, 2013

பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளரின் மீளாய்வு



2012 ஆம் ஆண்டின் போது நாங்கள் செயற்பட்ட சூழல் கணிசமான அளவில் சவால்களை கொண்டதாக இருந்து வந்தது/உலக பொருளாதார மந்தத்தில் எதிர்பார்க்கப்பட்ட மீட்சி எதிர்பார்த்த அளவிலும் குறைவானதாக இருந்து வந்ததுடன், இது பாரிய வெளிச் சூழலில் மீது ஊடுருவல் தாக்கங்களை எடுத்து வந்தது.

இந்த விடயத்தை கருத்தில் கொண்டும், இந்த மெதுவான மீட்சியின் தாக்கத்தை அவதானித்த நிலையிலும் இலங்கையும் மிக விவேகபூர்வமான விதத்தில் அதன் திட்டமிடப்பட்ட வளர்ச்சி இலக்குகளை மீள் பரிசீலனை செய்தது, குறிப்பாக, பின்வரும் நிலைமைகள் அதனை இதற்கு தூண்டியது: எண்ணெய் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு, அரேபிய வசந்தத்தின் இடையறாத தாக்கங்கள், மிக மோசமான இயற்கை அனர்த்தங்களின் தொடர்ச்சியான பாதிப்புக்கள், ஐரோப்பிய வலயம் தொடர்ச்சியான அதன் முரண்பாடுகளை எதிர்கொள்ள வேண்டியிருந்த நிலை, மீட்டெடுப்பு பொதிகள், ஒரு சில நாடுகளின் வங்குரோத்து நிலைமைகள் மற்றும் புதிய பொருளாதார வல்லரசாக உருவாகும் என எதிர்பார்க்கப்பட்ட ஆசிய பிராந்தியத்தின் ஒரு சில நாடுகள் இத்தகைய பிரச்சினைகளை கொண்டிருந்த நிலை. வளர்ச்சி இலக்கு 7% ஆக குறைக்கப்பட்டதுடன், 2012 ஆம் ஆண்டின் முடிவில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 6.5% ஆக இருந்து வந்துள்ளது. இந்த வளர்ச்சி உலக சராசரியிலும் பார்க்க பெருமளவுக்கு உயர்வாக இருந்து வருவதுடன், பிராந்தியத்தின் ஏனைய நாடுகளின் வளர்ச்சி மட்டத்திற்கு இணையானதாக இருந்து வந்தது. நாட்டின் முதன்மை செயலாற்றுகை குறிகாட்டிகள் தொடர்ச்சியாக அவற்றின் இலக்குகளை சாதித்துக் கொண்டிருந்தன. அரசிறை சூழலின் நிறைபேறான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு ஒரு சில சீராக்கங்களை செய்ய வேண்டியிருந்தது. இந்தப் பின்புலத்திலேயே இந்த ஆண்டில் மக்கள் வங்கி செயற்பட்டு வந்தது.

எனவே, மேலே குறிப்பிடப்பட்ட சவால்களுக்கு மத்தியிலும், செலாவணி வீதங்கள் தொடர்பாக எதிர்கொள்ள நேரிட்ட சவால்களுக்கு மத்தியிலும் கூட வங்கி மீண்டும் ஒரு முறை ஒரு முக்கியமான சாதனையை நிகழ்த்தியுள்ளது என்பதனை குறிப்பிடுவதில் மகிழ்ச்சியடைகின்றேன். கடந்த காலத்தில் நிலவி வந்த போக்கை ஒத்த விதத்தில் எமது இலாப வளைகோடு ஒரே சீரான விதத்தில் ஏறுமுகமாக இருந்து வந்துள்ளது.

2012 - 2014 புதிய கூட்டு ஒப்பந்தத்திற்கூடாக நிரந்தர ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட சம்பள அதிகரிப்புக்கள் காரணமாக இவ்வாண்டின் வரிக்கு முன்னரான இலாபம், 2011 ஆம் நிதியாண்டின் வரிக்கு முன்னரான இலாப மட்டத்திலும் பார்க்க ஓரளவுக்கு குறைவாக இருந்து வந்த போதிலும், வங்கியின் இலாப நிலை இடையறாது அதிகரித்து வந்துள்ளது. முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் பொழுது, வங்கியின் வரிக்குப் பின்னரான இலாபம் மிதமாக 4.3% வளர்ச்சியை பதிவு செய்திருந்தது. எனினும், குறைந்த வரி விகிதம் காரணமாக இந்த விகிதம் 10.9 பில்லியனாக காணப்பட்டது.

இங்கு நான் எனது அணியினரை பாராட்ட வேண்டும். எமது இலக்குகளை நாம் சாதித்துக் கொள்ள வேண்டுமென்பதிலும், ஒரு சில துறைகளில் இலக்குகளையும் தாண்டிச் செல்ல வேண்டுமென்பதிலும் உயர் அளவிலான செயற் தூண்டலையும், செயல் வேகத்தையும் கொண்டிருக்கும் தகுதி வாய்ந்த முகாமைத்துவ குழுவொன்றின் முன்னெடுப்புடன் இச்செயற்பாடுகள் முன்னெடுத்துச் செல்லப்பட்டுள்ளன. அவர்களே இந்த வெற்றியின் முதுகெலும்பாக இருந்து வந்துள்ளார்கள். தற்போதைய முகாமைத்துவ வழிகாட்டியான 2009 - 2016 உபாய ரீதியான திட்டத்துடன் இணைந்த விதத்தில் விவேகபூர்வமான முகாமைத்துவ யுக்தியொன்றை நாங்கள் பின்பற்றி வருகின்றோம். எழுச்சி கண்டு வரும் போக்குகளுடன் இணைந்த விதத்தில் நாங்கள் செயற்படுத்திய நடைமுறை ரீதியான மாற்றங்கள் எமது இந்த வெற்றிக் கதைக்கு மேலும் வலுச் சேர்த்துள்ளது என்பதனை நாங்கள் அவதானித்துள்ளோம்.

எமது நிதிசார் செயலாற்றுகை

வரிக்குப் பின்னரான இலாபம் மிதமான அளவிலான ஒரு வளர்ச்சியை காட்டியிருந்தது என நான் மேலே குறிப்பிட்டிருந்தேன். அதே வேளையில், இங்கே முக்கியமாக குறிப்பிடப்பட வேண்டிய மேலும் நிதிசார் சாதனைகளும் உள்ளன. இது தொடர்பான மேலும் விபரங்கள் கணக்குகள் தொடர்பான கூற்றில் தரப்பட்டுள்ளன.

மக்கள் வங்கி எப்பொழுதும் அரசின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்துடன் கைகோர்த்துச் சென்றுள்ளது. துரிதப்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமொன்று முன்னெடுத்துச் செல்லப்படும் இன்றைய கால கட்டத்தில் நாங்கள் முன்னரிலும் பார்க்க மிகவும் முக்கியமான பாத்திரத்தை வகிக்க வேண்டியுள்ளது என்பதனை அறிந்துள்ளோம். எமது திட்டங்கள் மற்றும் சேவைகள் என்பவற்றின் தொகுப்பை நாங்கள் இடையறாது அபிவிருத்தி செய்து வருவதுடன், அவற்றில் புதுமைப் புனைவுகளையும் அறிமுகம் செய்து வருகின்றோம். அதே வேளையில், எமது மிகப் பெரிய பங்குதாரரான அரசாங்கத்திற்கு நாங்கள் செலுத்தி வரும் வரிகள் மற்றும் பங்கிலாபங்கள் என்பன எமது தேசிய இலட்சியத்தின் முதுகெலும்பாக இருந்து வரும் உள்கட்டமைப்பு மற்றும் அபிவிருத்தி கருத்திட்டங்களுக்கு பெருமளவில் தேவைப்படும் நிதிப்படுத்தலை நேரடியாக பங்களிப்புச் செய்கின்றன என்பதனை இங்கு குறிப்பிட விரும்புகின்றோம். இந்த வருடத்தில் நாங்கள் இலங்கை அரசாங்கத்திற்கு 12.3 பில்லியனை பங்களிப்புச் செய்தோம். இத்தொகையில் 4.5 பில்லியன் பங்கிலாபங்களாக இருந்து வந்தது.

> அரசின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தில் எப்பொழுதும் பங்கேற்று வந்திருக்கும் ஒரு வங்கி என்ற முறையில், துரிதப்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமொன்று முன்னெடுத்துச் செல்லப்படும் இன்றைய கால கட்டத்தில் நாங்கள் முன்னரிலும் பார்க்க முக்கியமான ஒரு பாத்திரத்தை வகிக்க வேண்டியுள்ளது என்பதனை அறிந்துள்ளோம்.

இவ்வாண்டின் போது எமது மொத்தச் சொத்துக்கள் 31.9% ஆல் அதிகரித்து, ரூ. 873.1 பில்லியன் மட்டத்தை எட்டியிருந்தன. கடந்த ஆண்டில் மொத்தச் சொத்துக்களின் பெறுமதி ரூ. 662.1 பில்லியனாக இருந்து வந்தது. சேமிப்பை ஊக்குவிப்பதற்காக நாங்கள் மேற்கொண்ட முன்முயற்சிகள் காரணமாக எமது வைப்புக்கள் கணிசமான அளவில் அதிகரித்து, ரூ. 684 பில்லியன் புள்ளியை எட்டியிருந்தன. இது கடந்த வருடத்துடன் ஒப்பிடும் பொழுது 24.3% அதிகரிப்பை எடுத்துக் காட்டுகின்றது. அதே வேளையில், செயற்படாத கடன் விகிதம் 2.8% ஆக காணப்படுகின்றது/வங்கியை பொறுத்தவரையில் இது குறைந்த ஒரு அளவாகும்.

எமது சாதனைகள்

நாங்கள் செயற்பட்ட சூழல் சவால் மிக்கதாக இருந்து வந்தது ஆனால், சவால்களை எப்பொழுதும் வெற்றி கொள்ள முடியும் என்ற மக்கள் வங்கியின் விழுமியம் இதற்கான பரிகாரமாக இருந்து வந்தது. சூழல் மிகவும் செறிவான விதத்தில் போட்டி மிக்கதாக நிலவி வந்தது நிதித் துறையின் திட்டங்கள் மற்றும்

சேவைகளின் தொகுதி பிரமாண்டமான அளவில் விரிவடைந்தது. சந்தையின் அனைத்து பிரிவுகளும் பயன்படுத்திக் கொள்ளப்பட்டதுடன், நீண்ட கால நிலைபேறான தன்மையைக் கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்பட்டஅரசிறை தீர்மானங்கள் ஒரு சில வணிகத் துறைகளின் வளர்ச்சியை கடினமாக்கியிருந்தன. நுண்மட்ட, சிறிய மற்றும் நடுத்தர துறைகளைச் சேர்ந்த எளிதில் பாதிப்புறக் கூடிய எமது வாடிக்கையாளர்கள் ஒரு சிலர் காலநிலையினால் ஏற்பட்ட தாக்கங்களினால் பாதிக்கப்பட்டிருந்தனர். எவ்வாறிருப்பினும், எமது பெயர் இவை அனைத்தையும் எடுத்துக் காட்டுகின்றது: நாங்கள் 'மக்கள் வங்கி' யாக இருந்து வருகின்றோம். இதுவே எமது விழுமியமாகும். எனவே, பகுப்பாய்வுகளை மேற்கொண்டு, துல்லியமான கணிப்புடன் செயற்பட்டு வந்தால், சவால்களை எம்மால் வெற்றிக் கொள்ள முடியும். அந்த அணுகுமுறையே இந்த ஆண்டில் எமக்குப் பயனளித்துள்ளது.

எமக்கு இலக்குகள் நிறைவேறுவதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நாங்கள் பயன்படுத்திய முறைகள் திட்ட அபிவிருத்தி மற்றும் புத்தாக்கம், எமது திட்டத் தொகுப்புக்கான பெறுமதி சேர்ப்பு என்பவற்றையும் உள்ளடக்கியிருந்தன. வங்கித்தொழில் சேவைகளை பெற்றிராத அல்லது குறைந்த அளவில் அத்தகைய சேவைகளை பெற்றுக் கொண்டிருக்கும் குடியிருப்பாளர்கள் வசித்து வரும் பிரதேசங்களில் பெருமளவுக்கு நாங்கள் கவனம் செலுத்தினோம். மாணவர்களுக்கு மத்தியில் சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கும் விடயத்திலும் நாங்கள் கவனம் செலுத்தினோம். எமது திட்டங்களின் தொகுப்பில் 'தொட்டிலிலிருந்து சுடுகாடு வரையில்' என்ற எண்ணக் கருவை தெளிவான விதத்தில் நாங்கள் மேம்படுத்தி வந்தோம். அதன் காரணமாக, நாங்கள் எப்பொழுதும் தம்முடன் இருந்து வருவோம் என்பதனை எமது வாடிக்கையாளர்கள் அறிந்திருக்கின்றார்கள். எமது கிளை வரிவாக்கத்திற்கு ஊடாக மட்டுமன்றி நடமாடும் வங்கித்தொழில் சேவைகள், நவீன தொழில்நுட்பத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்படும். SMS வங்கித்தொழில் மற்றும் இணைய வங்கித்தொழில் செயற்பாடுகள் மற்றும் எமது கிளைகளை ஒரு வலையமைப்பாக பயன்படுத்துதல் என்பவற்றுக்கூடாகவும் நாங்கள் மக்களை சென்றடைந்தோம்.

வைப்புக்களைத் திரட்டல், வணிகத்தின் முக்கியமானதொரு கவன மையத் துறையாக இருந்து வந்தது. ஒரு அரச வங்கி என்ற முறையில் மக்களுக்கு மத்தியில் சேமிப்பு கலாசாரத்தை வளர்க்க வேண்டிய பொறுப்பு எமக்கு வழங்கப்பட்டிருப்பதுடன், அத்தகைய நிதிகள் தேசிய அபிவிருத்தி என்ற பாரிய கண்ணோட்டத்துடன் பயன்படுத்தப்படுவதனை நெறிப்படுத்த வேண்டிய பொறுப்பையும் நாங்கள் கொண்டுள்ளோம். இவ்வாண்டின் எமது சேமிப்புத் தொகுப்பை வளர்த்தெடுப்பதில் நாங்கள் வெற்றியீட்டியுள்ளோம். மொத்தச் சேமிப்புக்கள் ரூ. 684 பில்லியனாக இருந்து வந்ததுடன், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் பொழுது இதில் 24.3% அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. சர்வதேச பெண்கள் தின நிகழ்வுகளின் ஒரு பாகமாக, வனிதா வாசனா மாதத்தின் போது சேமிப்புக்கள் ஊக்குவிக்கப்பட்டன. அது ஒரு பரிசு சீட்டிழுப்பு, சேமிப்பை துரிதப்படுத்தும் பொருட்டு மிகவும் பிரபல்யமான ஜயசிறி வெகுமதி சேமிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை மேம்படுத்துதல், சுதந்திர தினக் கொண்டாட்டங்கள், புதிதாக பிறந்திருக்கும் தமது குழந்தைகளுக்காக சேமிப்புக்களை மேற்கொள்ளும் பொருட்டு பெற்றோர்களை ஊக்குவித்தல் போன்ற பல்வேறு வகையான செயற்பாடுகளை உள்ளடக்கியிருந்தது. வெளிநாடுகளில் வேலை செய்யும் எமது தொழிலாளர்களுக்கும் சேமிப்புக்களை மேற்கொள்வதற்கு நாங்கள் ஊக்கமளித்தோம். வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சுடன் இணைந்து விசேடமாக வடிவமைக்கப்பட்ட ஒரு சர்வதேச விசா அட்டையை வழங்குவதன் மூலமும் நாங்கள் இதனைச் செய்தோம்.

இந்த ஆண்டில் நாங்கள் நிகழ்த்திய மிகவும் முக்கியமான சாதனைகளில் ஒன்று மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கு நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்த விதத்தில் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் வணிக நிலையங்களை ஸ்தாபித்தமையாகும். சிறிய மற்றும் நடுத்தர வணிகத் துறைகளை தூண்டுவதனை நோக்கமாக கொண்டு இத்தகைய நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. அநுராதபுரம், குருணாகல், மாத்தறை மற்றும் கண்டி ஆகிய இடங்களில் அதி நவீன வசதிகளைக் கொண்ட இத்தகைய நான்கு நிலையங்களை நாங்கள் திறந்து வைத்தோம். இந்நிலையங்கள் அனைத்து விதமான வசதிகளையும் கொண்டிருப்பதுடன், பயிற்றப்பட்ட ஊழியர்கள் அவற்றில் பணிபுரிந்து வருகின்றார்கள். அவர்கள் எமது இந்த வாடிக்கையாளர் பிரிவினருக்கு தமது வணிகச் செயற்பாடுகளை அபிவிருத்தி செய்து கொள்வதற்கும், பொருளாதாரத்திற்கு பெறுமதி சேர்ப்பதற்கும் உதவிகளையும், ஒத்தாசைகளையும் வழங்குவார்கள். நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் இத்தகைய சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சி நிலையங்களை திறந்து வைப்பதற்கு நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

> நாங்கள் எப்போதும் சொல்வதை செய்து வந்திருக்கின்றோம் எமது நோக்குக்கு செயல் வடிவம் கொடுத்துள்ளோம் மேலும், எமது சமூகங்களை நிலைபேறான சமூகங்களாக மாற்றியமைத்துள்ளோம்.

வங்கியின் வெற்றியின் ஒரு முக்கியமான அம்சம் அதன் பரவலான சேவை வலயமைப்பாகும். மக்கள் தொடர்ந்து எமது சேவைகளை பெற்றுக் கொள்வதை உறுதிப்படுத்தும் விடயத்தில் தொழில்நுட்பம் மிக முக்கியமான ஒரு பாத்திரத்தை வகித்து வரும் அதே வேளையில், அனைத்து இடங்களுக்கும் ஊடுருவிச் செல்வதும், எம்மை பரவலாக விளம்பரப்படுத்தி கொள்வதும் அத்தியாவசியமானது என நாம் நினைக்கிறோம். எனவே, எமது கிளை வலையமைப்பை தொடர்ந்து விரிவாக்கிக் கொள்வது ஒரு சாதனையாக இருந்து வந்துள்ளது. மேலே நாம் குறிப்பிட்ட பேரண்ட பொருளியல் இடையூறுகள் காரணமாக எமது கிளை விரிவாக்கத்தை நாங்கள் ஓரளவுக்கு மெதுவாக மேற்கொண்டு வந்த போதிலும், இவ்வருடத்தின் போது ஆறு கிளைகள் புதிதாக ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன், முக்கியமான அமைவிடங்களில் அவை அமைக்கப்பட்டன. சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சி சேவை நிலையங்கள், தானியங்கி காசாளும் இயந்திரங்கள் (ATM கள்), நடமாடும் வங்கி நிலையங்கள் மற்றும் தொழில்நுடபம் மூலம் இணையம் மற்றும் SMS வங்கித்தொழில் போன்றவற்றுக்கூடாக எமது சேவைகள் வழங்கப்பட்டு வந்தன. இதன் காரணமாக எமது கிளைகளின் எண்ணிக்கை கணிசமான அளவு உயர்வாக காணப்படுவதுடன், மக்களின் வங்கி என்ற எமது அந்தஸ்தை அது ஊர்ஜிதம் செய்து வருகின்றது.

தகவல் தொழில்நுட்பம் என்ற அச்சின் மீது வங்கியின் கருமங்கள் இடம்பெற்று வருகின்றன. தன்னியக்கமாக்கல் என்ற விடயத்தில் நாங்கள் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகின்றோம். இவ்வருடத்தில் 40 புதிய ATM இயந்திரங்கள் பொருத்தப்பட்டதுடன், வங்கியின் மொத்த ATM களின் எண்ணிக்கை 420 ஆக இருந்து வந்தது. மத்தியமயப்படுத்தப்பட்ட இணையத்தின் மூலமாக கிளை வலையமைப்பு முறை அமுல்படுத்தப்பட்டமை காரணமாக வாடிக்கையாளர் சேவை நிலையங்களின் மொத்தம் 728 ஆக அதிகரித்துள்ளது. இதன் காரணமாக நாங்கள் மாலை 5.30 வரை காசோலைகளை ஏற்றுக் கொள்கிறோம். திறைசேரி முகாமைத்துவ முறைகளையும் நாங்கள் வெற்றிகரமாக அமுல் செய்திருக்கின்றோம். TLE (Terminal Line Encryption) முறைக்கென 200 POS இயந்திரங்களை வாங்கியிருப்பதுடன், எமது அட்டை நிலையத்தில் தானியங்கி மினி அழைப்பு நிலையமொன்றை அமுல் செய்துள்ளோம்.

எமது முன்னேற்றங்களை மேலும் பரவலாக்கிக் கொள்ளும் விடயத்தில் நாங்கள் கவனம் செலுத்தி வருவதுடன், அது எமது அபிலாசையுடன் இணைந்ததாக இருந்து வருகின்றது/மக்களின் வங்கியாக இருந்து வரவேண்டும் என்பதே அந்த அபிலாஷையாகும். நாட்டின் பொருளாதாரத்துக்கு பங்களிப்புச் செய்யும் அதே வேளையில், நிலையான விதத்தில் அபிவிருத்தியடைவதற்காக மக்களுக்கு ஆதரவளித்தலும், அதன் மூலம் அவர்களது வாழ்க்கைத் தரங்களை மேம்படுத்துவதும் இலங்கை அதன் அபிலாசைகள் மிக்க குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு உதவ முடியுமென நாங்கள் நம்புகின்றோம். இதன் காரணமாக இந்த வருடத்தின் போது எமது சில்லறை முற்பணங்கள் தொகுப்பு கணிசமான அளவில் வளர்ச்சியடைந்திருந்தது. கடன் கட்டுப்பாட்டு முறை நிலவி வந்த ஒரு சூழ்நிலையில் இந்தச் சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது என்ற விடயம் இங்கே நினைவில் வைத்துக் கொள்ளப்படுதல் வேண்டும். இதன் காரணமாக எமது கடன் தொகுப்பை அதிகரித்துக் கொள்வதற்காக நாங்கள் மாற்று வழிகளையும், புதுமைப் புனைவிலான வழிகளையும் பின்பற்ற வேண்டியிருந்தது. இதனுடன் இணைந்த விதத்தில் கடன் அறவீட்டு செயற்பாடுகளும் முனைப்பான விதத்தில் முன்னெடுக்கப்பட்டன. அதே வேளையில், வங்கி மக்களுடன் தொடர்பில் இருந்து வர வேண்டும் என்ற சிந்தனை மேலோங்கியிருந்தது. அதன் காரணமாக அது மக்களுக்கு ஆதரவளிக்க வேண்டுமென்ற நோக்கிலேயே இது மேற்கொள்ளப்பட்டு வந்தது.

சந்தையில் நிலவிய சவால்களுக்கு மத்தியிலும், வங்கியின் திறைசேரியும் எமது சிறப்பான செயற்றுகைக்கு கணிசமான பங்களிப்பை வழங்கியிருந்தது. மிகவும் செயல்திறன்மிக்க ஊழியர் அணியினரின் செயற்பாடுகள் காரணமாக அந்நியச் செலாவணி வருமானம் 76.0% ஆல் அதிகரித்திருந்தது. அவர்கள் நிலைமைகள் மற்றும் போக்குகளை அவதானித்து, அவற்றை சாதகமான விதத்தில் பயன்படுத்திக் கொண்டமையே இதற்கான காரணமாகும். அமெரிக்க டொலர்/இலங்கை ரூபா நாணயக் கூட்டைப் பொறுத்தவரையில் சந்தையை உருவாக்கும் வங்கி என்ற நற்பெயரை வங்கி மேலும் பலப்படுத்திக் கொண்டதுடன், மூலதன ஆதாயங்கள் மற்றும் வட்டிச் சம்பாத்தியங்கள் என்பவற்றுக்கூடாக கடன் வியாபாரத்தின் மூலம் கணிசமான அளவிலான வருமானங்களை ஈட்டிக் கொண்டது.

முதன்மை வியாபார அலகு என்ற முறையில் திறைசேரி தொடர்ந்தும் சாதனைகளை நிகழ்த்தி வந்தது. இவ்வாண்டில் ஆரம்பிக்கப்பட்ட புலும்பேர்க்கின் FIQ இன் வியாபார பிரிவில் ஆகக் கூடிய வியாபார அளவுகளை அது சாதித்திருந்தது. மேலும், முதலீட்டு வங்கித்தொழில் பிரிவு பாங்க் ஒப் அமெரிக்கா மெரில் லின்ஞ், பாக்லேய்ஸ் கப்பிட்டல், சிட்டி பாங்க் மற்றும் HSBC என்பவற்றுடன் இணைந்த விதத்தில் இலங்கை அரசாங்கத்தின் மிகவும் வெற்றிகரமான 1 பில்லியன் அமெரிக்க டொலர் முறி வெளியீட்டுக்கான இணை முகாமையாளராக தெரிவு செய்யப்பட்டிருந்தது.

கிராமிய பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்தல்

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் புதிதாக செழிப்பு நிலையை அனுபவித்து வரும் பொருளாதாரங்கள் குறித்து நாங்கள் கவனம் செலுத்தினோம். அப்பிரதேசங்களில் வாழ்ந்து வரும் மக்களை அபிவிருத்தி மேடைக்கு எடுத்து வரும் பொருட்டு, அந்தச் சமூகங்களுடன் கூட்டாக இணைந்து பல்வேறு முயற்சிகளை நாம் மேற்கொண்டோம். வட தீபகற்பத்தில் எமது செயற்பாடுகளில் இணைய தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்து வைத்ததுடன், அது செயற்பாடுகளை பலப்படுத்தியதுடன், பிராந்திய விரிவாக்கத்திற்கும் பங்களிப்புச் செய்தது. அரசாங்கத்தின் பத்தாண்டு அபிவிருத்தி திட்டத்துடன் இணைந்த விதத்தில் நுண்மட்ட, சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் துறைகளை அபிவிருத்தி செய்யும் விடயத்தில் வங்கி கவனம் செலுத்தியது. இந்த இரு பூகோளப் பிரதேசங்களிலும் அது விரிவான விதத்தில் தனது செயற்பாடுகளை மேற்கொண்டு வந்ததுடன், தொழில் முயற்சியாளர்களுக்கு தூண்டுதல்களையும் வழங்கியது. குறிப்பாக, கால்நடை உற்பத்தித் துறை மற்றும் விவசாய உற்பத்தித் துறை என்பவற்றில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகளுக்கும் அது ஆதரவளித்து வந்தது. அது தவிர, கிராமிய பொருளாதாரம் மீதான வங்கியின் கவன மையம் அனைத்துப் பிரிவுகளையும் உள்ளடக்கிய விதத்தில் இருந்து வந்தது. நுண்மட்ட, சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிகள் துறையை பொருளாதாரத்தின் முதுகெலும்பாக மாற்றியமைக்க வேண்டுமென்ற அரசாங்கத்தின் நோக்குடன் இணைந்த விதத்தில் வங்கி நுண்மட்ட நிதிப்படுத்தல் மற்றும் அபிவிருத்திக் கடன்கள் என்பவற்றுக்கூடாக பரந்த அளவிலான கடன் வாய்ப்புக்களை இத்துறைக்கு வழங்கி வருகின்றது.

> வைப்புத் திரட்டல் ஒரு முக்கியமான வணிகத் துறையாக இருந்து வந்தது. ஒரு அரச வங்கி என்ற முறையில், மக்களுக்கு மத்தியில் ஒரு சேமிப்பு கலாசாரத்தை ஊக்குவிக்க வேண்டிய பொறுப்பு எமக்கு வழங்கப்பட்டுள்ளது அது மட்டுமன்றி, அவ்விதம் திரட்டப்படும் சேமிப்புக்களை பாரிய அளவிலான தேசிய அபிவிருத்தியில் பயன்படுத்திக் கொள்வதற்கென நெறிப்படுத்த வேண்டிய பொறுப்பினையும் நாங்கள் கொண்டுள்ளோம்.

வடக்கின் எழுச்சி, கிழக்கின் எழுச்சி, மாகாண அபிவிருத்தி, சிறு தோட்ட தொழில் முனைவு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் சுனாமிக்கு பிற்பட்ட கரையோர புனர் நிர்மாணம் மற்றும் மூலவள முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றுடன் இணைந்த விதத்தில் வழங்கப்பட்ட கடன்கள் பிராந்திய பொருளாதாரங்களை மேம்படுத்துவதற்கு பெருமளவுக்கு பங்களிப்புச் செய்துள்ளன. மேலும், அவை அப்பிரதேசங்களின் மூலவளப் பயன்பாட்டினை உச்ச மட்டத்தில் எடுத்து வந்திருப்பதுடன், வேலை வாய்ப்புக்களை உருவாக்கி வறுமையையும் ஒழித்துள்ளன.

மேலும், நாங்கள் வறுமை ஒழிப்பு நுண்மட்ட நிதி கருத்திட்டத்தையும், அதனுடன் சம்பந்தப்பட்ட சுழல் நிதி கடன் திட்டத்தையும் அறிமுகம் செய்து வைத்தோம். இந்த வசதிகள் சமூகங்களுக்கு விரிவாக்கப்பட்டதுடன், பொருளாதார வருவாய்களுக்கான சமூக அணிதிரட்டுதல் என்ற கருதுகோளின் அடிப்படையில் குறிப்பாக பெண்களை இலக்காகக் கொண்டு கடன்கள் வழங்கப்பட்டன. குறிப்பாக, இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டிருக்கும் பெண்களை இலக்காகக் கொண்ட வனிதா நவோதய கடன் திட்டம் பெருந்தொகையான இடம்பெயர்ந்த விதவைகளுக்கு வலுவூட்டுவதில் முக்கியமான ஒரு பங்கினைச் செய்துள்ளது. புதிய மக்கள் வேகக் கடன் திட்டம் மற்றும் சௌபாக்கியா கடன் திட்டம் என்பன புதிய கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கு ஊக்குவிப்பினை வழங்கியிருப்பதுடன், தற்போதைய கைத்தொழில்களுக்கும் உதவியுள்ளன. விஸ்கம் கடன் திட்டம் விவசாய கைத்தொழில் துறையில் புத்தாக்கங்களை மேற்கொள்வதற்கு வசதி செய்து கொடுப்பதுடன், சிறிய மற்றும் நடுத்தர அளவு விவசாயிகளை அபிவிருத்தி செய்வதற்கும் உதவி வருகின்றது. பிராந்திய அபிவிருத்தியை எடுத்து வரும் எமது முயற்சியில் நாங்கள் மேற்கொண்ட மற்றொரு தனித்துவமான செயற்பாடு 245 கிராமங்களை அடிப்படையாகக் கொண்ட சமூகக் குழுக்களை நுண்மட்ட கடன் கிராம நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் எடுத்து வந்தமையாகும். தொழில் முனைவு மற்றும் தற்சார்பு அபிவிருத்தி என்பவற்றை தூண்டும் பொருட்டு இது மேற்கொள்ளப்பட்டது. புனர் நிர்மாண கடன்களுக்கூடாக சுயதொழில் கருத்திட்டங்கள் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன. கப்புக நிபெயும் கடன் திட்டத்தின் கீழ் தெங்குத் தொழில் சம்பந்தப்பட்ட கைத்தொழில்களுக்கு உதவி வழங்கப்பட்டு வருவதுடன், அது நியாயமான சந்தை விலைகளை பெற்றுக் கொள்வதற்கும், வறட்சியிலிருந்து நிவாரணம் பெற்றுக் கொள்வதற்கும் விவசாயிகளுக்கு உதவி வருகின்றது.

எமது ஊழியர் அணிக்கு வலுவூட்டுதல்

இது எமது ஊழியர் அணியினரின் ஆற்றலை பரீட்சித்துப் பார்த்த ஒரு வருடம் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. அவர்கள் இந்தச் சோதனையில் வெற்றியீட்டிருப்பதுடன், இவ்வாண்டில் நாங்கள் பெற்றுக் கொண்ட பெறுபேறுகள் அதற்கான உறுதியான சான்றுகளாக இருந்து வருகின்றன. மாற்ற முகாமைத்துவத்துடன் இணைந்த விதத்தில் ஒரு சில வருடங்களுக்கு முன்னர் நாங்கள் அறிமுகம் செய்து வைத்த நிலைமாற்ற கலாசாரம் பல மைல் கற்களை சாதித்துக் கொள்வதிலும், சாதனைகளை நிகழ்த்திக் கொள்வதிலும், எமது குறிக்கோள்களை வென்றெடுப்பதிலும் முதன்மையான ஒரு ஊக்கியாக இருந்து வந்துள்ளது என நான் நம்புகின்றேன். வங்கி முழுவதிலும் ஊடுருவியிருக்கும் அறிவைத் தேடிப் பெற்றுக் கொள்ளும் கலாசாரத்துடன் இணைந்த விதத்தில் அந்தப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி தத்துவம் இடையறாது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்த வருடத்திலும் எமது மனித வளத் திணைக்களம் உபாய ரீதியான பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்தது. எமது ஊழியர்கள் கொண்டிருக்கும் போட்டித் திறனை மேலும் கூர் தீட்டிக் கொள்ளும் பொருட்டு, அவர்களிடம் இனங்காணப்படும் ஆற்றல்களுக்கு மேலும் பெறுமதி சேர்க்கும் விதத்தில் உள்ளக மற்றும் வெளி ஆளணியினரின் உதவியுடன் நிபுணத்துவ பயிற்சிகள் அவர்களுக்கு வழங்கப்பட்டன.

மக்களின் உண்மையான ஒரு பங்காளராக இருந்து வர வேண்டுமென்ற எமது ஒட்டுமொத்த தத்துவத்தின் ஒரு அடையாளமாக 2012 ஆம் ஆண்டு முழுவதிலும் நாங்கள் பல்வேறு கருத்திட்டங்களுக்கும், சமூகத்தின் பல்வேறு பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட முன்முயற்சிகளுக்கும் தொடர்ந்தும் ஆதரவளித்து வந்துள்ளோம்.

எமது சமூகங்களுக்கு சேவை செய்தல்

ஒரு கம்பெனித் துறையின் ஒரு முதன்மை நிறுவனம் என்பது தனது சொற்களுக்கு செயல் வடிவம் கொடுப்பதில் நம்பிக்கை கொண்டிருக்கும் ஒரு நிறுவனமாகும். நாங்கள் எப்பொழுதும் சொல்வதை செய்து வந்திருக்கின்றோம் எமது நோக்குக்கு செயல் வடிவம் கொடுத்துள்ளோம். சமூகங்களை நிலைபேறான சமூகங்களாக மாற்றியமைத்துள்ளோம். எமது மிக முக்கியமான விழுமியம் கம்பெனித் துறையின் சமூகப் பொறுப்பு என்பதாகும். எமது திட்டங்கள் மற்றும் சேவைகள் என்பற்றையும் நாங்கள் முன்னெடுக்கும் யுக்திகளையும் எமது பங்கீடுபாட்டாளர்களின் நீண்ட கால நிலைபேறான தன்மையை எடுத்து வரும் பொருட்டு உருவாக்கி, நிர்மாணித்து செயற்படுத்தி வந்துள்ளோம்.

மக்களின் உண்மையான ஒரு பங்காளராக இருந்து வர வேண்டுமென்ற எமது ஒட்டுமொத்த தத்துவத்தின் ஒரு அடையாளமாக 2012 ஆம் ஆண்டு முழுவதிலும் நாங்கள் பல்வேறு கருத்திட்டங்களுக்கும், சமூகத்தின் பல்வேறு பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட முன்முயற்சிகளுக்கும் தொடர்ந்தும் ஆதரவளித்து வந்துள்ளோம். எமது ஸ்தாபகரான கௌரவ ரீ.பி. இலங்கரத்ன அவர்களுக்கு நாங்கள் எமது அஞ்சலியை செலுத்தும் அதே வேளையில், ஆசியாவின் மிகப் பெரிய கலாசார அணிவகுப்பான எசல பெரஹராவுடன் நாங்கள் இணைந்தோம். அந்த வண்ணமயமான அணிவகுப்பு இலங்கையின் அதி உன்னத கலாசாரத்தை பிரதிபலித்துக் காட்டுகிறது. அதே அடிப்படையில் நாங்கள் பல்வேறு விதமான கலை மற்றும் கலாசார நிகழ்வுகளுக்கு அனுசரணை வழங்கியுள்ளோம்- விளையாட்டுக்களின் அபிவிருத்திக்கும் நாங்கள் முதலீடுகளை செய்துள்ளோம். இது வலைப் பந்தாட்டத்திற்கான உதவிகளையும் உள்ளடக்கியுள்ளது. வலைப் பந்தாட்டத்தை பொறுத்தவரையில் வங்கி முக்கியமான ஒரு பங்காளராக இருந்து வருகின்றது. 8 ஆவது ஆசியக் கோப்பை வலைப் பந்தாட்டப் போட்டியிலும் வங்கி பங்கேற்றுள்ளது. மேலும், வலுவான ஆற்றலைக் கொண்ட ஒரு தேசத்தை கட்டியெழுப்புவதற்கு உதவும் பொருட்டு சைக்கிள் ஓட்டப் போட்டிகளுக்கும் நாங்கள் அனுசரணை வழங்கி வந்துள்ளோம். பெண்களை அடிப்படையாகக் கொண்ட கருத்திட்டங்களுக்கூடாக நாங்கள் பெண்களுக்கு வலுவூட்டி வந்துள்ளோம். இலங்கையில் பின்பற்றப்பட்டு வரும் பல்வேறு சமயங்களின் கொண்டாட்டங்களில் இணைந்து கொள்வதன் மூலம் பல மதங்களைக் கொண்ட இலங்கையின் சகிப்புத் தன்மை மற்றும் ஒற்றுமை என்பதற்கும் பங்களிப்புச் செய்துள்ளோம்.

சவால்களுக்கு மத்தியில் முன்னோக்கிய பயணம்

கடனளிப்பு தொடர்பான கட்டுப்பாடு 2013 ஆம் வருடம் தொடர்பாக அமுல் செய்யப்படவில்லை. இது எமது கடன் தொகுப்பினை சமாளிக்கத்தக்க மட்டங்களில் அதிகரித்துக் கொள்வதற்கு வங்கிக்கு ஒரு வாய்ப்பினை வழங்குகின்றது. நாங்கள் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள், நுண்மட்ட நிதி மற்றும் சில்லறை வியாபாரத் துறை என்பவற்றை விரிவாக்கம் செய்வதில் கவனம் செலுத்தி வரும் அதே வேளையில், எமது கிளை வலையமைப்பையும், பல்வேறு சேவை நிலையங்களையும் வலுப்படுத்திக் கொள்வதற்கு திட்டமிட்டுள்ளோம்.

எவ்வாறிருப்பினும், செலாவணி விகிதம் மற்றும் வட்டி விகிதம் என்பவற்றில் நிலவி வரும் தளம்பல் நிலைமை காரணமாக எமது உபாய ரீதியான நோக்கங்களை சாதித்துக் கொள்வது ஒரு சவாலாக இருந்து வருவதனை நாங்கள் அவதானிக்கின்றோம். 2009 - 2016 வரையிலான காலப் பிரிவுக்கான உபாய ரீதியான திட்டத்தில் வங்கியின் இந்த உபாய நோக்குகள் தெளிவாக எடுத்து விளக்கப்பட்டுள்ளன. சுமார் ஐந்து தசாப்தங்களுக்கு மேற்பட்ட வரலாற்றைக் கொண்டிருக்கும் ஒரு வங்கி என்ற முறையில் - இந்தக் காலப் பிரிவில் பெரும்பாலான கால கட்டங்கள் சவால் மிக்கதாக இருந்து வந்துள்ளன - எமது உபாய ரீதியான திட்டத்துக்கு ஆதரவளிக்கக் கூடிய நடைமுறை அம்சங்களையும், முன்முயற்சிகளையும் நாங்கள் ஒரே சீரான விதத்தில் உட்பாய்ச்சி வருகின்றோம். அவற்றுக்கு மத்தியில் எமது வருங்கால திட்டங்களுக்கு ஆதரவளிக்கும் பொருட்டு நிதிப்படுத்தல் சாராத வருமானங்களை அதிகரித்துக் கொள்ள வேண்டிய தேவையும் உள்ளது.

எமது இணங்கியொழுகல் யுக்திகள், இலங்கை மத்திய வங்கி மற்றும் ஏனைய ஒழுங்குமுறை-ப்படுத்தும் அதிகார அமைப்புக்கள் என்பவற்றின் பணிப்புரைகளுடன் இணைந்தவையாகவே இருந்து வருகின்றன. மேலும், 2012 ஆம் ஆண்டில் அமுலுக்கு வந்த புதிய கணக்கீட்டு தரநியமங்களை பின்பற்றுபவையாகவும் அவை உள்ளன. இவை அனைத்தும் சிறந்த ஆளுகையையும், நிதிச் சேவைப் பிரிவுக்குள் இணங்கியொழுகல் நிலையையும் உறுதிப்படுத்துகின்றன.

அரசிறை கண்ணோட்டத்தில் நோக்கும் பொழுது, நாடு வங்கித்தொழில் துறை மற்றும் கம்பெனித் துறை என்பன செழித்தோங்கக் கூடிய விதத்தில் செயல்பட்டு வருகின்றது என்பது தெளிவாகத் தெரிகின்றது. கம்பெனித் துறைக்கான வரி அறவீடு 28% ஆக மேலும் குறைக்கப்பட்டிருந்தமை மற்றும் நிதிசார் VAT வரி 12% ஆக குறைக்கப்பட்டமை என்பன இதனை எடுத்து காட்டுகின்றன. மேலும், பற்று வரி ஒழிக்கப்பட்டமை வணிகத் துறையின் இடையறாத வளர்ச்சியைத் தூண்டும் ஒரு சாதகமான அம்சமாக இருந்து வருகின்றது என நாங்கள் கருதுகின்றோம். தனியார் துறை முதலீடுகளை பயன்படுத்திக் கொள்வதற்கும், நாடு முழுவதிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் உள்கட்டமைப்பு மற்றும் அபிவிருத்தி கருத்திட்டங்கள் என்பவற்றில் அரச துறை மற்றும் தனியார் துறை ஒத்துழைப்பினை உருவாக்குவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த விடயத்தில் குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தொடர்பாக விசேடமாக கவனஞ் செலுத்தப்பட்டு வருகின்றது. இவை அனைத்தும் 2015 ஆம் ஆண்டளவில் தென்னாசியாவின் பொருளாதார கேந்திர நிலையமாக உருவாக வேண்டுமென்ற இலங்கையின் நோக்கினை நிறைவேற்றிக் கொள்வதற்கு அவசியமான ஒரு தூண்டுதலை வழங்கி வருகின்றன.

அரசிறை கண்ணோட்டத்தில் நோக்கும் பொழுது, நாடு, வங்கித்தொழில் துறை மற்றும் கம்பெனித் துறை என்பன செழித்தோங்கக் கூடிய விதத்தில் செயல்பட்டு வருகின்றது என்பது தெளிவாகத் தெரிகின்றது.

பாராட்டுதல்கள்

2013 ஆம் வருடம் மேலும் சாதனைகளை நிகழ்த்த கூடிய ஒரு வருடமாகவும், வளர்ச்சியை துரிதப்படுத்துவதற்கு உசிதமான ஒரு வருடமாகவும் இருந்து வரும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம். மறைந்த தலைவர் அவர்களும், பணிப்பாளர் சபையினரும் எனக்கு ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல் என்பவற்றை வழங்கினார்கள். இந்த ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல் என்பவற்றை 2012 ஆம் வருடத்தின் போது எனக்கு தாராளமாக வழங்கினார்கள். இது தொடர்பாக மறைந்த எமது தலைவர் திரு. டப்ளியு. கருணாஜீவ அவர்களின் அளப்பரிய முயற்சிகளை இங்கு நான் குறிப்பிட விரும்பகின்றேன். அவை வங்கி இன்றுள்ள நிலைக்கு நிலைமாற்றமடைவதற்கு உதவியுள்ளன. நாட்டின் கேந்திர இடங்கள் முழுவதிலும் செயற்பட்டு வரும் 10,500 பேரைக் கொண்ட ஊழியர் படையொன்றுக்கு உதவுவதற்கு ஒரு உயரிய நோக்கும், யுக்தியும், தலைமைத்துவமும் அவசியமாகும். அது தவிர, தளம்பல் நிலைகள் மற்றும் சவால்கள் என்பவற்றுக்கு மத்தியில் இந்த வருடத்தில் நாங்கள் நிகழ்த்தியுள்ள சாதனைகள் அந்த நோக்கு மற்றும் தலைமைத்துவம் என்பவற்றின் ஒரு பெறுபேறாக இருக்கின்றன.

செயல் வேகம் மற்றும் அர்ப்பணிப்பு என்பவற்றை எடுத்திக் காட்டியிருக்கும் எமது ஊழியர் அனைவருக்கும் இங்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

திறைசேரியின் செயலாளர், நிதியமைச்சின் அதிகாரிகள், இலங்கை மத்திய வங்கியின் ஆளுனர், இலங்கை மத்திய வங்கியின் அதிகாரிகள், நாணய மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் சபைகளின் உத்தியோகத்தர்கள், கணக்காய்வாளர் நாயகம் மற்றும் அவரது ஊழியர்கள் ஆகிய அனைவருக்கும், அவர்கள் மக்கள் வங்கிக்கு வழங்கிய வழிகாட்டுதல்கள் மற்றும் ஆதரவு என்பவற்றுக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது வாடிக்கையாளர்களுக்கும் மற்றும் எமது மதிப்புமிக்க வணிகப் பங்காளர்களுக்கும் மனமுவந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். அவர்கள் இடையறாது எமது வங்கிக்கு விசுவாசமாக இருந்து வருவதுடன், எமது முயற்சிகளுக்கு ஆதரவளித்தும் வருகின்றார்கள். அவர்கள் எமது வங்கியின் மீது தொடர்ச்சியாக நம்பிக்கை வைத்துள்ளார்கள். நாங்கள் செயற்பட்டு வரும் சமூகங்களிலிருந்து எமக்கு உயர் அளவிலான சக்தி கிடைக்கின்றது. இந்தப் பங்கீடுபாட்டாளர்கள், எமது திட்டங்கள் எப்பொழுதும் நீண்ட கால நிலைபேறான தன்மையை எடுத்து வரும் விதத்தில் உருவாக்கப்பட்டுள்ளன என்பதனை அறிந்த நிலையில், தமது பயணத்துக்கான பாதைகளை உருவாக்கிக் கொள்வதில் எம்மீதே தங்கி வந்துள்ளார்கள்.

நாங்கள் எப்போதும் மக்கள் வங்கியாக இருந்து வருகின்றோம் என்பதை இங்கு பிரகடனப்படுத்துவது போதுமானதாகும் - மக்களுடன் மக்களுக்காக மக்கள் மூலம் நாங்கள் எங்கள் பணிகளை முன்னெடுப்போம். இப்பயணத்தின் போது எமது நோக்கு, குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்கள் என்பன நாட்டின் நோக்குடன் ஒன்றிணைந்திருக்கும். எனவே, வளர்ச்சியடைவதற்கென நாட்டுக்கு தூண்டுதலை வழங்கும் முக்கியமான ஒரு செயலூக்கியாக எமது வங்கி இருந்து வரும்.



என். வசந்த குமார்
பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர்


மார்ச் 27, 2013



வாடிக்கையாளர்கள்

'மக்கள் வங்கி' என்ற முறையில் அதியுயர் மட்டங்களிலான வசதிகளுடன் வாடிக்கையாளர் சிநேகபூர்வமான சேவைகளை வழங்குவதே எமது நோக்கமாகும். எமது சேவை நிலையங்களின் வலையமைப்பு, சேவை தரநியமங்கள் மற்றும் உள்ளக செயன்முறைகள் ஆகிய அனைத்திலும் இது பிரதிபலிக்கின்றது.

கடன்கள் மற்றும் கிடைக்க வேண்டிய தொகைகள் 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் பொழுது, இவ்வருடத்தில் 30% ஆக அதிகரித்திருந்தன. 5 - வருட CAGR 21% ஆக இருந்து வந்தது.



சந்தைப் பங்கு

19% கடன்கள்

18% வைப்புக்கள்

16% சொத்துக்கள்

661 பில்.

கடன்கள் மற்றும் கிடைக்க வேண்டிய தொகைகள்

எமது ATM வலையமைப்பு...

நாங்கள் அதியுயர் வேகத்தில் வளர்ச்சி கண்டு வருகின்றோம். இவ்வருடத்தில் 40 புதிய தானியங்கி காசாளும் இயந்திரங்கள் (ATM கள்) ஆரம்பித்து வைக்கப்பட்டன... நாடெங்கிலும் எமது பிரசன்னம் பரவலாக காணப்படுகின்றது!

420
ATM இயந்திரங்கள்





14.3 மில்.

வாடிக்கையாளர் கணக்குகளின் எண்ணிக்கை



ரூ. 684 பில்.

வைப்புக்களின் பெறுமதி



728

கிளைகள் மற்றும் சேவை நிலையங்கள்

பணிப்பாளர் சபை



திரு. காமினி எஸ். செனரத்

தலைவர்

திரு. காமினி எஸ். செனரத் 2013 பெப்ரவரி 14 ஆந் திகதி மக்கள் வங்கியின் தலைவராக பொறுப்பேற்றார். அவர் பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி, வ.ப. பீப்பள்ஸ் லீசிங் பிளீட் மனேஜ்மன்ட் கம்பெனி மற்றும் வ.ப. பீப்பள்ஸ் புரொப்பர்ட்டி டெவலப்மன்ட் கம்பெனி, பீப்பள்ஸ் லீசிங் ஹெவ்லொக் புரொப்பர்ட்டிஸ் லிமிடட் மற்றும் பீப்பள்ஸ் மைக்ரோபினான்ஸ் லிமிடட் என்பவற்றின் தலைவராகவும் இருந்து வருகின்றார்.

இலங்கை நிர்வாக சேவையின் நன்மதிப்புக்குரிய ஒரு அதிகாரியாக இருந்து வரும் திரு. செனரத் அவர்கள் அதிமேதகு ஜனாதபதி அவர்களின் ஊழியர் அணியின் தலைவராக தற்பொழுது செயற்பட்டு வருகின்றார். அது தவிர, அவர் அரசுக்கு சொந்தமான லிற்றோ கேஸ் லங்கா நிறுவனம், லிற்றோ கேஸ் டேர்மினல் லங்கா (பிரைவட்) லிமிடட் மற்றும் ஸ்ரீலங்கா இன்சுரன்ஸ் ரிசோர்ட்ஸ் அன்ட் ஸ்பா (பிரைவட்) லிமிடட் என்பவற்றின் தலைவராகவும் செயற்பட்டு வருகின்றார். அவர் வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் முன்னைய தலைவராவார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் கணினி விஞ்ஞானத்தில் பட்டப் பின் டிப்ளோமாவை பெற்றிருக்கும் அவர் களனி பல்கலைக்கழகத்திலிருந்து (B.com) சிறப்புப் பட்டத்தையும் பெற்றுக் கொண்டுள்ளார்.

திரு. செனரத் உதவி அரசாங்க அதிபர் குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் உதவிக் கட்டுப்பாட்டாளர் மற்றும் பிரதிக் கட்டுப்பாட்டாளர் ஆகிய பதவிகளை வகித்திருப்பதுடன், போக்குவரத்து மற்றும் உள்நாட்டு விமானப் போக்குவரத்து அமைச்சின் செயலாளராகவும், மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகமாகவும் செயற்பட்டுள்ளார்.



திரு. டப்ளியு. கருணாஜீவ

தலைவர் - 2013 ஜனவரி வரையில்

அமரர் திரு. டப்ளியு. கருணாஜீவ 2007 மே மாதம் தொடக்கம் 2013 ஜனவரி மாதத்தில் தீடீரென மரணமடையும் வரையில் மக்கள் வங்கி குழுமத்தின் தலைவராக செயற்பட்டு வந்தார். அவர் வ.ப. பீப்பள்ஸ் லீசிங் கம்பெனி, வ.ப. பீப்பள்ஸ் லீசிங் பினான்ஸ் கம்பெனி, வ.ப. பீப்பள்ஸ் லீசிங் பிளீட் மனேஜ்மன்ட் கம்பெனி, வ. ப. பீப்பள்ஸ் புரொப்பர்ட்டி டெவலப்மன்ட் கம்பெனி, பீப்பள்ஸ் இன்சுரன்ஸ் லிமிடட் என்பவற்றின் தலைவராகவும் இருந்து வந்தார்.

இதற்கு முன்னர் அவர் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் தலைவராகவும், செயற்பாட்டு பணிப்பாளராகவும், ஊழியர் நம்பிக்கை பொறுப்பு சபையின் தலைவராகவும், செயற்பாட்டு பணிப்பாளராகவும் பணியாற்றியுள்ளார்.

திரு. கருணாஜீவ இலங்கையின் வங்கித்தொழில் துறைக்கு ஆற்றியிருக்கும் பங்களிப்பையும், அவருடைய அர்ப்பணிப்புணர்வையும், தலைசிறந்த சேவைகளையும் அங்கீகரிக்கும் விதத்தில் இலங்கை வங்கியாளர் நிறுவனம் அவருக்கு கௌரவ உறுப்பினர் விருதினை வழங்கியது.

அவர் நன்கு புகழ்பெற்ற சிரேஷ்ட சட்டத்தரணியாக இருந்து வந்ததுடன், இலங்கை பல்கலைக்கழகத்தில் B.Com பட்டத்தையும் பெற்றிருந்தார்.



கலாநிதி டி. ஜே. டி. ஜெயக்கொடி

பணிப்பாளர்

கலாநிதி டி.ஜே.டி. ஜெயக்கொடி 2007 இல் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபைக்கு நியமனம் செய்யப்பட்டார். அவர் பீப்பள்ஸ் லீசிங் கம்பெனி பிஎல்சி மற்றும் பீப்பள்ஸ் பினான்ஸ் கம்பெனி பிஎல்சி என்பவற்றின் சபைகளிலும் உறுப்பினராக உள்ளார். அவர் ஒரு முகாமைத்துவ ஆலோசகர் ஆவார்.

அவர் அமெரிக்க சர்வதேச பல்கலைக்கழகத்திலிருந்து (UK) முகாமைத்துவத்தில் கலாநிதி பட்டத்தை பெற்றுக் கொண்டுள்ளார். பொது நிர்வாகத்தில் பி. எஸ். சி. பட்டத்தையும், ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் படிப்பு முகாமைத்துவ நிறுவனத்தில் எம். பி. ஏ. பட்டத்தையும் அவர் பெற்றுக் கொண்டுள்ளார். அவர் IPFDA இன் கௌரவ உறுப்பினராகவும், இலங்கை முகாமைத்துவ நிறுவனத்தின் உறுப்பினராகவும், உள்ளக கணக்காய்வாளர் நிறுவனத்தின் உறுப்பினராகவும் இருந்து வருகின்றார். திரு. ஜெயக்கொடி கணக்காளர், பிரதம உள்ளக கணக்காய்வாளர், பிரதி பொது முகாமையாளர் மற்றும் மேலதிக பொது முகாமையாளர் ஆகிய பதவிகளை வகித்துள்ளார். வயம்ப பல்கலைக்கழகத்தில் வணிக கற்கைகள் மற்றும் நிதிப் பீடத்தில் ஒரு சிரேஷ்ட விரிவுரையாளராக அவர் பணியாற்றியுள்ளார். மேலும், கொழும்பு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவம் மற்றும் நிதிப் பீடத்திலும் பட்டதாரி கற்கைகள் பீடத்திலும், அவர் வருகை தரும் விரிவுரையாளராக பணியாற்றியுள்ளார். தேசிய கால்நடை சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும், தொழில் அமைச்சின் தேசிய தொழில் ஆலோசனை சபை உறுப்பினராகவும் அவர் செயற்பட்டு வருகின்றார். மேலும், அவர் முன்னர் ஒரு ரிஸர்வ் உதவி பொலிஸ் அத்தியட்சகராகவும் செயற்பட்டுள்ளார்.



திரு. ஜெஹான் பி. அமரதுங்க

பணிப்பாளர்

திரு. ஜெஹான் அமரதுங்க இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் ஓர் இணை உறுப்பினராகவும், பட்டய முகாமைத்துவ கணக்காளராகவும் இருந்து வருகின்றார். இறுதி மட்ட பரீட்சையின் போது திறமையின் அடிப்படையில் முதலாவது ஸ்தானத்துக்கான விருது அவருக்கு வழங்கப்பட்டது.

திரு அமரதுங்க தற்பொழுது இலங்கை MTD வோர்கர்ஸ் நிறுவனத்தின் நிறைவேற்று பிரதி தலைவராக செயற்பட்டு வருகின்றார். அது கொழும்பு பங்கு பரிவர்த்தனையில் பிரதான பிரிவில் பட்டியலிடப்பட்டிருக்கும் ஒரு முன்னணி உள்கட்டமைப்பு கம்பனியாகும். அவர் தற்பொழுது பீப்பள்ஸ் இன்சுரன்ஸ் பிஎல்சியின் தலைவராகவும், பீப்பள்ஸ் மேர்ச்சன்ட் வங்கி பிஎல்சியின் ஒரு பணிப்பாளராகவும் இருந்து வருகின்றார்.

அவர் நிதி மற்றும் முகாமைத்துவம் ஆகிய துறைகளில் 25 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவத்தை கொண்டி-ருப்பதுடன், பெருந்தொகையான கூட்டுத்தாபனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் என்பவற்றில் ஆலோசகராகவும், பணிப்பாளராகவும் செயற்பட்டு வந்துள்ளார். அவர் பல சாதனைகளை நிகழ்த்தியுள்ளார். இலங்கை பட்டயக் கணக்காளர்களின் தேசிய மாநாட்டில் அவர் சமர்ப்பித்த "பணக் கணக்கீட்டுக்கான பெறுமதி" என்ற தலைப்பிலான கட்டுரை அத்தகைய சாதனைகளில் ஒன்றாகும். அவர் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் ஆட்சி மன்றக் குழுவின் ஒரு உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்.



திரு. அஜித் பண்டித்தரத்ன

பணிப்பாளர்

திரு. அஜித் பண்டித்தரத்ன 2010 ஜூன் மாதத்தில் மக்கள் வங்கி பணிப்பாளர் சபை உறுப்பினராகவும், அதன் இணை நிறுவனமான பீப்பள்ஸ் மேர்ச்சன்ட் பிஎல்சி யின் தலைவராகவும் நியமனம் செய்யப்பட்டார். அவர் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் நிறைவேற்று பணிப்பாளராகவும், குளோப்/மொன்டா குழுமக் கம்பெனிகளின் (விசேட கருத்திட்டங்கள்) ஆலோசகராகவும்/பணிப்பாளராகவும் பணியாற்றி வருகின்றார். அவர் தேசிய கடதாசி கூட்டுத்தாபனத்தில் செயல் பணிப்பாளராகவும், பின்னர் 2001 ஆம் வருடத்தில் அதன் தலைவராகவும் பணியாற்றியுள்ளார். 2002 ஜனவரி தொடக்கம் 2004 ஏப்ரல் வரையில் லங்கா சிமெண்ட் நிறுவனத்தின் செயற்பாட்டு பணிப்பாளராகவும், 2003 அக்டோபர் தொடக்கம் 2004 ஏப்ரல் வரையில் பரந்தன் இராசயன கூட்டுத்தாபனத்தின் தலைவராகவும் அவர் பணியாற்றியுள்ளார். பணிப்பாளர் சபைகளில் அவருக்கு 10 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம் உள்ளது.

அவர் மக்கள் வணிக வங்கியின் துணை நிறுவனமொன்றான பீப்பள்ஸ் மேர்ச்சன்ட் பிஎல்சி தலைவராகவும், பீப்பள்ஸ் லீசிங் கம்பெனியின் துணை நிறுவனமொன்றான பீப்பள்ஸ் லீசிங் புரொப்பர்ட்டி டெவலப்மன்ட் கம்பெனியின் பணிப்பாளராகவும் இருந்து வருகின்றார்.



திருமதி லக்ஷ்மி கே. சங்கக்கார

பணிப்பாளர்

திருமதி லக்ஷ்மி கே. சங்கக்கார 2010 மே மாதத்தில் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபைக்கு நியமனம் செய்யப்பட்டார். மக்கள் வங்கியின் துணை நிறுவனமொன்றான வ. ப. பீப்பள்ஸ் டிரவல்ஸ் நிறுவனத்தின் தற்போதைய தலைவராகவும் அவர் செயற்பட்டு வருகின்றார். மேலும், வ.ப. பீப்பள்ஸ் லீசிங் பீளீட் மனேஜ்மன்ட் கம்பெனி மற்றும் ஸ்ரீ லங்கன் ஏயர் லைன்ஸ் என்பவற்றின் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் உள்ளார்.

அவர் ஒரு சட்டத்தரணியாவார்.

திருமதி சங்கக்கார செலர்ஸ் ஸ்போர்ட்வியர் கார்மென்ட்ஸ், ரொன்புரோ இன்டர்நெஷனல் கார்மென்ட்ஸ் மற்றும் சன் ஜலன்ட் வில்லேஜ் ஹொலிடே ரிசோர்ட் ஆகிய நிறுவனங்களின் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் இருந்துள்ளார். அவர் சட்டம், முகாமைத்துவம், சந்தைப்படுத்தல், ஹோட்டல் துறை மற்றும் ஆடைகள் ஆகிய துறைகளில் சுமார் 31 வருடங்களுக்கு மேற்பட்ட பரந்த அனுபவத்தை கொண்டுள்ளார்.



திருமதி தர்மா என். கம்மம்பில

பணிப்பாளர்

திருமதி தர்மா என். கம்மம்பில 2010 மே மாதத்தில் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபைக்கு நிறைவேற்று தரம் சாராத பணிப்பாளராக நியமனம் செய்யப்பட்டார். அவர் பீப்பள்ஸ் இன்சுரன்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் ஒரு உறுப்பினராகவும் இருந்து வருகின்றார்.

அவர் ஒரு சட்டத்தரணியாகவும், பிரசித்த நொத்தாரிசாகவும் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட ஒரு கம்பெனி செயலாளராகவும், இங்கிலாந்து வேல்ஸ் என்பவற்றின் சட்டத்தரணியாகவும் உள்ளார். இங்கிலாந்து மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில் 35 வருடத்துக்கு மேற்பட்ட அனுபவத்தை அவர் கொண்டுள்ளார். போப்ஸ் அன்ட் வோர்க்கர் நிறுவனத்தின் கம்பெனி செயலாளராகவும், போப்ஸ் அன்ட் வோர்க்கர் குழுமத்தின் துணை நிறுவனங்களின் சட்ட பணிப்பாளராகவும், மனித வள பணிப்பாளராகவும் 13 வருடங்களுக்கு மேல் அவர் பணியாற்றியுள்ளார். திருமதி கம்மம்பில தற்பொழுது பெருந்தோட்டங்கள், பிரயாணம், சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் ஆகிய துறைகளுடன் சம்பந்தப்பட்டிருக்கும் பல தனியார் கம்பெனிகளில் பணிப்பாளராக செயற்பட்டு வருகிறார்.

அவர் கம்பெனிச் சட்டம், தொழில் அமர்த்தும் சட்டம் மற்றும் பண்டங்களை அனுப்புதல் ஆகிய துறைகளில் ஒரு சட்டத்தரணியாகவும் முனைப்புடன் சம்பந்தப்பட்டுள்ளார்.



செல்வி விசாகா அமரசேகர

பணிப்பாளர்

செல்வி விசாகா அமரசேகர நிதி திட்டமிடல் அமைச்சின் திறைசேரியின் பிரதிநிதி என்ற முறையில் 2010 ஜூன் மாதத்தில் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபைக்கு நியமனம் செய்யப்பட்டார்.

அவர் ஐக்கிய அமெரிக்காவின் வன்டர்பில்ட் பல்கலைக்கழகத்தில் அபிவிருத்தி பொருளாதாரத்தில் எம்.ஏ. பட்டத்தையும் (2007) (ISE) பொருளாதாரம் மற்றும் முகாமைத்துவம் என்பவற்றில் பி.எஸ்.சி. (சிறப்பு) பட்டத்தையும் (2002) பெற்றுள்ளார். அவர் ஐக்கிய இராச்சியத்தின் முகாமைத்துவ கணக்காளர்களின் பட்டய நிறுவனத்தின் இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்திருப்பதுடன் (1999), (இலங்கை) பொது நிதி அபிவிருத்தி கணக்கீட்டு நிறுவனத்தின் ஓர் உறுப்பினராகவும் இருந்து வருகின்றார்.

செல்வி அமரசேகர தற்பொழுது பொது தொழில் முயற்சிகள் திணைக்களத்தில் பிரதிப் பணிப்பாளராக பணியாற்றுகின்றார். அரசுக்கு சொந்தமான பல தொழில் முயற்சிகளில் அவர் திறைசேரியின் பிரதிநிதியாகவும் செயற்பட்டு வருகின்றார்.



திரு. பிரியந்த மாயாதுன்ன

பணிப்பாளர்

திரு. பிரியந்த மாயாதுன்ன ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் பி.எஸ்.சி. (வணிக நிர்வாகம்) பட்டத்தையும், ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்திலிருந்து பொது நிர்வாகத்தில் முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுக் கொண்டுள்ளார். மேலும், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்திலிருந்து அவர் சட்டத்துறையில் பட்டம் (LLB) பெற்றுள்ளார். திரு. மாயாதுன்ன பண்டாரநாயக்க சர்வதேச ராஜதந்திர பயிற்சி நிறுவனத்திலிருந்து தொழில் முறை ராஜதந்திரம் மற்றும் உலக விவகாரங்கள் என்பவற்றில் டிப்ளொமா சான்றிதழையும் பெற்றுக் கொண்டுள்ளார்.

இலங்கை நிர்வாக சேவையின் ஓர் அதிகாரி என்ற முறையில் அவர் பிராந்திய நிர்வாகத்திலும், திணைக்கள மற்றும் அமைச்சு மட்ட நிர்வாகத்திலும் அனுபவத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார். அவர் பல நியதிபூர்வ நிறுவனங்களுக்கு பணிக்கென விடுவிக்கப்பட்டிருந்தார். திரு. மாயாதுன்ன பொதுத் துறையில் உற்பத்தித் திறன் மற்றும் தர உத்தரவாதம் என்பவற்றை விருத்தி செய்வதிலும் பங்காற்றியுள்ளார்.



திரு. பவர தஸநாயக்க

பணிப்பாளர்

திரு. பவர தஸநாயக்க 21.02.2011 இல் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபைக்கு நியமனம் செய்யப்பட்டார்.

வணிகத் துறையில் 15 வருடங்களுக்கு மேல் அனுபவம் பெற்றிருக்கும் ஒரு முதன்மையான தொழில் முயற்சியாளராக அவர் இருந்து வருகின்றார்.
திரு. தஸநாயக்க கட்டட பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் தலைவராகவும் செயற்பட்டு வருகின்றார்.

This page is intentionally left blank

கூட்டு முகாமைத்துவம்



திரு. என். வசந்த குமார்

பிரதம நிறைவேற்று அதிகாரி/ பொது முகாமையாளர்

வணிக நிர்வாகத்தில் முதுமாணிப் பட்டத்தை பெற்றிருக்கும் திரு. வசந்தகுமார் திறைசேரி முகாமைத்துவத்தில் 32 வருடத்துக்கு மேற்பட்ட அனுபவத்தை கொண்டுள்ளார். அவர் 2001 மார்ச் மாதத்தில் மக்கள் வங்கிப் பணியில் இணைந்து கொண்டார். அதற்கு முன்னர் பல வருட காலம் அவர் கொழும்பு ANZ கீரிண்ட்லேய்ஸ் வங்கியில் திறைசேரித் துறை பிரதம அதிகாரியாக பணியாற்றியுள்ளார்.

அவர் 2011 பெப்ரவரி 22 ஆந் திகதி மக்கள் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளராக பதவியேற்றார்.

திரு. வசந்த குமார் பீப்பள்ஸ் லீசிங் கம்பெனி பிஎல்சி, வ.ப. பீப்பள்ஸ் இன்சுரன்ஸ் கம்பெனி, வ.ப. பீப்பள்ஸ் டிரவல்ஸ் கம்பெனி, கடன் தகவல் பணியகம் மற்றும் தேசிய கொடுப்பனவு சபை என்பவற்றின் பணிப்பாளராகவும் செயற்பட்டு வருகின்றார். அவர் இலங்கை வங்கியாளர் நிறுவனத்தின் ஆட்சி மன்றக் குழு உறுப்பினராக செயற்பட்டு வருகின்றார். அவர் தற்பொழுது இலங்கை நிதிச் சேவை பணியகத்தின் தலைவராகவும், பினான்ஸியல் ஒம்புட்ஸ்மன் ஸ்ரீலங்கா நிறுவனம் மற்றும் இலங்கை வங்கியாளர் கழகம் என்பவற்றின் தலைவராகவும் இருந்து வருகின்றார்.

அவர் முதன்மை வணிகர்களின் சங்கம் மற்றும் இலங்கை பொரெக்ஸ் சங்கம் என்பவற்றின் முன்னாள் தலைவராவார்.



திரு. அஹமட் சப்ரி இப்றாஹிம்

சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர் - இடர் முகாமைத்துவம்

திரு.இப்றாஹிம் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் 29 வருடங்களுக்கு மேற்பட்ட வங்கித்தொழில் அனுபவத்தை கொண்டுள்ளார். குறிப்பாக, கூட்டுறவு வங்கித்தொழில், திறைசேரி முகாமைத்துவம் மற்றும் நட்டவச்ச முகாமைத்துவம் போன்ற துறைகளில் அவர் அனுபவம் பெற்றுள்ளார். கொழும்பு பல்கலைக்கழகத்தின் பி.எஸ். சி. சிறப்பு பட்டதாரியான அவர், ஐக்கிய இராச்சியத்தின் பட்டய வங்கியாளர் நிறுவனத்தின் சிறப்பு உறுப்பினராகவும் (FCIB) உள்ளார்.



திரு. தீபால் அபேசேகர

தலைமை அதிகாரி - சந்தைப்படுத்தல், பொது விவகாரங்கள் மற்றும் நிறுவனத் துறை சமூகப் பொறுப்பு

மக்கள் வங்கியின் சந்தைப்படுத்தல் மற்றும் பொது விவகாரங்கள் என்பவற்றுக்கான தலைமைப் பொறுப்பை வகித்து வரும் தீபால் அபேசேகர வணிகச் சின்னத்தை கட்டியெழுப்புதல் மற்றும் உபாய ரீதியான வணிக அபிவிருத்தி என்பன தொடர்பாக அவர் கொண்டிருக்கும் திறமைகளினால் நன்கு அறியப்பட்டவராவார்.

அவர் நிதித் துறை நிறுவனங்களின் விற்பனை, சந்தைப்படுத்தல் மற்றும் உபாய ரீதியான வணிக அபிவிருத்தி செயற்பாடுகள் ஆகியவற்றுக்கு பொறுப்பாக இருந்து வந்திருப்பதுடன், கம்பனிகளின் வணிகச் சின்னங்களை அந்தந்த தொழில் துறைகளில் வெற்றிகரமாக உச்ச மட்டங்களுக்கு எடுத்துச் சென்றுள்ளார்.

திரு. அபேசேகர பட்டயம் பெற்ற ஒரு சந்தைப்படுத்துனர் ஆவார். மேலும், அவர் ஐக்கிய இராச்சியத்தின் பட்டய சந்தைப்படுத்தல் நிறுவனத்தின் சிறப்பு உறுப்பினராகவும், ஐக்கிய இராச்சியத்தின் பட்டய முகாமைத்துவ நிறுவனத்தின் ஒரு உறுப்பினராகவும், அத்தாட்சிப்படுத்தப்பட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் உறுப்பினராகவும் (CMA) இருந்து வருகின்றார்.

அவர் அவுஸ்திரேலியா தென் குயின்ஸ்லாந்து பல்கலைக்கழகத்திலிருந்து MBA பட்டத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார். அவர் தற்போது முகாமைத்துவ கழகத்தின் முகாமைத்துவ சபையின் தலைவராகவும், தொழில்சார் வங்கியாளர் சங்கம் மற்றும் ஆலோசனை சபை உறுப்பினராகவும் செயற்பட்டு வருகின்றார். மேலும், குளோபல் மார்க்கட்டிங் நெட்வேர்க் - UK அமைப்பின் இலங்கைக்கான ஆலோசனை சபை உறுப்பினராகவும் இருந்து வருகின்றார்.



திரு. யொஹான் ஏ. சோஸா

தலைமை அதிகாரி - நிதி

திரு. சோஸா 2007 மே மாதத்தில் வங்கியின் நிதித் துறை தலைமை அதிகாரியாக நியமனம் செய்யப்பட்டார்.

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் ஓர் உறுப்பினரான அவர் அவுஸ்திரேலியா தென் குயின்ஸ்லாந்து பல்கலைக்கழகத்திலிருந்து MBA பட்டத்தை பெற்றுள்ளார். நிதி, முகாமைத்துவ தகவல், உபாயரீதியான திட்டமிடல் மற்றும் பங்கு மூலதன ஆராய்ச்சி ஆகிய துறைகளில் அனுபவத்தை கொண்டுள்ளார்.

அவர் லங்கா ஒரெக்ஸ் பக்டர்ஸ் (LOLC குழுமம்) நிறுவனத்தில் இணைந்து கொள்வதற்கு முன்னர், ஏனர்ஸ்ட் அன்ட் யங் கணக்காளர் நிறுவனத்தில் தொழில் சார் பயிற்சியை பெற்றுக் கொண்டார். மக்கள் வங்கியில் இணைவதற்கு முன்னர் அவர் AMBA ரிசேர்ச் லங்கா நிறுவனத்தில் பணியாற்றியுள்ளார்.



திருமதி சாந்தனி வேரபிட்டிய

பிரதிப் பொது முகாமையாளர் - கூட்டுறவு வங்கித்தொழில்

திருமதி சாந்தனி வேரபிட்டிய கடல் கடந்த வங்கித்தொழில் அலகையும் உள்ளடக்கிய விதத்தில் ஒட்டுமொத்த வங்கியினதும் தொகுதி கடனளிப்புக்கு பொறுப்பாக இருந்து வருகின்றார்.

அவர் வணிக நிர்வாகத்தில் பி.எஸ். சி. இரண்டாம் வகுப்பு உயர் மட்ட தேர்ச்சியை பெற்றிருப்பதுடன், ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவத்தில் எம்.எஸ்.சி. பட்டத்தையும் பெற்றுக் கொண்டுள்ளார். மேலும், தொழில்சார் வங்கி தகைமையையும் (AIB இலங்கை) பெற்றுக் கொண்டுள்ளார்.

அவர் 1987 ஜூன் மாதத்தில் ஒரு முகாமைத்துவ பயிலுனராக வங்கிச் சேவையில் இணைந்து கொண்டதுடன், வாடிக்கையாளர் சேவைகள், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள்/ கருத்திட்ட கடனளிப்பு, கிளைச் செயற்பாடுகள், கூட்டுறவு வங்கித்தொழில், சர்வதேச வங்கித்தொழில் மற்றும் கடன் முகாமைத்துவம் ஆகிய துறைகளில் சுமார் 25 வருட கால அனுபவத்தை கொண்டுள்ளார்.

தற்போது அவர் கூட்டுறவு வங்கித்தொழில் பிரிவுக்கு தலைமை வகித்து வருகின்றார்.



திரு. கே. பி. ராஜபக்ஷ

பிரதிப் பொது முகாமையாளர் - உள்நாட்டு கடன்

திரு. ராஜபக்ஷ உள்நாட்டு கடன் திணைக்களத்துக்கு பொறுப்பாக உள்ளார். அவர் ஒரு முகாமைத்துவ பயிலுனராக வங்கியில் இணைந்து கொண்டதுடன், மக்கள் வங்கியில் 25 வருட கால அனுபவத்தை கொண்டுள்ளார்.

அவர் பொது நிர்வாகத்தில் பி. எஸ். சி. இரண்டாம் வகுப்பு பட்டத்தைப் பெற்றிருப்பதுடன், இலங்கை வங்கியாளர் நிறுவனத்தின் இணை உறுப்பினராகவும் உள்ளார். இலங்கை சட்டத்தரணியாகவும் தகைமை பெற்றிருக்கும் அவர் இலங்கை கடன் முகாமைத்துவ நிறுவனத்தின் டிப்ளோமா சான்றிதழையும் பெற்றுக் கொண்டுள்ளார்.

தற்போது அவர் வங்கியின் உள்நாட்டு கடன் மற்றும் கடன் அட்டை செயற்பாடுகள் ஆகியவற்றுக்கு தலைமை அதிகாரியாகவும் இருந்து வருகின்றார். அவர் பல்வேறு முகாமைத்துவ மட்டங்களில் பரந்த அளவில் அனுபவத்தை பெற்றுள்ளார்.

அவர் வங்கியாளர் நிறுவனத்தின் பணிப்பாளராகவும், கடன் தகவல் பணியகத்தின் ஒரு மாற்று பணிப்பாளராகவும் செயற்பட்டு வருகின்றார்.



திரு. எஸ். ஏ. ஆர். எஸ். சமரவீர

பிரதிப் பொது முகாமையாளர் - மனித வளங்கள்

திரு. சமரவீர மனித வளங்கள் பிரிவுக்கு பொறுப்பாக இருந்து வருகின்றார். அவர் ஒரு முகாமைத்துவ பயிலுனராக வங்கிச் சேவையில் இணைந்து கொண்டதுடன், கிளை வங்கித்தொழில், கூட்டுறவு வங்கித்தொழில், அபிவிருத்தி வங்கித்தொழில் மற்றும் கடன் அறவீடு ஆகிய துறைகளில் 25 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து முகாமைத்துவத்தில் பி. எஸ். சி. இரண்டாம் வகுப்பு சிறப்பு பட்டத்தை பெற்றுக் கொண்டிருக்கும் அவர் - AIB இலங்கை தொழில்சார் வங்கித்தொழில் தகைமையையும் கொண்டுள்ளார்.

அவர் முகாமைத்துவ அபிவிருத்தி, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி முகாமைத்துவம், நலிவுற்ற நிகழ்ச்சித்திட்டங்களை புனரமைத்தல் மற்றும் உபாய ரீதியான மனித வள முகாமைத்துவம் என்பவற்றை உள்ளடக்கிய பல உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்றுள்ளார்.



திரு. ரீ. ஏ. ஆரியபால

பிரதிப் பொது முகாமையாளர் - கூட்டுறவு, அபிவிருத்தி மற்றும் சிறிய நடுத்தர அளவு தொழில் முயற்சிகள்

திரு. ஆரியபால 2010 தொடக்கம் கூட்டுறவு, அபிவிருத்தி மற்றும் சிறிய நடுத்தர அளவு தொழில் முயற்சி வங்கித்தொழில் பிரிவுக்குப் பொறுப்பாக இருந்து வருகின்றார்.

திரு. ஆரியபால வணிக நிர்வாகத்தில் பி. எஸ். சி. பட்டத்தை பெற்றிருப்பதுடன், சட்டத் துறையில் பட்டம் பெற்ற சட்டத்தரணியாகவும் இருந்து வருகின்றார். அவர் இலங்கை வங்கியாளர் நிறுவனத்தின் சிறப்பு உறுப்பினராகவும், இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் நிறுவனத்தின் இணை உறுப்பினராகவும் உள்ளார்.

அவர் வங்கியில் 34 வருடங்களுக்கும் மேற்பட்ட தொழில் அனுபவத்தைக் கொண்டுள்ளார்.

உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் விரிவான விதத்தில் பயிற்சிகளை பெற்றிருக்கும் திரு. ஆரியபால கூட்டுறவுத் துறை, கருத்திட்ட கடனளிப்பு, நுண்மட்ட நிதி, மனித வள முகாமைத்துவம் மற்றும் கிளை வணிகம்/ வங்கித்தொழில் ஆகிய துறைகளில் அனுபவம் பெற்றுள்ளார். வங்கியில் சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிகள் வங்கித்தொழில் மற்றும் அபிவிருத்தி கடனளிப்பு என்பவற்றின் புத்துயிர்ப்புக்கு அவர் பொறுப்பாக இருந்து வந்துள்ளார்.

அவர் பிராந்திய அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபையின் ஒரு உறுப்பினராகவும் இருந்த வருகின்றார்.



திரு. ரொஹான் பத்திரகே

பிரதிப் பொது முகாமையாளர் - பணிப்பாளர் சபையின் செயலாளர்

திரு. பத்திரகே 2010 ஆகஸ்ட் மாதத்தில் பணிப்பாளர் சபையின் செயலாளராக நியமனம் செய்யப்பட்டார். அவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்டத் துறையில் பட்டம் பெற்றிருப்பதுடன், நியூசிலாந்து மெசே பல்கலைக்கழகத்தில் வங்கித்தொழில் துறையில் டிப்ளோமா சான்றிதழையும், வங்கித்தொழில் முகாமைத்துவத்தில் முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுள்ளார். அவர் ஒரு சட்டத்தரணியுமாவார்.

அவர் பீப்பள்ஸ் லீசிங் கம்பெனி, பீப்பள்ஸ் பீளீட் மனேஜ்மன்ட் கம்பெனி, பீப்பள்ஸ் புரொப்பர்ட்டி டெவலப்மன்ட் கம்பெனி, பீப்பள்ஸ் இன்சுரன்ஸ் கம்பெனி மற்றும் பீப்பள்ஸ் டிரவல்ஸ் கம்பெனி என்பவற்றின் கம்பெனி செயலாளராகவும் இருந்து வருகின்றார்.

அவர் வங்கியில் 17 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தை கொண்டுள்ளார்.



திருமதி சிறிமா அரசகுலரத்ன

பிரதிப் பொது முகாமையாளர் - இணங்கியொழுகல்

திருமதி அரசகுலரத்ன தரம் II நிதி அதிகாரி ஒருவராக வங்கிச் சேவையில் இணைந்ததுடன், வங்கியில் 27 வருடங்களுக்கும் மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டுள்ளார்.

அவர் கடந்த 31 வருட காலமாக ஐக்கிய இராச்சியத்தின் பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவனத்தின் ஓர் உறுப்பினராக இருந்து வருகின்றார். இலங்கை அத்தாட்சிப்படுத்தப்பட்ட முகாமைத்துவ கணக்காளர் நிறுவனத்தின் ஒரு சிறப்பு உறுப்பினராகவும், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் ஆரம்பத் தகைமையைப் பெற்றவராகவும் இருந்து வருகின்றார். அவர் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டத்தில் கலைமாணிப் பட்டத்தையும் பெற்று கொண்டுள்ளார்.

முகாமைத்துவம்/நிதிக் கணக்கீடு, முகாமைத்துவ தகவல், போக்குவரத்து ஏற்பாடுகள் மற்றும் நிர்வாகம் ஆகிய துறைகளில் பரந்த அனுபவத்தை பெற்றுக் கொண்டுள்ளார். வங்கிச் சேவையில் இணைவதற்கு முன்னர் அவர் இலங்கை மட்பாண்ட் கூட்டுத்தாபனத்தில் தொழில் பயிற்சியை பெற்றுக் கொண்டதுடன், மூன்று அரச நிறுவனங்களில் கணக்காளராக பணியாற்றியுள்ளார்.



திருமதி ஜீ. பி. ஆர். ஜயசிங்க

பிரதிப் பொது முகாமையாளர் - சில்லறை வங்கித்தொழில்

திருமதி ரேணுகா ஜயசிங்க 1987 இல் ஒரு முகாமைத்துவ பயிலுனராக வங்கிச் சேவையில் இணைந்ததுடன், மக்கள் வங்கியில் 25 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தை கொண்டுள்ளார்.

இக்காலப் பிரிவின் போது அவர் கிளை முகாமையாளர், வலய சிரேஷ்ட முகாமையாளர், பிராந்திய முகாமையாளர் மற்றும் உதவிப் பொது முகாமையாளர் (வங்கி ஆதரவுச் சேவைகள்) ஆகிய மட்டங்களில் கிளை வங்கித்தொழில் பணிகளை மேற்கொண்டுள்ளார். 2011 ஆம் ஆண்டு தொடக்கம் அவர் (சில்லறை வங்கித்தொழில்) பிரதிப் பொது முகாமையாளராக பணியாற்றி வருகின்றார்.

திருமதி ஜயசிங்க ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து வணிகத் துறையில் முதலாம் வகுப்பு சிறப்புப் பட்டத்தை பெற்றுக் கொண்டுள்ளார். அவர் இலங்கை வங்கியாளர் நிறுவனத்திலிருந்து AIB தகைமையையும் பெற்றுக் கொண்டுள்ளார். அவர் இலங்கை தொழில்சார் வங்கியாளர் சங்கம் மற்றும் இலங்கை வங்கியாளர் நிறுவனம் என்பவற்றின் ஆயுள் கால உறுப்பினராக இருந்து வருகின்றார்.

அவருடைய வங்கிப் பணியின் போது, அவர் பல உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சித் திட்டங்களில் பங்கேற்றுள்ளார்.



திரு. கிளைவ் பொன்சேகா

தலைமை அதிகாரி, திறைசேரி மற்றும் முதலீட்டு வங்கித்தொழில் பிரிவு

திரு. பொன்சேகா இலங்கை வங்கியாளர் நிறுவனத்தின் ஓர் உறுப்பினராக இருந்து வருவதுடன், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பட்டப் பின் படிப்பு முகாமைத்துவ நிறுவனத்தில் வணிக நிர்வாகத்தில் முதுநிலைப் பட்டத்தை பெற்றுள்ளார். மேலும் அவர் ACI வியாபார சான்றிதழில் அதியுயர் சித்தியை பெற்றிருப்பதுடன், திறைசேரி முகாமைத்துவத்தில் 20 வருட அனுபவத்தை கொண்டுள்ளார்.

அவர் 2002 இல் மக்கள் வங்கிச் சேவையில் இணைந்து கொண்டார். அதற்கு முன்னர் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் வங்கி ஸ்டான்டர்ட் சார்டட் வங்கி என்பவற்றில் பணி புரிந்தார்.



திரு எம். ஏ. பொனீபஸ் சில்வா

பிரதிப் பொது முகாமையாளர் - செயற்பாடுகள்

திரு. சில்வா 1987 இல் ஒரு முகாமைத்துவ பயிலுனராக வங்கிச் சேவையில் இணைந்துடன், மக்கள் வங்கியில் 25 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தை கொண்டுள்ளார்.

அவருடைய 25 வருட கால பணி அனுபவம் கிளை முகாமையாளர், பிராந்திய முகாமையாளர், வலய உதவிப் பொது முகாமையாளர் ஆகிய மட்டங்களில் கிளை வணிக வங்கித்தொழில் செயற்பாடுகளை உள்ளடக்குகின்றது. அவர் தற்பொழுது மக்கள் வங்கியின் கிளை வலையமைப்புக்கு பொறுப்பாக இருந்து வருகின்றார்.

அவர் வங்கியின் ஒட்டுமொத்த கிளை வலையமைப்புக்கும் பொறுப்பேற்பதற்கு முன்னர் உயர் வணிகத் தொகுப்புக்களை கொண்டிருக்கும் 08 பிராந்தியங்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டிருக்கும் சுமார் 150 கிளைகளுக்கு பொறுப்பாக இருந்து வந்தார்.

அவர் பேராதனை பல்கலைக்கழகத்தில் B. A. பட்டம் பெற்றிருப்பதுடன், இலங்கை வங்கியாளர் நிறுவனத்தில் தொழில்சார் தகைமையையும் பெற்றுள்ளார். மேலும் அவர் இலங்கை வங்கியாளர் நிறுவனத்தின் இணை உறுப்பினராகவும் இருந்து வருகிறார்.

இக்காலப் பிரிவின் போது அவர் விரிவான விதத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிகளை பெற்றுக் கொண்டிருப்பதுடன், கிளை வணிகம்/வங்கித்தொழில் என்பவற்றில் பரவலான அனுபவத்தையும் பெற்றுள்ளார்.



திரு பீ. எம். பிரேம்நாத்

பிரதிப் பொது முகாமையாளர் - வங்கி ஆதரவுச் சேவைகள்

திரு பி. எம் பிரேம்நாத் மக்கள் வங்கியில் 25 வருட கால அனுபவத்தை கொண்டுள்ளார். அவர் 1987 இல் ஒரு முகாமைத்துவ பயிலுனராக வங்கியில் இணைந்ததுடன், பல கிளைகளில் முகாமையாளராக பணியாற்றியுள்ளார். மாத்தளை மற்றும் பொலன்னறுவ பிராந்திய தலைமை அலுலகங்களில் உதவி பிராந்திய முகாமையாளராகவும், பிராந்திய முகாமையாளராகவும், (மத்திய வலய) உதவிப் பொது முகாமையாளராகவும் செயற்பட்டுள்ளார். அவர் 2012 ஜுன் 15 ஆந் திகதி தொடக்கம் (வங்கி ஆதரவுச் சேவைகள்) பிரதிப் பொது முகாமையாளராக பதவி உயர்த்தப்பட்டார்.

அவர் கொழும்பு பல்கலைக்கழத்தில் B.Com இரண்டாம் வகுப்பு மேற் பிரிவில் பட்டம் பெற்றிருப்பதுடன், இலங்கை வங்கியாளர் நிறுவனத்திடமிருந்து தொழில்சார் தகைமையையும் பெற்றுக் கொண்டுள்ளார்.

அவருடைய பணிக் காலத்தின் போது அவர் பல்வேறு உள்நாட்டு வெளிநாட்டு, பயிற்சித் திட்டங்களில் பங்கேற்றுள்ளார்.



திருமதி என். எஸ். திலகரத்ன

பிரதம உள்ளக கணக்காய்வாளர்

திருமதி நந்தனி திலகரத்ன 2012 ஜுன் 15 ஆம் திகதி வங்கியின் பிரதம உள்ளக கணக்காய்வாளராக நியமனம் செய்யப்பட்டார்.

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் இணை உறுப்பினரான அவர் ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாகத்தில் பி.எஸ்.சி. இரண்டாம் வகுப்பு சிறப்பு பட்டத்தையும் பெற்றுள்ளார். அவர் இலங்கை வங்கியாளர் நிறுவனத்தின் இணை உறுப்பினராவார். இந்திய பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் தொழில்நுட்ப ஒத்துழைப்புடன் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் நடத்தப்பட்ட தகவல் முறைமைகள், பாதுகாப்பு கட்டுப்பாடு மற்றும் கணக்காய்வு பாடநெறியில் அவர் டிப்ளோமா சான்றிதழை பெற்றுக் கொண்டுள்ளார்.

திருமதி திலகரத்ன ஓர் உதவி நிதி உத்தியோகத்தராக 1990 மார்ச் மாதத்தில் வங்கிச் சேவையில் இணைந்தார். அவர் கருத்திட்ட கடனளிப்பு மற்றும் கணக்காய்வு ஆகிய துறைகளில் சுமார் 23 வருட கால அனுபவத்தை கொண்டுள்ளார்.



திரு ஜயந்த நிவுன்ஹெல்ல

பிரதிப் பொது முகாமையாளர் - சர்வதேச வங்கித்தொழில்

திரு நிவுன்ஹெல்ல வங்கியில் பன்முகப்பட்ட அனுபவத்தை பெற்றுக் கொண்டுள்ளார். பல நாடுகளில் வணிகம் மற்றும் தொழில் அபிவிருத்தி தொடர்பான பயிற்சிகளிலும் பங்கேற்றுள்ளார். தற்பொழுது அவர் வியாபார சேவைகள், நிதி நிறுவனங்கள் பிரிவு, வெளிநாட்டு வாடிக்கையாளர் சேவைகள், மற்றும் வங்கியின் திறைசேரி பின்னரங்க அலுவலகம் என்பவற்றுக்கு பொறுப்பாக இருந்து வருகிறார்.

அவர் B.Sc. முகாமைத்துவம் பட்டத்தை பெற்றிருப்பதுடன், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பட்டப் பின் படிப்பு முகாமைத்துவ நிறுவனத்தில் MBA பட்டத்தையும் பெற்றுள்ளார். அவர் இலங்கை வங்கியாளர் நிறுவனத்தின் சிறப்பு உறுப்பினராகவும் உள்ளார்.

திரு நிவுன்ஹெல்ல தற்பொழுது இலங்கை வங்கியாளர் வியாபார நிதிக் கழகத்தில் தலைவராக செயற்பட்டு வருகின்றார். மேலும், பல நிறுவனங்களில் சர்வதேச வர்த்தகம் மற்றும் மனித வளங்கள் ஆகிய துறைகளில் விரிவுரையாளராகவும் செயற்பட்டு வருகின்றார்.



திருமதி ஜீ. ஏக்கநாயக்க

பிரதம சட்ட உத்தியோகத்தர்

திருமதி ஞானா ஏக்கநாயக்க ஒரு சட்டத்தரணி ஆவார். அவர் கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து LLB பட்டத்தை பெற்றுக் கொண்டுள்ளார்.

அவர் வேல்ஸ் பல்கலைக்கழகத்திலிருந்து LLM பட்டத்தை பெற்றிருப்பதுடன், சர்வதேச வர்த்தக சட்டம், வங்கித்தொழில் மற்றும் காப்புறுதி ஆகியவற்றில் இரண்டு டிப்ளோமா சான்றிதழ்களையும் பெற்றுக் கொண்டுள்ளார்.

அவர் திருவாளர்கள் விஜேசிங்க அன்ட் ஜயசேகர மற்றும் டீ சில்வா அன்ட் குருசிங்க ஆகிய சட்ட நிறுவனங்களில் ஒரு தொழில் முறை உதவியாளராக தனது தொழில் வாழ்க்கையை ஆரம்பித்தார். பின்னர் இலங்கை சீனிக் கூட்டுத்தாபனத்தின் சட்ட உத்தியோகத்தராக பணியாற்றினார்.

அதனையடுத்து 1985 இல் அவர் மக்கள் வங்கியில் இணைந்ததுடன், காலி, மாத்தறை, கொழும்பு (வெளி) ஆகிய பிராந்தியங்களிலும், தொகுதி வங்கித்தொழில் பிரிவிலும் பணியாற்றினார். தற்பொழுது தலைமை அலுவலகத்தில் பணியாற்றி வருகின்றார்.

திருமதி ஏக்கநாயக்க வங்கித்தொழில் சட்டம், கடனளிப்பு, அறவீடு, கம்பெனிச் சட்டம் மற்றும் தொழில் சட்டம் ஆகிய துறைகளில் அனுபவத்தைக் கொண்டுள்ளார்.



திரு. சோபித வீரசேகர

பதில் தலைமை அதிகாரி - தகவல் தொழில்நுட்பம்

திரு. சோபித வீரசேகர 2007 இல் வங்கிச் சேவையில் இணைந்ததுடன், 2010 செப்டம்பர் மாதத்தில் தகவல் தொழில்நுட்ப பதில் தலைமை அதிகாரியாக நியமனம் செய்யப்பட்டார்.

திரு. வீரசேகர வங்கித்தொழில் துறையில் 25 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தை கொண்டுள்ளார். வங்கித்தொழில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் பரந்த அனுபவத்தை கொண்டிருக்கும் அவர் ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்திலிருந்து MBA பட்டத்தை பெற்றுக் கொண்டுள்ளார். மேலும், அவர் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்திலிருந்து தகவல் முகாமைத்துவத்தில் MSc பட்டத்தை பெற்றுள்ளார். மேலும் அவர் FBCS, MACS பட்டத்தையும் தொழில்சார் வங்கித்தொழில் துறையில் தகைமையையும் பெற்றுக் கொண்டுள்ளார்.

திரு. வீரசேகர பல்வேறு தொழில்நுட்ப மதிப்பீட்டு கமிட்டிகளில் மக்கள் வங்கியை பிரதிநிதித்துவம் செய்கின்றார். அவை இலங்கை மத்திய வங்கியின் தேசிய கொடுப்பனவு பேரவை, பொது ATM சுவிட்ச் தொழில்நுட்ப மதிப்பீட்டு கமிட்டி, வங்கித்தொழில் தொழில்நுட்ப ஆலோசனை கமிட்டி என்பனவாகும். மேலும், SWIFT பாவனையாளர் குழுவின் உப தலைவராகவும் செயற்பட்டு வருகின்றார்.



திரு. ஜீ. பீ. ஆர். பீ. குணவர்த்தன

பதில் பிரதிப் பொது முகாமையாளர் - கடன் நட்டவச்ச கட்டுப்பாடு

திரு. ரஸித குணவர்தன மக்கள் வங்கியில் 25 வருடங்களுக்கு மேற்பட்ட சேவைக் காலத்தை கொண்டுள்ளார். அவர் 1987 இல் ஒரு சிரேஷ்ட நிதி உத்தியோகத்தராக வங்கிச் சேவையில் இணைந்தார்.

வங்கியில் அவருடைய அனுபவம் நிதி, செயலாற்றுகை முகாமைத்துவம், தொகுதி மற்றும் வர்த்தக கடனளிப்பு, திறைசேரி நடவடிக்கைகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப கருத்திட்ட அமுலாக்கங்கள் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

மக்கள் வங்கியில் இணைவதற்கு முன்னர் அவர் தனியார் துறையிலும், பொதுத் துறையிலும் அனுபவத்தை பெற்றுக் கொண்டுள்ளார். பிரயாணம் மற்றும் ஹோட்டல்கள், பெருந்தோட்ட முகாமைத்துவம் மற்றும் கட்டடவாக்கம் ஆகிய தொழில் துறைகளை உள்ளிட்ட பிரிவுகளில் அனுபவம் பெற்றுள்ளார்.

அவர் முகாமைத்துவ கணக்காளர்களின் பட்டய நிறுவனத்தின் (UK) இணை உறுப்பினராக இருந்து வருகின்றார். அவர் ACI திறைசேரி செயற்பாடு சான்றிதழில் அதி சிறந்த மட்டத்திலான சித்தியை பெற்றுக் கொண்டுள்ளார்.



திரு. லயனல் கலகெதர

பதில் பிரதிப் பொது முகாமையாளர் - அறவீடுகள்

திரு. லயனல் கலகெதர வங்கியின் கடன் அறவீட்டுக்கு பொறுப்பாக இருந்து வருகின்றார்.

அவர் ஒரு முகாமைத்துவ பயிலுனராக வங்கியில் இணைந்ததுடன். வங்கியில் 25 வருடங்களுக்கு மேற்பட்ட சேவைக் காலத்தை கொண்டுள்ளார். அவருடைய பன்முக அனுபவம் சில்லறை வங்கித்தொழில், வியாபார நிதிப்படுத்தல், கடனளிப்பு, கடன் நிர்வாகம் மற்றும் அறவீடு என்பவற்றை உள்ளடக்குகின்றது.

அவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் B. Com சிறப்புப் பட்டத்தைப் பெற்றிருப்பதுடன், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் LLB பட்டத்தையும் பெற்றுக் கொண்டுள்ளார். அவர் இலங்கை வங்கியாளர் நிறுவனத்தில் ஒரு இணை உறுப்பினராகவும் இருந்து வருவதுடன், ஒரு சட்டத்தரணியாகவும் உள்ளார்.

This page is intentionally left blank

நிறைவேற்று முகாமைத்துவம்



திரு. எஸ். வன்னியாரச்சி

உதவிப் பொது முகாமையாளர் - கடல் கடந்த வங்கித்தொழில்



திருமதி எஸ். பிரதாபசிங்க

உதவிப் பொது முகாமையாளர் - கடன்



திருமதி எஸ். டப்ளியு. ஏ. டி. எஸ். கல்யாணி

உதவிப் பொது முகாமையாளர் - நிதி மற்றும் முகாமைத்துவ கணக்கீடு



திரு. எச்.சி. பெர்னான்டோ

உதவிப் பொது முகாமையாளர் - சந்தைப்படுத்தல் மற்றும் திட்ட அபிவிருத்தி



திரு. டப்ளியு .கே. எஸ். பி. நந்தன

பிரதி பிரதம சட்ட அதிகாரி - அறவீடுகள்



திரு. ஏ.டப்ளியு. விபுலகுண

பிரதி பிரதம சட்ட அதிகாரி - மனித வளம் மற்றும் செயற்பாடுகள்



திரு. ஈ. ஏ. டி. ஜே. பிரியசாந்த

பிரதி பிரதம உள்ளக கணக்காய்வாளர்



திருமதி பீ. ஆர். மதுராவெல

உதவிப் பொது முகாமையாளர் - கடன் கட்டுப்பாடு



திருமதி என். சி. முதலிகே

உதவிப் பொது முகாமையாளர் - கிளைச் செயற்பாடுகள்



திருமதி வீ.கே. நாரங்கொட

உதவிப் பொது முகாமையாளர் - கூட்டுறவு வங்கித்தொழில் பிரிவு - கடன் அலகு I



திருமதி ஏ. எஸ். லியனாராச்சி

உதவிப் பொது முகாமையாளர் - கூட்டுறவு வங்கித்தொழில் பிரிவு - கடன் அலகு III



திரு. எஸ். ஜே. கருணாரத்ன

உதவிப் பொது முகாமையாளர் - வங்கித்தொழில் ஆதரவுச் சேவைகள்



திரு. எம். டி. பீ. குலரத்ன

உதவிப் பொது முகாமையாளர் - கடன் அறவீடு - கிளைகள்



திருமதி டி. வை. எஸ். மென்டிஸ்

உதவிப் பொது முகாமையாளர் - செயற்பாடுகள்



திருமதி கே. என். சேனாரத்ன

உதவிப் பொது முகாமையாளர் - சொத்து உற்பத்திகள்



திரு. ஏ. என். லியனபத்திரண

உதவிப் பொது முகாமையாளர் - கூட்டுறவு மற்றும் அபிவிருத்தி



திரு. எல். எல். ரணசிங்க

உதவிப் பொது முகாமையாளர் - பொறுப்பு உற்பத்திகள்



திரு. பீ.ஆர்.எஸ். ஜயதிஸ்ஸ

உதவிப் பொது முகாமையாளர் - மனித வளங்கள் - நிர்வாகம்



திருமதி பீ. எஸ். ஜே. குருகுலசூரிய

உதவிப் பொது முகாமையாளர் - மனித வளங்கள் அபிவிருத்தி



திரு. ஆர். எம். ஏ. கே. பண்டார

உதவிப் பொது முகாமையாளர் செயற்பாடுகள்



திருமதி ஜீ.எம். ஆர் .பீ. விஜயரத்ன

பிரதி தலைமை அதிகாரி - திறைசேரியின் முதன்மை வர்த்தக அலகு



திரு. ஏ.கே. ஆர்தர்

பதில் உதவிப் பொது முகாமையாளர் - திறைசேரியின் பின் அலுவலகம்



திரு. எல். வித்தான

பதில் உதவிப் பொது முகாமையாளர் - புலனாய்வு மற்றும் விசாரணைகள்

வலய முகாமைத்துவம்



திரு. ஆர். எம். எஸ். பீ. ரத்நாயக்க

வலய உதவிப் பொது முகாமையாளர் - மத்திய வலயம்



திரு. ஆர். ரணதுங்க

வலய உதவிப் பொது முகாமையாளர் - மேற்கு வலயம் I



திரு. டபிள்யு. எம். எஸ். வீரகோன்

வலய உதவிப் பொது முகாமையாளர் - வட மத்திய வலயம்



திரு. ரீ. டி. டி. இஸட். குணவர்தன

வலய உதவிப் பொது முகாமையாளர் - மேற்கு வலயம் II



திரு. என். ஜீ. திஸாநாயக்க

வலய உதவிப் பொது முகாமையாளர் - வயம்ப வலயம்

வணிக மீளாய்வு

எமது செயற்பாடுகளுக்கு முற்போக்கான, முனைப்பான ஒரு நிலைப்பாட்டை ஊடுருவச் செய்துள்ள அரசுக்கு சொந்தமான ஒரு வங்கியாக நாங்கள் இருந்து வருகின்றோம். தேசிய வளர்ச்சிக்கான மேடையாக சமூகத்தின் அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கும் ஒரு பொதுவான தத்துவத்தை நாங்கள் தொடர்ந்து பராமரித்து வந்துள்ளோம்.

எமது நாடு விமர்சகர்களையும், அதே போல் ஆர்வம் கொண்டவர்களையும் ஒரே விதத்தில் வியப்பில் ஆழ்த்தியிருக்கும் ஒரு நாடாகும். உலகம் பொருளாதார மந்தமொன்றின் சுழலுக்குள் சென்று கொண்டிருந்த நிலையிலும் கூட, இலங்கை தொடர்ந்தும் ஏறுமுகமான ஒரு போக்கினை காட்டி வந்திருப்பதுடன், உலகளாவிய போட்டி ரீதியான குறிகாட்டிகளில் விருத்தி நிலமைகளையும் சாதித்துக் கொண்டுள்ளது. மேலும், அது நடுத்தர வருமான நாடு என்ற அந்தஸ்தையும் பெற்றுக் கொண்டுள்ளது. 2015 ஆம் ஆண்டளவில் தென்னாசியாவின் பொருளாதார மைய அச்சாக உருவாக வேண்டும் என்ற அதன் நோக்கினை சாதித்துக் கொள்ளக்கூடிய ஒரு சிறந்த நிலையில் அது இப்பொழுது இருந்து வருகின்றது.மிகவும் வலுவான, பாதுகாப்பான ஒரு நாட்டை பராமரித்து வருவதற்குத் தேவையான அடிப்படை அம்சங்கள் அனைத்தையும் உறுதிப்படுத்தும் விடயத்தில் நாங்கள் இப்பொழுது கவனம் செலுத்தி வருகின்றோம். மக்களுக்கான வங்கி என்ற நிலையில் எமது வங்கி இந்த முன்னேற்றத்தில் தவிர்க்க முடியாத ஒரு கூறாக இருந்து வந்துள்ளது.எமது செயற்பாடுகளுக்கு முற்போக்கான, முனைப்பான ஒரு நிலைப்பாட்டை ஊடுருவச் செய்துள்ள அரசுக்குச் சொந்தமான ஒரு வங்கியாக நாங்கள் இருந்து வருகின்றோம். தேசிய வளர்ச்சிக்கான மேடையாக சமூகத்தின் அனைத்துத் தரப்பினையும் உள்ளடக்கும் ஒரு பொதுவான தத்துவத்தை நாங்கள் தொடர்ந்து பராமரித்து வந்துள்ளோம. எனவே, மக்கள் வங்கி என்ற பெயர் எடுத்துக்காட்டும் பொருளை நிலை நிறுத்துவதற்காகவே நாங்கள் செயல்பட்டு வருகின்றோம். நாங்கள் நம்புவதும், நாங்கள் சாதித்துக் கொள்வதற்கு எதிர்பார்ப்பதும் அதுவேயாகும்.

மக்கள் வங்கி என்ற முறையில் எம்மிடம் ஒரு பாரிய பொறுப்பு சுமத்தப்பட்டுள்ளது என்பதனை நாங்கள் அறிவோம் அந்தப் பொறுப்பு மற்றும் கடப்பாடு என்பவற்றின் முன்னுரிமையாக தேசமே இருந்து வருகின்றது. தேசத்துக்கான இந்தப் பொறுப்பினையே தொடர்ந்தும் நாங்கள் செய்யும் அனைத்துக் காரியங்களிலும் எமது ஸ்தாபக கோட்பாடாக பயன்படுத்தி வருகின்றோம். அடுத்து வரும் பக்கங்களில் தரப்பட்டிருக்கும் வணிக மீளாய்வு எமது ஒவ்வொரு முன்முயற்சிகள், அபிவிருத்திகள் மற்றும் அனைத்துமடங்கிய அணுகுமுறைகள் என்பவற்றை எடுத்து விளக்குகின்றது. இவை அனைத்தும் எமது உண்மையான ஆளுமையை 'அதாவது இலங்கை வாழ் மக்கள் நம்பிக்கை வைத்திருக்கும் ஒரு பெயரை' பிரதிபலிக்கக்கூடிய விதத்தில் வடிவமைக்கப்பட்டு, அபிவிருத்தி செய்யப்பட்டு, விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.இலங்கை வாழ் மக்கள் எமது வங்கியின் மீது நம்பிக்கை வைத்திருப்பதுடன், தொடர்ந்து எமக்கு விசுவாசமாக இருந்து வருவார்கள்.

ஆள்சார்ந்த வங்கித் தொழில்

வயது, அமைவிடம், அறிவு மட்டங்கள் அல்லது சமூக பொருளாதார நிலைமைகள் என்பன என்னவாக இருந்தாலும் எமது குடித்தொகையின் அனைத்துப் பிரிவினரையும் உண்மையில் உள்ளடக்கும் எமது பரவலான, பன்முகப்பட்ட திட்டங்களின் தொகுப்பு அதி உன்னத சேவையுடன் இணைந்த விதத்தில் போட்டி அனுகூலத்தை பெற்றுக் கொண்டுள்ளது. வங்கி சுமார் ஐந்து தசாப்தங்களுக்கு மேற்பட்ட அதன் இருப்பின் போது இந்தப் போட்டித்திறனை தொடர்ந்தும் அபிவிருத்தி செய்து வந்துள்ளது. மக்களுடைய, மக்களுக்கான வங்கியாக இருந்து வரவேண்டுமென்ற விழுமியத்துக்கு விசுவாசமாக இருந்து வரும் பொருட்டு எமது தனிப்பட்ட வங்கித் தொழில் திட்டங்களின் தொகுப்பு ஒரு நபரின் 'தொட்டில் தொடக்கம் சுடுகாடு வரையிலான' காலப் பிரிவு முழுவதிலும் அவருக்குச் சேவைகளை வழங்கக் கூடிய பன்முகப்பட்ட திட்டங்களை உள்ளடக்கியதாக இருந்து வருகின்றது. கிராமப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் அல்லது நகரப் பிரதேசங்களை சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, பல்வேறு சமூக மட்டங்களை சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி எமது திட்டங்கள் அவர்கள் அனைவருக்கும் அவர்களுடைய தேவைகளுக்கும். அபிலாசைகளுக்கும் பொருந்தக்கூடிய விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

எமது திட்டங்களின் தொகுப்பு கடன் அட்டைகள் தொடக்கம் தனிநபர் கடன்கள் லரையில், சேமிப்பு வைப்புகள் தொடக்கம் நிலையான தவணை வைப்புக்கள் வரையிலும், இளம் சேமிப்பாளர்களின் கணக்குகள் தொடக்கம் ஓய்வூதிய திட்டங்கள் வரையிலும் பரந்த வீச்சில் இருந்து வருகின்றன. கடந்த பல தசாப்தங்களின் போது வங்கியின் ஒரு சின்னமாக உருவாகியிருக்கும் அதி உன்னத வாடிக்கையாளர் சேவைத் தரங்களின் ஆதரவுடன் இந்தத் திட்டங்கள் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. எமது வாடிக்கையாளர்களுடன் நீண்ட கால ரீதியான

எமது திட்டங்கள்

இசுறு உதான

இசுறு உதான சேமிப்புக் கணக்கு புதிதாக பிறக்கும் குழந்தைகளை கருத்தில் கொண்டு வடிவமைக்கப் பட்டிருப்பதுடன், ரூ. 100/- பெயரளவு வைப்புத் தொகையுடன் அத்தகைய கணக்கொன்றை ஆரம்பிக்க முடியும். இது சாதாரண கணக்குகளிலும் பார்க்க அதிகரித்தளவிலான வட்டி வீதங்களை கொண்டிருப்பதுடன், பரவசமூட்டும் வெகுமதிகளையும் கொண்டுள்ளது. இசுறு உதான வெகுமதி சான்றிதழ்கள் தனித்துவமானவையாக இருந்து வருவதுடன், அவற்றைக் கொண்டு ஒரு புதிய கணக்கை ஆரம்பிக்க முடியும் அல்லது தற்போதைய கணக்குக்கு அவற்றை வரவு வைக்க முடியும். கணக்கு வைத்திருப்பவர் 5 வயதை அடையும் பொழுது இக்கணக்கு தன்னியக்கமாகவே ஒரு சிசு உதான கணக்காக மாற்றமடையும்.

சிசு உதான

6 வயது தொடக்கம் 18 வயது வரையிலான கணக்கு வைத்திருப்பவர்கள் ரூ. 100/- பெயரளவிலான வைப்புத் தொகையுடன் இக்கணக்கொன்றை ஆரம்பிக்க முடியும். ஆண்டு 5 புலமைப்பரிசில் மற்றும் சாதாரண தர பரீட்சைகள் என்பவற்றில் சாதனைகளை நிகழ்த்தும் இளம் பிள்ளைகளுக்கு வழங்கப்படும் பரவசமூட்டும் வெகுமதிகள், விசேட ரொக்கப் பரிசுகள் மற்றும் ஏனைய பரிசுகள் என்பன இதன் மேலதிக கவர்ச்சிகளாக இருந்து வருகின்றன. சிசு உதான கணக்கு வைத்துள்ளவர் 18 வயதை அடையும் பொழுது அக்கணக்கு தன்னியக்கமாகவே ஒரு YES கணக்காக மாற்றப்படும்.

Yes

யதார்த்த உலகில் காலடி எடுத்து வைக்கும் இளைஞர் யுவதிகளுக்கென வடிவமைக்கப்பட்டுள்ள ஒரு கணக்குத் திட்டம் YES திட்டமாகும். ரூ. 2000/- வைப்புடன் இக்கணக்கை ஆரம்பிக்க முடியும். இக்கணக்கு வைத்துள்ளவர்களுக்கு இலவசமான நிலையக் கட்டளைகள், கடன் அட்டை வசதிகள், லீசிங் வசதிகள் போன்றனவும், அதே போல வீடமைப்பு, வாகனக் கொள்வனவு மற்றும் உயர் கல்வி என்பவற்றுக்கான கடன் வசதிகளும் வழங்கப்படுகின்றன. இக் கணக்கு நிலுவை ரூ 25.000/- ஐ தாண்டும் பொழுது 1% போனஸ் வட்டி இதற்கு வழங்கப்படுகின்றது.

ஸ்வர்ண பிரதீப

உடனடி காசுத் தேவைகளை நிறைவேற்றி வைக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டுள்ள தங்க நகை அடகுக் கடன் திட்டம் இதுவாகும். இது போட்டி ரீதியான வட்டி வீதங்களை கொண்டுள்ளது.

அஸ்வெண்ண

பருவ கால வருமானங்களை பெற்று வரும் விவசாயிகளை விசேடமாக கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்டிருக்கும் அறுவடை என்ற கணக்கை ரூ. 1000/- ஆரம்ப வைப்புத் தொகையுடன் அரம்பிக்க முடியும். கணக்கு நிலுவை ரூ. 10,000/- ஐ தாண்டும் பொழுது இதற்கு 1% போனஸ் வட்டி வழங்கப்படும். இக்கணக்குகளை வைத்திருப்பவர்களுக்கு சலுகை ரீதியான வட்டி வீதங்களும், விவசாயக் கடன்களும் வழங்கப்படுகின்றன.

மக்கள் வங்கி வெகுமதிச் சீட்டு

ரூ. 500/- மற்றும் ரூ. 1000/- என்பவற்றின் பெறுமதிகளில் கிடைக்கும் மக்கள் வங்கி வெகுமதிச் சீட்டுக்களை எந்த ஒரு கிளையிலும் இருக்கும் எந்தவொரு கணக்கிலும் வரவு வைக்க முடியும். இது வழங்கப்படும் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வனிதா வாசனா

நாட்டில் பெண்கள் வகித்து வரும் பன்முகப் பாத்திரங்களை கொண்டாடும் விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ள வனிதா வாசனா கணக்கு சாதாரண கணக்குகளிலும் பார்க்க அதிகரித்த அளவிலான வட்டி வீதங்கனை வழங்குவதுடன், ரூ. 500/- ஆரம்ப வைப்புத் தெகையுடன் இக்கணக்கொன்றை ஆரம்பிக்க முடியும். சிறு தொழில் முயற்சிகள், ஆதனக் கொள்வனவு அல்லது வீடமைப்பு மற்றும் உயர் கல்வி என்பவற்றுக்கென வழங்கப்படும் கடன் வசதிகள் இக்கணக்கின் மேலதிக அனுகூலங்களாக இருந்து வருகின்றன.

பரிணத

பரிணத ரூ. 500/- வைப்புத் தொகையுடன் ஆரம்பிக்கப்படக் கூடிய பரிணத கணக்கு கவர்ச்சிகரமான வட்டி வீதத்தினை கொண்டுள்ளது. அது மூத்த பிரஜைகளின் தேவைகளை நிறைவேற்றும் வகையில் உருவாக்கப்பட்டிருப்பதுடன், தெரிவு செய்யப்பட்ட 25 வாடிக்கையாளர்களுக்கு இந்திய யாத்திரை என்பவற்றையும் உள்ளிட்ட கவர்ச்சிகரமான பல அனுகூலங்களை கொண்டுள்ளது.

ஜனஜய

நிலையான மாதாந்த வருமானத்தை கொண்டிருப்பவர்கள் குறைந்தது ரூ. 2000/- தொகையுடன் இக்கணக்கொன்றை ஆரம்பிக்க முடியும். இக்கணக்கு விசேட கடன் மற்றும் லீசிங் வசதிகள், வெளிநாட்டுப் பயணங்களுக்கான சலுகை ரீதியான கட்டணங்கள் மற்றும் கவர்ச்சிகரமான வட்டி விகிதங்கள் என்பவற்றை வழங்குகின்றது.

ஜய நிவஸ

ஜய நிவஸ வீடமைப்பு கடன் கனவு இல்லத்தை இலகுவான விதத்தில் நிர்மாணித்துக் கொள்வதற்கு உங்களுக்கு உதவுகின்றது. அது உங்கள் தனிப்பட்ட தேவைகளுக்கு பொருந்தக்கூடிய விதத்தில் போட்டி வட்டி விகிதங்களில் நெகிழ்ச்சித்தன்மையுடன் கூடிய கடன் வசதிகளை வழங்குகின்றது. காணியொன்றை கொள்வனவு செய்வதற்கும், வீடு கட்டுவதற்கும் அல்லது வீட்டை புதுப்பிப்பதற்கும் கடன்களை பெற்றுக் கொள்ள முடியும். இக்கடன் திட்டம் 6 மாத சலுகை காலத்தையும் கொண்டுள்ளது. ஆதனத்தின் பெறுமதியில் 75% வரையில் கடன்கள் வழங்கப்படுகின்றன.

எதெர இசுர

எதெர இசுர (NRFC) கணக்கு உங்களுடைய வெளிநாட்டு சம்பாத்தியங்களுக்கு உயர் வட்டி வீதங்களை வழங்குகின்றது. அத்துடன் மக்கள் வங்கியின் நாடெங்கிலும் பரந்து வியாபித்துள்ள 728 கிளைகள் மற்றும் சேவை நிலையங்களின் நாடளாவிய வலையமைபபின் ஊடாக வெளிநாட்டில் இருந்து பணத்தை பெற்றுக் கொள்ளக்கூடிய மிக வேகமான முறையாகவும் இது இருந்து வருகின்றது.

தூதரு எதெர இசுர

தமது பெற்றோர்/பாதுகாவலர்கள் வெளிநாடுகளில் வேலை செய்து வரும் பிள்ளைகளுக்கென விசேடமாக வடிவமைக்கப்பட்டுள்ள தூதரு எதெர இசுர சிறுவர் கணக்குகள் தற்போதை NRFC/ RFC கணக்குகளுக்கான வட்டி வீதத்திலும் பார்க்க 1% மேலதிக வட்டியைக் கொண்டுள்ளன. குறைந்தது 25 அமெரிக்க டொலர் அல்லது வெளிநாட்டு நாணயத்தில் அதற்கு இணையான ஒரு தொகையை வைப்புச் செய்து இச்சேமிப்புக் கணக்கொன்றை ஆரம்பிக்க முடியும். அதே வேளையில், 1000 அமெரிக்க டொலர் அல்லது அதற்கு இணையான வெளிநாட்டு நாணயம் ஒன்றை வைப்புச் செய்து ஒரு நிலையான வைப்புக் கணக்கை ஆரம்பிக்க முடியும்.

SMS வங்கித் தொழில்

நிலுவைகளை பரீட்சித்தல், கொடுக்கல் வாங்கல் விபரங்களை தெரிந்து கொள்ளல், காசோலை புத்தகங்களுக்கு கட்டளை இடுதல் மற்றும் நிதிகளை மாற்றுதல் என்பன எமது SMS வங்கித்தொழில் சேவையின் மூலம் கிடைக்கும் ஒரு சில பெறுமதி சேர் அனுகூலங்களாக இருந்து வருகின்றன.

People's Net

இது இணைய வங்கித்தொழில் வசதிகளை வழங்குவதுடன், பல்வேறு கணக்குகளை எளிதில் முகாமைத்துவம் செய்வதற்கான வாய்ப்பினையும், பல்வேறு விதமான வங்கித்தொழில் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கான வாய்ப்பினையும் வழங்குகின்றது. பீபல்ஸ் நெட் வசதியுடன் எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் வங்கித்தொழில் என்ற வசதி உண்மையில் சாத்தியமாகின்றது.

நடமாடும் வங்கித்தொழில்

பன்முக ஆற்றல்களைக் கொண்ட கையடக்கத் தொலைபேசி 24 x 7 வங்கித்தொழில் சூழலுக்கு அதி அற்புதமான பல வசதிகளை மேலும் சேர்க்கின்றது. 13 மில்லியனுக்கு மேற்பட்ட வாடிக்கையாளர்கள் இப்பொழுது தமது சேவைக் கட்டணங்களை செலுத்துவதற்கும், அதே போல மூன்றாம் தரப்பினர்களுக்கான கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கும் கையடக்கத் தொலைபேசி வங்கித்தொழில் வசதியை பயன்படுத்தி வருகின்றார்கள்.



பீபள்ஸ் வீசா இன்டர்நசனல் பற்று அட்டை

பாதுகாப்பான நிதிச் சேவைகள் என்ற மேலதிக நம்பிக்கையுடன் பன்முகப்பட்ட வசதிகளை வழங்கும் இந்த பற்று அட்டையை 30 மில்லியனுக்கு மேற்பட்ட வர்த்தக அலகுகளிலும், உலகளாவிய ரீதியில் செயல்பட்டு வரும் 1.5 மில்லியன் ATM வலையமைப்புகளிலும் பயன்படுத்த முடியும்.

உறவுகளை அபிவிருத்தி செய்வதிலும், அவர்களுடைய பல்வேறு தேவைகளை முனைப்பான விதத்தில் நிறைவேற்றி வைப்பதிலும் நாங்கள் கவனம் செலுத்தி வருகின்றோம்.

கடந்த பல வருடங்களாக நாங்கள் தொழில்நுட்பத்தில் செய்து வந்திருக்கும் மதிநுட்பமான முதலீடு எமது வாடிக்கை-யாளர்களுக்கு இலகுவான, செயல்திறன் மிக்க, எளிதில் பெற்றுக் கொள்ளக்கூடிய, சகல இடங்களிலிருந்தும் பெற்றுக் கொள்ளக் கூடிய, எந்த ஒரு நேரத்திலும் எந்த ஒரு இடத்திலிருந்தும் தொல்லைகள் இல்லாத விதத்தில் வசதிகளை பெற்றுக் கொள்ளக் கூடிய அதி நவீன திட்டங்களை வழங்கியுள்ளது. இவை இணைய வங்கித்தொழில், உள்ளங்கை வங்கித்தொழில், VISA/DEBIT (பற்று) அட்டைகள், நடமாடும் வங்கித் தொழில் மற்றும் SMS வங்கித்தொழில் என்பவற்றையும் உள்ளடக்குகின்றன. கடந்த ஆண்டில் வங்கி வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்துடன் இணைந்து குடிபெயர்வோருக்கான ஒரு பற்று அட்டையை வெளியிட்டது. அது வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்களுக்கான ஒரு வரப்பிரசாதமாக இருந்து வருகின்றது.

அட்டை வர்த்தகம்

சுமார் இரண்டு தசாப்த காலமாக உள்நாட்டு கொடுப்பனவு அட்டை தொழில்துறையில் ஒரு முன்னோடி என்ற முறையில் அட்டைகளின் வெளியீடு மற்றும் கையகப்படுத்தல் என்பவற்றுக்கு வசதி செய்து கொடுப்பதில் நாங்கள் மிகுந்த முனைப்புடன் செயல்பட்டு வந்துள்ளோம். நுகர்வோர் வசதியாக தமது செலவுகளை செய்வதற்கு வகை செய்யும் பொருட்டு நாங்கள் தொடர்ந்தும் தொழிற்துறையில் நிலைத்து நிற்கக்கூடிய யுக்திகளை அமுல் செய்து வந்துள்ளோம். இவ்வாண்டில் உள்நாட்டு அட்டைத் தொழில் துறையில் மிகவும் வலுவான விதத்தில் எமது காலடிகளை பதித்துள்ளோம். எமது மொத்த அட்டைகளின் தொகை 750,000 ஆகும். அடுத்து வரும் வருடங்களின் போது இந்த எண்ணிக்கை மிகவும் தீவிரமான விதத்தில் அதிகரிக்கப்படவிருக்கின்றது. தற்பொழுது வங்கி அதன் பாரியளவிலான அட்டை அடித்தளத்தை, வாடிக்கையாளர்களுக்கு அதிக அளவிலான பெறுமதிகளை சேர்க்கும் பொருட்டு விசா பற்று அட்டையாக மாற்றியமைத்து வருகின்றது

> அதி உன்னத சேவையுடன் இணைந்த விதத்தில் குடித்தொகையினரின் அனைத்துப் பிரிவினரையும் உண்மையில் உள்ளடக்கிக் கொள்ளும் பரவலான பன்முகத் திட்டத் தொகுப்பு எமக்கு போட்டித் திறனை பெற்றுத் தந்திருப்பதுடன், வங்கி அதன் ஐந்து தசாப்த்ததுக்கும் மேற்பட்ட அதன் இருப்பின் போது இதனை தொடர்ந்து அபிவிருத்தி செய்து வந்துள்ளது.

தற்போதைய திட்டத் தொகுப்பின் கீழ் வங்கி பரந்த வீச்சிலான வாடிக்கையாளர்களையும், பல சிறப்பம்சங்களுடன் கூடிய அனுகூலம் மிக்க திட்டங்களையும் உள்ளடக்கிய விதத்தில் VISA CLASSIC அட்டை மற்றும் GOLD CREDIT அட்டைகள் என்பவற்றை கட்டுபடியான விலைகளில் வழங்கி வருகின்றது. இதனுடன் இணைந்த விதத்தில் எமது பல்வேறு விதமான அட்டைகள் அனைத்து வருமானப் பிரிவினர்களுக்கும் பொருந்தக் கூடியனவாக இருந்து வருகின்றன. நாட்டில் கடன் அட்டைகளை வழங்கும் நிறுவனங்களில் நாங்கள் மிகக் குறைந்த விதத்தில் மற்றும் கட்டணக் கட்டமைப்பை கொண்டிருக்கும் வங்கியாக இருந்து வருகின்றோம் என்ற விடயம் எமது சந்தை விஸ்தரிப்பின் ஒரு முக்கியமான பண்புக்கூறாக உள்ளது. ஒரு விண்ணப்பதாரரின் வேண்டுகோளின் பேரில் ஒரு அலுவல் நாளுக்குள் அட்டைகள் வெளியிடப்படுவது மற்றொரு அனுகூலமாகும். இதற்கென எத்தகைய மேலதிக கட்டணமும் அறவிடப்படுவதில்லை. Peoples Visa International பற்று அட்டைகள் மற்றும் முன்னரே உருவாக்கப்பட்ட பற்று அட்டைகள் என்பன மக்கள் வங்கியின் எந்த ஒரு கிளையின் கருமபீடத்திலிருந்தும் இலகுவாக பெற்றுக் கொள்ளமுடியும்.

இந்த அட்டைகள் உலகளாவிய ரீதியில் இயங்கி வரும் 24 மில்லியன் VISA உரிமை பெற்ற வணிகர்கள் மற்றும் காசு மீளப் பெறுகைக்கான உலகளாவிய 1.96 மிலியன் ATM வலையமைப்பு என்பவற்றின் மூலம் சேவைகளைப் பெறும் வாய்ப்பினை வழங்கி வந்துள்ளது. இலங்கையில் 2800க்கு மேற்பட்ட VISA ATM இயந்திரங்கள் இருந்து வருவதுடன், மக்கள் வங்கியின் கடன் மற்றும் பற்று அட்டைகளை ஏற்றுக் கொள்ளக்கூடிய 18000 VISA வணிக நிலையங்களும் உள்ளன.

VISA கடன் மற்றும் பற்று அட்டைகளுக்கென உரிமை பெற்றிருக்கும் வணிக வலையமைப்புக்குள் வங்கி மிதமான வளர்ச்சியை பதிவு செய்துள்ளது. அவாவினை கொண்டிருக்கும் இலங்கை வணிகர்களின் VISA கடன் மற்றும் பற்று அட்டை உரிமையை பரஸ்பர அனுகூல வீதத்தில் பெற்றுக் கொள்வதற்கு வசதி செய்து கொடுப்பதன் மூலம் இந்த வலையமைப்பை வளர்தெடுப்பதற்கென ஒரு முனைப்பான முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வங்கியின் பரவலான ATM வலையமைப்பு, இந்த VISA அமைப்புடன் இணைக்கப்பட்டிருப்பதுடன், வீசா அட்டைதாரர்கள் அனைவருக்கும் அனைத்து மடங்கிய சேவைகளையும் வழங்கி வருகின்றது.

அட்டை வணிகம் தொடர்பான நட்டவட்ட நிலை வெற்றிகரமான விதத்தில் முகாமைத்துவம் செய்யப்பட்டு வருகின்றது. இத்தொழிற்துறை பொதுவாக மோசடி காரணமான இழப்புக்களை எதிர்கொண்டு வரும் நிலையிலேயே இது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எமது விவேகபூர்வமான முன்முயற்சிகள் காரணமாக நட்டங்கள் குறைந்தபட்ச மட்டத்தில் வைக்கப்பட்டிருப்பதுடன், அதன் காரணமாக வங்கிக்கும் அட்டைதார்களுக்கும் எற்படக் கூடிய தாக்கம் மிகவும் குறைவாக உள்ளது.

கடல் கடந்த வாடிக்கையாளர் சேவைகள்

இத்துறை எமது பண அனுப்புதல்/ பணவரவுவைத்தல் வணிகம் மற்றும் அந்நியச் செலாவணி வைப்புக்கள் என்பன சுழன்று வரும் அச்சாக இருந்து வருகின்றது. அதன் காரணமாக எமது சேவை மட்டங்கள் குறித்து நாங்கள் தொடர்ச்சியாக கவனம் செலத்தி வருகின்றோம். அது வணிகத் தொகுப்பின் இலாப நிலை மற்றும் வளர்ச்சி என்பவற்றின் மீது குறிப்பிடத்தக்க ஒரு தாக்கத்தை எடுத்து வந்தள்ளன.

பண அனுப்புதல்கள்

வங்கி கடந்த சில வருடமாக இத்துறையில் அசாதாரணமான ஒரு வளர்ச்சியை தொடர்ச்சியாக எடுத்து வந்துள்ளது.இவ்வருடத்தில் பண வரவுகளின் அதிகரிப்பு 2011 இல் அளவிலும் பார்க்க 34.4% ஆக காணப்பட்டது. பல வருட காலமாக சேர்த்து வைக்கப்பட்ட பெறுமதி சேர்ப்புகள் காரணமாகவே இந்த அதிகரிப்பு எற்பட்டு வந்தது. தொழில்நுட்ப மேம்பாடு, சந்தைப்படுத்தல் யுக்திகள் மற்றும் நிலையான திட்ட மேம்பாடு என்பவற்றை இவை உள்ளடக்குகின்றன.

வெளிநாட்டு நாணய வைப்புகள்

எதெர இசுர NRFC அதிர்ஷ்டம் 2012 எமது வெளிநாட்டு நாணயக் கணக்குத் திட்டத்தில் கிடைத்த வெற்றியின் அடிப்படையில் இத்துறை தொடர்பான மேம்பாட்டுத் திட்டமும், காப்புறுதித் திட்டமும் முன்னெடுக்கப்பட்டன. இது வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களுக்கு மத்தியில் எமது வங்கியின் NRFC திட்டம் குறித்த விழிப்புணர்வை அதிகரித்ததுடன் இணைந்த விதத்தில் எமது வெளிநாட்டு நாணய சேமிப்பு வைப்புக்களில் ஓர் அதிகரிப்பை எடுத்து வந்தது.

உலகளாவிய பங்காளர்கள் மற்றும் பிரதிநிதிகள்

வெளிநாடுகளில் உள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் - குறிப்பாக, மத்திய கிழக்கு பிராந்தியத்தில் - அதிக திறன்களையும் அனுபவங்களையும் கொண்டிருக்கும் எமது ஊழியர்களை நாங்கள் தொடர்ந்தும் பணியில் அமர்த்தி வந்திருக்கின்றோம். சர்வதேச வங்கிகள் மற்றும் அந்நியச் செலாவனி கம்பனிகள் என்பவற்றுடன் புதிய முகவர் ஏற்பாடுகளை ஸ்தாபித்துக் கொள்வதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அது வங்கியின் கடல் கடந்த வலையமைப்பை மேலும் விரிவாக்கிக் கொள்வதற்கும், பரவலாக்கிக் கொள்வதற்கும் உதவும் அதே வேளையில், எமது உலகளாவிய பங்காளர்களுடனான உறவுகளையும் வலுப்படுத்தச் செய்யும்.

வெஸ்டர்ன் யூனியன்

முன்னோடி தொழில்நுட்பங்கள் மற்றும் சந்தைப்படுத்தல் யுக்திகள் என்பவற்றை பயன்படுத்திக் கொள்வதன் மூலம் வாடிக்கையாளர்களுக்கு அதி உன்னத சேவையை வழங்குதல் என்ற எமது அடிப்படைத் தத்தவத்தை நாங்கள் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்கின்றோம். விரிவான வெஸ்டர்ன் யூனியன் கொடுப்பனவுகள் மற்றும் கொடுப்பனவு அமைவிட வலையமைப்பு என்பவற்றுடன் நாங்கள் போஷித்து வளர்த்து வந்திருக்கும் உறவு இதனை மிகவம் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. நாடெங்கிலும் பரவியிருக்கும் எமது கிளை வலையமைப்புக்கு இது மேலும் வலுவூட்டி இருப்பதுடன், வாடிக்கையாளர்கள் இலகுவாகவும், செயல்திறன் மிக்க விதத்திலும் இதிலிருந்து சேவைகளை பெற்றுக் கொள்ள முடிகின்றது. எமது கிளைகள் கிராமிய பிரதேசங்களிலும் அதே போல நகரப் பிரதேசங்களிலும் பரவலாக காணப்படுகின்றன. அதன் காரணமாக கடந்த வருடத்துடன் ஒப்பிடும் பொழுது வெஸ்டர்ன் யூனியன் கொடுப்பனவுகளில் பாரிய அளவிலான அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது.

உள்நாட்டுக் கடன்

நிலைபேறான வளர்ச்சியை சாதித்துக் கொள்ளும் பொருட்டு மேலதிக முயற்சிகள்

நிலைபேறான வளர்ச்சியை சாதித்துக் கொள்ளும் பொருட்டு மேற்கொள்ளப்படும் மேலதிக முயற்சிகள் வங்கியின் இலாபத்துக்கு பங்களிப்புச் செய்வதுடன், ஐந்தொகையை வலுவூட்டிக் கொள்வதிலும் கவனம் செலுத்துகின்றது. அதே வேளையில், எமது உபாய ரீதியான நோக்கினை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு நாங்கள் முன்னோக்கி பயணித்துக் கொண்டுள்ளோம். பெருமளவுக்கு பன்முகப்படுத்தப்பட்டுள்ள எமது கடன் தொகுப்பு தர ரீதியிலான ஒரு முன்னேற்றத்தைக் காட்டி வரும் ஒரு கடன் தொகுப்பாக இருந்து வருகின்றது. அது விவசாயம், தயாரிப்புத் துறை, சேவைகள் மற்றும் ஏனைய பாரம்பரியமற்ற துறைகள் என்பவற்றை உள்ளடக்கும் விதத்தில் பல்வேறு துறைகளுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது. இது குறைந்த மட்டத்திலான ஒரு செயற்படாத கடன் தொகுப்பை பராமரித்து வருவதற்கான ஆற்றலை எமக்கு வழங்கியிருப்பதுடன், செயற்படாத கடன் வீதம் தொழிற்துறையின் மட்டங்களிலும் பார்க்க மிகக் குறைவாக காணப்படுகிறது. மேலும், வங்கியின் கடன் நட்டவச்சங்களை குறைத்துக் கொள்ளக்கூடிய வாய்ப்பினையும் எமக்கு பெற்றுத் தந்துள்ளது.

இவ்வருடத்தின் போது நாங்கள் புதிய கடன் திட்டங்களை அமுல் செய்ததுடன், மாற்றமடைந்து வரும் வாடிக்கையாளர்களின் தேவைகள் மற்றும் வணிகச் சூழல் என்பவற்றுக்குப் பொருந்தக் கூடிய விதத்தில் ஏற்கனவே இருக்கும் கடன் திட்டங்களில் திருத்தங்களை மேற்கொண்டுள்ளோம். இலாபத்தை மட்டுமன்றி சமூக அபிவிருத்தியையும் இலக்காகக் கொண்டு இந்தக் கடன் திட்டங்களை அமுல் செய்து வந்துள்ளோம். ஓர் அரச வங்கி என்ற முறையில் இந்தக் கடப்பாட்டினை மிகவும் தீவிரமாக நாங்கள் கவனத்தில் எடுத்து வருகின்றோம்.

சமூக மேம்பாட்டுக்கென அரசாங்கத்தின் அபிலாசைகளை நிறைவேற்றி வைக்கும் பணி எம்மைச் சார்ந்திருப்பதுடன், அரசாங்க ஊழியர்களுக்கு சலுகை நிபந்தனைகளுடன் வீடமைப்பு கடன் திட்டமொன்றை நாங்கள் தேசிய வீடமைப்பு அதிகார சபையுடன் கூட்டாக இணைந்து அமுல் செய்துள்ளோம். அதேபோல ஊடகவியலாளர்களுக்கான வாகனக் கடன் திட்டமொன்றையும், கலாசாரம், கலைகள் என்பவற்றில் ஈடுபட்டிருப்பவர்களுக்கான கடன் திட்டமொன்றையும் நாங்கள் அமுல் செய்து வந்துள்ளோம். இக்கடன் திட்டங்கள் மிகுந்த முனைப்புடன் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன.

ஏற்றுமதியாளர்களுக்கு உதவுவதற்கு வியாபார நிதிப்படுத்தல் வசதிகளை வழங்கும் தேவையும் அதேபோல மூலப்பொருட்கள் மற்றும் இயந்திரங்கள் என்பவற்றை இறக்குமதி செய்பவர்களுக்கு நிதிப்படுத்தல் வசதிகளை வழங்க வேண்டிய தேவையும் எமது கட்டண அடிப்படையிலான வருமானத்தை அதிகரிக்கும் வலுவான ஒரு கூறாக காணப்படுகின்றது. நாங்கள் எமது கிளை வலையமைப்பைச் சேர்ந்த ஊழியர்களுக்கு தொடர்ச்சியான பயிற்சிகளை வழங்கி வந்துள்ளோம். அந்த ஊழியர்கள் இந்த அறிவையும், வழிகாட்டுதல்களையும் பயன்படுத்தி சேவை மட்டங்களை விருத்தி செய்து கொண்டுள்ளார்கள். வாடிக்கையாளர்களின் தேவைகளுக்குப் பொருத்தமான வியாபார நிதிப்படுத்தல் வசதிகளை கட்டமைப்பதனையும் இது உள்ளடக்குகின்றது. உத்தரவாத கடிதங்கள் என்பவற்றையம் உள்ளடக்கிய ஏனைய மறைமுக வசதிகள் எமது கட்டண அடிப்படையிலான வருமானத்தை உயர்த்திக் கொள்வதற்கு உதவியுள்ளன. குறிப்பாக, நிர்மாணத்துறை வளர்ச்சி போன்ற கைத்தொழில் துறைகளில் அவதானிக்கப்பட்ட அபிவிருத்தியின் பின்னணியில் இது இடம்பெற்று வந்துள்ளது.

எவ்வாறிருப்பினும், கடந்த சில வருடங்களின் போது நாங்கள் சவால்களையும் எதிர்கொண்டு வந்துள்ளோம். நிதிச் சந்தைகளில் வட்டி விகிதங்கள் அதிகரித்தமை மற்றும் மிகவும் செறிவான மட்டத்தில் இடம் பெற்று வரும் உயர் அளவிலான போட்டி என்பனவும் இச்சவால்களில் அடங்குகின்றன. இதன் விளைவாக, விலை உணர் திறன் கொண்ட வாடிக்கையாளர்கள் கடினமான முடிவுகளை மேற்கொள்ள வேண்டிய நிலையில் இருந்து வருகின்றார்கள். எமது பங்கீடுபாட்டாளர்களுடனான எமது உறவுகள் தொடர்ச்சியாக போசித்து, வளர்க்கப்பட்டு வர வேண்டும் என்ற விடயத்தை நாங்கள் வலியுறுத்தி வருவதுடன், வங்கி இது தொடர்பாக தோன்றியிருக்கும் மோசமான நிலைமைகளை தணித்துக் கொள்ள வேண்டியுமுள்ளது.

கடன் உருவாக்கம் மற்றும் பராமரிப்புச் செயன்முறையை தரமுயர்த்தும் ஒரு செயன்முறையையும் நாங்கள் மேற்கொண்டு வருகின்றோம். முகாமைத்துவ தகவல் முறைக்கூடாக உரிய நேரத்தில் தகவல்களை பெற்றுக் கொள்வது எமக்கு உயர் அளவிலான தெளிவையும், துல்லியமாக விரைவான முடிவுகளை மேற்கொள்ளும் நிலையையும் பெற்றுத் தரும்.

உள் நோக்கிய பண வரவுகள் 2011 உடன் ஒப்பிடப்படும் பொழுது 34.4% குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்திருந்தன.

ஒட்டு மொத்த வங்கிக்குள்ளும் அறிவை தேடிப் பெற்றுக் கொள்ளும் கலாசாரத்தை போஷித்து வளர்ப்பதற்கான எமது முயற்சியின் ஒரு பாகமாக சிரேஷ்ட கடன் அதிகாரிகளும், சம்பந்தப்பட்ட ஊழியர் அணியினரும் மத்திய வங்கியைச் சேர்ந்த வெளி நிபுணர்களினால் நடாத்தப்படும் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சிதிட்டங்களில் தொடர்ச்சியாக பங்கேற்று வருகின்றனர். சிறந்த விதத்தில் பன்முகப்படுத்தப்பட்ட தொகுப்பொன்றுக்கூடாக குறைந்தபட்ச நட்டவச்சங்களுடன் கூடிய விதத்தில் வங்கியின் சொத்துக்களை பலப்படுத்திக் கொள்ளும் அதே வேளையில் தரமான கடன்களை வழங்குவதன் மூலம் எமது கடன் தொகுப்பை அதிகரித்துக் கொள்ளும் உபாய ரீதியான நோக்கினை சாதித்துக் கொள்வதற்கு இது உதவியது.

தொகுதி வங்கித்தொழில்

நாட்டின் அனைத்து வாடிக்கையாளர் பிரிவினர்களையும் உண்மையில் உள்ளடக்கிக் கொள்ளும் ஒரு வங்கியாக இருந்து வர வேண்டும் என்ற எமது எண்ணக்கருவுடன் இணைந்த விதத்தில், அரசுக்குச் சொந்தமான ஒரு வர்த்தக வங்கி என்ற முறையில் நாங்கள் எப்பொழுதும் பரந்த வீச்சிலான பெருந்தொகையான திட்டங்களையும், சேவைகளையும் பிரத்தியேகமாக கம்பனித் துறைக்கும், அதே போல வர்த்தக ரீதியில் இலாபகரமாக செயல்படும் அரசாங்க நிறுவனங்களுக்கும் வழங்கி வந்துள்ளோம். அதி உயர் மட்ட கம்பனிகள் தொடக்கம் பல்தேசிய கம்பனிகள் வரையிலும், சிறிய மற்றும் நடுத்தர தனியார் துறை கம்பனிகள் வரையிலும் சேவைகளை வழங்கும் தொகுதி வங்கித்தொழில் பிரிவு வங்கியின் இலாபத்துக்கு கணிசமான அளவிலான பங்களிப்பை வழங்கி வருகின்றது. அதே வேளையில், அது அதன் நிதிப்படுத்தல் பகிர்ந்தளிப்பில் ஒரு சமத்துவத்தையும் பராமரித்து வருகின்றது. எனினும், அரசாங்கத்தின் துரிதப்படுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டம் முன்னெடுத்துச் செல்லப்படும் இன்றைய பின்னணியில், வங்கி, பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் பாரிய தனியார் துறை வாடிக்கையாளர்களுடன் இணைந்து செயல்படுவதில் கவனம் செலுத்தி வருகின்றது. இந்நிறுவனங்கள் உள்கட்டமைப்புக் கருத்திட்டங்கள், ஏற்றுமதிகள், இறக்குமதி பிரதியீட்டுக் கைத்தொழில்கள் மற்றும் சுற்றுலாத் துறை என்பவற்றை உள்ளடக்கிய செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றன. இவை மகிந்த சிந்தனை பொருளாதார அபிவிருத்தித் திட்டத்துடன் பொருந்திச் செல்பவையாக இருந்து வருகின்றன.

இந்த வருடத்தில் தொகுதி வங்கித்தொழில் பிரிவு வங்கியின் இலாபத்துக்கு ரூ. 1.2 பில்லியனை பங்களிப்புச் செய்திருந்தது. இது வெளிநாட்டு நாணய வருமானத்தின் மூலம் கிடைத்த மொத்த நிதிப்படுத்தப்படாத வருமானத்தின் 80% ஐ உள்ளடக்கவில்லை. மொத்த கடனளிப்பு ரூ. 178 பில்லியனாக இருந்து வந்தது. இது தவிர, நிதிப்படுத்தப்படாத தொகுப்பு மொத்த வருமானமான சுமார் 124 பில்லியனில் சுமார் 80% ஐ உருவாக்குகின்றது.

தொகுதி வங்கித்தொழில் பொதிகள் கருத்திட்ட கடனளிப்பு, கூட்டுக் கடனளிப்புக்கள் மற்றும் பாதுகாப்புச் சேவைகள், வர்த்தக நிதியளிப்பு, சர்வதேச வங்கித்தொழில் செயற்பாடுகள் மற்றும் ஆலோசனை சேவைகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன. தொகுதி வங்கித்தொழில் அலகு இவ்வாண்டில் கணிசமான அளவிலான வளர்ச்சியை பதிவு செய்துள்ளது. பிரதானமாக அரசினால் நெறிப்படுத்தப்பட்ட உள்கட்டமைப்பு கருத்திட்டங்கள் காரணமாகவே இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. உள்கட்டமைப்பு, வீதி அபிவிருத்தி மற்றும் நீர் விநியோக கருத்திட்டங்கள் என்பவற்றில் சுமார் ரூ. 22 பில்லியன் முதலீடு செய்யப்பட்டுள்ளது. வங்கி தேசிய அபிவிருத்தி கருத்திட்டங்களையும் உள்ளடக்கிய விதத்தில் அரச துறை வணிகச் செயற்பாடுகளில் சுமார் 25% க்கு நிதிப்படுத்தலை வழங்கியுள்ளது.

முறையே பெல்ஜிய மற்றும் இந்திய நிதியுதவியுடன் அமுல் செய்யப்பட்ட கொலன்ன - பலாங்கொடை நீர் விநியோகத் திட்டத்திற்கும், பாரிய தம்புள்ளை நீர் விநியோகத் திட்டத்திற்கும் பிரத்தியேக வங்கியாளராக செயற்படக் கூடிய கௌரவம் எமக்குக் கிடைத்தது. அநுராதபுரம் திருகோணமலை, நாரம்மல - கிரியுல்ல, கட்டுவான - அலுபொத்தெனிய மற்றும் இப்பாகமுவ - கும்புகெட்டே பிரதான வீதிகளின் அபிவிருத்தியில் போது நாங்கள் பிரத்தியேக நிதிப்படுத்தல் பங்காளர் நிறுவனமாக இருந்து வந்துள்ளோம்.

தொகுதி வங்கித்தொழில் அலகு அரசாங்கத்தின் உர மானிய திட்டங்களுக்கு பங்களிப்பை வழங்கி வரும் ஒரே பங்களிப்பாளராக இருந்து வருகின்றது. அரசாங்கத்திற்குச் சொந்தமான இரு உர நிறுவனங்களுக்கு நிதியுதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. நாட்டின் பெற்றோலியத் தேவைகளுக்கான இரண்டாவது மிகப் பெரிய பங்களிப்பாளர் என்ற முறையில் 50% நிதிப்படுத்தலை வழங்கி வருவதுடன், அரசுக்குச் சொந்தமான கப்பல் சேவை மற்றும் புகையிரத சேவை என்பவற்றுக்கும் எமது வங்கி மட்டுமே நிதி வழங்குனராக இருந்து வருகின்றது. தேசிய வங்கி என்ற முறையில் எமது வங்கியின் பாத்திரம் இதன் மூலம் மேலும், வலுவூட்டப்படுகின்றது. எமது மொத்த கடன் தொகுப்பில் சுமார் 8% ஐ நாங்கள் நிதிப்படுத்தலுக்கும், நிதிசார் நடவடிக்கைகளுக்கும் வழங்கியிருக்கின்றோம். இலங்கை விமானப் படை, இலங்கை மின்சார சபை என்பவற்றின் பிரத்தியேக வங்கியாளராக நாம் இருந்து வருகின்றோம். வலுத் துறைக்கான பிரதான பங்களிப்பாளராகவும் எமது வங்கி இருந்து வருகின்றது. காற்றாலைகள், சிறிய அளவிலான நீர் மின்வலு கருத்திட்டங்கள் மற்றும் உயிர் வலு என்பவற்றை உள்ளடக்கிய வலுத் திட்டங்களுக்கு நிதிப்படுத்தல் வழங்கப்பட்டு வருகின்றது. நிலக்கரி இறக்குமதி தொடர்பாக வருடாந்தம் 10 பில்லியன் ரூபா பங்களிப்புச் செய்யப்பட்டு வருவதுடன், எதிர் வரும் காலங்களில் இந்த உதவிகள் வழங்கப்பட்டு வரும். சுகாதாரம் மற்றும் மருந்து கைத்தொழில்கள் துறைகளை பொறுத்தவரையில் நாங்கள் அவற்றுக்கான இரண்டாவது மிகப் பெரிய கடனளிப்பு நிறுவனமாக இருந்து வருகின்றோம். இதன் காரணமாக அத்தகைய துறைகளும் அதிக ஊக்குவிப்பை பெறுகின்றன.

கடல் கடந்த வங்கித்தொழில் அலகு (OBU)

விசேடமாக கருத்திட்ட கடனளிப்பு மற்றும் முதலீட்டுச் சபை கருத்திட்டங்களுக்கு தொழிற்பாட்டு மூலதனத்தை வழங்குதல் என்பவற்றின் மீது கவனம் செலுத்தும் விதத்தில் கடனளிப்புக்களை மேற்கொள்வதன் மூலம் இந்த அலகு கைத்தொழில் அபிவிருத்திக்கு முதன்மையாக பங்களிப்புச் செய்கின்றது. மீளமைப்புச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வரும் வாடிக்கையாளர்களை வெளிநாட்டு கூட்டுதொழில் முயற்சிகளில் ஈடுபடுவதற்கு ஊக்குவித்தல் மற்றும் செயற்படுத்தப்படும் கருத்திட்டங்கள் மற்றும் வணிகம் என்பவற்றுக்கு ஆலோசனைச் சேவைகளை வழங்குதல் என்பவற்றையும் எமது சேவைகள் உள்ளடக்குகின்றன.

கடல் கடந்த வங்கித்தொழில் அலகு இவ்வருடத்தில் வங்கியின் இலாபத்திற்கு 11.2 மில்லியன் அமெரிக்க டொலர்களை பங்களிப்புச் செய்துள்ளது.

நடுத்தர காலத்தில் பொருளாதாரத்தை முன்னகர்த்திச் செல்வதற்கென நாடு பிரதான கைத்தொழில் துறைகளில் கவனம் செலுத்தி வருவதுடன் இணைந்த விதத்தில், இப்பொழுது முக்கியமாக சுற்றுலாத் துறை, புதுப்பிக்கத்தக்க வலு மற்றும் உள்கட்டமைப்பு அபிவிருத்தி ஆகிய துறைகள் மீது பெருமளவுக்கு கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. எவ்வாறிருப்பினும், சமூகத்தின் அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கிக் கொள்வது என்ற தேசிய எண்ணக் கரு தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. நாங்கள் சிறிய மற்றும் நடுத்தர அளவு ஏற்றுமதியாளர்களை, அதே போல கிராமிய பொருளாதாரத்தை அபிவிருத்திச் செய்யக் கூடிய முன்முயற்சிகளையும் ஊக்குவித்து வருகின்றோம். இறுதியில் இந்த தொழில் முனைவோர்களை நாளைய தினம் கம்பெனித் துறை வாடிக்கையாளர்களாக அபிவிருத்தி செய்யும் நோக்குடன் எமது வங்கி கிளை வலையமைப்புக்களுக்கூடாக இந்தத் ஊக்குவிப்பினை வழங்கி வருகின்றது.

அபிவிருத்தி மற்றும் நுண்மட்ட நிதி வங்கித்தொழில்

இந்த வணிகத் துறையில் கணிசமான அளவிலான சாதனைகள் இவ்வாண்டின் போது நிகழ்த்தப்பட்டதுடன், இவ்வாண்டு பெருமளவுக்கு பயனுள்ள ஆண்டாக இருந்து வந்தது. கடுமையான போட்டிக்கு மத்தியிலும் அபிவிருத்தி நிதிப்படுத்தலுக்கென அமுல் செய்யப்பட்ட யுக்திகள், அரசாங்க அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு நிர்ணயகரமான பங்களிப்பாளராக இருந்து வருவதற்கான உந்து விசையை எமக்கு வழங்கின.

பிராந்திய அபிவிருத்தி

வடக்கின் எழுச்சி, கிழக்கின் எழுச்சி, மாகாண அபிவிருத்தி, சிறு தோட்ட தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் சுனாமிக்கு பிற்பட்ட கரையோர புனர் நிர்மாண, மூலவள முகாமைத்துவம் என்பவற்றுக்கான கடன் திட்டங்கள் அமுல் செய்யப்பட்டதுடன், அவை சம்பந்தப்பட்ட பூகோள பிரதேசங்களை இலக்காகக் கொண்டு முன்னெடுக்கப்பட்டன. தளர்த்தப்பட்ட பிணைகள் மீதான கடன்கள் மற்றும் சலுகை வட்டி வீதங்கள் என்பன வழங்கப்பட்டதுடன், அது வெற்றியின் முக்கியமான ஒரு கூறாக இருந்து வந்தது. பிராந்திய மூலவளங்களின் பயன்பாட்டை உச்ச மட்டத்தில் மேற்கொள்வதற்கெனவும், கிராமிய வேலையில்லாத் திண்டாட்டத்தை குறைத்துக் கொள்வதற்கெனவும், கிராமிய வறுமையை ஒழிப்பதற்கெனவும் வங்கி பங்களிப்புச் செய்துள்ளது. மிகக் கடுமையான பொருளாதார சவால்களை எதிர்நோக்கிய மாகாணங்களுக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம் இத்திட்டங்கள் அமுல் செய்யப்பட்டன.

வறுமை ஒழிப்பு

வறுமை ஒழிப்பு நுண்மட்ட நிதி கருத்திட்ட கடன் திட்டம் மற்றும் சம்பந்தப்பட்ட சுழல் நிதி கடன் திட்டம் என்பன 2012 ஆம் ஆண்டு அமுல் செய்யப்பட்டதுடன், பரஸ்பர பிணைகளின் அடிப்படையில் வருமான உருவாக்க நடவடிக்கைகளுக்கென கடன்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. இந்த வசதிகள் முதன்மையாக பெண்களை இலக்காகக் கொண்ட சமூக குழுக்களுக்கென வழங்கப்பட்டதுடன், அவை சமூக அணிதிரட்டுதல் மற்றும் நிதிசாராத சேவைகளை விரிவாக்குதல் போன்ற இலட்சியங்களை கொண்டிருந்தன. அதே வேளையில், தமது பொருளாதார வலுவூட்டலை மேலும் மேம்படுத்தக் கூடிய முதிர்ச்சியடைந்த அறிவுபூர்வமான குழுக்களை உருவாக்குவதிலும் கவனம் செலுத்தப்பட்டது.

பெண்களுக்கு வலுவூட்டுதல்

வனிதா நவோதய கடன் திட்டம் பெண்களுக்கு வலுவூட்டுதல் என்ற எண்ணக் கருவின் அடிப்படையில் முன்னெடுக்கப்படுவதுடன், பிரதானமாக இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கென வசதிகள் வழங்கப்பட்டன. பெண் தலைமை குடும்பங்களின் வறுமையை ஒழிக்கும் நோக்குடன் இத்திட்டம் அமுல் செய்யப்பட்டது. இக் கடன் திட்டத்திற்கூடாக பெரும் எண்ணிக்கையிலான இடம்பெயர்ந்த இளம் விதவைகளின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு வங்கி முக்கியமான ஒரு பங்களிப்பைச் செய்துள்ளது. தம்மை நிலைபேறான விதத்தில் அபிவிருத்தி செய்து கொள்வதற்கும், தமது இளம் குடும்பங்களை அபிவிருத்தி செய்து கொள்வதற்குமான ஆற்றலை அவர்களுக்கு இந்தக் கடன் திட்டம் வழங்கியுள்ளது.

கைத்தொழில் மேம்பாடு

புதிய பீப்பள்ஸ் பாஸ்ட் கடன் திட்டம் மற்றும் சௌபாக்கியா கடன் திட்டம் என்பவற்றுக்கூடாக புதிய கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கும், ஏற்கனவே இயங்கி வரும் கைத்தொழில்களுக்கு வலுவூட்டுவதற்கும் நிதி வசதிகள் வழங்கப்பட்டன. இது சிறிய மற்றும் நடுத்துர அளவு தொழில் முயற்சிகள் உருவாவதற்கு ஒரு தூண்டுதலை வழங்கியிருப்பதுடன், ஏற்கனவே செயற்பட்டு வரும் கருத்திட்டங்களில் விருத்தி நிலைமைகளை எடுத்து வந்து, அவற்றின் நிலைபேறான தன்மையை உறுதிப்படுத்தியுள்ளன. மேலும், இது கிராமிய பொருளாதார குறிக்கோள்களை சாதித்துக் கொள்வதற்கும் தூண்டுதல் அளித்துள்ளது. கைத்தொழில்களின் வளர்ச்சி, வேலைவாய்ப்புக்களின் உருவாக்கம், அதன் மூலம் வேலையில்லாத் திண்டாட்டத்தை குறைத்தல் மற்றும் பிராந்திய மட்டத்தில் சரியான வருமானப் பகிர்வு என்பவற்றின் மூலம் பேரண்ட பொருளாதார குறிக்கோள்களை சாதித்துக் கொள்வதற்கும் இது வகை செய்துள்ளது.

பெறுமதி சேர்ப்பு மற்றும் விவசாய கைத்தொழில்களுக்கான புத்தாக்கங்கள்

விஸ்கம் கடன் திட்டம் விவசாய கைத்தொழில் துறைகளில் புத்தாக்கங்களை எடுத்து வருவதற்கான நிதி வசதிகளை வழங்கியது. இப்புத்தாக்கங்களுக்கும் கால்நடை வள நிலையங்களை ஸ்தாபித்துக் கொள்வதற்கும் இது உதவியது. இந்தத் திட்டத்தின் திட்டவட்டமான நோக்கம் சிறிய மற்றும் நடுத்தர விவசாயிகளை அபிவிருத்தி செய்வதாகும். அவர்களுக்கு மத்தியில் தொழில் முனைவு உணர்வை உருவாக்குவதன் மூலம் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களின் பெறுமதி சேர்ப்பு அம்சத்தை விருத்தி செய்வதற்கென இக்கடன்கள் வழங்கப்பட்டன.

நுண்நிதி கிராம நிகழ்ச்சித்திட்டங்கள்

2012 ஆம் ஆண்டில் 245 கிராமங்கள் இந்த வசதியை பெற்றுக் கொண்டன. சமூகக் குழுக்களை அடிப்படையாகக் கொண்டு கிராமத்தில் நிலவி வரும் உள்ளார்ந்த திறன்கள் மற்றும் ஆற்றல்கள் என்பவற்றை அபிவிருத்தி செய்வதும், தொழில் முனைவு குழுக்களுக்கு தூண்டுதல் வழங்குவதும், சுய அபிவிருத்தி முன்முயற்சிகளை மேற்கொள்வதற்கு உதவுவதும் இதன் நோக்கமாகும்.

> பிராந்திய மூலவளங்களின் பயன்பாட்டை உச்ச மட்டத்தில் வைத்திருப்பதற்கும், கிராமிய வேலையில்லாத் திண்டாட்டத்தை குறைப்பதற்கும், கிராமிய வறுமையை ஒழிப்பதற்கும் மிகக் கடுமையான பொருளாதார சவால்களை எதிர் கொண்டிருக்கும் மாகாணங்களுக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம் இது அமுலாக்கம் செய்யப்பட்டது.

கப்ருக நிபெயும் திரிய கடன் திட்டம்

2012 மே மாதம் தொடக்கம் தெங்கு அபிவிருத்தி சபையுடன் கூட்டாக இணைந்து அமுல் செய்யப்பட்டு வரும் இந்தத் திட்டம், வெளிநாட்டு சந்தைக்குள் நுழைவதற்கு உதவும் பொருட்டு, தெங்குப் பொருட்களை கொண்ட கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதனை நோக்கமாக கொண்டுள்ளது. இந்தத் திட்டம் வட்டி கழிவு அம்சமொன்றையும் உள்ளடக்குகின்றது.

புனர் நிர்மாண கடன்கள்

சுயதொழில் கருத்திட்டங்களை ஊக்குவிப்பதனை நோக்கமாக கொண்ட இந்தக் கடன் வசதி புனர் நிர்மாண அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்ட புனர் நிர்மாண மற்றும் சமூக அணிதிரட்டல் பூர்த்தியடைந்த பின்னர் வெற்றிகரமாக பயிற்றப்பட்டிருந்தவர்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்தும் நோக்கில் செயற்படுத்தப்பட்டது. இந்தக் கடன் வசதிகள் உயரளவிலான சலுகை வட்டி வீதங்களை கொண்டிருப்பதுடன், புதுமைப் புனைவிலான வருமான உருவாக்கங்களை துவக்கி வைப்பதில் ஆர்வம் கொண்டிருக்கும் இளம் ஆண்களுக்கும், பெண்களுக்கும் ஒரு வரப்பிரசாதமாக இருந்து வந்தது. வடக்கு மற்றும் கிழக்கு கிளைகளின் கண்காணிப்பின் கீழ் வரும் பிரதேசங்களில் பெருமளவுக்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

நெல் கையிருப்புக்களை சேகரிப்பதற்கென விவசாயிகளுக்கான கடன் வசதிகள்

விவசாயிகளின் நெல் கையிருப்புக்கள் சந்தை விலைகளில் விற்பனை செய்யப்படுவதனை உறுதி செய்து கொள்ளும் பொருட்டு இந்த வசதி வழங்கப்பட்டது. இதன் மூலம் தனது உழைப்புக்கு நியாயமான நீதியான ஒரு ஆதாயத்தை பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்பு விவசாயிகளுக்கு கிடைத்தது. வருடம் முழுவதிலும் போதியளவிலான நெல் கையிருப்பில் இருப்பதனையும், பற்றாக்குறை ஏற்படாதிருப்பதனையும் இது உத்தரவாதப்படுத்துகின்றது.

அறிவாற்றல் மிக்க எமது வியாபாரிகளினால் சந்தை தளம்பல் நிலை மற்றும் முன்நோக்கிய வசதிகளில் ஏற்பட்ட மாற்றங்கள் என்பன துல்லியமாக வாசிக்கப்பட்டதன் காரணமாக அந்நியச் செலாவணி வருமானம் முன்னைய வருடத்திலும் பார்க்க 76% ஆல் அதிகரித்திருந்தது.

வறட்சியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குதல்

2012 ஆம் ஆண்டில் வறட்சியின் காரணமாக பயிர்செய்கைகள் சேதமடைந்திருந்த விவசாயிகளுக்கு வங்கி நிவாரணங்களை வழங்கியது. அடுத்த பருவத்தில் பயிர்கள் அறுவடை செய்யும் வரையில் கொடுப்பனவுகள் தாமதப்படுத்தப்பட்டன.

இயற்கை பசளை உற்பத்தியை மேம்படுத்துதல்

நெற்செய்கையில் இயற்கை உரத்தை பயன்படுத்துவதில் முனைப்பாக ஈடுபட்டு வரும் விவசாயிகளுக்கு நிதிசார் அனுசரணை வழங்கப்பட்டு வருகின்றது.அதன் மூலம் அவர்கள் இலங்கையின் விவசாய நடைமுறைகளுக்கு பெருமளவுக்கு உயிரினவியல் சூழல் நட்புமிக்க முன்முயற்சிகளை வழங்கி வருகின்றார்கள்.

திவிநெகும திட்டத்துக்கான பரந்த வாய்ப்பு

இவ்வாண்டின் போது திவிநெகும நிகழ்ச்சித்திட்டம் பரவலாகவும், விரிவாகவும் முன்னெடுத்துச் செல்லப்பட்டது.புதிய கைத்தொழில்களின் ஸ்தாபிதம், அதே போல கால்நடை வளர்ப்பு மற்றும், வீட்டுத் தோட்ட அபிவிருத்தியையும் உள்ளிட்ட மென் கைத்தொழில் கருத்திட்டங்களை ஸ்தாபித்ததுடன் இணைந்த விதத்தில் இந்நிலைமை தோன்றியது. இது அரசாங்கத்தின் திவிநெகும திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பெருமளவுக்கு ஊடுருவல் இயல்பைக் கொண்ட நடைமுறைச் சாத்தியமான முன் முயற்சிகளாக இவை இருந்து வந்துள்ளன என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. இது விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட கிராம பிரதேசங்களிலும் உபநகர பிரதேசங்களிலும் வாழ்கைத்தரத்தை அபிவிருத்தி செய்து கொள்வதற்கு கணிசமான அளவில் ஒரு பங்களிப்பை வழங்கியுள்ளது.

கூட்டுறவுத் துறை

கூட்டுறவு இயக்கம் இவ்வாண்டின் போது மேலதிக தூண்டுதலை பெற்றுக் கொண்டிருந்தது. வர்த்தகத்தின் இந்த முக்கியமான துறையை அபிவிருத்தி செய்வதில் அதிக அளவில் கவனம் செலுத்தப்பட்டதுடன் இணைந்த விதத்தில் இந்த நிலை தோன்றியிருந்தது. சலுகை வட்டி வீதங்களில் நீண்ட கால மற்றும் குறுங்கால நிதி வசதிகள் கோப் சிட்டி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டன. வாடிக்கையாளர்களுக்கு மத்தியில் மேலும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், சிறந்த சேவைகளை பெற்றுக் கொடுப்பதற்குமென இது மேற்கொள்ளப்பட்டது. கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றி வந்த ஊழியர்களுக்கு பயிற்சிகளை வழங்குவதற்கென நிதியளிப்பு மேற்கொள்ளப்பட்டதுடன் இணைந்த விதத்தில் இது மேலும் வலுவாக்கப்பட்டது.

மேலும், வங்கி சர்வதேச கூட்டுறவு சம்மேளனம் மற்றும், சர்வதேச தினம் என்பவற்றுக்கு அனுசரணை வழங்கியது. இது வங்கியின் வணிகச் சின்னத்தையும், நற்பெயரையும் மேம்படுத்திக் கொள்வதற்கு உதவியது.

கூட்டுறவு இயக்கத்தை மேலும் அபிவிருத்தி செய்யும் பொருட்டு கூட்டுறவு கிராம வங்கிகளை நவீனமயமாக்குவதற்கென அளிப்புக்கள் வழங்கப்பட்டன. இது இக்கூட்டுறவு இயக்கத்தில் ஒரு மறுமலர்ச்சியை எடுத்து வந்ததுடன் செயல்திறன் மிக்க வாடிக்கையாளர் சேவையை வழங்குவதற்கான ஊக்குவிப்பை வழங்கியது.

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் வங்கித் தொழில்

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் துறை எழுச்சி கண்டு வரும் பொருளாதாரத் துறையில் மிக முக்கியமான துறையாக தொடர்ச்சியாக இருந்து வந்துள்ளது. இது ஒன்றன்பின் ஒன்றாக முன்வைக்கப்பட்ட வரவு செலவு யோசனைகளில் வளர்ச்சியின் ஓர் இயந்திரமாக இணங்கானப்பட்டிருந்தது. தேசிய தேவைகளுடன் இணைந்த விதத்தில் வங்கி உபாய ரீதியான ஒரு பொறிமுறையை அபிவிருத்தி செய்துள்ளது. அதற்கூடாக இறுதியில் 24 அர்ப்பணிப்புடன் கூடிய சிறிய மற்றும், நடுத்தர தொழில் முயற்சி நிலையங்கள் நாடெங்கிலும் ஸ்தாபிக்கப்பட்டதுடன் இதற்கென தலைமை அலுவலகத்தில் ஓர் ஒருங்கிணைப்பு அலகும் நிறுவப்பட்டது. இந்தச் சிறிய மற்றும், நடுத்தர தொழில் முயற்சி நிலையங்கள் பெறுமதியை சேர்க்கும் தொழில் முயற்சிகளுக்கு நிதி வசதிகளை வழங்கியது மட்டுமன்றி, நிதி ரீதியில் உள்ளடக்கப்படாத தொழில் முனைவோருக்கு நிதி சாராத சேவைகளையும் வழங்கி வந்தன. தற்போதைய கடன்களின் உயர் செலவின் பின்னணியில் நோக்கும் போது மீள் நிதியிடல் ஏற்பாடுகளை பயன்படுத்தும் சலுகை ரீதியிலான கடன் திட்டங்கள் மற்றும், வங்கியின் சொந்த நிதிகள் என்பன இதற்கென பகிர்ந்தளிக்கப்படுகின்றன. கடன் மதிப்பீட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் சிறிய மற்றும், நடுத்தர தொழில் முயற்சி வணிகத்தில் ஈடுபட்டிருக்கும் உத்தியோகத்தர்கள் ஆகியோர் பல்வேறு துறைகள் தொடர்பாகவும் தொடர்ச்சியாக உள்நாட்டிலும் அதே போல சர்வதேச ரீதியிலும் பயிற்றப்பட்டு வருகின்றனர்.

நாங்கள் தற்பொழுது எமது ஒட்டு மொத்த சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி யுக்தியை பகுப்பாய்வு செய்து வருகின்றோம். வங்கி 'இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் மிகவும் நம்பிக்கை வாய்ந்த நிதிச் சேவைகளை வழங்குனர், நட்பு ரீதியான செலவுத் தாக்கம் மிக்க மற்றும், பெறுமதி மிக்க நிதிச் சேவைகளை வழங்குனர்' என்ற பிரிவாக

நிலை நிறுத்திக் கொள்வதற்கு செயற்பட்டு வருகின்றது. இதன் மூலம் எதிர்பார்க்கப்படும் பெறுபேறு பெறுமதியினால் தூண்டப்பட்ட நிலைத்து நிற்கக் கூடிய சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி கடன் கலாச்சாரமொன்றை உருவாக்குவதாகும்.

திறைசேரி

குறிப்பாக உலகளாவிய பொருளாதார ஊசலாட்ட நிலை மற்றும் வருடத்தின் போது எதிர்கொள்ளப்பட்ட சந்தைத் தளம்பல் நிலைமைகள் என்பவற்றைக் கொண்ட மிக மோசமான சவால்கள் மிக்க சூழல் ஒன்றில் இயங்கி வந்ததன் மூலம் 2012ம் ஆண்டின் போது திறைசேரி அலகின் செயலாற்றுகை மூலம் அந்நியச் செலாவணி வியாபாரத்திலிருந்து கணிசமான அளவிலான ஆதாயங்கள் கிடைத்துள்ளன. முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது அந்நியச் செலாவணி வருமானம் 76% இனால் அதிகரித்திருந்தது. அறிவாற்றல் மிக்க எமது வர்த்தகர்கள் சந்தைத் தளம்பல் நிலையையும், முன்னோக்கிய சந்தைகளில் இடம்பெற்று வரும் மாற்றங்களையும் துல்லியமாக அறிந்து கொண்டிருந்ததன் காரணமாகவே இந்த அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது.

கடன் வளர்ச்சி காரணமாக சாதகமான வர்த்தக அளவுகளின் அடிப்படையில் திறைசேரி அமெரிக்க டொலர்/இலங்கை ரூபா நாணயக் கூட்டில் உடனடி மற்றும் முன்நோக்கிய சந்தைகளில் சந்தையின் தலைமை வங்கி என்ற எமது ஸ்தானத்தை மேலும் பலப்படுத்தியது. இது விலை அனுகூலங்களை ஏற்றுமதியாளர்களுக்கும், இறக்குமதியாளர்களுக்கும் வழங்கி, போட்டி வீதங்களை வழங்கியதன் மூலம் வாடிக்கையாளர்களை கவர்ந்திழுக்கக் கூடிய நிலையை எடுத்து வந்தது. அதன் மூலம் கணிசமான அளவிலான வணிகச் செயற்பாடுகளை வங்கியின் பால் பெற்றுக்கொள்ள முடிந்தது எமது கடன் வியாபார வணிகத்துக்கூடாக மூலதன ஆதாயங்கள் மற்றும் வட்டிச் சம்பாத்தியங்கள் என்பவற்றின் மூலம் கணிசமான அளவிலான வருவாய் பெற்றுக் கொள்ளப்பட்டது. உறுதியான பண வீக்கம் வீதம் காரணமாக சந்தையின் வட்டி வீத கட்டமைப்பு வருடத்தின் போது மாற்றமடைந்ததனால் திறைசேரி உண்டியல்கள் வியாபாரம் மற்றும் முறிகள் தொகுப்பு கணிசமான அளவிலான மூலதன ஆதாயங்களை எடுத்து வந்தன. சந்தையை துல்லியமாக புரிந்து கொண்டமை, திறைசேரி ஊழியர்களின் நிபுணத்துவம் மற்றும் அனுபவம் என்பவற்றை பயன்படுத்தி சரியான நேரத்தில் சந்தைக்குள் பிரவேசித்தமை கணிசமான அளவிலான வருமான உருவாக்கத்துக்கு பங்களிப்புச் செய்திருந்தது.

இலங்கை ரூபா விளைவு வளைகோட்டு நகர்வுகளின் மீது உச்சமட்ட பெறுபேறுகளை பெற்றுக் கொள்ளும் பொருட்டு தெரிவு செய்யப்பட்ட யுக்திகள் பயன்படுத்தப்பட்டன.

எமது முதன்மை வியாபார அலகு 2012 ஜூலை மாதத்தில் துவக்கி வைக்கப்பட்ட BLOOM BERGS FIQ வியாபார தளத்தில் ஆகக்கூடிய வர்த்தக தொகுப்பினை கொண்டிருந்த பெருமையை பெற்றுக் கொண்டது.

முதலீட்டு வங்கித்தொழில் அலகு அதன் கடன் மீளமைப்புச் செயற்பாடுகளை உறுதிப்படுத்திக் கொண்டதுடன், பிணைமயமாக்கல் மற்றும் வர்த்தக கடதாசிகள் என்பவற்றுக்கூடாக 2012 இல் ரூ. 8 பில்லியனை திரட்டியிருந்தது. அது வங்கிக்கு கணிசமான அளவிலான ஒரு கட்டண வருமானத்தை பெற்றுத் தந்தது. முதலீட்டு வங்கித் தொழில் அலகு இப்பிரிவில் கணிசமான அளவிலான ஒரு சந்தைப் பங்கை பெற்றுக் கொண்டதுடன், பெரும் எண்ணிக்கையிலான நிறுவனத் துறை கடன் வழங்குனர் மற்றும் நிறுவனத் துறை முதலீட்டாளர்கள் ஆகியோருக்கென கொடுக்கல் வாங்கல்களை முடித்து வைத்தது. மேலும், முதலீட்டு வங்கித் தொழில் அலகு பேங்க் ஒப் அமெரிக்கா, மெரில் லிஞ்ச், பார்க்லேயிஸ் கப்பிட்டல், சிட்டி பாக்ங் மற்றும் HSBC ஆகிய 4 சர்வதேச முதலீட்டு வங்கிகளுடன் இணைந்த விதத்தில் 2012 ஜூலை மாதத்தில் இடம் பெற்ற இலங்கை அரசாங்கத்தின் 1 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான தங்க முறி வெளியீட்டின் இணை முகாமையாளராக தெரிவு செய்யப்பட்டிருந்தது. இந்த வெளியீடு இலங்கையில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட மிகச் சிறந்த தங்க முறி வெளியீடு என கருதப்படுகின்றது. கவர்ச்சிகரமான வட்டி வீதம், முதலீட்டாளர்களின் எண்ணிக்கை, முன்னெப்போதும் இருந்திராத அளவில் மிகையாக பங்குகள் கொள்வனவு செய்யப்பட்ட நிலை என்பவற்றின் காரணமாகவே இவ்வாறு அது தெரிவு செய்யப்பட்டிருந்தது. கடன் பிணைப்பத்திரங்கள் தொகுப்பொன்றை உருவாக்குவதற்கான ஒப்புதலை முதலீட்டு வங்கித் தொழில் அலகு பெற்றுக் கொண்டது. இது வியாபாரத்தின் மூலம் கணிசமான அளவிலான வட்டி வருமானத்தையும், மூலதன ஆதாயங்களையும் பெற்றுக் கொள்வதற்கு உதவியது.

வங்கி அதன் வளர்ச்சித் திட்டங்களை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கு இயலச் செய்யும் விதத்தில் மேலதிக நிதிகளை பெற்றுத் தரும் விடயத்தில் திறைசேரி மிக முக்கியமான ஒரு பாத்திரத்தை வகித்து வந்துள்ளது. ஏனெனில், இதற்கு வைப்புத் திரட்டல் மட்டும் போதியதாக இருந்து வரவில்லை. வங்கி நிதி நிறுவனங்களுக்கூடாக பெருமளவுக்கு போட்டி வீதங்களில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதிகளை தொடர்ந்தும் திரட்டி வந்தது. அது வங்கியின் ஒட்டுமொத்த இலாப நிலைக்கு பங்களிப்புச் செய்தது.

அதிநவீன தொழில்நுட்பத்துடன் ஒருங்கிணைக்கப்பட்ட திறைசேரி முறைமையொன்றின் அமுலாக்கம் மேற்கொள்ளப்பட்டதுடன், எமது வாடிக்கையாளர்களுக்கு தனிப்பட்ட முறையில் பொருந்தக்கூடிய தீர்வுகளை வழங்கும் எமது ஆற்றலையும், எமது சேவை விநியோகத்தை விருத்தி செய்து கொள்ளும் எமது ஆற்றலையும் இது மேம்படுத்தியது.

> கடந்த சில வருடங்களின் போது தொழில்நுட்பத்தில் நாங்கள் மேற்கொண்ட மதிநுட்பமான முதலீடு எமது வாடிக்கையாளர்களுக்கு நவீன தொழில்நுட்ப திட்டங்களை எளிதாகவும், செயல்திறன் மிக்க விதத்திலும், அனைவரும் அணுகக் கூடிய விதத்திலும், பரவலான விதத்திலும் வழங்குவதற்கு எமக்கு ஆற்றலை வழங்கியிருப்பதுடன், அவர்களுக்கு எந்த ஒரு நேரத்திலும், எந்த ஒரு இடத்திலும், தொந்தரவுகள் இல்லாத விதத்திலான வங்கித்தொழில் வசதிகளை வழங்கக்கூடிய ஆற்றலையும் பெற்றுத் தந்துள்ளது.

தகவல் தொழில்நுட்பம்

மத்தியமயப்படுத்தப்பட்ட இணையத்தின் மூலம் இணைக்கப்பட்ட கிளை வலையமைப்பொன்றை செயல்படுத்தும் எண்ணக்கருவில் தொடர்ச்சியாக வங்கி 6 சேவை நிலையங்களை முழுமையாக செயல்படும் கிளைகளாக தரமுயர்த்தியதுடன், கேந்திர முக்கியத்தவம் வாய்ந்த அமைவிடங்களில் 15 சேவை நிலையங்களை திறந்து வைத்தது. புதிய சேர்க்கைகளை அடுத்து மொத்த வாடிக்கையாளர் சேவை நிலையங்களின் எண்ணிக்கை 728 ஆக அதிகரித்தது.

இடையறாது அதிகரித்து வரும் கேள்வியை நிறைவு செய்யும் வகையில் வங்கி புதிதாக 40 தானியங்கி காசாளரும் இயந்திரங்களை (ATM) நிறுவியதுடன், மொத்த ATM வலையமைப்பின் எண்ணிக்கை 420 ஆக அதிகரித்தது. மேலும், ATM SWITCH முறையுடன் அதி நவீன தொழில்நுட்ப பல்கரும அட்டை முறையொன்றை மதிப்பிடும் செயன்முறையும் இடம்பெற்று வந்தது. 2013 தொடக்கத்தில் செயற்படுத்தபடவிருக்கும் பொதுவான ATM SWITCH இன் முன்னோடி கட்டத்தில் இணைந்து கொள்வதற்கு நாங்கள் முடிவு செய்துள்ளோம்.

Peoples International Visa அட்டைக்கு பெறுமதி சேர்க்கும் வகையில் வங்கி வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துடன் கூட்டாக இணைந்து வெளிநாடுகளில் தொழில் புரியும் தொழிலாளர்களுக்கென முன்னரே உருவாக்கப்பட்ட அட்டை ஒன்றை வெளியிட்டது. NRFC வாடிக்கையார்களும் பற்று அட்டையை பயன்படுத்தி எந்த ஒரு உள்ளூர் அல்லது சர்வதேச ATM இலிருந்தும் அல்லது VISA வணிக நிலையத்திலிருந்தும் பணத்தை மீளப் பெற முடியும்: அல்லது பற்று அட்டையை பயன்படுத்தி பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்ய முடியும்.

இவ்வாண்டில் அமுல் செய்யப்பட்ட குறிப்பிடத்தக்க மற்றுமொரு சாதனை பி.ப. 5.30 வரை அனைத்து கிளைகளும் காசோலைகளை ஏற்றுக் கொள்வதாகும். இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறையை பயன்படுத்தி இவ்விதம் வைப்புச் செய்யப்படும் காசோலைகளை அடுத்த அலுவல் நாளில் கொடுப்பனவுகள் வரவு வைக்கப்படுகின்றன. இதுவும் பன்முக செயன்முறைகளுக்கு வசதி செய்து கொடுப்பதுடன், எம்மால் அறிமுகம் செய்யப்பட்ட மற்றுமொரு பெறுமதி சேர்ப்பாக இருந்து வருகின்றது.

SWIFT Alliance Release 07 முறை 2012 மார்ச் மாதத்தில் வெற்றிகரமாக அமுல் செய்யப்பட்டது. இலங்கையின் SWIFT பாவனையாளர் குழுவிடமிருந்து எமது ஊழியர் அணியினர் பெற்றுக் கொண்ட அனைத்துமடங்கிய பயிற்சியே இதனை சாத்தியமாக்கியது. இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட இணையான செயற்பாட்டின் வெற்றியுடன் இணைந்த விதத்தில் நாங்கள் பெப்ரவரி மாதத்தில் திறைசேரி முகாமைத்துவ முறையை வெற்றிகரமாக செயற்படுத்தினோம். அது இப்பொழுது வங்கியின் கணணி முறையுடன் (SIBS) முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

எமது அட்டை நிலயத்தில் தன்னியக்கமயமாக்கப்பட்ட சிறு அழைப்பு நிலையமொன்றை அபிவிருத்தி செய்து, அமுல் செய்தமை எமது மற்றொரு சாதனையாகும். இதற்கான பெருமை உள்ளக தகவல் தொழில்நுட்ப அணியினரை சாரும். ஒரு ATM SWIFT முறையுடன் கூடிய அட்டை முகாமைத்துவ முறை, கம்பனித் துறை வாடிக்கையாளர்களுக்கான இணைய வங்கித்தொழில் முறைமை மற்றும் தரவு களஞ்சியசாலை மற்றும் வணிகத் தகவல்கள் முறைமை என்பன இவ்வருடத்தின் போது துவக்கி வைக்கப்பட்ட ஏனைய முக்கியமான கருத்திட்டங்களாக இருந்து வந்தன. அவை 2013 ம் ஆண்டின் போது முழுமையாக அமுல் செய்யப்படவுள்ளன.

இலங்கை மத்திய வங்கியின் தேவைப்பாடுகளுக்கிணங்கி ஒழுகும் விதத்தில் இப்பொழுது 200 POS இயந்திரங்கள் TLE (Terminal Line Encryption) முறைமையுடன் இணங்கிச் செல்வதாக இருந்து வருவதுடன், மிகுதி இயந்திரங்கள் 2013 மார்ச் மாதமளவில் முழுமையாக ஒழுங்கிணைக்கப்படவுள்ளன.

2013 ஆம் ஆண்டளவில் கம்பனித் துறை வாடிக்கையாளர்களுக்கு ஒரு பெறுமதி சேர் சேவை வழங்கப்படும்: இலங்கை மத்திய வங்கி மற்றும் ஊழியர் சேமலாப நிதிய திணைக்களம் என்பவற்றினால் கூட்டாக மேற்கொள்ளப்பட்டு வரும் ஒரு கருத்திட்டத்தின் பிரகாரம், ஊழியர் சேமலாப நிதியக் கொடுப்பனவுகளை இணையத்தின் மூலம் செலுத்தக்கூடிய வாய்ப்பு அவர்களுக்கு கிடைக்கும். இணையத்தின் மூலமான இந்தக் கொடுப்பனவு வசதி சுங்கத் தீர்வைகளையும் இதே முறையில் செலுத்தக்கூடிய வாய்ப்புக்கும் விஸ்தரிக்கப்படும். இலங்கை சுங்கத் திணைக்களத்துடன் மேற்கொள்ளப்பட்டு வரும் ஒரு கூட்டு முயற்சியுடன் இது முன்னெடுக்கப்படுகின்றது. மேலும், நாங்கள் கறுப்புப் பணத்தை வெள்ளையாக்குவதற்கு எதிரான ஒரு முறைமையை தெரிவு செய்திருப்பதுடன், இந்த முறைமை 2013 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படவுள்ளது.

ஆராய்ச்சி

ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்ட புத்தாக்கங்கள் மற்றும் தகவல் சேகரிப்பு என்பன வங்கித் தொழிற்துறையின் நிலையான வளர்ச்சிக்கு முக்கியமான பங்களிப்புக்களாக இருந்து வருகின்றன. இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களின் முறையான பாய்ச்சல் திட்ட அபிவிருத்தி மற்றும் புத்தாக்கம் என்பவற்றுக்கான பாரிய ஆதரவை வழங்கி வருகின்றது. மேலும், அது தற்போதைய திட்டங்கள் மற்றும் சேவைகள் என்பவற்றின் தரத்தை விருத்தி செய்வதிலும் முக்கியமான ஒரு பங்கை வகித்து வருகின்றது. மேலும், இது இயல்பாகவே பன்முகப் பரிமாண வளர்ச்சியையும் மேம்படுத்துகின்றது.

பணிப்பாளர் சபை, கூட்டு முகாமைத்துவம் மற்றும் வங்கியின் ஏனைய உள்ளக பங்கீடுபாட்டாளர்கள் ஆகியோருக்கு துல்லியமான, உரிய நேரத்திலான தொழில் துறை சார்ந்த ஆராய்ச்சித் தகவல்களை வழங்குவதன் மூலம் வணிக அபிவிருத்தியில் ஆராய்ச்சி திணைக்களம் ஒரு முக்கியமான கூறாக செயற்பட்டு வருகின்றது. துறை மற்றும் தொழில் துறை பகுப்பாய்வு, சந்தை ஆய்வுகள், வாடிக்கையாளர் மதிப்பீட்டாய்வுகள், போட்டி நிறுவனங்கள் குறித்த பகுப்பாய்வு என்பவற்றின் வடிவில் இத்திணைக்களத்தினால் நடாத்தப்பட்டு வரும் ஆராய்ச்சி, வங்கி முகாமைத்துவத்துக்கு ஆய்வு அறிக்கைகள், ஆய்வுப் பத்திரங்கள், நிலவர விளக்கப்பத்திரங்கள், முகாமைத்துவத்துக்கான தகவல் சுருக்கங்கள் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணப்படுத்தல் என்பவற்றினூடாக வழங்கப்பட்டு வருகின்றது. பிரதானமாக கைத்தொழில்கள் மற்றும் பொருளாதாரத்தின் ஏனைய உப துறைகள், வணிகம், வங்கித்தொழில் திட்டங்கள், கிளை வலையமைப்பு, வாடிக்கையாளர் சேவை மற்றும் போட்டியாளர்கள் போன்ற பல்வேறு விடயங்கல் தொடர்பாக இந்த ஆராய்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பொருளியல் நோக்கு

அபிவிருத்தி நோக்கிலான ஆராய்ச்சியின் அடிப்படையிலான விஞ்ஞான ரீதியிலான முடிவுகள், புத்தாக்கங்கள், உள்நாட்டு மற்றும் சர்வதேச அனுபவங்கள் என்பவற்றை முன்வைக்கும் மிக முக்கியமான தாக்கமான கருவிகளில் ஒன்று பொருளியல் நோக்கு சஞ்சிகை ஆகும். இது ஒரு முன்னனி அபிவிருத்தி நோக்கிலான, ஓரளவுக்கு புலம் சார்ந்த சமூக பொருளாதார இதழாக இருந்து வருகின்றது. இச்சஞ்சிகை 1975 ஆம் ஆண்டு தொடக்கம் சுமார் மூன்றரை தசாப்த காலமாக ஆராய்ச்சி பிரிவினால் பிரசுரிக்கப்பட்டு வருகின்றது. இலங்கையின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி என்பவற்றுக்கான வங்கியின் பங்களிப்புக்கான உறுதியான ஒரு சான்றாக இது நிலைத்து வருகின்றது. மேலும், இது வங்கியின் ஒரு நிறுவனத் துறை சமூகப் பொறுப்பு கருத்திட்டமாக இருந்து வருவதுடன், நிலையான அடிப்படையில் அறிவை பரப்பி வருகின்றது.

வல்லுனர்கள் எழுதும் நிரல்கள், பேட்டிகள், நூலாய்வுகள், மாணவர் பக்கம் என்பவற்றையும் பொருளியல் நோக்கு சஞ்சிகை உள்ளடக்குகின்றது. பல்வேறு தேசிய மற்றும் சர்வதேசிய அபிவிருத்தி மற்றும் சமூகப் பிரச்சினைகளை எடுத்து விளக்கும் சம்பந்தப்பட்ட நிபுணர்களினால் எழுதப்படும் கட்டுரைகள் காலத்துக்கு பொருத்தமானவையாகவும், முக்கியத்துவம் வாய்ந்தவையாகவும் இருந்து வருகின்றன. இச்சஞ்சிகையின் ஒவ்வொரு இதழும் சமகால தலைப்பொன்றை எடுத்து, அது

குறித்து அனைத்துமடங்கிய ஒரு பகுப்பாய்வை முன்வைக்கும் விதத்தில் வெளியிடப்படுகின்றது. இவ்வருடத்தின்போது வரவு செலவுத் திட்டம் 2012, சமத்துவத்துடன் கூடிய வளர்ச்சி, செலாவணி விகிதம், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம், நிறுவன ஆளுகை மற்றும் பொருளாதாரத்தில் பெண்களின் பங்களிப்பு என்ற தலைப்புகளைக் கொண்ட 6 இதழ்கள் வெளியிடப்பட்டன.

சந்தைப்படுத்தல் மேம்பாட்டு நடவடிக்கைகள்

வணிதா வாசனா மாதம்

இலங்கை பெண்களுக்கு மத்தியில் சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிப்பதற்கும், அவர்களுடைய நிதிசார் ஆற்றலை மேலும் பலப்படுத்துவதற்குமென மக்கள் வங்கி சர்வதேச பெண்கள் தினத்தை நினைவு கூரும்முகமாக மார்ச் 8ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் 8 ம் திகதி வரையிலான காலப் பிரிவினை வனிதா வாசனா மாதம் எனப் பெயரிட்டது. இக்காலப் பிரிவின் போது வனிதா வாசனா கணக்குகள் அனைத்துக்கும் ஒரு மேலதிக போனஸ் ஆக தமது சேமிப்புகளை இரட்டிப்பாக்கிக் கொள்ளும் வாய்ப்பு வழங்கப்படுகின்றது. பல்வேறு தொகைகளையும் கொண்ட சேமிப்புப் பற்றுச் சீட்டு அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது. இப்பற்றுச் சீட்டுகள் ஒரு விசேட சீட்டிழுப்பில் சேர்த்துக் கொள்ளப்படுவதுடன், வெற்றியீட்டும் பற்றுச்சீட்டு அதிலுள்ள தொகையை பரிசுப் பணமாக பெற்றுக் கொள்கிறது. மேலும், இக்கணக்குகளுக்கு சந்தை வட்டி வீதத்திலும் பார்க்க உயர்வான ஒரு வட்டி வீதம் வழங்கப்பட்டு வருவதுடன், திரண்ட வட்டி தானாகவே கணக்குக்கு மாற்றல் செய்யப்படுகின்றது. வனிதா வாசனா மாதத்தின் போது இக்கணக்கு வைத்திருப்பவர்கள் மாதாந்தம் மற்றும் வருடாந்தம் கவர்ச்சிகரமான வெகுமதிகளுடன் சீட்டிழுப்பு இடம்பெறும் ஜயசிரி அதிர்ட சீட்டிழுப்பில் பிரவேசிப்பதற்கான உரித்தினையும் கொண்டுள்ளார்கள்.

எதெர NRFC கணக்கு வைத்திருப்பவர்களுக்கான புதிய வெகுமதி திட்டம்

குறைந்தது 250 அமெரிக்க டொலர் அல்லது வேறு ஏதாவது வெளிநாட்டு நாணயத்தில் அதற்கு இணையான நிலுவையைக் கொண்டிருக்கும் எதெர இசுற NRFC சேமிப்புக் கணக்குகளுக்கு மாதாந்தம் மற்றும் வருடாந்தம் விசேட பரிசுகளை வழங்கும் சீட்டிழுப்புகள் நடத்தப்பட்டன. இந்தப் பரிசுகள் ரூ.1 மில்லியன் ஐக் கொண்ட முதலாவது பரிசை உள்ளடக்கியதுடன், இதில் காணப்பட்ட ஒரு சிறப்பம்சம் இக்காலப் பிரிவின் போது கணக்கில் பராமரிக்கப்பட்டு வந்த ஒவ்வொரு 250 அமெரிக்க டொலர் தொகைக்கும் அல்லது அதற்கு இணையான தொகைக்கும் மேலதிக வெற்றி வாய்ப்புகள் வழங்கப்பட்டமையாகும்.

ஜய ஸ்ரீ 2012

அதிக எண்ணிக்கையிலான பரிசுகளை வழங்கும் வெகுமதிகளுடன் கூடிய அதிகப் பழைய சேமிப்புத் திட்டமான ஜய ஸ்ரீ திட்டம் இப்பொழுது உயர் முக்கியத்துவத்தை பெற்றுள்ளது. மக்களுக்கு மத்தியில் சேமிப்புப் பழக்கத்தை போதித்து வளர்க்கக் கூடிய மிக முக்கியமான ஒரு வழிமுறையாக அது இருந்து வருகின்றது. ஆகக் குறைந்தது ரூ. 10,000 நிலுவையைக் கொண்டிருக்கும் கணக்குகளை வைத்திருக்கும் வயது வந்தவர்கள் அனைவரும் இச்சீட்டிழுப்பில் மாதாந்தம் பங்குபற்றி, மாதாந்த சீட்டிழுப்பிலும் மற்றும் வருடாந்த சீட்டிழுப்பிலும் மிகவும் கவர்ச்சிகரமான பரிசுகளை வெல்ல முடியும். சேமிப்பு கணக்குகளில் பேணப்பட்ட நிலுவையின் மட்க்குகளுக்கு ஏற்ப வெற்றிக்கான பல்வேறு வாய்ப்புகளை எடுத்து வருகின்றன. கார்கள், உழவு இயந்திரங்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள், மிக்சர் கிரைண்டர்கள் போன்ற பரிசுகள் மாதாந்த சிட்டிழுப்பின் போது வழங்கப்பட்டு வருவதுடன், வருட இறுதி மாபெரும் சீட்டிழுப்பில் ஒரு புத்தம் புதிய ஹொண்டா சிவிக் கார் பரிசாக வழங்கப்படுகின்றது.

தேசத்தின் எதிர்காலத்துடன் 64 ஆவது சுதந்திர தின கொண்டாட்டங்கள்

நாட்டின் ஒரு முக்கிய ஆண்டு நிறைவை குறிக்கும் இவ்வைபவத்தை நினைவு கூரும் பொருட்டு, மக்கள் வங்கியின் வருடாந்த சுதந்திர தின நிகழ்ச்சித் திட்டமான சுதந்திரத்தின் உதயம், 2012 பெப்ரவரி 1 ஆம் திகதி தொடக்கம் 7ஆம் திகதி வரை பிறக்கும் அனைத்து குழந்தைகளுக்கும் ஒரு இசுரு உதான வெகுமதிச் சான்றிதழ் மற்றும் வெகுமதிப் பொதி என்பவற்றை வழங்குவதுடன் ஆரம்பித்தது. இலங்கையின் பெருமிதமிக்க பிரஜைகளாக இருந்து வரும் அதே வேளையில், பெற்றோர் தமது குழந்தைகளின் குறிக்கோள்களை நிறைவேற்றி வைப்பதற்கு அவர்களுக்கு உதவும் நோக்குடன் ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் துவக்கிவைக்கப்பட்ட இத்திட்டத்தின் ஒரு சிறப்பம்சம், மக்கள் வங்கி ஊழியர் அணியின் உறுப்பினர்கள் மருத்துவமனைகளில் பிறந்திருக்கும் குழந்தைகளுக்கு வெகுமதிகளை வழங்கியமையாகும். இவ்வாண்டின் வெகுமதி வழங்கும் வைபவம் கொழும்பு காசல் வீதி தாய் சேய் மருத்துவமனையில் இடம்பெற்றது.

கிளைகளை திறந்து வைத்தல்

மக்கள் வங்கி மற்றும் பீப்பள்ஸ் லீசிங் கம்பனி என்பவற்றின் தங்காலை கிளை அமைந்திருக்கும் புதிய நான்கு மாடிக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டதுடன், அவை தமது செயற்பாடுகளை அங்கு அங்குரார்ப்பணம் செய்து வைத்தன. இந்த அங்குரார்ப்பண வைபவத்தில் பங்குபற்றிய அதி மேதகு ஜனாதிபதி அவர்கள், மக்கள் வங்கி மற்றம் பீப்பள்ஸ் லீசிங் கம்பனி என்பன தூர நோக்கு கொண்ட நிறுவனங்களாகவும், இந்நகரத்தக்கு மட்டுமன்றி முழுப் பிரதேசத்துக்கும் பயன்களை வழங்கி வரும் நிறுவனங்களாகவும் இருந்து வருகின்றன எனக் குறிப்பிட்டு, அவற்றை பாராட்டினார். நாட்டின் கலாசாரம் முதன்மை பெற்று வரும் இந்த முக்கியமான கால கட்டத்திலே மக்கள் வங்கி உண்மையிலேயே மக்களின் நலனுக்காக பணியாற்றி வருகின்றது என்று மிகுந்த ஆர்வத்துடன் குறிப்பிட்ட ஜனாதிபதி அவர்கள், நாட்டின் பொருளாதாரத்தை வடிவமைப்பதில் வங்கி மிக முக்கியமான ஒரு பங்கை வகிக்க வேண்டும் என்றும் கூறினார். மேலும், நாட்டின் ஊழியர் படையில் அது முக்கியமான ஒரு நிலையை கொண்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார். இக்கிளை 24 மணி நேர ATM வசதியையும் உள்ளிட்ட மிகப் பிந்திய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி மக்களுக்கு எளிதான வங்கித்தொழில் வசதிகளை வழங்கி வருகின்றது. மேலும், மக்கள் வங்கியின் ஈடிணையற்ற அதி உன்னத வாடிக்கையாளர் சேவையுடன் இணைந்த விதத்தில் பல்வேறு விதமான லீசிங் சேவைகளையும் அது வழங்கி வருகின்றது.

தெமட்டகொடை கிளை வேறு இடத்துக்கு எடுத்து செல்லப்பட்டமை

மிகச் சிறந்த வாடிக்கையாளர் சேவைகளை வழங்கும் பொருட்டும், மக்கள் எமது கிளையை எளிதில் அணுகும் பொருட்டும் தெமட்டகொடை கிளை வங்கியின் 51 ஆவது ஆண்டு நிறைவுடன் இணைந்த விதத்தில் வேறு இடத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி இக்கிளை 24/7 பெட் வசதிகளையும் உள்ளிட்ட விதத்தில் அனைத்து விதமான வங்கிச் சேவைகளையும் தொடர்ந்து வழங்கி வரும்.

முன்னேடியான சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிகள் வணிக நிலையங்கள்

மகிந்த சிந்தனை முன்நோக்கிய பயணத்துடன் உறுதியாக கைகோர்த்துக் கொண்ட நிலையில், விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள், கால்நடை, ஆடைகள், கடற்றொழில், சுற்றுலாத் துறை, நிர்மாணத் துறை மற்றும் ஏனைய முதன்மையான துறைகள் என்பவற்றுக்கு கடன் வசதிகளை வழங்குவதன் மூலம் சிறிய மற்றும் நடுத்தர அளவு வணிகத் துறைகளை பலப்படுத்தும் குறிக்கோளுடன் மக்கள் வங்கி மூன்று சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சி வணிக நிலையங்களை திறந்து வைத்தது.முதலாவது வணிக நிலையம் அநுராதபுரத்திலும், அதன் பின்னர் குருணாகல், மாத்தறை, கண்டி ஆகிய இடங்களிலும் இந்நிலையங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. அதி நவீன வசதிகளுடன் கூடிய இந்நிலையங்கள் இணைய வசதி மற்றும் கேட்போர் கூடம் என்பவற்றை உள்ளடக்கிய விதத்தில் அனைத்து வசதிகளையும் கொண்ட நூல் நிலையங்களையும் கொண்டுள்ளன. வாடிக்கையாளர்களுக்கு ஆலோசனைகளை வழங்குவதற்கென செயல்திறன் மிக்க, நட்புணர்வுடன் கூடிய, பயிற்றப்பட்ட நிபுணத்துவ ஊழியர்கள் இந்நிலையங்களில் பணியாற்றி வருகின்றார்கள். இறுதியில் சிறிய மற்றும் நடுத்தர அளவு வணிக முயற்சி நிலையங்கள் அனைத்து 24 மாவட்டங்களிலும் அமைக்கப்படவிருக்கின்றன.


ஊழியர்கள்

நிரந்தர ஊழியர் ஒருவருக்கான வருமானம் (ரூ.'000)

12,115

மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை

10,685



நிரந்தர ஊழியர் ஒருவருக்கான வரிக்குப் பின்னரான இலாபம் (ரூ.'000)

1,393

வெளி நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் ஊழியர்கள் மற்றும் பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்கள்

நிரந்தர ஊழியர்கள்



எமது வங்கியின் பெயர் உண்மையில் இவையனைத்தையும் கூறுகின்றது. மக்களே மிகவும் முக்கியமானவர்கள். எமது மக்கள், வங்கிக்கும் பங்கீடு பாட்டாளர்களுக்குமிடையிலான மிகவும் பெறுமதிமிக்க ஒரு இணைப்பாக இருந்து வருவதுடன், பங்கீடுபாட்டாளர்களுடன் வங்கி வைத்துக் கொண்டிருக்கும் உறுதியான இணைப்பிற்கு அவர்களே பொறுப்பாக இருந்து வருகின்றார்கள். அதனாலேயே நாங்கள் எமது மக்களின் மேல் சிறப்பாக கவனம் செலுத்தி வருகின்றோம் - ஒரு சிறந்த பணிச் சூழல் தொடக்கம் போட்டி ரீதியான சம்பளங்கள் வரையில் பரந்த வீச்சிலான தொழில் முன்னேற்றங்களையும் மேலும் பல வசதிகளையும் நாங்கள் அவர்களுக்கு வழங்குகின்றோம்.



142,068

பயிற்சி மணித்தியாலங்கள்



பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

693


விபரம்:

- முகாமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்
- அறிமுக நிகழ்ச்சித்திட்டங்கள்
- வெளிநாட்டு பயிற்சி மற்றும் ஏனையவை



95%

நிரந்தர ஊழியர்கள் கூட்டு உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.



நிதிசார் மீளாய்வு

ஐந்து தசாப்தங்களுக்கு மேற்பட்ட பயணத்தின் போது நாங்கள் எமக்கென மிகவும் உறுதியான ஒரு நற்பெயரை கட்டியெழுப்பிக் கொண்டுள்ளோம். தார்மீக நெறிமுறைகள், பொறுப்புக் கூறும் நிலை, உறுதிப்பாடு மற்றும் வெளிப்படைத் தன்மை என்ற அத்திவாரங்களின் மீது கட்டியெழுப்பப்பட்டிருக்கும் வலுவான நிதிசார் அத்திவாரம், ஒரே சீரான செயலாற்றுகை மற்றும் தொலை நோக்குடன் கூடிய பார்வை என்பன இந்த நற்பெயருக்கான காரணங்களாகும். மக்கள் வங்கி என்ற எமது பெயர் ஒன்றே இவையனைத்தையும் எடுத்துக் கூறுகின்றது. எமது மக்களுக்கும், எமது தேசத்திற்கும் நாங்கள் வழங்கும் வாக்குறுதியின் குறியீடாக இந்தப் பெயர் இருந்து வருகின்றது. அடுத்து வரும் பக்கங்களில் நீங்கள் பார்க்கும் நிதிசார் மீளாய்வு எமது செயலாற்றுகை, நாங்கள் மிகவும் கண்டிப்பான விதத்தில் பின்பற்றி வரும் இணங்கியொழுகும் கலாசாரம், பொறுப்புக் கூறும் நிலை, சிறந்த நடைமுறைகள் மற்றும் வெளிப்படைத் தன்மை என்பவற்றுக்கான எமது அர்ப்பணிப்புணர்வை எடுத்து விளக்குகின்றது. எமது நிதி நிலைமை குறித்து எமது பங்குதாரர்களுக்கு உண்மையானதும், தெளிவானதுமான ஒரு சித்திரத்தை வழங்குவதற்கு நாங்கள் கொண்டிருக்கும் பொறுப்புணர்வையும் அது முழுமையாக எடுத்துக் காட்டுகின்றது.

உலகளாவிய பொருளாதாரம் 2012

உலகளாவிய பொருளாதாரம் 2008-2009 வீழ்ச்சி நிலைமைகளிலிருந்து இப்பொழுதும் மீண்டுகொண்டிருக்கின்றது. 2012 இல் நீண்ட காலப் போக்கிலும் பார்க்க குறைந்த அளவில் கிட்டத்தட்ட 3% ஆக குறைவடைந்திருந்த உலக வளர்ச்சி தொடர்ந்தும் அதே நிலையில் நீடித்தது. வெளியீட்டு வளர்ச்சியும் கூட 2012 ஆம் ஆண்டின் போது கணிசமான அளவில் மந்தமடைந்திருந்தது. குறிப்பாக, வளர்ச்சியடைந்த நாடுகளில் இந்த நிலைமையினை அவதானிக்க முடிகின்றது.

உலகளாவிய பொருளாதாரத்தை பாதித்து வரும் பிரச்சினைகள் பன்முகப்பட்டவையாகவும், ஒன்றுடன் ஒன்று பிணைக்கப்பட்டவையாகவும் இருந்து வருகின்றன. குறிப்பாக, வளர்ச்சியடைந்த நாடுகளில் அவதானிக்கப்பட்டு வரும் மிகவும் கடுமையான சவால்கள் தொடர்ச்சியான தொழில் நெருக்கடிகள் (வேலையில்லா திண்டாட்டம் சுமார் 9% உயர் மட்டத்தில் நிலவி வருகின்றது) மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கான வாய்ப்புக்களில் ஏற்பட்டு வரும் வீழ்ச்சி என்பன இப்பிரச்சினைகளில் சிலவாகும். இந்த சீர்குலைவு நிலை தொடர்ந்து இருந்து வருமென எதிர்பார்க்கப்படுகின்றது. 2010 மற்றும் 2011 வருடங்களில் போலல்லாமல், 2012 இல் வீழ்ச்சி கண்டு வரும் சந்தைகள் இந்த மந்தத்திலிருந்து மீட்சியடையவில்லை.

இலங்கையின் பொருளாதாரம் 2012

2012 டிசம்பரில் தொடர்ந்து 47 ஆவது மாதமாகவும் பணவீக்கம் ஒற்றை இலக்கப் புள்ளியில் மட்டத்திலேயே நிலவி வந்தது. அது 2012 நவம்பர் மாதத்தில் 9.5% ஆக இருந்து வந்ததுடன், டிசம்பர் மாதத்தில் 9.2% ஆக வீழ்ச்சியடைந்திருந்தது. எவ்வாறிருப்பினும், வருடாந்த சராசரி அடிப்படையிலான பணவீக்க விகிதம் 2012 நவம்பர் மாதத்தில் 7.2% ஆக இருந்து 2012 டிசம்பர் மாதத்தில் 7.6% ஆக அதிகரித்திருந்தது.

அண்மைக் காலத்தில், செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் கணிசமான அளவில் தளர்த்தப்பட்டிருந்த பெரும்பாலான முதன்மை தொழில் துறைகளில் அனுகூல நிலைகள் தென்பட்டன. சுற்றுலாத் துறை, தேயிலை எற்றுமதி, ஆடை உற்பத்தி, புடவை, அரிசி உற்பத்தி மற்றும் ஏனைய விவசாய விளைபொருட்கள் என்பன நாட்டின் பிரதான துறைகளாக இருந்து வருகின்றன. இந்த பொருளாதார துறைகளுக்கு மேலதிகமாக, வெளிநாட்டு வேலை வாய்ப்பு குறிப்பிட்ட ஒரு அந்நியச் செலாவணி பங்களிப்புக் காரணியாக இருந்து வருகின்றது. இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்குச் சென்று வேலை செய்பவர்களில் 90% மத்திய கிழக்கு நாடுகளில் வேலை செய்து வருகின்றார்கள் என்ற விடயத்தையும் இங்கு குறிப்பிடல் வேண்டும். பிட்ச் ரேட்டிங் குறியீட்டு நிறுவனம் இலங்கையின் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நாணயத்தை வழங்குபவர் BB - (IDR) குறியீட்டை உறுதிப்படுத்தியது. இந்த இரு குறியீடுகளும் உறுதியான நிலையில் இருந்து வந்தன. நாட்டின் உச்ச வரம்பும் BB - குறியீட்டினால் உறுதிப்படுத்தப்பட்டதுடன், குறுங்கால வெளிநாட்டு நாணயம் (IDR) B குறியீட்டில் இருந்து வந்தது.

முன்னேற்றத்தின் பாதையில் 2013

இலங்கை மத்திய வங்கியின் 2013 ஆம் ஆண்டுக்கான கொள்கை நெறிப்படுத்தல் மற்றும் நடுத்தர காலத்திற்கான கொள்கை, குறிப்பாக 4000 அமெரிக்க டொலர் தலா வருமானத்தை பெற்றுக் கொள்ளும் கால கட்டத்திற்கான தங்குதடையற்ற நிலைமாற்றத்தினை உத்தரவாதப்படுத்தும் விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டிற்கான கொள்கை நிலைப்பாட்டை தயாரிப்பதில் இலங்கை மத்திய வங்கி பயன்படுத்திய பிரதான பேரண்ட பொருளியல் மாறிகள் தொடர்பான எறியங்கள் வருமாறு:

- மெய் உள்நாட்டு உற்பத்தி 7.5% ஆல் வளர்ச்சியடைதல்
- பணவீக்கம் நடு ஒற்றைப் புள்ளி மட்டங்களில் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல்
- வர்த்தக பற்றாக்குறை மொ.உ.உ. யின் 15.1% இலிருந்து மொ.உ.உ. 14.4% ஆக விருத்தியடைதல்
- நடைமுறைக் கணக்கின் பற்றாக்குறை மொஉ உ யின் 5.5% இலிருந்து மொ.உ.உ. யின் 4.7% ஆக விருத்தியடைதல்
- இறக்குமதிகளின் ஒதுக்கு நிலை சுமார் நான்கு மாத காலத்திற்கு போதுமானதாக இருந்து வருதல்.
- மொத்த வரவுசெலவுத் திட்ட பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 5.8% ஆக குறைவடைதல்.
- உற்பத்தி திறன் மட்டங்களில் தொடர்ச்சியான விருத்தி.


உலகளாவிய பொருளாதாரத்தில் தோன்றும் சவால்களையும், இலங்கையின் பொருளாதாரத்தின் எதிர்பார்ப்புக்களையும் அவதானித்த நிலையில், இந்த ஆண்டில் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட புதிய இலங்கை கணக்கீட்டு தரநியமங்களை (SLFRS மற்றும் LKAS) பின்பற்ற வேண்டிய தேவையின் பின்னணியில் வங்கியின் செயலாற்றுகையை இங்கே கீழே எடுத்து விளக்குவதில் நாங்கள் பெருமளவுக்கு மகிழ்ச்சியடைகின்றோம்:

நிதிசார் செயலாற்றுகை

இலாப நிலை

2012 ஆம் ஆண்டின் இறுதியில் வங்கியின் வரிக்கு முன்னரான இலாபம் ரூ. 15.2 பில்லியனாகவும், வரிக்குப் பின்னரான இலாபம் ரூ. 10.9 பில்லியனாகவும் இருந்து வந்தது. கடந்த வருடத்தில் இதே காலப் பிரிவின் போது பதிவு செய்யப்பட்ட பெறுபேறுகளை இது ஒத்ததாக இருந்து வருகின்றது. அந்நியச் செலாவணி விகிதங்களில் ஏற்பட்ட கணிசமான அளவிலான நகர்வுகள், அதிகரித்து வரும் சந்தை வட்டி விகிதங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் விதிக்கப்பட்ட கடனளிப்புக் கட்டுப்பாடு என்பவற்றின் காரணமாக தோன்றியிருந்த மிக மோசமான சந்தை நிலைமைகளை இது பிரதிபலிக்கின்றது.

2012 மற்றும் 2011 ஆகிய வருடங்கள் தொடர்பாக பதிவு செய்யப்பட்ட வரிக்கு முன்னரான இலாபம் மற்றும் வரிக்குப் பின்னரான இலாபம் என்பன கீழே எடுத்துக் காட்டப்படுகின்றன.




இலாப நிலை

	2007	2008	2009	2010	2011	2012
	5,002	5,664	6,076	8,771	15,600	15,249
	2,374	2,705	3,320	5,206	10,446	10,894

தேறிய வட்டி வருமானம்

வருடத்திற்கான வங்கியின் மொத்த வருமானம் (வட்டி மற்றும் ஏனையவை) ரூ. 94.8 பில்லியனாகும். இது 38.8% வளர்ச்சியை காட்டுகின்றது. 2012 ஆம் ஆண்டின் போது நிலவி வந்த உயர் வட்டி விகித சூழ்நிலை காரணமாக இது சாத்தியப்பட்டுள்ளது. தேறிய வட்டி வருமானம் ரூ. 3.6 பில்லியனால் அதிகரித்திருந்தது. முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் பொழுது இது 11.9% வளர்ச்சியாக இருந்து வருகின்றது. கடன்கள் மற்றும் கிடைக்க வேண்டிய தொகைகள் மற்றும் விலையிடல் என்பன வளர்ச்சிக்கான பிரதான பங்களிப்புக் காரணிகளாக இருந்து வந்தன.




தேறிய வட்டி வருமானம்

2007	2008	2009	2010	2011	2012
16,532	18,962	23,927	25,898	30,318	33,918

செயற்பாட்டு வருமானம்

செயற்பாட்டு வருமானம் ரூ. 6.9 பில்லியனால் அதிகரித்து, கடந்த ஆண்டை பார்க்கிலும் 18.9% வளர்ச்சியை காட்டியது. தேறிய வட்டி வருமானம், கட்டணங்கள், தரகுகள், வியாபார வருமானம் மற்றும் கடன்களுக்கான மதிப்புக் குறைவுச் சீராக்கம் மற்றும் ஏனைய நட்டங்கள் என்பவற்றை உள்ளடக்கும் தேறிய செயற்பாட்டு வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது வங்கி மட்டத்தில் 9.5% ஆலும், குழு மட்டத்தில் 8.6% ஆகவும் அதிகரித்திருந்தது. அந்நியச் செலாவணி வருமானம் மற்றும் பங்குகளின் வியாபாரம் என்பவற்றை உள்ளடக்கும் தேறிய வியாபார வருமானம் 124.7% ஆல் அதிகரித்திருந்தது. இது கடந்த வருடத்துடன் ஒப்பிடும் பொழுது கணிசமான ஒரு அதிகரிப்பாகவே இருந்து வருகின்றது. இது குறிப்பாக, ரூ. 918 மில்லியன் பெறுமதியான அந்நியச் செலாவணி ஆதாயங்களினால் தூண்டப்பட்டிருந்தது. 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் பொழுது ஏனைய செயற்பாட்டு வருமானம் ரூ. 1.3 பில்லியனால் அதிகரித்திருந்தது.




மொத்த செயற்பாட்டு வருமானம்

2007	2008	2009	2010	2011	2012
21,442	24,456	30,635	31,897	36,431	43,310

செயற்பாட்டுச் செலவுகள்

செயற்பாட்டுச் செலவுகள் 18.4% வளர்ச்சியை காட்டியதுடன், அது கடந்த வருடத்தின் அளவையும் பார்க்க ரூ. 3.8 பில்லியன் உயர்வாக இருந்த வந்தது. 2012 - 14 கூட்டு உடன்படிக்கையின் பிரகாரம் நிரந்தர ஊழியருக்கு வழங்கப்பட்ட சம்பள அதிகரிப்பினால் தூண்டப்பட்ட அதிகரித்த அளவிலான ஆளணிச் செலவுகள் காரணமாக இது இடம்பெற்றிருந்தது. இந்தச் செலவு ரூ. 3.3 பில்லியனாகும்.



செயற்பாட்டுச் செலவுகள்

2007	2008	2009	2010	2011	2012
15,735	17,159	19,719	21,305	20,421	24,186

கடன்கள் மற்றும் ஏனைய நட்டங்களுக்கான மதிப்பு குறைவு


முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் பொழுது மதிப்புக் குறைவுக்கான ஒதுக்கு ரூ. 3.5 பில்லியனால் அதிகரித்திருந்தது. இந்த ஒதுக்கு, தனிப்பட்ட விதத்தில் மதிப்பிடப்பட்ட கடன்கள் அதே போல கூட்டாக மதிப்பிடப்பட்ட கடன்கள் என்பவற்றை உள்ளடக்குவதுடன், வங்கியினால் முதல் தடவையாக பின்பற்றப்பட்ட இலங்கை கணக்கீட்டு தர நியமங்களின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

வரி செலுத்துதல்

இலாபம் மீதான நிதி வற் வரி முன்னைய ஆண்டின் மட்டங்களுக்கு இணையான விதத்தில் இருந்து வந்துள்ளது. இது 2011 இல் ரூ. 2.4 பில்லியனாகவும், 2012 இல் ரூ. 2.5 பில்லியனாகவும் இருந்தது. புதிய வரி வழிகாட்டுதல்கள் இன்னமும் முடிவாக்கப்படாதிருப்பதனால், வரிகள் மீதான தாக்கம் தற்போது பிரயோகிக்கத்தக்க வரிச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டுள்ளது.

வைப்புக்கள்

வங்கியின் வைப்பு அடித்தளம், 2011 ஆண்டில் ரூ. 550.2 பில்லியனுடன் ஒப்பிடும் பொழுது இவ்வருடம் ரூ. 684 பில்லியனாக இருந்து வந்தது. இது 24.3% வளர்ச்சியை பிரதிபலிக்கின்றது. இந்த வளர்ச்சிக்கான பிரதான பங்களிப்பு நிலையான வைப்புக்களிலிருந்து வந்துள்ளது. 2011 ஆம் வருடத்துடன் ஒப்பிடும் பொழுது நிலையான வைப்புக்களில் இவ்வருடத்தில் ரூ. 119 பில்லியன் அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. ஒட்டுமொத்த குறைந்த செலவு வைப்புக்கள் மொத்த வைப்புக்களின் 40% ஆக இருந்து வந்துள்ளன.




மொத்த வைப்புக்கள்

2007	2008	2009	2010	2011	2012
300,956	324,489	396,158	462,140	550,226	683,951

கடன்கள் மற்றும் கிடைக்க வேண்டிய தொகைகள்

2011 டிசம்பர் 31 இல் ரூ. 508.2 பில்லியனாக இருந்து வந்த மொத்த கடன்கள் மற்றும் கிடைக்க வேண்டிய தொகைகள் 30% ஆல் அதிகரித்து 2012 டிசம்பர் 31 இல் ரூ. 660.6 பில்லியனாக இருந்து வந்தன. இந்த அதிகரிப்புக்கு பங்களிப்புச் செய்த துறைகள் விவசாயம் மற்றும் கடற்றொழில், கட்டடவாக்கம், வியாபாரம் மற்றும் உற்பத்தித் துறைகள் என்பனவாகும்.

இலங்கை மத்திய வங்கியினால் பணிப்புரை வழங்கப்பட்டிருந்த 18% வளர்ச்சி உச்ச வரம்புக்கு மேல் கடன்கள் அதிகரித்துச் சென்றமைக்கான காரணம் அந்நியச் செலாவணி கடன்களில் ஏற்பட்ட வளர்ச்சி மற்றும் ஒரு சில அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட கடன்களில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பனவாகும்.




கடன்கள் மற்றும் கிடைக்க வேண்டிய தொகைகள்

2007	2008	2009	2010	2011	2012
253,370	263,462	299,077	371,804	508,235	660,624

மூலதனம் மற்றும் ஒதுக்குகள்

2012 ஆம் ஆண்டின் முடிவில், பிடித்து வைக்கப்பட்டுள்ள சம்பாத்தியங்களுடன் இணைந்த விதத்திலான மூலதனம் மற்றும் ஒதுக்குகள் ரூ. 29.2 பில்லியனாக இருந்து வந்தன. இது 2011 ஆம் வருடத்தில் ரூ. 23.1 பில்லியனாக இருந்து வந்தது.



மூலதனம் மற்றும் ஒதுக்குகள்

2007	2008	2009	2010	2011	2012
17,780	15,880	17,800	20,838	23,089	29,205

முதன்மை செயலாற்றுகை குறிகாட்டிகள்

2011 ஆம் ஆண்டின் 3.4% உடன் ஒப்பிடும் பொழுது, 2012 இல் வங்கியின் செயற்படாத கடன் விகிதம் 2.8% ஆக இருந்து வந்தது. கடன்கள் மற்றும் கிடைக்க வேண்டிய தொகைகள் என்பவற்றில் ஏற்பட்டிருந்த கணிசமான வளர்ச்சி மற்றும் செயற்படாத கடன்களில் ஏற்பட்டிருந்த எல்லை ரீதியான அதிகரிப்பு என்பவற்றின் காரணமாகவே இந்நிலைமை ஏற்பட்டிருந்தது. (முன்னைய இலங்கையின் கணக்கீட்டு தரநியமங்களின் அடிப்படையில்).

செலவு/வருமான விகிதம் 2011 இல் 56.1% ஆக இருந்து வந்ததுடன், 2012 இல் 55.8% ஆக சிறிதளவு குறைவடைந்திருந்தது. மாறத்தக்க மேந்தலைச் செலவுகள் தொடர்பாக வங்கி விவேகபூர்வமான செலவு முகாமைத்துவ முன்முயற்சிகளை தொடர்ந்தும் மேற்கொண்டு வந்ததமையினாலேயே பிரதானமாக இது ஏற்பட்டுள்ளது.

(வரிக்கு முன்) சொத்துக்கள் மீதான ஆதாயம் 2011 இல் 2.6% ஆக இருந்து வந்ததுடன், 2012 இல் 2.0% ஆக குறைவடைந்திருந்தது. வருடத்தின் இறுதிப் பகுதியின் போது

சொத்துக்களில் அவதானிக்கப்பட்ட பொருள்சார் அதிகரிப்பு காரணமாகவே இது ஏற்பட்டிருந்தது. 2012 இல் பதிவு செய்யப்பட்ட மூலதன நிறைவு விகிதம் 14.0% ஆகும்.

(இது தொடர்பான விரிவான மீளாய்வு பக்கங்கள் 108 தொடக்கம் 113 வரை தரப்பட்டுள்ள முதன்மை செயலாற்றுகை குறிகாட்டிகள் பகுப்பாய்வில் உள்ளது)

குறிப்பு: மேலே 2011 மற்றும் 2012 வருடங்கள் தொடர்பாக அறிக்கையிடப்பட்ட பெறுபேறுகள் 1.1.2012 தொடக்கம் அமுலுக்கு வந்த புதிய இலங்கை கணக்கீட்டு தரநியமங்களின்/இலங்கை நிதிசார் அறிக்கையிடல் தர நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட வங்கியின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிசார் கூற்றுக்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டவையாகும். 2008-2010 காலப் பிரிவுக்கான அறிக்கையிடப்பட்ட பெறுபேறுகள், 2011 டிசம்பர் 31 ஆந் திகதி க்கு முன்னர் அமுலில் இருந்து வந்த முன்னைய இலங்கை கணக்கீட்டு தரநியமங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட வங்கியின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிசார் கூற்றுக்களிலிருந்து பெறப்பட்டிருந்தன. வங்கி 2011 ஆம் ஆண்டுக்கான அதன் நிதிசார் கூற்றுக்களை புதிய இலங்கை கணக்கீட்டு தரநியமங்களின் பிரகாரம் உரிய விதத்தில் மீண்டும் குறிப்பிட்டுள்ளது.

துணை மற்றும் இணை நிறுவனங்களின் செயலாற்றுகை

பீப்பள்ஸ் டிரவல்ஸ் நிறுவனம்

நாங்கள் சாதனை மட்டங்களிலான இலாப வளர்ச்சியைப் பெற்றுக் கொண்டிருக்கும் மற்றுமொரு வருடத்தை பூர்த்தி செய்துள்ளோம். எரிபொருள் மற்றும் செலாவணி விலைகளின் தளம்பல் நிலை சவால்களை எடுத்து வந்த ஒரு பின்னணியில், கணிசமான அளவிலான எதிர்க்கணிய தாக்கங்கள் நிலவிய ஒரு சூழலில் நாங்கள் இந்த வளர்ச்சியை சாதித்துக் கொண்டுள்ளோம். அது தவிர உலகெங்கிலும் இடம்பெற்ற பூகோள ரீதியிலான பல நிகழ்வுகளும், அரசியல் நெருக்கடிகளும் இந்த தாக்கங்களை மேலும் தீவிரப்படுத்தியுள்ளன. முழு வருடத்திற்குமான செயற்பாட்டு இலாபத்தை பொறுத்தவரையில் நாங்கள் 60% அதிகரிப்பை பதிவு செய்து கொண்டுள்ளோம் என்பதனை இங்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். இது 8.66 மில்லியனாக இருந்து வந்தது (2010/11: 5.43 மில்.). வரிக்குப் பின்னரான இலாபம் முன்னைய ஆண்டின் ரூ. 3.98 மில்லியனிலிருந்து இவ்வாண்டில் ரூ. 7.72 மில்லியனாக அதிகரித்திருந்தது. இது 2010/11 காலப் பிரிவுடன் ஒப்பிடும் பொழுது, குறிப்பிடத்தக்க 94% வளர்ச்சியை காட்டுகின்றது. எமது வருமானத்தில் நாங்கள் குறிப்பிடத்தக்க செயலாற்றுகையை பதிவு செய்துள்ளோம். இது ரூ. 27.11 மில்லியனாக இருந்து வந்தது. இந்த செயலாற்றுகை வளர்ச்சி விடுமுறை சுற்றுலாக்கள், விமான பயணச் சீட்டு விற்பனைகள் மற்றும் விமான பயணச் சீட்டுக்களின் மீது மேற்கொள்ளப்பட்ட விசேட தரகுக் கட்டணங்கள் என்பவற்றால் ஏற்பட்டிருந்தன.

விமான பயணச் சீட்டு விற்பனைகள்

இவ்வருடத்தின் போது, நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் ஆகியோருக்கான விமான பயணச் சீட்டுக்கள் விற்பனையிலிருந்து நாங்கள் ரூ. 14.28 மில்லியனை வரிக்கு முன்னரான இலாபமாக பெற்றுக் கொண்டுள்ளோம். இது முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் பொழுது 58% அதிகரிப்பை காட்டுகின்றது. ஒட்டுமொத்தமாக வருடத்திற்கான எமது பெறுபேறுகள், சந்தையை உரிய விதத்தில் அடையாளங் கண்டு, அதற்கேற்ற விதத்தில் செயலாற்றக் கூடிய அறிவையும், ஆற்றலையும் கொண்டிருக்கும் எமது உறுதியான ஊழியர் அணியினரின் செயற்பாட்டை எடுத்துக் காட்டுகின்றன. நாங்கள் ஆற்றலை முனைப்பான விதத்தில் முகாமைத்துவம் செய்திருப்பதுடன், கொந்தளிப்புக்கள் நிறைந்த கால கட்டம் முழுவதிலும் வெற்றிகரமான ஒரு பயணத்தை முன்னெடுத்துச் சென்றுள்ளோம். அடுத்து வரும் ஆண்டில் மேலும் அதிக அளவிலான வளர்ச்சியை இலக்காகக் கொண்டுள்ளோம்.

தம்பதிவ யாத்திரைகள்

கடந்த பல வருடங்களின் போது தம்பதிவ யாத்திரைகள் எமது முதன்மை வருமான மூலமாக இருந்து வந்துள்ளன. இவ்வருடத்தில் தம்பதிவ யாத்திரைகளிலிருந்து கிடைக்கும் வருமானத்தில் ஒரு வீழ்ச்சி அவதானிக்கப்பட்டிருந்தது. விமானக் கட்டணங்கள், ஹோட்டல் கட்டணங்கள் என்பவற்றில் ஏற்பட்டிருந்த அதிகரிப்புக்கள் மற்றும் நாணய தளம்பல் நிலைமைகள் என்பனவே இதற்கான காரணமாகும். சொகுசு தம்பதிவ யாத்திரைகளை மேற்கொள்வதில் நாங்கள் தொடர்ந்தும் சந்தையில் தலைமை ஸ்தானத்தை தக்கவைத்துக் கொண்டிருப்பதுடன், 2011/12 நிதியாண்டு தொடர்பாக 514 பயணிகள் தொடர்பாக 18 சுற்றுலாக்களை ஏற்பாடு செய்திருந்தோம். இதன் மூலம் கிடைத்த வரிக்கு முன்னரான இலாபம் ரூ. 5.98 மில்லியனாகும். எமது தம்பதிவ யாத்திரையின் பிரபல்யத்துக்கான பிரதான காரணம் ஈடிணையற்ற உயர் தரங்களைக் கொண்ட சேவைகளை வழங்குவதற்கென நாம் எம்மை அர்ப்பணித்துக் கொண்டிருப்பதேயாகும்.


உல்லாச பிரயாணம்

எமது முதன்மை உல்லாசப் பயணச் சந்தை கடினமான பொருளாதார சூழலொன்றில் மறுமலர்ச்சியை காட்டியுள்ளது. நாங்கள் தொடர்ந்தும் எமது திட்டங்களை நவீனமயப்படுத்தி வந்துள்ளோம். நுகர்வோரின் முன்னுரிமைகளுக்கு இணங்கிய விதத்திலான சேவைகளை நாங்கள் வழங்கி வருகின்றோம். மிகவும் வித்தியாசப்படுத்தப்பட்ட பிரத்தியேகமான திட்டங்களையும், அதேபோல காலப் பிரிவு அடிப்படையிலான நெகிழ்ச்சித்தன்மைகளையும் நாங்கள் உள்ளடக்கியுள்ளோம். அனைத்தையும் அடக்கிய எமது விடுமுறைப் பயணங்கள் குறிப்பாக பிரபல்யமடைந்துள்ளன. தாம் செலவிடும் ஒட்டுமொத்த விடுமுறையின் போது நிதி நிலைமை குறித்த ஒரு நிச்சய நிலையை பிரயாணிகள் எதிர்ப்பார்ப்பது இதற்கான காரணமாகும். வழிகாட்டுதல்களுடன் நடத்தப்படும் பக்கேஜ் சுற்றுலாக்கள் எமது இப்பிரிவு தொடர்பான திட்டங்களின் முக்கியமான ஒரு பாகமாக இருந்து வருகின்றன.

செயலாற்றுகையை பொறுத்தவரையில் நாங்கள் இவ்வாண்டில் உச்ச மட்ட வருமானமான ரூ. 4.27 மில்லியனை பதிவு செய்துள்ளோம். சீனாவுக்கான நாலு குழுக்கள், சிங்கப்பூர்/மலேசியாவுக்கான மூன்று சுற்றுலாக்கள், பாங்கொக்குக்கு இரண்டு சுற்றுலாக்கள், மியான்மாருக்கான இரண்டு சுற்றுலாக்கள் என்பவற்றை நாங்கள் நடத்தியதுடன், இதில் 422 வாடிக்கையாளர்கள் பங்கேற்றார்கள். எமது புதிய செல்லிடமாக வியட்நாம் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது. தனித்துவமான வித்தியாசமான எமது திட்டங்களின் மூலம் எமது வாடிக்கையாளர்களுக்கு புதிய சேவைகளை வழங்கும் பொருட்டு ஏனைய சுற்றுலா இடங்களை அறிமுகம் செய்து வைப்பதற்கு நாங்கள் தொடர்ந்து முயற்சி செய்து வருகின்றோம். ஐரோப்பா, அவுஸ்திரேலியா மற்றும் ஐக்கிய இராச்சியம் என்பன இந்த விடயத்தில் பெருமளவுக்கு வாய்ப்புக்களை கொண்டுள்ளன என நாம் நம்புகின்றோம். இலங்கையர்கள் பெரிதும் விரும்பும் சுற்றுலா இடங்களாக அவை இருந்து வருவது இதற்கான காரணமாகும்.

பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி

மக்கள் வங்கியின் ஒரு துணை நிறுவனமான பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி இலங்கையின் மிகப் பெரிய லிசிங் கம்பெனியாக இருந்து வருவதுடன், சுமார் ஒரு தசாப்த காலமாக சந்தையில் தலைமை ஸ்தானத்தை தக்க வைத்துக் கொண்டுள்ளது. மக்கள் வங்கிக்கு முழுவதும் உரித்தான ஒரு தனியார் வரையறுக்கப்பட்ட கம்பெனியாக 1995 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட ஒரு துணை நிறுவனமான இக்கம்பெனி 2000 ஆம் ஆண்டில் வரையறுக்கப்பட்ட பொறுப்பு



பிரிவு ரீதியான வருமானம்

வங்கித்தொழில் (இடது அச்சு) | குத்தகை (இடது அச்சு) | பிரயாணங்கள் (வலது அச்சு)

	2007	2008	2009	2010	2011	2012
	47,984	58,948	69,050	62,818	68,298	94,777
	4,624	6,063	7,265	9,094	13,356	17,882
	19	21	21	23	27	31

பொதுக் கம்பெனியாக மாற்றியமைக்கப்பட்டது. அதன் பின் அது ஒரு புதிய கம்பெனி அடையாளத்தை பெற்றுக் கொண்டது. பீப்பள்ஸ் லீசிங் கம்பெனி இப்பொழுது இத்தொழில்துறை சந்தையின் தலைமை ஸ்தானத்தை பெற்றுக் கொண்டிருப்பதுடன், சுமார் 20% க்கு மேற்பட்ட சந்தைப் பங்கை கொண்டுள்ளது. இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட மிகவும் வெற்றிகரமான பொது மக்களுக்கான பங்கு வெளியீடு காரணமாக கொழும்பு பங்கு பரிவர்த்தனையில் இரண்டாவது மிகப் பெரிய பட்டியலிடலான 1,560,000,060 சாதாரண பங்குகளை அது பெற்றுக் கொண்டது. இக்கம்பெனியின் பெயர் வரையறுக்கப்பட்ட பீப்பள்ஸ் லீசிங் என்பதிலிருந்து பீப்பள்ஸ் லீசிங் பிஎல்சி என மாற்றியமைக்கப்பட்டது. 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதி வணிக சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கி நாணய சபையிடமிருந்து நிதி வணிகத்திற்கான உரிமத்தைப் பெற்றுக் கொண்டதனையடுத்து, இக்கம்பெனியின் கம்பெனித் துறை அடையாளம் பீப்பள்ஸ் லீசிங் கம்பெனி என்ற பெயரிலிருந்து பீப்பள்ஸ் லீசிங் பினான்ஸ் பிஎல்சி என மாற்றியமைக்கப்பட்டது.

இக்கம்பெனி ஆரம்பத்தில் ரூபாய் 10 மில்லியன் மூலதனம் மற்றும் மூன்று ஊழியர்களுடன் அதன் வர்த்தகச் செயற்பாடுகளை தொடர்கிறது. இன்று பீப்பள்ஸ் லீசிங் அண்ட் பினான்ஸ் பிஎல்சி நிதிக் குத்தகைகளை வழங்கல், வாடகை கொள்வனவு, தவணைக் கடன்கள் மற்றும் வைப்புக்கள் என்பன தொடர்பான அவற்றிற்குரிய முதன்மையான செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்கின்றது. பீப்பள்ஸ் லீசிங் அண்ட் பினான்ஸ் பிஎல்சி இலங்கை பிணைப்பத்திரங்கள் பரிவர்த்தனையிலிருந்து பெறப்பட்ட உரிமத்தின் கீழ் எல்லை வீதங்களை வழங்கும் ஒரு நிறுவனமாகவும் செயற்பட்டு வருகின்றது.

குறுகிய காலப் பிரிவின் போது பீப்பள்ஸ் லீசிங் அண்ட் பினான்ஸ் பிஎல்சி மிகவும் வெற்றிகரமான விதத்தில் ஆறு துணை நிறுவனங்களை ஸ்தாபித்துக் கொண்டுள்ளது. அவையாவன: பீப்பள்ஸ் பினான்ஸ் பிஎல்சி, பீப்பள்ஸ் இன்சூரன்ஸ் லிமிட்டட், பீப்பள்ஸ் லீசிங் அண்ட் பிளீட் மனேஜ்மன்ட் லிமிட்டட், பீப்பள்ஸ் லீசிங் புரொப்பர்ட்டி டெவலெப்மன்ட் லிமிட்டட், பீப்பள்ஸ் லீசிங் ஹெவ்லொக் புரொப்பர்ட்டிஸ் லிமிட்டட், பீப்பள்ஸ் மைக்ரோ பினான்ஸ் லிமிட்டட். காப்புறுதி, நிதி, நுண்நிதி, ஆதன அபிவிருத்தி, வாகனத் தொகுதி முகாமைத்துவச் சேவைகள் என்ற பல்வேறு பிரிவுகளில் அது தன் செயற்பாடுகளை தக்கவைத்துக் கொண்டுள்ளது. பீப்பள்ஸ் லீசிங் அண்ட் பினான்ஸ் பிஎல்சி, பீப்பள்ஸ் பினான்ஸ் பிஎல்சி யின் 90.45% பங்குகளை கொண்டிருப்பதுடன், ஏனைய கம்பெனிகள் அனைத்தும் இதற்கு முழுமையாக சொந்தமான துணை நிறுவனங்களாக இருந்து வருகின்றன.

நிதிசார் செயலாற்றுகை

உலகளாவிய போக்குடன் இணைந்த விதத்திலும், இலங்கையின் நிதிசார் அறிக்கைகளின் ஆளுகை நிறுவனமான இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் பணிப்புரைகளுக்கு இணைந்த விதத்திலும் பீப்பள்ஸ் லீசிங் அண்ட் பினான்ஸ் பிஎல்சி இலங்கை நிதிசார் அறிக்கைகள் தரநியமங்கள் மற்றும் இலங்கை கணக்கீட்டு தரநியமங்கள் என்பவற்றுக்கு இணங்கியொழுகும் விதத்தில் சர்வதேச நிதிசார் அறிக்கையிடல் தரநியமங்களை (IFRS) பின்பற்றியுள்ளது. அதன் பிரகாரம், 2011 கலண்டர் வருடம் தொடர்பான ஒப்பீட்டு தகவல்கள் புதிய சர்வதேச நிதிசார் அறிக்கையிடல் தர நியமங்களின் பிரகாரம் மீள எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

சர்வதேச நிதிசார் அறிக்கையிடல் தரநியமங்களுக்கு இணங்கிய விதத்தில் சீராக்கம் செய்யப்பட்ட அறிக்கைகளின் பிரகாரம், பீப்பள்ஸ் லீசிங் அண்ட் பினான்ஸ் பிஎல்சி 2012 ஆம் வருடம் தொடர்பாக ரூ. 14.1 பில்லியன் வட்டி வருமானத்தை பெற்றுக் கொண்டுள்ளது. இது முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் பொழுது 27% அதிகரிப்பை காட்டுகின்றது. தேறிய வட்டி வருமானம் 2012 இல் ரூ. 6.1 பில்லியனாக அதிகரித்ததுடன், இது முன்னைய வருடத்தில் ரூ. 5.4 பில்லியனாக இருந்து வந்தது. எனவே, கம்பெனி திருப்திகரமான வரிக்குப் பின்னரான இலாபம் மற்றும் வரிக்கு முன்னரான இலாபம் என்பவற்றை பதிவு செய்து கொண்டிருந்ததுடன், அது 2012 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிவடைந்த வருடம் தொடர்பாக முறையே ரூ. 3.8 பில்லியனாகவும், ரூ. 2.6 பில்லியனாகவும் இருந்து வந்தது.

பன்முகப்படுத்தப்பட்ட பீப்பள்ஸ் லீசிங் குழுமத்தின் வட்டி வருமானம் முன்னைய வருடத்தில் பதிவு செய்யப்பட்ட வட்டி வருமானமான ரூ. 12.5 பில்லியனிலிருந்து 2012 இல் 16.6 பில்லியனாக அதிகரித்திருந்தது.

2012 ஆம் வருடம் தொடக்கம் லீசிங் தொழில் துறையின் பிரதான பேரண்ட பொருளாதார தூண்டிகள் ஒரு சாதகமற்ற போக்கை எதிர்கொண்டிருந்த நிலையில், கம்பெனி அதன் கடனளிப்பு உச்ச வரம்பை சுமார் ரூ. 32.1 பில்லியனாக சாதித்துக் கொண்டிருந்தது. எவ்வாறிருப்பினும், கட்டண விகிதங்களின் இறங்குமுகமான திருத்தம் மற்றும் 2012 இன் முடிவில் கடன் கட்டுப்பாடு முடிவுக்கு கொண்டு வரப்பட்டமை என்பன காரணமாக லீசிங் தொழிற்துறை சிறந்த கால கட்டங்களை எதிர்கொண்டது. மேலும், மாற்றமடைந்திருக்கும் கொள்கை வழிமுறைகளிலிருந்து கம்பெனி அனுகூலங்களை பெற்றுக் கொள்ள முடியுமென்பதிலும் சந்தேகமில்லை. மொத்தச் சொத்துக்களின் 91% ஆக இருந்து வரும் கம்பெனியின் வட்டி உழைக்கும் சொத்துக்கள்,

முன்னைய வருடத்தின் ரூ. 70 பில்லியனிலிருந்து 2012 டிசம்பர் 31 இல் ரூ. 72.0 பில்லியனாக அதிகரித்திருந்தன. குழுமத்தின் மொத்தச் சொத்துக்கள் 2011 இல் ரூ. 93.6 பில்லியனிலிருந்து 2012 இல் ரூ. 96.3 பில்லியனாக, 2.9% ஆல் அதிகரித்திருந்தன.

டிசம்பர் 31, 2012 இல் கம்பெனியின் செயற்படாத கடன் விகிதம் 1.17% ஆகும். இந்த விகிதம் லீசிங் தொழில் துறையின் சராசரியிலும் பார்க்க பெருமளவுக்கு குறைவாக இருந்து வருகின்றது. இலங்கை மத்திய வங்கியின் அண்மைய ஆண்டறிக்கையின் பிரகாரம் லீசிங் தொழில் துறையின் செயற்படாத கடன்கள் சுமார் 5% ஆக இருந்து வருகின்றன.

பங்குதாரர்களுக்கு பெறுமதியை உருவாக்கும் கம்பெனி 2011-12 நிதி வருடம் தொடர்பாக பங்கொன்றுக்கு ரூ. 0.50 இறுதி பங்கிலாபத்தை செலுத்தியிருப்பதுடன், இது ரூ. 780 மில்லியனாக இருந்து வந்தது. பங்கொன்றுக்கு ரூ. 0.75 ஒரு இடைக்கால பங்கிலாபம் 2012-13 நிதி வருடம் தொடர்பாக 2012 டிசம்பர் மாதத்தில் செலுத்தப்பட்டது. இவ்விதம் செலுத்தப்பட்ட மொத்தத் தொகை ரூ. 1.2 பில்லியனாகும். இது பங்குதாரர்களின் செல்வத்தை மேலும் உயர்த்தியது. இதன் தாய் கம்பெனியான மக்கள் வங்கி கலண்டர் வருடத்தின் போது செலுத்தப்பட்ட மொத்த பங்கிலாபமான ஒரு 2.0 பில்லியனில் ரூ. 1.5 பில்லியன் தொகையை பெற்றுக் கொள்வதற்கான உரித்தினைக் கொண்டுள்ளது.

பீப்பள்ஸ் லீசிங் அண்ட் பினான்ஸ் பிஎல்சி தாய் கம்பெனியான மக்கள் வங்கியின் மிகச் சிறந்த முதலீட்டு முன்னுரிமையாக காணப்படுகின்றது. மக்கள் வங்கி இதில் ரூ. 1.2 பில்லியன் பங்குகளை கொண்டிருப்பதுடன், இதன் முதலீட்டுப் பெறுமதி ரூ. 15.5 பில்லியனாக இருந்து வருகின்றது. இது 2012 டிசம்பர் 31 இல் முதலீட்டுச் செலவான ரூ. 500 மில்லியனுக்கு எதிராக ரூ. 15 பில்லியன் அதிகரிப்பை காட்டுகின்றது.

துணை நிறுவனங்கள் தொடர்பான மீளாய்வு (பீப்பள்ஸ் லீசிங் அண்ட் பினான்ஸ் பிஎல்சி யின் துணை நிறுவனங்கள்)

பீப்பள்ஸ் பினான்ஸ் பிஎல்சி

பீப்பள்ஸ் பினான்ஸ் கம்பெனியின் சொத்து தொகுப்பு பரவலான விதத்தில் லீசிங் (43%), வாடகை கொள்வனவு (30%) ஏனைய கடன்கள் மற்றும் முற்பணங்கள் (13%) என்பவற்றை கொண்டுள்ளது. இது ரூ. 13 பில்லியனாக இருந்து வந்தது. அதே வேளையில், 2012 டிசம்பர் 31 இல் மொத்தச் சொத்துக்கள் ரூ. 15 பில்லியனாக இருந்து வந்தன.

வருடத்தின் போது பீப்பள்ஸ் பினான்ஸ் நிறுவனத்தின் தரக் குறியீடுகள் பிட்ச் ரேட்டிங் லங்கா நிறுவனத்தினால் இரு தடவைகள் தரமுயர்த்தப்பட்டன. பெப்ரவரி 2012 இல் BBB+ (டமய) இலிருந்து A-(lka) ஆகவும், 2012 ஜூலை மாதத்திலிருந்து A-(lka) உறுதியான தோற்றம் நிலையிலிருந்து A (lka) ஆகவும் தரமுயர்த்தப்பட்டன.

கம்பெனி 2012-13 நிதியாண்டு தொடர்பாக 2012 ஜூன் மாதம் 29 ஆந் திகதி பங்கொன்றிற்கான இடைக்கால பங்கிலாபமாக ரூ. 2.50 ஐ பிரகடனம் செய்து, செலுத்தியது.

பீப்பள்ஸ் இன்சுரன்ஸ் லிமிடட்

முழுமையாக சொந்தமான பீப்பள்ஸ் இன்சுரன்ஸ் லிமிடட் 2009 ஆம் ஆண்டில் கூட்டிணைக்கப்பட்டது. எழுதப்பட்ட மொத்த காப்புறுதிக் கட்டண வருமானத்தின் அடிப்படையில் நாட்டின் பொதுக் காப்புறுதித் துறையில் அது ஐந்தாம் ஸ்தானத்தை பெற்றுக் கொள்ளும் விதத்தில் துரிதமாக வளர்ச்சி கண்டுள்ளது. 2011 ஆம் ஆண்டில் அது ஆறாவது ஸ்தானத்தில் இருந்தது. பீப்பள்ஸ் இன்சுரன்ஸ் லிமிட்டட் தற்பொழுது, பீப்பள்ஸ் லீசிங் குழுமத்தின் வாடிக்கையாளர்களுக்கு பொதுக் காப்புறுதி வசதிகளை வழங்கி வருகின்றது.

பீப்பள்ஸ் மைக்ரோ பினான்ஸ் லிமிடட்

பீப்பள்ஸ் லீசிங் நிதிச் சேவைகளை இலங்கையில் வாழ்ந்து வரும் குறை வருமானச் சமூகங்களுக்கு எடுத்துச் செல்லும் பிரதான நோக்கத்துடன் பீப்பள்ஸ் மைக்ரோ பினான்ஸ் லிமிட்டட் ஸ்தாபிக்கப்பட்டது. இக்கம்பெனி நாடு முழுவதிலும் 23 பிஎல்சி கிளைகளுக்கூடாக செயற்பட்டு வருவதுடன், 2012 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடம் தொடர்பாக ரூ. 12.06 மில்லியன் இலாபத்தை ஈட்டிக் கொண்டுள்ளது.

பீப்பள்ஸ் லீசிங் புரொப்பர்ட்டி டெவலொப்மன்ட் லிமிடட்

பீப்பள்ஸ் லீசிங் புரொப்பர்ட்டி டெவலொப்மன்ட் லிமிடட் இவ்வருத்தின் போது, பீப்பள்ஸ் லீசிங் பிஎல்சி தலைமை அலுவலகத்தை அடுத்துள்ள பயன்பாட்டு கட்டடத்தின் நிர்மாணத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்தது. இக்கட்டடம் ஒரு அழைப்பு நிலையம், சிற்றுண்டிச்சாலை மற்றும் ஒரு உடற்பயிற்சி நிலையம் என்பவற்றை கொண்டிருப்பதுடன், ஊழியர்களின் சேமநலனுக்கு கணிசமான அளவிலான பங்களிப்பினை வழங்கியுள்ளது. இது தவிர, வவுனியா கருத்திட்டத்தின் கட்டம் ஐ மற்றும் தங்காலை கருத்திட்டம் என்பனவும் இவ்வருடத்தின் போது பூர்த்தி செய்யப்பட்டன. பிலியந்தலை, வில்கமுவ மற்றும் ஆனமடுவ கருத்திட்டங்கள் அடுத்த வருடத்திற்குள் பூர்த்தியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

வ.ப. பீப்பள்ஸ் லீசிங் பீளீட் மனேஜ்மன்ட்

இக்கம்பெனி செயற்பாட்டு குத்தகை வசதிகள், வாகன வாடகை வசதிகள், வாகன சேவை மற்றும் பெறுமதி மதிப்பீடு என்பவற்றில் ஈடுபட்டு வருவதுடன், வாகன விற்பனை அலகொன்றையும் ஸ்தாபிப்பதற்கு திட்டமிட்டுள்ளது.

பீப்பள்ஸ் லீசிங் ஹெவ்லொக் புரொப்பர்ட்டிஸ் லிமிடட்

பீப்பள்ஸ் லீசிங் ஹெவ்லொக் புரொப்பர்ட்டிஸ் லிமிடட் 2010 ஆம் ஆண்டில் கூட்டிணைக்கப்பட்டது. அலுவலக கட்டடத் தொகுதியொன்றை நிர்மாணிப்பதே அதன் முதன்மையான குறிக்கோளாகும். செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கென இக்கம்பெனி கட்டட திட்டத்திற்கான ஒப்புதல் கிடைக்கும் வரை காத்திருக்கின்றது.

விருதுகள் மற்றும் புகழாரங்கள்

பீப்பள்ஸ் லீசிங் கம்பெனி தொடர்ந்தும் ஐந்தாவது வருடமாக லீசிங் துறையின் மிகச் சிறந்த ஆண்டறிக்கைக்கான தங்க விருதினை தக்கவைத்துக் கொண்டுள்ளது. இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் 2012 இல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வருடாந்த அறிக்கைக்கான விருது வைபவத்தில் இந்தப் பெருமை மிகு விருதை அது பெற்றுக் கொண்டது. அதன் தாய் நிறுவனமான பீப்பள்ஸ் லீசிங் கம்பெனியின் காலடிச் சுவடுகளைப் பின்பற்றி நிதித் துறையிலும் தங்க விருதினை பெற்றுக் கொண்டது. முன்னர் வழங்கப்பட்ட வெள்ளி மற்றும் வெண்கல விருதுகளிலிருந்து உயரளவிலான முன்னேற்றங்களை இது எடுத்துக் காட்டுகின்றது. மேலும், பீப்பள்ஸ் பினான்ஸ் பிஎல்சி ஒட்டுமொத்த முகாமைத்துவப் பிரிவில் முதல் தடவையாக வரலாற்றில் வெண்கல விருதை வென்றது.

கம்பெனியின் ஆண்டறிக்கை, அமெரிக்க தொடர்பாடல் மற்றும் தொழில் வல்லுனர்களால் (LACP) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த உலகளாவிய தொடர்பாடல் போட்டியில் நிதித் துறை தொழில் பிரிவில் பிளாட்டினம் விருதினை வென்றது. உலகளாவிய ரீதியில் சமர்ப்பிக்கபட்டிருந்த சுமார் 1,500 விண்ணப்பங்களிலிருந்து கம்பெனி இந்த புகழாரத்தை வென்றிருக்கும் விடயத்தை கவனிக்கும் பொழுது, இது நிச்சயமாக சர்வதேச ரீதியிலான மிகப் பெரிய ஒரு பாராட்டாக இருந்து வருகின்றது. மேலும், இந்த ஆண்டறிக்கை உலகளாவிய ரீதியிலான மிகச் சிறந்த 100 ஆண்டறிக்கையில் ஐந்தாவது இடத்திலும் வரிசைப்படுத்தப்பட்டிருந்தது.

பீப்பள்ஸ் லீசிங் கம்பெனி இலங்கை வர்த்தக சம்மேளத்தினால் நாட்டில் செயற்பட்டு வரும் பத்து மிகச் சிறந்த நிறுவனப் பிரஜைகளில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டிருப்பதுடன், ரூ. 15 பில்லியனுக்கு குறைந்த வருவாய் பிரிவில் இரண்டாவது ஸ்தானத்தையும் பெற்றுக் கொண்டுள்ளது.

மேலும் இக்கம்பெனி செயலாற்றுகை முகாமைத்துவ நடைமுறைகளில் உன்னத சாதனைக்கான விருதினையும் பெற்றுக் கொண்டுள்ளது. இது தேசிய வர்த்தக சம்மேளத்தினால் சிறந்த செயலாற்றுகைக்கென வழங்கப்பட்டு வரும் ஆறு விருதுகளில் ஒன்றாகும். மேலும், இக்கம்பெனி வங்கித்தொழில் சாராத மற்றும் நிதித் துறை பிரிவில் கூட்டு வெற்றியாளராகவும் இருந்து வந்தது.

இவ்வருடத்தின் போது, பிட்ச் ரேட்டிங் லங்கா நிறுவனம் பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி தேசிய நீண்ட கால தரக் குறியீட்டினை A+ (lka), இலிருந்து AA- (lka) ஆக தரமுயர்த்தியது. கம்பெனியின் உறுதியான ஸ்தானத்தை இது மீள வலியுறுத்துகின்றது. சர்வதேச தரக் குறியீடுகளை பெற்றுக் கொண்ட இலங்கையின் ஒரேயொரு வங்கித்தொழில் சாராத நிதி நிறுவனம் என்ற பெருமையையும் இக்கம்பெனி ஈட்டிக் கொண்டது. ஸ்டான்ட்ர்ட் அன்ட் புவர்ஸ் நிறுவனம் இக்கம்பெனிக்கு தங்க ('B+/B') தரக் குறியீட்டினை வழங்கியதுடன், பிட்ச் ரேட்டிங் இன்டர்நெஷனல் நிறுவனம் சவரிங் (B+) தரக் குறியீட்டுக்கு ஒரு புள்ளி குறைவான தரக் குறியீட்டினை வழங்கியது. இவை இரண்டும் திட்டவட்டமான சாதனைகளாகும்.

பீப்பள்ஸ் மேர்ச்சண்ட் பினான்ஸ் பிஎல்சி

பீப்பள்ஸ் மேர்ச்சண்ட் பினான்ஸ் பிஎல்சி மக்கள் வங்கியின் ஒரு துணை நிறுவனமாகும். மக்கள் வங்கி அதன் துணை நிறுவனமான பீப்பள்ஸ் லீசிங் கம்பெனியுடன் இணைந்து இதில் கூட்டாக 39.2% பங்குகளை கொண்டுள்ளது. இது 2012, ஏப்ரல் மாதத்தில் இலங்கை மத்திய வங்கியிடமிருந்து அதற்கான நிதிக் கம்பெனி உரிமத்தை பெற்றுக் கொண்டது. மேலும், இக் கம்பெனி ஒரு எல்லை வியாபார நிறுவனம் என்ற முறையில் இலங்கை பிணையம் மற்றும் பரிமாற்ற ஆணைக்குழுவின் உரிமத்தையும் பெற்றுக் கொண்டுள்ளது. தற்பொழுது அது பிட்ச ரேட்டிங் நிறுவனம் வழங்கியிருக்கும் BB+ (உறுதியானது) தரக் குறியீட்டை கொண்டிருப்பதுடன், லீசிங் வாடகைக் கொள்வனவு, வியாபார நிதி, கம்பெனித்துறை நிதி, மெய்யாதனம், எல்லை வீத கடனளிப்பு மற்றும் தங்கக் கடன்கள் என்பவற்றை உள்ளடக்கிய பரந்த வீச்சிலான நிதிச் சேவைகளை அதன் தொகுதி அலுவலகங்கள் ஊடாகவும் பதினொரு கிளைகளின் வலையமைப்புக் ஊடாகவும் வழங்கி வருகின்றது.

பீப்பள்ஸ் மேர்ச்சன்ட பினான்ஸ் பிஎல்சி ஒரு நிதிக் கம்பெனியாக அதன் உரிமத்தைப் பெற்றுக் கொண்ட பின்னர் செயற்பாடுகளுக்கு ஆதரவளிக்கும் பொருட்டு நிதிகளை திரட்டுவதற்கென நிலையான வைப்புக்கள் மற்றும் சேமிப்புக் கணக்குகள் என்பவற்றை அறிமுகம் செய்து வைத்துள்ளது. அந்நியச் செலாவணி கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவதற்கு இலங்கை மத்திய வங்கியின் அனுமதியை பெற்றுக் கொண்ட பின்னர் இக்கம்பெனி வெளிநாட்டில் வாழ்பவர்கள் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை கவர்ந்திழுக்கும் பொருட்டு விசேட வெளிநாட்டு கணக்கு வைப்புக்களை அறிமுகம் செய்து வைத்துள்ளது. செயல்திறனை உச்ச மட்டத்திற்கு எடுத்து வருவதற்கும், புதிய வியாபாரத் துறைகளை சிறப்பான விதத்தில் முகாமைத்துவம் செய்வதற்குமென ஒரு புதிய நிறுவனக் கட்டமைப்பும் ஸ்தாபிப்பட்டுள்ளது. எதிர்பார்க்கப்படும் விரிவாக்கப்பட்ட வணிகத் தொகுப்புக்களை கையாள்வதற்கென அனுபவம் வாய்ந்த தொழில்சார் வல்லுனர்கள் இக்கம்பெனியின் ஊழியர்களாக இருந்து வருகின்றார்கள்.

2011 ஆம் வருடத்தில் ரூ. 523 மில்லியனாக இருந்து வந்த வட்டி வருமானம், 2012 ஆம் ஆண்டில் 5% ஆல் ரூ. 548 மில்லியனாக அதிகரித்திருந்தது. முன்னைய வருடத்தில் ரூ. 166 மில்லியனாக இருந்து வந்த ஏனைய வருமானம் 2012 இல் 40 மில்லியனாக குறைவடைந்திருந்தது. துணை நிறுவனமான நிதிக் கம்பெனியை கையுதிர்ப்பதற்கூடாக உருவாக்கப்பட்ட இலாபம் காரணமாக முன்னைய வருடத்தில் ஏனைய வருமானம் ரூ. 137.4 மில்லியனாக உயர்வானதாக இருந்து வந்தது. இதன் காரணமாக தேறிய வருமானமும் முன்னைய ஆண்டில் ரூ. 326 மில்லியனிலிருந்து இவ்வாண்டில் ரூ. 232 மில்லியனாக குறைவடைந்திருந்தது. வருடத்தின் போது நிலவி வந்த அதிகரித்த அளவிலான வட்டி விகிதங்களின் விளைவாக பழைய கடன்கள் தொடர்பான ஆதாயம் குறைவடைந்தது. ஏனெனில், நிதிப்படுத்தலுக்கென கம்பெனி குறுங்கால கடனெடுப்புக்களில் தங்கியிருந்தது. 2012 ஆம் ஆண்டில் பீப்பள்ஸ் மேர்ச்சன்ட் பிஎல்சி நீண்ட காலமாக நிலுவையிலிருந்து வரும் செயற்படாத கடன்களுக்கென மேலதிக ஒதுக்குகளை மேற்கொண்டது. இதன் விளைவாக, வருடத்திற்கென ரூ. 132 மில்லியன் ஒதுக்கொன்றை மேற்கொள்ள வேண்டியிருந்தது. இதன் காரணமாக, இக்கம்பெனி முன்னைய வருடத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த ரூ. 111 மில்லியன் இலாபத்துக்கு பதிலாக இவ்வருடத்தில் ரூ. 196 மில்லியன் நட்டத்தை பதிவு செய்திருந்தது.

குழுமச் சொத்துக்கள் வருட இறுதியில் 36% ஆல் அதிகரித்து ரூ. 4.3 பில்லியனாக இருந்து வந்தன. இது 2011 இன் முடிவில் ரூ. 3.2 பில்லியனாக காணப்பட்டது. நிதிக் குத்தகைகள், எல்லை வியாபாரம் மற்றும் அடகுக் கடன்கள் என்பன வருடத்தின் போது அதிகரித்திருந்தன. வங்கியின் மொத்த வைப்பு அடித்தளம் வருட இறுதியில் ரூ. 2.3 பில்லியன் மட்டத்தை எட்டியிருந்தது.

இலங்கை பட்டயக் கணக்காளார் நிறுவனத்தினால் நடத்தப்பட்ட ஆண்டறிக்கை விருது வைபவத்தில் பீப்பள்ஸ் மேர்ச்சன்ட் பினான்ஸ் பிஎல்சி அதன் 2011-12 ஆண்டறிக்கைக்கென 14 ஆவது தடவையாக நிதி நிறுவனங்கள் பிரிவில் இணங்கியொழுகியமைக்கான பாராட்டு சான்றிதழை பெற்றுக் கொண்டது.

நீடித்திருத்தல் தொடர்பான பிற்சேர்க்கை

மக்கள் வங்கி மனப்பாங்குகளை மாற்றியமைப்பதற்கும், விழுமியங்களை ஒருங்கிணைத்துக் கொள்வதற்கும், தார்மீக நெறிமுறைகள், வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புக் கூறும் நிலை என்பவற்றை எமது வணிகச் செயற்பாடுகளுக்குள் உள்ளடக்கிக் கொள்வதற்கும் நிலைத்து நிற்கக் கூடிய விழுமியத்தை உருவாக்குகின்றது. அதற்கூடாக அவை உண்மையிலேயே எமது பங்கீடுபாட்டாளர்களுக்கு பயன்களை அளிக்கின்றன.

தேசத்தின் வளர்ச்சி

இலங்கை இப்போது ஒரு பயணத்தை ஆரம்பித்திருக்கின்றது. அது அப்பயணத்துக்கான அபிலாஷைகள் மிக்க ஒரு குறிக்கோளை முன்னெடுத்துச் செல்லும் தேசத்திற்கான எதிர்காலப் பாதையை வகுத்துக் கொடுத்துள்ளது. இந்தக் குறிக்கோள்கள் சாதித்துக் கொள்ளக் கூடியவையாகும். மேலும், அவை தேசத்தை வளர்த்தெடுப்பதற்கான அசைக்க முடியாத அத்திவாரத்தையும் கட்டியெழுப்புகின்றன. தேசத்தின் நோக்கு, அனைத்தையும் உள்ளடக்கிய வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டதாகவே இருந்து வருகின்றது. எமது பங்கீடுபாட்டாளர்கள் அனைவரும் தேச வளர்ச்சிக்கு உச்ச மட்ட அளவிலான தமது பங்களிப்பைச் செய்ய வேண்டுமென்ற எமது குறிக்கோளுடன் இது முழுவதுமாக பொருந்திச் செல்கின்றது.

மக்களுடன், மக்களுக்கென மக்களால் முன்னெடுத்துச் செல்லப்படும் மக்கள் வங்கியைப் பொறுத்தவரையில் எமது வளர்ச்சிக் குறிக்கோள்களை நிறைவேற்றி கொள்வதற்கும், புதிய முற்போக்கான பரிமாணங்கள் முன்னெடுக்கப்படுவதற்கும் நாடு இப்பிராந்தியத்தின் ஒரு தலைமைத்துவ நாடு என்ற முறையில் அதன் வளர்ச்சிக் குறிக்கோள்களை நோக்கி நெறிப்படுத்திச் செல்லப்படுவதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்குமான நிறைவான ஒரு சூத்திரத்தை அது வகுத்துக் கொண்டுள்ளது. அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கான அடிமட்டத்திலிருந்து மேல் நோக்கிச் செல்லும் அணுகுமுறை, அதன் அடிப்படைகளை உருவாக்கிக் கொண்டிருக்கும் நிலைத்து நிற்கக்கூடிய ஒரு தேசத்தை கட்டியெழுப்புவதில் இலட்சியபூர்வமான ஒரு சமநிலையை வழங்குகின்றது என நாங்கள் உறுதியாக நம்புகின்றோம் அந்த நிலையில் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் எமது பொருளாதாரத்தின் உந்து விசையாக இருந்து வருகின்றன அத்துடன், முதலீட்டுக்கான பொருத்துமான ஒரு சூழ்நிலையை உருவாக்கும் பொருட்டு உள்கட்டமைப்பு வசதிகள் பொருத்தமான விதத்தில் ஸ்தாபித்துக் கொள்ளப்படுகின்றன. மேலும், அத்தகைய ஒரு நிலையில் நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தியை உந்திச் செல்லும் முதன்மைச் சக்திகளாக சமூகங்கள் தம்மை ஐக்கியப்படுத்திக் கொள்வதுடன், இந்தப் பின்னணியிலேயே மக்கள் வங்கியாக நாங்கள் மனப்பாங்குகளை மாற்றியமைப்பதற்கும் விழுமியங்களை ஒருங்கிணைத்துக் கொள்வதற்கும், தார்மீக நெறிமுறைகள், வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புக் கூறும் நிலை என்பவற்றை எமது வணிகச் செயற்பாடுகளுக்குள் உள்ளடக்கிக் கொள்வதற்கும் நிலைத்து நிற்கக் கூடிய விழுமியத்தை உருவாக்குகின்றோம்.

அதற்கூடாக அவை உண்மையிலேயே எமது பங்கீடுபாட்டாளர்களுக்கு பயன்களை அளிக்கின்றன. எமது வங்கி மக்களுடன் கைகோர்த்துக் கொள்ளும் உண்மையான ஒரு வங்கியாக இருந்து வருவதுடன், அதி உன்னத சாதனைகளை நிகழ்த்துவதற்கு தயார் நிலையில் இருந்து வரும் தேசத்தின் வளர்ச்சிக்கும் பங்களிப்புச் செய்யும்.

நாங்கள் யார்?

மக்கள் வங்கியில் நாங்கள் எமது நோக்குக்காக எம்மை அர்ப்பணித்துக் கொண்டிருக்கின்றோம் இலங்கையின் அபிலாஷை மிக்க வங்கியாக இருந்து வருதல் பெறுமதியை உருவாக்குபவர்களாக, போட்டித்திறன் மிக்கவர்களாக, தற்சார்பு நிலை கொண்டவர்களாக இருந்து வருவதற்கு மக்களுக்கு வலுவூட்டுதல். இந்த விழுமியத்திலேயே எங்கள் தேசம் 'வளர்ச்சியடைய' முடியும் என்ற எமது தாரக மந்திரம் தங்கியுள்ளது.

மக்கள் வங்கி 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் மூலம் வர்த்தக வங்கியாக கூட்டிணைக்கப்பட்டுள்ளது. 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட உரிமம் பெற்ற ஒரு வர்த்தக வங்கியாக அது இருந்து வருகின்றது. தற்பொழுது, வங்கியின் உரித்தில் இலங்கை அரசாங்கம் 92% ஆன பங்குகளை கொண்டிருப்பதுடன், மிகுதி 8% ஆன பங்குகளை கூட்டுறவுச் சங்கங்கள் கொண்டுள்ளன.

மக்கள் வங்கியை பொறுத்தவரையில் தேச மக்களே எமது அடிப்படை கவன மையமாக இருந்து வருகின்றார்கள். நாட்டின் அனைத்துப் பகுதிகளையும் நாங்கள் பரவலாக உள்ளடக்கி வருகின்றோம். மேலும், மக்களுக்கு அத்தியாவசியமான. ஒரு வங்கி என்ற முறையில் நாங்கள் பின்வரும் சமூகத் துறைகள், பிரிவுகள் மற்றும் சந்தைகள் என்பவற்றுக்கு சேவைகளை வழங்கி வருகின்றோம்:

- விவசாயம் மற்றும் கடற்றொழில்
- உற்பத்தித் துறை
- சுற்றுலாத் துறை
- போக்குவரத்து
- நிர்மாணம்
- வியாபாரம்

எமது விரிவான சேவைத் தொகுப்புக்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- நிதி மற்றும் வணிகச் சேவைகள்
- உள்கட்டமைப்பு வசதிகள்
- ஏனைய சேவைகள்
- கடன் அட்டை
- அடகு

இந்த ஒவ்வொரு சேவைப் பிரிவும் எமது பின்வரும் பிரதான பிரிவுகளின் ஒரு பாகமாக இருந்து வருகின்றது: சில்லறை வங்கித்தொழில், அட்டை வர்த்தகம், கூட்டுறவு வங்கித்தொழில், திறைசேரி முகாமைத்துவம், கடல் கடந்த வாடிக்கையாளர் சேவைகள், நிதி நிறுவனங்கள் (முகவர் வங்கித்தொழில்), நுண்நிதி தொடர்பான அபிவிருத்தி வங்கித்தொழில், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி வங்கித்தொழில் மற்றும் அபிவிருத்தி நிதி மற்றும் கூட்டுறவு வங்கித்தொழில், உள்நாட்டு கடன்.

வங்கித்தொழில் சேவைகள் தவிர, எமது தேசத்தின் வளர்ச்சிக்கு உதவ முடியுமென நாங்கள் நம்பும் ஏனைய துறைகளிலும் சம்பந்தப்பட்டிருக்கின்றோம். சமூகத்தின் பங்களாராக இருந்து வர வேண்டும் என்ற எமது நோக்கத்துடன் இணைந்த விதத்தில் குடித்தொகையின் அனைத்துப் பிரிவினருக்கும், அனைத்து பூகோளப் பிரதேசங்களுக்கும் நாங்கள் எமது சேவைளை வழங்கி வருகின்றோம்.

துணை நிறுவனங்கள்

- பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
- பீப்பள்ஸ் டிரவல்ஸ் லிமிட்டட்

இணை நிறுவனங்கள்

- பீப்பள்ஸ் மேர்ச்சன்ட் பினான்ஸ் பிஎல்சி

உப துணை நிறுவனங்கள் (பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி யின் துணை நிறுவனங்கள்)

- பீப்பள்ஸ் லீசிங் பீளீட் மனேஜ்மன்ட் லிமிட்டட் (பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி யின் துணை நிறுவனங்கள்)
- பீப்பள்ஸ் லீசிங் புரொப்பர்ட்டி டெவலொப்மன்ட் லிமிட்டட்
- பீப்பள்ஸ் இன்சுரன்ஸ் லிமிட்டட்
- பீப்பள்ஸ் பினான்ஸ் பிஎல்சி
- பீப்பள்ஸ் மைக்ரோ பினான்ஸ் லிமிட்டட்
- பீப்பள்ஸ் லீசிங் ஹவ்லொக் புரொப்பர்ட்டிஸ் லிமிட்டட்.

எமது உற்பத்திகள்

எமது அனைத்து உற்பத்திகளும், அனைத்துச் சேவைகளும் மக்கள் மத்தியில் அதிகளவு பொருளாதார ரீதியிலான நிலைத்து நிற்கும் ஆற்றலை உருவாக்குவதற்கும், வளர்ச்சியடைவதற்கு அவர்களுக்கு வலுவூட்டுவதற்குமென உருவாக்கப்பட்டுள்ளன. இதில் அவர்களுடைய வளர்ச்சி நாட்டின் முன்னேற்றத்துடன் சம்பந்தப்பட்டுள்ளதென நாங்கள் அறிந்திருக்கின்றோம்.

எமது உற்பத்திகள் குறித்த ஒரு விரிவான விளக்கம் வணிக மீளாய்வில் தரப்பட்டுள்ளது.

எமது பரவல்

வங்கி நாடெங்கிலும் 347 கிளைகளைக் கொண்டிருப்பதுடன், 10,600 க்கும் மேற்பட்ட ஊழியர்களை பணியில் அமர்த்தியுள்ளது. இது தவிர, நாங்கள் 381 சேவை நிலையங்களையும், 420 தானியங்கி காசாளும் இயந்தரங்களையும் நாடெங்கிலும் செயற்படுத்தி வருகின்றோம். இந்த வழிமுறைகளுக்கூடாக நாங்கள் சுமார் 14 மில்லியன் வாடிக்கையாளர் அடித்தளத்திற்கு எமது சேவைகளை வழங்கி வருகின்றோம்.

மீளாய்வுக்குட்படுத்தப்படும் வருடத்தின் போது மக்கள் வங்கி பின்வரும் அமைவிடங்களில் ஆறு கிளைகளை திறந்து வைத்ததுடன், தரமுயர்த்தியது:

- ரிகில்லகஸ்கட
- பொகவந்தலாவ
- செட்டிகுளம்
- கொட்டியாகும்புர
- கண்டி நகர மையம்
- பூஜாபிட்டிய

மேலும், இவ்வருடத்தின் போது பின்வரும் அமைவிடங்களில் 40 தானியங்கி காசாளும் இயந்திரங்கள் மற்றும் சேவைகள் நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டன:

- தொடந்துவ
- மெதவல
- கிரான்
- ரஸ்நாயக்கபுர
- வெலிஓய
- கட்டுகுருந்த
- களுபோவில
- கண்டி நீதிமன்ற வளாகம்
- பள்ளேகம
- கிரான்குளம்
- தங்காலை சேவை நிலையம்
- பதுளை மாவட்ட செயலக வளாகம்
- அம்பாந்தோட்டை நிர்வாக வளாக சேவை நிலையம்
- இலங்கை சுங்க வளாகம்
- மாவட்ட செயலக சேவை நிலையம் - கண்டி
- வட மத்திய மாகாண சேவை நிலையம்

மக்கள் வங்கியின் நீடித்திருக்கும் ஆற்றலை தூண்டும் கோட்பாடுகள்

மக்கள் வங்கியில் எமது நாளாந்த சேவைகளின் போது, தேசத்தின் வளர்ச்சி என்ற விடயமே முதன்மையானதாக கருதப்பட்டு வருகின்றது. இந்த அத்திவாரத்தின் மீதே எமது நோக்கு, பணி, குறிக்கோள்கள் என்பன உருவாக்கப்பட்டுள்ளன. எனவே, வங்கியின் நிலைத்திருக்கும் ஆற்றலை உறுதிப்படுத்துவதும் கூட இந்த தலையாய குறிக்கோளுடன் இணைந்த விதத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. எனவே, தேச வளர்ச்சிக்காக முயற்சிகளை மேற்கொள்வதே எமது கோட்பாடுகளாக உள்ளன. அதே வேளையில், நாங்கள் பங்கீடுபாட்டாளர் குழுக்களுக்கு பெறுமதியையும் எடுத்து வருகின்றோம். மேலும், நாம் ஏற்படக்கூடிய இடர்களை மதிப்பீடு செய்வதுடன், எமது தெரிவுகள் சூழலின் மீதும் சமூகத்தன் மீதும், ஏற்படுத்தி வரும் தாக்கத்தினையும் கவனத்தில் எடுக்கின்றோம்.

- எமது வாடிக்கையாளர்களுக்கு அதியுயர்ந்த தரம் வாய்ந்த உற்பத்திகள் வழங்கப்படும் என்ற விடயம் உத்தரவாதப்படுத்தப்படுகின்றது அவர்களுக்கு உதவுவதன் மூலம் நாட்டின் வளர்ச்சியும் தூண்டப்படுவதனால் இரட்டிப்பு அனுகூலங்கள் கிடைக்கின்றன
- எமது மக்களின் வளர்ச்சியை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு அறிவு மற்றும் வலுவூட்டல் என்பவற்றை நாங்கள் போதித்து வளர்ப்போம் என்ற விடயத்தை அவர்கள் அறிந்திருக்கின்றார்கள்.
- மிகச் சிறந்த நடைமுறைகளை நாங்கள் பயன்படுத்தி வருகின்றோம் என்ற விடயமும், அதியுயர் தராதரங்கள் எம்மால் உருவாக்கப்படும் என்ற விடயமும் எமது வணிகப் பங்காளர்களுக்கு உறுதிப்படுத்தப்படும்.
- நாங்கள் எம்மை அறியாமலேயே ஏற்படுத்தக் கூடிய ஏதேனும் ஆபத்துக்களிலிருந்தும் எமது சூழலை பாதுகாத்துக் கொள்வதற்காக எமது உச்ச மட்ட முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம். அந்த ஆபத்துக்களை குறைத்துக் கொள்வதற்கு அல்லது நிராகரித்துக் கொள்வதற்கென அந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.
- இலங்கையை அதன் அடி மட்டத்திலிருந்து வளர்த்தெடுப்பதற்கான முயற்சியில் நாங்கள் ஈடுபட்டு வரும் பொழுது எமது சமூகத்திற்கு வலுவூட்டப்படும்.

இந்த அறிக்கை குறித்து

இது நீடித்து நிற்கும் ஆற்றல் குறித்த எமது அங்குரார்ப்பண அறிக்கையாகும். நிறுவன ஆளுகை மற்றும் நிலைத்து நிற்கும் ஆற்றலுக்கான தேவைகள் என்பவற்றின் தற்போதைய விழுமியம் என்ற அடிப்படையில் மூன்று அம்ச கருதுகோளை கருத்தில் கொண்டு இந்த அறிக்கை வெளியிடப்படுகின்றது. இந்தத் தகவலை வெளியிடுவதன் எமது நோக்கம் நாட்டின் தலைசிறந்த வங்கியாக உருவாக வேண்டுமென்ற அவாவில் நாங்கள் நிகழ்த்தியிருக்கும் சாதனைகளை எடுத்துக் காட்டுவதும், தற்போதைய இடைவெளிகளை சுட்டிக் காட்டுவதுமாகும்.

இந்த அறிக்கை ஜனவரி 1, 2012 தொடக்கம் டிசம்பர் 31, 2012 வரையிலான காலப் பிரிவை உள்ளடக்குகின்றது. சாத்தியமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் எமது உரிமை கோரல்களை வலுப்படுத்தும் பொருட்டு அது தர ரீதியான மற்றும் அளவு ரீதியான சான்றுகளை முன்வைக்கின்றது. அத்தகைய தகவல்களை வருடாந்தம் வெளியிடுவது எமது நோக்கமாகும். நிதிசார் தகவல்கள் இலங்கை ரூபாவில் தரப்பட்டுள்ளன.

அறிக்கையிடல் தொடர்பான தரநியமங்கள்

கம்பெனித் துறையில் தற்பொழுது நிலவி வரும் தரநியமங்களுடன் பொருந்திச் செல்லக் கூடிய விதத்தில் இந்த அறிக்கையை தயாரிப்பதற்கு சாத்தியமான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளோம். ஒழுங்குமுறைப்படுத்தும் அமைப்புக்கள் மற்றும் தரநியமங்களை உருவாக்கும் அமைப்புக்கள் என்பவற்றினால் எதிர்பார்க்கப்படும் தேவைகளையும், அதே போல, GRI வழிகாட்டுதல்களையும் பின்பற்றுவதற்கு நாங்கள் முயன்றுள்ளோம். அதன் மூலம் நாங்கள் எமது பங்கீடுபாட்டாளர்களுக்கு பெருமளவுக்கு வெளிப்படைத் தன்மையைக் கொண்ட ஒரு செயன்முறையை எடுத்துக் காட்டுகின்றோம். இந்த அறிக்கையில் நாங்கள் GRI வழிகாட்டுதல்களில் மட்டம் C I நிறைவு செய்து வைப்பதற்கு முயற்சிக்கின்றோம். இந்த அறிக்கையின் பக்கங்கள் 78 தொடக்கம் 80 வரையில் உள்ள பகுதியில் அதன் பிரகாரம் எமது தராதரங்களை நாம் எடுத்துக் காட்டியுள்ளோம்.

மக்கள் வங்கியின் பின்வரும் செயற்பாடுகள், அறிக்கையின் நோக்கெல்லையிலிருந்து விலக்கப்பட்டுள்ளன. ஏனெனில், இச் செயற்பாடுகள் மதிப்பீட்டை பொறுத்தவரையில் முக்கியத்துவமற்றவையாகும். அதன் துணை நிறுவனங்களான பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி மற்றும் பீப்பள்ஸ் டிரவல்ஸ் பிரைவட் லிமிட்டட் மற்றும் வங்கியின் இணை நிறுவனமான பீப்பள்ஸ் மேர்ச்சன்ட் பினான்ஸ் பிஎல்சி செயற்பாடுகள் இவ்வாறு விலக்கப்பட்டுள்ளன.

இவ்விதம் தவிர்க்கப்பட்ட செயற்பாடுகள் பொருள்சார்ந்த ரீதியில் முக்கியத்துவம் பெறுவதாக இருந்தால், அவற்றை எதிர்கால நிலைத்து நிற்கும் ஆற்றல் தொடர்பான அறிக்கைகளில் உள்ளடக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

> மக்கள் வங்கியை பொறுத்தவரையில், நீடித்து நிற்கும் ஆற்றல் என்பது நாங்கள் எங்கள் மக்களுக்கு வழங்கவிருக்கும் ஓர் ஒட்டுமொத்த கோட்பாடாக கருவாக இருந்து வருகின்றது.

பின்னூட்டல்

இது எமது கன்னி அறிக்கையாக இருந்து வருவதனால், இது தொடர்பான பின்னூட்டல்களை நாம் பெரிதும் வரவேற்கின்றோம். ஏனெனில், இந்த அம்சம் குறித்து அறிக்கையிடும் விடயத்தில் நாங்கள் பெருமளவுக்கு ஆர்வம் காட்டி வருவதே இதற்கான காரணமாகும். பங்கீடுபாட்டாளர்களிடமிருந்து வெளியிலிருந்து வரும் பின்னூட்டல்கள், தொடர்ச்சியான விருத்தி நிலைமைகளை எடுத்து வர வேண்டுமென்ற எமது உத்தியின் முக்கியமான ஒரு தொடர்பாடல் கூறாக இருந்து வருகின்றது. இது தொடர்பாக முன்வைக்கப்படும் கருத்துக்கள் மற்றும் யோசனைகள் என்பன ஆக்கபூர்வமான விதத்தில் பயன்படுத்தப்படுவதுடன், சாத்தியமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் அவை பிரயோகிக்கப்படும். அபிப்பிராயம் மற்றும் பின்னூட்டல் என்பன எமது நிலைப்பாட்டுக்கு ஆதரவளித்து, அதனை உறுதிப்படுத்துவதற்கு உதவும் என்பதே எமது அபிப்பிராயமாகும். மேலும், அது (ஆற்றல்கள், பலவீனங்கள், வாய்ப்புக்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் குறித்த) SWOT பகுப்பாய்வுக்கு குறைநிரப்புச் செய்வதுடன், பங்கீடுபாட்டாளர்களுடன் தாக்கமான விதத்தில் மேலும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும் உதவும்.

இந்த அறிக்கை குறித்த தெளிவுபடுத்தல்கள் அல்லது விசாரணைகள் தொடர்பாக பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்:

முகாமைத்துவ தகவல் திணைக்களம்
மக்கள் வங்கி
இல. 75, சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை,
கொழும்பு 02. இலங்கை

நீடித்து நிற்கும் ஆற்றல் குறித்த எமது தத்துவம் மற்றும் யுக்தி

நிலைத்து நிற்கும் ஆற்றல் குறித்த அறிக்கையிடலில், இது எமது அங்குரார்ப்பண முயற்சியாக இருந்து வருவதனால், நாங்கள் நிலைத்து நிற்கும் ஆற்றல் தொடர்பான எமது தத்துவங்கள் மற்றும் யுக்திகள் என்பவற்றை மக்கள் வங்கியின் நோக்கு மற்றும் பணி என்பவற்றுடன் இணைத்துக் கொள்ளும் விடயத்தில் கவனம் செலுத்தி வருகின்றோம்.

நீடித்து நிற்கும் ஆற்றல் என்பது எமது பங்கீடுபாட்டாளர்கள் அனைவருக்கும் நீண்ட கால பெறுமதியை வழங்குவதாகும். மக்கள் வங்கியை பொறுத்தவரையில், நீடித்து நிற்கும் ஆற்றல் என்பது நாங்கள் எங்கள் மக்களுக்கு வழங்க விரும்பும் ஒரு ஒட்டுமொத்த கோட்பாடாக இருந்து வருகின்றது. நாட்டின் வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்லும் பொழுது, எமது வாடிக்கையாளர்களையும், தேசத்தையும் ஒருங்கிணைத்த விதத்திலேயே அதனை நாங்கள் மேற்கொள்ள வேண்டியிருக்கின்றது. நீடித்து நிற்கக் கூடிய வளர்ச்சியை நோக்கிய உலகளாவிய போக்குடன் இணைந்து செல்ல வேண்டிய தேவையை இனங்கண்டு கொண்டிருக்கும் நிலையில், இலங்கையை நீடித்திருக்கும் ஆற்றலுடன் வளர்த்தெடுக்கும் எமது குறிக்கோளை இணைத்துக் கொள்வது சாத்தியமானது என நாங்கள் நம்புகின்றோம். இதுல், எமக்கும், எமது தேசத்திற்கும் மிகச் சிறந்தவற்றை பெற்றுக் கொள்ள வேண்டுமென்ற கோட்பாட்டினையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. இக்குறிக்கோள்கள் பரஸ்பரம் ஒன்றையொன்று நிறைவேற்றி வைப்பவையாகும். எனவே, நாங்கள் எங்கள் செயற்பாடுகளை மேற்கொண்டு வரும் விதத்தில் வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புக் கூறும் நிலை ஆகிய விழுமியங்களை எடுத்து வருவதற்கு முயற்சிக்கின்றோம். விதிவிலக்கான ஒரு தேசத்தின் வளர்ச்சிக்கு இது அவசியமாகும்.

நிலைத்து நிற்கும் ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டுமென்ற எமது இந்தப் புதிய அபிலாஷையில் வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புக் கூறும் நிலை ஆகிய இரண்டையும் சாதித்துக் கொள்ள வேண்டுமென்பதே எமது தத்துவமாக இருந்து வருகின்றது. அதாவது, முன்னேற்றம் (அல்லது முன்னேற்றமில்லாத நிலை) குறித்து அறிக்கையிடுவது, உறுதிப்படுத்தலை பெற்றுக் கொள்ளல் மற்றும் பொருள்சார்ந்த நடவடிக்கைகளை பொறுத்தவரையில் நாம் தெளிவான முன்னுரிமைகளை கொண்டுள்ளோம் என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளல் என்பன இதில் அடங்குகின்றன. ஏனெனில், இந்தப் புவிக்கோளின் மூலவளங்களுக்கு பௌதீக வரையறைகள் இருந்து வருகின்றன என்ற விடயத்தை நாங்கள் ஏற்றுக் கொண்டுள்ளோம். நாங்கள் ஒரு வங்கியாக இருந்து வந்தாலும் கூட, சுற்றாடலை பாதுகாப்பதில் எமது பங்கினை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற விடயத்துக்கு எம்மை அர்ப்பணித்துக் கொண்டுள்ளோம். இந்த வகி பாகம் இன்று முக்கியத்துவம் பெறாமலிருக்கலாம் ஆனால், நாங்கள் நிலைத்து நிற்கும் ஆற்றலை நோக்கிய இந்தப் பயணத்தில் தொடர்ந்து முன்னே செல்லும் பொழுது, இது தொடர்பான எமது முயற்சிகள் மேலும் அதிகரித்துச் செல்லுமென நாங்கள் நம்புகின்றோம்.

மக்கள் வங்கி ஏன் இப்பொழுது நீடித்து நிற்கும் ஆற்றல் குறித்து அறிக்கையிடுகின்றது?

பொது முகாமையாளர் என்.வசந்த குமார், இந்தக் கேள்விக்கு பதிலளிக்கின்றார்...


நீங்கள் எப்பொழுதும் அறிந்திருப்பதை போல எமது வரலாற்றை பார்க்கும் பொழுது, இவ்வங்கி தேசத்தின் அபிவிருத்தியில் ஒரு உள்ளார்ந்த பாகமாக இருந்து வந்துள்ளது. இதன் கருத்து, எமது ஐம்பத்தொரு வருடகால வரலாற்றில் நாங்கள் இலங்கை மக்களுக்கு வழிகாட்டுதல்களை வழங்கி வந்திருப்பதுடன், அவர்களுடன் பங்காளர்களாக இணைந்து செயற்பட்டு வந்திருக்கின்றோம் என்பதாகும். நாட்டின் அபிவிருத்தி செயல்திட்டத்தின் வலுவான பங்களிப்பாளராக உருவாகும் பொருட்டு நாங்கள் அவர்களுடன் இணைந்து செயற்பட்டுள்ளோம். மேலும், நாங்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய விடயம், மக்கள் வங்கி அதன் வரலாறு நெடுகிலும் எப்பொழுதும் இந்தக் குறிக்கோளை சாதித்துக் கொள்ளும் விதத்திலான திட்டங்கள் மற்றும் சேவைகளின் தொகுதியை புத்தாக்கம் செய்து, அபிவிருத்தி செய்து மக்களுக்கு சமர்ப்பித்து வந்துள்ளது என்பதாகும். தொட்டிலிலிருந்து பள்ளிப் பருவம் வரையில் பின்னர் இளமையிலிருந்து மூத்த பிரஜைகளாக வரும் வரையில் தனிப்பட்ட வாடிக்கையாளர்களுடனும், வயலில் வேலை செய்து வரும் விவசாயிகளுடனும், நகரத்தில் செயற்பட்டு வரும் கம்பெனி அதிகாரிகளுடனும் நாங்கள் இணைந்து செயற்பட்டு வந்துள்ளோம். தாம் கடினமாக உழைக்கும் டொலர்களை புத்திசாலித்தனமாக முதலீடு செய்து வருபவர்களாக இருந்து வரும் குடிபெயர்ந்து வெளிநாடுகளில் உழைக்கும் தொழிலாளர்களுக்கும் நாங்கள் ஆலோசனைகளை வழங்கி வருகின்றோம். அதே போல பங்காளர்களுக்கான ஆதாயங்களை உச்ச மட்டத்தில் எடுத்து வரும் பொருட்டு கம்பெனிகளுடனும், பாரிய நிறுவனங்களுடனும் நாங்கள் கூட்டாக செயற்பட்டு வருகின்றோம். இலங்கை அதன் அபிலாஷைமிக்க குறிக்கோள்களை சாதித்துக் கொள்வதனை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு, தேசத்தின் உள்கட்டமைப்பு கருத்திட்டங்களில் நாங்கள் உந்து விசையான ஒரு பாத்திரத்தை வகித்து வந்துள்ளோம்.

எனினும், இச்செயற்பாடுகள் மட்டும் போதுமானவையல்ல. எமது நடவடிக்கைகள் தொடர்பாக வெளிப்படைத் தன்மையுடைவர்களாகவும், பொறுப்புக் கூறுபவர்களாகவும் இருந்து வர வேண்டிய பொறுப்பு எமக்குள்ளது. மேலும், நாங்கள் செய்யும் காரியங்கள் சரியானவையா என்று தெரிந்து கொள்ளும் தேவையும் உள்ளது. நிரப்பப்பட வேண்டிய இடைவெளிகள் உள்ளனவா என்பதனையும் நாங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். எமது பங்கீடுபாட்டாளர்களை எவ்வாறு நடத்த வேண்டுமோ நாங்கள் அவ்வாறு நடத்துகின்றோமா என்பதனையும் அறிந்து கொள்ள வேண்டும். அனைத்துத் துறைகளிலுமான நீடித்து நிற்கக் கூடிய அபிவிருத்திக்கான திட்டங்கள் அதிலிருந்து எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகளை எடுத்து வருகின்றனவா என்பதனையும் நாம் அறிய வேண்டும். இந்தப் பின்புலத்திலேயே நீடித்து நிற்கும் தன்மை குறித்து அறிக்கையிடும் அனைத்துமடங்கிய ஒரு செயன்முறை முக்கியத்துவம் பெறுகின்றது. அதன் காரணமாகவே இத்துறையில் ஈடுபட வேண்டுமென மக்கள் வங்கி முடிவு செய்தது. ஓர் அரச வங்கி என்ற முறையில் தேசம் தொடர்பாக நாங்கள் பாரிய பொறுப்புக்களை கொண்டுள்ளோம். எமது நிலைத்து நிற்கக் கூடிய செயற்பாடுகள் குறித்து அறிக்கையிடுவதன் மூலம் எமது காரியங்களில் நாங்கள் மிகவும் தீவிரமாக இருந்து வருகின்றோம் என்ற விடயத்தை எமது பங்கீடுபாட்டாளர்களுக்கு எடுத்துக் காட்டுகின்றோம். இந்த அறிக்கையிடல் செயன்முறை எமது சாதகமான அம்சங்களை எடுத்துக் காட்டுவதுடன், எமது பாதகமான அம்சங்கள் தொடர்பாக நாம் செயற்பட்டு வருகிறோம் என்பதனையும் எடுத்துக் காட்டுகின்றது. மேலும், இது எமது ஆற்றல்களை கூர் தீட்டிக் கொள்கின்றோம் என்பதனையும், எமது பலவீனங்களை பலப்படுத்திக் கொள்கின்றோம் என்பதனையும், எதிரே இருக்கும் சவால்களையும், அச்சுறுத்தல்களையும் இனங்கண்டு கொள்கின்றோம் என்பதனையும், வாய்ப்புக்களை பற்றிப் பிடித்துக் கொள்கின்றோம் என்பதனையும் எடுத்துக் காட்டுகின்றது.

இன்றைய பொருளாதார சூழலில் மோசடி, ஊழல், இலஞ்சம் என்பன பரவலாக இடம்பெற்று வருவதாக கூறப்படுகின்றது. இலங்கை அரசாங்கத்தை பிரதான பங்கீடுபாட்டாளர்களாக கொண்டிருக்கும் ஒரு வங்கி என்ற முறையில், இத்தகைய இயல்பிலான குற்றச் சாட்டுகளிலிருந்து விலகி கொள்வதற்கு நாங்கள் விரும்புகின்றோம். அத்தகைய நடைமுறைகள் தொடர்பான எமது கொள்கைகள் எப்பொழுதுமே உறுதியானவையாக இருந்து வந்திருப்பதுடன், நாங்கள் இதுவரையில் எமது வாடிக்கையாளர்களுக்கு மத்தியிலும், வங்கித்தொழில் சமூகத்திற்கு மத்தியிலும் தொடர்ந்து ஒரு நற்பெயரை தக்க வைத்துக் கொண்டுள்ளோம். இந்தச் சாதகமான நற்பெயரை மேலும் மேம்படுத்தும் பொருட்டு, வெளிப்படைத் தன்மை, பொறுப்புக் கூறும் நிலைமை மற்றும் அனைத்துச் செயற்பாடுகளிலும் அதி சிறந்த நடைமுறைகள் மேம்படுத்தும் அறிக்கையிடல் முறையை நாங்கள் பின்பற்றியுள்ளோம்.

அறிக்கையிடல் எண்ணக் கரு என்ற முறையில் நீடித்து நிற்கும் ஆற்றல் எம்மைப் பொறுத்தவரையில் ஒரு புதிய விடயமாக இருந்து வர முடியும். எவ்வாறிருப்பினும், கடந்த சில வருட காலமாக எமது தேசத்திற்கு நிலையான வளர்ச்சியை எடுத்து வருவதற்கும், அதனை முன்னேற்றுவதற்கும் இடையறாது உழைத்து வந்திருக்கும் நிலையில் இதன் பின்னணியிலுள்ள கோட்பாடுகள் மிகப் பொருத்தமானவையென நாங்கள் கருதுகின்றோம்.

பல்லாண்டு காலமாக மக்கள் வங்கி இலங்கை வாழ் மக்களுக்கு மத்தியில் ஆழமாக வேரூன்றியுள்ளது. அதன் காரணமாகவே நாங்கள் ஒரே சீரான விதத்தில் கீழிருந்து மேல் நோக்கிய அணுகுமுறையை அடுத்து வரும் வருடங்களிலும் தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்கு எதிர்பார்க்கின்றோம். இவை எமது அனைத்து நடவடிக்கைகளிலும் முன்னணி அம்சமாக இருந்து வந்திருப்பதுடன், தொடர்ந்தும் அவ்வாறு இருந்து வரும். ஆனால், நாங்கள் இந்த முன்னுரிமையுடன் இணைந்த விதத்தில் மற்றொரு உலகளாவிய குறிக்கோளையும் முன்னெடுத்துச் செல்கின்றோம். எதிர்காலத்திற்கென எமது சுற்றாடலை பாதுகாத்துக் கொள்வதற்காக பணியாற்றுவதே அந்த முன்னுரிமையாகும். வளர்ச்சி கண்டு வரும் எமது தேசத்துக்கு இது தொடர்பாக ஆதரவும், ஒத்துழைப்பும் தேவையென நாங்கள் நம்புகின்றோம் - பூமியையும், சுற்றாடலையும் பார்க்கவேறு சிறந்த ஒரு அத்திவாரம் இருந்து வர முடியாது. எனவே, நாங்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் இந்த அறிக்கையை சமர்ப்பிக்கின்றோம். விடயங்களை பேரண்ட நோக்கில் நோக்கும் போது எமது முயற்சிகள் அசாதாரணவையாக இல்லாமல் இருக்கலாம். எவ்வாறிருப்பினும், நிலைமைகளை மேலும் விருத்தி செய்து கொள்வதற்கும், சிறப்பான விதத்தில் மாற்றியமைப்பதற்குமான முயற்சிகளாக அவை இருந்து வருகின்றன. இத்தகைய விருத்தி நிலைமைகளும், எதிர்காலத்தில் இது தொடர்பாக மேற்கொள்ளப்படவிருக்கும் விருத்தி நிலைமைகளும் இலங்கையினதும், இலங்கை வாழ் மக்களினதும் வளர்ச்சிக்கு ஆதரவளிக்கும் என நாங்கள் நம்பகின்றோம்.



என். வசந்த குமார்
பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர்

மார்ச் 22, 2013

ஆளுகை மற்றும் இடர் முகாமைத்துவம்

ஆளுகை மற்றும் இடர் முகாமைத்துவ நடைமுறைகள், உத்திகள் மற்றும் கொள்கைகள் என்பன இந்த ஆண்டறிக்கையின் 87 தொடக்கம் 92 வரையிலான பக்கங்களிலும், 95 தொடக்கம் 107 வரையிலான பக்கங்களிலும் எடுத்து விளக்கப்பட்டுள்ளன.

இடர்களைத் தணித்தல்

வங்கி அனைத்துமடங்கிய இடர் முகாமைத்துவ சட்டகமொன்றை வைத்திருப்பதுடன், எந்தவொரு நேரத்திலும், வங்கியின் எந்தவொரு வணிக அலகிலும் ஒரு மோசடி இடம்பெற முடியும் என்ற விடயம் குறித்து நாங்கள் எப்பொழுதும் விழிப்பாக இருந்து வருகின்றோம். எனவே, அத்தகைய மோசமான செயல்கள் நிகழ்வதை தடுக்கும் பொருட்டு, கட்டுப்பாடுகள், பரீட்சிப்புக்கள் என்பவற்றைக் கொண்ட ஒரு முறை செயற்படுத்தப்பட்டு வருகின்றது. அந்தந்த பிராந்தியங்களில் பணியாற்றி வரும் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர்கள் ஒவ்வொரு கிளைக்கும் அனுப்பப்படுகின்றார்கள். வணிக அலகுகள் இந்தப் பரீட்சிப்புக்கள் மற்றும் கட்டுப்பாடுகள் என்பவற்றை உரிய விதத்தில் அமுல் செய்து வருகின்றனவா என்பதனை அவர்கள் மேற்பார்வை செய்வதுடன், தேவையான இடங்களில் பொருத்தமான நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்றார்கள். இடர் சம்பந்தப்பட்ட ஊழல்களுக்கான நிகழ்தகவு வணிக அலகுகள், கிளைகள் மற்றும் சேவை நிலையங்கள் என்பவற்றில் காலத்துக்கு காலம் நடாத்தப்பட்டு வரும் உள்ளக கணக்காய்வுகள் மூலம் குறைந்தபட்ச மட்டத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இணங்கியொழுகலுக்கும் அப்பால் செயல்படுதல்

ஓர் அரச வங்கி என்ற முறையில் எமது அனைத்துச் செயற்பாடுகளிலும் இணங்கியொழுகுதல் என்பது முதன்மையான ஒரு கோட்பாடாக இருந்து வருவதனை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பினை நாம் கொண்டுள்ளோம். இந்த விடயத்திலும் ஊழல், லஞ்சம், கறுப்புப் பணத்தை வெள்ளையாக்குதல் போன்ற விடயங்களை சகித்துக் கொள்ளாத ஒரு நிலைமை காணப்படுகின்றது. மேலும், மோசடிகள் மற்றும் அநாவசியமான இடர்கள் ஏற்படக் கூடிய துறைகள் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

ஊழல் தொடர்பான ஏதேனும் சம்பவங்கள் இடம்பெற்றால், உள்ளக கணக்காய்வு திணைக்களத்தினாலும், அதே போல விசாரணைகள் மற்றும் புலனாய்வு திணைக்களத்தினாலும் பரிசீலனை செய்யப்படும். அதே வேளையில், சம்பந்தப்பட்ட பிராந்திய தலைமை அலுவலகங்களினால்/ தலைமை அலுவலக திணைக்களங்களினால் முதலில் பூர்வாங்க விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. வங்கியின் நடத்தை நெறிக் கோவையின் பிரகாரம் ஒழுகாற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஒரு சம்பவத்தின் இயல்பு மற்றும் தீவிரத் தன்மை என்பவற்றை பொறுத்து குற்றவியல் புலனாய்வு திணைக்களத்திடமும் முறைப்பாடுகள் செய்யப்படுகின்றன. அத்தகைய சந்தர்ப்பங்களில் குற்றவியல் புலனாய்வு திணைக்களம் அவர்களுடைய விசாரணைகளின் அடிப்படையில் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு வழமையாக நீதிமன்றமொன்றில எதிராக குற்றப் பத்திரிக்கையை தாக்கல் செய்கின்றது.

> வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கான எமது அர்ப்பணபூர்வமான ஒரு பாகமாக பன்முகப்பட்ட, பக்கச்சார்பற்ற உரையாடலுக்கு வசதி செய்து கொடுக்கும் பொருட்டு, சமூக ரீதியில் பொருத்தமான உறவுகளை கட்டியெழுப்புவதற்கும் நாங்கள் உபாய ரீதியான தொடர்பாடல் முறைகளை பயன்படுத்தி வந்துள்ளோம்.

இணங்கியொழுகுதல் விடயம் தொடர்பாக நாங்கள் பராமரித்து வரும் அதியுயர் தராதரம் காரணமாக, தற்போதைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு இணங்கியொழுகாதிருந்தமை தொடர்பாக 2012 ஆம் வருடத்தின் போது வங்கியின் மீது எத்தகைய அபாரதங்களோ, தடைகளோ விதிக்கப்படவில்லை. மேலும், விளம்பரம் செய்தல், மேம்பாடு மற்றும் அனுசரணை என்பதையும் உள்ளடக்கிய சந்தை தொடர்பாடல் குறித்த ஒழுங்குவிதிகள் மற்றும் சுயவிருப்பிலான நடத்தை நெறிக் கோவைகள் என்பவற்றுக்கு இணங்கியொழுகாத சம்பவங்களும் இடம்பெறவில்லை.

இணங்கியொழுகும் தேவைப்பாடுகள் குறித்து எமது ஊழியர் அணியினருக்கு தொடர்ந்து அறிவூட்டுதல்

இடையறாது மாற்றமடைந்து வரும் சூழ்நிலையொன்றில் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு நடைமுறைகளை உறுதிப்படுத்த வேண்டிய தேவையை நன்கு அறிந்த நிலையில், உள்ளக கணக்காய்வு திணைக்களம், ஒட்டுமொத்த இணங்கியொழுகல் செயற்பாட்டை பராமரிப்பதற்கு பொறுப்பாக இருந்து வரும் சம்பந்தப்பட்ட ஊழியர்களின் அறிவு மற்றும் திறன்கள் என்பவற்றை கூர் தீட்டும் விதத்தில் தொடர்ச்சியாக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தி வருகின்றது. 2012 ஆம் ஆண்டின் போது உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய 644 ஊழியர்கள் சம்பந்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்றார்கள்.

இணங்கியொழுகல் திணைக்களம் கறுப்புப் பணத்தை வெள்ளையாக்குவதை தடுக்கும் சட்டம், நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடும் சட்டம், பயங்கரவாத நிதிப்படுத்தலை ஒடுக்கும் சட்டம் என்பவற்றின் தேவைகள் குறித்து ஊழியர்கள் மத்தியில் விழிப்புணர்வை எடுத்து வரும் பொருட்டு கிளை வலையமைப்பு நெடுகிலும் கறுப்புப் பணத்தை வெள்ளையாக்குதல் மற்றும் பயங்கரவாத நிதிப்படுத்தல் போன்ற விடயங்கள் தொடர்பாக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கான அடிப்படையில் நடத்தி வருகின்றது.

2012 ஆம் வருடத்தின் போது இணங்கியொழுகல் திணைக்களம் வங்கியின் 1,317 ஊழியர்களுக்கு (18%) 16 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியது. மேலும், 191 முகாமையாளர்களுக்கு மத்தியில் கறுப்புப் பணத்தை வெள்ளையாக்குதல் மற்றும் பயங்கரவாத நிதிப்படுத்தல் என்பன தொடர்பான விழிப்புணர்வை தூண்டும் பொருட்டு இணங்கியொழுகும் திணைக்களம் பத்து முகாமையாளர் மாநாடுகளையும் நடத்தியது.



சமூகம்

நுண் நிதி கிராமங்கள்

எமது நுண் நிதி கிராமங்கள் திட்டம் (Microfinance Village Scheme) கிராம மட்டத்தில் தொழில் முனைவோரை உருவாக்கி, அவர்களுக்கு ஆதரவளித்து வருகின்றது. அவர்களுக்கு வழங்கப்படும் நிதி ரீதியான ஆதரவு, அவர்களுக்கு பிணையாளராக செயற்படுதல் மற்றும் பரவலான தொழில்முனைவு முறைகள் குறித்து பயிற்சிகளை வழங்குதல் என்பவற்றையும் அது உள்ளடக்குகின்றது.



உண்மையிலேயே நாங்கள் மக்களுடன் இணைந்து, மக்களுக்காக வேலை செய்யும் போது மட்டுமே எமது பெயர் சரியாக எம்மை பிரதிபலித்துக் காட்ட முடியும். ஆகவே, நாங்கள் அனைத்துச் சமூகங்களுக்கும், அனைத்து இடங்களுக்கும், அனைத்து விதமான சமூக பொருளாதார தரத்தினருக்கும் பெருமிதத்துடன், தாழ்மையான சேவைகளை வழங்கி வருகின்றோம். குறிப்பாக, அடி மட்டத்தில் நாங்கள் வழங்கி வரும் சேவைகள் குறித்து பெருமிதமடைகின்றோம்.... வங்கியுடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கு 'தகுதியற்றவர்கள்' எனக் கருதப்படும் மக்களை நாங்கள் வங்கித்தொழில் துறைக்குள் எடுத்து வந்துள்ளோம். கண்ணியத்துடனும், செழிப்புடனும் வாழ்வதற்கு அவர்களுக்கு நாங்கள் வலுவூட்டியுள்ளோம்.

எமது **14** வாடிக்கையாளர் கணக்குகளில் **10** கணக்குகள் மேல் மாகாணத்திற்கு வெளியிலேயே உள்ளன.



ரூ. **12.3** பில்.

அரசாங்கத்திற்கான பங்களிப்பு

2007 2008 2009 2010 2011 2012

68%

எமது விநியோக நிலையங்கள் மேல் மாகாணத்திற்கு வெளியிலேயே அமைந்துள்ளன.

ரூ. **222** மில்.

விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை	பங்குபற்றியோர் எண்ணிக்கை	ஆளொரு-வருக்கான மணித்தியாலம்
கறுப்புப் பணத்தை வெள்ளையாக்குதல், பயங்கரவாத நிதிப்படுத்தல் தொடர்பான பயிற்சி	16	1,317	5,268
முகாமையாளர் மாநாடுகள்	10	191	573

உற்பத்திகளின் பொறுப்பு

இலங்கை வாழ் மக்களின் முதல் தெரிவு வங்கியாக மக்கள் வங்கியை உருவாக்குவதே எமது குறிக்கோளாக இருந்து வருகின்றது. அதன் மூலம் நிதிச் சேவைகள் துறையில் நாங்கள் முன்னணியில் இருந்து வருவதுடன், உறுதியான சமுதாயமொன்றை மேம்படுத்துவதற்கும், இலங்கை வாழ் மக்கள் அனைவருக்கும் உயர் தரமான வாழ்க்கைத் தரமொன்றை பெற்றுக் கொடுப்பதற்குமான அரசின் அபிலாஷைகளுக்கு ஆதரவளிக்கக் கூடியவர்களாகவும் இருந்து வருவோம். இதனை மேற்கொள்ளும் பொருட்டு, நாங்கள் எப்போதும் எமது திட்டங்கள் மற்றும் சேவைகள் என்பவற்றை தார்மீக பொறுப்புணர்வுடன் வடிவமைத்து, உருவாக்கியுள்ளோம். எமது திட்டங்கள் மற்றும் சேவைகள் தொகுப்பில் பங்கீடுபாட்டாளர்களுக்கு பாதிப்பையும், பிரதிகூலத்தையும் ஏற்படுத்தக் கூடிய எத்தகைய மறைமுக அம்சங்களும் இருந்து வரவில்லை என்பதனையும்,அவை எப்பொழுதும் வெளிப்படைத்தன்மை என்பவற்றைக் கொண்டவையாக இருந்து வரும் என்ற விடயத்தையும் அவர்கள் எப்பொழுதும் அறிந்திருப்பார்கள்.

உபாய ரீதியான தொடர்பாடல் அணுகுமுறை

ஊடகத் துறை மற்றும் சம்பந்தப்பட்ட பங்கீடுபாட்டாளர்கள் ஆகிய தரப்பினருடன் செயற்படும் பொழுது, எமது ஊழியர்களுக்கும், வெளி முகவர்களுக்கும் வழிகாட்டுதல்களை வழங்குவது எமது கொள்கையாகும். உபாய ரீதியான தொடர்பாடல் என்பதனை, நாங்கள் எதிர்பார்க்கும் பெறுபேறுகளை பெற்றுக் கொள்வதற்கென முன்னெடுக்கப்படும் செயல்கள், பிம்பங்கள் மற்றும் சொற்கள் என்பவற்றின் ஒரு கூட்டாக இருந்து வருகின்றதென வரைவிலக்கணம் செய்கின்றோம். எனவே, உபாய ரீதியான தொடர்பாடல் நோக்கங்களுடன் சம்பந்தப்பட்ட விதத்தில் அபிவிருத்திக் கொள்கை குறிக்கோள்களை சாதித்துக் கொள்வதில் நம்பிக்கை வைத்துள்ளோம். எமது அணுகுமுறை விழிப்புணர்வு, அக்கறை, விசாரணை என்பவற்றை தூண்டக் கூடிய விதத்தில் தகவல்கள், விடயங்கள் என்பவற்றை வெளியிடுவது தொடர்பான எமது கொள்கையை தெளிவாக வரையறை செய்கின்றது.

தொடர்பாடல் ஆளுகை மற்றும் அளவீடு

விடயம் சார்ந்த தகவல்கள் நியாயமான வங்கித்தொழில் நடைமுறைகளின் அடிப்படையான கூறாக இருந்து வருவதனை உறுதிப்படுத்தும் பொருட்டு, வாடிக்கையாளர் சாசனம் மற்றும் உரிமம் பெற்றிருக்கும் வர்த்தக வங்கிகளுக்கான நடத்தைக் கோவை என்பவற்றுக்கு இணங்கியொழுகும் விதத்தில் அனைத்து விதமான தொடர்பாடல் வடிவமைப்புக்களையும் முன்னெடுத்துச் செல்வதற்கென மக்கள் வங்கி தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது. எனவே, அனைத்து தொடர்பாடல் செயன்முறைகளும், கருப்பொருள்களும், இலக்குகளும், பங்கேற்கும் விதங்களும் அரசாங்கத்தின் அபிவிருத்திச் கொள்கைகள் மற்றும் உபாய ரீதியான நோக்கு என்பவற்றிலிருந்து பெறப்படுகின்றன.

விளம்பர முறைமைகள் எமது நிறுவன வணிகச் சின்னத்தின் குறிக்கோள்கள் மற்றும் முன்னுரிமைகள் என்பவற்றுடன் இணைந்த விதத்திலேயே இருந்து வரும். அதே வேளையில், வைப்புத் திரட்டல் செயற்பாடுகள், தொடர்பாடல் முதலீடுகளிலிருந்து உச்ச மட்ட பயனைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு, முன்னரேயே ஒப்புதல் வழங்கப்பட்ட தொடர்பாடல் செலவுத்திட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

வெளிப்படையான மற்றும் பரஸ்பர தொடர்பாடல்

வெளிப்படைத் தன்மையை உத்தரவாதப்படுத்துவதற்கான எமது கடப்பாட்டின் ஒரு பாகமாக, சமூக ரீதியில் பொருத்தமான உறவுமுறைகளை கட்டியெழுப்பும் பொருட்டு பன்முகப்பட்ட மற்றும் பக்கச்சார்பற்ற உரையாடல்களுக்கு வகை செய்து கொடுப்பதற்கென நாங்கள் உபாய ரீதியான தொடர்பாடல் முறைகளை பயன்படுத்தி வந்துள்ளோம். அனைத்து தொடர்பாடல் விடயங்களும் பொருத்தமானவையாகவும், வாடிக்கையாளர்களுடன் நேரடியாக தொடர்பை ஏற்படுத்திக் கொள்வனவாகவும் இருந்து வருவதுடன், துரிதமாக மாற்றமடைந்து வரும் பொருளாதார நிலைமைகளையும் அவை கவனத்தில் எடுக்கின்றன.

பங்குதாரர்களுடனான தொடர்பாடல்

இலங்கை அரசாங்கம் வங்கியின் முக்கியமான ஒரு பங்குதாரராக இருந்து வரும் நிலையின் அடிப்படையில், நாங்கள் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சுடன் தொடர்ச்சியான உரையாடல்களை பராமரித்து வருகின்றோம். ஒழுங்கான அடிப்படையில் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருவதுடன், வங்கியின் பிராந்திய முகாமைத்துவ உறுப்பினர்களும் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளும் அவற்றில் பங்கேற்கின்றார்கள். மேலும், பொதுச் சபை கூட்டங்களும் ஒழுங்கான அடிப்படையில் நடத்தப்பட்டு வருகின்றன. பங்குதாரர்களின் அபிப்பிராயங்களை பெற்றுக் கொள்வதற்கும், அந்த அபிப்பிராயங்கள் சம்பந்தமான விவகாரங்களை தீர்த்துக் கொள்வதற்குமென இக்கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.

ஊழியர்களுடனான தொடர்பாடல்

வங்கி அதன் அனைத்து அம்சங்களிலும் 'கீழிருந்து மேலே' அணுகுமுறையை பின்பற்றி வருகின்றது. குறிப்பாக, வங்கியின் முதன்மைக் கூறொன்றாக இருந்து வரும் எமது ஊழயர்களுடனான உறவுகளில் இத்தகைய அணுகுமுறையை பின்பற்றுகின்றோம். வங்கியின் ஒட்டுமொத்த உபாய ரீதியான நெறிப்படுத்தல், நிறுவனத் திட்டம் மற்றும் வருடாந்த வரவுசெலவுத் திட்டம் என்பன தொடர்பான பல்வேறு பிரச்சினைகள் குறித்து கூட்டு முகாமைத்துவத்தின் அனைத்து உறுப்பினர்களுடனும் தொடர்ச்சியான அடிப்படையில் ஒரு உரையாடல் நடைபெற்று வருகின்றது.

கூட்டு முகாமைத்துவம் நிறைவேற்று முகாமைத்துவத்தின் உறுப்பினர்கள், பிராந்திய முகாமையாளர்கள் மற்றும் கிளை முகாமையாளர்கள் ஆகியோருடன் அடிக்கடி சந்திப்புக்களை நடத்தி இலக்குகளை அவர்களுக்கு எடுத்து விளக்குவதுடன், கடந்த கால செயலாற்றுகையையும் மதிப்பிடுகின்றார்கள். அடிக்கடி இடம்பெறும் முகாமையாளர்களின் மாநாடுகளில் சபை உறுப்பினர்களுடன் இணைந்த விதத்தில் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

முகாமையாளர் மாநாடு வங்கியை பொறுத்தவரையில் மிகவும் அடிப்படையான ஒரு அம்சமாக இருந்து வருகின்றது. இது ஒரு திறந்த அரங்காக இருந்து வருவதனால் பங்கேற்பாளர்கள் அக்கறைக்குரிய விடயங்கள் குறித்து தெளிவுப்படுத்தல்களை பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு அவர்களுக்கு கிடைக்கின்றது. மேலும், வங்கி அதன் தொழிற் சங்கங்களுடன் தொடர்புகளை பராமரித்து வருவதுடன், சிறந்த ஆளுகை சம்பந்தப்பட்ட விடயங்கள் குறித்து தொழில் சங்கங்களுடன் ஒழுங்கான அடிப்படையில் கலந்தாலோசனைகளை நடத்தி வருகின்றது.

வியாபாரக் குறியின் பெறுமதி /நிலைநிறுத்துதல்

இந்த விடயத்தில் நாங்கள் அனைவர் உள்ளங்களிலும் முன்னணி ஸ்தானத்தில் இருந்து வருவதற்கு விரும்புவதுடன், எமது வங்கி மக்களின் முதல் தெரிவாக இருந்து வர வேண்டுமெனவும் விரும்புகின்றோம். ஒரு வியாபாரக் குறி என்ற முறையில் எம்மை நிலைநிறுத்தும் விடயத்தில் அனைவரது உள்ளங்களிலும் குடிகொண்டிருக்கும் 'வணிகச் சின்னம்' என்பதே எமது குறிக்கோளாக இருந்து வருகின்றது. நாங்கள் ஆக்கபூர்வமான, அசலான அணுகுமுறைகளை பயன்படுத்திக் கொள்வதன் மூலம் அதனை நிறைவேற்றிக் கொள்வதற்கு முயற்சித்து வந்துள்ளோம். மேலும் சக்தி, உறுதிப்பாடு, நம்பிக்கை மற்றும் எளிதில் அணுகக்கூடிய வாய்ப்பு ஆகிய எமது அடிப்படை விழுமியங்களுடன் தொடர்பாடல் தொனிப்பொருள்கள் இணைக்கப்பட்டிருப்பதனை நாம் உறுதிப்படுத்திக் கொள்கின்றோம்.

பங்கீடுபாட்டாளர் அணுகுமுறை

மக்கள் வங்கியில் நாங்கள் போஷித்து வளர்த்து வந்திருக்கும் பங்கீடுபாட்டாளர்கள் சூழல் அனைவரையும் உள்ளடக்கும் ஒரு சூழலாக இருந்து வருகின்றது கலாசார, இன அல்லது மத அடிப்படையில் எவரையும் அவை வேறுபடுத்திப் பார்ப்பதில்லை. சமூகத்தின் அனைத்துத் தரப்பினர்களுடனும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு நாங்கள் விரும்புவதுடன், இலங்கை கலாசாரத்தின் பன்முகத் தன்மையை பராமரித்து வருவதற்கும், பன்முகப்படுத்துவதற்கும் விரும்புகின்றோம். மேலும், வளர்ச்சியில் எமது பங்காளர்களாக இருந்து வரும் சிவில் சமூகம், சமூகத் தலைவர்கள், அரசாங்கம், அந்தந்த பிரதேசங்களைச் சேர்ந்த முடிவெடுப்பவர்கள் ஆகிய தரப்பினருடன் தொடர்புகளை பராமரித்து வருவதும் எமது நோக்கமாக இருந்து வருகின்றது. சவால்கள் மற்றும் இடையூறுகள் என்பவற்றை எதிர்கொண்டு வரும் பொழுது, எமக்கு ஒரு மேலதிக நோக்கை பெற்றுக் கொள்ளும் பொருட்டு, நாங்கள் செயல்திறன்மிக்க ஒரே சீரான செயன்முறைகளை பின்பற்றி வந்திருக்கின்றோம். அதன் மூலம் அபிவிருத்தியை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு, எமது பங்கீடுபாட்டாளர்களுடன் கூட்டாக இணைந்து செயற்படக் கூடிய வாய்ப்பு எமக்குக் கிடைக்கின்றது.

கடந்த வருடத்தின் போது எமது முதன்மையான பங்கீடுபாட்டாளர்களுடன் தொடர்புகளை பராமரித்து வந்த விதம் கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் எடுத்து விளக்கப்பட்டுள்ளது:

பங்கீடுபாட்டாளர்கள்	தொடர்புகள் பராமரிக்கப்பட்ட விதம்
அரசாங்கம்	● அரங்குகள் மற்றும் மாநாடுகள் ● கூட்டங்கள் ● செய்தி வெளியீடுகள் ● ஆண்டறிக்கைகள் ● இடைக்கால நிதிசார் அறிக்கைகள் ● செய்தியாளர் மாநாடுகள் மற்றும் ஊடக செய்தி வெளியீடுகள் ● நிறுவனத்தின் இணையதளம் ● கூட்டங்கள் மற்றும் தொலைபேசி மாநாடுகள்
ஒழுங்குமுறைப்படுத்துனர்கள் (இமவ, நிஅ, CASL முதலியவை)	● நேரடி விஜயங்கள் ● கலந்துரையாடல்கள் மற்றும் சந்திப்புக்கள் ● காலத்துக்கு காலம் இடம்பெறும் மீளாய்வு அமர்வுகள் ● இணங்கியொழுகும் திணைக்களம் இமவ உடன் ஒருங்கிணைப்பு செய்தல் ● இடைக்கால நிதிசார் அறிக்கைகள்
ஊழியர்கள், தொழிற் சங்கங்கள்	● ஊழியர் சந்திப்புக்கள் ● வரையறுக்கப்பட்ட அனுகூலத் திட்டம் ● பரஸ்பரம் இணங்கிய செயலாற்றுகை ● உள்ளக சுற்றறிக்கைகள் ● தொழிற் சங்கங்களுடனான நேரடிச் சந்திப்பு ● ஊழியர் மதிபீட்டாய்வுகள் ● செயலாற்றுகை மீளாய்வு முறைமைகள் ● ஊழியர் பயிற்சி செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகள் ● மின்னஞ்சல் செய்தி விவரணங்கள் ● புதிர் போட்டிகள், ஊழியர்களின் பிள்ளைகளுக்கான விருந்துபசார வைபவங்கள், சமய நடவடிக்கைகள் போன்ற விசேட நிகழ்வுகள்
வாடிக்கையாளர்கள்	● கிளைகள் மற்றும் சேவை நிலையங்கள் ● ஆண்டறிக்கைகள் ● நிறுவனத்தின் இணையதளம் ● எழுத்து மூலமான தொடர்பாடல் மற்றும் பதிலளித்தல் ● அழைப்பு நிலையங்கள் ● செய்தி வெளியீடுகள் ● வாடிக்கையாளர் சந்திப்புக்கள் ● வாடிக்கையாளர் திருப்தி குறித்த மதிப்பீட்டாய்வுகள்

பங்கீடுபாட்டாளர்கள்	தொடர்புகள் பராமரிக்கப்பட்ட விதம்
சமூகம்	● நிறுவனத் துறையின் சமூகப் பொறுப்பு அடிப்படையிலான செயற்பாடுகள்
	● நிறுவனத்தின் இணையதளம்
	● அனுசரணை வழங்குதல்
	● புலமைப் பரிசில் வழங்குதல்
	● பொது நிகழ்ச்சிகள்
	● மாநாடுகள்
	● கிளைகள்
	● ஊடகம்
	● அழைப்பு நிலையம்
ஊடகங்கள்	● செய்தி வெளியீடுகள்
	● ஆண்டறிக்கை
	● செய்தியாளர் மாநாடுகள்
	● நிறுவனத்தின் இணையதளம்
	● இடைக்கால நிதிசார் அறிக்கைகள்
	● ஊடக ஒன்றுகூடல்
வழங்குனர்கள்	● நேரடி விஜயங்கள் மற்றும் சந்திப்புக்கள்
	● அச்சு ஊடகங்களில் பொது அறிவித்தல்

பொருளாதார செயலாற்றுகை

நாங்கள் திறைசேரிக்கும் அதன் மூலம் இலங்கையின் அபிவிருத்தி யுக்திகளுக்கும், கருத்திட்டங்களுக்கும் நேரடியாக பங்களிப்புச செய்து வரும் காரணத்தினால் எமது பொருளாதார செயலாற்றுகை தேச முன்னேற்றத்துடன் மிகவும் நெருக்கமான விதத்தில் பிணைந்துள்ளது. எம்மிடம் வைத்திருக்கும் தமது முதலீடுகள் எமது தேசத்தை அபிவிருத்தி செய்வதில் ஒரு பாத்திரத்தை வகித்து வரும் என்ற விடயத்தை அறிந்த நிலையில் வாடிக்கையாளர்கள் நம்பிக்கையுடன் இருந்து வருகின்றார்கள்.

மீளாய்வுக்குட்படுத்தப்படும் இவ்வருடத்தின் போது, மக்கள் வங்கி ரூ. 94.8 பில்லியனை மொத்த வருமானமாக பெற்றுக் கொண்டிருந்தது. கடந்த ஆண்டின் மொத்த வருமானமான ரூ. 68.3 பில்லியனுடன் ஒப்பிடும் பொழுது, இது 38.8% அதிகரிப்பை காட்டுகின்றது. நாங்கள் தேசிய திறைசேரிக்கு ரூ. 4.5 பில்லியன் பங்களிப்பை வழங்கியிருப்பதனால் எமது செயலாற்றுகையின் பயன்கள் பெருமளவுக்கு அரசாங்கத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து வந்துள்ளன.

எமது பொருளாதார செயலாற்றுகை தேச முன்னேற்றத்துடன் மிக நெருக்கமான விதத்தில் பிணைந்துள்ளது.

பெறுமதிசேர் கூற்று மற்றும் வருமான மூலங்கள் மற்றும் பயன்பாடு தொடர்பான பகுப்பாய்வு என்பன முறையே பக்கங்கள் 244 மற்றும் 255 இல் தரப்பட்டுள்ளன.

அரசாங்கத்திடமிருந்து கிடைத்த முக்கியமான நிதிசார் உதவி

இலங்கை அரசாங்கம் தற்பொழுது வங்கியின் உரித்தில் 92% ஐ கொண்டுள்ளது. எனவே, வங்கியின் முன்னேற்றத்திலும், அபிவிருத்தியிலும் அது முக்கியமான ஒரு அக்கறையை கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் அரசாங்க மூலங்களிலிருந்து மக்கள் வங்கிக்கு கணிசமான அளவிலான நிதிசார் வலுவூட்டல் கிடைத்து வருகின்றது என்ற விடயம் வியப்புக்குரியதல்ல. நிலைத்து நிற்கும் ஆற்றல் குறித்த அறிக்கையிடலின் வெளிப்படைத் தன்மை கோட்பாடுகளுடன் இணைந்த விதத்தில், மீளாய்வுக்குட்படுத்தப்படும் காலப் பிரிவின் போது வங்கிக்கு வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் தொகைகள் குறித்த விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

தலைப்பு	திட்டத்தின் பெயர்	கடனளிப்பவர் மற்றும் நிபந்தனைகள்	தகுதிபெறும் துறை	31.12.12 இல் வழங்கப்பட்டிருந்த கடன்கள்	31.12.12 இல் நிலுவையாக இருக்கும் மொத்தக் கடன்கள் ரூ. மில்.
வட்டி மானியத் திட்டங்கள்	அரசாங்க ஊழியர்களுக்கான விசேட வீடமைப்பு கடன்கள்	ரூ. 500,000/- - 10.5% ரூ. 500,001/- - 1.0 மில். - 6.5% ரூ. 1.0 மில். - 3.5% மேல். இலங்கை அரசாங்கத்தின் வட்டி மானியம்	ஐந்து வருட சேவை ஒய்வூதியத்திற்கான உரித்து என்பவற்றை கொண்டிருப்பதுடன், பதவி நிரந்தரமாக்கப் பட்டிருக்கும் அரசாங்க ஊழியர்கள்.	37,887	25,591.6
	UGC யின் கீழ் பல்கலைக்கழக ஊழியர்களுக்கான விசேட வீடமைப்பு கடன்கள்	ரூ. 1.0 மில். - 5.5% ரூ. 1.0 மில்.- ரூ. 2.0 மில். - 5.0% இலங்கை அரசாங்கத்தின் வட்டி மானியம்	1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கும் பல்கலைக்கழகமொன்றின் ஊழியர்கள் - ஐந்து வருட சேவை, பதவி நிரந்தரம்	130	149.9
	மோட்டார் சைக்கிள், கணனி, கெமராக்கள், ஊடக உபகரணங்கள் கொள்வனவுக்கு ஊடகவியாளர்களுக்கு சலுகை நியதிகளில் கடன்திட்டம்	இலங்கை அரசாங்கத்தின் வட்டி மானியம் 9%	ஊடக மற்றும் தகவல் அமைச்சினால் பரிந்துரைக்கப்படும் ஊடகவியலாளர்கள்	152	8.8

சிறிய நடுத்தர தொழில்முயற்சிகள் அபிவிருத்தி திட்டங்கள்

தலைப்பு	திட்டத்தின் பெயர்	வழங்குனர் மற்றும் நிபந்தனைகள்	தகுதிபெறும் துறை	31.12.12 இல் வழங்கப்பட்டிந்த கடன்களின் எண்ணிக்கை	31.12.12 இல் நிலுவையாக இருக்கும் மொத்த கடன்கள் ரூ. மில்.
மீள் நிதி திட்டங்கள்	சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி அபிவிருத்தி வசதி திட்டம்	முகவர் - உலக வங்கி கடன் உச்ச வரம்பு - ரூ. 60 மில். கடன் எடுக்கும் வட்டி விகிதம் - ஆறு மாதங்கள் AWDR கடன் கொடுக்கும் வட்டி விகிதம் - ஆறு மாதங்கள் AWDR + 2% உச்ச வரம்பு காலம் - 10 வருடங்கள் உச்ச வரம்பு கருணை காலம் - 2 வருடங்கள்	விவசாய கருத்திட்டங்கள் பெறுமதிச் சேர்க்கை கொண்ட ஏதேனும் கைத்தொழில் அல்லது சேவை நிர்மாணங்கள் பால் பண்ணை மற்றும் சம்பந்தப்பட்ட உற்பத்திகள் கல்வி கடற்றொழில் ஆடை கைத்தொழில் சுகாதார சேவைகள் கைத்தொழில்கள் கால்நடை அலங்கார மீன் அச்சிடல் சேவைகள் சுற்றுலா கைத்தொழில்	31	264.1

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அலகு, அபிவிருத்தி மற்றும் நுண் நிதி திணைக்களம் என்பன வங்கியின் முதன்மையான பிரிவுகளாக இருந்து வருகின்றன. எமது சமூகத்தை மேம்படுத்தும் எமது விழுமியத்தின் உள்ளார்ந்த பாகமாக அவை இருந்து வருகின்றன. அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி அடி மட்டத்திலிருந்து தூண்டப்பட வேண்டும் என்ற விடயத்தில் நாங்கள் நம்பிக்கை வைத்திருப்பதனால், இந்தப் பிரிவுகள் அனைவரையும் உள்ளடக்கிக் கொள்ளல் மற்றும் தேச வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்தல் என்ற வங்கியின் வகி பாத்திரத்தை நிறைவேற்றி வைப்பதில் ஒரு முக்கியமான பாத்திரத்தை வகித்து வருகின்றன.

இந்த அட்டவணைகளை உன்னிப்பாக அவதானிக்கும் பொழுது, எமது முயற்சிகளின் மூலம் பயனடையும் துறைகளையும், இப்பிரிவுகளைச் சேர்ந்த மக்களின் வாழ்வாதாரங்களின் மேம்பாட்டுக்கும், வளர்ச்சிக்கும் மக்கள் வங்கி வழங்கி வரும் உதவியையும் தெளிவாக அவதானிக்க முடியும்.

அபிவிருத்தி மற்றும் நுண்நிதி தினைக்களம்

கடன் திட்டத்தின் பெயர்	நிபந்தனைகள் மற்றும் கடனளிப்பவர்		தகுதி பெறும் துறைகள்	கடன்களின் எண்ணிக்கை	நிலுவைத் தொகை ரூ. மில்.
1. வட்டி மானியம்					
குருஷி நவோதய கடன் திட்டம்	இலங்கை மத்திய வங்கி		விவசாயம்	8,108	17.3
விவசாய கால்நடை அபிவிருத்தி கடன் திட்டம் (ALDL)	இலங்கை மத்திய வங்கி	6% & 2%	கால்நடை	3,872	220.7
வாழ்க்கைத் தர மேம்பாட்டு கடன் திட்டம் புனர் வாழ்வளித்தல் நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருக்கும் சமூகத்துடன் ஒருங்கிணைக்கப்பட்ட பயிலுனர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான கடன் திட்டம் (REPPIA)	ஆட்கள் சொத்துக்கள் மற்றும் கைத்தொழில் புனருத்தாரண அதிகார சபை	8%	வெற்றிகரமாக புனர் வாழ்வளிக்கும் நிகழ்ச்சித்திட்டங்களை பூர்த்தி செய்திருக்கும் சமூகத்துடன் ஒருங்கிணைக்கப்பட்ட பயிலுனர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்	479	76.5
NCRCS - விவசாயம் - 2012/13பெரும் போகம்	இலங்கை மத்திய வங்கி	6%	விவசாயம்	9,754	786.5
NCRCS - விவசாயம் - 2012 சிறு போகம்	இலங்கை மத்திய வங்கி	6%		7,254	334.5
NCRCS - விவசாயம் - 2011/12 பெரும் போகம்	இலங்கை மத்திய வங்கி	6%		15,125	293.6
NCRCS - விவசாயம் - 2011 சிறு போகம்	இலங்கை மத்திய வங்கி	6%		7,015	28.7
NCRCS - விவசாயம் - 2010/11 பெரும் போகம்	இலங்கை மத்திய வங்கி	6%		13,258	48.3
உப மொத்தம்				64,865	1,805.8
2. மீள் நிதி					
வடக்கின் எழுச்சி (சுழல் நிதியம்)	இலங்கை மத்திய வங்கி	90%	விவசாய, பொருளாதார நடவடிக்கைகள்	787	117.9
கிழக்கின் எழுச்சி (சுழல் நிதியம்)	இலங்கை மத்திய வங்கி	100%	விவசாய, பொருளாதார நடவடிக்கைகள்	1,109	149.6
வடக்கின் எழுச்சி கடன் திட்டம்	இலங்கை மத்திய வங்கி	90%	விவசாய, பொருளாதார நடவடிக்கைகள்	5,787	223.0
கிழக்கின் எழுச்சி கடன் திட்டம்	இலங்கை மத்திய வங்கி	100%	விவசாய, பொருளாதார நடவடிக்கைகள்	3,521	174.3
மாகாண அபிவிருத்தி கடன் திட்டம்	இலங்கை மத்திய வங்கி	100%	விவசாய, பொருளாதார நடவடிக்கைகள்	3,120	739.3
விஸ்கம் கடன் திட்டம்	இலங்கை மத்திய வங்கி	100%	விவசாயம் மற்றும் கால்நடை	184	372.2
வறுமை ஒழிப்பு நுண்நிதி சுழல் நிதி கருத்திட்டம் (PAMP RF)	இலங்கை மத்திய வங்கி	100%	சிறு கைத்தொழில், விவசாயம்	314	13.4
வறுமை ஒழிப்பு நுண்நிதி கருத்திட்ட கடன் திட்டம் (PAMP - 11)	இலங்கை மத்திய வங்கி	100%	சிறு கைத்தொழில், விவசாயம்	12,160	245.4
சவ்பாக்கியா கடன் திட்டம்	இலங்கை மத்திய வங்கி	100%	நுண் மட்ட, சிறிய, நடுத்தர தொழில் முயற்சியாளர்கள்	1,549	298.3
உலர் வலய வாழ்வாதார ஆதரவு, பங்குதாரர் நிகழ்ச்சித்திட்ட கடன் திட்டம் (பாக்கியா கடன் திட்டம்)	இலங்கை மத்திய வங்கி	100%	விவசாய, நுண்நிதி நடவடிக்கைகள்	1,062	28.8
தசுனா கடன் திட்டம்	தேசிய அபிவிருத்தி வங்கி	100%	விவசாயம், நுண்நிதி நடவடிக்கைகள்	82	12.8
சுய தொழில் அபிவிருத்தி கடன் திட்டம்	இலங்கை மத்திய வங்கி	100%	அங்கீகரிக்கப்பட்ட தொழிற் பயிற்சி நிலையங்களிலிருந்து வெளியேறிய பயிற்றப்பட்ட இளைஞர்களுக்கு சுய தொழில் கருத்திட்டங்களை உருவாக்குவதற்கு	237	24.9

கடன் திட்டத்தின் பெயர்	நிபந்தனைகள் மற்றும் கடனளிப்பவர்		தகுதி பெறும் துறைகள்	கடன்களின் எண்ணிக்கை	நிலுவைத் தொகை ரூ. மில்.
சுனாமிக்கு பிற்பட்ட கரையோர புனருத்தாரண, வள முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் (PTCRRMP)	இலங்கை மத்திய வங்கி	100%	சுனாமியினால் மோசமாக பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கான வருமான உருவாக்க நடவடிக்கைகள்	670	35.3
SPEnDP கடன் திட்டம்	இலங்கை மத்திய வங்கி	100%	விவசாய, நுண்நிதி நடவடிக்கைகள்	149	14.2
கப்ருக ஆயோஜனா கடன் திட்டம்	தெங்கு பயிர்செய்கை திணைக்களம்	100%	தெங்கு பயிர்செய்கை, அபிவிருத்தி	1,074	38.8
வறுமை ஒழிப்பு நுண்நிதி கருத்திட்டம் (PAMP) கடன் திட்டம் (வ, கி) மற்றும் (சுழல் நிதியம்)	இலங்கை மத்திய வங்கி	100%	சிறு கைத்தொழில், விவசாயம்	9,699	24.6
வறுமை ஒழிப்பு சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி கடன் திட்டம் (NDTF கடன் திட்டம்)	இலங்கை மத்திய வங்கி	100%	சிறு கைத்தொழில், விவசாயம்	2,041	6.8
தேயிலை அபிவிருத்தி கடன் திட்டம்	இலங்கை மத்திய வங்கி	87%	தேயிலை பயிர்ச்செய்கை	172	24.3
விதாதா கடன் திட்டம	தேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியம்	100%	விதாதா நிலையங்களில் பயிற்றப்பட்ட நபர்களுக்கு தமது சொந்த சுய தொழில் திட்டங்களை ஸ்தாபித்துக் கொள்வதற்கு	1,889	9.6
சபரகமுவ மாகாண ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி கருத்திட்ட சுழல் நிதி கடன் திட்டம் (SPIRDPRF)	இலங்கை மத்திய வங்கி	100%	சபரகமுவ மாகாண மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்	248	3.0
கப்ருக நிபயும் திரிய கடன் திட்டம்	தெங்கு பயிர்செய்கை திணைக்களம்		தெங்கு பயிர்செய்கை, அபிவிருத்தி	25	13.6
சூழலுக்கு உசிதமான சுழல் நிதிய கடன் திட்டம்	தேசிய அபிவிருத்தி வங்கி	100%	எந்தவொரு சூழலுக்கு உசிதமான தீர்வுக்கும்	1	0.4
திறன் அபிவிருத்தி கடன் திட்டம்	இலங்கை மத்திய வங்கி	100%	தொழில் நுட்ப நோக்கங்களுக்கு	84	2.4
இரண்டாவது பல்லாண்டு பயிர் அபிவிருத்தி கடன் திட்டம்	இலங்கை மத்திய வங்கி	100%	பயிர்செய்கை	219	1.3
ஜீவன சக்தி	இலங்கை மத்திய வங்கி	100%	நுண் நிதி பிரிவுகள்	980	2.4
தேயிலை நிவாரண பொதி (தொழில் மூலதன கடன்)	இலங்கை மத்திய வங்கி	100%	தேயிலைப் பயிர்ச்செய்கை	7	22.3
நிர்மாணப் பிரிவு அபிவிருத்தி கருத்திட்டம் (CSDP)	இலங்கை மத்திய வங்கி	100%	கட்டடவாக்கங்கள்	16	44.5
உப மொத்தம்				47,186	2,642.9
3. ஏனையவை	இல்லை				
கூட்டு மொத்தம்				112,051	4,449

சமூகத் தாக்கம்

எமது பெயர் எடுத்துக் காட்டுவது போல மக்களே எமது இருப்பின் முதன்மைக் கூறாக இருந்து வருகின்றார்கள். எனவே, சமூகத்தின் நிலைத்து நிற்கும் ஆற்றலின் கண்ணோட்டத்தின் அடிப்படையில், எமது செயற்பாடுகள் மக்கள் மீது எடுத்து வரும் தாக்கம் பரோபகாரத்தின் அடிப்படையில் கட்டியெழுப்பப்படவில்லை. மாறாக அது, மக்களின், நிறுவனங்களின் ஆற்றலை கட்டியெழுப்பும் விதத்திலேயே உருவாக்கப்பட்டிருக்கின்றது. நாங்கள் எங்கள் சொந்த அணியினரையும் உள்ளடக்கிய விதத்தில் பங்கீடுபாட்டாளர்களால் நெறிப்படுத்தப்படுவதுடன், இந்தச் சமூக பரிமாணங்களுக்குள் ஒரு சமூக பிரக்ஞையை ஒருங்கிணைக்கக்கூடிய முன் முயற்சிகளையும், கருத்திட்டங்களையும் தூண்டி விடும் ஒரு செயன்முறையை ஆரம்பித்துள்ளோம். நிலைத்து நிற்கும் ஆற்றல் என்பது சம்பந்தப்பட்ட எமது பங்கீடுபாட்டாளர்களை உள்ளடக்கும் அனைத்துமடங்கிய முனைப்பான ஒரு செயன்முறையாக இருந்து வர வேண்டுமென்பதில் நாங்கள் உயரளவில் அக்கறை செலுத்தி வருகின்றோம். எமது சமூகப் பொறுப்புக்கள் எமது அணி, எமது சூழலிலுள்ள சமூகம் என்பவற்றை உள்ளடக்கியிருப்பதுடன், அவர்கள் தொடர்பான எமது கடப்பாடு இரு வழிப் பாதையாக இருந்து வருகின்றது. எமது பங்கீடுபாட்டாளர்களுக்காக நிலைபேறான மற்றும் வலுவூட்டப்பட்ட அத்திவாரத்தை கட்டியெழுப்ப வேண்டுமென்பதில் நாங்கள் உறுதியாக இருந்து வருகின்றோம். அது எமது தேசத்தின் வளர்ச்சிக்கு ஒரு உந்து விசையாக இருந்து வரும்.

தொழில் நடைமுறைகள் மற்றும் கண்ணியமான வேலை

எம்மை உந்திச் செல்லும் அணி

மக்கள் வங்கியில் இருக்கும் எமது ஊழியர் அணியினர் எமது நோக்கு மற்றும் பணி என்பவற்றில் முழுமையாக கவனம் செலுத்திய விதத்தில் இயங்கி வருகின்றனர். அதன் மூலம் தமது முன்னோக்கிய பயணத்தின் போது நிலைத்து நிற்கக் கூடிய நடைமுறைகளை தழுவிக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது. அதே போல, மிகச் சிறந்தவர்களை மட்டுமே ஆட்சேர்ப்புச் செய்து, அபிவிருத்தி செய்து, பயிற்றுவிப்பதற்கென எம்மை அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் வேலை கொள்வோராகவும் நாம் இருந்து வருகின்றோம். எமது தேசிய திட்டத்தின் வெற்றிக்கு சிறந்தவர்களிலும், மிகச் சிறந்தவர்கள் மட்டுமே பங்களிக்க முடியும்மென்பதே எமது கொள்கையாக இருந்து வருகின்றது. எனவே, உலகளாவிய ரீதியிலான நடைமுறைகள், தரநியமங்கள் மற்றும் நிலைத்து நிற்கும் தன்மை என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கு எமது ஊழியர்களைத் தூண்டும் ஒரே சீரான வலுவூட்டப்பட்ட ஒரு பணிச் சூழலை உருவாக்குவதே எமது நோக்கமாக உள்ளது.

மக்கள் வங்கியின் மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 10,685 ஆகும் அவர்களில் 7,823 பேர் நிரந்தர ஊழியர்களாக இருந்து வருவதுடன், 2,862 பேர் வெளியிலிருந்து பெற்றுக் கொள்ளப்படும் ஊழியர்களாகவும், பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவ மாணவியர்களாகவும் உள்ளார்கள்.

எமது நிரந்தர ஊழியர்களில் 95% இனர் எமது கூட்டு பேரம் பேசும் ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

மனித வளக் கொள்கைகள் மற்றும் கோட்பாடுகள்

- வங்கி அனைவருக்கும் சமமான வாய்ப்புக்களை வழங்கும் ஓர் வேலை கொள்வோராகும்.
- சர்வதேச தொழில் தாபனத்தின் கோட்பாடுகள், இலங்கை தொழில் ஒழுங்குவிதிகள் மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய அமைப்புக்களின் ஒழுங்குவிதிகள் மற்றும் தொழில் நடைமுறைகள் என்பவற்றுக்கு வங்கி இணங்கியொழுகின்றது.
- வங்கி பாரபட்சம் காட்டுதலை அல்லது சிறுவர் உழைப்பை மேற்கொள்வதுமில்லை மேம்படுத்துவதுமில்லை.
- வங்கி தகுதியானவர்களுக்கு தகுதியின் அடிப்படையில் இடமளித்தல் மற்றும் சமத்துவம் என்பவற்றை மேம்படுத்தி வருகின்றது.
- இலஞ்சம், ஊழல் என்பன வெறுத்தொதுக்கப்பட்டு வருகின்றது.
- மூன்றாம் தரப்பு ஒப்பந்தக்காரர்கள் எமது விழுமியங்களை ஏற்று பின்பற்ற வேண்டும் என்றும், தொழில் ஒழுங்குவிதிகள் மற்றும் சிறந்த ஊழியர் நடைமுறைகள் என்பவற்றுக்கு இணங்கியொழுக வேண்டுமென்றும் வங்கி வலியுறுத்தி வருகின்றது.

ஊழியர் படையிலுள்ள ஒவ்வொரு ஊழியரும் அவர் நாட்டின் எந்த இடத்தில் பணிபுரிந்து வந்தாலும், அனைவருக்கும் சமமான வாய்ப்புக்களை வழங்க வேண்டுமென்ற வங்கியின் கடப்பாட்டினை கீழேயுள்ள அட்டை எடுத்துக் காட்டுகின்றது.

டிசம்பர் 31, 2012 இல் உள்ளவாறு மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை

	தற்போதைய ஊழியர் எண்ணிக்கை
டிசம்பர் 31, 2012 இல் ஊழியர்கள்	7,449
ஒப்பந்த ஊழியர்கள்	
கூட்டு மற்றும் நிறைவேற்று முகாமைத்துவம்	
பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர்	1
கூட்டு முகாமைத்துவம்	5
	6

	தற்போதைய ஊழியர் எண்ணிக்கை
ஏனைய ஒப்பந்த ஊழியர்கள்	
சந்தைப் புலனாய்வு/முகாமை தகவல் சேவை உதவியாளர்	1
உதவி பொறியியலாளர்	3
உதவி சட்ட உத்தியோகத்தர்	13
சிரேஷ்ட நீதிமன்ற உதவியாளர்	1
நீதிமன்ற இலிகிதர்	14
கணக்காய்வு உத்தியோகத்தர்	1
ஊடக உதவியாளர்	1
தட்டச்சாளர்கள்	50
பல் கருமa உதவியாளர்கள்	37
மின்னியலாளர்கள்	9
நீர்க்குழாய் பொருத்துனர்கள்	1
சாரதிகள்	10
தொழில்நுட்ப உதவியாளர்	3
ஒப்பந்த ஊழியர்கள் (கூட்டு, நிறைவேற்று மற்றும் ஏனைய)	150
முகாமைத்துவ பயிலுனர்கள்	210
வாடிக்கையாளர் சேவை உதவியாளர் (ஒப்பந்தம்)	14
மொத்த ஒப்பந்த ஊழியர்களின் எண்ணிக்கை	374
டிசம்பர் 31, 2012 (வெளியிலிருந்து பெறப்பட்டவர்கள் தவிர) வங்கியின் மொத்த ஊழியர்கள்	7,823
பல்கலைக்கழகத்திற்கு தெரிவானவர்கள்	904
வெளியிலிருந்து சேவை பெறப்பட்டவரக்ள்	1,958
டிசம்பர் 31, 2012 வங்கியின் மொத்த ஊழியர்கள்	10,685

ஊழியர் எண்ணிக்கை, நிரந்தர ஊழியர்களின் பால் பகுப்பாய்வு

டிசம்பர் 31, 2012 இல் உள்ளவாறு	ஆண்	பெண்	மொத்தம்
கூட்டு முகாமைத்துவம்	12	5	17
நிறைவேற்று முகாமைத்துவம்	19	10	29
உத்தியோகத்தர்கள் (3-III - தரம் I)	1,565	1,640	3,205
பதவி நிலை உதவியாளர் தரம்	1,191	2,078	3,269
ஏனைய வகைகள்	654	281	935
முகாமைத்துவ பயிலுனர்கள்	81	129	210
வாடிக்கையாளர் சேவை உதவியாளர்கள்	2	12	14
ஏனைய ஒப்பந்த ஊழியர்கள்	45	99	144
மொத்தம்	3,569	4,254	7,823

ஊழியர் எண்ணிக்கை, பால்நிலை பகுப்பாய்வு (3-I மற்றும் அதற்கு மேல்)

டிசம்பர் 31, 2012 இல் உள்ளவாறு	ஆண்	பெண்	மொத்தம்
கூட்டு முகாமைத்துவம் (நிரந்தரம், ஒப்பந்தம்)	12	5	17
நிறைவேற்று முகாமைத்துவம் (நிரந்தரம், ஒப்பந்தம்)	19	10	29
பிரதம முகாமையாளர்கள் (தரம் I)	45	21	66
சிரேஷ்ட முகாமையாளர்கள் (தரம் II)	83	61	144
முகாமையாளர்கள் (3-I)	198	140	338
மொத்தம்	357	237	594

ஆட்சேர்ப்பு

பன்முகத் தன்மைக்கு மத்தியில் நாங்கள் மேம்படுத்தி வரும் ஒற்றுமையே எமது வெற்றிக்கான காரணமாக இருந்து வருகின்றது என நாங்கள் உறுதியாக நம்புகின்றோம். வங்கியில் நாங்கள் கொண்டிருக்கும் ஊழியர் அணியினர் உயரளவிலான சாதனைகளை நிகழ்த்தக் கூடியவர்களாகவும், சகிப்புத் தன்மை, ஒற்றுமை மற்றும் தொழில் முனைவுத் திறன் என்பவற்றை கொண்டவர்களாகவும் இருந்து வருகின்றனர். பல் கலாசார பல் பரிமாணங்களை கொண்ட எமது ஊழியர்கள் திட்டமிடப்பட்ட ஒரு நோக்கின் அடிப்படையில் மிகவும் கவனமான விதத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். அதன் காரணமாக அவர்கள் ஒவ்வொருவரும் தமது தனிப்பட்ட மற்றும் தம்மால் வழங்கக் கூடிய உச்ச மட்ட பங்களிப்பை வங்கிக்கு வழங்குகின்றார்கள். எனவே, வங்கிக்குள் உயர் சாதனையை நிகழ்த்தும் ஒரு கலாசாரத்தை உறுதிப்படுத்துவதில் இந்த பன்முகச் சூழல் ஒரு முக்கியமான காரணியாக இருந்து வருகின்றது என நாம் நம்புகின்றோம். அது எதிர்கால சவால்களை எதிர்கொள்ளக் கூடிய நிலையில் நெறிப்படுத்தப்பட்டிருக்கும் அதே வேளையில், ஊழியர் அணியின் ஒவ்வொரு ஊழியரும் தமது தனிப்பட்ட தொழில் அபிலாஷைகளையும் சாதித்துக் கொள்வார்.

மனித வள முகாமைத்துவத்தை பொறுத்தவரையில், எமது ஆட்சேர்ப்பு செயன்முறை அரசாங்கத்தின் வழிகாட்டுதல்களுக்கு இணங்கிய விதத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அந்தச் செயன்முறைகளின் போது நாங்கள் வெற்றிடங்களை வெளிப்படையான விதத்தில் பகிரங்கப்படுத்துவதுடன், அதே விதமான வெளிப்படைத் தன்மைக்கூடாக ஒட்டுமொத்த தெரிவுச் செயன்முறையையும் மேற்கொள்கின்றோம். உள்ளக ரீதியில் வங்கி, அதற்கு அவசியமான உள்ளக மற்றும் வெளித் திறமைகளை அடையாளம் காண்பதற்கான துல்லியமான முறைமைகளை அபிவிருத்தி செய்து கொண்டுள்ளது. எமது வருடாந்த வரவுசெலவுத் திட்டச் செயன்முறைக்கூடாக நிறுவனத்திற்குத் தேவையான உள்ளக மற்றும் வெளித் திறமைகளை நாம் அடையாளம் கண்டு கொண்டிருப்பதுடன், மிகவும் வலுவாக ஸ்தாபிதமாகியிருக்கும் பெரிய முறையொன்றையும் கொண்டுள்ளோம். பதவிகளுக்கான பல் கருமப் பிரிவுகளைச் சேர்ந்தவர்களை உள்ளடக்கியிருக்கும் நேர்முகத் தேர்வுக் குழுவினர் வேட்பாளர்களின் மன்முகத் திறன்கள், ஆற்றல்கள் என்பவற்றை சீர்தூக்கிப் பார்த்து ஆட்சேர்ப்புக்களை செய்கின்றனர்.

வங்கிக்கு தெரிவு செய்யப்படும் புதிய ஆளணியினர் ஒவ்வொருவரும் சம்பந்தப்பட்ட அறிமுக நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்பதுடன், ஒவ்வொருவரினதும் ஆட்சேர்ப்பு மட்டத்தின் தெரிவு அடிப்படையில் வங்கியின் பணிச் சூழலுக்குள் தங்குதடையற்ற விதத்தில் அவர்கள் உள்வாங்கப்படுகின்றார்கள்.

அனுகூலங்கள் மற்றும் வெகுமதிகள்

நாங்கள் தெளிவாகவே நிதிசார் அனுகூலங்களையும், நிதிசாராத அங்கீகாரத்தையும் ஊழியர்களுக்கு வழங்கி வருகின்றோம். அவர்களுக்கு நியாயமான, சமத்துவமான சம்பளம் வழங்கப்படுவதுடன், திருப்தியடைந்த ஊழியர் படையொன்றை உறுதிப்படுத்துவதற்கென அது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மக்கள் வங்கி ஊழியர்களுக்கு கணிசமான அளவிலான வெகுமதிகளும், அனுகூலங்களும் கிடைத்து வருகின்றன என்ற விடயத்தை இங்கு குறிப்பிடுதல் வேண்டும். பொதுத் துறை தொடர்பாக நிலவி வரும் நடைமுறைகளுக்குள் வங்கி இருந்து வருகின்றது என்ற விடயம் விசேடமாக இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கதாகும். அதே வேளையில், தனியார் துறையில் நிலவி வரும் மிகச் சிறந்த நடைமுறைகளை வங்கி ஊக்குவித்து வருகின்றது.

வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் என்பன குறித்த எங்களது விழுமியங்களுக்கு இணங்கிய விதத்தில் எமது ஊழியர்களுக்கு ஒரே சீரான அனுகூலங்களை வழங்கி வருகின்றோம். அவர்கள் சமூகத்தின் ஒருங்கிணைந்த ஒரு பாகமாகவும் இருந்து வருகின்றார்கள். மக்கள் வங்கியின் நிரந்தர ஊழியர்கள் பின்வருவனவற்றையும் உள்ளிட்ட பரந்த வீச்சிலான அனுகூலங்களை அனுபவித்து வருகின்றார்கள்:

- வருடாந்த போனஸ் மற்றும் செயலாற்றுகை ஊக்குவிப்புத் திட்டம்
- கூட்டு முகாமைத்துவத்திற்கு வாகன வசதிகள் மற்றும் நிறைவேற்று முகாமைத்துவத்திற்கு போக்குவரத்து அலவன்சுகள்
- ஊழியர் வாசஸ்தலங்கள் மற்றும் விடுமுறை இல்லங்கள்
- ஒரு தனியார் சேமலாப நிதியம்
- ஓய்வூதியத் திட்டம்
- அனைதுமடங்கிய மரணக் கொடை திட்டம்
- தனிப்பட்ட விபத்துக் காப்புறுதி பாதுகாப்பு
- ஒரு விரிவான மருத்துவ உதவித் திட்டம்
- (சலுகை வட்டி விகிதங்களில்) ஊழியர் கடன் திட்டங்கள் விகிதங்கள்
- தொழில்சார் கழகங்களுக்கான சந்தா/கௌரவ கொடுப்பனவுகள்

ஓய்வூதிய நலன்கள்

பொதுத் துறையில் தொழில் புரிந்து வருவதன் மிக முக்கியமான அனுகூலங்களில் ஒன்று ஓய்வு பெறும் போது ஓர் ஓய்வூதியத்தை பெற்றுக் கொள்ளக் கூடிய உத்தரவாதமாகும். தனியார் துறையைச் சேர்ந்த அனைத்து ஊழியர்களுக்கும் அனைத்துமடங்கிய ஒரு ஓய்வூதியத் திட்டத்தை இலங்கை கொண்டிருக்கவில்லை. பொதுத் துறை வயது முதிர்ந்த ஊழியர்கள் ஓய்வு பெற்ற பின்னர் அவர்களுக்கு கணிசமான அளவிலான ஒரு ஓய்வூதிய தொகையை வழங்கக் கூடிய நிலையில் இருந்து வருகின்றது. எனவே, மக்கள் வங்கி அதன் வரலாறு நெடுகிலும் ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் மற்றும் தொடர்ந்து சேவையில் வைத்துக் கொள்ளல் என்ற விடயம் தொடர்பாக கணிசமான அளவிலான அனுகூலங்களை அனுபவித்து வருகின்றது. தமது பணிக் காலத்திற்குப் பின்னரும் ஒரே சீரான விதத்திலான வருமான அனுகூலங்களை உத்தரவாதப்படுத்தும் நிலையில், தொழில் துறையில் மிகச் சிறந்தவர்களை ஆட்சேர்ப்பு வழங்கக் கூடிய ஆற்றலைக் கொண்டுள்ளது.

வரையறுக்கப்பட்ட அனுகூல ஓய்வூதியத் திட்டம்

1996 க்கு முற்பட்ட ஓய்வூதியத் திட்டம்

01.01.1996 க்கு முன்னர் வங்கிச் சேவையில் இணைந்த நிரந்தர ஊழியர்கள் இந்த வரையறுக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்திலிருந்து பயனடைந்துள்ளார்கள் புறம்பாக நிர்வகிக்கப்பட்டு வரும் ஒரு நிதியத்துக்கு இது தொடர்பான பங்களிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்தின் கீழ் அனுகூலங்களை வழங்கும் செலவு, எறியமிடப்பட்ட அனுகூல தரவுக் கணிப்பீட்டு முறையை பயன்படுத்துவதன் மூலம் பெறப்படுகின்றது. தரவுக் கணிப்பு ஆதாயங்கள் மற்றும் நட்டங்கள் சம்பந்தப்பட்ட நிதியாண்டின் வருமானம் அல்லது செலவாக முழுமையாக அங்கீகரிக்கப்படுகின்றன.

வரையறுக்கப்பட்ட அனுகூலச் சொத்து அல்லது பொறுப்பு இன்னமும் அங்கீகரிக்கப்படாத கடந்த கால சேவைச் செலவுகளை கழித்து வரையறுக்கப்பட்ட அனுகூல கடப்பாட்டின் நடப்பு மதிப்பினை உள்ளடக்குகின்றது. மேலும், கடப்பாடுகள் நேரடியாக தீர்க்கப்பட வேண்டிய திட்டச் சொத்துக்களின் நியாயமான பெறுமதிகளை கழித்து, இதுவரையில் அங்கீகரிக்கப்படாத தரவு கணிப்பு நட்டங்களை கழித்து மேற்கொள்ளப்படுகின்றது. எந்த ஒரு சொத்தனதும் மதிப்பு. இன்னமும் அங்கீகரிக்கப்படாத எவையேனும் தரவுக் கணிப்பு நட்டங்கள் மற்றும் கடந்த கால சேவைச் செலவுத் தொகைக்கும், திட்டதிலிருந்து மீளளிப்புக்களின் வடிவில் கிடைக்கும் எவையேனும் பொருளாதார அனுகூலங்கள் அல்லது திட்டத்துக்கான வருங்கால பங்களிப்புக்களுக்காக வரையறுக்கப்படுகின்றது.

மிகப் பிந்திய தரவுக் கணிப்பீடு ஜனவரி 1, 2011 உள்ளவாறு அமெரிக்க தரவுக் கணிப்பாளர்கள் மற்றும் ஆலோசகர் கழகத்தின் உறுப்பினரான பியல் எஸ். குணதிலக (F.S.A) அவர்களினால் மேற்கொள்ளப்பட்டது.

01.01.2011 இல் உள்ளவாறு பெறுமதிக் கணிப்பில் பயன்படுத்தப்பட்ட முதன்மையான நிதிசார் அனுமானங்கள் வருமாறு:

வட்டி/கழிவு விகிதம்	10% ஆண்டொன்றுக்கு
வாழ்க்கைச் செலவு படிகளில் அதிகரிப்பு	5% ஆண்டொன்றுக்கு
அனைத்து தரங்களுக்குமான அடிப்படை சம்பள அதிகரிப்பு	7% ஆண்டொன்றுக்கு

ஓய்வு பெற்றவர்களுக்கு பின்வரும் நிபந்தனைகளின் கீழ் ஓய்வூதியம் வழங்கப்படுகின்றது:

பத்து வருட சேவையின் பின்னர் 55வயது ஓய்வூதிய வயதை எட்டியவுடன் ஓர் ஓய்வூதியத்தினை பெற்றுக் கொள்ளும் உரித்தினை அவ்வூழியர்கள் கொண்டுள்ளார்கள். ஓய்வூதியத்தின் அளவு சேவைக் காலத்தின் பல்வேறு மட்டங்களை பொறுத்து அமைகின்றது:

சேவைக் காலம்	ஓய்வூதியத்தின் அளவு
i. 10-20 வருடங்கள்	இறுதியாக பெற்ற சம்பளத்தின் 80%
ii. 21-29 வருடங்கள்	கடைசியாக பெற்ற சம்பளத்தின் 80% + 20 வருடங்களுக்கு மேற்பட்ட ஒவ்வொரு மேலதிக வருடத்திற்கும் 1%
iii. 30 வ. அதற்கு மேல்	கடைசியாக பெற்றுக் கொண்ட சம்பளத்தின் 90%

ஓய்வூதிய நிதிகள் நாளாந்த வங்கித்தொழில் சேவைகளிலிருந்து புறம்பாக வைக்கப்பட்டிருப்பதுடன், சுயாதீனமான வெளிக் கணக்காய்வாளர்களினால் வருடாந்த கணக்காய்வுக்குட்படுத்தப்படுகின்றன. நம்பிக்கையாளர் சபை கூற்றுக்களையும், கணக்காய்வாளர் அறிக்கைகளையும் மீளாய்வு செய்கின்றது. மேலும், இதற்கான நிதிப்படுத்தல் உச்ச மட்டத்தில் மேற்கொள்ளப்படுவதனை உறுதிப்படுத்தப்பட வேண்டிய கடப்பாட்டினை வங்கி கொண்டிருப்பதனால் இந்த ஆவணங்கள் வங்கியின் வெளிப்படுத்துகை மீளாய்வுக்கெனவும் சமர்ப்பிக்கப்படுகின்றன. பயனாளியின் மரணம் வரையில் ஓய்வூதியங்கள் மாதாந்தம் செலுத்தப்படுதல் வேண்டும்.

பணிக்கொடை

01.01.1996 இல் அல்லது அதற்கு முன்னர் வங்கியில் இணைந்து கொண்ட ஊழியர்கள் 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டத்தின் கீழ் பணிக்கொடை ஒன்றினை பெற்றுக் கொள்ளும் உரித்தினைக் கொண்டுள்ளார்கள் அல்லது பணிக்கொடை ஒன்றினை பெற்று கொள்ளும் உரிமையை விட்டுக் கொடுப்பதன் மூலம் உத்தேச ஓய்வூதியத் திட்டத்தில் சேர்ந்து கொள்ள முடியும்.

பணியிலிருந்து நீக்கப்பட்ட ஊழியர்கள் 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டத்தின் கீழ், பணி முடிவுறுத்தல் பணிக் கொடையைப் பெற்றுக் கொள்வதற்கான உரித்தினைக் கொண்டுள்ளார்கள். பணி முடிவுறுத்தப்பட்ட நிதியாண்டின் கடைசி மாதத்தின் போது பெற்ற மொத்தச் சம்பளத்தின் அரைவாசிப் பகுதியை அவர் தொடர்ச்சியாக சேவையிலிருந்த ஒவ்வொரு வருடம் தொடர்பாகவும் பெற்றுக் கொள்வதற்கான உரித்தினை ஐந்து வருடத்திற்கு மேல் பணியாற்றியிருக்கும் ஊழியர்கள் கொண்டுள்ளார்கள்.

அத்தகைய பணிக்கொடை கடப்பாடுகள் தொடர்பாக வங்கியினால் ஒரு மாதாந்த ஒதுக்கு மேற்கொள்ளப்படுகிறது. அது 2007 டிசம்பர் 31 வரையிலான வங்கியின் ஐந்தொகையில் பிரதிபலித்துள்ளது. அதன் பின்னர் பணிக்கொடை சூத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு ஓர் ஒதுக்கு மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. பணிக்கொடை கடப்பாடு தொடர்பாக வங்கி 2008 இல் ஒரு தரவுக் கணிப்பை மேற்கொண்டதுடன், அது முன்னைய தரவுக் கணிப்பு சூத்திரத்திலும் பார்க்க குறைவானதாக இருந்து வந்தது. வங்கியின் குறைந்த மட்டத்திலான ஊழியர் அளவை கருத்தில் கொண்டு பார்க்கும் பொழுது, நாங்கள் மிகவும் விவேகபூர்வமான பணிக்கொடை நடைமுறைகளை அநேகமாக தொடர்ந்தும் மேற்கொண்டு வர முடியும்.

மக்கள் வங்கியின் துணை நிறுவனங்கள் மற்றும் இணை நிறுவனங்கள் 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டத்தின் கீழ் பணிக்கொடைகளை வழங்கி வருகின்றன. அதன் பிரகாரம், எந்தவொரு கம்பெனியிலும் ஒரு வருடத்திற்கு மேல் பணியாற்றியிருக்கும் ஊழியர்கள் தொடர்பாக பணிக்கொடைக்கான ஒதுக்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்தகைய கடப்பாடுகளுக்கு வெளியிலிருந்து நிதிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படுவதில்லை.

வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள்

வங்கி வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டமொன்றையும் நிர்வகித்து வருகின்றது. இத்திட்டத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய பங்களிப்பு ஊழியர்களினால் வங்கிக்கு வழங்கப்பட்ட பணிகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது இவை/ஆளணிச் செலவுகள்' என்ற பிரிவின் கீழ் பதிவு செய்யப்படுகின்றன. செலுத்தப்படாத பங்களிப்புக்கள் பொறுப்புக்களாக கருதப்படுவதுடன், அவ்விதம் பதிவு செய்யப்படுகின்றன.

தமது சொந்த முன்னேற்றத்திலும் அதேபோல வங்கியின் முன்னேற்றத்திலும் முனைப்புடன் செயற்படுவதற்கு ஊழியர்களுக்கு தூண்டுதலை அளிக்கும் சவால் மிக்க ஒரு சூழ்நிலையை உருவாக்குவதற்கென எமது ஒட்டுமொத்த பயிற்சி மற்றும் அபிவிருத்திச் செயன்முறை கட்டியெழுப்ப-ப்படுகின்றது.

1996 க்கு பின்னரான ஓய்வூதியத் திட்டம்

ஜனவரி 01, 1996 க்குப் பின்னர் வங்கியில் இணைந்து கொண்ட நிரந்தர ஊழியர்கள் நிதியமைச்சினால் ஒப்புதலளிக்கப்பட்டிருக்கும் ஒரு புதிய திட்டத்திலிருந்து பயனடைவார்கள். இந்தப் புதிய திட்டத்திற்கான தொடக்கமாக வங்கி அதன் பணிக்கொடை நிதியத்திலிருந்து ரூ. 198 மில்லியனை மாற்றல் செய்துள்ளது. மேலும், மேலதிகமாக 854 மில்லியன் ரூபாவும் இந்த நிதியத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. டிசம்பர் 31.2012 இல் உள்ளவாறு இந்த நிதியத்தில் ரூ. 1.1 பில்லியன் இருந்து வருகின்றது. இந்த நிதியத்தில் சேர்ந்து கொள்ளும் பொருட்டு ஒரே சீரான விதத்தில் ஆர்வம் காட்டப்பட்டு வந்துள்ளதுடன், இதில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு தகுதி பெற்றிருக்கும் 4,187 ஊழியர்களிடமிருந்து 3,300 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. இந்த ஓய்வூதியத் திட்டம் 2013 இல் செயற்படுத்தப்படும்.

விதவை/விதுரர் மற்றும் அநாதையர் ஓய்வூதிய திட்டம் (1996 க்கு முன்னர்)

தகுதி வாய்ந்த தரவுக் கணிப்பு நிபுணர் ஒருவரின் ஆலோசனையை அடிப்படையாகக் கொண்டு வங்கி இந்நிதியத்தின் கடப்பாடுகளுக்கென ஒரு புறம்பான நிதியத்தை பராமரித்து வருகின்றது. உயிர் வாழ்ந்து வரும் விதவைகள்/விதுரர் மற்றும் அநாதைகள் ஆகியோர் தொடர்பாக வழங்கப்படும் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் நிதியத்தின் செலவில் எழுதப்படுகின்றன.

வங்கி பின்வரும் திட்டங்களுக்கு பங்களிப்புச் செய்து வருகின்றது:

ஊழியர் சேமலாப நிதியம்

வங்கி இந்நிதியத்திற்கு ஒரே சீரான விதத்தில் பங்களிப்புக்களை வழங்கி வந்துள்ளது. (மேலதிக வேலை நேரக் கொடுப்பனவை தவிர்த்து) ஒவ்வொரு ஊழியரினதும் மாதாந்த சம்பளத்தில் 12% மற்றும் 8% நிதியத்திற்கு வழங்கப்படுகின்றது. மக்கள் வங்கியின் சேமலாப நிதியம் ஊழியர் சேமலாப சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டிருப்பதுடன், அது உள்ளக ரீதியில் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம்

ஒவ்வொரு ஊழியரும், மேலதிக நேரக் கொடுப்பனவை தவிர்த்து, தனது சம்பளத்தில் 3% ஐ இந்நிதியத்திற்கு பங்களிப்புச் செய்வதுடன், இது ஊழியர் நம்பிக்கை நிதியச் சபையினால் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

ஓய்வு பெற்ற பின்னர் மருத்துவ அனுகூலம்

வங்கி தேவை ஏற்படும் சந்தர்ப்பங்களில், வங்கியினால் ஒப்புதலளிக்பட்டிருக்கும் ஒரு திட்டத்தின் அடிப்படையில் ஓய்வு பெற்றவர்களுக்கான மருத்துவ அனுகூலங்களை வழங்கி வருகின்றது. வருங்காலத்தில் ஏற்படக் கூடிய அசாதாரணமான உயர் அளவிலான மருத்துவச் செலவுகளை நிறைவு செய்யும் விதத்தில் ஒரு புறம்பான மருத்துவ நிதியம் பராமரிக்கப்பட்டு வருகின்றது. தேவை ஏற்படும் சந்தர்ப்பங்களில் இந்நிதியம் முகாமைத்துவத்தின் தற்றுணிபின் பேரில் பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றது.

பயிற்சி மற்றும் அபிவிருத்தி

உலகளாவிய சூழல் ஒன்றின் கீழ் இணங்கியொழுகுவதற்கும், பொருந்தக் கூடிய விதத்தில் இருந்து வருவதற்கும், அதியுயர் மட்டத்தில் செயற்படுவதற்கும் எமது ஊழியர்களை அபிவிருத்தி செய்வது, எமது பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலில் வேரூன்றியிருக்கும் ஓர் அம்சமாக இருந்து வருகின்றது. எனவே, எமது ஒட்டுமொத்த பயிற்சி மற்றும் அபிவிருத்தி செயன்முறை அபிவிருத்தியை போஷித்து வளர்த்து, தமது சொந்த முன்னேற்றத்திலும் அதேபோல வங்கியின் முன்னேற்றத்திலும் முனைப்புடன் செயற்படுவதற்கு ஊழியர்களுக்கு தூண்டுதலை அளிக்கும் சவால் மிக்க ஒரு சூழ்நிலையை உருவாக்குவதில் கட்டியெழுப்பப்படுகின்றது. எனவே, பயிற்சி மற்றும் அபிவிருத்தி திட்டம் உலகளாவிய ரீதியில் பின்பற்றப்பட்டு வரும் முறைமையியல்கள், யோசனைகள் மற்றும் ஊழியர்களிடமிருந்து கிடைக்கும் கருத்துக்கள் என்பவற்றை பயன்படுத்தி உருவாக்கப்படுகின்றன. தேவையான சந்தர்ப்பங்களில், ஊழியர்களிடமிருந்து கிடைக்கும் கருத்துக்களும் பொருத்தமானவையா இருக்குமிடத்து இதில் உள்ளடக்கப்படுகின்றன.

ஆண்டொன்றுக்கான பயிற்சி மணித்தியாலங்கள்	142,068
ஊழயர் எண்ணிக்கை	7,823
ஊழியர் ஒருவருக்கு ஒரு வருடத்திற்கான சராசரி பயிற்சி மணித்தியாலங்கள்	18

செயற்பாட்டு மாற்றங்களுக்குத் தேவையான குறைந்தபட்ச அறிவித்தல் காலம்

எதிர்ப்பார்க்கப்படும் மாற்றங்கள் தொடர்பாக கூட்டு ஒப்பந்தங்களில் குறைந்தபட்ச அறிவித்தல் காலம் ஒன்று குறித்துரைக்கப்பட்டிருக்கவில்லை.

அனைத்து மாற்ற முகாமைத்துவ செயன்முறைகளும் ஊழியர் சங்கங்களுடன் கலந்தாலோசனை நடத்தி அமுல் செய்யப்படுகின்றன. இச்சங்கங்கள் தொழில் அமைதியை ஸ்தாபித்துக் கொள்வதற்கு உதவுவதுடன், வங்கியின் வெளிப்படைத் தன்மைக்கும் பங்களிப்புச் செய்து வருகின்றன.

நாங்கள் எங்கள் சமூகத்துடன் செயற்பட்டு வரும் விதம்

சமூக மற்றும் பொருளாதார ரீதியில் அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கிக் கொள்வது எமது சமூக ரீதியான நிலைத்து நிற்கும் ஆற்றலின் அத்திவாரத்தில் ஊடுருவி செல்லும் விழுமியமாக இருந்து வருகின்றது. நிலையான விதத்தில் சமூகத்திற்கு வலுவூட்டுதலை உறுதிப்படுத்திக் கொள்ளும் நோக்கில் எமது திட்டங்ககள் உருவாக்கப்படுவதுடன், மக்கள் வங்கியின் நோக்கே சமூகத்தின் நிலைத்து நிற்கும் ஆற்றலை அடிப்படையாகக் கொண்டுள்ளது என்பதனை இங்கு குறிப்பிடுவது பொருந்தும். எனவே, சமூகத்துடனான எமது செயற்பாடு இந்த அம்சத்தையே கருத்தில் கொண்டுள்ளது.

சமூக கருத்திட்டங்களை அடையாளம் காணுதல் பொதுவாக உள்ளூர் மட்டத்தில் இடம்பெறுகின்ற. எனவே, முதன்மையான நிலைத்து நிற்கும் கருதுகோளுடன் இணைந்து காணப்படும் கருத்திட்டங்களை அடிமட்டத்தில் எமது கிளைகள் தெரிவு செய்கின்றன. இலங்கையின் மரபுரிமையை பேணிப் பாதுகாத்தல், எழுத்தறிவு விகிதத்தை அபிவிருத்தி செய்தல், பெண்களுக்கு வலுவூட்டுதல் மற்றும் விளையாட்டுத் துறை அபிவிருத்தி என்பன இவற்றில் அடங்குகின்றன.

இது மேற்கொள்ளப்பட்டு, கிளை முகாமையாளரின் ஒப்புதல் கிடைத்த பின்னர் சம்பந்தப்பட்ட கருத்திட்டம் உள்ளூர் மட்டத்திலான கருத்திட்டத்துக்கான வழிகாட்டுதல்களுக்கு பொருந்துவதாக இருந்து வருமிடத்து கிளை அதனை அமுல் செய்யத் தொடங்குகின்றது. எவ்வாறிருப்பினும், கருத்திட்டம் ஒரு பாரிய கருத்திட்டமாக இருந்து வந்தால் சம்பந்தப்பட்ட முன்மொழிவு சந்தைப்படுத்தல் முகாமையாளரிடமும், சம்பந்தப்பட்ட ஏனையவர்களிடமும் சமரப்பிக்கப்படுகின்றது. அவர்கள் அந்தக் கருத்திட்டம் குறித்தும், வங்கியின் நிலைத்து நிற்கும் ஆற்றல் தொடர்பான குறிக்கோள்களை சாதித்துக் கொள்வதில் அதன் நிர்ணயகரமான பங்களிப்பு குறித்தும் கலந்துரையாடுவார்கள். அதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டால், கருத்திட்டத்தை முன்வைத்தவருக்கு அது குறித்து அறிவிக்கப்படுவதுடன், கருத்திட்டத்தின் அமுலாக்கல் காலப் பிரிவு முழுவதிலும் மத்தியிலிருந்து நெருக்கமான விதத்தில் அது கண்காணிக்கப்பட்டு வரும். கருத்திட்டம் பூர்த்தியடைந்த பின்னர் அது குறித்த ஒரு முடிவு அறிக்கையை அனுப்புவது அவசியமாகும். இந்த முடிவு அறிக்கை கருத்திட்டத்தின் வெற்றி, அது எடுத்து வரும் தாக்கம், ஏதேனும் இடைவெளிகள் எதிர்கொள்ளப்பட்டிருந்தால் அவை குறித்த விபரங்கள் என்பவற்றை குறிப்பிடுவதுடன், எதிர்கால செயற்பாடுகளுக்கான ஒரு கற்றல் கருவியாகவும் இருந்து வரும்.

இலங்கையின் கலாசார மரபுரிமையை பேணிக் காத்தல்

ஆசியாவின் மிகப் பெரிய கலாசார அணிவகுப்பாக கருதப்படும் ஸ்ரீதலதா மாளிகையின் வருடாந்த எசல பெரஹெர வைபவத்துடன் மக்கள் வங்கி வழமை போலவே ஒரு முன்னணி பங்கைப் பெற்றுக் கொள்கின்றது. மலையக தலைநகரான கண்டி மாநகர வீதிகளில் அலங்கரிக்கப்பட்ட கம்பீரமான யானைகள் , இலங்கையில் நிலவி வரும் மூன்று நான்கு பிரதான நடன வகைகளை பிரதிநிதி செய்யும் நடனக்காரர்களுடன் இணைந்தவிதத்தில் கண்டி மாநகர வீதியில் வலம் வரும் இந்த மாபெரும் வண்ணமயமான அணிவகுப்பு விலைமதிக்க முடியாத புத்த பெருமானின் தங்க வாள் புனித சின்னத்தையும் காட்சிப்படுத்துகின்றது. கண்டி பெரஹரா இலங்கையின் கலாசாரத்துடன் ஒருங்கிணைந்த ஒரு அம்சமாக இருந்து வரும் பல நூற்றாண்டு பழமை வாய்ந்த பாரம்பரியங்களை பேணி பாதுகாத்து வருகின்றது. கண்டி இராச்சியத்தின் கால கட்டத்திலிருந்து வழங்கப்பட்டு வந்த பாரம்பரிய மரபுரிமைகளை அது வழங்கி போற்றி வருகின்றது.

புத்த பெருமானின் பிறப்பு, மரணம் மற்றும் பரிநிர்வாணம் என்பவற்றை நினைவு கூரும் வெசாக் வைபவம் இலங்கையில் மிகுந்த கோலாகலத்துடன் கொண்டாடப்படுகின்றது. வெசாக் கொண்டாட்டங்களில் மக்கள் வங்கி தெஹிவலை சமூகத்துடன் ஒருங்கிணைந்த பொழுது, அதற்கு மேலும் ஒரு கோலாகலம் சேர்க்கப்பட்டது, அதே போல இலங்கைக்கு புத்த சமயம் எடுத்து வரப்பட்ட பொசொன் தினக் கொண்டாட்டங்களின் போது புத்த மதத்தின் இதயமாக கருதப்பட்டும் அநுராதபுரத்தில் நடத்தப்பட்ட பக்தி பாடல் நிகழ்ச்சியிலும் நாங்கள் பங்கேற்றோம்.

இலங்கையின் கிராமங்களில் பழக்க வழக்கங்கள் மிக வேகமாக மறைந்து வருகின்றன. தனித்துவமான வழக்காறுகள், சடங்குகள் என்பன எடுத்துக் காட்டப்பட்டு, பாதுகாக்கப்படாவிட்டால் எமது நாளாந்த வாழ்க்கையிலிருந்து அவை என்றென்றைக்கும் மறைந்து போக முடியும். சிரச கடமண்டிய நிகழ்ச்சியில் கப்பிட்டல் மகாராஜா குழுமத்துடன் இணைந்து, மக்கள் வங்கி இலங்கையின் கிராம கலாசாரங்களில் நிலவி வரும் தனித்துவமான வழக்காறுகள், பாரம்பரியங்கள் என்பன குறித்து இலங்கை வாழ் மக்களின் விழிப்புணர்வை தூண்டுவதற்கு எதிர்பார்க்கின்றது.

இலங்கையில் நிலவி வரும் பல் கலாசார, பல்மத பாரம்பரியத்தை நாங்கள் அறிந்திருப்பதுடன், நாட்டின் அனைத்து தரப்பினரும் வேற்றுமையில் ஒற்றுமையுடன் வாழ்வதற்கு வகை செய்யும் பொருட்டு, அனைவரையும் ஒற்றுமைப்படுத்தும் ஒரு சூழலை உருவாக்குவதற்காக சகல விதமான முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றோம். அனைத்து சமய நிகழ்வுகளையும், கலாசார பண்டிகைகளையும் கொண்டாடுவதுடன், அதற்கு எமது ஆதரவையும் வழங்குகின்றோம். இந்து அறுவடை பண்டிகையான தைப்பொங்கல், நத்தார் பண்டிகை என்பவற்றை நாங்கள் கொண்டாடுகின்றோம். மக்கள் வங்கியின் கிறிஸ்தவ ஒன்றியம் ஏற்பாடு செய்யும் ஒரு வருடாந்த நிகழ்வான நத்தார் பக்தி பாடல்கள் நிகழ்ச்சிக்கு நாங்கள் அனுசரணை வழங்குவதுடன், அது தொடர்ச்சியாக 34 வருடமாக நடத்தப்பட்டு வருகின்றது. தலவிலவில் யாத்திரிகர் விடுதியொன்றை நிர்மாணித்ததன் மூலம் தலவில புனித அன்னம்மாள் தேவாலயத்திற்குச் செல்லும் யாத்திரிகர்களுக்கு நாங்கள் உதவியுள்ளோம். ஆறு வீடுகளை கொண்ட இந்த ஓய்வு இல்லம் சிலாப ஆயர் வணக்கத்திற்குரிய தேவ்ஸ்ரித வலன்ஸ் மென்டிஸ் அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மற்றும் வன்னி ஆகிய பிராந்தியங்களை சேர்ந்த கிளைகளினால் யாழ் பல்கலைக்கழக வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலை விழாவில் யாழ்ப்பாண கலாசார விழுமியங்கள் எடுத்து காட்டப்பட்டன. இலங்கையின் ஒட்டுமொத்த தொகுப்பில் ஒரு உள்ளார்ந்த பாகமாக இருந்து வரும் ஒரு கலாசாரம் குறித்த விழிப்புணர்வையும், மதிப்புணர்வையும் உருவாக்குவதில் இக்கலை விழா பெருமளவுக்கு வெற்றியீட்டியுள்ளது.

எழுத்தறிவை அபிவிருத்தி செய்தல்

மக்கள் வங்கி எப்பொழுதும் இளம் தலைமுறையினர் தொடர்பாக கவனம் செலுத்தி வந்திருப்பதுடன், அவர்களுக்கு மத்தியில் விழுமியங்களை புகுத்துவது மட்டுமன்றி அவர்களின் நலனோம்பலில் கல்வி ஒரு மைய அச்சாக இருந்து வருவதனையும் உறுதிப்படுத்தி வருகின்றது. சிசு உதான புலமைப் பரிசில்கள், பாடசாலை வங்கித்தொழில் அலகுகள் மற்றும் நடமாடும்

அலகுகள் போன்ற பெறுமதி சேர்க்கைகளும், இது தொடர்பாக மேற்கொண்டு வந்த திட்டங்களும் மாணவர்கள் எவ்வித இடையூறுமின்றி தமது கல்வியை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டுள்ளன. இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட மற்றொரு பெறுமதி சேர்ப்பு சிசு உதான தயட பிபென மல் நிகழ்வாகும். அநுராதபுரத்தில் நடத்தப்பட்ட தேசத்திற்கு மகுடம் கண்காட்சியின் போது நிகழ்த்தப்பட்ட இந்நிகழ்வின் போது இளம் மாணவர்களின் திறன்கள் எடுத்துக் காட்டப்பட்டன.

பெண்களுக்கு வலுவூட்டுதல்

மக்கள் வங்கிகளின் மூலக்கூறுகளில் ஆழமாக வேரூன்றியிருக்கும் மற்றொரு அம்சம் பெண்களுக்கு வலுவூட்டுவதாகும். ஒவ்வொரு வருடமும் வங்கி சர்வதேச பெண்கள் தின நிகழ்ச்சித்திட்டத்தில் மிகுந்த ஆர்வத்துடன் பங்கேற்கிறது. அது தவிர, குறிப்பாக பெண்களின் மேம்பாட்டுக்கென வடிவமைக்கப்பட்ட பெருந்தொகையான திட்டங்களின் தொகுப்பொன்றையும் அது வழங்கி வருகின்றது. இவ்வருட சர்வதேச பெண்கள் நிகழ்ச்சித்திட்டம் ஜனகலா கேந்திரத்தில் நடத்தப்பட்டது. மேலும், வனிதா வாசனா நென குண பிரி லிய நிகழ்ச்சித்திட்டத்தின் வெற்றியாளர்களுக்கு பரிசில்களை வழங்குவதற்கென நாங்கள் சூரிய மங்கல்ய 2012 நிகழ்வை களுத்துறையில் நடத்தினோம். விசேட வனிதா வாசனா நிகழ்ச்சித்திட்டத்தில் பரிசில்களை வென்றிருந்த பெண்மணிகள் இந்நிகழ்வின் போது பாராட்டி கௌரவிக்கப்பட்டார்கள்.

விளையாட்டு அபிவிருத்தி

தேசங்களையும், கலாசாரங்களையும், மக்களையும் ஐக்கியப்படுத்தும் மாபெரும் சக்தியாக விளையாட்டு இருந்து வருகின்றது என்பதனை நாங்கள் நம்புகின்றோம். குழு மனப்பாங்கினை கூர் தீட்டி வளர்க்கும் அதே வேளையில், வங்கி எப்பொழுதும் அதன் ஊழியர்களுக்கு மத்தியில் பணிக்கு வெளியிலான நடவடிக்கைகளை ஊக்குவித்து வந்துள்ளது. பல்வேறு விளையாட்டுக்களில் தேசத்தின் ஆற்றலை பரிணமிக்கச் செய்வதற்கு அது உதவி வந்துள்ளது. இவ்வாண்டின் கூடை பந்து விளையாட்டை அபிவிருத்தி செய்வதற்கென அது நிதிகளை முதலீடு செய்தது. மேலும், கொழும்பில் இடம்பெற்ற 8ஆவது ஆசியக் கோப்பை வலைப்பந்தாட்ட போட்டித் தொடரை குறிக்கும் முகமாக நடத்தப்பட்ட கொண்டாட்ட ஊர்வலத்திற்கும் அது உதவியது. மினுவாங்கொடை மாநகர சபையுடன் கூட்டாக இணைந்து நடத்தப்பட்ட ஜய ஸ்ரீ உதான சைக்கிள் ஓட்டப் போட்டியில் வெற்றியீட்டிய தேசிய வீரருக்கு நாங்கள் ஒரு பரிசினை வழங்கினோம்.

சுற்றாடல் தொடர்பான எமது கடப்பாடு

இது எமது ஆரம்ப நிலைத்து நிற்கக் கூடிய அறிக்கையாக இருந்து வருவதனால், எமது காபன் சுவடுகளை குறைக்கும் விதத்தில் பெருமளவு மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. முன்னர் குறிப்பிடப்பட்டிருந்தது போல, எமது அடிப்படை முன்னுரிமை சமூக வலுவூட்டல் மற்றும் பொருளாதார உறுதிப்பாடு என்பவற்றை மேம்படுத்துவதாகவே இருந்து வந்துள்ளது. அதன் மூலம் எமது நிலைத்து நிற்கக்கூடிய கவன மையம் சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பாக நெறிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. எவ்வாறிருப்பினும், இவற்றை ஏற்றுக் கொள்வதில் எமக்கு எவ்வித தயக்கமுமில்லை. எமது சுற்றாடல் தொடர்பாக நாங்கள் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டுமென்பதனை நாங்கள் அறிந்திருக்கின்றோம். இதுவரையில் எமது நிலைத்து நிற்கும் ஆற்றல் தொடர்பான பிரக்ஞையில் அது ஒரு முன்னுரிமையாக இருந்து வரவில்லை.

நிலைத்து நிற்கும் ஆற்றல் குறித்த அறிக்கையிடும் செயன்முறையில், சுற்றடால் மீதான இந்தக் கவனம் இப்பொழுது அதிகரித்திருப்பதுடன், இந்த நிலையிலிருந்து நாங்கள் எமது தேசத்தை உயிரியல் ரீதியில் உறுதியான விதத்தில் வளர்த்தெடுக்க வேண்டுமென திடசங்கற்பம் செய்துள்ளோம். அந்நிலையில் சமூகம், பொருளாதாரம், சுற்றாடல் என்பன இப்புவியிலுள்ள மக்களுக்கான நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்தி என்ற தனி அரங்கில் சங்கமிக்க உள்ளன.

முன்வைக்கப்பட்ட சிறு காலடிகளிலும் கூட சுற்றாடலை பாதுகாக்கும் வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மக்கள் வங்கியைச் சேர்ந்த நாங்கள் வலு குறித்தும் ஒரு பிரக்ஞையை கொண்டிருக்கின்றோம். வங்கி முழுவதிலும் எமது கிளைகள் மற்றும் சேவை நிலையங்களில் அனைத்திலும் வலுவைச் சேமிக்கும் முறைகளையும் உள்ளடக்கிக் கொண்டிருக்கின்றோம். நாங்கள் பின்வரும் முன்முயற்சிகளை அறிமுகம் செய்து வைத்துள்ளோம்:

- காட்ரிஜ் கொள்வனவுகளை குறைத்தல் முன்னர் வங்கி வழங்கல் திணைக்களத்திற்கூடாக அத்தகைய தேவைகளுக்கென கேள்விப் பத்திரங்களை கோரியது. இப்பொழுது செலவு சற்று உயர்வாக இருந்தாலும் கூட, நாங்கள் அசல் பொருட்களை கொள்வனவு செய்கின்றோம். ஆனால், அது நீண்ட காலத்தில் சுற்றாடலுக்கு அனுகூலம் அளிப்பதாக இருந்து வருகின்றது.
- மின் குமிழ்கள் அணைக்கப்பட வேண்டுமென வேண்டுகோள் விடுத்தல்
- சாத்தியமான சந்தர்ப்பங்களில் வலுவை சேமிக்கும் CFL மின் குமிழ்களை பயன்படுத்துதல்
- சாதாரண அலுவலக நாளின் முடிவின் போது குளிரூட்டியை அணைத்தல்
- முடியுமான வரையில் உள் மற்றும் வெளி தொடர்பாடல்களுக்கென இணையம் மற்றும் மின்னஞ்சல் வசதிகளை பயன்படுத்திக் கொள்ளல்
- குறிப்பாக அனுமதிகளைப் பெறுவதற்காக, தகவல் தொழில்நுட்ப முறைகள் மற்றும் செயன்முறைகள் என்பவற்றை அறிமுகம் செய்து வைப்பதன் மூலம் மனித வள முகாமைத்துவம், உள்ளக தொடர்பாடல் மற்றும் மீளாய்வுகள் என்பன தொடர்பான காகித விரயத்தையும் பாவனையையும் குறைத்தல்

இவை நாங்கள் எடுத்திருக்கும் சிறிய ஆரம்ப முயற்சிகள் என நம்புகின்றோம். ஆனால், காபன் பாவனைகளை குறைப்பதற்கான ஆரம்பங்களாக அவை உள்ளன.

சுற்றாடல் சட்டங்கள்/ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு இணங்கியொழுகுதல்

மக்கள் வங்கியில் நாங்கள் சுற்றாடல் தரநியமங்களை பராமரிப்பதற்கு முயற்சித்து வருகின்றோம் இணங்கியொழுகாமை தொடர்பான பிரச்சினைகள் அல்லது சுற்றாடலை அலட்சியப்படுத்தியமை குறித்து நாங்கள் ஒரு போதும் எவ்வித அபராதங்களையும் செலுத்தியிருக்கவில்லை. எனவே, அலட்சியமான சுற்றாடல் நடைமுறைகளின் விளைவாக நாங்கள் எவ்வித பண ரீதியான அபராதங்களையோ கட்டணங்களையோ செலுத்தவில்லை.


GRI
உள்ளடக்க சுட்டெண்

சுட்டெண்	விபரம்	அறிக்கையின் பிரிவு	பக்கம்
1.	**உபாயம் மற்றும் பகுப்பாய்வு**		
1.1	நிறுவனத்தின் சிரேஷ்ட தீர்மானம் எடுப்பவரின் கூற்று	நீடித்துநிற்றல் பிற்சேர்க்கை	60
2.	**நிறுவனம் தொடர்பான விபரங்கள்**		
2.1	நிறுவனத்தின் பெயர்	நிறுவனத் தகவல்	பின் உள் அட்டை
2.2	முதன்மை வணிகச் சின்னங்கள், திட்டங்கள் மற்றும்/அல்லது சேவைகள்	வணிக மீளாய்வு	36 - 39
2.3	நிறுவனத்தின் செயற்பாட்டு கட்டமைப்பு	நிறுவன ஆளுகை	87
2.4	நிறுவன தலைமை அலுவலகத்தின் அமைவிடம்	நிறுவனத் தகவல்	பின் உள் அட்டை
2.5	நிறுவனம் செயற்பட்டு வரும் நாடுகளின் எண்ணிக்கை மற்றும் பிரதான செயற்பாடுகளை மேற்கொண்டு வரும் நாடுகளின் பெயர்கள் அல்லது இந்த அறிக்கையில் உள்ளடக்கப் பட்டிருக்கும் நிலைத்து நிற்கும் ஆற்றல் குறித்த பிரச்சினைகளுடன் விசேடமாக சம்பந்தப்பட்டுள்ள நாடுகள்	ஒன்றுமில்லை	–
2.6	உரித்தின் இயல்பு மற்றும் சட்ட வடிவம்	நிறுவனத் தகவல்	பின் உள் அட்டை
2.7	சந்தைகள் தொடர்பான விபரம்	நிலைத்து நிற்கும் ஆற்றல்	57, 58
2.8	நிறுவனத்தின் அறிக்கையிடும் பரப்பு	நிதிசார் மீட்டல்	51
		நிலைத்து நிற்கும் ஆற்றல்	71
2.9	அறிக்கையிடும் காலப் பிரிவின் போது நிறுவனத்தின் அளவு , கட்டமைப்பு அல்லது உரித்து என்பவற்றில் இடம்பெற்ற முக்கியமான மாற்றங்கள்.	ஒன்றுமில்லை	–
2.10	அறிக்கையிடும் காலப் பிரிவின் போது கிடைத்த விருதுகள்	தசாப்தங்கள் ஒரே பார்வையில்	263
3.	**அறிக்கை அளவுகோல்கள்**		
3.1	அறிக்கையிடும் காலம்	நிலைத்து நிற்கும் ஆற்றல்	59
3.2	மிகச் சமீபத்திய முன்னைய அறிக்கையின் திகதி	நிலைத்து நிற்கும் ஆற்றல்	59
3.3	அறிக்கையிடும் கால அளவு	நிலைத்து நிற்கும் ஆற்றல்	59
3.4	அறிக்கை அல்லது அதன் உள்ளடக்கம் குறித்த கேள்விகளை முன்வைக்க வேண்டிய இடம்	நிலைத்து நிற்கும் ஆற்றல்	59
3.5	அறிக்கை உள்ளடக்கத்தை வரையறை செய்தல்	நிலைத்து நிற்கும் ஆற்றல்	59
3.6	அறிக்கையின் வரையறை	நிலைத்து நிற்கும் ஆற்றல்	59
3.7	அறிக்கையின் வீச்சு அல்லது எல்லை தொடர்பான ஏதேனும் திட்டவட்டமான வரையறைகள்	நிலைத்து நிற்கும் ஆற்றல்	59
3.8	கூட்டு தொழில் முயற்சிகள், துணை நிறுவனங்கள், குத்தகைக்கு விடப்பட்ட வசதிகள், வெளியிலிருந்து பெறப்படும் செயற்பாடுகள் மற்றும் காலத்துக்கு காலம் மற்றும்/அல்லது நிறுவனங்களுக்கிடையில் ஒப்பிடும் தன்மையின் மீது பாதிப்பை ஏறபடுத்தக் கூடிய ஏனைய நிறுவனங்கள்.	முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்	164
3.10	முன்னைய அறிக்கைகளில் வழங்கப்பட்ட ஏதேனும் தகவல்களை மீளக் குறிப்பிடுவதன் தாக்கம் குறித்த விபரம்	முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்	163 - 164
3.11	வீச்சு, எல்லை அல்லது அறிக்கையில் பயன்படுத்தப்பட்ட அளவீட்டு முறைகள் என்பவற்றில் முன்னைய அறிக்கை காலங்களிலிருந்து தோன்றும் முக்கியமான மாற்றங்கள்	ஒன்றுமில்லை	–
3.12	GRI உள்ளடக்க சுட்டென்	நிலைத்து நிற்கும் ஆற்றல்	78-80

சுட்டெண்	விபரம்	அறிக்கையின் பிரிவு	பக்கம்
4.	**ஆளுகை, கடப்பாடுகள் மற்றும் ஈடுபாடு**		
4.1	நிறுவனத்தின் ஆளுகை கட்டமைப்பு	நிறுவன ஆளுகை	87
4.2	அதியுயர் ஆளுகை அமைப்பின் தலைவர் ஒரு நிறைவேற்று அதிகாரியாகவும் இருந்து வருகின்றாரா என்பதனை குறிப்பிடவும்	நிறுவன ஆளுகை	88
4.3	சுதந்திரமான உறுப்பினர்களாக மற்றும்/அல்லது நிறைவேற்று தரம் சாராத உறுப்பினர்களாக இருந்து வரும் அதியுயர் ஆளுகை சபையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை	நிறுவன ஆளுகை	88
4.4	அதியுயர் ஆளுகை சபைக்கு பரிந்துரைகளை அல்லது நெறிப்படுத்தலை வழங்குவதற்கு பங்கீடுபாட்டாளர்களுக்கும், ஊழியர்களுக்கும் கிடைக்கும் பொறிமுறைகள்	நிலைத்து நிற்கும் ஆற்றல்	64
4.14	நிறுவனத்தினால் ஈடுபடுத்தப்பட்டு வரும் பங்கீடுபாட்டாளர்கள் குழுக்களின் பட்டியல்	நிலைத்து நிற்கும் ஆற்றல்	65, 66
4.15	தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கென தெரிவு செய்யப்படும் பங்கீடுபாட்டாளர்களை அடையாளம் காணுதல் மற்றும் தெரிவு செய்வதற்கான அடிப்படை	நிலைத்து நிற்கும் ஆற்றல்	65, 66
	பொருளாதார செயலாற்றுகை		
EC1	உருவாக்கப்பட்டு, பகிர்ந்தளிக்கப்பட்ட நேரடி பொருளாதார மதிப்பு	பின்னிணைப்புக்கள்	244, 245
EC3	நிறுவனத்தின் வரையறுக்கப்பட்ட அனுகூல திட்ட கடப்பாடுகளின் உள்ளடக்கம்	நிலைத்து நிற்கும் ஆற்றல்	74, 75
EC4	அரசாங்கத்திடமிருந்து கிடைத்த முக்கியமான நிதி உதவி	நிலைத்து நிற்கும் ஆற்றல்	67-71
	சுற்றாடல் ரீதியான செயலாற்றுகை		
EN2	மீள் சுழற்சி செய்யப்பட்ட உள்ளீட்டுப் பொருட்கள் என்ற வகையில் பயன்படுத்தப்பட்ட பொருட்களின் சதவீதம்	நிலைத்து நிற்கும் ஆற்றல்	77
EN28	சுற்றாடல் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு இணங்கியொழுகாமை தொடர்பாக விதிக்கப்பட்ட அபராதங்களின் பணப் பெறுமதி மற்றும் பணம் சாராத அபராதங்களின் மொத்த எண்ணிக்கை	நிலைத்து நிற்கும் ஆற்றல்	77
	சமூகம்		
SO2	ஊழல் தொடர்பான அபாய ஏதுக்கள் உள்ளனவா என பகுப்பாய்வு செய்து பார்க்கப்பட்ட வணிக அலகுகளின் மொத்த எண்ணிக்கை	நிலைத்து நிற்கும் ஆற்றல்	61
SO3	நிறுவனத்தின் ஊழல் எதிர்ப்பு கொள்கைகள் மற்றும் நடைமுறை என்பவற்றில் பயிற்றுவிக்கப்பட்ட ஊழியர்களின் சதவீதம்	நிலைத்து நிற்கும் ஆற்றல்	64
SO4	ஊழல் சம்பவங்களுக்கு எதிர்வினையாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்	நிலைத்து நிற்கும் ஆற்றல்	61
SO8	சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு இணங்கியொழுகாமை தொடர்பாக விதிக்கப்பட்ட அபராதங்களின் பணப் பெறுமதி மற்றும் பணம் சாராத அபராதங்களின் மொத்த எண்ணிக்கை	நிலைத்து நிற்கும் ஆற்றல்	61, 62
	தொழில் நடைமுறைகள் மற்றும் கண்ணியமான வேலை		
LA1	தொழில் வகை, தொழில் ஒப்பந்தம், பிராந்தியம், ஆண்/பெண் என்ற வகைகளில் பிரிக்கப்பட்ட மொத்த ஊழியர் படை	நிலைத்து நிற்கும் ஆற்றல்	72 - 73
LA3	முழு நேர ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட, தற்காலிக அல்லது பகுதி நேர ஊழியர்களுக்கு வழங்கப்படாத அனுகூலங்கள் - முக்கியமான செயற்பாட்டு அமைவிடங்களின் அடிப்படையில்	நிலைத்து நிற்கும் ஆற்றல்	73
LA4	கூட்டு பேரம் பேசும் ஒப்பந்தங்களில் உள்ளடக்கப்படும் ஊழியர்களின் சதவீதம்	நிலைத்து நிற்கும் ஆற்றல்	71
LA5	செயற்பாட்டு ரீதியான மாற்றங்கள் தொடர்பான (அவை கூட்டு ஒப்பந்தங்களில் எடுத்து கூறப்பட்டுள்ளனவா என்பதனையும் உள்ளடக்கும் விதத்தில்) குறைந்தபட்ச அறிவித்தல் காலம் (காலங்கள்)	நிலைத்து நிற்கும் ஆற்றல்	75
LA10	ஊழியர் ஒருவருக்கு ஒரு வருடத்தின் போது வழங்கப்பட்ட சராசரி பயிற்சி மணித்தியாலங்கள் - ஊழியர்கள் வகையின் அடிப்படையில்	நிலைத்து நிற்கும் ஆற்றல்	75

சுட்டெண்	விபரம்	அறிக்கையின் பிரிவு	பக்கம்
திட்டங்களின் பொறுப்பு			
PR6	விளம்பரம் செய்தல், மேம்படுத்தல் மற்றும் அனுசரணை வழங்குதல் என்பவற்றையும் உள்ளடக்கிய விதத்தில் சட்டங்கள், தர நியமங்கள் மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பாடல் குறித்த சுய விருப்பிலான நடத்தை நெறிக்கோவைகள் என்பவற்றுக்கு இணங்கியொழுகும் நிகழ்ச்சித்திட்டங்கள்	நிலைத்து நிற்கும் ஆற்றல்	64
PR7	விளம்பரம் செய்தல், மேம்படுத்தல் மற்றும் அனுசரனை வழங்குதல் என்பவற்றையும் உள்ளடக்கிய விதத்தில் ஒழுங்குவிதிகள் மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பாடல் குறித்த சுய விருப்பில் மேற்கொள்ளப்படும் நடத்தை நெறிக்கோவைகள் என்பவற்றுக்கு இணங்கியொழுகாமை தொடர்பான சம்பவங்களின் எண்ணிக்கை - பெறுபேறுகளின் அடிப்படையில்	நிலைத்து நிற்கும் ஆற்றல்	64

GRI பிரயோக மட்ட அட்டவணை



புகைப்படத் தொகுப்பு - 2012



அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் தங்காலை கிளை திறந்து வைக்கப்படுகின்றது.



குருணாகல் சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிகள் நிலையத்தின் பெயர் பொறிக்கப்பட்ட நினைவுச் சின்னத்தை கலாநிதி பீ.பி. ஜயசுந்தர வைபவ ரீதியாக திறந்து வைக்கிறார்.



வங்கி அதன் மிகப் பிந்திய சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிகள் நிலையத்தை கண்டியில் திறந்து வைத்தது.



கௌரவ பசில் ராஜபக்ஷ அவர்கள் அநுராதபுரம் வணிக நிலையத்தை வைபவ ரீதியாக திறந்து வைத்தார்.



வங்கியின் கிறிஸ்தவ ஒன்றியத்தினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட கொட்டுக்கச்சி புதிய வைத்தியசாலையை திறந்து வைக்கும் வைபவத்தில் பணிப்பாளர் டி.ஜே.டி. ஜயக்கொடி பங்கேற்றார்.



வங்கியின் கிறிஸ்தவ ஒன்றியத்தினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட கொட்டுக்கச்சி புதிய வைத்தியசாலை கட்டடத்தின் வெளிப்புறத் தோற்றம்



சங்வத்சர வாசனா சீட்டிழுப்பில் மூன்றாவது பரிசை வென்ற அதிர்ஷ்டசாலிக்கு சொகுசு வீட்டின் உறுதிப்பத்திரம் கையளிக்கப்பட்டது.



ஜயசிரி சீட்டிழுப்பில் வெற்றியீட்டிய கிண்ணியா வெற்றியாளருக்கு பரிசு வழங்கப்பட்டது.



ஜயசிரி சீட்டிழுப்பில் வெற்றியீட்டிய அதிர்ஷ்டசாலி பெண்மணி தனது பரிசை சென்ட்ரல் ரோட் கிளை அலுவலர்களிடமிருந்து பெற்றுக் கொள்கின்றார்.



சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் தொடர்பாக இடம்பெற்ற 'சுதந்திரத்தின் உதயம்' நிகழ்வு: பெப்ரவரி மாதம் பிறந்த இன்னொரு குழந்தைக்கு வெகுமதி வழங்கப்பட்டது.



சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் தொடர்பாக இடம்பெற்ற 'சுதந்திரத்தின் உதயம்' நிகழ்வு: புதிதாக பிறந்த ஒரு குழந்தைக்கு பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர் ஓர் அன்பளிப்புப் பொதியுடன் இசுறு உதான வெகுமதிச் சான்றிதழை வழங்குகின்றார்.



சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் தொடர்பாக இடம்பெற்ற 'சுதந்திரத்தின் உதயம்' நிகழ்வு: பெப்ரவரி மாதம் பிறந்த இன்னொரு குழந்தைக்கு வெகுமதி வழங்கப்பட்டது.



பொரளை சகல புனிதர்கள் பெண்கள் பாடசாலையின் சிசு உதான சேமிப்பு அலகு.



அநுராதபுரத்தில் நடத்தப்பட்ட 'தேசத்திற்கு மகுடம் 2012' கண்காட்சியில் இடம்பெற்ற சிசு உதான 'தெயட பிப்பென மல்' புதிர்ப் போட்டி: ஆனந்த கல்லூரி வெற்றியாளர்களின் கொண்டாட்ட நிகழ்வு



அநுராதபுரத்தில் நடத்தப்பட்ட 'தேசத்திற்கு மகுடம் 2012' கண்காட்சியில் இடம்பெற்ற சிசு உதான 'தெயட பிப்பென மல்' புதிர்ப் போட்டி: கண்காட்சியில் ஜயசிரி மேடையில் மாணவர்களால் நடத்தப்பட்ட நடன நிகழ்ச்சி



உலக சிக்கன தினத்தை நினைவு கூரும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'புரவமு வீ பிஸ்ஸ' சேமிப்பு மேம்பாட்டு நிகழ்ச்சி: கொழும்பு பாதுகாப்பு சேவைகள் கல்லூரியில் நடத்தப்பட்ட நிகழ்வில் மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.



உலக சிக்கன தினத்தை நினைவு கூரும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'புரவமு வீ பிஸ்ஸ' சேமிப்பு மேம்பாட்டு நிகழ்ச்சி: நெல் களஞ்சியசாலையில் வேலை செய்யும் விவசாயிகள் போல் ஆடை அணிந்திருக்கும் மாணவர்கள்.



உலக சிக்கன தினத்தை நினைவு கூரும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'புரவமு வீ பிஸ்ஸ' சேமிப்பு மேம்பாட்டு நிகழ்ச்சி: சேமிப்பு அலகில் பணத்தை வைப்புச் செய்வதற்காக வரிசையில் நிற்கும் மாணவர்கள்.



தெமட்டகொடை கிளையினால் பாடசாலை மாணவிகளுக்கு சிசு உதான சேமிப்பு புத்தகங்கள் வழங்கப்பட்டன.



நெல்லை சந்தைப்படுத்துவது தொடர்பான பிரச்சினைகள் குறித்து மொனராகலை பிராந்திய முகாமையாளரும், தணமல்வில கிளை முகாமையாளரும் விவசாயிகளுடன் கலந்துரையாடுகின்றனர்.



அநுராதபுரத்தில் வங்கியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொசன் பக்தி பாடல் நிகழ்வு



முன்னாள் தலைவர் திரு. டப்ளியு. கருணாஜீவ அவர்களின் பங்கேற்புடன் அநுராதபுரத்தில் இடம்பெற்ற பொசன் அன்னதான நிகழ்வு.



மக்கள் வங்கியினால் நிர்மாணிக்கப்பட்ட தலவில யாத்திரிகர் விடுதி சிலாபம் ஆயர் அவர்களினால் திறந்து வைக்கப்படுகின்றது.



கொட்டாஞ்சேனை கிளையில் இடம்பெற்ற தைப்பொங்கல் கொண்டாடங்கள்.



உலக சிறுவர் தின நிகழ்வுகள்: தமக்குக் கிடைத்த வெகுமதிகளினால் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கியிருக்கும் வடுவாவெல மழலைப் பள்ளிப் பிள்ளைகள்.



உலக சிறுவர் தின நிகழ்வுகள்: இந்நிகழ்வை கொண்டாடும் பொருட்டு, மொனராகலை பிராந்திய முகாமையாளர் ஒரு பாடசாலைக்கு விஜயம் செய்தார்.



புத்தாண்டு கொண்டாட்டம்: மொனராகலை பிராந்தியத்தைச் சேர்ந்த ஊழியர்களினால் முதல் தடவையாக ஏற்பாடு செய்யப்பட்ட சித்திரை புத்தாண்டு விழாவில் இடம்பெற்ற பிள்ளைகளின் ஒரு நிகழ்ச்சி.

பக்கம் 6 செயற்பாட்டு குறிகாட்டிகள்
பக்கம் 7 நிதிசார் குறிகாட்டிகள்
பக்கங்கள் 8-13 தலைவரின் செய்தி
பக்கங்கள் 14-21 பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளரின் மீளாய்வு
பக்கங்கள் 22-24 பணிப்பாளர் சபை
பக்கங்கள் 26-30 கூட்டு முகாமைத்துவம்
பக்கங்கள் 32-33 நிறைவேற்று முகாமைத்துவம்
பக்கம் 34 வலய முகாமைத்துவம்
பக்கங்கள் 35-47 வணிக மீளாய்வு



உலக சிறுவர் தின நிகழ்வுகள்: ஹெம்மாத்தகம கிளையில் இடம்பெற்ற நிகழ்வில் பங்கேற்ற பிள்ளைகளுக்கு உணவுப்பொருட்களும், வெகுமதிகளும் வழங்கப்பட்டன.



மக்கள் வங்கியின் கலை வட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலை விழாவில் வெற்றியீட்டிய அணியுடன் நிற்கும் முன்னாள் தலைவர்.



யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மக்கள் வங்கியின் கலை விழாவில் இடம்பெற்ற ஒரு நடன நிகழ்ச்சி.



தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் ஒருவருக்கு பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர் திரு. என். வசந்த குமார் அவர்கள் சான்றிதழையும், வெகுமதியையும் வழங்குகின்றார்.



பரிணத கணக்கு வைத்திருப்பவர்களுக்கான அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் வெற்றியீட்டி, தம்பதிவ யாத்திரையில் பங்கேற்றவர்கள்.



வங்கியின் தலைமை அலுவலகத்தில் 01.01.2012 இல் சமய வைபவங்கள் இடம்பெற்றன.



ரமழான் நோன்பு திறக்கும் நிகழ்வு கிராண்ட்பாஸ் கிளையில் இடம்பெற்றது.


இணங்கியொழுகல் அறிக்கை

வங்கி அனுபவித்து வரும் அதி உன்னதமான நற்பெயர் அதன் வணிக வெற்றியின் முக்கிய தூணாகும். உறுதியான ஒரு நற்பெயர் வங்கியினால் வழங்கப்பட்டு வரும் சேவைகள் குறித்து வாடிக்கையாளர்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையின் ஆதாரமாகவுள்ளது. வங்கி ஊழியர்களின் நாணயம் மற்றும் அவர்கள் கொண்டிருக்கும் விசேட அறிவு, அதே போல எமது திட்டங்களின் உயர் தரம் என்பவற்றின் மீதான நம்பிக்கையுடன் இது கைகோர்த்துச் செல்கின்றது. இதற்கு இணங்கியொழுகுவது தொடர்பான வங்கியின் முதன்மையான கோட்பாடுகள் ஊழியர்களின் நாணயத்தை உத்தரவாதப்படுத்துதல், சேவைகள் மற்றும் திட்டங்கள் என்பவற்றின் தரத்தை பராமரித்தல் என்பனவாகும். இணங்கியொழுகல் பிரதானமாக வங்கியின் நற்பெயரை பராமரித்து வருதல் மற்றும் தொடர்ச்சியாக விருத்தி செய்து கொள்ளல் என்பவற்றையே நோக்காகக் கொண்டுள்ளது. வங்கி மற்றும் அதன் ஊழியர்களின் நாணயத்தை உறுதிப்படுத்துதல், இணங்கியொழுகல் சம்பந்தப்பட்ட சட்டத்தை பின்பற்றுவதன் மூலம் நிறைவேற்றி வைக்கப்படுகின்றது. பின்பற்ற வேண்டியிருக்கும் இணங்கியொழுகல் சட்டம் குறித்த போதியளவிலான அறிவை பெற்றுக் கொடுத்தல் மூலமும், அதன் விளைவான இணங்கியொழுகல் வழிகாட்டுதல் மற்றும் கோட்பாடுகள் என்பவற்றை கண்காணிப்பதன் மூலமும் இது சாதித்துக் கொள்ளப்படுகின்றது.

வங்கியின் கடமைகள் குறித்த தற்போதைய சட்டத்தை அலட்சியப்படுத்துதல் அல்லது கவனத்தில் எடுக்கத் தவறுதல் போன்றன இடம்பெறுவதற்கான சாத்தியப்பாடு உயரளவில் நிலவி வருகின்றது. ஏனெனில், சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றில் அடிக்கடி திருத்தங்கள் மற்றும் மாற்றங்கள் செய்யப்பட்டு வருகின்றன. மக்கள் வங்கி நிறுவனத்திற்குள் பின்வரும் பரப்பெல்லையுடன் இணங்கியொழுகும் கருமத்தின் வாகி பாத்திரத்தை ஸ்தாபித்துள்ளது:

- வங்கியின் வர்த்தக நடவடிக்கைகள் வங்கித்தொழில் துறை சம்பந்தப்பட்ட விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதா என்பதனை விசாரணை செய்வதற்கும், பரிசீலனை செய்வதற்குமான சுதந்திரம்.
- சபை ஒருங்கிணைந்த நட்டவச்ச முகாமைத்துவ கமிட்டிக்கு அல்லது பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடும் சுதந்தரம்.
- சம்பந்தப்பட்ட ஒழுங்குவிதிகளின் தாத்பரியங்கள் மீறப்படாத விதத்திலும், ஒழுங்குமுறைப்படுத்துனர்களுடனான வங்கியின் நன்மதிப்புக்கு குந்தகம் ஏற்படாத விதத்திலும் வணிகச் செயற்பாடுகளுக்கு வசதி செய்து கொடுக்கும் பொருட்டு ஒழுங்குவிதிகளுக்கு ஆக்கபூர்வமான விதத்தில் பொருள் விளக்கம் அளிக்கக் கூடிய ஆற்றல்.

சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை மீறுவது அபராதங்களை எடுத்து வந்து, வங்கியின் நற்பெயர் மற்றும் கீர்த்தி என்பவற்றுக்கு குந்தகம் விளைவிப்பதனால் இணங்கியொழுகல் கருமம் நிதிச் சேவைகள் தொழிற் துறைக்கு விசேடமாக வங்கியின் வணிகத்துடன் சம்பந்தப்பட்ட சட்டவாக்க அமைப்புக்களினாலும், ஒழுங்குமுறைப்படுத்தும் அமைப்புக்களினாலும் வெளியிடப்படும் சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் தர நியமங்கள் என்பவற்றிலிருந்து தோன்றும் நட்டவச்சங்களை முகாமைத்துவம் செய்வதில் கவனம் செலுத்துகின்றது. இணங்கியொழுகல் கருமம் கறுப்பு பணத்தை வெள்ளையாக்குவதற்கு எதிரான செயற்பாடு, நலன்களின் மோதல், விற்பனை மற்றும் வியாபார நடத்தை, வாடிக்கையாளர் நலன், பயங்கரவாத நிதிப்படுத்தலுக்கு எதிரான பாதுகாப்பு மற்றும் அதனை தடுத்தல் போன்ற விடயங்களை முகாமைத்துவம் செய்வதற்கென வணிகத் துறைக்கு முனைப்பான விதத்தில் கல்வியூட்டுவதுடன், ஆதரவளித்தும் வருகின்றது.



இணங்கியொழுகும் கருமத்தின் கடமைகள்

- வங்கித்தொழில் துறை சம்பந்தப்பட்ட சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றின் பிரகாரம் வங்கியின் வணிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதனை உறுதிப்படுத்துதல்.
- வங்கி ஊழியர்கள் அனைவரும் தமது கடமைகளை நிறைவேற்றி வைப்பதில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் தார்மீக தர நியமங்களை பின்பற்றுவதை உறுதிப்படுத்துதல்.
- சம்பந்தப்பட்ட ஒழுங்குவிதிகளின் தாத்பரியங்கள் மீறப்படாத விதத்திலும், ஒழுங்குமுறைப்படுத்துனர்களுடனான வங்கியின் நன்மதிப்புக்கு குந்தகம் ஏற்படாத விதத்திலும் வணிகச் செயற்பாடுகளுக்கு வசதி செய்து கொடுக்கும் பொருட்டு ஒழுங்குவிதிகளுக்கு ஆக்கபூர்வமான விதத்தில் பொருள் விளக்கமளித்தல்.
- வங்கியின் தொட்டுணரக் கூடிய சொத்துக்கள் மற்றும் தொட்டுணர முடியாத சொத்துக்கள், வணிகத்தின் நிதிசார் பாதுகாப்பு மிக முக்கியமாக வங்கியின் நற்பெயர் என்பவற்றை பாதுகாத்தல்.
- வங்கித்தொழில் வணிகம் தொடர்பான சட்டங்களில்/ஒழுங்குவிதிகளில் மாற்றங்கள் இடம்பெறும் பொழுது, ஊழியர்களுக்கு ஒழுங்கான அடிப்படையில் அவற்றை தெரிவித்தல் மற்றும் அனைத்து நேரங்களிலும் இணங்கியொழுகுதல் தொடர்பாக விழிப்புணர்வுடன் இருந்து வருவதனை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு கிளை வலையமைப்பு நெடுகிலும் பயிற்சிகளை நடத்துதல்.

- வங்கியின் அனைத்து மட்டங்களிலும் வினைத்திறன் மிக்க நிறுவன ஆளுகை கலாசாரம் நிலவி வருவதனை உறுதிப்படுத்துதல்
- பொது மக்களின் நம்பிக்கை மற்றும் விசுவாசம் என்பவற்றை பராமரிப்பதில் வங்கி உறுதியாக பாதுகாப்பான விதத்தில் செயற்பட்டு வருவதனை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு, வங்கியின் நிறுவன செயற்பாடுகளையும் , நடத்தையையும் ஒன்றிணைத்தல்.
- வங்கித்தொழில் துறையின் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு இணங்கியொழுகும் விதத்தில் கிளை வலையமைப்பு செயற்பட்டு வருவதனை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு கிளைகளை மதிப்பீடு செய்தல்.
- சம்பந்தப்பட்ட திணைக்களங்களிடமிருந்து இணங்கியொழுகல் தொடர்பான உறுதிப்படுத்தல்களை காலத்துக்கு காலம் பெற்றுக் கொள்ளும் செயன்முறைகளை மேற்கொள்ளல் மற்றும் இனங்காணப்பட்ட மீறல்கள் எவையும் இருப்பின், நிவர்த்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கென அவற்றை பணிப்பாளர் சபையின் கவனத்திற்கு எடுத்து வருதல்.
- இலங்கை மத்திய வங்கியின் பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகியிருப்பது தொடர்பான உறுதிப்படுத்தல் அறிக்கைகளை வங்கி மேற்பார்வை திணைக்களத்திடம் சமர்ப்பித்தல்.

கறுப்பு பணத்தை வெள்ளையாக்குதல் மற்றும் பயங்காரவாத நடவடிக்கைகளுக்கு நிதிப்படுத்தல் என்பவற்றை முறியடித்தல்

கறுப்பு பணத்தை வெள்ளையாக்குதல் மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு நிதிப்படுத்தல் என்பன இன்று உலகளாவிய ரீதியில் ஒரு பாரிய பிரச்சினையாக உருவாகி இருப்பதுடன், அவை வங்கித்தொழில் மற்றும் நிதித் துறைக்கான ஒரு பாரிய அச்சுறுத்தலாகவும் இருந்து வருகின்றன.

இலங்கை ஒரு நாடு என்ற முறையில், கறுப்பு பணத்தை வெள்ளையாக்குதல் மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகளை நிதிப்படுத்தல் தொடர்பான சட்டங்களை இயற்றியிருப்பதுடன், இச்சட்டத்தின் கீழ் கறுப்புப் பணத்தை வெள்ளையாக்குதல், பயங்கரவாத நிதிப்படுத்தல் என்பன அபராதங்கள் மற்றும் சிறைத் தண்டனை என்பன விதிக்கப்படக் கூடிய குற்றச் செயல்களாக இருந்து வருகின்றன என்பதனை இனங்கண்டுள்ளது.

345 கிளைகள் மற்றும் 381 சேவை நிலையங்கள், 12 மில்லியன் வாடிக்கையாளர் கணக்குகள் என்பவற்றுடன் இணைந்த விதத்தில் நாளாந்தம் ஆயிரக்கணக்கான கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்டு வரும் இலங்கையின் மிகப் பெரிய அரச வங்கிகளில் ஒன்றான மக்கள் வங்கி, அவ்விதம் கறுப்புப் பணத்தை வெள்ளையாக்கும் நபர்களின் ஒரு இலக்காக எப்பொழுதும் இருந்து வர முடியும். இந்த நிலையில், நாங்கள் கறுப்புப் பணத்தை வெள்ளையாக்குவதற்கெதிரான பின்வரும் தாக்கமான நடைமுறைகளை உள்ளக ரீதியில் அபிவிருத்தி செய்து கொண்டுள்ளோம். கறுப்பு பணத்தை வெள்ளையாக்கும் கொடுக்கல் வாங்கல்களுக்கென வங்கி பயன்படுத்தப்படக் கூடிய நட்டவச்சத்தை குறைக்கும் பொருட்டு இந்நடைமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. அவையாவன:

- எத்தகைய பொருளாதார அல்லது வெளியில் தென்படும் சட்ட ரீதியான நோக்கமும் இல்லாத விதத்தில் இடம்பெறும் வழமைக்கு மாறான விதத்திலான பாரிய கொடுக்கல் வாங்கல்கள், கொடுக்கல் வாங்கல்களின் வழமைக்கு மாறான போக்குகள் என்பவற்றை கண்காணித்தல், சந்தேகத்துக்குரிய கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக ஊழியர்களிடமிருந்து உள்ளக அறிக்கைகளை பெற்றுக் கொள்ளல், அந்த அறிக்கைகளை பகுப்பாய்வு செய்தல் மற்றும் புலனாய்வு செய்தல்.
- சந்தேகத்திற்குரிய கொடுக்கல் வாங்கல்களை முகாமைத்துத்துக்கும், நிதி புலனாய்வு அலகுக்கும் உடனடியாக அறிக்கையிடுதல்.

கறுப்பு பணத்தை வெள்ளையாக்குதல் மற்றும் பயங்கரவாத நிதிப்படுத்தல் என்பன குறித்த விழிப்புணர்வை விருத்தி செய்வதற்கும், வங்கிக்குள் சிறந்த ஆளுகை கலாசாரமொன்றை உருவாக்கிக் கொள்வதற்கும் வங்கிக்குள் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

- கறுப்புப் பணத்தை வெள்ளையாக்குவதற்கு எதிரான நடவடிக்கை, உங்கள் வாடிக்கையாளரை அறிந்து கொள்ளுங்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் மீது உரிய விதத்தில் கவனம் செலுத்துதல், நட்டவச்ச வகைப்படுத்தல் என்பன தொடர்பாக கிளை வலையமைப்பு நெடுகிலும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.
- கறுப்பு பணத்தை வெள்ளையாக்குதல்/உங்கள் வாடிக்கையாளரை அறிந்து கொள்ளுங்கள் மற்றும் வெஸ்டர்ன் யூனியன் கொடுக்கல் வாங்கல்கள் என்பன தொடர்பான நு- கற்கை மொடியூல்கள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.
- நிறுவன ஆளுகை தொடர்பான மிகச் சிறந்த நடத்தைக் கோவையையும், கறுப்பு பணத்தை வெள்ளையாக்குவதற்கு எதிரான மற்றும் உங்கள் வாடிக்கையாளரை அறிந்து கொள்ளுங்கள் கொள்கை, நடத்தை நெறிக் கோவை, இணங்கியொழுகல் கொள்கை மற்றும் வாடிக்கையாளர் சாசனம் என்பவற்றை வங்கி உருவாக்கிக் கொண்டுள்ளது.

மக்கள் வங்கி நாட்டின் இணங்கியொழுகல் தேவைகளுக்கு முழுமையாக இணங்கியொழுகியிருப்பதுடன், கறுப்பு பணத்தை வெள்ளையாக்குதல் மற்றும் பயங்கரவாத நிதிப்படுத்தல் என்பவற்றை முறியடிப்பதற்குத் தேவையான முழுமையான ஆதரவை வழங்குவதற்கு முறைமைகளையும், நடைமுறைகளையும் அபிவிருத்தி செய்து கொண்டுள்ளது. இது தொடர்பாக பிரயோகிக்கத்தக்க அனைத்து சட்டங்களும், ஒழுங்குவிதிகளும் கண்டிப்பான விதத்தில் பின்பற்றபட்டு வருகின்றன. ஒரு அரச வங்கி என்ற முறையில் இலங்கையின் நிதியமைப்பின் ஸ்திர நிலையை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகார சபைகளுக்கு ஆதரவளிப்பதற்கென அனைத்து வழிமுறைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நிறுவன ஆளுகை

ஒரு நிறுவனத்தின் போட்டித் திறன், வளர்ச்சி மற்றும் நிலைத்திருக்கும் தன்மை என்பவற்றுக்கு நல்ல நிறுவன ஆளுகை அடிப்படையான ஒரு தேவையாக இருந்து வருகின்றது என்ற விடயம் உலகளாவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. பணிப்பாளர் சபைகளில் இருப்பவர்கள் சிறந்த ஆளுகை நடைமுறைகளுக்கான தமது அர்ப்பணிப்புணர்வில் உயரளவிலான தார்மீக விழுமியங்கள் மற்றும் பொறுப்புக் கூறும் நிலை என்பவற்றுடன் இணைந்த விதத்தில் தமது கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றி வைக்க வேண்டும் என்ற விடயத்தில் உயரளவில் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. உறுதியான வணிக நெறிமுறைகள், திடமான கொள்கைகள் மற்றும் நடைமுறைகள், செயல்திறனும், வினைத்திறனும் மிக்க கண்காணிப்பு முறைகள் என்பன நல்ல நிறுவன ஆளுகை முறையொன்றின் கூறுகளாக கருதப்படுகின்றன.

கம்பெனிகளுக்கும் அதன் பங்கீடுபாட்டாளர்களுக்குமிடையில் நம்பிக்கையையும், பங்கேற்பையும் உருவாக்குவதற்கு சிறந்த நிறுவன ஆளுகை அத்தியாவசியமானதாக இருந்து வருகின்றது. அந்த வகையில் அது வணிகத்தின் நீண்ட கால வெற்றிக்கு பங்களிப்புச் செய்து வருகின்றது. இந்தப் பின்னணியில், கட்பெரி அறிக்கை, 1995, 2.5 இன் பிரகாரம், நிறுவன ஆளுகையே கம்பெனிகள் நெறிப்படுத்தப்பட்டும், கட்டுப்படுத்தப்பட்டும் வரும் முறை' என வரைவிலக்கணம் வழங்க முடியும்.


நிறுவன ஆளுகை கம்பெனிகள் நெறிப்படுத்தப்பட்டு, விவேகபூர்வமான விதத்தில் வைக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் பொறிமுறையாகும். நிறுவன ஆளுகை பங்குதாரர்கள், பணிப்பாளர்கள், முகாமையாளர்கள், ஊழியர்கள், கடன் கொடுத்தோர், வாடிக்கையாளர்கள், உலகளாவிய சூழல் மற்றும் ஏனைய சமூகத்தினர் போன்ற பல்வேறு வகைகளைச் சேர்ந்த பங்கீடு பாட்டாளர்களை ஒருங்கிணைக்கின்றது. ஒரு பொதுவான குறிக்கோள் என்ற முறையில் நிறுவனத்தின் செயலாற்றுகையையும், நலனையும் உயர்த்தும் பொருட்டு இது மேற்கொள்ளப்படுகின்றது. நிறுவன ஆளுகை முறையொன்று பிரதானமாக கவனத்தில் எடுக்கும் விடயங்கள் வருமாறு -

- கம்பெனிகள் எந்த அளவுக்கு வெற்றிகரமாக தமது அணுகுமுறையை உருவாக்கிக் கொள்கின்றன தமது இருப்புக்கான காரணம் மற்றும் எதிர்கால திசைகள்
- கம்பெனிகளின் தீர்மானங்கள் எந்த அளவுக்கு வினைத்திறன் மிக்க விதத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன வழிகாட்டுதல்கள் மற்றும் வழிமுறைகள்
- முகாமையாளர்களின் முடிவுகளை எடுத்தல் செயற்பாட்டினையும், அவற்றை அமுல் செய்வதனையும் பங்குதாரர்களின் சார்பில் பணிப்பாளர் சபை எவ்வாறு எவ்வாறு சிறப்பாக மதிப்பிடுகின்றது மற்றும் கண்காணிக்கின்றது.
- குறிக்கோள்களை சாதித்துக் கொள்ளும் பொருட்டு பல்வேறுபட்ட பங்கீடுபாட்டாளர்களுக்கு எந்த அளவில் பயனுள்ள விதத்தில் வசதி செய்து கொடுக்கப்படுகின்றது.

முக்கியமாக கடன் நெருக்கடி காரணமாக கடந்த தசாப்தத்தின் போது நிறுவன ஆளுகை தொடர்பான கரிசனைகள் தீவிரமாக அதிகரித்து வந்துள்ளன. அதன் பெறுபேறு வணிகத்திலும் அதே போல இலங்கையின் பொருளாதாரம் மற்றும் சமூகத்திலும் ஒரு முக்கியமான பாகமாக இருந்து வருகின்றது.

கடந்த 51 வருடங்களாக ஒரு நல்ல நிறுவனப் பிரஜை என்ற வகி பாத்திரத்தை வகித்து வரும் மக்கள் வங்கி, இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம், இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு, இலங்கை மத்திய வங்கி போன்ற பல்வேறு ஒழுங்கு முறைப்படுத்தல் அமைப்புக்களால் பரிந்துரை செய்யப்பட்டிருக்கும் நிறுவன ஆளுகை நடைமுறைகளை பின்பற்றுவதற்கென தானாகவே முன்வந்து வழிமுறைகளை மேற்கொண்டுள்ளது.

ஊழியர்கள் தொடக்கம் வங்கியின் வாடிக்கையாளர்கள் வரையிலான ஏனைய அனைத்து பங்கீடுபாட்டாளர்களினதும் பங்களிப்புடன் வங்கியில் சிறந்த நிறுவன ஆளுகையை மேற்கொள்வது பணிப்பாளர் சபையினதும், சிரேஷ்ட முகாமைத்துவத்தினதும் பொறுப்பாக இருந்து வருகின்றது.



இலங்கை பட்டயக்கணக்காளர் நிறுவனம் மற்றும் இலங்கை பிணையங்கள் பரிமாற்ற ஆணைக்குழு என்பவற்றினால் வெளியிடப்பட்டிருக்கும் நிறுவன ஆளுகை தொடர்பான மிகச் சிறந்த நடைமுறைக் கோவைக்கு வங்கியின் இணங்கியொழுகும் நிலை.

விடயம்	நிறுவன ஆளுகை கோட்பாடு	ICASL & SEC என்பவற்றின் சிறந்த நடைமுறை தொடர்பான குறிப்பு	இணங்கியொழுகல் மட்டம்
அ. பொது			
தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி	தலைவரும் பிநிஅ உம் ஒரே நபராக இருந்து வந்தால் தலைவர்/பிநிஅ மற்றும் நியமனம் செய்யப்பட்டுள்ள சிரேஷ்ட சுதந்திர பணிப்பாளர் ஆகியோர்களின் பெயர்களை வெளிப்படுத்தி, இந்த இரு பதவிகளையும் இணைப்பதற்கான தீர்மானத்தை நியாயப்படுத்துதல்.	A.2.1 & A.5.6	தலைவர் மற்றும் பிநிஅ/பொமு ஆகிய பதவிகள் இரு வேறு பதவிகளாக இருந்து வருவதுடன், இரு தனி நபர்கள் அவற்றை வகித்து வருகின்றனர்.
சபையின் சமநிலை	• சுதந்திரமான நிறைவேற்று தரம் சாராத பணிப்பாளர்களை இணங்காணல் வேண்டும். • நிறைவேற்று தரம் சாராத ஒரு பணிப்பாளர் 'சுதந்திரமானவராக' இணங்காணப்பட்டால், பின்வரும் காரணிகளில் எவையேனும் நிலவி வந்தாலும் கூட, அத்தகைய நிர்ணயத்துக்கான காரணம் வெளிப்படுத்தப்பட வேண்டும். • பின்வரும் நிலைகளில் ஒரு பணிப்பாளர் சுதந்திரமானவராக கருதப்படுவதில்லை: ○ பணிப்பாளராக நியமனம் செய்யப்படுவதற்கு இரு வருடங்கள் முன்னரான காலப் பிரிவின் போது கம்பெனியினால் சேவையில் அமர்த்தப்பட்டிருந்தார் ○ தற்பொழுது, ஒரு பணிப்பாளராக நியமனம் செய்யப்படுவதற்கு முன்னுள்ள இரு வருட காலப் பிரிவின் போது நேரடியாக அல்லது மறைமுகமாக கம்பெனியுடன் ஒரு பொருள்சார் வணிக உறவை கொண்டுள்ளார்/கொண்டிருந்தார் ○ கம்பெனியில் பணிப்பாளராக, பிரதம நிறைவேற்று அதிகாரியாக (மற்றும்/அல்லது) அதற்கு இணையான ஒரு பதவியில் இருந்து வரும் நெருங்கிய குடும்ப உறுப்பினர் ஒருவரைக் கொண்டுள்ளார் ○ கம்பெனியில் கணிசமான அளவிலான பங்குடமையை கொண்டிருக்கிறார் ○ முதல் நியமனத் திகதியிலிருந்து தொடர்ச்சியாக ஒன்பது வருடங்களுக்கு மேற்பட்ட காலப் பிரிவின் போது கம்பெனியின் சபையில் பணியாற்றியுள்ளார் ○ மற்றொரு கம்பெனியில் அல்லது வணிகத்தில் வேலையில் அமர்த்தப் பட்டுள்ளார் - ■ அக்கம்பெனியில், கம்பெனியின் ஏனைய பணிப்பாளர்களில் பெரும்பாலானவர்கள் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளனர் அல்லது பணிப்பாளர்களாக உள்ளனர் அல்லது ■ அதில் கம்பெனியின் பணிப்பாளர்களில் பெரும்பாலானாவர்கள் கணிசமான அளவிலான பங்குடமையைக் கொண்டுள்ளார்கள். அல்லது பொருள்சார் வணிகத் தொடர்பைக் கொண்டுள்ளார்கள் அல்லது ■ அது கம்பெனியில் கணிசமான அளவிலான பங்குடமையைக் கொண்டுள்ளது. அல்லது கம்பெனி அதனுடன் வணிகப் பிணைப்பினைக் கொண்டுள்ளது	A.5.5	1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் கீழ் பணிப்பாளர் சபையை நியமனம் செய்வதற்கான அதிகாரத்தை நிதி அமைச்சர் கொண்டுள்ளார். இந்தச் சட்டத்தின் கீழ் நியமனம் செய்யப்படும் பணிப்பாளர்கள் அனைவரும் நிறைவேற்று தரம் சாராத மட்டத்தில் இருந்து வருவதுடன், அவர்கள் வங்கியின் முகாமைத்துவத்தின் ஒரு பாகமாக இருந்து வராதிருப்பதனால் சுதந்திரமான ஒரு கருத்தை உருவாக்கிக் கொள்ளக் கூடிய ஒரு ஆற்றலைக் கொண்டுள்ளார்கள்.

விடயம்	நிறுவன ஆளுகை கோட்பாடு	ICASL & SEC என்பவற்றின் சிறந்த நடைமுறை தொடர்பான குறிப்பு	இணங்கியொழுகல் மட்டம்
	• இன்னொரு கம்பெனியில் பணிப்பாளராக இருந்து வருகின்றார் ○ அதில் கம்பெனியின் ஏனைய பணிப்பாளர்களில் பெரும்பாலானவர்கள் தொழிலில் அமர்த்தப்பட்டுள்ளார்கள் அல்லது ○ அது கம்பெனியுடன் வணிகப் பிணைப்பை அல்லது கணிசமான அளவிலான பங்குடமையைக் கொண்டுள்ளது • மற்றொரு கம்பெனியில் அல்லது வணிகத்தில் பொருள்சார் வணிகத் தொடர்பினை அல்லது கணிசமான அளவிலான பங்குடமையை கொண்டுள்ளார் ○ அதில் கம்பெனியின் பணிப்பாளர்களில் பெரும்பாலானவர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளார்கள் அல்லது பணிப்பாளர்களாக உள்ளார்கள் மற்றும்/அல்லது ○ கம்பெனியுடன் ஒரு வணிகப் பிணைப்பை கொண்டுள்ளது அல்லது அதில் கணிசமான அளவிலான பங்குடமையைக் கொண்டுள்ளது		
புதிய பணிப்பாளர்களின் நியமனம்	புதிய பணிப்பாளர்கள் நியமனம் செய்யப்படும் போது பின்வரும் விபரங்கள் வெளிப்படுத்தப்படல் வேண்டும்: • அத்தகைய ஒவ்வொரு பணிப்பாளரும் குறித்த ஒரு சுருக்கமான விவரம் • சம்பந்தப்பட்ட செயற்பாட்டுத் துறைகளில் அவர் கொண்டிருக்கும் நிபுணத்துவத்தின் இயல்பு • அப்பணிப்பாளர், பணிப்பாளர் பதவிகளை அல்லது அங்கத்துவத்தைக் கொண்டிருக்கும் கம்பெனிகளின் பெயர்கள் மற்றும் • அப்பணிப்பாளரை சுதந்திரமானவராக கருத முடியுமா என்ற விடயம்	A.7.3	இணங்கியொழுகப்பட்டுள்ளது பணிப்பாளர்கள் மக்கள் வங்கிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நியமனம் செய்யப்படுகின்றனர்.
நியமனக் கமிட்டி	நியமனக் கமிட்டியின் தலைவர் மற்றும் உறுப்பினர் இணங்காணப்படுதல் வேண்டும்.	A.7.1	இணங்கியொழுகப்பட்டுள்ளது.
சபையின் செயலாற்றுகையை மதிப்பிடுதல்	செயலாற்றுகை மதிப்பீடு எவ்வாறு நடத்தப்பட்டுள்ளது என்பதனை வெளிப்படுத்த வேண்டும்.	A.9.3	பணிப்பாளர் சபை ஒட்டுமொத்தமாக அதன் செயலாற்றுகையையும், வினைத்திறனையும் மதிப்பிட்டுக் கொள்வதற்கென வருடாந்தம் மதிப்பீடுகளை நடத்துகின்றது.
சபை சம்பந்தப்பட்ட வெளிப்படுத்துகைகள்	ஒவ்வொரு பணிப்பாளரும் தொடர்பான பின்வரும் விவரங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும்: • பெயர், தகுதி மற்றும் சுருக்கமான விவரம் • சம்பந்தப்பட்ட செயற்பாட்டுத் துறைகளில் அவர் கொண்டிருக்கும் நிபுணத்துவத்தின் இயல்பு • வங்கியின் ஏனைய பணிப்பாளர்களுடன் கொண்டிருக்கும் நெருங்கிய குடும்ப மற்றும்/அல்லது பொருள்சார் வணிக உறவுகள் • சம்பந்தப்பட்ட பணிப்பாளர், ஒரு பணிப்பாளராக செயற்பட்டு வரும் இலங்கையின் ஏனைய பட்டியலிடப்பட்ட கம்பெனிகளின் பெயர்கள் • சம்பந்தப்பட்ட பணிப்பாளர் ஒரு பணிப்பாளராக செயற்பட்டு வரும் மற்றும் அல்லது குழுமக் கம்பெனிகளின் பணிப்பாளராக செயற்பட்டு வரும் கம்பெனிகளின் பெயர்கள்	A.10.1	இணங்கியொழுகப்பட்டுள்ளது. 2012 ஆண்டறிக்கை இது தொடர்பான அனைத்துமடங்கிய தகவல்களைக் கொண்டுள்ளது.

விடயம்	நிறுவன ஆளுகை கோட்பாடு	ICASL & SEC என்பவற்றின் சிறந்த நடைமுறை தொடர்பான குறிப்பு	இணங்கியொழுகல் மட்டம்
	• வருடத்தின் போது சமூகமளித்த வங்கியின் சபை கூட்டங்களின் எண்ணிக்கை/சதவீதம் • பணிப்பாளர், தலைவராக அல்லது ஒரு உறுப்பினராக செயற்பட்டு வரும் கமிட்டிகளின் பெயர்கள் மற்றும் • வருடத்தின் போது சமூகமளித்த கமிட்டி கூட்டங்களின் எண்ணிக்கை /சதவீதம்		
வேதனத்தைப் வெளிப்படுத்துல்	• வேதனக் கொள்கை கூற்று மற்றும் ஒட்டு மொத்தமாக சபைக்கான வேதனம் குறித்த விவரங்கள். • நிறைவேற்று பணிப்பாளர்கள் மற்றும் நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர்கள் ஆகியோரின் மொத்த வேதனம்.	B.3	பணிப்பாளர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகளை நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு நிர்ணயிக்கின்றது.
பாரிய கொடுக்கல் வாங்கல்கள்	வங்கியினால் மேற்கொள்ளப்படும் அனைத்து பாரிய கொடுக்கல் வாங்கல்களும் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்	C.2	இணங்கியொழுகப்பட்டுள்ளது.
கணக்காய்வு கமிட்டி	• கணக்காய்வு கமிட்டி உறுப்பினர்களின் பெயர்கள் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். • கணக்காய்வாளர்களின் சுதந்திரத்தை நிர்ணயிக்கும் அடிப்படை.	D.3.4	கணக்காய்வு கமிட்டி உறுப்பினர்களின் பெயர்கள் பக்கம் 117 இல் பணிப்பாளர்களின் அறிக்கையில் வழங்கப்பட்டுள்ளன. இலங்கை அரசியல் யாப்பில் குறிப்பிடப்பட்டிருப்பதை போல, கணக்காய்வாளர் நாயகம் வங்கியின் கணக்காளர் ஆவார். கணக்காய்வாளர் நாயகத்தின் சுதந்திரம் அரசியல் யாப்பினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கணக்காய்வாளர் நாயகம் வங்கியின் வெளிக் கணக்காய்வை மேற்கொள்கிறார். கணக்காய்வாளர் நாயகம் வங்கியின் வெளிக் கணக்காய்வை மேற்கொள்வதற்கென KPMG கணக்காய்வாளர்கள் நிறுவனத்தை நியமனம் செய்துள்ளார்.
வணிக நடத்தை மற்றும் தார்மீக நெறிமுறைகள்	• பணிப்பாளர்கள் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவ அணியின் உறுப்பினர்கள் ஆகியோருக்கென வங்கி ஒரு வணிக நடத்தைக் கோவையையும், தார்மீக நெறிமுறைகளையும் கொண்டுள்ளது என்பதனை வெளிப்படுத்த வேண்டும். • அத்தகைய நடத்தைக் கோவைக்கிணங்க தாம் நடந்து கொண்டிருப்பதனை ஓர் உறுதிப்படுத்தல் பிரகடனத்தின் மூலம் வெளிப்படுத்த வேண்டும். • இந்த நடத்தைக் கோவையின் எந்தவொரு ஏற்பாடும் மீறப்பட்டிருப்பது குறித்து தாம் அறிந்திருக்கவில்லை என்பதனை தலைவர் அத்தாட்சிப்படுத்த வேண்டும்.	D.4.1 & D.4.2	இணங்கியொழுகப்பட்டுள்ளது. வங்கி பணிப்பாளர்களுக்கான நெறிமுறைத் தொகுதி ஒன்றையும், அதன் ஊழியர்களுக்கான நடத்தை நெறிக் கோவை ஒன்றையும் கொண்டுள்ளது.
தொடர்ந்து இயங்கும் தொழில்	• தேவைப்படும் ஆதரவளிக்கும் எடுக்கோள்கள் மற்றும் தகைமைகள் என்பவற்றுடன் இணைந்த விதத்தில், வங்கி தொடர்ந்தும் இயங்கி வரும் ஒரு தொழிலாக இருந்து வருகின்றது என்பதனை அறிக்கையிட வேண்டும்.	D.1.5	வங்கி தொடர்ந்து இயங்கும் ஒரு தொழிலாகும்

விடயம்	நிறுவன ஆளுகை கோட்பாடு	ICASL & SEC என்பவற்றின் சிறந்த நடைமுறை தொடர்பான குறிப்பு	இணங்கியொழுகல் மட்டம்
ஆ. வேதனக் கமிட்டி அறிக்கை			
வேதனக் கமிட்டியின் உறுப்பினர்கள்	• வேதனக் கமிட்டி உறுப்பினர்களின் பெயர்களை வேதனக் கமிட்டி அறிக்கையில் வெளிப்படுத்த வேண்டும்.	B.1.3	இணங்கியொழுகப்பட்டுள்ளது வேதனக் கமிட்டி உறுப்பினர்களின் பெயர்கள் இந்த ஆண்டறிக்கையின் பக்கம் 117 இல் பணிப்பாளர்களின் அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.
இ. பணிப்பாளர்களின் அறிக்கை			
பணிப்பாளர்களின் அறிக்கை	பணிப்பாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் பிரகடனங்களை கொண்டிருத்தல் வேண்டும்: • சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளை மீறும் எந்தவொரு நடவடிக்கையிலும் வங்கி ஈடுபட்டிருக்கவில்லை. • பணிப்பாளர்கள் வங்கியுடன் சம்பந்தப்பட்ட ஒப்பந்தங்களுடன் கொண்டிருக்கும் பொருள்சார் அக்கறைகளை பிரகடனப்படுத்தியிருப்பதுடன், தாம் பொருள்சார் ரீதியில் அக்கறை கொண்டிருக்கும் விவகாரங்களில் வாக்களிப்பதிலிருந்தும் தவிர்ந்து கொண்டுள்ளார்கள் • பங்குதாரர்கள் சமத்துவமான விதத்தில் நடத்தப்படுவதனை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு வங்கி அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது • தேவைப்படும் ஆதரவளிக்கும் எடுக்கோள்கள் அல்லது தகைமைகள் என்பவற்றுடன் இணைந்த விதத்தில் வணிகம் தொடர்ந்து இயங்கி வருகின்றது மற்றும் • நிதிசார், செயற்பாட்டு மற்றும் இணங்கியொழுகல் கட்டுப்பாடுகள் மற்றும் நட்டவச்ச முகாமைத்துவம் என்பவற்றை உள்ளடக்கிய உள்ளக கட்டுப்பாடுகள் குறித்த ஒரு மீளாய்வை அவர்கள் நடத்தியிருப்பதுடன், அவற்றின் வினைத்திறன் மற்றும் வெற்றிகரமான அனுசரிப்பு என்பன குறித்த நியாயமான உறுதிப்படுத்தலை பெற்றுக் கொண்டுள்ளார்கள்.	D.1.2	இணங்கியொழுகப்பட்டுள்ளது.
ஈ. நிதிசார் கூற்றுக்கள்			
நிதிசார் கூற்றுக்கள்	• நிதிசார் கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் சமர்ப்பணம் என்பவற்றுக்கான பொறுப்பு குறித்த ஒரு கூற்றினை பணிப்பாளர் சபை உள்ளடக்க வேண்டும். • கணக்காய்வாளர்களும் தமது அறிக்கையிடல் பொறுப்பு குறித்த ஒரு கூற்றினை கொண்டிருத்தல் வேண்டும்.	D.1.3	இணங்கியொழுகப்பட்டுள்ளது
உ. முகாமைத்துவ அறிக்கை			
முகாமைத்துவ அறிக்கை	குறைந்தது பின்வரும் பிரச்சினைகளை கலந்துரையாடும் 'முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு அறிக்கை' ஒன்றை உள்ளடக்க வேண்டும்: • தொழில்துறை கட்டமைப்பு, அபிவிருத்திகள் • வாய்ப்புக்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் • நட்டவச்சங்கள் மற்றும் கரிசனைகள்	D.1.4	இணங்கியொழுகப்பட்டுள்ளது

விடயம்	நிறுவன ஆளுகை கோட்பாடு	ICASL & SEC என்பவற்றின் சிறந்த நடைமுறை தொடர்பான குறிப்பு	இணங்கியொழுகல் மட்டம்
	• உள்ளக கட்டுப்பாட்டு முறைகள் மற்றும் அவற்றின் போதிய தன்மை • வங்கியினால் முன்னெடுக்கப்பட்ட சமூக மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு நடவடிக்கைகள் • நிதிசார் செயலாற்றுகை • மனித வளங்கள்/தொழில் உறவுகள் என்பன குறித்த பொருள்சார் அபிவிருத்திகள் மற்றும் • எதிர்கால வாய்ப்புக்கள்		
ஊ. நிறுவன ஆளுகை அறிக்கை			
நிறுவன ஆளுகை அறிக்கை	நடத்தைக் கோவையின் கோட்பாடுகள் மற்றும் ஏற்பாடுகளுக்கு வங்கி இணங்கியொழுகியிருக்கும் விதம் மற்றும் அளவு என்பவற்றை வெளிப்படுத்த வேண்டும்.	D.5.1	இணங்கியொழுகப்பட்டுள்ளது
எ. கணக்காய்வு கமிட்டி அறிக்கை			
கணக்காய்வு கமிட்டி அறிக்கை	கமிட்டியினால் மேற்கொள்ளப்பட்ட பணியினை எடுத்து விளக்க வேண்டும்.	D.3.3	இணங்கியொழுகப்பட்டுள்ளது

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட 2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரையின் அவசியப்படுத்தப்பட்டவாறு, நிறுவன ஆளுகை விதிமுறைகளுக்கு வங்கி இணங்கியொழுகியுள்ள விதம்.

இப்பணிப்புரைகளின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகியிருக்கும் மட்டம் குறித்து கணக்காய்வாளர் நாயகத்தினால் கண்டறிந்த விடயங்கள் தொடர்பான அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அந்த முடிவுகள் பணிப்புரைகளுடன் பொருந்திச் செல்லாத விடயங்கள் எவற்றையும் உள்ளடக்கி இருக்கவில்லை.

கண்டறியப்பட்ட விடயங்களுடன் இணைந்த விதத்திலான நிறுவன ஆளுகை சான்றிதழ் பக்கங்கள் 124 தொடக்கம் 153 வரையில் தரப்பட்டுள்ளது.


2012 ஆம் வருடத்தின் போது நடத்தப்பட்ட சபை கூட்டங்கள் மற்றும் சபை உப கமிட்டி கூட்டங்களின் எண்ணிக்கை

கமிட்டியின் பெயர்	கூட்டங்களின் எண்ணிக்கை
சபை கூட்டங்கள்	18
சபை கணக்காய்வு கமிட்டி (BAC)	10
சபை நிறைவேற்று கடன் கமிட்டி (BECC)	24
சபை மனிதவள மற்றும் வேதனக் கமிட்டி (BHRRC)	11
சபை ஒருங்கிணைந்த நட்டவச்ச முகாமைத்துவ கமிட்டி (BIRMC)	4
சபை நியமன கமிட்டி (BNC)	1
சபை முதலீட்டு வங்கித்தொழில் கமிட்டி (BIBC)	1
சபை தகவல் தொழில்நுட்ப கமிட்டி (BITC)	7

2012 ஆம் வருடத்தின் போது சபை மற்றும் சபை உப கமிட்டிகளின் கூட்டங்களில் பிரசன்னம்

பணிப்பாளரின் பெயர்	சபை கூட்டங்கள்	BAC	BECC	BHRRC	BIRMC	BNC	BIBC	BITC
திரு. டப்ளியு. கருணாஜீவ	18	உ/அ	22	11	உ/அ	உ/அ	உ/அ	உ/அ
கலாநிதி டி. ஜே. டி. ஜயக்கொடி	18	உ/அ	23	11	4	1	1	7
திரு. ஜெஹான் அமரதுங்க	16	10	உ/அ	உ/அ	4	1	1	7
திரு. பி.ஏ. அஜித் பண்டிதரத்ன	15	உ/அ	உ/அ	10	உ/அ	1	உ/அ	உ/அ
திருமதி லக்ஷ்மி கே. சங்கக்கார	17	உ/அ	22	உ/அ	உ/அ	1	உ/அ	உ/அ
திருமதி தர்மா என். கம்மம்பில	15	9	உ/அ	உ/அ	4	1	உ/அ	உ/அ
செல்வி விசாகா அமரசேகர	16	9	உ/அ	உ/அ	4	1	1	உ/அ
திரு. பிரியந்த மாயாதுன்ன	16	உ/அ	உ/அ	10	உ/அ	1	உ/அ	7
திரு. பவர தஸநாயக்க	17	உ/அ	19	உ/அ	உ/அ	1	உ/அ	உ/அ

** உ/அ - சபை உப கமிட்டியின் ஓர் உறுப்பினர் அல்ல.*





முதலீட்டாளர்கள்

10.9 ரூ. பில்

வரிக்குப் பின்னரான இலாபம்

சொத்துக்கள் மீதான ஆதாயம் (வரிக்கு முன்னர்)

2%


பங்குகள் மீதான ஆதாயம்

41.7%





அரசுக்கு சொந்தமான ஒரு வங்கி என்ற முறையில், எமது பங்கீடு பாட்டாளர்களுக்காக நாங்கள் உருவாக்கும் நியாயமான ஆதாயங்கள் மீண்டும் சமூகத்திற்கே செல்லும் என்பதனை நாங்கள் அறிந்துள்ளோம் - இலங்கையின் அபிவிருத்தியில் ஒரு பாத்திரத்தை வகித்து வருவது குறித்து வங்கி பெருமிதமடைகின்றது. இன்னமும் எமது பெயர் அதனை எடுத்துக் கூறிக் கொண்டிருக்கின்றது...மக்களை கவனத்தில் எடுக்கும் செயற்பாடுகளாகவே அவை இருந்து வருகின்றன!



மூலதன நிறைவு விகிதம்

14.0%

உறுதியான கடன் குறியீடு - பிட்ச் ரேடிங்

AA+

இடர் முகாமைத்துவம்

பின்னணியும் அடிப்படை கோட்பாடுகளும்

வாடிக்கையாளர்களுக்கும் மற்றும் எதிர் தரப்பினருக்கும் பல்வேறு வகையான நிதி வசதிகளை வழங்குவதானது, வங்கியை பல்வேறு வகைகளைச் சேர்ந்த இடர்களுக்கு உட்படுத்துகின்றது என்ற விடயத்தை வங்கி அங்கீகரிக்கின்றது. இந்த இடர்களை முகாமைத்துவம் செய்வது வங்கியின் நீண்ட கால செயல்திறனுக்கு மிகவும் நிர்ணயகரமான ஒரு விடயமாக இருந்து வருகின்றது என்பதனையும் அது ஏற்றுக் கொள்கின்றது.

வங்கியினால் அங்கீரிக்கப்பட்டிருக்கும் முக்கியமான இடர்களில் ஒரு சில வருமாறு:

i. கடன் இடர்
ii. சந்தை இடர்
iii. ஒன்று திரண்டிருக்கும் இடர்
iv. காசு இடர்
v. செயற்பாட்டு இடர்
vi. வட்டி விகித இடர்
vii. சட்ட இடர்

எமது முதன்மை நடவடிக்கைகளான கடனளிப்பு மற்றும் கடன் எடுத்தல் என்பவற்றிலிருந்து தோன்றும் பெரும்பாலான இடர்கள் கவனமாக வடிவமைக்கப்பட்ட வணிக நடைமுறைகளுக்கூடாக அல்லது திட்டங்களை விலையிடல் மற்றும் வடிவமைப்பு என்பவற்றுக்கூடாக குறைக்கப்படுகின்றன, நீக்கப்படுகின்றன அல்லது மாற்றம் செய்யப்படுகின்றன.

வங்கி எதிர்கொண்டு வரும் இடர்கள் இரண்டு பிரதான வகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன:

i. பொருத்தமான வழி வகைகளுக்கூடாக ஒழிக்கப்படக் கூடிய அல்லது மாற்றம் செய்யப்படக் கூடிய அல்லது தவிர்க்கப்படக் கூடிய இடர்.
ii. உறிஞ்சிக் கொள்ளப்பட்டு, வங்கியினால் முனைப்பான விதத்தில் முகாமைத்துவம் செய்யப்படும் இடர்.

நாங்கள் பின்வருவனவற்றின் மூலம் இடரை ஒழிக்கிறோம், தவிர்க்கிறோம் மற்றும் மாற்றல் செய்கின்றோம்:

i. மிகவும் கண்டிப்பான ஒரு இடர் அணுகுமுறையை வரையறை செய்து, அதற்கு இணங்கியொழுகுதல்
ii. செயல்திறனற்ற அல்லது தவறான நிதிசார் தீர்மானங்களை தடுப்பதற்கென செயன்முறைகள், ஒப்பந்தங்கள் மற்றும் நடைமுறைகள் என்பவற்றை தரப்படுத்துதல்.
iii. அநாவசியமான இடர்கள் ஒன்றுதிரண்டிருக்கும் நிலையைக் குறைக்கும் பொருட்டு கண்டிப்பான பன்முகப்படுத்தும் இலக்குகளுடன் கூடிய கடன் தொகுப்புக்களை உருவாக்குதல்.
iv. திட்ட விலையிடல் மற்றும் வடிவமைப்பு

உள்ளார்ந்த இடர்களை சமாளிக்கும் பொருட்டு நாங்கள் எமது சொந்த வளங்களையும், நிபுணத்துவத்தையும் பயன்படுத்தி வருகின்றோம். அத்தகைய இடர் நிலைமைகளை பொருத்தமான விதத்தில் முகாமைத்துவம் செய்வதானது, உறுதிப்பாடு மற்றும் வளர்ச்சி என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கென ஒரே சீரான மற்றும் போதியளவிலான ஆதாயமொன்றை சம்பாதிப்பதில் ஒரு முக்கியமான அம்சமாக இருந்து வருகின்றது என நாங்கள் நம்புகின்றோம்.

எமது இடர் முகாமைத்துவ முறை பின்வரும் படிமுறைகளின்/நுட்பங்களின் ஒழுங்குமுறைகளைக் கொண்டுள்ளது:

அ. பின்வருவன தொடர்பான தெளிவான கொள்கை பணிப்புரைகள்:

i. இடர்களை காப்புறுதி செய்யும் தரநியமங்கள் (இடர் அணுகுமுறை)
ii. இடர்களை வகைப்படுத்துதல்
iii. மீளாய்வு தரநியமம்

ஆ. முதலீடு, கடனளிப்பு மற்றும் வியாபார நடவடிக்கைகளுக்கான கொள்கைகள், நடைமுறைகள், வழிகாட்டுதல்கள் மற்றும் உத்திகள் என்பவற்றை ஸ்தாபித்தல்

குறிப்பிட்ட வகையைச் சேர்ந்த இடர் மற்றும் சந்தை வகைகள் என்பவற்றின் அடிப்படையில் கொள்கைகள் மற்றும் யுத்திகள் என்பன எடுத்து விளக்கப்படுகின்றன. சகித்துக் கொள்ளக் கூடிய ஒன்று திரண்டுள்ள மட்டங்கள் மற்றும் சகித்துக் கொள்ளக் கூடிய சொத்துக்கள் - பொறுப்பு பொருத்தமின்மை மட்டங்கள் (கடனளிப்பு) வரையறை செய்யப்படுகின்றன.

இடர் நிலை, வரையறைகள், அதிகார மட்டங்கள் மற்றும் விதிமுறைகள் என்பவற்றை ஸ்தாபித்தல்

i. இடர்களை பொறுப்புகேற்கும் நிலை, அனுமதிக்கப்பட்ட சொத்து வகைகள்/ அல்லது எதிர் தரப்பினருக்கு முன்னரேயே நிர்ணயிக்கப்பட்ட தரநியமங்களுடன் வரையறுக்கப்படுகின்றது.
ii. தகுதி வாய்ந்த சொத்துக்கள் மற்றும் எதிர் தரப்பு கடனளிப்பு தொடர்பாக வரையறைகளை விதித்தல். எந்தவொரு தனிநபரினாலும் எழுதப்படக் கூடிய இடர்கள் அல்லது கடப்பாடு நன்றாக வரையறை செய்யப்பட்ட அதிகார மட்டங்களினால் கட்டுப்படுத்தப்படுகின்றன. இது திறைசேரி வர்த்தகர்கள் அதேபோல கடனளிப்பு பிரிவு உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கும் பொருந்துகின்றது.

வருடத்தின் போது மேற்கொள்ளப்பட்ட முன்முயற்சிகள்

மீளாய்வுக்கு உட்படுத்தப்படும் இவ்வருடத்தின் போது, நாங்கள் எமது இடர் முகாமைத்துவ சட்டகத்தை தொடர்ந்தும் உறுதிப்படுத்தி, பலப்படுத்தி வந்தோம். இடர்களை அளவிடுதல், கண்காணித்தல் மற்றும் சமாளித்தல் என்பவற்றுக்கென புதிய நடைமுறைகள் மற்றும் செயன்முறைகள் என்பன அறிமுகம் செய்து வைக்கப்பட்டன. பாசல் II சட்டகத்தின் 2ஆவது பிரிவின் கீழ் அவசியப்படும் அனைத்துமடங்கிய


உள்ளக மூலதன நிறைவு மதிப்பீட்டு செயன்முறை ஒன்றை ஸ்தாபிப்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளும் நோக்குடன் இது மேற்கொள்ளப்பட்டது. இடர் தரவு சேகரிப்பு தொடர்பான வேலைச் செயன்முறைகள் மேலும் பலப்படுத்தப்பட்டன. B.O.D. நிபுணர் செயற்பாட்டு இடரை முகாமைத்துவம் செய்வதற்கென ஒரு நிறைவேற்று கமிட்டியையும் நியமனம் செய்தார்.

நடப்பு வருடத்தின் போது, வங்கி கடன் புத்தகத்தில் குறிப்பிட்ட ஒரு தொழில்துறையில் கடன்கள் ஒன்று திரண்டிருத்தல் மற்றும் தனிநபர்/குழு கடன் எடுப்பவர்கள் மத்தியில் ஒன்று திரண்டிருத்தல் தொடர்பான புதிய கொள்கைகளை அறிமுகம் செய்து வைத்தது.

திறைசேரி நடவடிக்கைகள் தொடர்பான கட்டுப்பாடுகளை மேலும் பலப்படுத்தும் பொருட்டு இடரை நிறுத்தும் வரையறைகள் வர்த்தகம் செய்யும் திட்டங்கள் மீது அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளன.

மக்கள் வங்கியின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவம்

எமது மூலதன வளங்கள் மற்றும் வைப்புதாரர் நிதிகள் என்பவற்றின் மீது பன்முகப்பட்ட நட்டவச்ச நிலைமைகளின் அடிப்படையில் ஏற்படக் கூடிய மிக மோசமான தாக்கங்களினால் வங்கி எளிதில் ஊறுபடக் கூடிய நிலை குறித்து நாங்கள் முதன்மையாக கவனம் செலுத்தி வருகின்றோம். நிறுவனத்திற்குள் மிகவும் உறுதியான இடர் முகாமைத்துவ கலாசாரமொன்றை போஷித்து வளர்க்கும் நோக்கில் நாங்கள் செயற்பட்டு வந்துள்ளோம். மிகவும் வலுவான செயல் முனைப்பு மிகுந்த இடர் ஆளுகை கட்டமைப்பொன்றை உருவாக்கிக் கொள்ளும் பொருட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். இடர் யுக்தி மற்றும் மூலதன ஒதுக்கு செயன்முறை என்பவற்றின் உருவாக்கம் எமது உபாய ரீதியான மற்றும் வணிகத் திட்டமிடல் செயன்முறையில் ஒரு உள்ளார்ந்த பாகமாக இருந்து வருகின்றது.



BECC - சபை நிறைவேற்று கடன் கமிட்டி
BIRMC - சபை ஒருங்கிணைந்த நட்டவச்ச முகாமைத்துவ கமிட்டி
BAC - சபை கணக்காய்வு கமிட்டி
ALCO - சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கமிட்டி
ORMC - சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கமிட்டி

கடன் இடர் முகாமைத்துவம்

கடன் இடர் எமது வள அடிப்படையின் மீது அதிகளவு தாக்கத்தை எடுத்து வரும் ஒரு இடராக இருந்து வருகின்றது என நாங்கள் கருதுகின்றோம். கடன் இடர் என்பது கடன் எடுத்தல் அல்லது எதிர் தரப்பினர் ஒப்பந்தத்தின் பிரகாரம் தமது கடப்பாட்டினை நிறைவு செய்து வைக்கத் தவறும் சாத்தியப்பாடு என நாங்கள் வரைவிலக்கணம் செய்கின்றோம். வங்கி கடன் இடர் தனிப்பட்ட கடன் எடுத்தவர் மட்டங்களிலும், அதே போல கடன் தொகுப்பு மட்டத்திலும் முகாமைத்துவம் செய்து வருகின்றது.

வங்கியின் கடனளிப்பு கருமம் பணிப்பாளர் சபையினால் நன்கு வரையறை செய்யப்பட்ட கடன் இடர் யுக்திகள்/கொள்கைகள் என்பவற்றின் அடிப்படையில் இயங்கி வருகின்றது. பின்வரும் அம்சங்களை உள்ளடக்கும் விதத்தில் எழுதப்பட்ட கொள்கைகள்/நடைமுறைகள் அமுலில் இருந்து வருகின்றன:

i. இலக்குச் சந்தைகள், இடர் ஏற்பு அளவுகோல், கடன் ஒப்புதல் அதிகார கட்டமைப்பு மற்றும் சம்பந்தப்பட்ட விதிமுறைகள் என்பது தொடர்பான வரைவிலக்கணம்.

ii. கடன் தோற்றம் மற்றும் பராமரிப்பு நடைமுறை.

iii. கடன் தொகுப்பு முகாமைத்துவ வழிகாட்டுதல்கள் - கைத்தொழில்கள் மற்றும் தனிநபர்கள் தொடர்பான உச்சமட்ட கடனளிப்பு மட்டங்கள் போன்றவை

iv. நிவர்த்தி/புனருத்தாரண முகாமைத்துவ வழிகாட்டுதல்கள்.

v. கடன் மீளாய்வுக் கொள்கை.

vi. இடர் ஏற்படுத்தக் கூடிய கடன் எடுத்தவர்களின் பட்டியலை அவதானித்தல் மற்றும் இத்தகைய கடன் எடுத்தவர்களை கண்காணித்தல்.

vii. கடன் வரிசையின் அதிகார கட்டமைப்பின் அடிப்படையில் கடனளிப்பு அதிகாரங்களை பகிர்ந்தளித்தல்.

viii. கடனளிப்பு இடர் முகாமைத்துவ திணைக்களத்தைச் சேர்ந்த ஓர் உத்தியோகத்தரை உள்ளடக்கிய விதத்தில் குறிப்பிட்ட ஒரு அளவுக்கு மேற்பட்ட கடனளிப்புக்கள் ஆகக் குறைந்தது இரண்டுக்கு அல்லது இரண்டு மேற்பட்ட கடனளிப்பு உத்தியோகத்தர்களினால் அதிகாரம் அளிக்கப்படுகின்றது.

ix. கடப்பாட்டினை கொண்டிருக்கும் ஒவ்வொரு நபருக்கும் இடர் புள்ளியொன்றை வழங்கும் பொருட்டு, உள்ளக கடன் இடர் புள்ளியிடல் முறையொன்றை உருவாக்குதல்.


x. நாங்கள் கடன் மீளாய்வு பொறிமுறையொன்றை ஸ்தாபித்துக் கொண்டுள்ளோம். கிளை/பிராந்திய/வலய அதிகார மட்டங்களில் பகிர்ந்தளிக்கப்படும் காலாண்டு கடன்களில் ஒரு சதவீதம் எழுந்தமான அடிப்படையில் தெரிவு செய்யப்படுவதுடன், அது பிராந்திய மட்டத்திலும் அதே போல தலைமை அலுவலக மட்டத்திலும் கடனளிப்புக்குப் பின்னரான மீளாய்வுக்கு உட்படுத்தப்படுகின்றது. கடனளிப்புத் தீர்மானங்களின் தரத்தை கண்காணித்து உறுதிப்படுத்துவதற்கும், உரிய நேரத்தில் நிவர்த்தி நடவடிக்கைகள் எடுப்பதனை உறுதிப்படுத்துவதற்கும் என இது மேற்கொள்ளப்படுகின்றது.

xi. நிர்ணயிக்கப்பட்டுள்ள கடன் இடர் மற்றும் செயற்பாட்டு இடர் தரநியமங்களுக்கு இணங்கியொழுகியிருக்கும் மட்டத்தை அளவீடு செய்வதற்கும், கட்டுப்பாடுகளின் போதிய தன்மையை நிர்ணயித்துக் கொள்வதற்கும், விருத்தி செய்ய வேண்டிய துறைகளை இனங்கண்டு கொள்வதற்குமென உள்ளக கணக்காய்வு திணைக்களத்தினால் எழுந்தமானமான அடிப்படையில் கடன் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

xii. கடன்களை செலுத்தத் தவறும் நிலைகள் தனிப்பட்ட கடன் மட்டத்திலும், அதே போல கடன் தொகுப்பு மட்டத்திலும் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. திருப்பிச் செலுத்தப்படாத கடன்கள் அனைத்தும் இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டுதல்களின் பிரகாரம் வகைப்படுத்தப்படுகின்றன. கண்டிப்பாக இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்தும் பொருட்டு, இச்செயன்முறை தன்னியக்கமயமாக்கப்பட்டுள்ளது. நாங்கள் செயற்படாத கடன் விகிதத்தை 3% குறைவான மட்டத்தில் முகாமைத்துவம் செய்து வந்துள்ளோம்.

xiii. நியதிபூர்வமான தேவைகளின் பிரகாரம் கடன் நட்ட ஒதுக்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.


xiv. வங்கி ஏற்கனவே இலங்கை கணக்கீட்டு தரநியமம் 37 ஐ பின்பற்றி வருகின்றது. அதன் பிரகாரம், புத்தக மதிப்புக் குறைவுகள் மற்றும் ஏற்பட்டுள்ள இழப்புக்கள் குறித்த சரியான பார்வை என்ற அடிப்படையில் நட்டங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.



செயற்படாத கடன்கள், அவற்றுக்கான ஒதுக்குகள்

கடன் தொகுப்பில் இடர் ஒன்று திரண்டிருக்கும் நிலை

வங்கி அண்மையில் கைத்தொழில்கள் மற்றும் கடன் எடுப்பவர்கள் தொடர்பான கடன் உச்ச வரம்புகள் குறித்த ஒரு கொள்கையை பின்பற்றியது. கைத்தொழில்களுக்கான கடனளிப்பு, தனிநபர்/குழுக்களுக்கான கடனளிப்புக்கள் (பெயரில் ஒன்று திரண்டிருக்கும் நிலைமைகள்) என்பவற்றை உள்ளடக்கும் விதத்தில் கடனளிப்பு உச்ச வரம்புகள் விதிக்கப்பட்டுள்ளன. அத்தகைய கடனளிப்புக்கள் இடர் முகாமைத்துவ பிரிவினால் கண்காணிக்கப்பட்டதுடன், காலத்துக்கு காலம் சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் கமிட்டிக்கு அறிக்கையிடப்படுகின்றன.



கடன்கள், முற்பணங்கள் தொழல்வாரியாக

வங்கி ஒழுங்குவிதி உச்ச வரம்பிலும் பார்க்க தனிநபர் கடனளிப்புகள் தொடர்பான மிகவும் கண்டிப்பான கடன் உச்ச வரம்புகளை கொண்டுள்ளது. அதியுயர் 10 மற்றும் அதியுயர் 20 வாடிக்கையாளர்களுக்கான ஒட்டுமொத்த கடனளிப்புக்கள் வங்கியின் மொத்த கடன் தொகுப்புக்கு எதிராக அளவிடப்படுகின்றன.

தனிநபர் வாடிக்கையாளர் மற்றும் கைத்தொழில் பிரிவுகளில் திரண்டிருக்கும் இடர் ரூ. 100 மில்லியனுக்கு மேற்பட்ட கடன்கள் தொடர்பாக ஒழுங்கான அடிப்படையில் கண்காணிக்கப்பட்டு வருகின்றது. Herfindhal-Hirshman சுட்டெண்ணை பயன்படுத்துவதன் மூலம் பகிர்வு அளவிடப்படுகின்றது.

தனிநபர் வாடிக்கையாளர்	HHI
இலங்கை அரசாங்கத்துடன்	0.25
இலங்கை அரசாங்கம் இல்லாத	0.08

தொழில் பிரிவு	HHI
இலங்கை அரசாங்கத்துடன்	0.28
இலங்கை அரசாங்கம் இல்லாத	0.12

சுட்டெண் < 0.15 - குறைவாக ஒன்று திரண்டிருத்தல்
சுட்டெண் 0.15 - 0.25 - மிதமாக ஒன்று திரண்டிருத்தல்
சுட்டெண், 0.25 - உயரளவில் ஒன்று திரண்டிருத்தல்

இலங்கை அரசாங்கத்திற்கு கடன்கள் இல்லாத நிலையில் கடன் தொகுப்பு குறைந்த மட்டத்திலான ஒன்று திரண்ட நிலையை கொண்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்திற்கான உயரளவிலான கடனளிப்பு ஒரு அரச வங்கி என்ற முறையில் நாங்கள் வகித்து வரும் வகி பாத்திரத்தின் விளைவாகவே இடம்பெற்று வருகின்றது. எனினும், பல்வேறு தணிப்பு முறைகள் மற்றும் கடனளிப்பு மேம்பாடுகள் கட்டமைக்கப்பட்டிருப்பதனால் அது கரிசனைக்குரிய ஒரு துறையாக இருந்து வரவில்லை.

கடன் தொகுப்பு பகுப்பாய்வு


இடர் முகாமைத்துவ பிரிவினால் பின்வரும் அடிப்படையில் கடன் தொகுப்பு பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது -

அ. உற்பத்தி
ஆ. துறைகள்
இ. வணிகப் பிரிவுகள்
ஈ. பிணை
உ. கடன் எடுப்பவர் கடன் இடர் புள்ளி


உரிய நேரத்தில் மோசமான போக்குகளை அடையாளம் கண்டு கொள்ளும் பொருட்டு மதிப்புக்குறைவு நிலை மிகவும் கண்டிப்பான விதத்தில் கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

கடன் இடரிற்கான அழுத்தப் பரீட்சிப்பு


இடர் முகாமைத்துவ பிரிவினால் உள்ளக ரீதியில் அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கும் மாதிரிகளின் அடிப்படையில் கடன் தொகுப்பு மீதான அழுத்தப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. வங்கியின் மூலதன நிறைவு விகிதத்தின் மீது கடன் சொத்துக்களின் மதிப்புக் குறைவு எடுத்து வரும் மோசமான போக்குகள்/நகர்வுகள் என்பவற்றின் தாக்கங்கள் பரீட்சிக்கப்படுவதுடன், அது சம்பந்தமான பெறுபேறுகள் கீழே தரப்பட்டுள்ளன:




செயற்படாத கடன்களின் அதிகரிப்பு மூலதன விகிதத்தின் மீது எடுத்து வரும் தாக்கம்




செயற்படாத கடன் வகைகளில் ஏற்படும் எதிர்க்கணிய நகர்வுகள் மூலதன நிறைவின் மீது எடுத்து வரும் தாக்கம்



ஈடு வைக்கப்பட்ட பிணையின் பெறுமதியில் ஏற்படும் வீழ்ச்சி மூநிவி ஏற்படும்



(செயற்படும் பிரிவிலிருந்து செயற்படாத பிரிவுக்கு மாற்றம் செய்வது காரணமாக) செயற்படாத கடன் மூநிவி எடுத்து வரும் தாக்கம்



அதியுயர் 10 கடன் எடுப்பவர்கள் செயற்படாத கடன் வகைக்குள் செல்வதன் காரணமாக % நிவி மீது ஏற்படும் தாக்கம்

சந்தை இடர் முகாமைத்துவம்

வட்டி விகிதங்கள், அந்நியச் செலாவணி விகிதங்கள், பங்கு விலைகள் மற்றும் பண்ட விலைகள் என்பவற்றில் ஏற்படும் பாதகமான மாற்றங்கள் காரணமாக சந்தை இடர் தோன்றுகின்றது. அத்தகைய இடரை எதிர்கொள்ள வேண்டிய நிலை எமது வியாபார ஏட்டிலும், அதே போல வங்கித்தொழில் ஏட்டிலும் காணப்படுகின்றது.

சந்தை இடர்களை முகாமைத்துவம் செய்யும் பொருட்டு அனைத்துமடங்கிய கொள்கைகள் மற்றும் உச்ச வரம்புகள் என்பவற்றின் ஒரு தொகுதி ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இத்தகைய இந்த கொள்கைகள், நடைமுறைகள் அதிசிறந்த நடைமுறைகளுக்கு இணங்கியொழுகும் அதே வேளையில், நியதிபூர்வ தேவைகளையும் உள்ளடக்குகின்றன.

சந்தை இடரை முகாமைத்துவம் செய்யும் பொறுப்பினை சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கமிட்டி (ALCO) கொண்டுள்ளது. சந்தை இடர்களின் அனைத்து பொருள்சார் மூலங்களும் இனங்காணப்படுவதுடன், இக்கமிட்டியினால் இடர் உச்ச வரம்புகள் வரையறை செய்யப்படுகின்றன. சந்தை இடரை எதிர்கொள்ளும் பல்வேறு கடன்கள் திறைசேரி நடு அலுவலகத்தினால் மிகவும் நெருக்கமான விதத்தில் கண்காணிக்கப்பட்டு வருவதுடன். உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதற்கென அது பிரதம இடர் அதிகாரிக்கும், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கமிட்டிக்கும் அறிக்கையிடப்படுகின்றது. எவ்வாறிருப்பினும், சந்தை இடர் முகாமைத்துவத்திற்கான (வியாபார துறைகள்/முதலீட்டு ஏடு) முன்னணிப் பொறுப்பினை திறைசேரி வியாபார திணைக்களத்தின் முன் அலுவலகம், நடு அலுவலகம் மற்றும் பின் அலுவலகம் என்பன கொண்டுள்ளன. அது தெளிவான மற்றும் நன்கு வரையறை செய்யப்பட்ட பொறுப்புடன் கூடிய விதத்தில் தெளிவாக மூன்று புறம்பான அறிக்கையிடல் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

அந்நியச் செலாவணி இடர்

அந்நியச் செலாவணி இடர் என்பது வங்கி ஒரு திறந்த நிலையைக் கொண்டிருக்கும் காலப் பிரிவின் போது செலாவணி வீதத்தில் ஏற்படும் ஒரு மோசமான நகர்வின் விளைவாக நட்டங்கள் ஏற்படக் கூடிய நிலையாகும்.

இடரைத் தவிர்ப்பதற்கான ஒரு முதன்மை வழிமுறையாக இடர் திறந்த நிலைமைகளின் மீது பின்வரும் உச்ச வரம்புகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன:

i. நாணயம்/வர்த்தக அடிப்படையில் அளவு தொடர்பான வரையறைகள்

ii. ஒரு நாளுக்குள் இடம்பெறும் மற்றும் ஓரிரவுக்குள் தேறிய நிலைமைகளுக்கான ஒட்டுமொத்த உச்ச வரம்புகள்.


iii. நாணயம்/மற்றும் வர்த்தகர் அடிப்படையில் நட்டத்தை நிறுத்தும் உச்ச வரம்புகள்

அந்நியச் செலாவணி இடரை அளவிடுவதற்கும், முகாமைத்துவம் செய்வதற்குமென நாங்கள் பின்வரும் கருவிகளை பயன்படுத்தி வருகின்றோம்:

i. அந்நியச் செலாவணியில் குறிக்கப்பட்டிருக்கும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் முதிர்ச்சி கால இடைவெளி பகுப்பாய்வு.

ii. இடர் அளவிலுள்ள நாளாந்த மதிப்பினை 99% நம்பிக்கை மட்டத்தில் வைத்தல். 99% நம்பிக்கை மட்டத்தில் இருக்கும் ஒரு கடனளிப்பிலிருந்து தோன்றக் கூடிய உச்ச மட்ட நட்டத்தை அளவிடுவதற்கென இந்த முறை பயன்படுத்தப்படுகின்றது. எனவே, சந்தை இடர் காரணிகள் தொடர்பான வரலாற்று ரீதியான தரவுகளின் விரிவான பயன்பாட்டின் மீது அது தங்கியுள்ளது.

iii. இடர் இருக்கும் நாளாந்த மதிப்பு முறைக்கு குறைநிரப்புச் செய்வதற்கென, மூலதன நிறைவு விகிதத்தின் மீது மிகத் தீவிரமான செலாவணி விகித அசைவுகள் (5% தொடக்கம் 15% வரையிலான அசைவுகள்) ஏற்படுத்தக் கூடிய தாக்கத்தை அளவிடுவதற்கென அழுத்தப் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



மாதாந்த அசெ தேதிநி 2012 இல் தினசரி நட்டவச்சத்திலுள்ள பெறுமதி

15% அளவிலான அந்நியச் செலாவணி விகிதங்களிலான மிக மோசமான நகர்வும் கூட வங்கியின் மூலதன நிறைவின் மீது அற்பமான அளவிலான ஒரு தாக்கத்தை மட்டுமே கொண்டுள்ளது.

செலாவணி இடர் சிறந்த விதத்தில் முகாமைத்துவம் செய்யப்பட்டிருப்பதுடன், செலாவணி விகிதத்தில் ஏற்படும் எந்தவொரு மோசமான நகர்வும் வங்கியின் மூலதன நிறைவு விகிதத்தில் எத்தகைய பாரிய தாக்கங்களையும் ஏற்படுத்த மாட்டாது.

வட்டி விகித இடர் சந்தை இடர் முகாமைத்துவத்தின் நிர்ணயகரமான ஒரு கூறாக இருந்து வருகின்றது. வட்டி விகிதங்களில் ஏற்படக் கூடிய எந்தவொரு மோசமான மாற்றமும் வங்கியின் தேறிய வட்டி ஆதாயங்களின் மீது ஒரு தாக்கத்தை எடுத்து வர முடியும். வியாபார ஏட்டிலும், வங்கித்தொழில் ஏட்டிலும் வட்டி விகித இடர் நிர்ணயிக்கப்பட்ட உச்ச வரம்புகளின் அடிப்படையில் அளவிடப்பட்டு, கண்காணிக்கப்பட்டு வருவதனை வங்கி உறுதிப்படுத்திக் கொள்கின்றது.


வட்டி விகிதங்களில் ஏற்படும் மோசமான மாற்றங்கள் வியாபார நோக்கங்களுக்கென வங்கியினால் வைக்கப்பட்டிருக்கும் நிலையான வருமான பிணைப் பத்திரங்களின் சந்தைப் பெறுமதியில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்த முடியும். நாங்கள் அண்மையில் எமது வியாபார தொகுப்பின் மீது நட்டத்தை நிறுத்தும் உச்ச வரம்பினை உருவாக்கிக் கொண்டுள்ளோம். இந்தத் தொகுப்பு நாளாந்த அடிப்படையில் சந்தைக்கென குறிக்கப்படுவதுடன், நட்டத்தை நிறுத்தும் உச்ச வரம்புகளுக்கு எதிராக கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

வர்த்தக தொகுப்பின் இடர் நிலையை அளவிடுவதற்கென நாங்கள் இடரிலிருக்கும் நாளாந்த பெறுமதி மாதிரியை 99% நம்பிக்கை மட்டத்தில் பயன்படுத்துகின்றோம். திறைசேரி நடு அலுவலகம் தனது வியாபாரத் தொகுப்பின் மீது இடரின் அளவை (நட்டமேற்படக் கூடிய வாய்ப்பினை) நாளாந்த அடிப்படையில் கண்காணித்து வருகின்றது.

ஐந்தொகையிலுள்ள முதிர்ச்சி இடைவெளிகளை மீள விலையிடுதல் வங்கி புத்தகத்திலிருக்கும் இடரில் ஒரு பிரதானமான மூலமாக இருந்து வருகின்றது. அது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் (முதிர்ச்சி இடைவெளி பகுப்பாய்வு) கூற்றின் மீள் இடைவெளியை பயன்படுத்தி அளவிடப்படுகின்றது.


மீள் விலையிடல் பொருத்தமின்மை இடரைப் பகுப்பாய்வு செய்வதில் உள்ள மிக முக்கியமான ஒரு சவால் குறிப்பிட்ட சில திட்டங்களில் உள்ளார்ந்த ரீதியில் காணப்படும் தெரிவுகள் குறித்த அனுமானங்களின் தரமாகும். மீளமைப்பு கடன்கள், நிலையான விகித கடன்கள், சேமிப்பு மற்றும் நிலையான வைப்புக்கள் என்பன அத்தகைய சொத்துக்களாகும். வருடத்தின் போது நடத்தைசார் தரவுகளின் பயன்பாட்டுக்கூடாக நடத்தைசார் இடைவெளி பகுப்பாய்வுக் கூற்றக்களும் அதேபோல கால அளவு இடைவெளி பகுப்பாய்வும் மேலும் செம்மைப்படுத்தப்பட்டது.

அழுத்தப் பரீட்சிப்பு: வட்டி விகிதங்களின் ஏற்படும் மோசமான மாற்றங்கள் காரணமாக அதன் பங்கின் சந்தை மதிப்பில் ஏற்படும் தாக்கத்தை வங்கி கண்காணிக்கின்றது. இது கால அளவு இடைவெளி பகுப்பாய்வு முறையை பயன்படுத்தியும், வங்கியின் மூலதன நிறைவு விகிதத்திற்கான தாக்கத்தை நிர்ணயிப்பதற்கென 1% மோசமான வட்டி விகித அதிர்ச்சியை பிரயோகிப்பதன் மூலமும் அளவிடப்படுகின்றது.



வட்டி வீதத்தில் ஏற்படும் 1% அதிகரிப்பு மூநிவி ஏற்படுத்தும் தாக்கம்

வட்டி விகித இடர் சிறந்த விதத்தில் முகாமைத்துவம் செய்யப்பட்டிருப்பதுடன். வட்டி விகிதங்களில் ஏற்படும் எந்வொரு மோசமான நகர்வும் வங்கியின் மூலதன நிறைவு நிலையின் மீது எத்தகைய பாரிய தாக்கத்தையும் ஏற்படுத்தியிருக்க மாட்டாது.



வட்டி வீதத்தில் ஏற்படும் 1% மாற்றம் பங்கின் சந்தை மதிப்பில் ஏற்படுத்தும் தாக்கம் - கால இடைவெளி பகுப்பாய்வு

பங்கு இடர்


வங்கி வியாபார நோக்கங்களுக்காக விலை குறிக்கப்பட்ட பங்குகளின் சிறிய ஆனால் பன்முகப்படுத்தப்பட்ட ஒரு தொகுப்பை தொடர்ந்தும் பராமரித்து வந்துள்ளது.

தொகுப்பு பராமரிப்பு மற்றும் வியாபார நடவடிக்கைகள் என்பன பின்வரும் கண்டிப்பான உச்ச வரம்புகளுக்குள் மேற்கொள்ளப்பட்டன.

i. ஒட்டுமொத்த கடனளிப்பு உச்ச வரம்புகள்
ii. தொகுப்பின் பன்முகப்படுத்தல் மட்டம்
iii. கண்டிப்பான முதலீட்டு தகைமை அளவுகோல்
iv. தனிநபர் கடனளிப்புக்கள் மீதான நட்ட உச்ச வரம்புகள்

தொகுப்பு நாளாந்த அடிப்படையில் சந்தைக்கு குறிக்கப்படுவதுடன், கடனளிப்புக்கள் தொடர்பான உச்ச வரம்புகள் திறைசேரி நடு அலுவலகத்தினால் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

பங்கு விலை நகர்வு மீதான அழுத்தப் பரீட்சிப்பு



பங்கு விலைகளில் ஏற்படும் மோசமான நகர்வுகள் மூநிவி மீது ஏற்படுத்தும் தாக்கம்

காசு நட்டவச்சம்

பிரதானமாக குறுங்கால பொறுப்புக்களை கொண்டு நீண்ட கால சொத்துக்களை நிதிப்படுத்தவதனால் காசு நட்டவச்சம் தோன்றுகின்றது. ஒரு நிதி நடுவர் என்ற வங்கியின் முதன்மை பாத்திரத்தை பொறுத்தவரையில் இது ஒரு தவிர்க்க முடியாத விடயமாகும். ஒரு சாதாரண சந்தை நிலைமையில் இது குறுங்கால பொறுப்புக்களின் பயன்பாட்டுக்கூடாக முகாமைத்துவம் செய்யப்பட்டு வருகின்றது.

காசு திட்டமிடல், உள்ளேயிருந்து மற்றும் வெளியே இருந்து தோன்றும் மிகவும் மோசமான அழுத்தங்களைக் கொண்ட நிலைமைகளிலும் கூட அதன் பொறுப்புக்களை நிதிப்படுத்தக் கூடிய வங்கியின் ஆற்றலை குறைந்தபட்சம் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

ஒரு வங்கியில் தோன்றும் வழமையான காசு நெருக்கடி முறைமை மீது மட்டுமன்றி நாட்டின் ஒட்டுமொத்த வங்கி வலையமைப்பின் மீதும் ஒரு தாக்கத்தை எடுத்து வர முடியும் என்ற விடயத்தை கவனத்தில் எடுக்கும் பொழுது, தாக்கமான காசு இடர் முகாமைத்துவம் அதியுயர் முக்கியத்துவத்தை பெற்றுக் கொள்கின்றது.

காசு நிலை மற்றும் இலாப நிலை என்பவற்றிக்கிடையிலான தவிர்க்க முடியாத தொடர்பு வங்கியினால் அங்கீகரிக்கப்படுவதுடன், வங்கியின் காசு இடர் முகாமைத்துவ கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் என்பவற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பொதுமக்களுக்கு மத்தியிலும், நிதிச் சந்தைகளுக்கு மத்தியிலும் வங்கி ஈட்டிக் கொள்ளும் நற்பெயர், போட்டி நிலைகளில் நிதிகளை தொடர்ச்சியாக கவர்ந்திழுக்கக் கூடிய அதன் ஆற்றலின் மீது முக்கியமான ஒரு தாக்கத்தை எடுத்து வருகின்றது என்ற விடயம் தெளிவாக புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. எமது நற்பெயரில் இடம்பெறக் கூடிய ஒரு சீர்குலைவு நிலை, எமது வாடிக்கையாளர்களின் தேவைகளை நிறைவேற்றி வைப்பதற்கு நிதிகள் கிடைக்கும் நிலை மற்றும் நிதிகளின் செலவு என்பவற்றின் மீது ஒரு எதிர் கணனிய தாக்கத்தை எடுத்து வர முடியும்.

வலுவான ஒரு காசு முகாமைத்துவ உத்தி வங்கிக்கு உறுதிப்பாட்டை எடுத்து வந்து, வங்கியின் நற்பெயரை மேம்படுத்துகின்றது என்ற விடயத்தையும் இங்கே முக்கியமாக குறிப்பிடுதல் வேண்டும். இது போட்டி விகிதங்களில் சில்லறை மற்றும் மொத்த நிதிகளை திரட்டக் கூடிய வங்கியின் ஆற்றலையும் உயர்த்துகின்றது.

காசு நிலையின் முகாமைத்துவம் முதன்மையாக வங்கியின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் முகாமைத்துவ கமிட்டியின் பொறுப்பாக இருந்து வருகின்றது. காசு நிலைமையின் நாளாந்த முகாமைத்துவத்திற்கு திறைசேரிப் பிரிவு பொறுப்பாக இருந்து வருகின்றது. காசு நிலைமையினை கண்காணிக்கும் பொறுப்பினை திறைசேரி நடு அலுவலகம் கொண்டுள்ளது.

எனவே, எமது காசு முகாமைத்துவ யுக்தி, காசு சொத்துக்களின் ஒரு தொகுப்பினை பராமரித்து வருதல் மற்றும் வங்கியின் பால் கவர்ந்திழுக்கப்பட்டிருக்கும் சில்லறை வைப்புக்களின் பன்முகப்பட்ட ஒரு தொகுப்பை பராமரித்து வருதல் என்பவற்றை முதன்மையாக அடிப்படையாகக் கொண்டுள்ளது. இந்த சில்லறை வைப்புக்கள் நன்கு திட்டமிடப்பட்ட திட்ட அறிமுகங்கள் மற்றும் அத்தகைய மூலங்களின் தாக்கமான முகாமைத்துவம் என்பவற்றுக்கூடாக திரட்டப்படுகின்றன. பரவலாக வியாபித்திருக்கும் கிளை வலையமைப்பு மற்றும் விரிவான சில்லறை வாடிக்கையாளர் அடித்தளத்தை அணுகக் கூடிய வாய்ப்பு என்பன எமது காசு யுக்தியின் அத்தியாவசியமான கூறுகளாக இருந்து வருகின்றன.


வங்கி அனைத்துமடங்கிய அவசர கால நிதிப்படுத்தல் திட்டமொன்றையும் அபிவிருத்தி செய்து கொண்டுள்ளது. அது வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நிதிப்படுத்தல் மூலங்களிலிருந்து வாக்களிக்கப்பட்டிருக்கும பெருந்தொகையான கடனளிப்புக்களினால் வலுப்படுத்தப்பட்டுள்ளது.

வங்கி காசு இடரை கண்காணிப்பதற்கும், முகாமைத்துவம் செய்வதற்கும் பின்வரும் கருவிகளை பயன்படுத்துகின்றது:

- சொத்து பொறுப்புக்களின் காசுப் பாய்ச்சல், முதிர்ச்சி இடைவெளி கூற்றுக்கள் மற்றும் அவற்றை நிர்ணயிக்கப்பட்ட உச்ச வரம்புகளுக்கு எதிராக கண்காணித்தல்.
- வாடிக்கையாளர் கடன்கள் வைப்பு விகிதங்கள், நியதிபூர்வ காசு சொத்து விகிதம், பயன்படுத்தப்படாத வங்கிகளுக்கிடையிலான கடன் எடுப்புக்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு கிடைக்கும் பயன்படுத்தப்படாத உச்ச வரம்புகள் போன்ற காசு குறிகாட்டிகளை கண்காணித்தல்.
- காசு நிலைமைகள் தொடர்பான அழுத்தப் பரீட்சிப்பு - கணிசமான அளவிலான உடன் காசு வெளியேற்றம் அல்லது காசின் உயர் செலவுக்கு வழிகோலக்கூடிய குறியீட்டு குறை போன்ற மோசமான நிலைமைகளில் தோன்றக் கூடிய காசு நிலைமைகள் தொடர்பான அழுத்தப் பரீட்சிப்பு.

காசு நிலை குறிகாட்டிகள்	2011 %	2012 %	வழிகாட்டுதல் %
கடன்/வாடிக்கையாளர் வைப்புக்கள்	92.4	96.6	<83
பயன்படுத்தப்படாத வங்கிகளுக்கிடையிலான கடன் எடுத்தல் வழிகள்	48	44	<100
நடுத்தர கால நிதிப்படுத்தல்	101	102	>15
நியதிபூர்வ காசு சொத்துக்கள் விகிதம் - DBU	21.5	21.8	>20
- FCBU	24.0	21.8	>20

அழுத்தப் பரீட்சிப்பு:



ஒரு மாதம் வரையிலான கால அளவின் மீது உடனடி காசு/சில்லறை நிதி மீளப் பெறுகைகளின் தாக்கம்

உடனடி காசு - உயர் அளவிலான மீளப் பெறுகை இடரைக் கொண்டிருக்கும் நிதிகள். சேமிப்புக்கள், கேள்வி வைப்புக்கள் மற்றும் ரூ. 50 மில்லியனுக்கு மேற்பட்ட தவணை வைப்பு கணக்கு நிலுவைகள் உடனடி காசாக கருதப்படுகின்றது.

சில்லறை நிதிகள் - மீளப் பெறுகை இடரைக் குறைந்தளவில் கொண்டிருக்கும் நிதிகள்

தோற்றப்பாடு 1 - 5% உடனடி காசு மற்றும் 5% சில்லறை நிதிகள் மீளப் பெறுகைகள்

தோற்றப்பாடு 2 - 10% உடனடி காசு மற்றும் 5% சில்லறை நிதிகள் மீளப் பெறுகைகள்

தோற்றப்பாடு 3 - 10% உடனடி காசு மற்றும் 10% சில்லறை நிதிகள் மீளப் பெறுகைகள்

செயற்பாட்டு இடர் முகாமைத்துவம்

செயற்பாட்டு இடர் எமது அனைத்து வணிகச் செயன்முறைகளிலும் உள்ளார்ந்த விதத்தில் காணப்படுகின்றது. பரந்த வீச்சிலான பன்முகப்படுத்தப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு முழுமையான வங்கித்தொழில் வசதிகளை வழங்கும் இலங்கையின் மிகப் பெரிய வங்கிகளில் ஒன்று என்ற விடயத்தை கவனத்தில் எடுக்கும் பொழுது, செயற்பாட்டு இடரின் முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாடு என்பன மிக முக்கியமாக இருந்து வருகின்றன. வங்கியின் முகவர்களாக செயற்பட்டு வரும் ஆட்களை நாங்கள் வேலைக்கு அமர்த்தியிருக்கின்றோம் நாடெங்கிலும் வியாபித்திருக்கும் சொத்துக்களை சொந்தமாக வைத்திருப்பதுடன், அவற்றை பயன்படுத்தி வருகின்றோம். எமக்கும் எமது வாடிக்கையாளருக்கும் சொந்தமான தகவல்களை உள்ளிட்ட விதத்தில் சொத்துக்களை வைத்திருப்பதுடன், அவற்றின் பாதுகாவலராகவும் இருந்து வருகின்றோம்.

செயற்பாட்டு இடர் என்பது பயன்படுத்தப்பட்ட செயன்முறைகளின் மீதான மோசமான கட்டுப்பாடுகள் அல்லது கட்டுப்பாடின்மை என்பவற்றின் ஒரு பின்விளைவாகும். இந்த கட்டுப்பாடுகள் வங்கியின் செயல்பாடுகளிலும், வெளி நிகழ்வுகளிலும் காணப்படுகின்றது. அது வேண்டுமென்றே மேற்கொள்ளப்படுவதாக, தற்செயல் நிகழ்வாக அல்லது இயற்கையாக இருந்து வர முடியும். உதாரணமாக: தீ, கொள்ளை, ஆவண பிழைகள் தவறான கணக்கீடு.

வங்கி நன்கு வரையறுக்கப்பட்ட செயற்பாட்டு இடர் முகாமைத்துவ கொள்கை ஒன்றை உருவாக்கிக் கொண்டுள்ளது. இந்த கொள்கையின் முதன்மையான நோக்கங்கள் பின்வருவனவற்றை உறுதிப்படுத்துகின்றன:


i. வங்கியின் மூலதனம் மற்றும் சம்பாத்தியங்கள் என்பன கணிசமான அளவிலான செயற்பாட்டு நட்டங்களிலிருந்து பாதுகாக்கப்படுகின்றன.

ii. வங்கி முழுவதிலும் செயற்பாட்டு இடரை முகாமை செய்வதற்கென நன்கு வரையறை செய்யப்பட்ட தெளிவாக புரிந்து கொள்ளப்பட்ட ஒரே சீரான செயன்முறை இருந்து வருகின்றது.

iii. செயற்பாட்டு பிரச்சினைகளின் விளைவாக சேவை விநியோக தர நியமங்கள் மற்றும் எமது நற்பெயர் என்பனவற்றுக்கு எத்தகைய பாதிப்பும் ஏற்படுவதில்லை.

பாத்திரங்கள் மற்றும் பொறுப்புக்கள்

செயற்பாட்டு இடர் முகாமைத்துவத்தின் அத்திவாரம், அனைத்து கருமப் பிரிவுகளும் தமது வகி பாத்திரங்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றுக்கு வரைவிலக்கணம் வழங்குவதாகும். அந்த நிலையில், போதியளவில் கடமைகளை பிரித்தொதுக்குதல், இடர்களை முழுமையாக உள்ளடக்குதல் மற்றும் தெளிவான பொறுப்புக் கூறும் நிலை என்பவற்றை கூட்டாக உத்தரவாதப்படுத்த முடியும்.



செயற்பாட்டு இடரை முகாமைத்துவம் செய்தல்

செயற்பாட்டு இடர்களை இனங்காணுதல் மற்றும் மதிப்பிடுதல் என்பன செயற்பாட்டு இடர் முகாமைத்துவத்தின் அத்தியாவசியமான ஒரு பாகமாக இருந்து வருகின்றது. அளவு ரீதியான மற்றும் தர ரீதியான முறைமையியல்களை அடிப்படையாகக் கொண்ட பெருந்தொகையான கருவிகள் இந்நோக்கத்திற்கென பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த முறைகளுக்கு ஊடாக திரட்டப்படும் தகவல், வங்கி முழுவதிலும் இடரைத் தணிக்கும் பொருட்டு பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பயன்படுத்தப்படும்.

நாங்கள் தற்பொழுது பின்வரும் கருவிகளை பயன்படுத்தி வருகின்றோம்:

i. நட்ட நிகழ்வுகள் தொடர்பான தகவல்: கடந்த காலத்தில் ஏற்பட்ட நட்டங்கள் மற்றும் சேதங்கள் என்பன தொடர்பான ஒரு தரவுத் தளம் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது. இத்தரவுகளின் கவனமான பகுப்பாய்வு எதிர்காலத்தில் தோன்றக் கூடிய இடர்களை இனங்காண்பதற்கும், மதிப்பிடுவதற்கும் எமக்கு உதவ முடியும். அதாவது, வணிக மற்றும் செயற்பாட்டு சூழலில் கணிசமான அளவில் மாற்றங்கள் ஏற்படாத நிலையில் தோன்றக் கூடிய இடர்களையே நாங்கள் இங்கு கருதுகின்றோம்.

ii. சுய மதிப்பீடு: ஒவ்வொரு கிளையும், வணிக அலகும் அல்லது செயற்பாட்டு திணைக்களமும் வருடாந்த அடிப்படையில் ஒவ்வொரு வேலைச் செயன்முறை தொடர்பான இடர் காரணிகளை மதிப்பிடுகின்றது. இச்செயன்முறையின் போது உள்ளக கட்டுப்பாட்டு முறைகளின் போதிய தன்மை, இடர் காரணிகள், ஆவணங்கள், கணினி முறைமைகள் மற்றும் பொறுப்பான ஆளணி என்பன மதிப்பீடு செய்யப்படுவதுடன், பலவீனமான துறைகள் நிவர்த்தி நடைவடி-க்கைக்கென எடுத்துக் காட்டப்படுகின்றன.

iii. முதன்மை இடர் குறிகாட்டிகள்: இடர் குறிகாட்டிகள் என்பவை குறிப்பிட்ட ஒரு இடர் வகைக்கான குறிப்பிட்ட ஒரு வணிகத் துறையின் கட்டுப்பாட்டுச் சூழலின் நடவடிக்கைகள் மற்றும் நிலை என்பவற்றை கண்காணிப்பதற்கென பயன்படுத்தப்படும் பரவலான வகையைச் சேர்ந்த வழிமுறைகளாகும். அதே வேளையில்,

கட்டுப்பாட்டு மதிப்பீட்டு செயன்முறை (வருடாந்தம்) காலத்திற்கு காலம் மட்டுமே இடம்பெறுவதுடன், இடர் குறிகாட்டிகள் அடிக்கடி (அதாவது, தினசரி/வாராந்தம்/ மாதாந்தம்/காலாண்டுக்கு ஒரு முறை) கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

இடர் மதிப்பீடு: மேலே குறிப்பிடப்பட்ட விதத்தில் செயற்பாட்டு இடர்கள் இனங்காணப்பட்ட பின்னர், வங்கி செயற்பாட்டு இடர் நிகழ்வொன்று இடம்பெறக் கூடிய நிகழ்தகவினை மதிப்பிடுகின்றது. மேலும், அத்தகைய நிகழ்வு வங்கியின் மீது எடுத்து வரக் கூடிய உச்ச மட்ட நட்டத்தையும் அது மதிப்பீடு செய்கின்றது. இச்சந்தர்ப்பத்தில் நட்டவச்சத்தை முகாமைத்துவம் செய்வதற்கான செயற்பாட்டு கட்டுப்பாடுகள் மற்றும் நடைமுறை என்பவற்றின் போதிய தன்மை நிர்ணயிக்கப்படுகின்றது. மேலும், இத்தகைய கட்டுப்பாடுகளை பராமரித்து வருவதன் செலவினை நியாயப்படுத்த முடியுமா அல்லது குறைத்துக் கொள்ள முடியுமா என்ற விடயமும் கவனத்தில் எடுக்கப்படுகின்றது. பின்னர் வங்கி, வங்கியின் ஒட்டுமொத்த இடர் அணுகுமுறைக்கு எதிராக இவற்றின் முக்கியத்துவம் மற்றும் தீவிரத் தன்மை என்பவற்றை மதிப்பீடு செய்கின்றது.

இடரை கவனத்தில் எடுத்தல்

செயற்பாட்டு இடர் நிலைமைகளிலிருந்து வங்கியின் மீது ஏற்படக் கூடிய நிதிசார் தாக்கத்தினை நிர்ணயித்துக் கொண்ட பின்னர், ஏதேனும் இடர் நிகழ்வின் தீவிரத் தன்மையை குறைப்பதற்கு பயன்படுத்த வேண்டிய முறையை வங்கி தீர்மானிக்கும்.

பின்வரும் வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன:


i. **காப்புறுதி**
குறைந்த நிகழ்தகவை கொண்டிருந்த போதிலும், அதன் நிதிசார் தாக்கம் உயர்வானதாக இருந்து வரும் என மதிப்பிடப்பட்டிருக்கும் இடர்களை பொறுத்தவரையில், வங்கி அதிலிருந்து தோன்றக் கூடிய ஏதேனும் நட்டங்களை குறைத்துக் கொள்ளும் பொருட்டு அத்தகைய இடர்களுக்கு எதிராக காப்புறுதியை பெற்றுக் கொள்ளும். வங்கியின் சொத்துக்களுக்கான சேதம், மோசடிகள், ஊழியர்களின் அலட்சியம் என்பன காப்புறுதியின் மூலம் பாதுகாப்பை பெறப்படும் ஒரு சில இடர்களாகும்.

ii. **வணிகத் தொடர்ச்சியை திட்டமிடல்**
ஒவ்வொரு கிளையும்-வணிக அலகும் ஒரு வணிகத் தொடர்ச்சி திட்டத்தையும், அனர்த்த மீட்பு திட்டத்தையும் கொண்டுள்ளது. செயற்பாடுகளின் மீது ஏற்படக் கூடிய பாரிய சீர்குலைவுகளிலிருந்து தோன்றும் நட்டங்களை குறைந்த பட்ச மட்டங்களில் வைத்துக் கொள்வதற்கென இது மேற்கொள்ளப்படுகின்றது. அது எமது தகவல் தொழில்நுட்ப உள்கட்டமைப்பு மீது அல்லது கிளை வலையமைப்பின் மீது ஏற்படும் தாக்கங்களாக இருக்க முடியும். இயற்கை அனர்த்தங்கள், தகவல் தொழில்நுட்ப வன்பொருள் செயலிழப்புக்கள் போன்ற அவசர நிலைமைகளின் போது தங்குதடையற்ற வணிகச் செயற்பாடுகளை உறுதி கொள்ளும் பொருட்டு மாற்று அமைவிடங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.


iii. **புதிய திட்டங்கள் மற்றும் சேவைகள்**
புதிய திட்டங்கள் மற்றும் சேவைகள் என்பன, அவை அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்னர் விமர்சன ரீதியாக பரிசீலனை செய்யப்படுகின்றன. புதிய திட்டங்கள் மற்றும் சேவைகள் என்பவற்றின் உள்ளார்ந்த ரீதியில் காணப்படும் அனைத்து இடர்களும் தெளிவாக இனங்காணப்பட்டு, சாத்தியமான அளவுக்கு தணிக்கப்பட்டுள்ளன என்பதற்கான உத்தரவாதத்தை இது வழங்குகின்றது ஏதேனும் எஞ்சியிருக்கும் இடர் வங்கியின் இடர் சகிப்புத் தன்மை மட்டங்களுக்குள் இருந்து வருதல் வேண்டும்.

iv. **வெளியிலிருந்து சேவைகளை பெற்றுக் கொள்ளல்**
செயற்பாடுகளை வெளியிலிருந்து பெற்றுக் கொள்வதுடன் இணைந்த விதத்திலான இடர்களை அறிந்திருக்கும் நிலையில், வங்கி அத்தகைய நடவடிக்கைகளுடன் தொடர்புபட்ட இடர்களை முகாமைத்துவம் செய்வதற்கென கொள்கை வழிகாட்டுதல்களை ஸ்தாபித்துக் கொண்டுள்ளது.


v. **உறுதிப்படுத்தல் மற்றும் ஒழுங்கான சுயாதீன மீளாய்வு**
வங்கியின் செயற்பாட்டு இடர் முகாமைத்துவ செயன்முறைகள் மற்றும் மதிப்பீட்டு முறைகள் என்பன உள்ளக கணக்காய்வு திணைக்களத்தினால் காலத்துக்குக் காலம் சுயாதீன மீளாய்வுக்கும், உறுதிப்படுத்தலுக்கும் குறைந்தது வருடத்திற்கு ஒரு முறை அல்லது அதிலும் குறைந்த காலத்தின் போது உட்படுத்தப்பட்டு வருகின்றன. கணக்காய்வு அனைத்துச் செயற்பாட்டு அலகுகளையும், செயற்பாட்டு இடர் முகாமைத்துவ கருமத்தின் நடவடிக்கைகளையும் உள்ளடக்குகின்றது.



செயற்பாட்டு நட்டங்கள் - 2012 ஏழு நட்ட வகைகளை அடிப்படையாகக் கொண்டது



இல் செயற்பாட்டு நட்டங்கள் - 2012 (வணிகப் பிரிவு அடிப்படையில்)



செயற்பாட்டு நட்டங்கள் எதிர் சகிப்புத் தன்மை (2010 - 2012)

செயற்பாட்டு செலவுகளில் ஒரு சதவீதம் என்ற முறையில் வருடத்திற்கான செயற்பாட்டு நட்டங்கள் 0.93%. ஆக இருந்த வந்தன. இது உள்ளக ரீதியில் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் சகிப்புத் தன்மை மட்டமான 1.0% வீதத்திலும் பார்க்க குறைவான தொகையாகும்.

சட்ட இடர்

மக்கள் வங்கி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வாடிக்கையாளர்கள், வழங்குனர்கள் மற்றும் சேவை வழங்குனர்கள் ஆகியோருடன் சட்ட ரீதியில் பிணிக்கும் கொடுக்கல் வாங்கல்களையும், ஒப்பந்தங்களையும் மேற்கொண்டு வருவதனால் சட்ட ரீதியாக தோன்றும் இடர்களை முகாமைத்துவம் செய்தல் மற்றும் கட்டுப்படுத்தல் என்பன தொடர்பாக கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் என்பவற்றை அமுல் செய்துள்ளது.

ஒப்பந்தம் சார் இடர், சட்டவாக்க இடர் மற்றும் வழக்கு இடர் என்பவற்றை சட்ட இடர் உள்ளடக்குகின்றது. சட்ட இடர் பின்வருவனவற்றை கொண்டுள்ளது:

1. வங்கிக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட கோரல்கள் தொடர்பாக பொருத்தமான விதத்தில் அல்லது ஜாக்கிரதையாக செயற்படுவதற்கு தவறுதல்.
2. வங்கிக்கு எதிராக முன்வைக்கப்பட்டிருக்கும் ஒரு கோரலை வெற்றிகரமாக எதிர்த்து நிற்க முடியாத நிலை
3. நீதிமன்றங்களுக்கூடாக வங்கியின் உரிமைகளை வலுவுக்கிடுவதற்கென நடவடிக்கை எடுக்க முடியாத நிலை அல்லது
4. வங்கிக்கு எதிராக மிகவும் பாதகமான ஒரு கோரல் வெற்றிகரமான விதத்தில் முன்வைக்கப்படக் கூடிய சாத்தியப்பாட்டினை தணிக்க தவறுதல் அல்லது தணிக்க முடியாத நிலை.

சட்ட இடரை முகாமைத்துவம் செய்தல் மற்றும் தணித்தல் என்பவற்றுக்கான பொறுப்பினை சட்ட திணைக்களம் கொண்டுள்ளது. வங்கிக்கு எதிரான கோரல்கள் மற்றும் சட்ட நடவடிக்கைகள் என்பவற்றை எதிர்த்து வாதாடும் பொருட்டு சட்ட ஆலோசனை மற்றும் ஆதரவு என்பவற்றை வழங்குதல், சட்டப் பிரச்சினைகளை பகுப்பாய்வு செய்தல், ஒப்பந்தங்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியான ஆவணங்கள் என்பவற்றை வரைதல், வழக்குகளை முகாமைத்துவம் செய்தல், கடன் அறவிடல்கள் மற்றும் மூன்றாம் தரப்பினருக்கு எதிரான வழக்குகள் என்பவற்றை இது உள்ளடக்குகின்றது. எமது உள்ளக சட்ட வளங்களுக்கு குறைநிரப்பு செய்யும் பொருட்டு வெளி ஆலோசகர்கள் கவனமான விதத்தில் பயன்படுத்தப்பட்டு வருகின்றனர்.

எமது நீதி அமைப்பில் இலத்திரனியல் ஆவணங்களுக்கான சட்ட அங்கீகாரம் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதனால் வங்கி அதன் வாடிக்கையாளர்களுக்கு நு-வங்கித்தொழில் மற்றும் இணைய வங்கித்தொழில் வசதிகளை ஆரம்பித்து வைத்துள்ளது. அதன் பின் விளைவாக, கணினிமயமான குற்றச் செயல்கள் வங்கித்தொழில் துறையில் ஒரு பொதுவான நிகழ்வாக உருவாகியுள்ளன. மூன்றாம் தரப்பினருடன் மேற்கொள்ளப்படும் ஒப்பந்த ரீதியான ஏற்பாடுகள், வாடிக்கையாளர் விழிப்புணர்வை அதிகரித்தல் மற்றும் உயர் அளவிலான தொழில்நுட்ப தரநியமங்கள் என்பவற்றின் வடிவில் இத்தகைய நட்டவச்சங்களை தணிப்பதற்கென வங்கி முன்னெச்சரிக்கை மற்றும் பாதுகாப்பு வழிமுறைகளை எடுத்துள்ளது.

மாற்றமடைந்து வரும் சட்ட நிலைமைகள் குறித்த விழிப்புணர்வை உயர்த்துவதற்கும், இற்றைப்படுத்துவதற்குமென சட்ட திணைக்களத்தைச் சேர்ந்த ஆளணியினருக்கு தொடர்ச்சியாக பயிற்சிகளை வழங்குதல், சட்ட நட்டவச்சத்தை முகாமைத்துவம் செய்வதற்கென வங்கியினால் பயன்படுத்தப்பட்டிருக்கும் மற்றொரு வழிமுறையாகும்.

வங்கி வலையமைப்பு முழுவதிலும் நிலவி வரும் சட்டப் பிரச்சினைகளின் நிலையை கண்காணிப்பதற்கான மத்தியமயப்படுத்தப்பட்ட தரவுத் தளமொன்றை நிறுவுவது தொடர்பான கருத்திட்டம் 2011 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டது. இக்கருத்திட்டம் 2012 இல் பூர்த்தியடைந்தது. வழக்கு விவகாரங்கள் மற்றும் ஆவணப்படுத்தல் பிரச்சினைகள் என்பவற்றை மிகவும் வேகமாகவும், தாக்கமான விதத்திலும் கண்காணித்தல் மற்றும் தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் என்பவற்றை இது உறுதிப்படுத்தும்.

மூலதன முகாமைத்துவம் - உள்ளக மூலதன நிறைவு மதிப்பீட்டு செயன்முறை (ICAAP):

ICAAP ஐ நோக்கிய நகர்வு

2013 ஆம் ஆண்டில் ICAAP ஐ நோக்கிய நகர்வுக்கென வங்கி தேவையான ஆயத்தங்களை மேற்கொண்டுள்ளது.

1. முக்கியமான அனைத்து இடர் வகைகளும் இனங்காணப்பட்டிருப்பதுடன், இடர் தகுதி மற்றும் இடர் முகாமைத்துவ முறைமையியல்கள் முடிவாக்கப்பட்டுள்ளன.
2. தரவு சேகரிப்பு மற்றும் பகுப்பாய்வு என்பவற்றுக்கான வேலைப் பாய்ச்சல் மற்றும் செயன்முறைகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு வங்கியினதும் தனித்துவமான இடர்த் தொகுப்புக்கள் தொடர்பாக தமது சொந்த ஒட்டுமொத்த மூலதன நிறைவு நிலையை மதிப்பிடுவதற்குத் தேவையான தமது சொந்த செயன்முறைகளையும் வளங்களையும் வங்கிகள் கட்டாயமாக அபிவிருத்தி செய்து கொள்ள வேண்டுமென இலங்கை மத்திய வங்கி பணிப்புரைகளை வழங்கியுள்ளது. மேலும், போதியளவிலான மூலதன மட்டங்களை பராமரித்து வருவதற்கு ஒவ்வொரு வங்கியும் உபாயங்களையும் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

நட்டவச்சத்தை அளவிடுவதற்கான பெருமளவுக்கு இடம்பெறக் கூடிய பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்ட மூலதன நிறைவு நிலையைக் கணிப்பதற்கான அளவு ரீதியான அணுகுமுறை மேலும் மேம்படுத்தப்பட்டு வருகின்றது. வங்கியின் உள்ளே இருந்து தோன்றக் கூடிய மற்றும் சந்தையிலிருந்து தோன்றக் கூடிய அதி தீவிரமான, மோசமான நிகழ்வுகள் தொடர்பாக வங்கியின் வளைந்து கொடுக்கும் ஆற்றலை அளவிடுவதற்கென நாங்கள் புதிய அணுகுமுறைகளை அபிவிருத்தி செய்துள்ளோம். வங்கியின் மூலதன மற்றும் வணிகத் திட்டமிடல் உபாயத்தின் உருவாக்கத்தில் அத்தகைய பெறுபேறுகளை பயன்படுத்திக் கொள்ளும் நோக்கில் அவை உருவாக்கப்பட்டுள்ளன.

மூலதன முகாமைத்துவம்

மக்கள் வங்கியும், அதன் துணை நிறுவனங்களும் பெருந்தொகையான வணிக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. அந்நடவடிக்கைகளை வங்கித்தொழில் மற்றும் நிதி, காப்புறுதி, பயணம், ஆதன அபிவிருத்தி என பல்வேறு பிரிவுகளில் பிரிக்க முடியும். இந்த ஒவ்வொரு நிறுவனமும் தனது சொந்த பணிப்பாளர் சபையை கொண்டிருப்பதுடன், அச்சபை தனித்தனி கம்பெனிகளின் நட்டவச்சத் தொகுப்புக்களை கண்காணித்து, மீளாய்வு செய்து வருகின்றது. இவை மீண்டும் மக்கள் வங்கியின் சபை ஒருங்கிணைந்த நட்டவச்ச முகாமைத்துவ கமிட்டியினால் காலாண்டுக்கு ஒரு முறை மீளாய்வு செய்யப்படுகின்றன. நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்களுக்குள் அவை இருந்து வருவதனை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு இந்த மீளாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

அனைத்து நட்டவச்ச நிலைமைகளும் அங்கீகரிக்கப்பட்டு, தொடர்ச்சியாக கண்காணிக்கப்பட்டு, மதிப்பிடப்படுவதனை உறுதி செய்து கொள்ளும் பொருட்டு நட்டவச்ச முகாமைத்துவ மற்றும் மூலதன முகாமைத்துவ செயன்முறைகள் இருந்து வருகின்றன.

வங்கியின் நட்டவச்ச முகாமைத்துவ செயல்முறையின் ஒரு பாகமாக இந்த நட்டவச்சங்கள் குழுமம் முழுவதிலும் ஒன்று திரட்டப்படுகின்றன.

அனைத்து நட்டவச்ச நிலைமைகளும் போதியளவிலான மூலதனத்தின் ஆதரவை கொண்டிருப்பதனை உறுதிப்படுத்துவதே மூலதன முகாமைத்துவ செயன்முறையின் நோக்கமாக இருந்து வருகின்றது.

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டிருக்கும் வழிகாட்டுதல்களின் பிரகாரம் மூலதன நிறைவு நிலை கணிக்கப்படுகின்றது. நட்டவச்ச நிறையேற்றப்பட்ட சொத்துக்களை கணிப்பதற்கென மக்கள் வங்கி பின்வரும் முறைகளை பின்பற்றி வருகின்றது:

பிரிவு 1 இடர்கள் -


i. கடன் இடர் - நியம அணுகுமுறை
ii. செயற்பாட்டு இடர் - அடிப்படை குறிகாட்டி அணுகுமுறை
iii. சந்தை இடர் - நியம அணுகுமுறை

எமது உள்ளக மூலதன நிறைவு மதிப்பீட்டு செயன்முறை (ICAAP) பிரிவு 1 இல் உள்ளடக்கப்படாத ஏனைய இடர்களையும் கவனத்தில் எடுக்கின்றது. இந்த இடர்கள் வருமாறு:

i. காசு இடர்
ii. வங்கித்தொழில் ஏடு மீது வட்டி விகித இடர்கள்
iii. அடகு எடுத்தல்


முதன்மை செயலாற்றுகை குறிகாட்டிகள்

முதன்மை செயலாற்றுகை குறிகாட்டிகள் (KPI)	அது எதனைக் காட்டுகின்றது? நாங்கள் சாதித்துக் கொண்டிருப்பது என்ன? சாதிப்பதற்கு திட்டமிடப்பட்டிருப்பது என்ன?
செயற்பாட்டு வருமானம்	தேறிய வட்டி வருமானம் மற்றும் நிதிப்படுத்தப்படாத மூலங்களிலிருந்து வருமானம்
செயற்பாட்டுச் செலவுகள்	செயற்பாட்டு இலாபத்தை பெற்றுக் கொள்வதற்கென மேற்கொள்ளப்பட்ட நேரடி மற்றும் மறைமுகச் செலவுகள்
செலவு வருமான விகிதம்	செயற்பாட்டுச் செலவு/செயற்பாட்டு வருமானம்




செயற்பாட்டு வருமானம்

2012 வங்கித்தொழில் துறை ரூ. 275.4 பில்.
2012 மவ சந்தைப்பங்கு – 15.7 %



செயற்பாட்டு செலவு

2012 வங்கித்தொழில் துறை ரூ. 135.2 பில்.
2012 மவ சந்தைப்பங்கு 17.9%



செலவு வருமான விகிதம்


2012 வங்கித்தொழில் துறை 53.4%
2012 மக்கள் வங்கி – 55.8%

உரிய நேரத்தில் விலைகளில் மேற்கொள்ளப்பட்ட சீராக்கங்கள், கடன்களில் ஏற்பட்ட வளர்ச்சி மற்றும் கட்டண அடிப்படையிலான வருமானத்தில் ஏற்பட்ட வளர்ச்சி என்பவற்றுடன் இணைந்த விதத்தில் வங்கி அதன் செயற்பாட்டு வருமானத்தில் தொடர்ச்சியான வளர்ச்சியை பதிவு செய்துள்ளது.

2012 நிதியாண்டு 2012 - 14 கூட்டு ஒப்பந்தத்தை உள்ளடக்கும் ஆண்டாக இருந்து வந்தது. இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம், வங்கியின் அனைத்து நிரந்தர ஊழியர்களுக்கும் சம்பள அதிகரிப்புக்கள் வழங்கப்பட்டன. ஏனைய அனைத்து மாறிகளும் 2011 நிதியாண்டுடன் ஒப்பிடும் பொழுது எல்லை ரீதியான வளர்ச்சி காட்டியிருந்தன.


மேலே குறிப்பிடப்பட்டவாறு 2011 ஆம் நிதியாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட சம்பள அதிகரிப்புக்களுக்கு மத்தியிலும் கூட, வங்கி தொடர்ந்தும் அதன் செலவு/வருமான விகிதத்தைக் குறைத்துக் கொண்டுள்ளது. வருமானத்தில் ஏற்பட்ட வளர்ச்சியும் இதற்கு உதவியுள்ளது.

முதன்மை செயலாற்றுகை குறிகாட்டிகள் (KPI)	அது எதனைக் காட்டுகின்றது? நாங்கள் சாதித்துக் கொண்டிருப்பது என்ன? சாதிப்பதற்கு திட்டமிடப்பட்டிருப்பது என்ன?
மொத்த வருமானம்	மொத்த புரள்வு அல்லது வட்டி மற்றும் கட்டண அடிப்படையிலான வங்கியின் வருமானம்.
செயற்பாட்டு வருமானம்	தேறிய வட்டி வருமானம் (வட்டிச் செலவைக் குறைத்த வட்டி வருமானம்) மற்றும் நிதிப்படுத்தாத மூலங்களிலிருந்து வருமானம்
வரிக்கு முன் இலாபம்	மேந்தலைச் செலவுகள் மற்றும் செலவொதுக்குகளை கழித்த பின்னர் தேறிய வருமானம்




மொத்த வருமானம்

2012 வங்கித்தொழில் துறை – ரூ. 573.5 பில்.
2012 மவ சந்தைப் பங்கு – 16.5%



செயற்பாட்டு வருமானம்

2012 வங்கித்தொழில் துறை – ரூ. 275.4 பில்.
2012 மவ சந்தைப் பங்கு – 15.75%



வரிக்கு முன் இலாபம் வருமானம்


2012 வங்கித்தொழில் துறை – ரூ. 116.3 பில்.
2012 மவ சந்தைப் பங்கு – 13.1%

2011 நிதியாண்டுடன் ஒப்பிடும் பொழுது வங்கியின் மொத்த வருமானம் 38.8% ஆல் அதிகரித்திருந்தது. இது வங்கித்தொழில் துறையில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு இணையானதாகும். கடன்களில் ஏற்பட்ட வளர்ச்சி மற்றும் கடனளிப்பு வட்டி வீதங்களில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பனவே இந்த வளர்ச்சியை முக்கியமாக தூண்டியிருந்தன.


தேறிய வட்டி வருமானம் மற்றும் நிதிப்படுத்தப்படாத வருமானம் என்பவற்றை உள்ளடக்கிய செயற்பாட்டு வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் பொழுது இவ்வாண்டில் 18.9% ஆல் அதிகரித்திருந்தது. வங்கித்தொழில் துறையில் இதில் 22.1% வளர்ச்சி ஏற்பட்டிருந்தது.

வட்டிச் செலவில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள், சம்பள அதிகரிப்புக்கள் மற்றும் 2011 ஆம் நிதியாண்டுடன் ஒப்பிடும் பொழுது கடன் நட்டங்களுக்கென மேற்கொள்ளப்பட்ட அதிகரித்த அளவிலான ஒதுக்குகள் என்பவற்றின் காரணமாக இதில் 2012 நிதியாண்டின் போது எல்லை ரீதியான ஒரு வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது.


முதன்மை செயலாற்றுகை குறிகாட்டிகள் (KPI)	அது எதனைக் காட்டுகின்றது? நாங்கள் சாதித்துக் கொண்டிருப்பது என்ன? சாதிப்பதற்கு திட்டமிடப்பட்டிருப்பது என்ன?
செயற்படாத கடன்கள் (NPL)	இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டுதல்களின் பிரகாரம் திருப்பிச் செலுத்துதல் தொடர்பான பிரச்சினைகளை கொண்டிருக்கும் கடன்கள்
மொத்த கடன்கள், முற்பணங்கள்	ஐயக் கடன்களுக்கான ஒதுக்குகளை கழிப்பதற்கு முன்னர் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள்
செயற்படாத கடன் விகிதம்	செயற்படாத கடன்கள்/மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்கள்.



செயற்பாடாத கடன்கள்
2012 வங்கித்தொழில் துறை – ரூ. 114.1 பில்.
2012 மவ சந்தைப் பங்கு – 15.3%



கடன்கள், கிடைக்க வேண்டிய தொகைகள்
2012 வங்கித்தொழில் துறை – ரூ. 3,145.5 பில்.
2012 மவ சந்தைப் பங்கு – 19.5%



செயற்படாத கடன் விகிதம்
2012 வங்கித்தொழில் துறை – 3.6%
2012 மவ சந்தைப் பங்கு – 2.8%

2011 ஆம் நிதியாண்டுக்கு முன்னர் வழங்கப்பட்டிருந்த பழைய அறவிட முடியாத ரூ. 7 பில்லியன் கடன் தொகுப்பொன்றை வங்கி இன்னும் கொண்டுள்ளது. இக்கடன்களுக்கென முழுமையாக ஒதுக்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனவே, (2001 ஆம் ஆண்டின் பின்னர்) உண்மையில் செயற்படாத கடன்கள் பிரிவுக்கு மாற்றப்பட்டிருக்கும் தொகை 3% க்கும் குறைவாகும். வங்கித்தொழில் துறையில் எமது வங்கியின் அளவு மற்றும் சந்தைப் பங்கு என்பவற்றை கவனத்தில் எடுக்கும் பொழுது, இது ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாக இருந்து வருகின்றது.

எவ்வாறிருப்பினும், செயற்படாத கடன்களின் 80% க்கு மேற்பட்ட கடன்களுக்கு ஒதுக்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த ஒதுக்குத் தொகை வங்கிகளுக்கிடையில் காணப்படும் ஆகக் கூடிய தொகையாகும்.


2012 இன் நிதியாண்டில் கடனளிப்பில் ஏற்பட்டிருக்கும் வளர்ச்சியுடன் ஒப்பிடும் பொழுது, செயற்படாத கடன்களில் ஏற்பட்ட வளர்ச்சி எல்லை ரீதியானதாகவே இருந்து வருகின்றது.

2011 நிதியாண்டுடன் ஒப்பிடும் பொழுது, இவ்வருடத்தில் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்களில் 30% வளர்ச்சி ஏற்பட்டிருந்தது. கடன் வளர்ச்சி பெறுமதியில் 29% அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சிகளினால் பெற்றுக் கொள்ளப்பட்ட கடன்களாகும்.


2011 இல் 3.4% ஆக இருந்த வந்த வங்கியின் மொத்த செயற்படாத கடன் விகிதம் 2012 இல் 2. 8% ஆக குறைவடைந்திருந்தது. தரமான கடனளிப்புச் செயற்பாடுகளுடன் இணைந்த விதத்தில் மேற்கொள்ளப்பட்ட கண்டிப்பான கட்டுப்பாடு மற்றும் அறவீட்டு நடைமுறைகள் என்பனவே இந்நிலைமைக்கு முக்கியமாக பங்களிப்புச் செய்திருந்தன.

முன்னைய இலங்கை கணக்கீட்டு தரநியமங்களின் (SLAS) அடிப்படையில்


முதன்மை செயலாற்றுகை குறிகாட்டிகள் (KPI)	அது எதனைக் காட்டுகின்றது? நாங்கள் சாதித்துக் கொண்டிருப்பது என்ன? சாதிப்பதற்கு திட்டமிடப்பட்டிருப்பது என்ன?
வரிக்கு முன்னர் இலாபம்	மேந்தலைச் செலவுகள், செலவொதுக்குகள் என்பவற்றைக் கழித்து செயற்பாடுகளிலிருந்து கிடைத்த சம்பாத்தியங்கள்
சராசரி சொத்துக்கள்	மொத்தக் கடன்கள், முற்பணங்கள், முதலீடுகள் மற்றும் திறைசேரி உபகரணங்கள் முதலியவை
சராசரி சொத்துக்கள் மீதான ஆதாயம் (வரிக்கு முன்னர்)	சராசரி சொத்துக்கள் மீதான வரிக்கு முன்னரான இலாப %



வரிக்கு முன் இலபாம் வருமானம்
2012 வங்கித்தொழில் துறை – ரூ. 116.3 பில்.
2012 மவ சந்தைப் பங்கு – 13.1%



சராசரி சொத்துக்கள்
2012 வங்கித்தொழில் துறை – ரூ. 5,101.9 பில்.
2012 மவ சந்தைப் பங்கு – 17.1%




சராசரி சொத்துக்கள் மீதான ஆதாயம்
2012 வங்கித்தொழில் துறை – 2.4%
2012 மவ சந்தைப் பங்கு – 2.0%

வட்டிச் செலவில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள், சம்பள அதிகரிப்புக்கள் மற்றும் 2011 நிதியாண்டுடன் ஒப்பிடும் பொழுது கடன் நட்டங்களுக்கென மேற்கொள்ளப்பட்ட அதிகரித்த அளவிலான ஒதுக்குகள் என்பவற்றின் காரணமாக 2012 நிதியாண்டில் இதில் எல்லை ரீதியான ஒரு வீழ்ச்சி பதிவு செய்யப்பட்டிருந்தது.

மக்கள் வங்கி இலங்கையின் வங்கித்தொழில் துறையில் இரண்டாவது மிகப் பெரிய சொத்து அடித்தளத்தைக் கொண்டிருக்கும் வங்கியாகும். கடந்த சில வருடங்களில் வங்கி தரமான சொத்துக்களின் வளர்ச்சியில் கவனம் செலுத்தி வந்திருப்பதுடன், அது ஆரோக்கியமான ஆதாயங்களையும் எடுத்து வந்துள்ளது. 2011 நிதியாண்டுடன் ஒப்பிடும் பொழுது, 2012 நிதியாண்டில் 31.9% சொத்து அதிகரிப்பு ஏற்பட்டிருந்ததுடன், இதன் மொத்தத் தொகை ரூ. 873.1 பில்லியனாகவும் இருந்தது. இது வங்கித்தொழில் துறையில் ஏற்பட்ட 17.1% வளர்ச்சியுடன் ஒப்பிடத்தக்கதாகும்.


வங்கிஅதன் 2012 நிதியாண்டின் போது இந்த முதன்மை செயலாற்றுகை குறிகாட்டியில் ஒரு வீழ்ச்சியை எதிர்கொண்டது. சொத்துக்களில் ஏற்பட்ட 31.9% வளர்ச்சியுடன் ஒப்பிடும் பொழுது, வரிக்கு முன்னரான இலாபத்தில் ஏற்பட்ட சிறிய அளவிலான ஒரு வீழ்ச்சியே இதற்கு பங்களிப்பு செய்திருந்தது.

முதன்மை செயலாற்றுகை குறிகாட்டிகள் (KPI)	அது எதனைக் காட்டுகின்றது? நாங்கள் சாதித்துக் கொண்டிருப்பது என்ன? சாதிப்பதற்கு திட்டமிடப்பட்டிருப்பது என்ன?
மூலதன அடித்தளம்	இலங்கை மத்திய வங்கியினால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள பிரிவு ஐ , பிரிவு ஐஐ மூலதனத்தின் ஒரு கூட்டு
நட்டவச்ச நிறையேற்றப்பட்ட சொத்துக்கள்	இலங்கை மத்திய வங்கி வழிகாட்டுதல்களின் அடிப்படையில் ஒவ்வொரு பிரிவுக்கும் ஒதுக்கப்பட்ட நட்டவச்ச %
மூலதன நிறைவு விகிதம்	மேலே குறிப்பிடப்பட்ட மாறிகளை பயன்படுத்தி கணிக்கப்படும் ஒரு விகிதம். உள்:ர் வங்கித்தொழில் துறைக்கான தேவை 10% க்கு மேற்பட்டதாகும்




மூலதன அடித்தளம்

மீண்டும் பெறப்பட்ட உச்சமட்ட சம்பாத்தியங்கள் மற்றும் (தொகுதி II) கடன் பத்திரங்கள் என்பவற்றுடன் இணைந்த விதத்தில் வங்கி தொடர்ந்தும் அதன் மூலதன அடித்தளத்தை அதிகரித்துக் கொண்டுள்ளது. மொத்த மூலதன 2001 நிதியாண்டின் அடித்தளமான ரூ. 7 பில்லியன் உடன் ஒப்பிடுகையில், இவ்வருடத்தில் ரூ. 37.4 பில்லியன் மட்டத்தை அது எட்டியிருந்தது.



நட்டவச்ச நிறையேற்றப்பட்ட சொத்துக்கள்

2011 நிதியாண்டில் ரூ. 212.6 பில்லியனாக இருந்து வந்த நட்டவச்ச நிறையேற்றப்பட்ட சொத்துக்கள் 2012 இல் ரூ. 267.2 பில்லியனாக அதிகரித்திருந்தன. மக்கள் வங்கி மிகப் பெரிய தேறிய வருவாய் அடித்தளம் ஒன்றை கொண்டிருப்பதனால் உயர் அளவிலான செயற்பாட்டு நட்டவச்ச கட்டணத்தினால் இது தூண்டப்பட்டிருந்தது.




மூலதன நிறைவு விகிதம்

2012 வங்கித்தொழில் துறை – 15.0%
2012 மவ சந்தைப் பங்கு – 14.0%

வங்கி 2012 நிதியாண்டு தொடர்பாக 14.0% மூலதன நிறைவு விகிதத்தை பதிவு செய்திருந்தது. 2001 தொடக்கம் 2004 வரையில் இந்த விகிதம் எதிர்க்கணிய நிலையில் இருந்து வந்துள்ளது என்பதனையும், 2005 நிதியாண்டு தொடக்கம் 2007 நிதியாண்டு வரையில் இது 10% க்கு குறைவானதாக இருந்து வந்துள்ளது என்பதனையும் கவனத்தில் எடுக்கும் பொழுது, இது குறிப்பிடத்தக்க ஒரு சாதனையாக இருந்து வருகின்றது.


இந்த விகிதத்தை தக்கவைத்துக் கொள்வது வங்கி எதிர்காலத்தில் முக்கியமாக கவனத்தில் கொள்ள வேண்டிய ஒரு விடயமாக இருந்து வருகின்றது.

முதன்மை செயலாற்றுகை குறிகாட்டிகள் (KPI)	அது எதனைக் காட்டுகின்றது? நாங்கள் சாதித்துக் கொண்டிருப்பது என்ன? சாதிப்பதற்கு திட்டமிடப்பட்டிருப்பது என்ன?
வரிக்குப் பின்னர் இலாபம்	வரிப் பொறுப்பைக் கழித்து வரிக்கு முன்னரான இலாபம்
ஊழியர்கள் எண்ணிக்கை	வருட இறுதியில் நிரந்தர ஊழியர்கள் எண்ணிக்கை
ஊழியர் ஒருவருக்கான இலாபம்	நிரந்தர ஊழியர் ஒருவருக்கென கணிக்கப்பட்ட வரிக்குப் பின்னரான இலாபம்




வரிக்குப் பின்னர் இலாபம்

2012 வங்கித்தொழில் துறை ரூ. 82.3 பில்.
2012 மவ சந்தைப் பங்கு – 13.2%



ஊழியர்கள் எண்ணிக்கை



ஊழியர் ஒருவருக்கான இலாபம்

வங்கி 2012 நிதியாண்டில் வரிக்குப் பின்னரான இலாபத்தில் மிதமான ஒரு வளர்ச்சியை பதிவு செய்துள்ளது.

2011 நிதியாண்டுடன் ஒப்பிடும் பொழுது, குறைந்த அளவிலான வரி அறிவீடு இதற்கு முதன்மையாக பங்களிப்புச் செய்துள்ளது. முக்கியமாக 2011 நிதியாண்டில் வரிகளுக்கென மிகை ஒதுக்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை, தாமதப்படுத்தப்பட்ட வரி திருப்புதல்கள் என்பன காரணமாகவே இது இடம்பெற்றிருந்தது.

2012 ஆம் வருடத்தின் போது 400 க்கும் மேற்பட்ட நிரந்தர ஊழியர்கள் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்கள். இதுவே ஊழியர் எண்ணிக்கையில் ஏற்பட்டிருக்கும் வீழ்ச்சிக்கான காரணமாகும்.

ஓர் அரச வங்கி என்ற முறையில் எமது வாடிக்கையாளர்களுக்கு நாங்கள் பெறுமதிசேர் இலவச சேவைகளை வழங்கி வருகின்றோம். எனவே, தனியார் துறையைச் சேர்ந்த சக வங்கிகளுடன் ஒப்பிடும் பொழுது, எமது வங்கி உயர் அளவிலான ஒர் ஊழியர் படையைக் கொண்டுள்ளது. அத்தகைய சமூக கடப்பாடுகளை நிறைவு செய்து வைப்பதற்கும் அதே போன்ற, ஒரு பாரிய கிளை வலையமைப்பை பராமரித்து வருவதற்கும் வங்கி குறிப்பிட்ட அளவிலான ஊழியர் எண்ணிக்கையை சேவையில் அமர்த்த வேண்டிய தேவையை கொண்டுள்ளது

ஊழியர் ஒருவருக்கான இலாபம் முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் பொழுது 10% வளர்ச்சியை பதிவு செய்திருந்தது. மேலும், இலாப, நட்ட அடிப்படையில் கணக்கில் எடுத்துக் கொள்ள முடியாத சேவைகளையும் மக்கள் வங்கி வழங்கி வருகின்றது என்ற விடயத்தைம் நாங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். அரசாங்க உத்தியோகத்தர்களின் சம்பள கொடுப்பனவுகள், பாதுகாப்பு படையினரின் சம்பளங்கள், ஆசிரியர் சம்பளங்கள், மின் கட்டணங்கள், நீர் கட்டணங்களை செலுத்துதல், அரசாங்க ஊழியர்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவுகள் மற்றும் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படும் வீடமைப்புக் கடன்கள் போன்ற சேவைகளையும் இவை உள்ளடக்குகின்றன. வங்கியின் உயர் அளவிலான ஆளணிச் செலவு மற்றும் நாடெங்கிலும் வியாபித்திருக்கும் பாரிய கிளை வலையமைப்பை செயற்படுத்துவதற்கு உயர் எண்ணிக்கையிலான ஊழியர்களை சேவையில் அமர்த்த வேண்டிய தேவை என்பன முதன்மை செயலாற்றுகை குறிகாட்டிகளில் அழுத்தங்களை ஏற்படுத்துகின்றன.

குறிப்பு: மேலே 2011 மற்றும் 2012 ஆகிய வருடங்கள் தொடர்பாக அறிக்கையிடப்பட்டிருக்கும் பெறுபேறுகள் 2012 ஜனவரி 1 ஆம் திகதி முதல் அமுலுக்கு வந்த இலங்கையின் புதிய கணக்கீட்டு தரநியமங்களை அடிப்படையாகக் கொண்டு, வங்கியினால் தயாரிக்கப்பட்ட கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கைகளிலிருந்து பெறப்பட்டவையாகும். 2008 - 2010 காலப் பிரிவு தொடர்பாக அறிக்கையிடப்பட்ட பெறுபேறுகள், 2011 டிசம்பர் 31 வரையில் அமுலில் இருந்து வந்த முன்னைய இலங்கை கணக்கீட்டு தரநியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களிலிருந்து பெறப்பட்டவையாகும். வங்கி 2011 க்கான அதன் நிதிசார் கூற்றுக்களை, இலங்கையின் புதிய கணக்கீட்டு தரநியமங்களின் பிரகாரம் உரிய விதத்தில் மீண்டும் எடுத்து விளக்கியுள்ளது.

நிதிசார் அறிக்கைகள்

பணிப்பாளர்களின் அறிக்கை 116

நிதிசார் அறிக்கையிடல் தொடர்பான பணிப்பாளர்களின் பொறுப்பு 119

உள்ளகக் கட்டுப்பாடுகள் குறித்த பணிப்பாளர்களின் அறிக்கை 120

சுதந்திரமான உத்தரவாத அறிக்கை 122

கண்டறியப்பட்ட விடயங்கள் மற்றும் நிறுவன ஆளுகை தொடர்பான அறிக்கை 124

சபை கணக்காய்வு கமிட்டி அறிக்கை 154

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 155

வருமானக் கூற்று 157

அனைத்துமடங்கிய வருமானக் கூற்று 158

நிதி நிலை தொடர்பான கூற்று 159

காசுப் பாய்ச்சல் கூற்று 160

பங்கு மூலதனத்தில் மாற்றங்கள் தொடர்பான கூற்று 161

நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் 163

பணிப்பாளர்களின் அறிக்கை

பணிப்பாளர்கள்

மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபை நிதியமைச்சரினால் நியமனம் செய்யப்பட்ட 9 பணிப்பாளர்களை கொண்டுள்ளது. அவற்றில் இரு பெயர்கள் திருத்தப்பட்ட 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் கூட்டுறவுக்கு பொறுப்பான அமைச்சரினால் குறிப்பிடப்படுகின்றன. சபை ஆகக் குறைந்தது மாதத்துக்கு ஒரு முறை கூடுவதுடன், 2012 ஆம் ஆண்டில் 18 தடவைகள் கூடியது. பணிப்பாளர் சபை கூட்டத்துக்கான நடப்பெண் 5 உறுப்பினர்கள் ஆகும். 2012 ஆம் வருடத்தின் போது பின்வருவோர் வங்கியின் பணிப்பாளர்களாக செயற்பட்டு வந்துள்ளார்கள்:

பெயர்
அமரர் திரு. டப்ளியு. கருணாஜீவ (28. 01. 2013 வரையில்)
கலாநிதி டி. ஜே. டி. ஜயக்கொடி
திரு. ஜெஹான் பி. அமரதுங்க
திரு. அஜித் பண்டிதரத்ன
திருமதி லக்ஷ்மி கே. சங்கக்கார
திருமதி தர்மா என். கம்மம்பில
திருமதி எம். ரீ. ஐ. விசாகா அமரசேகர
திரு. எம். எம். பிரியந்த கே. மாயாதுன்ன
திரு. டி. எம். பவர தசநாயக்க

துணை நிறுவனங்கள் மற்றும் இணை நிறுவனங்கள்

பின்வருவன வங்கியின் துணை/இணை நிறுவனங்களாகும்:

(அ) பீப்பள்ஸ் லீசிங் பிஎல்சி

வங்கியின் பங்குடமை - 75%

நிதி மற்றும் செயற்பாட்டு குத்தகை, வாடகை கொள்வனவு, சொத்து நிதிப்படுத்தல், இஸ்லாமிய நிதிப்படுத்தல் வைப்புக்கள் மற்றும் சேமிப்புக்கள் என்பன இக்கம்பெனியின் முதன்மை நடவடிக்கைகளாகும்.

பணிப்பாளர்களின் பிரதிநிதித்துவம் வருமாறு:

அமரர் திரு. டப்ளியு. கருணாஜீவ (28.01.2013 வரையில்)	- தலைவர்
கலாநிதி டி. ஜே. டி. ஜயக்கொடி	- பணிப்பாளர்
திரு. என். வசந்த குமார்	- பணிப்பாளர்

(ஆ) பீப்பள்ஸ் டிரவல்ஸ் பிஎல்சி

பங்குடமை - 99%

இக்கம்பெனியின் முதன்மை நடவடிக்கைகள் - விமான அனுமதிச் சீட்டுக்களை வழங்குதல் மற்றும் சுற்றுலாக்களை ஏற்பாடு செய்தல்.

பணிப்பாளர்களின் பிரதிநிதித்துவம் வருமாறு:

திருமதி லக்ஷ்மி கே. சங்கக்கார	- தலைவர்
கலாநிதி டி. ஜே. டி. ஜயக்கொடி	- பணிப்பாளர்
திரு. என். வசந்த குமார்	- பணிப்பாளர்

(இ) பீப்பள்ஸ் மேர்ச்சன்ட் பினான்ஸ் பிஎல்சி

பங்குடமை - 26.1%

குத்தகை நிதிப்படுத்தல், வர்த்தக நிதிப்படுத்தல், கூட்டுறவு நிதி மற்றும் சம்பந்தப்பட்ட ஆலோசனை சேவைகள், முதலீட்டு வங்கித்தொழில் மற்றும் மெய்யாதன அபிவிருத்தி என்பன இந்த வங்கியின் முதன்மை நடவடிக்கைகளாகும்.

பணிப்பாளர்களின் பிரதிநிதித்துவம் வருமாறு:

திரு. பி. ஏ. அஜித் பண்டிதரத்ன	- தலைவர்
திரு. ஜெஹான் பி. அமரதுங்க	- பணிப்பாளர்
திருமதி லக்'மி கே. சங்கக்கார (நியமனம் - நவம்பர் 2012)	- பணிப்பாளர்
திரு. சப்ரி இப்றாஹிம் (ராஜினாமா - நவம்பர் 2012)	- பணிப்பாளர்

சபை கூட்டங்களுக்கு பணிப்பாளர்களின் வருகை

2012 ஆம் வருடத்தின் போது நடத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை - 18

பெயர்	நடத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை	பங்குபற்றிய கூட்டங்களின் எண்ணிக்கை
அமரர் திரு. டப்ளியு. கருணாஜீவ (28.01.2013 வரையில்)	18	18
கலாநிதி டி. ஜே. டி. ஜயக்கொடி	18	18
திரு. ஜெஹான் பி. அமரதுங்க	18	16
திரு. அஜித் பண்டிதரத்ன	18	15
திருமதி லக்ஷ்மி கே. சங்கக்கார	18	17
திருமதி தர்மா என். கம்மம்பில	18	15
திருமதி விசாகா அமரசேகர	18	16
திரு. எம். எம். பிரியந்த கே. மாயாதுன்ன	18	16
திரு. டி.எம். பவர தசநாயக்க	18	17

நிறுவன ஆளுகை

வங்கி தானாகவே முன்வந்து சிறந்த நடைமுறைகள் குறித்த ஏற்பாடுகளை பின்பற்றியிருப்பதுடன், உறுதியான நிறுவன ஆளுகையை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு முறைமைகளையும், நடைமுறைகளையும் ஸ்தாபித்துக் கொண்டுள்ளது.

ஒரு விரிவான அறிக்கை 87 தொடக்கம் 93 வரையிலான பக்கங்களில் தரப்பட்டுள்ளது.

இணங்கியொழுகல் அறிக்கையிடல்

வங்கிக்குள் ஒரு புறம்பான இணங்கியொழுகல் கரும அலகு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் இணங்கியொழுகல் அதிகாரி ஆகியோர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட மாதாந்த இணங்கியொழுகல் அறிக்கைகள் இலங்கை மத்திய வங்கியிடம் இரு மாதங்களுக்கு ஒரு முறை சமர்ப்பிக்கப்படுகின்றன - இந்த அறிக்கைகள் சபையிடமும் சமர்ப்பிக்கப்படுகின்றன. ஊழியர்களுக்கான ஒரு நடத்தை நெறிமுறைக் கோவை தயாரிக்கப்பட்டு, அனைத்து ஊழியர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

ஒரு விரிவான அறிக்கை பக்கங்கள் 85 தொடக்கம் 86 வரையில் தரப்பட்டுள்ளது.

சபை உப கமிட்டிகள்

31 டிசம்பர் 2012 இல் சபை உப கமிட்டிகள் வருமாறு:

சபை கணக்காய்வு கமிட்டி

திரு. ஜெஹான் பி. அமரதுங்க (கமிட்டியின் தலைவர்)	- பணிப்பாளர்
திருமதி விசாகா அமரசேகர	- பணிப்பாளர்
திருமதி தர்மா என். கம்மம்பில	- பணிப்பாளர்

வங்கி எதிர்கொள்ளும் செயற்பாட்டு நட்டவச்சங்களை அடையாளம் காண்பதும், அத்தகைய நட்டவச்சங்களின் தாக்கங்களை தடுப்பதும்/குறைப்பதும், சிறந்த நடைமுறைகளை தெரியப்படுத்தி ஊக்குவிப்பதும், வங்கிக் கிளையமைப்பு முழுவதிலும் தர உறுதிப்பாட்டினை எடுத்து வருவதும் இக்கமிட்டியின் பிரதான கருமமாகும்.

சபை நிறைவேற்று கடன் கமிட்டி (BECC)

அமரர் திரு. டப்ளியு. கருணாஜீவ (28.01.2013 வரையில்)	- தலைவர்
கலாநிதி டி. ஜே. டி. ஜயக்கொடி	- பணிப்பாளர்
திருமதி லக்ஷ்மி கே. சங்கக்கார	- பணிப்பாளர்
திரு. டி.எம். பவர தசநாயக்க	- பணிப்பாளர்
திரு. என். வசந்த குமார்	- பிநிஅ/பொது முகாமையாளர்
திரு. சப்ரி இப்றாஹிம்	- சிபி. பொது முகாமையாளர் (நட்டவச்ச முகாமைத்துவம்)
திரு. ரசித்த குணவர்தன	- பதில் பிபொமு (கடன் கட்டுப்பாடு மற்றும் நட்டவச்சம்)

வங்கியின் கடன் கொள்கையை உருவாக்கி காலத்துக்கு காலம் மீளாய்வு செய்தல், குறித்துரைக்கப்பட்ட வகைகள் தொடர்பாக ஒதுக்கப்பட்டிருக்கும் உச்சவரம்புக்கு மேல் கடன் தொகைகளுக்கு அனுமதி வழங்குதல் என்பன இக்கமிட்டியின் பிரதான கருமங்களாகும்.

சபை மனித வள மற்றும் வேதன கமிட்டி (BHRRC)

அமரர் திரு. டப்ளியு. கருணாஜீவ (28.01.2013 வரையில்)	- தலைவர்
கலாநிதி டி. ஜே. டி. ஜயக்கொடி	- பணிப்பாளர்
திரு. அஜித் பண்டிதரத்ன	- பணிப்பாளர்
திரு. பிரியந்த மாயாதுன்ன	- பணிப்பாளர்
திரு. என். வசந்த குமார்	- பிநிஅ/பொது முகாமையாளர்

மனித வள முகாமைத்துவம் தொடர்பான கொள்கைகள் மற்றும் நடைமுறை என்பவற்றை உருவாக்குதல், மீளாய்வு செய்து வணிகத் தேவைகளுக்கேற்ற விதத்தில் வங்கியின் ஊழியர் மட்டங்களை பராமரித்து வருதல், ஆட்சேர்ப்பு, ஊழியர் நலன்கள், திட்டவட்டமான சேவை நீடிப்புக்கள் மற்றும் கூட்டு முகாமைத்துவ வேலை ஒப்பந்தங்கள் என்பன இக்கமிட்டியின் பிரதான கருமங்களாக இருந்து வருகின்றன.

சபை ஒருங்கிணைந்த நட்டவச்ச முகாமைத்துவ கமிட்டி (BIRMC)

திரு. ஜெஹான் பி. அமரதுங்க	- தலைவர் BIRMC
கலாநிதி டி. ஜே. டி. ஜயக்கொடி	- பணிப்பாளர்
திருமதி தர்மா என். கம்மம்பில	- பணிப்பாளர்
திருமதி விசாகா அமரசேகர	- பணிப்பாளர்
திரு. என். வசந்த குமார்	- பிநிஅ/பொது முகாமையாளர்

ஒருங்கிணைந்த நட்டவச்ச முகாமைத்துவம் தொடர்பாக வங்கி முழுவதிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சிகளை கண்காணிப்பதற்கும், உள்ளீடுகளை வழங்குவதற்குமென சபை உப கமிட்டி உருவாக்கப்பட்டது.

ஒருங்கிணைந்த நட்டவச்ச முகாமைத்துவம் தொடர்பான சபையின் உப கமிட்டி சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கமிட்டியின் (ALCO) அறிக்கைகள் மற்றும் கூட்டங்கள், கடன் நட்டவச்சம் தொடர்பான பிரச்சனைகள் என்பவற்றின் நடைமுறை சாராம்சத்தினை விசேடமாக ஆய்வு செய்கின்றது. செயற்பாட்டு நட்டவச்ச முகாமைத்துவ சட்டகமொன்றை உருவாக்குவதற்கான முயற்சிகளை கவனத்தில் எடுக்கின்றது.

சபையின் ஒருங்கிணைந்த நட்டவச்ச முகாமைத்துவம் தொடர்பான மேலும் விபரங்கள், இந்த தலைப்பை கவனத்தில் எடுக்கும் பிரிவில் இந்த அறிக்கையின் பக்கங்கள் 96 தொடக்கம் 107 வரையில் தரப்பட்டுள்ளன.

சபை நியமன கமிட்டி (BNC)

அமரர் திரு. டப்ளியு. கருணாஜீவ (28.01.2013 வரையில்)	- தலைவர்
கலாநிதி டி. ஜே. டி. ஜயக்கொடி	- பணிப்பாளர்
திரு.ஜெஹான் பி. அமரதுங்க	- பணிப்பாளர்
திருமதி தர்மா என். கம்மம்பில	- பணிப்பாளர்
திரு. அஜித் பண்டிதரத்ன	- பணிப்பாளர்
திருமதி லகஷ்மி கே. சங்கக்கார	- பணிப்பாளர்
திருமதி விசாகா அமரசேகர	- பணிப்பாளர்
திரு. பிரியந்த கே. மாயாதுன்ன	- பணிப்பாளர்
திரு. டி.எம். பவர தசநாயக்க	- பணிப்பாளர்

பிரதம நிறைவேற்று அதிகாரி பொது முகாமையாளர் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவ ஆளணியினர் ஆகியோரை தெரிவு செய்வதற்கு/ நியமனம் செய்வதற்கு ஒரு நடைமுறையை அமுல் செய்தல், பிநிஅ/பொமு மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவ பதவிகளுக்கு நியமனம் செய்யப்படுவதற்கு அல்லது பதவி உயர்த்தப்படுவதற்கு தேவைப்படும் தகைமைகள், அனுபவம் மற்றும் முக்கிய பண்புகள் என்பவற்றை கொண்ட அளவுகோலை நிர்ணயித்தல், வங்கியின் முன்னேற்றத்திற்கு தேவைப்படும் மேலதிக/ புதிய நிபுணத்துவங்கள் தொடர்பாக கவனத்தில் எடுத்து காலத்துக்கு காலம் விதப்புரைகளை மேற்கொள்ளல் என்பன இக்கமிட்டியின் பிரதான கருமங்களாகும்.

சபை முதலீட்டு வங்கித்தொழில் கமிட்டி (BIBC)

திரு. ஜெஹான் பி. அமரதுங்க	-	தலைவர் - BIBC
கலாநிதி டி. ஜே. டி. ஜயக்கொடி	-	பணிப்பாளர்
திருமதி விசாகா அமரசேகர	-	பணிப்பாளர்

சபை முதலீட்டு வங்கித்தொழில் கமிட்டியை ஸ்தாபித்ததன் நோக்கம் முதலீட்டு வங்கித்தொழில் அலகுக்கு உபாய ரீதியான நெறிப்படுத்தல் மற்றும் வழிகாட்டுதல் என்பவற்றை வழங்குவதும், வங்கியின் முதலீட்டு வங்கித்தொழில் அலகின் (IBU) செயலாற்றுகையை மீளாய்வு செய்வதுமாகும்.

வங்கியின் முதலீட்டு வங்கித்தொழில் மாதிரியை ஒழுங்கான அடிப்படையில் மீளாய்வு செய்தல், பங்கு வியாபார உச்ச வரம்புகளுக்கு ஒப்புதல் அளித்தல், புதிய முதலீட்டு திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்தல், முதலீட்டு வங்கித்தொழில் அலகின் செயற்பாடுகளை மீளாய்வு செய்தல் மற்றும் பங்குத் தரகர் முறை, வியாபார இடங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப முறைமைகள் என்பவற்றை பயன்படுத்திக் கொள்வதற்கு ஒப்புதல் அளித்தல் என்பனவே சபை முதலீட்டு வங்கித்தொழில் கமிட்டியின் பிரதான கருமங்களாக இருந்து வருகின்றன.

சபை தகவல்தொழில்நுட்ப கமிட்டி (BITC)

கலாநிதி டி. ஜே. டி. ஜயக்கொடி	-	தலைவர் - BITC
திரு. ஜெஹான் பி. அமரதுங்க	-	பணிப்பாளர்
திரு. பிரியந்த மாயாதுன்ன	-	பணிப்பாளர்
திரு. என். வசந்த குமார்	-	பிநிஅ/பொது முகாமையாளர்

சவால்கள் மற்றும் போட்டி என்பவற்றை சமாளிப்பதற்குத் தேவையான தூர நோக்கிலான உத்திகளை உருவாக்குவதும், போட்டி வணிகச் சூழலில் வங்கியின் தகவல் தொழில்நுட்பத்தை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதற்கு கொள்கைப் பணிப்புரைகளை வழங்குவதும் சபையின் தகவல் தொழில்நுட்ப கமிட்டியின் பிரதான கருமங்களாக இருந்து வருகின்றன.



ரொஹான் பத்திரகே
பிரதி பொது முகாமையாளர்
பணிப்பாளர் சபை செயலாளர்

ஜனவரி 29, 2013

நிதிசார் அறிக்கையிடல் தொடர்பான பணிப்பாளர்களின் பொறுப்பு

அனைத்து கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாகவும் வங்கி பொருத்தமான கணக்கு ஏடுகளை பராமரித்து வருதல், விவகாரங்களின் நிலை மற்றும் வருடத்திற்கான இலாபம்/நட்டம் என்பன தொடர்பான உண்மையானதும், நியாயமானதுமான ஒரு தோற்றத்தை வழங்கும் நிதிசார் கூற்றுக்களை தயாரித்தல் என்பவற்றை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான பொறுப்பினை வங்கியின் பணிப்பாளர் சபை கொண்டுள்ளது.

அதன் பிரகாரம் பணிப்பாளர் சபை தனது ஒழுங்கான கூட்டங்களின் மீளாய்வுகள் மற்றும் கணக்காய்வு கமிட்டி என்பவற்றுக்கு ஊடாக நிதிசார் அறிக்கைகள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்பை மேற்பார்வை செய்து வருகின்றது. சபை கணக்காய்வு கமிட்டியின் அறிக்கை பக்கம் 154 இல் தரப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபை உள்ளக கட்டுப்பாடு தொடர்பான மிகவும் தாக்கமான, அனைத்துமடங்கிய முறைமைகளை ஸ்தாபித்துக் கொண்டுள்ளது. இது உள்ளக பரிசோதனைகள், உள்ளக கணக்காய்வு, வங்கித்தொழில் வர்த்தகத்தை முறையான ஒழுங்கில் முன்னெடுத்துச் செல்வதற்கும், அதன் சொத்துக்களை பாதுகாத்துக் கொள்வதற்கும் முடியுமான அளவுக்கு பதிவுகளின் துல்லியத் தன்மை மற்றும் நம்பகத் தன்மை என்பவற்றை பெற்றுக் கொள்வதற்கும் தேவையான ஒட்டுமொத்த நிதிசார் மற்றும் ஏனைய கட்டுப்பாடுகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒரு முறைமையைக் கொண்டுள்ளது. ஒரே சீரான விதத்தில் தாம் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளை பின்பற்றி வந்திருப்பதாகவும், பக்கங்கள் 157 தொடக்கம் 242 வரையில் காட்டப்பட்டிருக்கும் 2012 ஆம் வருடத்திற்கான நிதிசார் கூற்றுக்களை தயாரிப்பதில் நியாயமான, விவேகபூர்வமான முடிவுகளையும், மதிப்பீடுகளையும் பயன்படுத்தியிருப்பதாகவும் பணிப்பாளர்கள் கருதுகின்றனர்.

தயாரிக்கப்பட்டு, இந்த அறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் 2012 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான வங்கியின் நிதிசார் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டம், அதன் திருத்தங்கள் என்பவற்றுக்கு இணங்கிய விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த நிதிசார் கூற்றுக்கள் அத்திகதியில் உள்ளவாறு வங்கி மற்றும் குழுமம் என்பவற்றின் நிலைமை தொடர்பான உண்மையானதும், நியாயமானதுமான ஒரு தோற்றத்தை பிரதிபலிக்கின்றன.



ரொஹான் பத்திரகே
பிரதிப் பொது முகாமையாளர்
பணிப்பாளர் சபை செயலாளர்

ஜனவரி 29, 2013

உள்ளகக் கட்டுப்பாடுகள் குறித்த பணிப்பாளர்களின் அறிக்கை

பொறுப்பு

பணிப்பாளர் சபை 2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பணிப்புரை இல. 11 பிரிவு 3 (8) (ii) (ஆ) இன் பிரகாரம் மக்கள் வங்கியின் (வங்கி) உள்ளகக் கட்டுப்பாடுகள் குறித்த இந்த அறிக்கையை சமர்ப்பிக்கின்றது.

வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறையின் போதிய தன்மை மற்றும் வினைத்திறன் என்பவற்றுக்கு பணிப்பாளர் சபை பொறுப்பாக இருந்து வருகின்றது. எவ்வாறிருப்பினும், வங்கியின் முதன்மை இடர்த துறைகளை ஏற்றுக் கொள்ளத்தக்க இடர்த் தொகுப்பொன்றுக்குள் சமாளித்து கொள்ளும் நோக்குடனேயே இந்த முறை வடிவமைக்கப்பட்டுள்ளது. வங்கியின் கொள்கைகள் மற்றும் வணிக குறிக்கோள்கள் என்பவற்றை சாதிக்க தவறும் இடரை ஒழிப்பதற்கென அவை உருவாக்கப்பட்டிருக்கவில்லை. எனவே, அவை பொருள்சார் தவறுகள், பிழைகள், இழப்புக்கள் அல்லது மோசடி என்பவற்றுக்கான முழுமையான உத்தரவாதத்தையன்றி, நியாயமான அளவிலான உத்தரவாதத்தை மட்டுமே வழங்க முடியும்.

வங்கி எதிர்கொண்டு வரும் கணிசமான அளவிலான நட்டவச்சங்களை இனங்கண்டு, மதிப்பிட்டு முகாமைத்துவம் செய்வதற்கென சபை தொடர்ச்சியாக இடம்பெறும் ஒரு செயன்முறைய ஸ்தாபித்துள்ளது. இச்செயன்முறை வணிகச் சூழல் தொடர்பாக அல்லது ஒழுங்குமுறைப்படுத்தும் வழிகாட்டுதல்கள் தொடர்பாக மாற்றங்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் உள்ளகக் கட்டுப்பாடுகள் முறையை உயர்த்துவதனையும் உள்ளடக்குகின்றது. இச்செயன்முறை சபையினால் ஒழுங்கான அடிப்படையில் மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றது இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்டிருக்கும் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான பணிப்பாளர்களின் கூற்றின் வங்கியின் பணிப்பாளர்களுக்கான வழிகாட்டுதல்களின் பிரகாரம் இது மேற்கொள்ளப்படுகின்றது. அந்த வழிகாட்டுதலில் தரப்பட்டுள்ள விதத்தில் உள்ளகக் கட்டுபாட்டு முறைகளை மதிப்பீடு செய்வதற்கான கோட்பாடுகளை கவனத்தில் எடுத்து, சபை உள்ளகக் கட்டுப்பாட்டு முறையை மதிப்பிட்டுள்ளது.

செயற்படுத்தப்பட்டு வரும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறை நிதிசார் அறிக்கையிடலின் நம்பகத் தன்மை தொடர்பாகவும், வெளி நோக்கங்களுக்குகென நிதிசார் கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பாகவும் நியாயமான உத்தரவாதத்தை வழங்கக் கூடிய விதத்தில் வலுவானதாகவும், போதுமானதாகவும் இருந்து வருகின்றது என்பதும், சம்பந்தப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தும் தேவைகள் என்பவற்றின் பிரகாரம் இருந்து வருகின்றது என்றும் சபை கருதுகின்றது.

இடர் மற்றும் கட்டுப்பாடு தொடர்பான சபையின் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் என்பவற்றின் அமுலாக்கத்திற்கு முகாமைத்துவம் உதவி வருகின்றது. இத்தகைய இடர்களை தணிப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் தேவையான பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடுகளை வடிவமைப்பதிலும், செயற்படுத்துவதிலும், கண்காணிப்பதிலும் எதிர்கொண்டு வரும் நட்டவச்சங்களை மதிப்பீடு செய்வதன் மூலம் அது எவ்வாறு உதவுகின்றது.

நிதிசார் அறிக்கையிடல் தொடர்பாக உள்ளகக் கட்டுப்பாட்டு முறையின் வடிவமைப்பு மற்றும் தாக்கம் என்பவற்றை பிரயோகிக்கப்பதிலும், மீளாய்வு செய்வதிலும் பின்பற்றப்படும் செயன்முறையின் முதன்மையான அம்சங்கள்

நிதிசார் அறிக்கையிடல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடுகள் முறையின் போதிய தன்மை மற்றும் நம்பகத் தன்மை என்பவற்றை மீளாய்வு செய்வதற்கென ஸ்தாபிக்கப்பட்டிருந்த முதன்மையான செயன்முறைகள் பின்வருவனவற்றையும் உள்ளடக்குகின்றன:

- வங்கிக்குள் தாக்கமான விதத்திலான உள்ளக் காட்டுப்பாடு இடம்பெற்று வருவதனை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு பணிப்பாளர் சபை உப கமிட்டிகளை நியமனம் செய்துள்ளது. பிரதம நிறைவேற்று அதிகாரி/ பொது முகாமையாளரின் தலைமையின் கீழ் கூட்டு முகாமைத்துவத்தின் நியமனம், சபையிலிருந்து ஏனைய மட்டங்களுக்கு அதிகாரங்களை பகிர்ந்தளிப்பதற்கான வாய்ப்பை வழங்கியுள்ளது. முகாமைத்துவம் நட்டவச்சம் மற்றும் கட்டுப்பாடு என்பன தொடர்பான சபையின் கொள்கைகளையும், நடைமுறைகளையும் அமுல் செய்வதற்கு சபைக்கு உதவி வருகின்றது. வங்கி எதிர்கொள்ளும் நட்டவச்சங்களை இணங்கண்டு, மதிப்பீடு செய்வதன் மூலமும், இந்த நட்டவச்சங்களை தணித்து, கட்டுப்படுத்தும் பொருட்டு பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளை வடிவமைத்து, செயற்படுத்தி, கண்காணித்து வருவதன் மூலமும் முகாமைத்துவம் இப்பணியை மேற்கொள்கின்றது.
- பிரதான நட்டவச்சங்களை இணங்கண்டு, கட்டுப்படுத்தி, அவை தொடர்பாக அறிக்கையிடுவதற்கென முறைமைகளும், நடைமுறைகளும் இருந்து வருகின்றன. இந்த நட்டவச்சங்கள் கடனளிப்பு, சந்தை மற்றும் செயற்பாட்டு நட்டவச்சங்கள் என்பவற்றையும் உள்ளடக்குகின்றன. வங்கி இத்தகைய நட்டவச்சங்களை எதிர்கொள்ளும் விதத்தை சபையின் ஒருங்கிணைந்த நட்டவச்ச முகாமைத்துவ கமிட்டி கண்காணித்து வருகின்றது. இக்கமிட்டி பொருத்தமான நட்டவச்ச குறிகாட்டிகள் மற்றும் முகாமைத்துவ தகவல் என்பவற்றுக்கூடாக வங்கி எதிர்கொண்டு வரும் நட்டவச்சங்களை காலத்துக்கு காலம் மதிப்பீடு செய்கின்றது. திட்டவட்டமான நட்டவச்சங்களை கவனத்தில் எடுப்பதற்கென அனைத்து முகாமைத்துவ மட்டக் கமிட்டிகளும் கொண்டிருக்கும் வினைத்திறன் மற்றும் ஆற்றல் என்பவற்றை மீளாய்வு செய்வதுடன், அளவு ரீதியான மற்றும் தர ரீதியான நட்டவச்ச மட்டங்களுக்குள் அவற்றை சமாளிக்கும் திறனையும் இக்கமிட்டி மீளாய்வு செய்கின்றது. இது அழுத்தச் சோதனை மற்றும் நட்டவச்ச கண்ணாடிப் பலகை மீளாய்வுகள் என்பவற்றை உள்ளடக்குகின்றது. மேலும், நட்டவச்சங்கள் கமிட்டியினால் நிர்ணயிக்கப்படும் விவேகபூர்வமான மட்டங்களுக்கு அப்பால் இருந்து வரும் சந்தர்ப்பங்களில் திட்டவட்டமான

இடர்களின் தாக்கங்களை தணிக்கும் பொருட்டு சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ கமிட்டி நிவர்த்தி நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

- நிதிசார் அறிக்கையிடல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டு முறையை மதிப்பிடுவதில் வங்கியின் நிதிசார் கூற்றுக்களின் கணக்குகள் மற்றும் வெளிப்படுத்துகைகள் என்பவற்றுடன் சம்பந்தப்பட்ட அனைத்து நடைமுறைகளையும், கட்டுப்பாடுகளையும் வங்கி மீளாய்வு செய்கின்றது. இவை மறுபுறம் உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் தொடர்ச்சியான அடிப்படையின் வடிவமைப்பு, உறுதிப்பாடு மற்றும் வினைத்திறன் என்பவற்றுக்கென அவதானிக்கப்பட்டு, பரீட்சிக்கப்படுகின்றன. உள்ளகக் கணக்காய்வு திணைக்களத்தின் முடிவுகள் சபை கணக்காய்வு கமிட்டிக்கு, அக்கமிட்டியின் ஒழுங்கான கூட்டங்களில் மீளாய்வு செய்யப்படுவதற்கென சமர்ப்பிக்கப்படுகின்றன. வங்கியினால் பிரயோகிக்கப்பட்ட செயன்முறையை மட்டுமே இந்த மதிப்பீடு உள்ளடக்குவதுடன், அதன் துணை நிறுவனங்கள் மற்றும் இணை நிறுவனங்கள் என்பவற்றினால் மேற்கொள்ளப்பட்ட செயன்முறைகளை உள்ளடக்கவில்லை.

- சபையின் கணக்காய்வு கமிட்டி உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் ஒட்டுமொத்த வினைத்திறனை கண்காணிப்பதுடன், பணிப்பாளர் சபைக்கு ஒழுங்கான அடிப்படையில் அறிக்கையிட்டு வருகின்றது. இக்கமிட்டி பயன்படுத்தி வரும் முக்கியமான செயன்முறைகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன: ஒழுங்கான அடிப்படையிலான வணிக மற்றும் செயற்பாட்டு இடர் மதிப்பீடுகள் உள்ளகக் கணக்காய்வு மற்றும் இணங்கியொழுகல் என்பவற்றை உள்ளடக்கிய பிரதான இடர்த் துறைகளின் தலைமை அதிகாரிகளிடமிருந்து ஒழுங்கான அடிப்படையில் அறிக்கைகளை பெற்றுக் கொள்ளல் உள்ளக கணக்காய்வு அறிக்கைகளை மீளாய்வு செய்து, மேற்கொண்டு நடவடிக்கை எடுத்தல் வெளிக் கணக்காய்வு அறிக்கைகள் ஒழுங்குமுறைப்படுத்தல் அறிக்கைகள் - வெளி கணக்காய்வு அறிக்கைகள், விவேகபூர்வமான மீளாய்வுகள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தும் அறிக்கைகள். சபையின் கணக்காய்வு கமிட்டி வங்கியின் மீது தாக்கத்தை எடுத்து வரும் பிரதான இடர்த் துறைகளின் நிலவரத்தை தொடர்ச்சியாக மீளாய்வு செய்து வருவதுடன், பயன்படுத்தப்பட்டு வரும் தணிப்பு செயற்பாடுகள் பொருத்தமானவையா என்பதனையும் கவனத்தில் எடுக்கின்றது.

- வருடாந்த கணக்குகளை தயாரிப்பதற்கான வங்கியின் நிதிசார் அறிக்கையிடல் செயன்முறை, இலங்கை கணக்கீட்டு தர நியமங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட அறிக்கையிடல் தேவைகள் குறித்த படிவ முறைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் என்பவற்றை அடிப்படையாக கொண்டு உருவாக்கப்பட்ட ஆவணப்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளை பயன்படுத்தி, கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றது. இலங்கை கணக்கீட்டு தரநியமங்கள் மற்றும் இலங்கை நிதிசார் அறிக்கையிடல் தரநியமங்கள் என்பவற்றை கொண்டுள்ள புதிய இலங்கை கணக்கீட்டு தரநியமங்களை பயன்படுத்திய முதலாவது வருடமாக நடப்பு வருடம் இருந்து வருவதனால் அங்கீகாரம், அளவீடு, வகைப்படுத்தல் மற்றும் வெளிப்படுத்துகை என்பன தொடர்பான புதிய தேவைகளுடன் இணங்கியொழுகும் செயல்முறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.


உறுதிப்படுத்தல்

மேலே குறிப்பிடப்பட்ட செயன்முறைகளின் அடிப்படையில் வங்கியின் நிதிசார் அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடு நிதிசார் அறிக்கையிடலின் நம்பகத் தன்மை தொடர்பான நியாயமான உத்தரவாதமொன்றை வழங்கும் விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதனையும், வெளி நோக்கங்களுக்கான நிதிசார் கூற்றுக்களின் தயாரிப்பு இலங்கை கணக்கீட்டு தரநியமங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தும் தேவைகள் என்பவற்றின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதனையும் பணிப்பாளர் சபை உறுதிப்படுத்துகின்றது.


கூற்றுக்கள் குறித்த வெளிக் கணக்காய்வாளர்களின் மீளாய்வு

2012 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான வங்கியின் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்த மேலே குறிப்பிடப்பட்ட உள்ளக கட்டுப்பாடு தொடர்பான பணிப்பாளர்களின் அறிக்கையை வெளிக் கணக்காய்வாளர்கள் மீளாய்வு செய்திருந்ததுடன், வங்கியின் உள்ளக கட்டுப்பாட்டு முறையின் வடிவமைப்பு மற்றும் வினைத்திறன் என்பன குறித்த மீளாய்வில் சபையினால் பின்பற்றப்படும் செயன்முறை குறித்த தமது புரிந்துணர்வுக்கு ஒவ்வாத விதத்தில் எதனையும் இந்த அறிக்கை கொண்டிருக்கின்றது என நம்புவதற்கு எந்தவொரு விடயமும் தமது கவனத்திற்கு வரவில்லை என்பதனை சபைக்கு அறிக்கையிட்டுள்ளார்கள்.

சபைக்காகவும் சபை சார்பிலும்,



ஜெஹான் பி. அமரதுங்க
சபை கணக்காய்வு கமிட்டி தலைவர்



விசாகா அமரசேகர
பணிப்பாளர்



தர்மா என். கம்மம்பில
பணிப்பாளர்

மார்ச் 15, 2013

சுதந்திரமான உத்தரவாத அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இல
My No. FB/G/PB/FA/2012(02)

ඔබේ අංකය
உமது இல
Your No.

දිනය
திகதி
Date மார்ச் 22, 2013

மக்கள் வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகள் குறித்த பணிப்பாளர்களின் கூற்று தொடர்பாக பணிப்பாளர் சபைக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் உத்தரவாத அறிக்கை

அறிமுகம்

மக்கள் வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பாக 2012 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான வங்கியின் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கும் பணிப்பாளர்களின் கூற்றுக்கு ("கூற்று") உத்தரவாதம் அளிக்கும் பொருட்டு இந்த அறிக்கை வெளியிடப்படுகின்றது. இந்த உத்தரவாத செயற்பாட்டை மேற்கொள்வதில் தொழிலில் ஈடுபட்டு வரும் பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றின் உதவி எனக்குக் கிடைத்தது.

முகாமைத்துவத்தின் பொறுப்பு

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் 2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கித்-தொழில் சட்டத்தின் பணிப்புரையின் பிரிவு 3(8)(ii)(ஆ) க்கு இணங்கிய விதத்தில் வெளியிடப்பட்டிருக்கும் "உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான பணிப்பாளர்களின் கூற்றை தயாரிப்பதற்கான வங்கிகளின் பணிப்பாளர்-களுக்கான வழிகாட்டுதலின்" பிரகாரம், இக்கூற்றின் தயாரிப்பு மற்றும் சமர்ப்பணம் என்பவற்றுக்கான பொறுப்பினை முகாமைத்துவம் கொண்டுள்ளது.

எனது பொறுப்புக்கள் மற்றும் உத்தரவாதப்-படுத்தல் செயற்பாடுகள் தொடர்பான இலங்கை தர நியமம் (SLSAE) 3050 க்கு இணங்கியொழுகுதல்

மேற்கொள்ளப்பட்டிருக்கும் வேலைகளை அடிப்படையாகக் கொண்டு இக்கூற்றின் மீது பணிப்பாளர் சபைக்கு ஓர் அறிக்கையை வெளியிடுவதே எனது பொறுப்பாகும். இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட உள்ளகக் கட்டுப்பாடுகள் குறித்த பணிப்பாளர்களின் அறிக்கை தொடர்பாக வங்கிகளுக்கு உத்தரவாத அறிக்கைகளை வழங்குவது குறித்த தரநியமம் 3050 இன் பிரகாரம் நான் இவ்வேலையை மேற்கொண்டேன்.

மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் சாராம்சம்

பணிப்பாளர்களினால் அல்லது பணிப்பாளர்-களுக்கென தயாரிக்கப்பட்ட ஆவணங்களின் சான்றினை இக்கூற்று கொண்டுள்ளதா என்பதனையும், வங்கிக்கான உள்ளகக் கட்டுப்பாட்டு முறையை மீளாய்வு செய்வதில் பணிப்பாளர்கள் பின்பற்றி வந்திருக்கும் செயன்முறையை பொருத்தமான விதத்தில் பிரதிபலிக்கின்றதா என்பதனையும் மதிப்பிடுவதற்கென எனது மீளாய்வு மேற்கொள்ளப்-பட்டது (தயவு செய்து பின்னிணைப்பு I I பார்க்கவும்).

மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகள், பிரதானமாக வங்கி ஆளணியினரிடம் நடத்தப்பட்ட விசாரணைகள் மற்றும் பணிப்பாளர் சபையினால் பின்பற்றப்பட்ட செயன்முறைக்கு ஆதரவளிக்கும் ஆவணங்களை மாதிரி அடிப்படையில் பரீட்சித்தல் என்பவற்றுக்கு வரையறுக்கப்பட்டிருந்தன.

உத்தரவாத செயற்பாடுகள் குறித்த இலங்கை தர நியமம் 3050 இன் பிரகாரம், இக்கூற்று அனைத்து விதமான நட்டவச்சங்களையும், கட்டுப்பாடுகளையும் உள்ளடக்குகின்றதா என்பதனை கவனத்தில் எடுக்க வேண்டிய தேவை அல்லது வங்கியின் நட்டவச்ச மற்றும் கட்டுப்பாட்டு நடைமுறைகளின் வினைத்திறன் குறித்த ஓர் அபிப்பிராயத்தை உருவாக்கிக் கொள்ளும் தேவை எனக்கு இருந்து வரவில்லை. மேலும், தர நியமம் 3050 இன் பிரகாரம், ஆண்டறிக்கையில் வெளிப்படுத்திக் காட்டியிருக்கும் எத்தகைய முக்கியமான பிரச்சினைகளினதும் உள்ளகக் கட்டுப்பாட்டினை இங்கு விளக்கியிருக்கும் செயன்முறையின் மூலம் நிவர்த்திக்க முடியுமா என்பதனை கவனத்தில் எடுக்க வேண்டிய தேவையும் எனக்கு இருந்து வரவில்லை.

முடிவுரை

மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் நோக்கும் பொழுது, ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கும் கூற்று, வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டின் வடிவமைப்பு மற்றும் வினைத்திறன் என்பவற்றை மீளாய்வு செய்வதற்கென பணிப்பாளர் சபை பின்பற்றியிருக்கும் செயன்முறையை நான் புரிந்து கொண்டிருக்கும் விதத்துடன் பொருத்தமற்றது என்பதனை நம்புவதற்கான எந்தவொரு விடயமும் எனது கவனத்துக்கு எட்டவில்லை.

எச்.ஏ.எஸ். சமரவீர
கணக்காய்வாளர் நாயகம்

අංක 306/72 පොල්දූව පාර,
බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව

இல. 306/72, பொல்துவ வீதி,
பத்தரமுல்லை இலங்கை

No.306/72, Polduwa Road,
Battaramulla , Sri Lanka

දුරකථනය
தொலைபேசி
Telephone 2887028 - 34

ෆැක්ස් අංකය
பக்ஸ் இல
Fax No. 2887223

ඉලෙක්ට්‍රොනික් තැපෑල්
ஈ- மெயில்
E-mail. oaggov@sltnet.lk

பின்னிணைப்பு I

1. தாம் மேற்கொள்ளவிருக்கும் கூற்றுக்கு ஆதரவளிப்பதற்கென பணிப்பாளர்களால் அல்லது அவர்களுக்கென தயாரிக்கப்பட்ட ஆவணம் மீளாய்வு செய்யப்பட்டது.

2. தலைமை அலுவலக மட்டத்திலும், கிளை மட்டத்திலும் மாதிரி அடிப்படையில் கட்டுப்பாடுகள் குறித்த பரீட்சிப்பு சுதந்திரமான விதத்தில் மேற்கொள்ளப்பட்டது.

3. பணிப்பாளர் சபை மற்றும் சம்பந்தப்பட்ட சங்கங்கள் என்பவற்றின் கூட்டங்கள் தொடர்பான குறிப்புக்கள் மீளாய்வு செய்யப்பட்டன.

4. உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான பணிப்பாளர்களின் கூற்று மீளாய்வுகுட்படுத்-தப்படும் வருடத்தை உள்ளடக்குகின்றதா என்ற விடயமும், அதன் மூலம் தோன்றக் கூடிய எவையேனும் முக்கியமான விவகாரங்களை இணங்காண்பதற்கென போதியளவிலான செயன்முறைகள் இருந்து வருகின்றனவா என்ற விடயமும் கவனத்தில் எடுக்கப்பட்டது.

5. ஏனைய போதியளவிலான பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகள் இருந்து வரும் என நியாயமான விதத்தில் எதிர்பார்க்க முடியாத சந்தர்ப்பங்களில், உள்ளகக் கட்டுப்பாடு குறித்த கூற்று தொடர்பான விடயங்கள் குறித்து பணிப்பாளர்களிடமிருந்து எழுத்து மூலமான சமர்ப்பணங்கள் பெறப்பட்டன.

கண்டறியப்பட்ட விடயங்கள் மற்றும் நிறுவன ஆளுகை தொடர்பான அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல / My No. FB/G/PB/FA/2012(02)

ඔබේ අංකය / உமது இல / Your No.

දිනය / திகதி / Date மார்ச் 22, 2013

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டிருக்கும் நிறுவன ஆளுகைக்கு இணங்கியொழுகும் தேவை குறித்து மக்கள் வங்கியின் கண்டறியப்பட்ட விடயங்கள் தொடர்பாக மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபைக்கு கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

ஆளுகை தொடர்பான பணிப்பாளர் சபையின் அறிக்கையின் பின்னிணைப்பு 1 இல் எடுத்து விளக்கப்பட்டிருக்கும் நடைமுறைகளை நான் மேற்கொண்டுள்ளேன். இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டிருக்கும் நிறுவன ஆளுகை தொடர்பான இணங்கியொழுகுதல் தேவைகளை நிறைவேற்றி வைக்கும் பொருட்டு இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டு, சமர்ப்பிக்கப்படுகின்றது. ஏற்றுக் கொள்ளப்பட்ட நடைமுறைகள் தொடர்பாக பிரயோகிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட சேவைகள் தொடர்பான இலங்கை தரநியமங்களின் (SLSRS 4400) கோட்பாடுகளின் பிரகாரம் இப்பணி மேற்கொள்ளப்பட்டது. நிறுவன ஆளுகை பணிப்புரை தேவைகளுக்கு இணங்கியொழுகுவதற்கு உங்களுக்கு உதவுவதற்காக மட்டுமே இந்த நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. இதனை மேற்கொள்வதில் தொழில் புரிந்து வரும் பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றின் உதவி எனக்குக் கிடைத்தது. நான் கண்டறிந்த விடயங்களை இந்த அறிக்கையின் பின்னிணைப்பில் இணைத்துள்ளேன்.

மேலே உள்ள நடைமுறைகள், இலங்கை கணக்காய்வு தரநியமங்கள் அல்லது மீளாய்வு செயற்பாடுகள் தொடர்பான இலங்கை தரநிய-மங்கள் என்பவற்றின் பிரகாரம் மேற்கொள்-ளப்பட்ட ஒரு கணக்காய்வாகவோ அல்லது ஒரு மீளாய்வாகவோ இருந்து வரவில்லை. அதன் காரணமாக, இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டிருக்கும் நிறுவன ஆளுகை பணிப்புரைகளுடன் இணங்கியொழுகுவது குறித்து நான் இங்கு எவ்வித உத்தரவாதத்தையும் வழங்கவில்லை.

இலங்கை கணக்காய்வு தரநியமங்கள் அல்லது மீளாய்வு செயற்பாடு தொடர்பான இலங்கை தரநியமங்கள் என்பவற்றின் பிரகாரம் நான் மேலதிக நடைமுறைகளை மேற்கொண்டிருந்தால் அல்லது ஒரு கணக்காய்வை அல்லது மீளாய்வை மேற்கொண்டிருந்தால் உங்களுக்கு அறிக்கையிடப்பட்டிருக்கக் கூடிய ஏனைய விடயங்கள் எனது கவனத்திற்கு வந்திருக்கும்.

எனது அறிக்கை இந்த அறிக்கையின் முதலாவது பகுதியில் எடுத்து விளக்கப்பட்டிருக்கும் நோக்கத்திற்காகவும், உங்கள் தகவல்களுக்காகவும் மட்டுமே தயாரிக்கப்படுகின்றது. வேறு எந்தவித நோக்கத்திற்காகவும் அது பயன்படுத்தப்படக் கூடாது; அல்லது வேறு எவரேனும் தரப்பினருக்கு அது விநியோகிக்கப்படக் கூடாது.

இந்த அறிக்கை மேலே குறித்துரைக்கப்பட்ட உருப்படிகள் தொடர்பாக மட்டுமே முன்வைக்கப்படுவதுடன், ஒட்டுமொத்தமாக மக்கள் வங்கியின் எந்தவொரு நிதிசார் கூற்றுக்கும் அது விரிவுப்படுத்தப்படவில்லை.

எச்.ஏ.எஸ். சமரவீர
கணக்காய்வாளர் நாயகம்

අංක 306/72 පොල්දූව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone 2887028 - 34
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපෑල් / ஈ- மெயில் / E-mail. oaggov@sltnet.lk

கண்டறியப்பட்ட விடயங்கள் தொடர்பான அறிக்கைக்கான பின்னிணைப்பு

குறிப்பு: கீழே குறிப்பிடப்பட்ட இலக்கமிடல், இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டிருக்கும் 2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பணிப்புரையின் 'பிரிவு 3' க்கு உடனொத்த வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. பிரிவு 1 மற்றும் 2 என்பன இந்த ஆவணத்திற்கு பொருத்தமற்றவையாகும்.

பிரிவு	மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகள்	இணங்கியொழுகப்பட்டது	இணங்கியொழுகப்படவில்லை	கி/வி	குறிப்பு
3 (1)	**சபையின் பொறுப்புக்கள்**				
3 (1) (i)	சபை வங்கியின் பாதுகாப்பு மற்றும் உறுதி நிலை என்பவற்றை பலப்படுத்தியுள்ளது என்பதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்கென இணங்கிய நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.				
	• சபை ஒப்புதல், வங்கியின் உபாய ரீதியான குறிக்கோள்கள் மற்றும் நிறுவன விழுமியங்கள் பரீட்சிக்கப்பட்டன.	இணங்கியொழுகப்பட்டது			சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட உபாய ரீதியான திட்டம் அவதானிக்கப்பட்டது. சபை பத்திர இல. 372/2012 மற்றும் சபை குறிப்பு இல. 3/2012 என்பவற்றுக்கூடாக அதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.
	• வங்கியின் உபாய ரீதியான குறிக்கோள்கள், நிறுவன விழுமியங்கள் வங்கி முழுவதிலும் தொடர்பாடல் செய்யப்பட்டுள்ளது என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கியொழுகப்பட்டது			யுக்திகள் சம்பந்தப்பட்ட கிளை முகாமையாளர்களுக்கு சுற்றிக்கைகள் ஊடாக தெரிவிக்கப்படுகின்றன. இந்த நடைமுறை 'உபாய ரீதியான அமுலாக்கல் அலகு' இனால் மேற்கொள்ளப்படுகின்றது.
	• வங்கியின் ஒட்டுமொத்த வணிக யுக்திக்கான சபையின் ஒப்புதல் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கியொழுகப்பட்டது			சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட உபாய ரீதியான திட்டம் அவதானிக்கப்பட்டது. சபை பத்திர இல. 372/2012 மற்றும் சபை குறிப்பு இல. 15/2012 என்பவற்றுக்கூடாக அதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.
	• ஒட்டுமொத்த வணிக யுக்தி இடர்க் கொள்கை, இடர் முகாமைத்துவ நடைமுறைகள் மற்றும் பொறிமுறைகள் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது என்பதும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன என்பது பரீட்சிக்கப்பட்டுள்ளது.	இணங்கியொழுகப்பட்டது			இந்த அம்சங்கள் ஒப்புதலளிக்கப்பட்ட உபாய ரீதியான திட்டத்தில் கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளன.
	• ஒட்டுமொத்த வணிக யுக்தி குறைந்தபட்சம் அடுத்து வரும் மூன்று ஆண்டுகள் தொடர்பாக அளவிடத்தக்க குறிக்கோள்களை கொண்டுள்ளது என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கியொழுகப்பட்டது			அளவிடத்தக்க குறிக்கோள்கள் உபாய ரீதியான திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.
	• சபையினால் இனங்காணப்பட்டிருக்கும் இடர் முகாமைத்துவம் செய்வதற்கான பொருத்தமான முறைகள் விவேகபூர்வமானவை என்ற விடயமும் பொருத்தமான விதத்தில் அமுல்படுத்தப்பட்டுள்ளது என்ற விடயமும் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கியொழுகப்பட்டது			இவ்விடயங்களை தீர்த்து வைப்பதற்கென 'சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ கமிட்டி' காலத்துக்கு காலம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மேலும், இது தொடர்பான அறிக்கைகளை பரிசீலனை செய்வதன் மூலமும் இது அவதானிக்கப்பட்டது. எனவே, இது தொடர்பாக பொருத்தமான முறை இருந்து வருகின்றது என்பதனை எம்மால் உறுதிப்படுத்த முடியும். (சபை பத்திர இல. 142/2012 மற்றும் 363/2012 மற்றும சபை குறிப்பு இல. 9, 13)

பிரிவு	மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகள்	இணங்கி யொழுகப்-பட்டது	இணங்கி யொழுகப் படவில்லை	கி/வி	குறிப்பு
	• வைப்புதாரர்கள், கடன் கொடுப்பவர்கள், பங்குதாரர்கள் மற்றும் கடன் எடுப்பவர்கள் ஆகியோரை உள்ளடக்கிய விதத்தில் பங்கீடுபாட்டாளர்களுடன் தொடர்பாடலை மேற்கொள்வதற்கான தொடர்பாடல் கொள்கை ஒன்றுக்கு சபை ஒப்புதலளித்து, அதை அமுல் செய்துள்ளது என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கி-யொழு-கப்பட்டது			தொடர்பாடல் குறித்த உபாய ரீதியான கொள்கை அவதானிக்கப்பட்டது. அதற்குசபை பத்திர இல. 194/2012 மற்றும் 148/2012 என்பவற்றுக்கூடாக ஒப்புதல் அளிக்கப்பட்டிருந்தது. சபை குறிப்புக்கள் முறையே இல. 6 மற்றும் 3 என்பனவாகும்.
	• வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகள் மற்றும் முகாமைத்துவ தகவல்கள் முறைமைகள் என்பவற்றின் போதிய தன்மை மற்றும் நாணயம் என்பவற்றையும் வங்கி மீளாய்வு செய்துள்ளது என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கி-யொழு-கப்பட்டது			உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் உள்ளக தகவல் முறை என்பவற்றின் போதிய தன்மை மற்றும் நாணயம் என்பன சபையினால் மீளாய்வு செய்யப்-பட்டது. (சம்பந்தப்பட்ட சபை பத்திரங்கள் அவதானிக்கப்பட்டன. உம்: சபை பத்திர இல. 391/2012)
	• இலங்கை கணக்கீட்டுத் தர நியமங்களின் பிரகாரம் முதன்மை முகாமைத்துவ ஆளணியினரை இனங்கண்டு பதவியில் அமர்த்தியுள்ளது எனிற விடயம் பரீட்சிக்கப்-பட்டது. அவர்கள் பின்வரும் நிலையில் இருந்து வருகின்றார்கள்: i. கொள்கையின் மீது கணிசமான அளவு செல்வாக்கு செலுத்துதல்; (ii) நடவடிக்கைகளை நெறிப்படுத்துதல்; மற்றும் (iii) வணிக நடவடிக்கைகள், செயற்பாடுகள் மற்றும் இடர் முகாமைத்துவம் என்பவற்றின் மீது கட்டுப்பாட்டை பிரயோகித்தல்	இணங்கி-யொழு-கப்பட்டது			'நியமனக் கமிட்டி' குறிப்பு அவதானிக்கப்பட்டன. குறிப்பு இல. 7/2012.
	• முதன்மை முகாமைத்துவ ஆளணியினர் சபையின் கொள்கைக்கு இணங்கிய விதத்தில் வங்கியின் விவகாரங்களை பொருத்தமான விதத்தில் மேற்கொள்வதனை சபை மேற்பார்வை செய்துள்ளது என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கி-யொழு-கப்பட்டது			இது நிதிசார் செயலாற்றுகை மீளாய்வு மற்றும் உள்ளகக் கணக்காய்வு கமிட்டிக்கூடாக கவனத்தில் எடுக்கப்பட்டிருந்தது. சபை பத்திரங்கள் மற்றும் குறிப்புக்களை நாம் அவதானித்தோம். உம்: (சபை பத்திர இல. 50/2012 மற்றும் 1/2012. குறிப்பு இல 1 மற்றும் 2)
	• சபை பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் மற்றும் முதன்மை முகாமைத்துவ ஆளணியினர் ஆகியோரின் அதிகாரத் துறைகள் மற்றும் முதன்மை பொறுப்புக்கள் என்பவற்றை வரையறை செய்திருந்த விடயம் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கி-யொழு-கப்பட்டது			நாங்கள் அவதானித்த வரையில், ஒவ்வொரு பணிப்பாளர் தொடர்பாகவும் முதன்மை பொறுப்புக்கள் ஆவணப்படுத்தப்பட்டிருக்க வில்லை. ஆனால் பணிப்பாளர்கள், உப கமிட்டிகளுக்கு நியமனம் செய்யப்பட்டிருந்தார்கள்.இது அவர்கள் இன்னமும் முதன்மையான பொறுப்புக்களை கொண்டுள்ளார்கள் என்பதனை காட்டுகின்றது. முதன்மையான பொறுப்புக்கள் மற்றும் அதிகாரம் என்பவற்றுக்கு மக்கள் வங்கிச் சட்டத்தின் பிரிவு 7.1 இல் வரைவிலக்கணம் வழங்கப்பட்டுள்ளது.
	• பணிப்பாளர் சபையின் சொந்த ஆளுகை நடைமுறைகளின் வினைத்திறனை சபை காலத்துக்கு காலம் மதிப்பிட்-டுள்ளது என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது. அது பின்வருவனவற்றையும் உள்ளடக்குகின்றது: (i) பணிப்பாளர்கள் மற்றும் முதன்மை முகாமைத்துவ ஆளணியினர் ஆகியோரின் தெரிவு, நியமனம் மற்றும் தேர்ந்தெடுத்தல்; (ii) நலன்களின் மோதல்களை முகாமைத்துவம் செய்தல்; மற்றும் (iii) பலவீனங்களை நிர்ணயம் செய்தலும் தேவையான இடங்களில் மாற்றங்களை அமுல் செய்தல்	இணங்கி-யொழு-கப்பட்டது			பணிப்பாளர் சபையின் தெரிவுகள், நியமனங்கள் மற்றும் தேர்ந்தெடுத்தல் என்பன மக்கள் வங்கிச் சட்டத்தின் கீழ் நிதியமைச்சரினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆளுகை நடைமுறை குறித்த மதிப்பீடு சபை பத்திர இல. 49/2012 குறிப்பு இல. 01 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரிவு	மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகள்	இணங்கியொழுகப்பட்டது	இணங்கியொழுகப்படவில்லை	கி/வி	குறிப்பு
	• முதன்மை முகாமைத்துவ ஆளணியினருக்கு வெற்றியை நோக்கிய திட்டமொன்று சபையினால் வழங்கப்பட்டுள்ளது என்பது பரீட்சிக்கப்பட்டது.	இணங்கியொழுகப்பட்டது			பெரும்பாலான முதன்மையான பதவிகளுக்கு பொருத்தமான ஆளணியினர் இனங்காணப்பட்டுள்ளனர். வங்கி தற்பொழுது வெற்றியை நோக்கிய திட்டமொன்றை உருவாக்கும் செயன்முறையில் ஈடுபட்டுள்ளது. சபை பத்திர இல. 279/2012 மற்றும் குறிப்பு இல. 9.
	• கொள்கைகளை மீளாய்வு செய்வதற்கும், தொடர்பாடல் வழிமுறைகளை ஸ்தாபித்துக் கொள்வதற்கும், நிறுவன குறிக்கோள்களின் முன்னேற்றத்தை கண்காணிப்பதற்கும் சபை முதன்மை முகாமைத்துவ ஆளணியினருடன் ஒழுங்கான அடிப்படையில் கூட்டங்களை நடத்தி வரும் என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கியொழுகப்பட்டது			அந்த அட்டவணை இருந்து வருவதுடன், அந்த அட்டவணைக்கு இணங்கிய விதத்தில் கூட்டங்கள் நடத்தப்பட்டு வந்துள்ளன என்பதனை நாங்கள் அவதானித்துள்ளோம்..
	• ஒழுங்குமுறைப்படுத்தல் சூழலை புரிந்து கொள்வதற்கும், வங்கி ஒழுங்குமுறைப்படுத்துனர் களுடன் தாக்கமான ஓர் உறவினை பராமரித்து வருவதற்கும் வங்கி நடவடிக்கைகளையும் செயன்முறைகளையும் கொண்டுள்ளது என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டுள்ளது.	இணங்கியொழுகப்பட்டது			'சபை கணக்காய்வு கமிட்டி' இது தொடர்பாக வங்கிக்கு உதவுகின்றது. உம்: சபை பத்திர இல. 66/2012 மற்றும் குறிப்பு இல. 02 இது தொடர்பாக வங்கியை பிரதிநிதித்துவம் செய்யும் இணங்கியொழுகும் அதிகாரி ஒருவர் இருந்து வருகின்றார்.
	• வெளிக் கணக்காய்வாளர்களை வாடகைக்கு அமர்த்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் என்பவற்றுக்கான செயன்முறையை சபை கொண்டுள்ளது என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.			கி/வி	1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இல. மக்கள் வங்கிச் சட்டத்தின் தேவையின் பிரகாரம் இந்நடைமுறை மேற்கொள்ளப்படுகின்றது,
3 (1) (ii)	சபை தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோரை நியமனம் செய்துள்ளது என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டுள்ளது.	இணங்கியொழுகப்பட்டது			தலைவர் நிதியமைச்சரினால் நியமனம் செய்யப்பட்டுள்ளார். பிரதம நிறைவேற்று அதிகாரி நியமனக் கமிட்டியொன்றுக்கூடாக சபையினால் நியமனம் செய்யப்பட்டுள்ளார். தற்போதைய பிரதம நிறைவேற்று அதிகாரி சபை குறிப்பு இல. 05/2011 கீழ் நியமனம் செய்யப்பட்டார்.
	தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோரின் கருமங்கள் மற்றும் பொறுப்புக்கள் இப்பணிப்புரைகளின் பணிப்புரை 3(5) க்கு இணங்கிய விதத்தில் இருந்து வருகின்றது என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கியொழுகப்பட்டது			பணிப்புரை 3(5) இன் கீழ் அவதானிக்கப்பட்ட பெறுபேற்றை தயவுசெய்து பார்க்கவும்.
3 (1) (iii)	வங்கி ஒழுங்கான அடிப்படையில் கூடியுள்ளது என்றவிடயமும் குறைந்தது வருடத்தின் போது பன்னிரெண்டு தடவைகள் மாதாந்த இடைவெளிகளில் கூட்டங்களை நடத்தி வந்துள்ளது என்ற விடயமும் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கியொழுகப்பட்டது			சபை குறிப்புக்கள் பரீட்சிக்கப்பட்டன. 2012 ஆம் ஆண்டின் போது சபை 18 கூட்டங்களை நடத்தியிருந்தது. பணிப்பாளர்களின் 'வருகை பதிவேடு' அவதானிக்கப்பட்டது.

பிரிவு	மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகள்	இணங்கி யொழுகப் பட்டது	இணங்கி யொழுகப் படவில்லை	கி/வி	குறிப்பு
3 (1) (iv)	சம்பந்தப்பட்ட விடயங்கள் மற்றும் முன்மொழிவுகள் வங்கியின் வணிக மேம்பாடு மற்றும் இடர் முகாமைத்துவம் என்பற்றுடன் சம்பந்தப்பட்டிருக்கும் பொழுது நிகழ்ச்சி நிரலில் இருக்கும் விடயங்கள் மற்றும் யோசனைகளை ஒழுங்கான சபை கூட்டங்களில் உள்ளடக்கிக் கொள்வதற்கு அனைத்து பணிப்பாளர்களையும் இயங்கச் செய்யும் ஒரு நடைமுறை இருந்து வருகின்றது என்பதை சபை பரீட்சித்துள்ளது.	இணங்கி-யொழு-கப்பட்டது			சபை பத்திரங்கள் மற்றும் சபை பத்திரங்களுக்-கூடாக சமர்ப்பிக்கப்பட்ட வணிக மேம்பாடுகள் தொடர்பான முன்மொழிவுகள் பரீட்சிக்கப்பட்டன.
3 (1) (v)	பணிப்பாளர்கள் அனைவரும் சமூகமளிப்பதற்கான வாய்ப்பினை வழங்கும் பொருட்டு, ஒழுங்காக நடத்தப்படும் ஒரு சபைக் கூட்டம் தொடர்பான அறிவித்தல் குறைந்தது ஏழு நாட்களுக்கு முன்னர் விடுக்கப்படுவதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான நடைமுறைகளை சபை கொண்டுள்ளது என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது. ஏனைய அனைத்து சபை கூட்டங்கள் தொடர்பாகவும் நியாயமான அறிவித்தல் வழங்கப்பட்டது.	இணங்கி-யொழு-கப்பட்டது			இது சபையின் செயலாளரினால் கையொப்பமிடப்பட்ட கடிதம் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.
3 (1) (vi)	நேர் முன்னதாக உள்ள பன்னிரெண்டு மாதக் காலப் பிரிவின் போது குறைந்தது மூன்றில் இரண்டு பங்கு சமூகமளித்திராது விட்டால் அல்லது முன்னராக தொடர்ச்சியாக இடம்பெற்ற மூன்று கூட்டங்களில் சமூகமளித்திரா விட்டால் பணிப்பாளர்-கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது. எனினும், ஒரு மாற்று பணிப்பாளருக்கூடாக பணிப்பாளர் சபை கூட்டங்களில் பங்கேற்பது சமூகமளிப்பாக ஏற்றுக் கொள்ளப்படும்.	இணங்கி-யொழு-கப்பட்டது			தேவைப்படும் விதத்தில் பணிப்பாளர்கள் கூட்டங்களில் பங்கேற்றுள்ளார்கள் பணிப்பாளர்களின் வருகைப் பதிவுவேடுகள் அவதானிக்கப்பட்டன.
3 (1) (vii)	1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 43 இன் ஏற்பாடுகளை பூர்த்தி செய்யும் கம்பெனி செயலாளர் ஒருவரை வங்கி நியமனம் செய்துள்ளது என்ற விடயமும், சபை மற்றும் பங்குதாரர் கூட்டங்களின் போது செயலாளர் சேவைகளை கையாளுதல், நியதிச் சட்டங்களிலும் ஏனைய ஒழுங்குவிதிகளிலும் குறித்துரைக்கப்பட்டிருக்கும் ஏனைய கருமங்களை மேற்கொள்ளல் என்பன அவருடைய முதன்மை பொறுப்புக்களாக இருந்து வருகின்றன என்ற விடயமும், சபை அத்தகைய செயலாளர் ஒருவரை நியமனம் செய்துள்ளது என்ற விடயமும் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கி-யொழு-கப்பட்டது			நியமனம் செய்யப்பட்ட நபரின் பெயர் திரு. ரொஹான் பத்திரகே. அவர் ஒரு சட்டத்தரணியாவார்.
3 (1) (viii)	பணிப்பாளர்கள் அனைவரும் கம்பெனி செயலாளரிடமிருந்து ஆலோசனை மற்றும் சேவைகள் என்பவற்றை பெற்றுக் கொண்டுள்ளனர் என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டுள்ளது.	இணங்கி-யொழு-கப்பட்டது			அனைத்து பணிப்பாளர்களும் கம்பனி செயலாளரை தாராளமாக அணுகி ஆலோசனை மற்றும் சேவைகளை பெற்றுக் கொள்ள முடியும்.
3 (1) (ix)	கம்பெனி செயலாளர் சபை கூட்டங்களின் குறிப்புக்களை பராமரித்து வருவதும், எந்தவொரு பணிப்பாளரும் நியாயமான அறிவித்தலை வழங்குவதன் பேரில், அத்தகைய குறிப்புக்களை எந்தவொரு நியாயமான நேரத்திலும் பரிசீலனை செய்ய முடியும் என்ற விடயமும் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கி-யொழு-கப்பட்டது			சபை குறிப்புப் புத்தகம் அவதானிக்கப்பட்டது. அது பரிசோதனைக்கென கம்பனி செயலாளரிடம் வைக்கப்பட்டுள்ளது.
3 (1) (x)	ஒரு சபை கூட்டத்தின் குறிப்புக்கள் பின்வரும் விடயங்களை தெளிவாக உள்ளடக்கியிருக்கின்றன அல்லது குறிப்பிடுகின்றன என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கி-யொழு-கப்பட்டது			இந்த ஒழுங்குவிதிகளின் கீழ் தேவைப்படும் தகவல்கள் பராமரிக்கப்படும் சபை குறிப்புக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பிரிவு	மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகள்	இணங்கியொழுகப்-பட்டது	இணங்கியொழுகப் படவில்லை	கி/வி	குறிப்பு
	• அதன் கலந்தாராய்வுகளில் சபையினால் பயன்படுத்தப்பட்ட தரவுகள் மற்றும் தகவல்கள் என்பவற்றின் ஒரு சாராம்சம்;				
	• சபையினால் கருத்தில் கொள்ளப்பட்ட விடயங்கள்				
	• விடயங்களை கண்டறியும் கலந்துரையாடல்கள் மற்றும் இணக்கம் மற்றும் இணங்க மறுத்தல் பிரச்சினைகள்; சபை அதன் கடமைகள் உரிய கவனத்துடனும், விவேகத்-துடனும் மேற்கொண்டு வந்துள்ளதா என்பதனை இவை எடுத்துக் காட்ட முடியும்;				
	• சபையின் உத்திகள் மற்றும் கொள்கைகள் என்பவற்றுக்கு இணங்கியொழுகியிருப்பதனை யும், சம்பந்தப்பட்ட சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றை அனுசரித்திருப்பதனை எடுத்துக் காட்டும் சம்பந்தப்பட்ட விடயங்கள்.				
	• வங்கி எதிர்கொண்டு வரும் இடர்களை புரிந்து கொள்ளல் மற்றும் பின்பற்றப்பட்ட இடர் முகாமைத்துவ வழிமுறைகளின் ஒரு மீளாய்வு; மற்றும்				
	• முடிவுகள் மற்றும் சபை தீர்மானங்கள்				
3 (1) (xi)	நியாயமான வேண்டுகோளில் பேரில், பணிப்பாளர்கள் பொருத்தமான சந்தர்ப்ப சூழ்நிலைகளில் வங்கியில் செலவில் சுயாதீனமான தொழில்சார் ஆலோசனைகளை பெற்றுக் கொள்வதற்கு பணிப்பாளர் சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு நடைமுறை இருந்து வருகின்றது என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கி-யொழு-கப்பட்டது			பணிப்பாளர்கள் சுயாதீனமான தொழில்சார் ஆலோசனைகளை பெற்றுக் கொள்வதற்கான ஒரு நடைமுறை இருந்து வருகின்றது. (சம்பந்தப்பட்ட சபை பத்திரம் இல. 343/2011 அவதானிக்கப்பட்டது)
3 (1) (xii)	பணிப்பாளர்கள் மோதல்களை தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு அல்லது மோதல்கள் தென்படுவதனை தவிர்த்துக் கொள்வது தொடர்பாக அவற்றை நிர்ணயித்து அறிக்கையிட்டு, தீர்த்து வைத்து பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்து வருவதற்கான ஒரு நடைமுறை இருந்து வருகின்றது என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கி-யொழு-கப்பட்டது			இது தொடர்பாக இலங்கை மத்திய வங்கியின் பணிப்புரைகள் மற்றும் மக்கள் வங்கியின் நிறுவன ஆளுகை தொடர்பான மிகச் சிறந்த நடைமுறைக் கோவைகள் பின்பற்றப்பட்டுள்ளன.
	ஒரு பணிப்பாளர் அல்லது அவரது நெருங்கிய உறவினர் எவரேனும் அல்லது அந்த பணிப்பாளர் கணிசமான அக்கறையை கொண்டிருக்கும் நிறுவனம் தொடர்பான சபை தீர்மானமொன்று மேற்கொள்ளப்படும் பொழுது அந்தப் பணிப்பாளர் வாக்களிப்பதிலிருந்து தவிர்த்து கொண்டுள்ளார் என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டுள்ளது.	இணங்கி-யொழு-கப்பட்டது			அத்தகைய நபர் நடப்பெண்ணிக்கை தொடர்பாக கணிக்கப்படவில்லை.
	சபைக் கூட்டத்தில் அவர் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிநிரல் தொடர்பாக நடப்பெண்ணுக்கென கணிக்கப்பட்டுள்ளார் என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கி-யொழு-கப்பட்டது			அத்தகைய நபர் நடப்பெண்ணிக்கை தொடர்பாக கணிக்கப்படவில்லை.
3 (1) (xiii)	வங்கியின் நெறிப்படுத்தல், கட்டுப்பாடு என்பன உறுதியாக அதன் அதிகாரத்தின் கீழ் இருந்து வருகின்றதென்பதனை இனங்கண்டு கொள்ளும் பொருட்டு சபை அதன் முடிவுக்கென விசேடமாக ஒதுக்கப்பட்டிருக்கும் விவகாரங்களில் முறையான ஒரு பட்டியலை கொண்டுள்ளது என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கி-யொழு-கப்பட்டது			சபையினால் பராமரிக்கப்பட்டு வரும் முறையான ஒரு பட்டியல் உள்ளது. சபை குறிப்புக்கள் பரீட்சிக்கப்பட்டன.

பிரிவு	மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகள்	இணங்கி யொழுகப்-பட்டது	இணங்கி யொழுகப் படவில்லை	கி/வி	குறிப்பு
3 (1) (xiv)	வங்கி, அதன் கடப்பாடுகளை நிறைவேற்றி வைக்க முடியாத நிலையை அடையும் பொழுது அல்லது வங்குரோத்து நிலையை அடையவிருக்கும் பொழுது அல்லது வைப்புதாரர்கள் மற்றும் ஏனைய கடன் கொடுத்தோர் ஆகியோருக்கு செலுத்த வேண்டிய கொடுப்பனவுகளை இடைநிறுத்தவிருக்கும் பொழுது, அதற்கான நடைமுறைகளை சபை கவனத்தில் எடுத்து வந்தால், இது தொடர்பாக ஏதேனும் தீர்மானத்தை அல்லது நடவடிக்கையை மேற்கொள்வதற்கு முன்னர், வங்கியின் நிலை குறித்து சபை உடனடியாக வங்கி மேற்பார்வை கண்காணிப்பாளர்களுக்கு தெரிவித்தது என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.			கி/வி	நாங்கள் அவதானித்த வரையில், சபை குறிப்புக்களின் மீளாய்வுக் கூடாக அத்தகைய நிலைமையொன்று காணப்படவில்லை.
3 (1) (xv)	நாணய சபையினால் அவசியப்படுத்தப்பட்டிருக்கும் மட்டங்களில் சபை வங்கியை மூலதனப்படுத்தியுள்ளது என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கி-யொழு-கப்பட்டது			இது வரைவு நிதிச்சார் கூற்றுக்கள் தொடர்பாக இணங்கியொழுகப்பட்டுள்ளது.
3 (1) (xvi)	வங்கி அதன் ஆண்டறிக்கையில், இந்த மூன்று பணிப்புரைகளுக்கும் இணங்கியொழுகுவதனை எடுத்துக் காட்டும் விவரங்களை வருடாந்த நிறுவன ஆளுகை அறிக்கையில் வெளியிடும் என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கி-யொழு-கப்பட்டது			ஒரு நிறுவன ஆளுகை அறிக்கை 2011 ஆண்டறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது. அதே நடைமுறை 2012 ஆம் ஆண்டறிக்கை தொடர்பாகவும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும்.
3 (1) (xvii)	சபை ஒவ்வொரு பணிப்பாளர் தொடர்பாகவும் வருடாந்தம் ஒரு சுய மதிப்பீட்டுத் திட்டத்தை மேற்கொள்வதுடன், அந்த மதிப்பீடுகள் தொடர்பான பதிவுகளை பராமரித்து வருகின்றது என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கி-யொழு-கப்பட்டது			2012 ஆம் வருடத்தில் பணிப்பாளர்களால் மேற்-கொள்ளப்பட்ட சுய மதிப்பீட்டு பரீட்சிக்கப்பட்டது. சபை பத்திர இல. 4/2012 குறிப்பு 01 என்பவற்றின் கீழ் விபரங்கள் பரீட்சிக்கப்பட்டன.
3 (2)	**சபையின் உள்ளடக்கம்**				
3 (2) (i)	சபையில் இருக்கும் பணிப்பாளர்களின் எண்ணிக்கை 7 க்கு குறையாமலும் 13 மேற்படாமலும் இருந்து வருகின்றது என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கி-யொழு-கப்பட்டது			வங்கி 9 பணிப்பாளர்களை கொண்டிப்பதுடன், வருடத்தின் போது இந்த உள்ளடக்கம் பராமரிக்கப்பட்டு வந்துள்ளது. சபை குறிப்புக்கள் மற்றும் 2011 ஆண்டுக்கான ஆண்டறிக்கை அவதானிக்கப்பட்டது. (பக்கம் இல. 20 - 22)
3 (2) (ii)	(அ) பிரதம நிறைவேற்று அதிகாரி பதவியை வகித்து வரும் பணிப்பாளர் தவிர்ந்த ஏனைய பணிப்பாளர் ஒருவரின் மொத்த சேவைக் காலம் 9 வருடங்களுக்கு மேற்படவில்லை என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கி-யொழு-கப்பட்டது			பணிப்பாளர்கள் பணிப்பாளர் பதவியில் 9 வருடங்களுக்கு மேல் இருந்து வரவில்லை என்ற விடயத்தை நாங்கள் அவதானித்துள்ளோம். பணிப்பாளர்களின் சுய மதிப்பீட்டு படிவங்கள் அவதானிக்கப்பட்டன. (பணிப்பாளர்கள் அனைவரும் 2007க்கு முன்னர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.) சபை பத்திரம் - 49/2012
	(ஆ) எவரேனும் பணிப்பாளர் ஒருவர் 9 வருடத்திற்கு மேல் செயற்பட்டு வரும் நிலையில் நிலைமாற்ற ஏற்பாடுகள் பிரயோகிக்கப்பட்டுள்ளது என்பதனை பரீட்சித்தல்.			கி/வி	நாங்கள் மேலே அவதானித்தவாறு எந்தவொரு பணிப்பாளரும் பணிப்பாளர் பதவியில் 9 வருடங்களுக்கு மேல் செயற்பட்டு வரவில்லை.

பிரிவு	மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகள்	இணங்கியொழுகப்பட்டது	இணங்கியொழுகப் படவில்லை	கி/வி	குறிப்பு
3 (2) (iii)	பிரதம நிறைவேற்று அதிகாரியையும் உள்ளிட்ட நிறைவேற்று பணிப்பாளர்களில் எண்ணிக்கை, வங்கியின் பணிப்பாளர்களின் எண்ணிக்கையின் 3 இல் ஒரு பங்கை மிகைத்திருக்கவில்லை என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கியொழுகப்பட்டது			அனைத்து பணிப்பாளர்களும், நிறைவேற்று தரம் சாராத பணிப்பாளர்களாக இருந்து வருவதுடன், 1961 ஆம் ஆண்டு 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் பிரிவு 8 இன் கீழ் நிதியமைச்சரினால் நியமனம் செய்யப்படுகின்றனர்.
3 (2) (iv)	சபை ஆகக் குறைந்தது மூன்று சுயாதீனமான நிறைவேற்று தரம் சாராத பணிப்பாளர்களை அல்லது மொத்த பணிப்பாளர்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கினரை எது உயர்வாக இருக்கின்றதோ அத்தொகையை கொண்டுள்ளது என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கியொழுகப்பட்டது			அனைத்து பணிப்பாளர்களும் நிறைவேற்று தரம் சாராத பணிப்பாளர்களாக இருந்து வருகின்றனர். வழங்கப்பட்டிருக்கும் பிரதிநிதித்துவத்தின் பிரகாரம் பணிப்பாளர்கள் சுதந்திரமானவர்களாக இருந்து வருகின்றனர்.
	நிறைவேற்று தரம் சாராத பணிப்பாளர்கள் பின்வரும் நிலைமைகளில் இருந்து வந்தால் சுதந்திரமான பணிப்பாளராக கருதப்படுவாரா என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது:				
	● வங்கியில் 1% க்கு மேற்பட்ட பங்குகளை நேரடியாக அல்லது மறைமுகமாக வைத்திருத்தல்			கி/வி	2011 ஆண்டறிக்கையின் பிரகாரம் பணிப்பாளர்கள் வங்கியில் எத்தகைய பங்குகளையும் கொண்டிருக்கவில்லை.
	● தற்பொழுது அல்லது பணிப்பாளராக நியமனம் செய்யப்படுவதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்னைய காலப் பிரிவின் போது இங்கு பணிப்புரை 3 (7) இல் விபரிக்கப்பட்டிருக்கும் வங்கியின் ஒழுங்குமுறை மூலதனத்தின் 10% க்கு மேற்பட்ட ஏதேனும் வர்த்தக கொடுக்கல் வாங்கல்களில் சம்பந்தப்பட்டுள்ளாரா, சம்பந்தப்பட்டிருந்தாரா?			கி/வி	பணிப்பாளர்கள் நிதியமைச்சரினால் நியமனம் செய்யப்பட்டிருந்தனர். 2011 ஆம் ஆண்டறிக்கையின் பிரகாரம், அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் எவையும் இருந்து வரவில்லை.
	● ஒரு பணிப்பாளராக நியமனம் செய்யப்படுவதற்கு முன்னைய 2 வருட காலப் பிரிவின் போது வங்கியில் சேவையில் அமர்த்தப்பட்டிருந்தார்;			கி/வி	பணிப்பாளர்கள் நிதியமைச்சரினால் நியமனம் செய்யப்பட்டிருந்தனர்.
	● ஒரு பணிப்பாளராக, பிரதம நிறைவேற்று அதிகாரியாக, முதன்மை முகாமைத்துவ ஆளணியின் ஓர் உறுப்பினராக, வங்கியில் பொருள்சார் பங்குதாரராக அல்லது மற்றொரு வங்கியின் பங்குதாரராக இருந்து வரும் ஓர் உறவினரை கொண்டிருந்தார், கொண்டிருக்கின்றார். ("நெருங்கிய உறவினர்" என்பதன் பொருள் வாழ்க்கைத் துணை அல்லது நிதி ரீதியில் தங்கியிருக்கும் ஒரு பிள்ளை என்பதாகும்);			கி/வி	பணிப்பாளர்களின் நியமனம் 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் பிரிவு 8 இன் கீழ் நிதியமைச்சரினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
	● வங்கியின் குறித்துரைக்கப்பட்ட பங்கீடுபாட்டாளர் ஒருவரை பிரதிநிதித்துவம் செய்கின்றார்.			கி/வி	பணிப்பாளர்கள் நிதியமைச்சரினால் நியமனம் செய்யப்பட்டிருந்தனர்.
	● பின்வரும் விதத்திலான ஒரு கம்பெனியில் அல்லது வணிக நிறுவனத்தில் ஒரு ஊழியராக அல்லது பணிப்பாளராக அல்லது பொருள்சார் பங்குதாரராக இருந்து வருகின்றார்: - அந்த கம்பனி தற்பொழுது வங்கியுடன் இந்தப் பணிப்புரைகளில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு வங்கியின் ஒழுங்குமுறை மூலதனத்தின் 10% க்கு மேற்பட்ட கொடுக்கல் வாங்கல்களை கொண்டுள்ளது; அல்லது			கி/வி	2011 ஆண்டறிக்கையின் அடிப்படையில் நாங்கள் அத்தகைய விடயங்களை இனங்கண்டிருக்கவில்லை.

பிரிவு	மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகள்	இணங்கி யொழுகப்-பட்டது	இணங்கி யொழுகப் படவில்லை	கி/வி	குறிப்பு
	• அக்கம்பெனியில் ஏனைய வங்கியின் பணிப்பாளர்கள் எவரேனும் தொழிலில் அமர்த்தப்பட்டுள்ளனர்; அல்லது பணிப்பாளராக இருந்து வருகின்றனர்; அல்லது பொருள்சார் பங்குதாரராக இருந்து வருகின்றனர்; அல்லது				2011 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை பரீட்சிக்கப்-பட்டதுடன், வங்கியின் ஒழுங்குமுறை மூலதனத்தின் 10% ஐ மிகைத்துச் செல்லும் வணிகக் கொடுக்கல் வாங்கல்கள் இருந்து வரவில்லை. தரப்பட்டிருக்கும் விளக்கத்தின் பிரகாரம் அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் காணப்படவில்லை.
	• அதில் வங்கியின் வேறு எவரேனும் பணிப்பாளர் ஒருவர் இப்பணிப்புரைகளின் பணிப்புரை 3 (7) இல் எடுத்து விளக்கப்பட்டுள்ளவாறு வங்கியின் ஒழுங்குமுறை மூலதனத்தின் 10% க்கு மிகைப்படாத கொடுக்கல் வாங்கலை கொண்டுள்ளனர்.				
3 (2) (v)	அத்தகைய சந்தர்ப்பத்தில் சுதந்திரமான பணிப்பாளரை பிரதிநிதித்துவம் செய்வதற்கென மாற்று பணிப்பாளர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருந்தார். மாற்றுப் பணிப்பாளர் தொடர்பாக பிரயோகிக்கத்தக்க அளவுகோலை பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா எனப் பார்ப்பதற்கு அவ்வாறு நியமனம செய்யப்பட்ட நபர் குறித்து பரீட்சிக்கப்பட்டது.			கி/வி	வருடத்தின் போது மாற்றுப் பணிப்பாளர்கள் எவரும் நியமனம் செய்யப்படவில்லை.
3 (2) (vi)	வங்கி சுதந்திரமான பணிப்பாளர்களை நியமனம் செய்யும் செயன்முறை ஒன்றை கொண்டுள்ளது என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கி-யொழு-கப்பட்டது			பணிப்பாளர்களின் நியமனங்கள் 1961 இன் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் பிரிவு 8 இன் பிரகாரம் நிதியமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றது.
3 (2) (vii)	வங்கியின் குறித்துரைக்கப்பட்ட நடப்பெண் பணிப்பாளர்களில் 50% க்கு மேற்பட்டவர்களை உள்ளடக்குகின்றது என்பதனையும், இந்த நடப்பெண்ணில் 50% க்கும் மேற்பட்டவர்கள் நிறைவேற்று தரம் சாராத பணிப்பாளர்களாக இருந்து வரவேண்டும் என்ற விடயமும் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கி-யொழு-கப்பட்டது			வங்கியின் குறித்துரைக்கப்பட்ட நடப்பெண் 5 ஆகும்; அது நிறைவேற்று தரம் சாராத 5 பணிப்பாளர்களை மட்டுமே கொண்டுள்ளது.
3 (2) (viii)	பணிப்பாளர்களின் வகையின் அடிப்படையில் தலைவர், நிறைவேற்று பணிப்பாளர்கள், நிறைவேற்று தரம் சாராத பணிப்பாளர்கள் மற்றும் சுதந்திரமான நிறைவேற்று தரம் சாராத பணிப்பாளர்கள் ஆகியோரின் பெயர்களை உள்ளிட்ட விதத்தில் வங்கி சபையின் உள்ளடக்கத்தை வருடாந்த நிறுவன ஆளுகை அறிக்கையில் வெளிப்படுத்துகின்றது என்ற விடயம் பரிட்சிக்கப்பட்டது.	இணங்கி-யொழு-கப்பட்டது			2011 ஆம் வருடத்திற்கான ஆண்டறிக்கை பரீட்சிக்கப்பட்டதுடன், வங்கி அதன் சபையின் உள்ளடக்கத்தை வெளிப்படுத்தியுள்ளது. (பக்க இலக்கங்கள். 20 - 22)
3 (2) (ix)	சபைக்கு புதிய பணிப்பாளர்களை நியமனம் செய்யும் செயன்முறை பரீட்சிக்கப்பட்டது.	இணங்கி-யொழு-கப்பட்டது			பணிப்பாளர்களின் நியமனம் 1961 இன் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் பிரிவு 8 இன் கீழ் நிதியமைச்சரினால் மேற்கொள்ளப்படுகின்றது.
3 (2) (x)	ஒரு சமயாசமய வெற்றிடத்தை நிரப்புவதற்கு நியமனம் செய்யப்படும் அனைத்து பணிப்பாளர்களும், அவர்களுடைய நியமனத்தின் பின்னர் இடம்பெறும் முதலாவது பொதுக் கூட்டத்தின் போது பங்குதாரர்களினால் தேர்தலில் தெரிவு செய்வதற்கு அமைவாக நியமனம் செய்யப்படுவார்கள் என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.			கி/வி	பணிப்பாளர்கள் மக்கள் வங்கிச் சட்டத்திற்கு இணங்கிய விதத்தில் நிதியமைச்சரினால் நியமனம் செய்யப்படுகின்றார்கள். ஆனால், இக் காலப் பிரிவின் போது அத்தகைய நியமனங்கள் எவையும் இடம்பெறவில்லை. (சபை குறிப்பு அவதானிக்கப்பட்டது)
3 (2) (xi)	ஒரு பணிப்பாளார் ராஜினாமா செய்தால் அல்லது பதவியிலிருந்து நீக்கப்பட்டால், சபை பின்வருவனவற்றை மேற்கொள்கின்றதா என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது:				

பிரிவு	மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகள்	இணங்கியொழுகப்-பட்டது	இணங்கியொழுகப் படவில்லை	கி/வி	குறிப்பு
	• பணிப்பாளரின் ராஜினாமாவை அல்லது பதவி நீக்கத்தை அல்லது அத்தகைய இராஜினாமாவுக்கான அல்லது பதவி நீக்கத்திற்கான காரணங்களையும் அறிவித்தல்; சம்பந்தப்பட்ட பணிப்பாளர் வங்கியுடன் ஏதேனும் கருத்து வேறுபாடுகளை கொண்டிருந்தால் அது சம்பந்தப்பட்ட தகவல்களுக்கு மட்டும் இது வரையறுக்கப்படுவதில்லை; மற்றும்			கி/வி	இக்காலப் பிரிவின் போது பணிப்பாளர் எவரேனும் ராஜினாமா செய்யவில்லை; அல்லது பதவி நீக்கம் செய்யப்படவில்லை.
	• பங்குதாரர்களின் கவனத்திற்கு எடுத்து வரப்பட வேண்டிய ஏதேனும் விடயங்கள் இருக்கின்றனவா அல்லது இல்லையா என்பதை உறுதிப்படுத்தும் ஒரு கூற்றை வெளியிடுதல்.			கி/வி	இக்காலப் பிரிவின் போது எவரேனும் பணிப்பாளர் ராஜினாமா செய்யவில்லை அல்லது பதவி நீக்கம் செய்யப்படவில்லை.
3 (2) (xii)	வங்கியொன்றின் பணிப்பாளர் அல்லது ஊழியர் ஒருவர் மற்றொரு வங்கியின் ஒரு பணிப்பாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளாரா, தெரிவு செய்யப்பட்டுள்ளாரா அல்லது பெயர் குறிப்பிடப்பட்டுள்ளாரா என்பதனை இனங்கண்டு கொள்வதற்கான ஒரு செயன்முறை இருக்கின்றதா என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கி-யொழு-கப்பட்டது			வங்கி மிகச் சிறந்த நடைமுறை குறித்த இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டுதல்களை பின்பற்றுகின்றது. மக்கள் வங்கியின் நிறுவன ஆளுகையின் மிகச் சிறந்த நடத்தைக் கோவையை நாங்கள் அவதானித்தோம்.
3 (3)	**பணிப்பாளர்களின் பொருத்தப்பாடு மற்றும் தகுதி என்பவற்றை மதிப்பிடுவதற்கான அளவுகோல்**				
3 (3) (i)	பணிப்பாளராக செயற்படும் ஒரு நபரின் வயது 70 வருடங்களை தாண்டியிருக்கவில்லை என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கி-யொழு-கப்பட்டது			2012 ஆம் வருடம் தொடர்பாக பணிப்பாளர்களால் மேற்கொள்ளப்பட்ட சுய மதிப்பீடு பரீட்சிக்கப்பட்டது. 70 வயதை தாண்டிய பணிப்பாளர்கள் எவரும் இருந்து வரவில்லை. மேலும், 2012 ஜூலை 27 திகதியிடப்பட்ட சபை கூட்ட இல. 11/2012 க்கூடாக சபை இதனை உறுதிப்படுத்துவதனை நாம் அவதானித்தோம். பிரிவுகள் 9.2.
	(அ) நிலைமாற்ற ஏற்பாட்டுக்கு இணங்கியொழுகப்-பட்டுள்ளதா என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.			கி/வி	மேலே கூறப்பட்ட பெறுபேறுகளின் பிரகாரம் அத்தகைய பணிப்பாளர்கள் இருந்து வரவில்லை.
3 (3) (ii)	ஒரு நபர் வங்கியின் துணை நிறுவனங்கள் அல்லது இணை கம்பெனிகள் என்பவற்றையும் உள்ளடக்கிய விதத்தில் 20 க்கு மேற்பட்ட கம்பெனிகளில்; அமைப்புக்-களில்; நிறுவனங்களில் ஒரு பணிப்பாளராக பதவி வகித்து வருகின்றாரா என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கி-யொழு-கப்பட்டது			2012 ஆம் வருடம் தொடர்பாக பணிப்பாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட சுயமதிப்பீடு மீளாய்வு செய்யப்பட்டது.
3 (4)	**சபையினால் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கும் முகாமைத்துவ கருமங்கள்**				
3 (4) (i)	பகிர்ந்தளிப்பு ஏற்பாடுகளுக்கு சபையினால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதா என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கி-யொழு-கப்பட்டது			அதிகார பகிர்ந்தளிப்பு ஏற்பாடுகள் சபையினால் நிறைவேற்று கடன் கமிட்டி இல. 0085/2012 கீழ் 2012 பெப்ரவரி 19 இல் சயினால் ஒப்புதல் வழங்கப்பட்டிருந்தது.

பிரிவு	மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகள்	இணங்கி யொழுகப்-பட்டது	இணங்கி யொழுகப் படவில்லை	கி/வி	குறிப்பு
3 (4) (ii)	அத்தகைய செயற்பாடுகள் பகிர்ந்தளிக்கப்படும் சந்தர்ப்பங்களிலும் கூட 3 (1) (i) குறிப்பிடப்பட்டிருக்கும் விடயங்கள் தொடர்பாக சபை பொறுப்பேற்றுள்ளதா என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டுள்ளது.	இணங்கி-யொழு-கப்பட்டது			குறிப்புக்களின் மீளாய்வுக்கூடாக வங்கி விடயங்களை பொறுப்புடன் கலந்துரையாடியுள்ளது என்ற விடயம் அவதானிக்கப்பட்டது.
3 (4) (iii)	அதிகார பகிர்ந்தளிப்புக்கள் செயன்முறை வங்கியின் தேவைகளுக்கு பொருந்தக் கூடியதாக இருந்து வருகின்றதென்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு சபை அதிகார பகிர்ந்தளிப்பு செயன்முறைகளை காலத்துக்கு காலம் மீளாய்வு செய்து வருகின்றது என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கி-யொழு-கப்பட்டது			அதிகார பகிர்ந்தளிப்புக்கள் செயன்முறையை சபை காலத்துக்கு காலம் மீளாய்வு செய்துள்ளது.
3 (5)	**தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி**				
3 (5) (i)	தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோரின் வகி பாத்திரங்கள் புறம்பானவையாக இருந்து வருவதுடன், அவற்றை ஒரே நபர் மேற்கொள்ளவில்லை என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டுள்ளது.	இணங்கி-யொழு-கப்பட்டது			தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோரின் வகி பாத்திரங்கள் புறம்பானவையாக இருந்து வருவதுடன், ஒரே நபர் அவற்றை நிறைவேற்றி வைக்கவில்லை. மக்கள் வங்கியின் நிறுவன ஆளுகை தொடர்பான மிகச் சிறந்த நடைமுறைக்கான நடத்தைக் கோவையை நாம் அவதானித்தோம். (பிரிவு 2.23) அது இலங்கை மத்திய வங்கியின் மிகச் சிறந்த நடைமுறைகள் தொடர்பான வழிகாட்டுதல்களுக்கு இணங்கிய விதத்தில் இருந்து வருகின்றது.
3 (5) (ii)	தலைவர் நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளராக இருந்து வருகின்றார் என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கி-யொழு-கப்பட்டது			தலைவர் நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளராக இருந்து வருவதுடன், அவர் மக்கள் வங்கிச் சட்டத்தின் கீழ் நிதியமைச்சரினால் நியமனம் செய்யப்படுகின்றார்.
	தலைவர் ஒரு சுதந்திரமான பணிப்பாளராக இல்லாத சந்தர்ப்பத்தில், சபை பொருத்தமான விதத்தில் ஆவணப்படுத்தப்பட்ட குறிப்பு நியதிகளுடன் சிரேஷ்ட பணிப்பாளர் ஒருவரை சுதந்திரமான பணிப்பாளராக பெயர் குறித்துள்ளது என்ற விடயத்தை பரீட்சித்தல்.			கி/வி	கி/வி
	சிரேஷ்ட பணிப்பாளர் பதவி நியமனம் வங்கியின் ஆண்டறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதா என்ற விடயத்தை பரீட்சித்தல்			கி/வி	கி/வி
3 (5) (iii)	அதன் ஆண்டறிக்கையின் ஒரு பாகமாக இருந்து வரும் நிறுவன ஆளுகை அறிக்கையில் தலைவருக்கும், பிரதம நிறைவேற்று அதிகாரிக்கும் மற்றும் சபை உறுப்பினர்களுக்கிடையில் ஏதேனும் உறவுகள் (நிதிசார், வணிக குடும்ப அல்லது பொருள்சார்/சம்பந்தப்பட்ட உறவு/உறவுகள்) இருந்து வருகின்றனவா என்பதனையும் பணிப்பாளர்கள் சபை உறுப்பினர்களுக்கு மத்தியில் நிலவி வரும் உறவுகளையும் உள்ளடக்கிய விதத்தில் அத்தகைய உறவுகளின் இயல்பினை இனங்கண்டு வெளிப்படுத்துவதற்கு சபை ஒரு செயன்முறையைக் கொண்டுள்ளதா என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கி-யொழு-கப்பட்டது			திட்டவட்டமான ஒரு செயன்முறை இருந்து விரவில்லை. இது தொடர்பாக வங்கியினால் இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டுதல்கள் பின்பற்றப்படுகின்றன.

பிரிவு	மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகள்	இணங்கியொழுகப்பட்டது	இணங்கியொழுகப் படவில்லை	கி/வி	குறிப்பு
3 (5) (iv)	சபைக்கு ஒரு சுய மதிப்பீட்டு செயன்முறை உள்ளது என்பது என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது. தலைவர்: ● வங்கிக்கு தலைமைத்துவத்தை வழங்குதல் வேண்டும். ● சபை தாக்கமான விதத்தில் செயற்படுவதனையும், அதன் பொறுப்புக்களை நிறைவேற்றி வைப்பதனையும் உறுதிப்படுத்துதல் வேண்டும். ● அனைத்து முதன்மையான மற்றும் பொருத்தமான பிரச்சினைகளும் உரிய கால அடிப்படையில் சபையினால் கலந்துரையாடப்படுவதனை உறுதிப்படுத்த வேண்டும்.	இணங்கியொழுகப்பட்டது			ஆம், 2012 ஆம் வருடம் தொடர்பான வருடாந்த சுய மதிப்பீட்டு செயன்முறை குறிப்பு இல. 01/2012 மற்றும் சபை பத்திர இல. 49/2012 இன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
3 (5) (v)	தலைவரின் ஒப்புதலளிக்கப்பட்ட முறையான நிகழ்ச்சி நிரல் கம்பனி செயலாளரினால் சுற்றுக்கு விடப்பட்டுள்ளது என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கியொழுகப்பட்டது			அனைத்து சபைக் கூட்டங்களுக்கும் இனங்காணப்பட்ட விடயங்களை உள்ளடக்கிய முறையான ஒரு நிகழ்ச்சி நிரல் உள்ளது. பணிப்பாளர்கள் தமது யோசனைகளை நிகழ்ச்சி நிரலில் உட்படுத்திக் கொள்ளக் கூடிய செயன்முறையொன்றுக்கும் பணிப்பாளர் சபை ஒப்புதல் வழங்கியுள்ளது.
3 (5) (vi)	சபைக் கூட்டங்களின் போது எழுப்பப்படும் பிரச்சினைகள் குறித்து அனைத்து பணிப்பாளர்களுக்கும் உரிய நேரத்திலான சமர்ப்பணங்களுக்கூடாக பொருத்தமான விதத்தில் தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றன என்பதனை தலைவர் உறுதிப்படுத்திக் கொள்கிறார் என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கியொழுகப்பட்டது			சபைக் குறிப்புக்கள் மற்றும் சபை பத்திரங்கள் பரீட்சிக்கப்பட்டன. சபை கூட்டங்களில் எழுப்பப்படும் பிரச்சினைகள் குறித்து பணிப்பாளர்களுக்கு பொருத்தமான விதத்தில் விளக்கமளிக்கப்படுகிறது.
3 (5) (vii)	சபையின் விவகாரங்களில் முழுமையான விதத்தில் முனைப்பான பங்களிப்பொன்றை வழங்குவதற்கு அனைத்து பணிப்பாளர்களுக்கும் சுயமதிப்பீட்டு செயன்முறையொன்றை சபை கொண்டிருப்பதுடன், வங்கியின் மிகச் சிறந்த நலனை கருத்தில் கொண்டு செயற்படுவதில் தலைவர் தலைமை ஏற்கும் விடயம் பரீட்சிக்கப்பட்டது.				ஆம், 2012 ஆம் வருடம் தொடர்பான வருடாந்த சுய மதிப்பீட்டு செயன்முறை குறிப்பு இல. 01/2012 மற்றும் சபை பத்திர இல. 49/2012 இன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
3 (5) (viii)	நிறைவேற்று தரம் சாராத பணிப்பாளர்களின் தாக்கமான பங்களிப்பை மதிப்பீடு செய்யும் ஒரு சுய மதிப்பு முறையை வங்கி கொண்டுள்ளது என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கியொழுகப்பட்டது			2012 ஆம் வருடம் தொடர்பான வருடாந்த சுய மதிப்பீட்டு செயன்முறை குறிப்பு இல. 01/2012 மற்றும் சபை பத்திர இல. 49/2012 இன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஒவ்வொரு பணிப்பாளரினாலும் சுய மதிப்பீட்டு படிவம் பூர்த்தி செய்யப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டுள்ளது)
3 (5) (ix)	முதன்மை முகாமைத்துவ ஆளணியினரை நேரடியாக மேற்பார்வை செய்யும் செயற்பாடுகளிலோ வேறு எவரேனும் நிறைவேற்று அதிகாரிகளின் கடமைகளிலோ தலைவர் ஈடுபடவில்லை என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கியொழுகப்பட்டது			முதன்மை முகாமைத்துவ ஆளணியினரை நேரடியாக மேற்பார்வை செய்யும் செயற்பாடுகளில் தலைவர் ஈடுபட்டிருக்கவில்லை.
3 (5) (x)	பங்குதாரர்களுடன் தாக்கமான விதத்தில் தொடர்பாடலை பராமரித்து வருவதற்கும், பங்குதாரர்களின் கருத்துக்கள் சபைக்கு தெரிவிக்கப்படுத்துவதற்கும் ஒரு செயன்முறை இருந்து வருகின்றது என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கியொழுகப்பட்டது			நாங்கள் அவதானித்த வரையில், பங்குதாரரின் வங்கியின் பிரதிநிதி (அரசாங்க பிரதிநிதி - திருமதி விசாகா அமரசேகர) ஒவ்வொரு சபை கூட்டத்திலும் பங்கேற்கிறார். சபை குறிப்புக்களை பரீசீலித்து வருகையை நாங்கள் அவதானித்துள்ளோம்.

பிரிவு	மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகள்	இணங்கி யொழுகப் பட்டது	இணங்கி யொழுகப் படவில்லை	கி/வி	குறிப்பு
3 (5) (xi)	பிரதம நிறைவேற்று அதிகாரி வங்கியின் நாளாந்த செயற்பாடுகள் மற்றும் முகாமைத்துவம் என்பவற்றுக்கு பொறுப்பாக இருந்து வரும் உச்ச மட்ட நிறைவேற்று அதிகாரியாக செயற்படுகின்றார் என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கி-யொழு-கப்பட்டது			மக்கள் வங்கியின் நிறுவன ஆளுகையின் மிகச் சிறந்த நடைமுறையின் பிரிவு 3 இன் கீழ் பிரதம நிறைவேற்று அதிகாரி வங்கியின் நாளாந்த செயற்பாடுகள் மற்றும் முகாமைத்துவம் என்பவற்றுக்கு பொறுப்பாக இருந்து வருதல் வேண்டும்.
3 (6)	**சபையினால் நியமனம் செய்யப்படும் கமிட்டிகள்**				
3 (6) (i)	3(6) (ii), 3(6) (iii), 3(6) (iv) மற்றும் 3(6) (v) பணிப்புரை-களில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளவாறு வங்கி ஆகக் குறைந்தது நான்கு சபை கமிட்டிகளை ஸ்தாபித்துள்ளது பரீட்சிக்கப்பட்டது.	இணங்கி-யொழு-கப்பட்டது			2011 ஆம் வருடத்திற்கான ஆண்டறிக்கை பரீட்சிக்கப்பட்டதுடன், அதன் பிரகாரம் சபையில் 6 உப கமிட்டிகள் இருந்து வருகின்றன: ● சபை கணக்காய்வு கமிட்டி ● சபை நிறைவேற்று கடன் கமிட்டி ● சபை மனித வளங்கள் மற்றும் சம்பள கமிட்டி ● சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ கமிட்டி ● சபை நியமன கமிட்டி ● சபை முதலீட்டு வங்கித்தொழில் கமிட்டி (பக்க இல. 155 - 156)
	ஒவ்வொரு சபை கமிட்டியினதும் அறிக்கை நேரடியாக சபைக்கு அறிக்கையிடப்பட்டுள்ளது என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கி-யொழு-கப்பட்டது			ஒவ்வொரு சபை உப கமிட்டியின் அறிக்கையும் நேரடியாக சபைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. அத்தகைய சபை கமிட்டிகளின் அறிக்கைகளை நாம் அவதானித்தோம்.
	வங்கி அதன் ஆண்டறிக்கையில் ஒவ்வொரு கமிட்டியினதும் கருமங்கள், வகி பாத்திரங்கள் மற்றும் செயலாற்றுகை தொடர்பான ஒரு அறிக்கையை சமர்ப்பிக்கின்றது என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கி-யொழு-கப்பட்டது			2011 ஆம் வருட மக்கள் வங்கியின் ஆண்டறிக்கையின் பக்கங்கள் 155 மற்றும் 156 என்பற்றின் பிரகாரம் வங்கி இத்தேவைக்கு இணங்கியொழுகியுள்ளது.
3 (6) (ii)	கணக்காய்வு கமிட்டி: ● கமிட்டியின் தலைவர் ஒரு சுயாதீனமான நிறைவேற்ற தரம் சாராத பணிப்பாளராக இருந்து வரும் விடயமும், தகைமைகளையும், சம்பந்தப்பட்ட அனுபவத்தையும் கொண்டிருக்கும் விடயமும் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கி-யொழு-கப்பட்டது			தலைவர் ஒரு சுயாதீனமான நிறைவேற்ற தரம் சாராத பணிப்பாளராவார். சபை கணக்காய்வு கமிட்டியின் தலைவர் தேவையான தகுதிகள் மற்றும் அனுபவத்தை கொண்டுள்ளார். (இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் இணை உறுப்பினர் மற்றும் நிதி மற்றும் முகாமைத்துவ துறையில் 24 வருட அனுபவம் பெற்றவர்.) (ஆண்டறிக்கை 2011 - பக்க இல. 20)
	● கமிட்டியின் அனைத்து உறுப்பினர்களும் நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர்கள் என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கி-யொழு-கப்பட்டது			வங்கியின் அனைத்து பணிப்பாளர்களும் சுயாதீனமான நிறைவேற்று தரம் சாராத பணிப்பாளர்களாக இருந்து வருவதுடன், 1961 இன் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் பிரிவு 8 இன் பிரகாரம் நிதியமைச்சரினால் நியமனம் செய்யப்படுகின்றனர்.

பிரிவு	மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகள்	இணங்கியொழுகப்பட்டது	இணங்கியொழுகப் படவில்லை	கி/வி	குறிப்பு
	• பின்வரும் விடயங்கள் தொடர்பாக கமிட்டி பரிந்துரைகள் செய்துள்ளது என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது:				
	• சம்பந்தப்பட்ட நியதிச் சட்டங்களுக்கு இணங்கியொழுகும் பொருட்டு வழங்கப்பட வேண்டிய கணக்காய்வுச் சேவைகளுக்கென வெளிக் கணக்காய்வாளர் ஒருவரை நியமனம் செய்தல்			கி/வி	1961 இன் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் பிரிவு 34 இல் உள்ளடக்கப்பட்டிருக்கும் ஏற்பாட்டின் பிரகாரம் வெளிக்கணக்காய்வாளர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். அந்த ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வாளர் நாயகம் 'வெளிக் கணக்காய்வாளராக' இருந்து வருகின்றார்.
	• இலங்கை மத்திய வங்கியினால் காலத்துக்கு காலம் கணக்காய்வாளர்களுக்கு வெளியிடப்படும் வழிகாட்டிகளை அமுல் செய்தல்;	இணங்கியொழுகப்பட்டது			வங்கியில் 'பிரதிப் பொது முகாமையாளர் இணங்கியொழுகல்' என அழைக்கப்படும் புறம்பான ஒரு அதிகாரி இருந்து வருகின்றார். மத்திய வங்கி வழிகாட்டுதல்களை அமுல் செய்வதற்கான பொறுப்பினை அவர் கொண்டுள்ளார். மேலும், மத்திய வங்கியில் புறம்பான அதிகாரி இருந்து வருவதுடன், அவர் வங்கியை பிரதிநிதித்துவம் செய்வதுடன், மத்திய வங்கியின் வழிகாட்டுதல்கள் குறித்து வங்கிக்கு பிந்திய தகவல்கள் வழங்குகின்றார்.
	• சம்பந்தப்பட்ட கணக்கீட்டு தர நியமங்களின் பிரகாரம் பிரயோகம்; மற்றும்	இணங்கியொழுகப்பட்டது			பிரதம உள்ளக கணக்காய்வாளர் மற்றும் நிதித் துறை தலைமை அதிகாரி ஆகியோர் இது தொடர்பான பொறுப்பினை கொண்டுள்ளார்கள்.
	• கணக்காய்வாளரின் சேவைக் காலம், கணக்காய்வு கட்டணம், ஏதேனும் ராஜினாமா அல்லது பதவி நீக்கம்; கணக்காய்வு பங்காளரின் பணி 5 வருடங்களுக்கு மேல் மேற்படாதிருத்தல் என்பதற்கு அமைவாகவும், சம்பந்தப்பட்ட கணக்காய்வு பணியாளர் முன்னைய பதவிக் காலம் முடிவடைந்த திகதியிலிருந்து 3 வருடங்கள் காலாவதியாவதற்கு முன்னர் மீண்டும் நியமனம் செய்யப்படக் கூடாதென்பதும்	இணங்கியொழுகப்பட்டது			1961 இன் 29 இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் பிரிவு 34 இல் உள்ளடக்கப்பட்டிருக்கும் ஏற்பாட்டின் பிரகாரம் வெளிக்கணக்காய்வாளர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். அந்த ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வாளர் நாயகம் 'வெளிக்கணக்காய்வாளராக' இருந்து வருகின்றார்.
	• கமிட்டி வெளிக் கணக்காய்வாளர்களிடமிருந்து அவர்களுடைய சுயாதீன தன்மை குறித்த கருத்துக்களை பெற்றுக் கொண்டிருப்பதுடன், கணக்காய்வு இலங்கை கணக்கீட்டுத் தரநியமங்களின் பிரகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.			கி/வி	வெளிக் கணக்காய்வாளர் 1961 இன் 29 இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் பிரிவு 34 இல் உள்ளடக்கப்பட்டிருக்கும் ஏற்பாட்டின் பிரகாரம் நியமனம் செய்யப்பட்டுள்ளார். பிரதம உள்ளக கணக்காய்வாளர் மற்றும் நிதித் துறை தலைமை அதிகாரி ஆகியோர் இது தொடர்பான பொறுப்பினை கொண்டுள்ளார்கள்.
	• வெளிக்கணக்காய்வாளர் ஒருவரின் சேவையை பெற்றுக் கொள்வது தொடர்பாக கமிட்டி ஒரு கொள்கையை அமுல் செய்துள்ளது என்ற விடயமும், சம்பந்தப்பட்ட ஒழுங்கு-விதிகளின் பிரகாரம் கணக்காய்வு சாராத சேவைகளை வழங்கி வருகின்றது என்ற விடயமும் பரீட்சிக்கப்பட்டுள்ளது.			கி/வி	வெளிக்கணக்காய்வாளர் 1961 இன் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் பிரிவு 34 இல் உள்ளடக்கப்பட்டிருக்கும் ஏற்பாட்டின் பிரகாரம் நியமனம் செய்யப்பட்டிருந்தார்.

பிரிவு	மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகள்	இணங்கியொழுகப்பட்டது	இணங்கியொழுகப்படவில்லை	கி/வி	குறிப்பு
	• கணக்காய்வை ஆரம்பிப்பதற்கு முன்னர் கமிட்டி வெளிக் கணக்காய்வாளர்களுடன் இலங்கை கணக்கீட்டு தரநியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் இயல்பு மற்றும் வீச்செல்லை என்பன குறித்து கலந்துரையாடி முடிவாக்கியுள்ளது என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.			கி/வி	1961 இன் 29 இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் பிரிவு 34 இல் உள்ளடக்கப்பட்டிருக்கும் ஏற்பாட்டின் பிரகாரம் வெளிக்கணக்காய்வாளர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
	• வெளிப்படுத்துகைக்கென தயாரிக்கப்பட்ட வங்கியின் நிதிசார் கூற்றுக்கள், அதன் கணக்குகள் மற்றும் காலாண்டு அறிக்கைகள் என்பவற்றை அவற்றின் நம்பத் தன்மையை கண்காணிக்கும் பொருட்டு வங்கியின் நிதிசார் தகவல்களை மீளாய்வு செய்வதற்கான ஒரு செயன்முறையை கமிட்டி கொண்டுள்ளது என்ற விடயமும், பிரதம நிதி அதிகாரியிடமிருந்து பின்வருவனவற்றைப் பெற்றுக் கொள்வதற்கான ஒரு செயன்முறையைக் கொண்டுள்ளது என்ற விடயமும் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கியொழுகப்பட்டது			வங்கி சபை கணக்காய்வு கமிட்டிக்கூடாக நிதிசார் தகவல்களை மீளாய்வு செய்துள்ளது. நாங்கள் பின்வரும் கணக்காய்வு கமிட்டி பத்திரங்கள் மற்றும் குறிப்புக்கள் என்பவற்றை பரீட்சித்ததுடன், அவை நிதிசார் தகவல்களை மீளாய்வு செய்துள்ளன.
	• பிரதான முடிவுத் துறைகள்;				சகக இல. - 12/2012
	• கணக்கீட்டுக் கொள்கைகள் நடைமுறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள்;				சபை குறிப்பு இல. - 03/2012
	• தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் தொழில் அனுமான எடுக்கோள்; மற்றும்				சகக இல.- 46/2012 சகு இல. - 09/2012
	• சம்பந்தப்பட்ட கணக்கீட்டு தரநியமங்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியான தேவைகளுக்கு இணங்கியொழுகுதல்; மற்றும்				
	• வருடாந்த நிதிசார் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்விலிருந்து தோன்றும் முக்கியமான சீராக்கங்கள்.				
	• கணக்காய்வு தொடர்பாக தோன்றும் ஏதேனும் பிரச்சினைகள் குறித்து கமிட்டி நிறைவேற்று முகாமைத்துவத்தின் பங்கேற்பின்றி வெளிக் கணக்காய்வாளர்களை சந்தித்துள்ளது என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.			கி/வி	வழங்கப்பட்ட விளக்கத்தின் பிரகாரம், 'சபை காணக்காய்வு கமிட்டி' இவ்வருடத்தின் போது அத்தகைய விடயங்கள் எழாத காரணத்தினால் வெளிக் கணக்காய்வாளர்களை சந்தித்திருக்கவில்லை.
	• வெளிக் கணக்காய்வாளரின் முகாமைத்துவ கடிதத்தையும், அதற்கான முகாமைத்துவத்தின் பதிலையும் மீளாய்வு செய்துள்ளது என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கியொழுகப்பட்டது			வழங்கப்பட்ட விளக்கத்தின் பிரகாரம், 2011 தொடர்பான முகாமைத்துவ கடிதத்தை 2012 டிசம்பர் மாதத்தில் சமர்ப்பித்துள்ளார். எனவே, மேற்படி முகாமைத்துவ கடிதம் இல. சகக 09/2013 இன் கீழ் சபைக்கு சமர்ப்பிக்கப்பட இருப்பதுடன், அது 2013 பெப்பரவரி 15 ஆந் திகதி 'சபை கணக்காய்வு கமிட்டியினால் கலந்துரையாடப்படும்

பிரிவு	மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகள்	இணங்கி யொழுகப்-பட்டது	இணங்கி யொழுகப் படவில்லை	கி/வி	குறிப்பு
	● வங்கியின் உள்ளகக் கணக்காய்வு கருமம் தொடர்பாக கமிட்டி பின்வரும் படிமுறைகளை மேற்கொள்ளும் என்பது பரீட்சிக்கப்பட்டது.				
	○ உள்ளகக் கணக்காய்வு திணைக்களத்தின் வீச்செல்லையின் போதிய தன்மை கருமங்கள் மற்றும் வளங்கள் என்பவற்றை மீளாய்வு செய்து, தனது வேலையை மேற்கொள்வதற்கென திணைக்களம் போதியளவிலான அதிகாரத்தை கொண்டுள்ளது என்பது குறித்து திருப்தியடைதல்;	இணங்கி-யொழு-கப்பட்டது			மக்கள் வங்கியின் உள்ளகக் கணக்காய்வு திணைக்களத்தின் திட்டத்தை நாங்கள் அவதானித்தோம். அது சகக இல. 57/2012 இன் கீழ் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் உள்ளகக் கணக்காய்வு திணைக்களத்தின் வீச்செல்லை,கருமம் மற்றும் வளங்கள் என்பவற்றை உள்ளடக்குகின்றது. BM No.- 10/2012 மேலும் நாங்கள் 'சபை காணக்காய்வு கமிட்டியின்' குறிப்பு நியதிகளையும் பரீட்சித்தோம்.
	○ உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் உள்ளகக் கணக்காய்வு செயன்முறையின் பெறுபேறுகள் என்பவற்றை மீளாய்வு செய்தல்; தேவை ஏற்படுமிடத்து உள்ளகக் கணக்காய்வு திணைக்களத்தின் பரிந்துரைகளின் பிரகாரம் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதனை உறுதிப்படுத்தல்;	இணங்கி-யொழு-கப்பட்டது			மக்கள் வங்கியின் உள்ளகக் கணக்காய்வு திணைக்களத்தின் திட்டத்தை நாங்கள் அவதானித்தோம். அது சகக இல. 57/2012 இன் கீழ் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. BM No.- 10/2012 'குறிப்பு நியதிகள்' பரீட்சிக்கப்பட்டன.
	○ உள்ளகக் கணக்காய்வு திணைக்களத்தின் தலைமை அதிகாரி மற்றும் சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் ஆகியோரின் செயலாற்றுகை குறித்த மதிப்பீடுகளை அல்லது கணிப்பீடுகளை மீளாய்வு செய்தல்;	இணங்கி-யொழு-கப்பட்டது			தலைமை அதிகாரி மற்றும் சிரேஷ்ட உத்தியோக-த்தர்களின் செயலாற்றுகை மதிப்பீடு குறித்த சபை குறிப்புக்களை நாங்கள் அவதானித்தோம். உம்: சகக இல. 06,0483
	○ தலைமை அதிகாரி, சிரேஷ்ட ஊழியர்கள், உள்ளகக் கணக்காய்வு கருமத்திற்கு வெளியிலிருந்து சேவைகளை வழங்கி வருவோர் ஆகியோரின் நியமனம் அல்லது பணி நீக்கம் என்பவற்றை பரிந்துரை செய்தல்;			கி/வி	வருடத்தின் போது உள்ளகக் கணக்காய்வு திணைக்கள ஊழியர்கள் தொடர்பாக எவையேனும் நியமனம் அல்லது பணி நீக்கம் குறித்து சபை எவ்வித பரிந்துரைகளையும் முன்வைக்கவில்லை.
	○ பிரதம உள்ளகக் கணக்காய்வாளரையும் உள்ளடக்கிய விதத்தில் உள்ளக கணக்காய்வுத் திணைக்களத்தின் சிரேஷ்ட ஊத்தியோகத்தர்கள் மற்றும் எவரேனும் வெளியிலிருந்து சேவைகள் பெறப்பட்ட உத்தியோகத்-தர்கள் ஆகியோரின் ராஜினாமாக்கள் குறித்து கமிட்டிக்கு எடுத்து விளக்கப்பட்டுள்ளது என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது; மேலும், பதவி விலகும் சிரேஷ்ட உத்தியோகத்தர்கள், வெளியிலிருந்து சேவைகளை பெறப்பட்டவர்கள் ஆகியோருக்கு தமது ராஜினாமாவுக்கான காரணங்களை சமர்ப்பிப்பதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டது என்ற விடயமும் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கி-யொழு-கப்பட்டது		கி/வி	இக்காலப் பிரிவின் போது சபையினால் அத்தகைய மதிப்பீடுகள் எவையும் மேற்கொள்ளப்பட வில்லை.
	○ உள்ளக கணக்காய்வு கருமம் அது கணக்காய்வு செய்யும் செயற்பாடுகளிலிருந்து சுயாதீனமாக இருந்த வருகின்றது என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.			கி/வி	சபை கணக்காய்வு கமிட்டியின் 'குறிப்பு நியதிகளின்' பிரகாரம் உள்ளக கணக்காய்வு கருமம் சுயாதீனமாக இருந்து வருகின்றது என்ற விடயம் அவதானிக்கப்பட்டது.

பிரிவு	மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகள்	இணங்கி யொழுகப்-பட்டது	இணங்கி யொழுகப் படவில்லை	கி/வி	குறிப்பு
	• உள்ளக புலனாய்வுகளின் முக்கியமான முடிவுகள் மற்றும் அவற்றுக்கான முகாமைத்துவத்தின் பதில்கள் குறித்த குறிப்புக்களை கமிட்டி கவனத்தில் எடுத்துள்ளதா என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கி-யொழு-கப்பட்டது			சபை உள்ளக புலனாய்வுகளின் முக்கியமான முடிவுகளை கவனத்தில் எடுத்திருந்ததுடன், சம்பந்தப்பட்ட கணக்காய்வு கமிட்டி பத்திரங்கள் மற்றும் குறிப்புக்கள் வருமாறு: சகக இல. 05/2012 BM இல. 01/2012 சகக இல. 29/2012 BM இல. 04/2012 சகக இல. 58/2012 BM இல. 10/2012
	• கமிட்டி நிறைவேற்று பணிப்பாளர்களின் பிரசன்னம் இல்லாமல் வெளிக் கணக்காய்வாளர்களுடன் குறைந்தது இரு சந்திப்புக்களை நடத்தியுள்ளது என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டுள்ளது.	இணங்கி-யொழு-கப்பட்டது			கணக்காய்வாளர் நாயகத்தின் சார்பில் கணக்காய்வு கண்காணிப்பாளர் திரு. ஜி.எச்.டி. தர்மபால 2012 ஆம் ஆண்டின் போது நடத்தப்பட்ட 7 கணக்காய்வு கூட்டங்களில் சமூகமளித்திருந்தார்.
	• பின்வருவனவற்றை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு, கமிட்டியின் குறிப்பு நியதிகள் பரிட்சிக்கப்பட்டன: ○ குறிப்பு நியதிகளுக்குள் வரும் எந்தவொரு விடயம் தொடர்பாகவும் புலனாய்வை மேற்கொள்வதற்கான வெளிப்படையான அதிகாரம்; ○ அவ்வாறு செய்வதற்கு தேவையான வளங்கள்; ○ தகவல்களை முழுமையாக பெறக் கூடிய நிலை; மற்றும் ○ வெளி தொழில்சார் ஆலோசனையை பெற்றுக் கொள்வதற்கும், பொருத்தமான அனுபவத்தை கொண்டிருக்கும் வெளி நபர்களை, தேவை ஏற்படுமிடத்து, அழைப்பதற்குமான அதிகாரமும்;	இணங்கி-யொழு-கப்பட்டது			கணக்காய்வு கமிட்டியின் 'குறிப்பு நியதிகள்', அவற்றிற்குரிய ஏற்பாடுகள் இருந்து வருகின்றனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு பரீட்சிக்கப்பட்டன.
	• கமிட்டி குறைந்தது நான்கு தடவைகள் கூடியமை, குறிப்புக்களை பராமரித்து வந்தமை பரீட்சிக்கப்பட்டது.	இணங்கி-யொழு-கப்பட்டது			சபை கணக்காய்வு கமிட்டி குறிப்புக்களின் பிரகாரம் 2102 ஆம் வருடத்தின் போது 'சபை கணக்காய்வு கமிட்டி' பத்து தடவைகள் கூடியிருக்கின்றது.
	• சபை ஆண்டறிக்கையில் பின்வரும் விடயங்களை வெளிப்படுத்தியிருக்கின்றது என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.				சபை கணக்காய்வு கமிட்டியின் நடவடிக்கைகள் மக்கள் வங்கியின் 2011 ஆண்டறிக்கையின் பக்கம் 155 இல் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.
	○ கணக்காய்வு கமிட்டியின் செயற்பாடுகள் குறித்த விவரங்கள்;	இணங்கி-யொழு-கப்பட்டது			
	○ வருடத்தின் போது நடத்தப்பட்ட கணக்காய்வுக் கமிட்டி கூட்டங்களின் எண்ணிக்கை;	இணங்கி-யொழு-கப்பட்டது			
	○ அத்தகைய கூட்டங்களில் ஒவ்வொரு தனிப்பட்ட பணிப்பாளரும் சமூகமளித்தமை குறித்த விவரங்கள்.	இணங்கி-யொழு-கப்பட்டது			2011 ஆம் வருடத்தின் போது நடத்தப்பட்ட சபை கணக்காய்வு கமிட்டி கூட்டங்களின் எண்ணிக்கை மற்றும் அத்தகைய கமிட்டி கூட்டங்களுக்கு தனிப்பட்ட பணிப்பாளர் வருகை தந்த விபரங்கள் என்பன 2011 ஆண்டறிக்கையின் பக்கம் 121 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. (2011 இல் 08 கூட்டங்கள் நடத்தப்பட்டன)

பிரிவு	மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகள்	இணங்கி யொழுகப்-பட்டது	இணங்கி யொழுகப் படவில்லை	கி/வி	குறிப்பு
	• கமிட்டியின் செயலாளர் கம்பெனியின் செயலாளராக அல்லது உள்ளகக் கணக்காய்வு கருமத்தின் தலைவராக இருந்து வருகின்றார் என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கி-யொழு-கப்பட்டது			(சபை கணக்காய்வு கமிட்டியின் செயலாளரான) திரு. ரொஹான் பத்திரகே கம்பனியின் செயலாளராக இருந்து வருகின்றார். 'சபை கணக்காய்வு கமிட்டி' குறிப்புக்கள் பரீட்சிக்கப்பட்டன.
	• "எதிரில் வரக்கூடிய மோசமான நிலைமைகளை முன்னரே தெரிவிக்கும்' கொள்கை பின்வருவனவற்றை உள்ளடக்கும் செயன்முறையை கொண்டுள்ளது என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது:				
	○ நிதிசார் அறிக்கை, உள்ளகக் கட்டுப்பாடு அல்லது ஏனைய விவகாரங்கள் தொடர்பான முறைகேடுகள்:	இணங்கி-யொழு-கப்பட்டது			மக்கள் வங்கியின் 'எதிரில் வரக்கூடிய மோசமான நிலைமைகளை முன்னரேயே தெரிவிக்கும்' கொள்கை சபை கணக்காய்வு கமிட்டி இல. 544/2012 இன் கீழ் சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. BM இல. 10/2012.
	○ (i) தொடர்பாக அத்தகைய விடயங்கள் குறித்து சுதந்திரமான, நியாயமான புலனாய்வுகள் நடத்தப்படுவதற்கு பொருத்தமான ஏற்பாடுகள் இருந்து வருகின்றன என்பதனை கமிட்டி உறுதிப்படுத்துதல் வேண்டும்; மற்றும்	இணங்கி-யொழு-கப்பட்டது			நியாயமான புலனாய்வுகளுக்கான பொருத்தமான ஏற்பாடுகளை கமிட்டி உறுபதிப்படுத்தியுள்ளது. அது ஷஎதிரில் வரக்கூடிய மோசமான நிலைமைகளை முன்னரேயே தெரிவிக்கும்' கொள்கையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.
	○ பொருத்தமான விதத்தில் மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுத்தல்.	இணங்கி-யொழு-கப்பட்டது			மேலும், நாங்கள் கணக்காய்வு கமிட்டியின் நியதிக் குறிப்புக்களை அவதானித்ததுடன், இது தொடர்பாக வங்கி எவ்வாறு செயற்பட வேண்டுமென்ற விடயத்தை அக்கமிட்டி கலந்துரையாடுகின்றது.
3 (6) (iii)	மனித வளங்கள் மற்றும் வேதன கமிட்டி தொடர்பாக பின்வரும் விதிமுறைகள் பிரயோகிக்கப்படுகின்றனவா என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது:				
	• வங்கியின் பணிப்பாளர்கள் , பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முதன்மை முகாமைத்துவ ஆளணியினர் ஆகியோர் தொடர்பான வேதனத்தை (சம்பளங்கள், மற்றும் ஏனைய நிதிக் கொடுப்பனவுகள்) நிர்ணயிப்பதற்கென கமிட்டி குறிப்பு நியதிகள் மற்றும் குறிப்புக்கள் என்பவற்றை மீளாய்வு செய்வதற்காக ஒரு கொள்கையை அமுல் செய்து வந்துள்ளது என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.			கி/வி	பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முதன்மை முகாமைத்துவ ஆளணியினர் ஆகியோரின் வேதனம் நிதியமைச்சின் சுற்றறிக்கைகளின் பிரகாரம் தீர்மானிக்கப்படுகின்றது. மனித வளங்கள் மற்றும் வேதனக் கமிட்டியின் குறிப்பு நியதிகள் மீளாய்வு செய்யப்பட்டன.
	• பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முதன்மை முகாமைத்துவ ஆளணியினர் ஆகியோருக்கான குறிக்கோள்கள் மற்றும் இலக்குகள் என்பன ஆவணப்படுத்தப்பட்டுள்ளன என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கி-யொழு-கப்பட்டது			வங்கியின் நோக்கு மற்றும் குறிக்கோள்கள், சபை மற்றும் முதன்மை முகாமைத்துவ ஆளணியினரின் இலக்குகள், முதன்மைப் பொறுப்புக்கள் என்பன வங்கியின் நோக்கினை சாதித்துக் கொள்தவதற்கென 5 ஆண்டுக் கால உபாய ரீதியான திட்டத்தில் எடுத்து விளக்கப்பட்டுள்ளது. (2011-2016).

பிரிவு	மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகள்	இணங்கி யொழுகப்-பட்டது	இணங்கி யொழுகப் படவில்லை	கி/வி	குறிப்பு
	• பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முதன்மை முகாமைத்துவ ஆளணியினர் ஆகியோரின் செயலாற்றுகையை கமிட்டி நிர்ணயிக்கப்பட்டிருக்கும் இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள் என்பவற்றின் அடிப்படையில் காலத்துக்கு காலம் மதிப்பீடு செய்யும் விடயத்தை கவனத்தில் எடுத்துள்ளது. என்பதும், வேதனம், அனுகூலங்கள் மற்றும் செயலாற்றுகையை அடிப்படையாகக் கொண்ட ஏனைய ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் என்பவற்றை திருத்துவதற்கான அடிப்படையாகக் கொண்டுள்ளது என்பதும் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கி-யொழு-கப்பட்டது		கி/வி	இல. 07/2012 சபை குறிப்பின் கீழ் சபை முதன்மை முகாமைத்துவ அளணியினர் மதிப்பீடு மற்றும் பதவி உயர்வு என்பவற்றை கவனத்தில் எடுத்துள்ளது. சகக இல. - 156/2012
	• பிரதம நிறைவேற்று அதிகாரி சம்பந்தப்பட்ட விடயங்கள் கலந்துரையாடப்படும் கூட்டங்களில் பிரதம நிறைவேற்று அதிகாரி சமூகமளிப்பதில்லை என்ற ஏற்பாட்டை கொண்டிருக்கும் குறிப்பு நியதிகள் குறிப்புக்களை மீளாய்வு செய்வதன் மூலம் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கி-யொழு-கப்பட்டது			மனித வளங்கள் மற்றும் வேதனக் கமிட்டியின் குறிப்பு நியதிகள், பிரதம நிறைவேற்று அதிகாரி தொடர்பான விடயங்களை கலந்துரையாடும் சந்தர்ப்பத்தில் அந்தக் கூட்டத்தில் அவர் சமூகமளிப்பதில்லை எனக் குறிப்பிட்டிருந்தது.
3 (6) (iv)	நியமனக் கமிட்டி தொடர்பாக பின்வரும் விதிமுறைகள் பிரயோகிக்கப்படுகின்றனவா:				
	• புதிய பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முதன்மை முகாமைத்துவ ஆளணியினர் ஆகியோரை தெரிவு செய்வதற்கு; நியமனம் செய்வதற்கும் கமிட்டி நடைமுறையை அமுல் செய்துள்ளது என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கி-யொழு-கப்பட்டது			முதன்மை முகாமைத்துவ ஆளணியினர் சபை நியமனக் கமிட்டியினால் நியமனம் செய்யப்படுகின்றனர். பணிப்பாளர்கள் 1961 ஆம் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் ஏற்பாடுகள் 8 இன் பிரகாரம் நிதியமைச்சரினால் நியமனம் செய்யப்படுகின்றனர். மக்கள் வங்கியின் '2011 இல் நிறுவன ஆளுகை தொடர்பான மிகச் சிறந்த நடைமுறை' வங்கி இத்தேவைக்கு இணங்கியொழுகியுள்ளது என்ற விடயத்தை குறிப்பிடப்பட்டுள்ளது
	• தற்போதைய பணிப்பாளர்களின் மீள் தெரிவினை கமிட்டி பரிசீலனை செய்து, பரிந்துரை செய்துள்ளது (அல்லது பரிந்துரை செய்யவில்லை) என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.			கி/வி	பணிப்பாளர்கள் 1961 ஆம் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் பிரிவு 8 இன் கீழ் நிதியமைச்சரினால் நியமனம் செய்யப்படுகின்றனர்.
	• பிரதம நிறைவேற்று அதிகாரி பதவிக்கும், முதன்மை முகாமைத்துவ ஆளணியினர் பதவிகளுக்கும் நியமனம் செய்யப்படுவதற்கு அல்லது பதவி உயர்த்தப்படுவதற்கு கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய தகைமைகள் மற்றும் அனுபவம் மற்றும் முக்கியமான பண்புகள் போன்ற அளவுகோல்களை கமிட்டி நிர்ணயித்திருந்தது என்ற விடயம் வேலை விபரத்தை மீளாய்வு செய்வதன் மூலம் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கி-யொழு-கப்பட்டது			பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முதன்மை முகாமைத்துவ ஆளணியினர் ஆகியோரின் நியமனம் சபை நியமனக் கமிட்டியினால் மேற்கொள்ளப்படுகின்றது. இல. 07/2012 சபை குறிப்பின் கீழ் சபை முதன்மை முகாமைத்துவ ஆளணியினரின் மதிப்பீடு மற்றும் பதவி உயர்வு என்பவற்றை கவனத்தில் எடுத்துள்ளது. சகக இல. - 156 மக்கள் வங்கியின் 'நிறுவன ஆளுகை சம்பந்தமான மிகச் சிறந்த நடைமுறை 2011' இல் வங்கி இந்த தேவைக்கு இணங்கியொழுகியுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரிவு	மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகள்	இணங்கியொழுகப்பட்டது	இணங்கியொழுகப் படவில்லை	கி/வி	குறிப்பு
	• பணிப்புரை 3 (3) இல் விதித்துரைக்கப் பட்டிருக்கும் மற்றும் நியதிச் சட்டங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் அளவுகோல்களின் பிரகாரம் தாம் பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முதன்மை முகாமைத்துவ ஆளணியினர் பதவிகளை வகிப்பதற்கு பொருத்தமான தகுதி வாய்ந்த நபர்களாக இருந்து வருகின்றனர் என்பதனை உறுதிப்படுத்தும் கையொப்பமிடப்பட்ட பிரகடனங்களை கமிட்டி அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டுள்ளது என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டுள்ளது.	இணங்கியொழுகப்பட்டது			சபை பத்திர இல. 49/2012 இன் கீழ் பணிப்பாளர்கள் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியினால் தயாரிக்கப்பட்ட சுய மதிப்பீடு பரீட்சிக்கப்பட்டது. சபை குறிப்பு 05/2012 இன் கீழ் பதில் பிரதிப் பொது முகாமையாளர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் சபையினால் மீளாய்வு செய்யப்பட்டுள்ளன. BP - 195/2012.
	• ஓய்வு பெறும் பணிப்பாளர்கள் மற்றும் முதன்மை முகாமைத்துவ ஆளணியினர் ஆகியோர் தொடர்பாக கமிட்டி முறையான பின் தொடர்பவர்கள் திட்டமொன்றை கவனத்தில் எடுத்துள்ளது என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கியொழுகப்பட்டது			முறையான பின் தொடர்பவர்கள் திட்டம் சபைக்கு இல. 279/2012 சபை பத்திரத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அது சபை குறிப்பு இல. 10/2012 இன் கீழ் மீளாய்வு செய்யப்பட்டது.
	• கமிட்டிக்கு சுயாதீனமான பணிப்பாளர் ஒருவர் தலைமை வகிப்பதுடன், அது பெரும்பான்மை சுயாதீனமான பணிப்பாளர்களால் உருவாக்கப்பட்டிருப்பது விரும்பத்தக்கது என்பது பரீட்சிக்கப்பட்டுள்ளது. பிரதம நிறைவேற்று அதிகாரி அழைப்பின் பேரில் கூட்டங்களுக்கு சமூகமளிக்க முடியும்	இணங்கியொழுகப்பட்டது			அனைத்து பணிப்பாளர்களும் சுயாதீனமானவர்களாக இருந்து வருவதுடன், நிறைவேற்று தரம் சாராத பணிப்பாளர்கள் நிதியமைச்சரினால் நியனம் செய்யப்படுகின்றனர். பிரதம நிறைவேற்று அதிகாரி அழைப்பின் பேரில் கூட்டத்தில் சமூகமளிக்கின்றார்.
3 (6) (v)	சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் கமிட்டி தொடர்பாக பின்வரும் விதிமுறைகள் பிரயோகிக்கப்படுகின்றனவா என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டுள்ளது:	இணங்கியொழுகப்பட்டது			சபை ஒருங்கணைந்த இடர் முகாமைத்துவ கமிட்டி ஆகக் குறைந்தது நான்கு நிவேற்று தரம் சாராத பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் நட்டவச்ச வகைகளை மேற்பார்வை செய்து வரும் முதன்மை முகாமைத்துவ ஆளணியினரை கொண்டிருத்தல் வேண்டும். இது மக்கள் வங்கியின் 2011 ஆண்டறிக்கை மற்றும் BIRMC யின் குறிப்பு நியதிகள் என்பவற்றில் பக்கம் 156 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. நாங்கள் சஒநமுக குறிப்பு இல. 01/2012 மற்றும் 3/2011 என்பவற்றை மேலும் உறுதிப்படுத்தலுக்கென அவதானித்தோம்.

பிரிவு	மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகள்	இணங்கி யொழுகப்-பட்டது	இணங்கி யொழுகப் படவில்லை	கி/வி	குறிப்பு
	• வங்கி எதிர்கொள்ளும் கடனளிப்பு, சந்தை, காசு நிலை, செயற்பாட்டு மற்றும் உபாய ரீதியான இடர்கள் என்பவற்றை பொருத்தமான இடர் குறிகாட்டிகள் மற்றும் முகாமைத்துவ தகவல் என்பவற்றுக்கூடாக கமிட்டி மாதாந்த அடிப்படையில் மதிப்பீடு செய்வதற்கான செயன்முறையொன்றை கொண்டுள்ளது என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது. துணை நிறுவனங்கள் மற்றும் இணை நிறுவனங்கள் என்பவற்றை பொறுத்தவரையில் இடர் முகாமைத்துவம் வங்கி அடிப்படையிலும், குழுமம் அடிப்படையிலும் மேற்கொள்ளப்படல் வேண்டும்.	இணங்கி-யொழு-கப்பட்டது			சபை ஒருங்கிணைந்த இடர் கமிட்டியினால் (BIRMC) தயாரிக்கப்படும் 'அழுத்தப் பரீட்சிப்பு அறிக்கைக்கூடாக' குறிப்பிடப்பட்ட அனைத்து நட்ட வகைகளும் மதிப்பிடப்பட்டுள்ளன. அழுத்தப் பரீட்சிப்பு அறிக்கை சபைக்கு இக்கமிட்டியினால் பின்வரும் சபை பத்திரங்கள் மற்றும் சபை குறிப்புக்கள் (BM) என்பவற்றின் கீழ் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. BIRMC இல. - 10/2012 BM இல. - 01/2012 BIRMC இல. - 19/2012 BM இல. - 02/2012 BIRMC இல. - 28/2012 BM இல. - 03/2012 BIRMC இல. - 04/2012
	• கடனளிப்பு கமிட்டி மற்றும் சொத்து - பொறுப்பு கமிட்டி போன்ற அனைத்து முகாமைத்துவ மட்டங்களிலான கமிட்டிகளுக்குமான திட்டவட்டமான அளவு ரீதியான மற்றும் தர ரீதியான கடன் உச்ச வரம்புகளை கமிட்டி மீளாய்வு செய்து இடர் குறிகாட்டிகளை காலத்துக்கு காலம் அறிக்கையிட்டுள்ளது என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கி-யொழு-கப்பட்டது			சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ கமிட்டி பின்வரும் சபை குறிப்புக்களின் கீழ் அனைத்து முகாமைத்துவ கமிட்டிகளுக்குமான அளவு ரீதியான மற்றும் தர ரீதியான இடர் உச்ச வரம்புகளை மீளாய்வு செய்துள்ளது: M. இல. - 01/2012 M. இல. - 02/2012 M. இல. - 03/2012
	• குறித்துரைக்கப்பட்ட அளவு ரீதியான மற்றும் தர ரீதியான இடர் உச்ச வரம்புகளை தாண்டிச் சென்றிருந்த இடர் குறிகாட்டிகளை கமிட்டி மீளாய்வு செய்து கவனத்தில் எடுத்திருந்தது என் விடயம் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கி-யொழு-கப்பட்டது			சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ கமிட்டியின் குறிப்புக்கள் பரீட்சிக்கப்பட்டன: M. இல. - 02/2012 M. இல. - 03/2012 BRIMC இல. - 28/2012 சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ கமிட்டியின் நியதிக் குறிப்புக்கள் பரீட்சிக்கப்பட்டன. இடர் மீளாய்வு அறிக்கை பரீட்சிக்கப்பட்டது; கமிட்டி இந்த அறிக்கையை மாதாந்த அடிப்படையில் தயாரித்து பொது முகாமையாளருக்கு சமர்ப்பித்திருந்தது. அது தவிர, இவ்வறிக்கை காலாண்டு அடிப்படையில் சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ கமிட்டிக்கும் சமர்ப்பித்திருந்தது.

பிரிவு	மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகள்	இணங்கியொழுகப்பட்டது	இணங்கியொழுகப்படவில்லை	கி/வி	குறிப்பு
	• கமிட்டி குறைந்தது காலாண்டுக்கு ஒரு முறை எத்தனை தடவை கூடுகின்றது விடயம் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கியொழுகப்பட்டது			வருடத்தின் போது கமிட்டி ஆகக் குறைந்தது காலாண்டு அடிப்படையில் நான்கு முறை கூடியது. அவை வருமாறு: 29-03-2012 20-06-2012 03-09-2012 15-12-2012 *(கூட்டங்களின் குறிப்புக்கள் அவதானிக்கப்பட்டன)*
	• திட்டவட்டமான இடர்களை இனங்காண தவறுவதற்கு பொறுப்பாக இருந்து வரும் உத்தியோகத்தர்கள் தொடர்பாக கமிட்டி ஒரு முறையான ஆவணப்படுத்தப்பட்ட நடவடிக்கை நடைமுறையொன்றை மீளாய்வு செய்து பின்பற்றியுள்ளது என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கியொழுகப்பட்டது			சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ கமிட்டி சபை குறிப்புக்கள் இல. 03/2012 இன் கீழ் முறையான ஒழுங்காற்று நடவடிக்கை நடைமுறையொன்று பின்பற்றப்படுவதனை மீளாய்வு செய்து பரிந்துரை செய்துள்ளது.
	• ஒவ்வொரு கூட்டத்தின் பின்னரும், ஒரு வார காலத்துக்குள் கமிட்டி இடர் மதிப்பீட்டு அறிக்கையொன்றை சபையிடம் சமர்ப்பித்து சபையின் கருத்துக்கள், உடன்பாடு மற்றும்/அல்லது திட்டவட்டமான பணிப்புரைகள் என்பவற்றை பெற்றுக் கொண்டுள்ளது என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கியொழுகப்பட்டது			பின்வருவனவற்றின் கீழ் இடர் மதிப்பீட்டு அறிக்கை சஒநமுக க்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. BIRMC இல. - 28/2012 BIRMC இல. - 19/2012
	• சட்டங்கள், ஒழுங்குவிதிகள், ஒழுங்கு முறைப்படுத்தல் வழிகாட்டுதல்கள், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் அனைத்து வணிகச் செயற்பாடுகள் தொடர்பாகவும் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் கொள்கைகள் என்பவற்றுடன் வங்கி இணங்கியொழுகுவதனை மதிப்பிட்டுக் கொள்ளும் பொருட்டு, கமிட்டி ஒரு இணங்கியொழுகல் கருமத்தை ஸ்தாபித்துக் கொண்டுள்ளது என்பதும், முதன்மை முகாமைத்துவ ஆளணியிடமிருந்து தெரிவு செய்யப்பட்டிருக்கும் அர்ப்பணிப்பு மிக்க ஓர் இணங்கியொழுகல் அதிகாரி இணங்கியொழுகல் கருமத்தை மேற்கொள்வதுடன், கமிட்டிக்கு காலத்துக்கு காலம் அறிக்கையிட்டுள்ளார் என்பதும் பரீட்சிக்கப்பட்டது,				அர்ப்பணிப்பு மிக்க ஓர் இணங்கியொழுகல் அதிகாரி இணங்கியொழுகல் கருமத்தை மேற்கொள்கிறார். (திருமதி எஸ். சேனாநாயக்க) இணங்கியொழுகல் அதிகாரி இரு மாதங்களுக்கு ஒரு முறை இணங்கியொழுகல் அறிக்கையை சபைக்கு சமர்ப்பித்துள்ளார். சபை இணங்கியொழுகல் அறிக்கையை மீளாய்வு செய்துள்ளது என்பதனை குறிப்பிட்டிருந்த பின்வரும் சபை குறிப்பு மற்றும் சபை பத்திரம் என்பன அவதானிக்கப்பட்டன: B/M இல. - 01/2012 BIRMC இல. - 02/2012

பிரிவு	மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகள்	இணங்கி யொழுகப்-பட்டது	இணங்கி யொழுகப் படவில்லை	கி/வி	குறிப்பு
3 (7)	**சம்பந்தப்பட்ட தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்கள்**				
3 (7) (i)	வங்கி எவரேனும் ஒரு நபருடன், குறிப்பாக இப்பணிப்புரையின் நோக்கங்களுக்கென சம்பந்தப்பட்ட தரப்பினர் எனக் கருதப்படக் கூடிய பின்வரும் வகைகளைச் சேர்ந்த நபர்களுடன் மேற்கொள்ளும் ஏதேனும் கொடுக்கல் வாங்கலிலிருந்து தோன்றக் கூடிய எவையேனும் நலன்களின் மோதல்களை தவிர்த்துக் கொள்வதற்கென சபையினால் ஸ்தாபிக்கப்பட்ட ஆவணப்படுத்தப்பட்ட ஒரு செயன்முறை இருந்து வருகின்றது என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கி-யொழு-கப்பட்டது			சபை சுற்றிக்கை இல. 581/2004 இனால் அங்கீகரிக்கப்பட்ட கடனளிப்பு கையேட்டின் வடிவில் நன்கு ஸ்தாபிதமான ஒரு செயன்முறை இருந்த வருகின்றதென்பதனை நாங்கள் அவதானித்தோம். அது தவிர, வங்கி இலங்கை மத்திய வங்கியின் பணிப்புரைகளையும் பின்பற்றுகின்றது.
	• வங்கியின் எவையேனும் துணைக் கம்பெனிகளுடன்;				
	• வங்கியின் எவையேனும் இணைக் கம்பெனிகளுடன்				
	• வங்கியின் எவரேனும் ஒரு பணிப்பாளருடன்;				
	• முதன்மை முகாமைத்துவ ஆளணியைச் சேர்ந்த எவரேனும் ஒருவருடன்;				
	• வங்கியின் பணிப்பாளர்கள் அல்லது முதன்மை முகாமைத்துவ ஆளணியினரில் எவரேனும் ஒருவரின் நெருங்கிய உறவினருடன்;				
	• வங்கியின் பொருள்சார் அக்கறையை கொண்டிருக்கும் ஒரு பங்குதாரரருடன்				
	• வங்கி பணிப்பாளர்கள் எவரேனும் ஒருவர் அல்லது வங்கியின் பணிப்பாளர்களில் எவரேனும் ஒருவரின் நெருங்கிய உறவினர் அல்லது வங்கியின் பொருள்சார் பங்குதாரர்களில் எவரேனும் ஒருவர் கணிசமான அளவிலான ஒரு அக்கறையைக் கொண்டிருக்கும் ஒரு நிறுவனத்துடன்.				
3 (7) (ii)	இந்தப் பணிப்புரையில் உள்ளடக்கப்படும் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுடன் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்கள் என இனங்காணப்பட்டிருக்கும் பின்வரும் வகைகளைச் சேர்ந்த கொடுக்கல் வாங்கல்களை இனங்கண்டு கொள்வதற்கும், அறிக்கையிடுவதற்கும் ஒரு செயன்முறை இருந்து வருகின்றது என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டுள்ளது:				

பிரிவு	மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகள்	இணங்கியொழுகப்பட்டது	இணங்கியொழுகப்படவில்லை	கி/வி	குறிப்பு
	• நாணயச் சபையின் பணிப்புரைகளினால் உச்ச வரம்பு வரையறை செய்யப்பட்டிருக்கும் ஏதேனும் ஒரு கடன் வகையை வழங்குதல்.	இணங்கியொழுகப்பட்டது			கடனளிப்பு கையேடு பிரிவு 5 இன் பிரகாரம், கடன் உச்ச வரம்புத் தொகை ரூ. 500,000/- ஆகும். பொதுவாக சம்பந்தப்பட்ட தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்கள், சில்வர்லேக் ஒருங்கிணைந்த வங்கித்தொழில் முறை (SIBS) என அழைக்கப்படும் பொதுவாக பயன்படுத்தப்படும் தரவுத் தளத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன. நாங்கள் (SIBS) மூலம் உருவாக்கப்பட்ட RPT அறிக்கையை பரீட்சித்தோம். இந்த RPT செயன்முறை பி.பொ.மு. (உள்நாட்டு கடன் - திரு. கே.பி. ராஜபக்ஷ) ஆல் மேற்கொள்ளப்படுகின்றது. மத்திய வங்கிக்கான காலாண்டு அறிக்கை
	• வைப்புக்கள், கடன்படல்கள் மற்றும் முதலீடுகள் என்பவற்றின் வடிவத்தில் வங்கி தொடர்பான எவையேனும் பொறுப்புக்களை உருவாக்குதல்				சம்பந்தப்பட்ட தரப்பினருடனான அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் சபை பத்திரத்திற்கூடாக சபைக்கு அறிக்கையிடப்படுவதுடன். கடனளிப்புக் கையேட்டுக்கு இணங்கியொழுகப்படுகின்றது.
	• நிதிசார் இயல்பினை கொண்ட அல்லது நிதிசார் இயல்பினை கொண்டிராத ஏதேனும் ஒரு சேவையை வங்கிக்கு வழங்குதல் அல்லது வங்கியிலிருந்து பெற்றுக் கொள்ளல் தொடர்பான ஏற்பாடு.				
	• அத்தகைய சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அனுகூலங்களை வழங்கக்கூடிய உரித்து தொடர்பான, அந்தரங்கமான அல்லது உணர்திறன் கொண்ட தகவல்கள் வங்கிக்கும், எவரேனும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்குமிடையில் பகிர்ந்து கொள்ளப்படுவதற்கு வழிகோலக்கூடிய அறிக்கையிடல் வழிமுறைகள் மற்றும் தகவல் பாய்ச்சல்கள் என்பவற்றின் உருவாக்கம் அல்லது பராமரிப்பு.				மேலும், மத்திய வங்கிக்கு அனுப்பப்படும் அறிக்கையை நாங்கள் அவதானித்தோம்.
3 (7) (னை)	மேலே 3 (7) (i) பணிப்புரையில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளவாறு, அதே வணிகச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் பொழுது வங்கியின் ஏனைய வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் வசதிகளிலும் பார்க்க அதிக சாதகமான வசதிகள் வழங்கும் விதத்தில் வங்கி சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்டு வரவில்லை என்பதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு சபை ஒரு செயன்முறையை கொண்டுள்ளது என்பது பரீட்சிக்கப்பட்டது.	இணங்கியொழுகப்பட்டது			வங்கிக் கடனளிப்புக் கையேடு மற்றும் இலங்கை மத்திய வங்கியின் பணிப்புரைகள் என்பவற்றை பின்பற்றுகின்றது. வங்கியின் கொள்கையை பொறுத்தவரையில் குறைந்த வீத கொடுக்கல் வாங்கல்கள் இருந்து வரவில்லை. மேலும், இது கடனளிப்பு திணைக்களத்தின் சிரேஷ்ட முகாமையாளரினால் காலத்துக்குக் காலம் மதிப்பிடப்பட்டு வருகின்றது.

பிரிவு	மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகள்	இணங்கி யொழுகப்-பட்டது	இணங்கி யொழுகப் படவில்லை	கி/வி	குறிப்பு
	• சபையினால் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் வங்கியின் விவேகபூர்வமான ஒழுங்கு முறைப்படுத்தல் மூலதனத்தின் நியாயமான ஒரு சதவீதத்தையும் மிகைத்துச் செல்லும் விதத்தில் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு 'மொத்த தேறிய கடன் தொகையை' வழங்குதல். இந்த உப பணிப்புரையின் நோக்கங்களுக்கென-				வங்கி சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு கடன்களை வழங்கும் பொழுது கடனளிப்புக் கையேட்டுக்கு இணங்கியொழுகி, பொதுவான நடைமுறையையும் பிரயோகிக்கின்றது.
	• 'கடன்' என்பது கடன் உச்ச வரம்பு கடன் தொடர்பாக 2007 இன் இல. 7 வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகளில் குறித்துரைக்கப் பட்டிருக்கும் என்பதனை குறிக்கும்.				வட்டி விகிதங்களின் துல்லிய தன்மையை சிரேஷ்ட முகாமையாளர்கள் மதிப்பிடுகின்றார்கள். கடன்களை வழங்கும் பொழுது வங்கி கடனளிப்பு கையேட்டுக்கு இணங்கியொழுகின்றது.
	• 'மொத்த தேறிய கடன்' அத்தகைய சம்பந்தப்பட்ட தரப்பினர் வங்கியின் பங்குமூலதனத்தில் மேற்கொண்டுள்ள காசுப் பிணை மற்றும் முதலீடுகள் மற்றும் ஐந்து வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட முதிர்ச்சிக் காலத்தை கொண்டிருக்கும் கடன் கருவிகள் என்பவற்றை மொத்தக் கடனிலிருந்து கழித்து கணிக்கப்படும்.				இந்த ஏற்பாடு கடனளிப்புக் கையேடு பிரிவு 5 உடன் இணங்கியொழுகப்பட்டுள்ளது என்பதனை நாம் அவதானித்தோம்.
	• சம்பந்தப்படாத ஒப்பிடத்தக்க எதிர் தரப்பினர் ஒருவருடன் மேற்கொள்ளப்படும் அதே இயல்பிலான கொடுக்கல் வாங்கல் ஒன்றுடன் ஒப்பிடும் பொழுது, வங்கியின் மிகச் சிறந்த கடனளிப்பு விகிதத்திலும் பார்க்க குறைந்த ஒரு வட்டி விகிதத்தை அறவிடுதல் அல்லது வங்கியின் வைப்பு வட்டி விகிதத்திலும் பார்க்க உயர் விகிதமொன்றை செலுத்துதல்.				கடனளிப்பு கையேடு பிரிவு 5 இன் பிரகாரம் ஒரு பணிப்பாளருக்கு கடனளிக்கும் நோக்கத்திற்கென சாதாரண வட்டி அறவிடப்படுதல் வேண்டும்.
	• சம்பந்தப்படாத தரப்பினருடன் சாதாரண வர்த்தக நடைமுறைகளின் போது அவர்களுக்கு வழங்கப்படும் நியதிகளிலும் பார்க்க சாதகமான நியதிகள், வியாபார நட்டங்களை உள்ளடக்குதல் மற்றும்/அல்லது கட்டணங்களை/தரகுகளை விட்டுக் கொடுத்தல் போன்ற விதத்தில் சலுகை ரீதியாக நடத்துதல்.				பணிப்பாளர் ஒருவர் விசேட வட்டி விகிதமொன்றுக்கு வேண்டுகோள் விடுத்தால், அதற்கு சபையின் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.
	• ஒரு மதிப்பீட்டு நடைமுறையை மேற்கொள்ளாமல் ஒரு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு சேவைகளை வழங்குதல் அல்லது அவர்களிடமிருந்து சேவைகளை பெற்றுக் கொள்ளல்.				மத்திய வங்கிக்கான காலாண்டு அறிக்கை
	• சட்ட ரீதியான கடமைகள் மற்றும் கருமங்கள் என்பவற்றை மேற்கொள்வதற்கு தேவைப்படும் தகவல்கள் தவிர உரித்து சார்ந்த, அந்தரங்கமான அல்லது உணர்திறன் கொண்ட தகவல்களை எவரேனும் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பகிர்ந்து கொள்ளப்படுவதற்கு வழிகோலக் கூடிய அறிக்கையிடல் வழிமுறைகள் மற்றும் தகவல்கள் பாய்ச்சல்கள் என்பவற்றை பராமரித்தல்.				

பிரிவு	மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகள்	இணங்கியொழுகப்பட்டது	இணங்கியொழுகப்படவில்லை	கி/வி	குறிப்பு
3 (7) (iv)	எவரேனும் அதன் பணிப்பாளர் ஒருவருக்கு அல்லது அதன் முதன்மை முகாமைத்துவ ஆளணியினர் ஒருவருக்கு கடனளிப்பதற்கு வங்கி ஒரு செயன்முறையை கொண்டுள்ளது என்ற விடயமும், அத்தகைய கடனுக்கு, சம்பந்தப்பட்ட பணிப்பாளர் தவிர, மொத்த பணிப்பாளர்களின் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாதவர்கள் பங்கேற்கும் பணிப்பாளர் சபைக் கூட்டமொன்றில் ஒப்புதல் வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்ற விடயமும், அவர்கள் இந்த கடன் வசதிக்கு சாதகமான விதத்தில் வாக்களித்துள்ளார்கள் என்ற விடயமும், அக்கடன் காலத்துக் காலம் நாணய சபையினால் நிர்ணயிக்கப்படக் கூடிய பிணையொன்றின் பாதுகாப்பை பெற்றிருக்க வேண்டும் என்ற விடயமும் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கியொழுகப்பட்டது			வங்கி இச்செயன்முறைக்கென கடனளிப்பு கையேட்டின் பிரிவு 5 ஐ பிரயோகின்றது.
3 (7) (v)	• வங்கியினால் ஒரு நபருக்கு அல்லது ஒரு நபரின் நெருங்கிய உறவினருக்கு அல்லது அந்த நபர் கணிசமான அளவிலான அக்கறையைக் கொண்டிருக்கும் ஒரு நிறுவனத்திற்கு ஒரு கடனை வழங்கியிருக்கும் பொழுது, அந்நபர் வங்கியின் ஒரு பணிப்பாளராக நியமனம் செய்யப்பட்டால், அந்நோக்கத்திற்கென நாணய சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் தேவையான பிணையை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கான செயன்முறையொன்றை வங்கி கொண்டுள்ளது என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது. அந்நபர் பணிப்பாளராக நியமனம் செய்யப்பட்ட ஒரு வருடத்திற்குள் இது மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.	இணங்கியொழுகப்பட்டது			வங்கி இச்செயன்முறைக்கு கடனளிப்பு கையேட்டை பிரயோகிப்பதுடன், மக்கள் வங்கிச் சட்டம் மற்றும் இலங்கை மத்திய வங்கி பணிப்புரைகள் என்பவற்றில் குறிப்பிடப்பட்டிருக்கும் பணிப்புரைகளுக்கும் இணங்கியொழுகின்றது. அத்தகைய சம்பவங்கள் எதுவும் அவதானிக்கப்படவில்லை.
	• மேலே பணிப்புரை 3 (7) (v) (a) இல் வழங்கப்பட்டிருக்கும் காலப் பிரிவுக்குகள் அத்தகைய பிணை வழங்கப்படாவிட்டால், அத்தகைய கடன்கள் தொடர்பாக வங்கிக்கு வருமதியாக உள்ள தொகையை வட்டியுடன் சேர்த்து அறிவிட்டுக் கொள்வதற்கு, அக்கடனளிப்பு மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் குறித்துரைக்கப்பட்டிருக்கும் காலப் பிரிவுக்குள் அல்லது அத்தகைய பணிப்பாளரின் நியமனத் திகதியிலிருந்து 18 மாதங்கள் காலாவதியாகும் சந்தர்ப்பத்தில், எது முன்னர் இடம்பெறுகிறதோ அப்பொழுது, வங்கி நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.			N/A	அத்தகைய சம்பவங்கள் எதுவும் அவதானிக்கப்படவில்லை. வங்கி கடனளிப்பு கையேடு பிரிவு 5 இற்கு இணங்கியொழுகியுள்ளது.
	• மேலே குறிப்பிடப்பட்ட உப பணிப்புரைக்கு எவரேனும் பணிப்பாளர் ஒருவர் இணங்கியொழுகத் தவறினால் அவர் வங்கியின் பணிப்பாளர் பதவியை வெற்றிடமாக்கியிருப்பதாக கருதப்படுவ துடன், வங்கி அத்தகைய விடயங்களை பொது மக்களுக்கு வெளிப்படுத்தும் என்பதை கண்காணிக்கும் ஒரு செயன்முறை இருந்து வருகின்றது என்ற விடயம் பரீட்சிக்கப்படுகின்றது,	இணங்கியொழுகப்பட்டது			வங்கி இச்செயன்முறைக்கு கடனளிப்பு கையேட்டை பிரயோகிப்பதுடன், மக்கள் வங்கிச் சட்டம் மற்றும் இலங்கை மத்திய வங்கி பணிப்புரைகள் என்பவற்றின் குறிப்பிடப்பட்டிருக்கும் பணிப்புரைகளுக்கும் இணங்கியொழுகுகின்றது.

பிரிவு	மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகள்	இணங்கி யொழுகப்- பட்டது	இணங்கி யொழுகப் படவில்லை	கி/வி	குறிப்பு
	• கடன் வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தில் வங்கியின் ஊழியர் ஒருவராக இருந்து வந்த ஒரு பணிப்பாளர் தொடர்பாக, அவர் வங்கியின் அனைத்து ஊழியர்களுக்கும் பொருந்தக் கூடிய கடன் திட்டமொன்றின் கீழ் கடன் பெற்றிருக்கும் சந்தர்ப்பத்தில், 3(7) (v)c உறுப்புரையை உறுதிப்படுத்துவதற்கென இருந்து வரும் செயன்முறை இதற்கு பொருந்தாது என்பது பரீட்சிக்கப்பட்டது.	இணங்கி- யொழு- கப்பட்டது			வங்கி இச்செயன்முறைக்கு கடனளிப்பு கையேட்டை பிரயோகிப்பதுடன், மக்கள் வங்கிச் சட்டம் மற்றும் இலங்கை மத்திய வங்கி பணிப்புரைகள் என்பவற்றில் குறிப்பிடப்பட்டிருக்கும் பணிப்புரைகளுக்கும் இணங்கியொழுகின்றது.
3 (7) (vi)	எந்தவொரு ஊழியருக்கும் அல்லது ஊழியரின் நெருங்கிய உறவினர் ஒருவருக்கும் அல்லது அந்த ஊழியர் அல்லது அவரது நெருங்கிய உறவினர் கணிசமான அளவிலான அக்கறையைக் கொண்டிருக்கும் நிறுவனமொன்றுக்கு (அத்தகைய வங்கியின் ஊழியர்கள் தொடர்பாக பிரயோகிக்கத்தக்க ஒரு திட்டத்தின் அடிப்படையில் வழங்கப்படும் கடன்கள் அல்லது மேலே குறிப்பிடப்பட்ட பணிப்புரை 3(7)(v) இன் பிரகாரம் வழங்கப்படும் கடன்கள் தொடர்பாக நாணயச் சபையினால் ஒப்புதல் வழங்கப்பட்டிருக்கும் பிணையின் பாதுகாப்பை கொண்டிருக்கும் கடன்கள் தவிர) வங்கி வழங்கக்கூடிய எவையேனும் கடன்கள் அல்லது கட்டணங்கள் அல்லது தரகுக் கட்டணங்களை விட்டுக் கொடுப்பது தொடர்பாக பெருமளவுக்கு சாதகமான நியதிகள் இருப்பின் அவற்றை இனங்கண்டு கொள்வதற்கு ஒரு செயன்முறை இருந்து வருகின்றது என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கி- யொழு- கப்பட்டது			வங்கி இச்செயன்முறைக்கு கடனளிப்பு கையேட்டை பிரயோகிப்பதுடன், மக்கள் வங்கிச் சட்டம் மற்றும் இலங்கை மத்திய வங்கி பணிப்புரைகள் என்பவற்றில் குறிப்பிடப்பட்டிருக்கும் பணிப்புரைகளுக்கும் இணங்கியொழுகின்றது.
3 (7) (vii)	மேலே 3 (7) (v) மற்றும் 3 (7) (vi) பணிப்புரையின் கீழ் வங்கியினால் வழங்கப்படும் எந்தவொரு கடன் அல்லது கடனின் எந்தவொரு பாகம் அல்லது அத்தகைய கடன்கள் தொடர்பாக வருமதியாக இருக்கும் வட்டித் தொகை என்பவற்றுக்கு நாணயச் சபையின் முன்னனுமதியை பெற்றுக் கொள்வதற்கும் அனுமதியில்லாமல் அனுப்பி வைக்கப்படும் எந்தவொரு தொகையும் வறிதானதாகவும், தாக்கமற்றதாகவும் இருந்து வரும் என கருதப்படுவதற்கும் ஒரு செயன்முறை இருந்து வருகின்றது என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கி- யொழு- கப்பட்டது			வங்கி இச்செயன்முறைக்கு கடனளிப்பு கையேட்டை பிரயோகிப்பதுடன், மக்கள் வங்கிச் சட்டம் மற்றும் இலங்கை மத்திய வங்கி பணிப்புரைகள் என்பவற்றில் குறிப்பிடப்பட்டிருக்கும் பணிப்புரைகளுக்கும் இணங்கியொழுகின்றது.
3 (8)	**வெளிப்படுத்துகைகள்**				
3 (8) (i)	சபை பின்வருவனவற்றை பரீட்சித்துள்ளது.				
	• மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகார அமைப்புக்களினால் பிரயோகிக்கத்தக்க தர நியமங்களில் விதித்துரைக்கப்பட்டிருக்கும் படிவங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்ட வருடாந்த நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு, பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன்/ அத்தகைய கூற்றுக்கள் சுருக்கமான வடிவில் செய்திப் பத்திரிகைகளில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடப்பட்டுள்ளன.	இணங்கி- யொழு- கப்பட்டது			2011 ஆண்டறிக்கை அவதானிக்கப்பட்டது. மேலும், இக்கூற்றுக்கள் செய்தி பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டிருந்தன.

பிரிவு	மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகள்	இணங்கியொழுகப்பட்டது	இணங்கியொழுகப்படவில்லை	கி/வி	குறிப்பு
	• காலாண்டு நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சுருக்கமான வடிவில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பத்திரிகைகளில் வெளியிடப்படுகின்றன.	இணங்கியொழுகப்பட்டது			இக் கூற்றுக்கள் பத்திரிகைகளில் வெளியிடப்படுகின்றன. (நிதி திணைக்களத்தின் நிதிசார் விபரங்கள் அவதானிக்கப்பட்டன).
3 (8) (ii)	சபை தனது ஆண்டறிக்கையில் பின்வரும் குறைந்தபட்ச வெளிப்படுத்துகைகள் மேற்கொண்டுள்ளது என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது:				
	• கணக்காய்வு செய்யப்பட்ட வருடாந்த நிதிசார் கூற்றுக்கள் திட்டவட்டமான வெளிப்படுத்துகைகளையும் உள்ளடக்கிய விதத்தில் பிரயோகிக்கத்தக்க கணக்கீட்டு தரநியமியங்கள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தும் தேவைகள் என்பவற்றின் பிரகாரம் தாயரிக்கப்பட்டுள்ளதென் பதனை எடுத்துக் காட்டும் கூற்றுக்கள்.	இணங்கியொழுகப்பட்டது			
	• நிதிசார் அறிக்கையிடலின் நம்பகத்தன்மை தொடர்பாகவும், வெளிநோக்கங்களுக்கான நிதிசார் கூற்றுக்களின் தயாரிப்பு, சம்பந்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஒழுங்குவிதித் தேவைகள் என்பவற்றின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது தொடர்பாகவும் நியாயமான ஓர் உத்தரவாதத்தை வழங்கும் விதத்தில் நிதிசார் அறிக்கையிடல் முறை வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதனையும் உறுதிப்படுத்தும் வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டு பொறிமுறை தொடர்பான சபையின் அறிக்கை.	இணங்கியொழுகப்பட்டது			
	• மேலே பணிப்புரை 3 (8) (ii) (b) இல் குறிப்பிடப்பட்டிருக்கும் உள்ளக கட்டுப்பாட்டு பொறிமுறையின் வினைத்திறன் குறித்த வெளிக் கணக்காய்வாளர்களின் அறிக்கையை சபை பெற்றுக் கொண்டுள்ளது என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டுள்ளது.	இணங்கியொழுகப்பட்டது			இவை 2011 ஆம் வருடத்தின் ஆண்டறிக்கையில் பரீடசிக்கப்பட்டன.
	• பெயர்கள், தகைமைகள், வயது அனுபவம் வழிகாட்டுதல்கள் பொருத்தபாட்டு தேவைகளை நிறைவேற்றி வைத்தல் மற்றும் கண்ணியம் என்பவற்றை உள்ளடக்கிய பணிப்பாளர்களின் விவரங்கள். வங்கியுடனான கொடுக்கல் வாங்கல்கள், வங்கியினால் செலுத்தப்பட்ட மொத்தக் கட்டணங்கள்/வேதனம் தொடர்பான விவரங்கள்.	இணங்கியொழுகப்பட்டது			
	• சம்பந்தப்பட்ட தரப்பினரின் ஒவ்வொரு பிரிவினருக்கும் 3 (7) (iii) இல் குறிப்பிடப்பட்ட வாறு வழங்கப்பட்ட மொத்த தேறிய தொகை. சம்பந்தப்பட்ட தரப்பினரின் ஒவ்வொரு பிரிவினருக்கும் வழங்கப்பட்ட தேறிய தொகை வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத்தின் ஒரு சதவீதமாகவும் வெளிப்படுத்தப்படப்படும்.	இணங்கியொழுகப்பட்டது			

பிரிவு	மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகள்	இணங்கி யொழுகப்-பட்டது	இணங்கி யொழுகப் படவில்லை	கி/வி	குறிப்பு
	• வங்கியினால் அதன் முதன்மை முகாமைத்துவ ஆளணியினருக்கு செலுத்தப்பட்ட மொத்த வேதனங்களின் கூட்டுப் பெறுமதி மற்றும் வங்கி அவர்களுடன் மேற்கொண்ட கொடுக்கல் வாங்கல்களின் மொத்தப் பெறுமதி. செலுத்தப்பட்ட வேதனம், வழங்கப்பட்ட கடன் மற்றும் வைப்புக்கள் அல்லது வங்கியில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் போன்ற பரவலான வகைகளில் குறிப்பிடப்பட்டிருக்கும்.	இணங்கி-யொழு-கப்பட்டது			
	• பணிப்புரைகள் இணங்கியொழுகப்பட்டுள்ளன என்பது குறித்த வெளிக் கணக்காய்வாளரின் அறிக்கையை சபை பெற்றுக் கொண்டுள்ளது என்ற விடயம் பரீட்சிக்கப்பட்டது.	இணங்கி-யொழு-கப்பட்டது			2011 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டி ருக்கும் இணங்கியொழுகல் அறிக்கையின் பிரகாரம் ஒழுங்குவிதிகள் மற்றும் சட்டத்தின் தேவைகள் என்பவற்றுடன் இணங்கியொழுகியிருக்கும் விவரங்கள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.
	• விவேகபூர்வமான தேவைகள், ஒழுங்கு விதிகள், சட்டங்கள் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றுக்கு இணங்கியொழுகியுள்ள விதம் குறித்த ஒரு விரிவான அறிக்கை மற்றும் பொருள்சார் ரீதியில் ஏதேனும் இணங்கியொழுகா நிலைமைகள் இருப்பின், அவற்றை நிவர்த்தி செய்வதற்கு எடுக்கப்படும் வழிமுறைகள்.	இணங்கி-யொழு-கப்பட்டது			
	• வங்கி மேற்பார்வை பணிப்பாளரினால் சுட்டிக் காட்டப்பட்டிக்கும் வங்கியின் இடர் முகாமைத்துவத்தில் நிலவி வரும் குறைபாடுகள் தொடர்பான ஒழுங்குமுறைப்படுத்தும் அல்லது மேற்பார்வை கரிசனைகள் , அத்தகைய கரிசனைகளை கவனத்திற்கு எடுப்பதற்கென வங்கி மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகளுடன் இணைந்த விதத்தில் பொது மக்களுக்கு அவை வெளிப்படுத்தப்பட வேண்டுமென நாணய சபையினால் பணிக்கப்பட்டிருந்தால் அது குறித்த ஒரு கூற்று.			கி/வி	அத்தகைய இணங்கியொழுகா நிலைமைகள் அறிக்கையிடப்படவில்லை
3 (9)	**நிலைமாற்றம் மற்றும் ஏனைய பொது ஒதுக்குகள்**				
3 (9) (i)	இந்த பணிப்புரைக்கு இணங்கியொழுகல் 01.01.2008 தொடக்கம் ஆரம்பமாவதுடன், அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும், பணிப்புரையில் நீட்டிக்கப்பட்ட இணங்கியொழுகல் திகதிகள் குறித்துரைக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களில் தவிர, 01.01.2009 இல் அல்லது அதற்கு முன்னர், இப்பணிப்புரைக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.	இணங்கி-யொழு-கப்பட்டது			வங்கி இது தொடர்பாக மக்கள் வங்கிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் பணிப்புரைகளையும், இலங்கை மத்திய வங்கியின் பணிப்புரைகளையும் பிரயோகிக்கின்றது.

பிரிவு	மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகள்	இணங்கியொழுகப்பட்டது	இணங்கியொழுகப்படவில்லை	கி/வி	குறிப்பு
3 (9) (ii)	திட்டவட்டமான நியதிச் சட்டங்களின் மூலம் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டிருக்கும் வங்கிகளை பொறுத்தவரையில், அவற்றின் சபைகள் அத்தகைய நியதிச் சட்டங்களில் குறித்துரைக்கப் பட்டுள்ளவாறு, சம்பந்தப்பட்ட நியதிச் சட்டங்களின் பிரகாரம் சபை தொடர்ந்து செயற்பட்டு வரும்; சம்பந்தப்பட்ட நியதிச் சட்டங்களின் ஏற்பாடுகளுடன் முரண்படாதவையாக இருந்து வரும் இந்தப் பணிப்புரைகளின் அனைத்து ஏற்பாடுகளுக்கும் இணங்கியொழுகுவதற்கு அவை நடவடிக்கை எடுக்கும்.	இணங்கி-யொழு-கப்பட்டது			வங்கி இது தொடர்பாக மக்கள் வங்கிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் பணிப்புரைகளையும், இலங்கை மத்திய வங்கியின் பணிப்புரைகளையும் பிரயோகிக்கின்றது.
3 (9) (iii)	இப்பணிப்புரை இலங்கையில் இயங்கி வரும் வெளிநாட்டு வங்கிகளின் கிளைகளுக்கும், அவ்வங்கியின் நாட்டில் பிரயோகிக்கத்தக்க ஒழுங்குவிதிகள் மற்றும் சட்டங்கள் என்பவற்றுக்கு பொருந்திச் செல்லக் கூடிய அளவுக்கு பிரயோகிப்படும். ஒரு வெளிநாட்டு வங்கியின் கிளை அதன் ஆண்டறிக்கை மற்றும் இலங்கையின் கிளைச் செயற்பாடுகள் தொடர்பான கணக்குகள் என்பவற்றுடன் இணைந்த விதத்தில் அதன் தாய் வங்கியின் வருடாந்த நிறுவன ஆளுகை அறிக்கையையும் வெளியிடுதல் வேண்டும்.	இணங்கி-யொழு-கப்பட்டது			வங்கி இது தொடர்பாக மக்கள் வங்கிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் பணிப்புரைகளையும், இலங்கை மத்திய வங்கியின் பணிப்புரைகளையும் பிரயோகிக்கின்றது.
3 (9) (iv)	இப்பணிப்புரையின் எந்தவொரு ஏற்பாட்டுக்கும் எந்தவொரு வங்கியினது அமைப்பு விதிகளுக்கும் (அல்லது உள்ளக விதிமுறைகளுக்கும்) ஒரு முரண்பாடு தோன்றும் சந்தர்ப்பத்தில் பணிப்புரையின் ஏற்பாடுகள் செல்லுபடியாகும். எவ்வாறிருப்பினும், ஒரு தனிப்பட்ட வங்கியின் அமைப்பு விதிகள் இப்பணிப்புரைகளில் குறித்துரைக்கப்பட்டிருப்பவற்றிலும் பார்க்க கண்டிப்பான விதிமுறைகளை நிர்ணயித்திருந்தால், நியதிக் குறிப்பிலிருக்கும் அத்தகைய விதிமுறைகளை பின்னபற்ற முடியும்.	இணங்கி-யொழு-கப்பட்டது			வங்கி இது தொடர்பாக மக்கள் வங்கிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் பணிப்புரைகளையும், இலங்கை மத்திய வங்கியின் பணிப்புரைகளையும் பிரயோகிக்கின்றது.
3 (9) (v)	வங்கித்தொழில் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் சுகயீனம் அல்லது ஏதேனும் இயலாமையை கொண்டிருக்கும் ஒரு நபர் தொடர்பாக, பணிப்புரை 3 (2) (ii) B, 3 (3) (ii) A, மற்றும் குறிப்பிடப்பட்டிருக்கும் விதிவிலக்குகளை வழங்கக் கூடாதென நாணய சபை கருத்தில் கொள்ள முடியும். அத்தகைய காரணம் நாணய சபையினால் அந்நபருக்கு அறிவிக்கப்படும். கருத்துக்களை கேட்ட பின்னர் நாணய சபை விதிவிலக்கு காலப் பிரிவை வரையறை செய்ய முடியும்.				

சபை கணக்காய்வு கமிட்டி அறிக்கை

சபை கணக்காய்வு சங்கத்தின் நடைமுறைகள், சங்கத்தின் செயற்பாட்டுக்கென பணிப்பாளர் சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் சாசனத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தன.

சபை கணக்காய்வு சங்கம் 2012 ஆம் ஆண்டில் உள்ளக கணக்காய்வு கருமங்களின் முன்னேற்றம், போதியளவிலான தன்மை, நட்டவச்சங்களை முகாமைத்துவம் செய்வதற்கான கட்டுப்பாடுகளின் வினைத்திறன் என்பவற்றை மீளாய்வு செய்வதற்கென பத்து (10) ஒழுங்கான கூட்டங்களை நடத்தியது. அக்கூட்டங்களில் பின்வரும் விடயங்கள் தொடர்பாக விசேடமாக கவனம் செலுத்தப்பட்டது:

- வங்கி எதிர்கொண்டு வரும் பல்வேறு விதமான இடர்பாடுகள் இனங்கண்டு கொள்வதற்கும், கணக்காய்வுக்கு முன்னரான இடர் மதிப்பீடு மற்றும் கணக்காய்வு திட்டமிடல் என்பவற்றுக்கான அனைத்துமடங்கிய கணக்காய்வு முறைமையியல் ஒன்றை விசேடமாக வலியுறுத்தும் விதத்தில் பொருத்தமான முகாமைத்துவத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் இடரை அடிப்படையாக கொண்ட உள்ளக கணக்காய்வு அணுகுமுறையை மேலும் பலப்படுத்துதல்.
- கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட குறைபாடுகளை ஆரம்பத்திலேயே நிவர்த்தி செய்தல் மற்றும் கணக்காய்வு முடிவுகள் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வு திணைக்களத்திற்கூடாக ஒழுங்கான அடிப்படையில் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படுவதனை உறுதிப்படுத்துதல்.
- வங்கிக் கிளைகளின் கணக்காய்வு தரப்படுத்தலை/செயலாற்றுகையை விருத்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள்.
- உள்ளக கட்டுப்பாட்டு முறையை பரிசீலனை செய்தல் மற்றும் வணிக இடர் முகாமைத்துவம்.
- வெளி மற்றும் உள்ளக கணக்காய்வு செயன்முறைகளை மீளாய்வு செய்தல்.
- சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் குறிப்பாக மத்திய வங்கியின் வழிகாட்டுதல்கள் மற்றும் நியதிபூர்வமான நிதிசார் அறிக்கையிடல் தேவைகள் என்பவற்றுக்கு இணங்கியொழுகுவதனை கண்காணிப்பதற்கென இருந்து வரும் நிதிசார் அறிக்கையிடும் செயன்முறைகள் மற்றும் நடைமுறைகள் என்பவற்றை மீளாய்வு செய்தல்.
- இலங்கை மத்திய வங்கியின் நியதிபூர்வ பரிசீலனை அறிக்கை, முகாமைத்துவ கடிதம், கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் பொது தொழில்முயற்சிகள் கமிட்டியின் அறிக்கைகள் என்பவற்றை மீளாய்வு செய்தல்; மேலே குறிப்பிடப்பட்ட அறிக்கைகளில் எழுப்பப்பட்ட விடயங்கள் தொடர்பாக 2012 ஆம் வருடத்தின் போது, முகாமைத்துவத்தினால் எடுக்கப்பட்ட நிவர்த்தி வழிமுறைகளை அவதானித்தல்.
- முதன்மையான கணக்கீட்டு மற்றும் கட்டுப்பாடு தொடர்பான பிரச்சினைகள் என்பவற்றை இனங்கண்டு கொள்வதற்கும், போதியளவிலான கட்டுப்பாட்டுச் சூழலொன்றை ஸ்தாபிக்கும் முதன்மையான நோக்கத்துடன் அவற்றை தீர்த்து வைப்பதற்கும், வங்கியின் நிதிசார் பெறுபேறுகள் குறித்த உண்மையானதும், நியாயமானதுமான ஒரு சித்திரத்தை வழங்கும் நிதிசார் கூற்றுக்களின் சமர்ப்பணத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் ஏனைய கருமங்களின் சிரேஷ்ட ஆளணியினருடன் மீளாய்வு செய்தல்.
- வங்கியின் உள்ளக கட்டுப்பாடு குறித்த பணிப்பாளர்களின் கூற்றை வெளியிடுவதற்கு முன்னர் உள்ளக கட்டுப்பாட்டு முறையை மீளாய்வு செய்தல்.
- கிளை வலையமைப்பின் செயற்பாடுகளை கண்காணிப்பதனை இயலச் செய்யும் விதத்தில் உள்ளக கணக்காய்வு திணைக்களத்திற்குள் மென்பொருள் கணக்காய்வு கருவியை அமுல் செய்தல்.
- வங்கி எதிர்கொண்டு வரும் பல்வேறு இடர்களை இனங்கண்டு கொள்ளும் விதத்திலும், அத்தகைய இடர் தாக்கங்களை தணிக்கும் விதத்திலும், கிளை வலையமைப்பு முழுவதிலும் மிகச் சிறந்த நடைமுறைகள் மற்றும் சாதகமான தர உத்தரவாதம் என்பவற்றை தெரிவித்து, ஊக்குவிக்கும் விதத்திலும் உள்ளக கணக்காய்வு கருமங்கள் நெறிப்படுத்தப்பட்டிருந்தன.
- தனது கருமத்தின் செயல்திறன் மற்றும் வினைத்திறன் என்பவற்றை விருத்தி செய்து கொள்ளும் விடயத்தில் தொடர்ச்சியான முன்னேற்றத்தை சாதித்துக் கொள்வதில் உள்ளக கணக்காய்வு திணைக்களம் காட்டி வரும் உறுதியான அர்ப்பணிப்புணர்வை கமிட்டி அவதானித்துள்ளது. அது 2012 ஆம் வருடம் தொடர்பாக 751 கணக்காய்வு ஒப்படைகளை பூர்த்தி செய்திருந்தது.

கணக்காய்வு நோக்கத்திற்கென கணக்காய்வாளர் நாயகத்திற்கு தேவைப்படும் அனைத்து தகவல்கள் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படுவதனையும், நிதிசார் கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் சமர்ப்பணம் என்பவற்றில் இலங்கை கணக்கீட்டு தரநியமங்கள் இணங்கியொழுகப்படுவதனையும் BAC உறுதிப்படுத்தியது. தேவையான கட்டுப்பாடுகள் மற்றும் நடைமுறைகள் இருந்து வருகின்றன என்றும் அனைத்து பொருள்சார்ந்த விடயங்களிலும் ச க க வின் சாசனத்திற்கு இணங்கியொழுகப்பட்டுள்ளது என்றும் BAC கருதுகின்றது.



ஜெஹான் பி. அமரதுங்க
தலைவர்
சபை கணக்காய்வு கமிட்டி

ஜனவரி 8, 2013

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இல
My No. FB/G/PB/FA/2012

ඔබේ අංකය
உமது இல
Your No.

දිනය
திகதி
Date மார்ச் 27, 2013

2012 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான மக்கள் வங்கி மற்றும் அதன் துணை நிறுவனங்கள் என்பவற்றின் நிதிசார் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

மக்கள் வங்கியின் நிதிசார் கூற்றுக்கள் ("வங்கி") மற்றும் வங்கி அதன் துணை நிறுவனங்கள் என்பவற்றின் (குழுமம்) திரண்ட நிதிசார் கூற்றுக்கள் தொடர்பான 2012 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான கணக்காய்வு டிசம்பர் 2012, 31 இல் உள்ளவாறு நிதி நிலைக் கூற்றக்கள், வருமானக் கூற்றுக்கள், அனைத்துமடங்கிய வருமானக் கூற்றுக்கள், பங்குமூலதனத்தில் மாற்றங்கள் தொடர்பான கூற்றுக்கள், அத்திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான பணப் பாய்ச்சல் கூற்றுக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கை-களின் சாராம்சம் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்கள் என்பவற்றை உள்ளடக்கிய விதத்தில் நிதிசார் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியல் யாப்பின் உறுப்புரை 154(1) இன் ஏற்பாடுகளுக்கு இணங்கிய விதத்தில் எனது பணிப்புரையின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வை மேற்கொள்வதற்கென தொழில் புரிந்து வரும் பட்டயக் கணக்காய்வாளர் நிறுவமொன்றின் உதவி எனக்குக் கிடைத்தது. துணை நிறுவனங்களின் நிதிசார் கூற்றுக்கள், சம்பந்தப்பட்ட துணை நிறுவனங்களின் உறுப்பினர்களினால் நியமனம் செய்யப்பட்ட தொழில் புரியும் பட்டயக் கணக்காளர் நிறுவனங்களினால் கணக்காய்வு செய்யப்பட்டன.

திரண்ட நிதிசார் கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்பு

நிதிசார் கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு தர நியமங்களின் பிரகாரமும், மோசடி அல்லது தவறு காரணமாக பொருள்சார் பிழைகள் இல்லாத விதத்தில் நிதிசார் கூற்றுக்களை தயாரிப்பதற்கு இயலச் செய்வதற்கென அவசியமானது என முகாமைத்துவம் நிர்ணயிக்கும் உள்ளகக் கட்டுப்பாட்டின் பிரகாரமும் தயாரித்து, நியாயமான விதத்தில் சமர்ப்பிக்கும் பொறுப்பினை முகாமைத்துவம் கொண்டுள்ளது.

கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வை அடிப்படையாக கொண்டு இந்த நிதிசார் கூற்றுக்கள் தொடர்பாக ஓர் அபிப்பிராயத்தை வெளியிடுவது எனது பொறுப்பாகும். இக்கணக்காய்வை இலங்கை கணக்காய்வு தர நியமங்களின் பிரகாரம் நான் மேற்கொண்டேன். அந்த தர நியமங்களின் பிரகாரம், நான் தார்மீக தேவைகளுக்கு இணங்கியொழுக வேண்டியிருப்பதுடன், நிதிசார் கூற்றுக்கள் பொருள்சார் தவறுகள் இல்லாதவையாக இருந்து வருகின்றன என்பது குறித்த நியாயமான ஒரு உத்தரவாதத்தை பெற்றுக் கொள்ளும் விதத்தில் இக்கணக்காய்வை திட்டமிடப்பட்டு, நடத்துதல் வேண்டும். நிதிசார் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள மற்றும் வெளிப்படுத்துகைகள் மற்றும் தொகைகளுக்கு ஆதரவான கணக்காய்வு சான்றினை பரிசீலனை செய்வதனையும் இக்கணக்காய்வு உள்ளடக்குகின்றது. தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள், மோசடி காரணமாக அல்லது தவறு காரணமாக நிதிசார் கூற்றுக்களில் பொருள்சார் பிழைகள் இடம்பெறக் கூடிய நட்டவச்சத்தை மதிப்பீடு செய்வதனையும் உள்ளடக்கிய கணக்காய்வாளரின் முடிவைப் பொறுத்து அமைகின்றது. அந்த இடர் மதிப்பாய்வுகளை மேற்கொள்வதில் கணக்காய்வாளர் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துக் கொள்ளும் பொருட்டு வங்கியின் நிதிசார் கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் நியாயமான சமர்ப்பணம் என்பவற்றுடன் சம்பந்தப்பட்ட உள்ளகக் கட்டுபாட்டினை கவனத்தில் எடுக்கின்றார் ஆனால், வங்கியின் உள்ளக கட்டுப்பாட்டின் வினைத்திறன் குறித்த அபிப்பிராயமொன்றை வெளியிடும் நோக்கதிற்காக அவர் இதனை மேற்கொள்வதில்லை. இக் கணக்காய்வு, முகாமைத்துவத்தினால் பயன்படுத்தப்பட்ட கணக்காய்வு கொள்கைகளின் பொருத்தப்பாடு, முகாமைத்துவத்தினால்

மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயமான தன்மையையும், அதே போல நிதிசார் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பணத்தையும் மதிப்பீடு செய்வதனை உள்ளடக்குகின்றது.

எனக்குக் கிடைத்திருக்கும் கணக்காய்வுச் சான்று, எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு ஒரு அடிப்படையை வழங்குவதற்கு போதுமானதாகவும், பொருத்தமானதாகவும் இருந்து வருகின்றது என நான் நம்புகின்றேன்.

அபிப்பிராயம் - வங்கி

இந்த நிதிசார் கூற்று 2012 டிசம்பர் 31 இல் உள்ளவாறு வங்கியின் நிதி நிலை மற்றும் அதன் நிதிசார் செயலாற்றுகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான காசுப் பாய்ச்சல்கள் என்பன குறித்து இலங்கை கணக்கீட்டு தரநியமங்களின் பிரகாரம் உண்மையானதும், நியாயமானதுமான ஒரு தோற்றத்தை வழங்குகின்றது என்பதே எனது அபிப்பிராயமாகும்.

நிபந்தனையுடன் கூடிய அபிப்பிராயத்திற்கான அடிப்படை - குழுமம்

வங்கி 2010 டிசம்பர் 31 மற்றும் 2011 டிசம்பர் 31 ஆகிய வருடங்கள் தொடர்பாக அதன் திரண்ட நிதிசார் கூற்றுக்களை அதன் துணை நிறுவனங்களின் கணக்காய்வு செய்யப்படாத நிதிசார் கூற்றுக்களை, அடிப்படையாகக் கொண்டு தயாரித்திருந்தது. எனவே, 2012 டிசம்பர் 31 முடிவடைந்த வருடத்திற்கான திரண்ட நிதிசார் கூற்றுக்களில் பயன்படுத்தப்பட்டிருக்கும் ஆரம்ப நிலுவைகளின் முழுமையான தன்மை மற்றும் துல்லிய தன்மை என்பன குறித்து என்னால் திருப்தியடைய முடியாதுள்ளது.

நிபந்தனையுடன் கூடிய அபிப்பிராயம் - குழுமம்

நிபந்தனையுடன் கூடிய அபிப்பிராய பந்தி தொடர்பாக விவரிக்கப்பட்ட விளைவுகளின் தாக்கங்கள் தவிர, திரண்ட நிதிசார் கூற்றுக்கள் 2012 டிசம்பர் 31 இல் உள்ளவாறு வங்கி மற்றும் அதன் துணை நிறுவனங்கள் என்பவற்றின் நிதி நிலைமை மற்றும் அவற்றின் நிதிசார் செயலாற்றுகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான பணப் பாய்ச்சல்கள் என்பன தொடர்பாக இலங்கை கணக்கீட்டு தரநிமயங்களின் பிரகாரம் உண்மையானதும், நியாயமானதுமான ஒரு தோற்றத்தை முன்வைக்கின்றன என்பத எனது அபிப்பிரயாமாகும்.

ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குவிதிகள் குறித்த அறிக்கை

இந்த நிதிசார் கூற்றுக்கள் 1988 ஆம் ஆண்டின் இல. 30 வங்கித்தொழில் சட்டம் மற்றும் பின்னர் அதற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் என்பவற்றின் மூலம் அவசியப்படுத்தப்படும் தகவல்களை சமர்ப்பிக்கின்றன.

இலங்கை மத்திய வங்கி "உரிமம் பெற்றுள்ள வங்கிகளின் கடனளிப்பு வளர்ச்சி குறித்த உச்ச வரம்பு" தொடர்பான சுற்றறிக்கையை 2012 மார்ச் 12 ஆந் திகதியிட்டு வெளியிட்டுள்ளது. அதன் பிரகாரம் உரிமம் பெற்றுள்ள அனைத்து வங்கிகளும் 2012 ஆம் வருடம் தொடர்பாக, ஒரு வங்கியின் கடனளிப்பு வளர்ச்சியை 2011 ஆம் ஆண்டின் முடிவில் நிலுவையிலிருக்கும் மொத்தக் கடன் தொகை அல்லது ரூ. 800 மில்லியன் எது உயர்வாக இருக்கின்றதோ அந்தத் தொகையின் 18% ஐ மிகைக்காத விதத்தில் பராமரித்து வர வேண்டுமென அவசியப்படுத்தப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும், இக்காலப் பிரிவின் போது வங்கி இத்தேவைக்கு இணங்கியொழுகியிருக்கவில்லை 18% ஐ மிகைக்கும் விதத்தில் அது கடனளிப்பை வழங்கியுள்ளது.

விதிவிலக்கு

1971 ஆம் ஆண்டின் இல. 38 நிதிச் சட்டத்தின் பிரிவு 5 (1) இன் மூலம் தனக்கு வழங்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பிரகாரம் அப்போதைய நிதி அமைச்சரினால் 1992 மே 14 ஆந் திகதி இல. 715 அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அவருடைய ஒரு கட்டளையின் மூலம் 1971 ஆம் ஆண்டின் இல. 38 நிதி சட்டத்தின் பாகம் II இன் ஏற்பாடுகளிலிருந்து வங்கிக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்திற்கான அறிக்கை

அரசியல் யாப்பின் உறுப்புரை 154 (6) இன் ஏற்பாடுகளுக்கு இணங்கிய விதத்திலான பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கை உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எச்.ஏ.எஸ். சமரவீர
கணக்காய்வாளர் நாயகம்

අංක 306/72 පොල්දූව පාර,
බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව

දුරකථනය
தொலைபேசி
Telephone
2887028 - 34

இல. 306/72, பொல்துவ வீதி,
பத்தரமுல்லை இலங்கை

ෆැක්ස් අංකය
பக்ஸ் இல
Fax No.
2887223

No.306/72, Polduwa Road,
Battaramulla , Sri Lanka

ඉලෙක්ට්‍රොනික් තැපෑල්
ஈ- மெயில்
E-mail.
oaggov@sltnet.lk

வருமானக் கூற்று

டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்துக்குரியது	குறிப்பு	வங்கி 2012 ரூ. '000	வங்கி 2011 ரூ. '000	வங்கி மாற்றம் %	குழுமம் 2012 ரூ. '000	குழுமம் 2011 ரூ. '000	குழுமம் மாற்றம் %
மொத்த வருமானம்	6	94,777,398	68,298,254	38.8	109,973,739	79,899,674	37.6
வட்டி வருமானம்		85,241,301	61,788,438	38.0	100,844,385	73,617,879	37.0
வட்டிச் செலவுகள்		(51,323,506)	(31,470,220)	63.1	(60,211,285)	(37,339,887)	61.3
தேறிய வட்டி வருமானம்	7	33,917,795	30,318,218	11.9	40,633,099	36,277,991	12.0
கட்டணங்கள் மற்றும் தரகு வருமானம்		3,541,589	2,929,812	20.9	4,289,051	3,188,365	34.5
கட்டணங்கள் மற்றும் தரகுச் செலவுகள்		(144,364)	(396,912)	(63.6)	(144,364)	(396,912)	(63.6)
தேறிய கட்டணங்கள் மற்றும் தரகு வருமானம்	8	3,397,225	2,532,900	34.1	4,144,688	2,791,453	48.5
வியாபாரத்திலிருந்து கிடைத்த தேறிய ஆதாயம்	9	2,072,563	922,329	124.7	2,095,881	896,741	133.7
ஏனைய செயற்பாட்டு வருமானம் (தேறிய)	10	3,921,946	2,657,675	47.6	2,744,423	2,196,689	24.9
மொத்த செயற்பாட்டு வருமானம்		43,309,529	36,431,122	18.9	49,618,091	42,162,875	17.7
கடன்கள் மற்றும் ஏனைய நட்டங்களுக்கான வலுக்குறைப்பு	11	(3,874,383)	(410,443)	844.0	(4,575,378)	(684,539)	568.4
தேறிய செயற்பாட்டு வருமானம்		39,435,146	36,020,679	9.5	45,042,713	41,478,335	8.6
ஆளணிச் செலவுகள்	12	(13,818,647)	(10,547,583)	31.0	(14,932,771)	(11,418,120)	30.8
ஏனைய செலவுகள்	13	(7,902,154)	(7,439,042)	6.2	(9,626,216)	(8,516,509)	13.0
பெறுமதி சேர் வரிக்கு முன்னர் செயற்பாட்டு இலாபம் (VAT)		17,714,345	18,034,054	(1.8)	20,483,725	21,543,707	(4.9)
நிதிசார் சேவைகள் மீதான பெறுமதி சேர் வரி (VAT)		(2,464,963)	(2,434,052)	1.3	(2,745,109)	(2,734,448)	0.4
பெறுமதிசேர் வரியின் பின்னர் செயற்பாட்டு இலாபம் (VAT)		15,249,382	15,600,001	(2.2)	17,738,616	18,809,259	(5.7)
இணைக் கம்பெனிகளின் இலாபத்தில்/(நட்டத்தில்) பங்கு		–	–		(67,207)	33,663	
வரிக்கு முன்னர் இலாபம்		15,249,382	15,600,001	(2.2)	17,671,409	18,842,921	(6.2)
வரிச் செலவுகள்	14	(4,355,390)	(5,153,628)	(15.5)	(5,774,717)	(6,319,383)	(8.6)
வருடத்திற்கான இலாபம்		10,893,992	10,446,373	4.3	11,896,692	12,523,538	(5.0)
இலாபம் பகிரப்பட்ட விதம்:							
வங்கியின் பங்குதாரர்கள்		10,893,992	10,446,373	4.3	11,230,199	12,117,411	(7.3)
கட்டுப்படுத்தாத அக்கறைகள்		–	–	–	666,494	406,127	64.1
வருடத்திற்கான இலாபம்		10,893,992	10,446,373	4.3	11,896,692	12,523,538	(5.0)
இலாபத்தில் பங்கொன்றுக்கான சம்பாத்தியம்	15						
சாதாரண பங்கொன்றுக்கான அடிப்படை சம்பாத்தியம்	15.1	10,894	10,446	4.3	11,230	12,117	(7.3)
சாதாரண பங்கொன்றுக்கான பெறுமதி குறைக்கப்பட்ட சம்பாத்தியம்	15.2	76	73	4.3	78	84	(7.3)

பக்கங்கள் 163 தொடக்கம் 242 வரையிலுள்ள குறிப்புக்கள் இந்த நிதிசார் கூற்றுக்களின் உள்ளார்ந்த பாகங்களாகும்.

அனைத்துமடங்கிய வருமானக் கூற்று

டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கானது	வங்கி		குழுமம்	
	2012 ரூ. '000	2011 ரூ. '000	**2012 ரூ. '000**	2011 ரூ. '000
வருடத்திற்கான இலாபம்	10,893,992	10,446,373	11,896,692	12,523,538
வரியைக் கழித்த ஏனைய அனைத்துமடங்கிய வருமானம்				
வரையறுக்கப்பட்ட அனுகூலத் திட்டங்கள் மீதான தரவுக் கணிப்பு ஆதாயங்கள் மற்றும் நட்டங்கள்.	(57,966)	(2,170,391)	(57,748)	(2,169,308)
விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கும் நிதிச் சொத்துக்களின் மீள் அளவீடு மீதான ஆதாயங்கள், நட்டங்கள்	(18,489)	(96,671)	(38,609)	(93,090)
கழிக்கவும்:				
ஏனைய அனைத்துமடங்கிய வருமானக் கூறுகளுடன் சம்பந்தப்பட்ட வரிச் செலவு/(வருமானம்)	–	–	–	–
வரியை கழித்து வருடத்திற்கான ஏனைய அனைத்துமடங்கிய வருமானம்	(76,455)	(2,267,062)	(96,357)	(2,262,398)
வருடத்திற்கான மொத்த அனைத்துமடங்கிய வருமானம்	10,817,537	8,179,311	11,800,335	10,261,139
காரணமாக:				
வங்கியின் பங்குகளை வைத்திருப்பவர்கள்	10,817,537	8,179,311	11,138,781	9,853,846
கட்டுப்படுத்தாத அக்கறைகள்	–	–	661,554	407,293
	10,817,537	8,179,311	11,800,335	10,261,139

பக்கங்கள் 163 தொடக்கம் 242 வரையில் தரப்பட்டுள்ள குறிப்புக்கள் இந்த நிதிசார் கூற்றுக்களின் ஓர் உள்ளார்ந்த பாகமாகும்.

நிதி நிலை தொடர்பான கூற்று

டிசம்பர் 31 இல் உள்ளவாறு	குறிப்பு	வங்கி 2012 ரூ. '000	வங்கி 2011 ரூ. '000	வங்கி மாற்றம் %	வங்கி 2010 ரூ. '000	குழுமம் 2012 ரூ. '000	குழுமம் 2011 ரூ. '000	குழுமம் மாற்றம் %	குழுமம் 2010 ரூ. '000
சொத்துக்கள்									
காசு மற்றும் காசுக்கு இணையானவை	17	24,401,979	16,792,665	45.3	17,268,510	26,102,723	18,866,425	38.4	19,518,151
இ.மத்திய வங்கியிலுள்ள நிலுவை	18	43,412,048	35,717,033	21.5	26,739,341	43,412,048	35,717,033	21.5	26,739,341
வங்கிகளில் வைக்கப்பட்டிருப்பவை	19	13,341,252	16,893,327	(21.0)	–	13,341,252	16,893,327	(21.0)	–
வியாபாரத்திற்கான ஏனைய நிதிச் சொத்துக்கள்	20	18,772,710	23,891,041	(21.4)	20,975,857	19,002,137	23,984,207	(20.8)	21,033,924
கடன்கள் மற்றும் வங்கிகளுக்கு வருமதிகள்	21	35,350,098	31,731,952	11.4	53,268,853	35,350,098	31,731,952	11.4	53,268,853
கடன்கள் மற்றும் ஏனைய வாடிக்கையாளர்களுக்கான வருமதிகள்	22	611,414,267	461,655,759	32.4	358,593,640	690,197,310	534,875,220	29.0	407,049,791
நிதி முதலீடுகள் - விற்பனைக்கு கிடைப்பவை	23	27,977,489	9,464,211	195.6	561,431	27,982,839	9,497,534	194.6	600,341
நிதி முதலீடுகள் - முதிர்ச்சிக்கென வைக்கப்பட்டிருப்பவை	24	78,522,570	46,303,056	69.6	50,210,126	80,151,886	47,798,436	67.7	50,953,273
துணை நிறுவனங்களில் முதலீடுகள்	25	1,253,434	1,419,950	(11.7)	1,519,950	–	–	–	–
இணை நிறுவனங்களில் முதலீடுகள்	26	273,100	273,100	–	155,500	309,989	427,196	(27.4)	248,830
நற்பெயர், தொட்டுணர முடியாத சொத்துக்கள்	27	44,352	100,807	(56.0)	196,636	405,768	460,807	(11.9)	559,203
சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்	28	8,234,565	7,522,702	9.5	6,866,152	10,923,098	9,932,841	10.0	8,226,965
முதலீட்டுச் சொத்துக்கள்	29	398,508	406,165	(1.9)	414,403	398,508	406,165	(1.9)	414,403
முன்செலுத்தப்பட்ட குத்தகைகள்	30	291,866	325,224	(10.3)	326,517	291,866	325,224	(10.3)	326,517
தாமதப்படுத்தப்பட்ட வரிச் சொத்துக்கள்	31	501,587	186,884	168.4	62,455	501,997	195,734	156.5	76,035
ஏனைய சொத்துக்கள்	32	8,916,779	9,392,788	(5.1)	9,947,673	12,488,561	13,277,350	(5.9)	14,448,992
மொத்தச் சொத்துக்கள்		873,106,604	662,076,663	31.9	547,107,045	960,860,079	744,389,451	29.1	603,464,618
பொறுப்புக்கள்									
வங்கிகளுக்கு செலுத்த வேண்டிய தொகைகள்	33	94,124,713	43,351,641	117.1	6,155,237	133,987,864	81,133,645	65.1	36,723,268
ஏனைய வாடிக்கையாளர்களுக்கு செலுத்த வேண்டிய தொகைகள்	34	683,950,837	550,226,448	24.3	470,969,729	708,896,611	572,721,654	23.8	481,093,664
ஏனைய கடன்படல்கள்	35	41,024,958	20,700,940	98.2	32,992,294	40,740,098	19,894,126	104.8	32,992,294
நடப்பு வரிப் பொறுப்புக்கள்		1,860,689	2,806,539	(33.7)	1,527,448	1,933,576	3,307,218	(41.5)	2,244,303
தாமதப்படுத்தப்பட்ட வரிப் பொறுப்புக்கள்	31	–	–	–	–	864,461	337,537	156.1	551,991
ஏனைய பொறுப்புக்கள்	36	12,940,620	11,902,462	8.7	11,053,014	18,688,304	18,261,498	2.3	18,721,475
உப தவணைக் கடன்கள்	37	10,000,000	10,000,000	–	5,000,000	10,000,000	10,000,000	–	5,000,000
மொத்த பொறுப்புக்கள்		843,901,816	638,988,030	32.1	527,697,722	915,110,913	705,655,679	29.7	577,326,995
பங்கு									
குறிக்கப்பட்ட மூலதனம்/குறித்துரைக்கப்பட்ட மூலதனம்	38	7,201,998	7,201,998	–	7,201,998	7,201,998	7,201,998	–	7,201,998
சட்டபூர்வமான ஒதுக்கு நிதியம்	39	2,437,291	1,892,591	28.8	49,998	2,437,291	1,892,591	28.8	49,998
ஏனைய ஒதுக்குகள்	40	15,585,914	11,174,731	39.5	7,829,431	16,394,908	11,507,929	42.5	7,829,431
பிடித்து வைக்கப்பட்ட சம்பாத்தியங்கள்	41	3,979,585	2,819,313	41.2	4,327,895	15,135,134	13,708,652	10.4	10,972,971
மொத்த பங்குதாரர்களின் பங்கு		29,204,788	23,088,633	26.5	19,409,322	41,169,330	34,311,169	20.0	26,054,398
கட்டுப்படுத்தப்படாத அக்கறைகள்	42	–	–	–	–	4,579,836	4,422,603	3.6	83,225
மொத்தப் பங்கு மூலதனம்		29,204,788	23,088,633	26.5	19,409,322	45,749,166	38,733,772	18.1	26,137,623
மொத்தப் பங்கு மற்றும் பொறுப்புக்கள்		873,106,604	662,076,663	31.9	547,107,045	960,860,079	744,389,451	29.1	603,464,618
அவசர கால பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள்	43	207,021,384	190,732,157	8.5	131,397,539	208,570,110	191,045,197	9.2	131,397,539

பக்கங்கள் 163 தொடக்கம் 242 வரையிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் இந்த நிதிசார் கூற்றுக்களின் உள்ளார்ந்த பாகங்களாகும்.

இந்த நிதிசார் கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் சமர்ப்பணம் என்பவற்றுக்கான பொறுப்பினை பணிப்பாளர் சபை கொண்டுள்ளது. நிதிசார் கூற்றுக்களுக்கு பணிப்பாளர் சபையின் ஒப்புதல் வழங்கப்பட்டிருப்பதுடன், சபையின் சார்பில் கைசாத்திடப்பட்டுள்ளது.

யொஹான் ஏ. சூசா
தலைமை அதிகாரி - நிதி

என். வசந்த குமார்
பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர்

காமினி செனரத்
தலைவர்

மார்ச் 27, 2013, கொழும்பு

காசுப் பாய்ச்சல் கூற்று

டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்துக்குரியது	குறிப்பு	வங்கி 2012 ரூ. '000	வங்கி 2011 ரூ. '000	குழுமம் 2012 ரூ. '000	குழுமம் 2011 ரூ. '000
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்கள்					
வரிக்குப் பின்னர் இலாபம்		15,249,382	15,600,001	17,671,409	18,842,921
சீராக்கங்கள்:					
வரிக்கு முன்னர் இலாபத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள காசல்லாத உருப்படிகள்	44	3,431,840	1,983,405	4,515,991	2,442,779
செயற்பாட்டு சொத்துக்களில் மாற்றங்கள்	45	(173,144,405)	(79,981,135)	(188,289,730)	(105,811,595)
செயற்பாட்டு பொறுப்புக்களில் மாற்றங்கள்	46	204,656,120	101,831,444	217,986,736	121,421,930
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து கிடைத்த தேறிய ஆதாயங்கள்		–	–	–	–
இணைக் கம்பெனி மற்றும் கூட்டு முயற்சிகள் இலாபங்களில் பங்கு		–	–	67,207	(33,663)
இணை மற்றும் துணைக் கம்பெனிகளிலிருந்து பங்கிலாப வருமானம்		(1,622,503)	(833,250)	(1,622,503)	(833,250)
உப கடன் மீதான வட்டிச் செலவு		1,337,500	737,500	1,337,500	737,500
வரையறுக்கப்பட்ட அனுகூலத் திட்டங்களுக்கான பங்களிப்பு		1,108,383	992,261	1,108,384	992,261
செலுத்தப்பட்ட வரி		(5,608,101)	(3,998,966)	(6,919,856)	(5,590,621)
தேறிய காசு - செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்டவை		45,408,216	36,331,260	45,855,138	32,168,262
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்கள்					
சொத்து, பொறித்தொகுதி, உபகரண கொள்வனவு		(1,327,807)	(1,600,826)	(2,190,339)	(2,871,908)
சொத்து, பொறித்தொகுதி, உபகரண விற்று வரவுகள்		23,879	37,150	383,938	42,758
நிதி முதலீடுகள் கொள்வனவு		(32,245,111)	(35,821,579)	(32,379,047)	(36,573,812)
நிதி முதலீடுகளின் விற்பனை, முதிர்ச்சி என்பவற்றின் விற்று வரவுகள்		–	–	–	–
தொட்டுணர முடியாத சொத்துக்களின் தேறிய கொள்வனவு		–	–	(18,557)	(12,173)
துணை, இணை நிறுவனங்களின் முதலீடுகளை கையகப்படுத்தியதன் மூலம் கிடைத்த தேறிய காசுப் பாய்ச்சல்		–	–	–	(144,703)
துணை நிறுவனங்களின் கையுதிர்ப்பிலிருந்து கிடைத்த தேறிய காசுப் பாய்ச்சல்		166,516	100,000	–	–
இணை நிறுவனங்கள், கூட்டு முயற்சிகள் கையுதிர்ப்பிலிருந்து கிடைத்த விற்று வரவுகள்		–	(117,600)	50,000	–
துணை, இணை நிறுவனங்களின் முதலீடுகளிலிருந்து கிடைத்த பங்கிலாபங்கள்		1,622,503	833,250	1,622,503	833,250
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து கிடைத்த (பயன்படுத்தப்பட்ட) தேறிய காசு		(31,760,020)	(36,569,605)	(32,531,502)	(38,726,588)
நிதிப்படுத்தல் நடவடிக்கைகளிலிருந்து கிடைத்த காசுப் பாய்ச்சல்கள்					
சாதாரண பங்கு மூலதன வெளியீட்டிலிருந்து கிடைத்த தேறிய தொகைகள்		–	–	–	6,362,902
ஏனைய பங்குக் கருவிகள் வெளியீட்டிலிருந்து கிடைத்த தேறிய தொகைகள்		–	–	–	–
உப கடன் வெளியீட்டிலிருந்து கிடைத்த தேறிய தொகைகள்		–	5,000,000	–	5,000,000
உப கடன் மீளச் செலுத்துதல்		–	–	–	–
உப கடன் மீது செலுத்தப்பட்ட வட்டி		(1,337,500)	(737,500)	(1,337,500)	(737,500)
கட்டுப்படுத்தாத அக்கறைகளுக்கு செலுத்திய பங்கிலாபம்		–	–	(34,027)	21,750
தாய் கம்பெனி பங்குதாரர்களுக்கு செலுத்தப்பட்ட பங்கிலாபம்		–	–	–	–
ஏனைய பங்குக் கருவிகளை வைத்திருப்பவர்களுக்குச் செலுத்திய பங்கிலாபம்		(4,701,382)	(4,500,000)	(4,701,382)	(4,500,000)
பங்கு வெளியீட்டுச் செலவுகள்		–	–	(14,429)	(211,190)
வைத்திருக்கும் பங்குகளின் மாற்றங்களை கையுதிர்த்தல்		–	–	–	(29,362)
நிதிப்படுத்தல் நடவடிக்கைகளிலிருந்து கிடைத்த தேறிய காசு		(6,038,882)	(237,500)	(6,087,338)	5,906,600
காசு, காசுக்கு இணையானவற்றில் தேறிய அதிகரிப்பு/(குறைவு)		7,609,314	(475,845)	7,236,296	(651,726)
வருடத் தொடக்கத்தில் காசு, காசுக்கு இணையானவை		16,792,665	17,268,510	18,866,425	19,518,151
காசு மற்றும் காசுக்கு இணையானவை தொடர்பான செலாவணி வித்தியாசம்		–	–	–	–
வருட முடிவில் காசு, காசுக்கு இணையானவை	17	24,401,979	16,792,665	26,102,723	18,866,425

பக்கங்கள் 163 தொடக்கம் 242 வரையிலுள்ள குறிப்புக்கள் இந்த நிதிசார் கூற்றுக்களின் உள்ளார்ந்த பாகங்களாகும்.

பங்கு மூலதனத்தில் மாற்றங்கள் தொடர்பான கூற்று

டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்துக்குரியது	குறிப்பிடப்பட்ட/ குறித்தொதுக்கப்பட்ட மூலதனம்		ஒதுக்குகள்					மொத்தம்
	சாதாரண பங்குகள் ரூ. '000	குறிப்பிடப்பட்ட/ குறித்தொதுக்கப்-பட்ட மூலதனம் ரூ. '000	ஒதுக்கு நிதி ரூ. '000	மீள் மதிப்பீட்டு ஒதுக்கு ரூ. '000	ஏனைய ஒதுக்குகள் ரூ. '000	முதலீட்டு நிதி ரூ. '000	பிடித்து வைக்கப்பட்ட சம்பாத்தியம் ரூ. '000	ரூ. '000
வங்கி								
31.12.2010 இல் நிலுவை	49,998	7,152,000	49,998	5,630,460	2,198,971	–	5,175,883	20,257,310
பிடித்து வைக்கப்பட்ட சம்பாத்தியங்களின் ஆரம்ப நிலுவைக்கு EIR வைப்பு சீராக்கம்	–	–	–	–	–	–	581,573	581,573
AFS முதலீடுகளின் நியாய மதிப்பில் மாற்றங்கள்	–	–	–	–	–	–	116,925	116,925
ஐந்தொகை சாராத உருப்படிகள் தொடர்பான வலுக்குறைப்பு கட்டணங்கள்	–	–	–	–	–	–	(212,595)	(212,595)
தேறிய வரையறுக்கப்பட்ட அனுகூல பொறுப்பு	–	–	–	–	–	–	(1,333,891)	(1,333,891)
01.01.2011 இல் நிலுவை	49,998	7,152,000	49,998	5,630,460	2,198,971	–	4,327,895	19,409,322
வருடத்திற்கான இலாபம்	–	–	–	–	–	–	10,446,373	10,446,373
யுகுளு முதலீடுகளின் நியாய மதிப்பில் மாற்றங்கள்	–	–	–	–	–	–	(96,671)	(96,671)
தேறிய வரையறுக்கப்பட்ட அனுகூல பொறுப்பு	–	–	–	–	–	–	(2,170,391)	(2,170,391)
காலப் பிரிவின் போது ஒதுக்குகளுக்கு மாற்றல்	–	–	1,842,593	–	1,447,598	1,897,702	(5,187,893)	–
திறைசேறிக்கு செலுத்திய விசேட கட்டணம்	–	–	–	–	–	–	(4,500,000)	(4,500,000)
31.12.2011 இல் நிலுவை	49,998	7,152,000	1,892,591	5,630,460	3,646,569	1,897,702	2,819,313	23,088,633
வருடத்திற்கான இலாபம்	–	–	–	–	–	–	10,893,992	10,893,992
AFS முதலீடுகளின் நியாய மதிப்பில் மாற்றங்கள்	–	–	–	–	–	–	(18,489)	(18,489)
தேறிய வரையறுக்கப்பட்ட அனுகூல பொறுப்பு	–	–	–	–	–	–	(57,966)	(57,966)
சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றின் மீள்மதிப்பீடு மீதான ஆதாயம்/(நட்டம்)	–	–	–	–	–	–	–	–
காலப் பிரிவின் போது ஒதுக்குகளுக்கு மாற்றல்கள்	–	–	544,700	(166,964)	1,432,304	3,145,843	(4,955,882)	–
இலங்கை அரசாங்கத்திற்கு செலுத்திய பங்கிலாபம்	–	–	–	–	–	–	(201,382)	(201,382)
திறைசேறிக்கு செலுத்திய விசேட கட்டணம்	–	–	–	–	–	–	(4,500,000)	(4,500,000)
31.12.2012 இல் நிலுவை	49,998	7,152,000	2,437,291	5,463,496	5,078,873	5,043,545	3,979,585	29,204,788

டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்துக்குரியது	குறிப்பிடப்பட்ட/குறித்தொதுக்கப்பட்ட மூலதனம்		ஒதுக்குகள்					மொத்தம்	கட்டுப்படுத்தாத அக்கறை	மொத்த பங்குமூலதனம்
	சாதாரண பங்குகள்	குறித்தொதுக்கப்பட்ட மூலதனம்	ஒதுக்கு நிதி	மீள் மதிப்பீட்டு ஒதுக்கு	ஏனைய ஒதுக்குகள்	முதலீட்டு நிதி	பிடித்து வைக்கப்பட்ட சம்பாத்தியம்			
	ரூ. '000	ரூ. '000	ரூ. '000	ரூ. '000	ரூ. '000	ரூ. '000	ரூ. '000	ரூ. '000	ரூ. '000	ரூ. '000
குழுமம்										
31.12.2010 இல் நிலுவை	49,998	7,152,000	49,998	5,630,460	2,198,971	–	11,820,958	26,902,385	83,225	26,985,610
பிடித்து வைக்கப்பட்ட சம்பாத்தியங்களின் ஆரம்ப நிலுவைக்கு EIR வைப்பு சீராக்கம்	–	–	–	–	–	–	581,573	581,573	–	581,573
AFS முதலீடுகளின் நியாய மதிப்பில் மாற்றங்கள்	–	–	–	–	–	–	116,925	116,925	–	116,925
ஐந்தொகை சாராத உருப்படிகள் தொடர்பான வலுக்குறைப்பு கட்டணங்கள்	–	–	–	–	–	–	(212,595)	(212,595)	–	(212,595)
தேறிய வரையறுக்கப்பட்ட அனுகூல பொறுப்பு	–	–	–	–	–	–	(1,333,891)	(1,333,891)	–	(1,333,891)
01.01.2011 இல் நிலுவை	49,998	7,152,000	49,998	5,630,460	2,198,971	–	10,972,971	26,054,398	83,225	26,137,623
வருடத்திற்கான இலாபம்/(நட்டம்)	–	–	–	–	–	–	12,117,411	12,117,411	406,127	12,523,538
AFS முதலீடுகளின் நியாய மதிப்பில் மாற்றங்கள்	–	–	–	–	–	–	(93,985)	(93,985)	895	(93,090)
தேறிய வரையறுக்கப்பட்ட அனுகூல பொறுப்பு	–	–	–	–	–	–	(2,169,579)	(2,169,579)	271	(2,169,308)
காலப் பிரிவின் போது ஒதுக்குகளுக்கு மாற்றல்	–	–	1,842,593	–	1,447,598	2,230,900	(5,521,091)	–	–	–
இலங்கை அரசாங்கத்திற்கு செலுத்திய பங்கிலாபம்	–	–	–	–	–	–	(3,580)	(3,580)	–	(3,580)
திறைசேறிக்கு செலுத்திய விசேட கட்டணம்	–	–	–	–	–	–	(4,500,000)	(4,500,000)	–	(4,500,000)
கருதப்பட்ட கையுதிர்ப்பு இலாபம்	–	–	–	–	–	–	3,150,026	3,150,026	–	3,150,026
பங்கு வெளியீட்டு செலவுகள்	–	–	–	–	–	–	(211,190)	(211,190)	–	(211,190)
நன்மதிப்பு சீராக்கம்	–	–	–	–	–	–	(2,969)	(2,969)	–	(2,969)
வைத்திருக்கும் பங்குகளின் மாற்றங்களை கையுதிர்த்தல்	–	–	–	–	–	–	(29,362)	(29,362)	–	(29,362)
ஆண்டின் போது கையகப்படுத்தியது	–	–	–	–	–	–	–	–	3,932,085	3,932,085
31.12.2011 இல் நிலுவை	49,998	7,152,000	1,892,591	5,630,460	3,646,569	2,230,900	13,708,652	34,311,169	4,422,603	38,733,772
வருடத்திற்கான இலாபம்/(நட்டம்)	–	–	–	–	–	–	11,230,199	11,230,199	666,494	11,896,692
AFS முதலீடுகளின் நியாய மதிப்பில் மாற்றங்கள்	–	–	–	–	–	–	(57,802)	(57,802)	54	(57,748)
தேறிய வரையறுக்கப்பட்ட அனுகூல பொறுப்பு	–	–	–	–	–	–	(33,616)	(33,616)	(4,994)	(38,609)
காலப் பிரிவின் போது ஒதுக்குகளுக்கு மாற்றல்கள்	–	–	544,700	(166,964)	1,432,304	3,621,639	(5,431,679)	–	–	–
இலங்கை அரசாங்கத்திற்கு செலுத்திய பங்கிலாபம்	–	–	–	–	–	–	(201,382)	(201,382)	–	(201,382)
திறைசேறிக்கு செலுத்திய விசேட கட்டணம்	–	–	–	–	–	–	(4,500,000)	(4,500,000)	–	(4,500,000)
கருதப்பட்ட கையுதிர்ப்பு இலாபத்தில் அசைவு	–	–	–	–	–	–	435,191	435,191	–	435,191
பங்கு வெளியீட்டு செலவுகள்	–	–	–	–	–	–	(14,429)	(14,429)	(504,322)	(518,751)
31.12.2012 இல் நிலுவை	49,998	7,152,000	2,437,291	5,463,496	5,078,873	5,852,539	15,135,134	41,169,330	4,579,835	45,749,166

நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

1. அறிக்கையிடும் நிறுவனம்

1.1 நிறுவனத் தகவல்

மக்கள் வங்கி, 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் கீழ் 1961 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 01 ஆந் திகதி ஸ்தாபிக்கப்பட்ட அரசுக்குச் சொந்தமான ஒரு வங்கியாக இருந்து வருவதுடன், அது இலங்கையில் அமைந்துள்ளது. 2012 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான வங்கியின் திரண்ட நிதிசார் கூற்றுக்கள், வங்கி, அதன் துணை நிறுவனங்களான அதாவது பீப்பள்ஸ் லீசிங் பினான்ஸ் பிஎல்சி மற்றும் வ.ப. பீப்பள்ஸ் டிரவல்ஸ் (பிரைவட்) கம்பெனி மற்றும் உப துணை நிறுவனங்களான வ.ப. பீப்பள்ஸ் லீசிங் பிளீட் மனேஜ்மன்ட் கம்பெனி, வ.ப. பீப்பள்ஸ் லீசிங் புரொப்பர்ட்டி டெவலப்மன்ட கம்பெனி, வ.ப. பீப்பள்ஸ் லீசிங் இன்சுரன்ஸ் கம்பெனி, பீப்பள்ஸ் லீசிங் பினான்ஸ் பிஎல்சி, வ.ப. பீப்பள்ஸ் மைக்ரோ பினான்ஸ், வ.ப. பீப்பள்ஸ் லீசிங் ஹெவ்லொக் புரொப்பர்டிஸ் கம்பனி என்பவற்றையும், அதன் இணை நிறுவனமான பீப்பள்ஸ் லீசிங் பினான்ஸ் பிஎல்சி என்பவற்றையும் உள்ளடக்குகின்றன. 2012 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான திரண்ட நிதிசார் கூற்றுக்கள் வெளியிடப்படுவதற்கென பணிப்பாளர் சபையினால் 2013 மார்ச் 27 ஆந் திகதி அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

1.2 முதன்மை நடவடிக்கைகள்

வங்கி

வங்கியின் வணிகம் வைப்புக்களை ஏற்றல், கடன் வசதிகளை வழங்குதல், ஆள்சார்ந்த வங்கித்தொழில், அபிவிருத்தி வங்கித்தொழில், அடகு எடுத்தல், சர்வதேச வர்த்தகம், அரசாங்க பிணைப்பத்திரங்கள் வியாபாரம், குத்தகை, கடனட்டை செயற்பாடுகள் மற்றும் அந்நியச் செலாவணி வங்கித்தொழிலுக்கென அந்நியச் செலாவணி வங்கித்தொழில் அலகு என்பவற்றை உள்ளடக்குகின்றன.

துணை நிறுவனங்கள்

பீப்பள்ஸ் லீசிங் பினான்ஸ் பிஎல்சி முதன்மை நடவடிக்கைகள் குத்தகைகளை வழங்குதல், சொத்துக்களின் வாடகைக் கொள்வனவு, நிதிப்படுத்தல் மற்றும் இஸ்லாமிய நிதிச் சேவைகள் மற்றும் வைப்புக்களை ஏற்றல் என்பனவாகும். வ.ப. பீப்பள்ஸ் டிரவல்ஸ் நிறுவனம் சுற்றுலாக்களை ஏற்பாடு செய்தல் மற்றும் விமான பயணச் சீட்டுக்கள் வழங்குதல் போன்றவற்றில் ஈடுபட்டு வருகின்றது.

உப துணை நிறுவனங்கள்

வங்கியின் உப துணை நிறுவனங்களின் முதன்மை நடவடிக்கைகள் பின்வருமாறு:

கம்பெனியில் பெயர்	முதன்மை நடவடிக்கைகள்
வ.ப. பீப்பள்ஸ் லீசிங் பிளீட் மனேஜ்மன்ட் கம்பெனி	செயற்பாட்டு குத்தகைகளை வழங்குதல்
வ.ப. பீப்பள்ஸ் லீசிங் புரொப்பர்ட்டி டெவலப்மன்ட்	சொத்து, அபிவிருத்தி மற்றும் நிர்மாணம்
பீப்பள்ஸ் லீசிங் இன்சுரன்ஸ் கம்பெனி	ஆயுள் சாராத காப்புறுதிச் சேவைகளை வழங்குதல்
பீப்பள்ஸ் லீசிங் பினான்ஸ் பிஎல்சி	நிதிக் குத்தகைகள், செயற்பாட்டு குத்தகைகள், வாடகைக் கொள்வனவு சொத்துக்கள் என்பவற்றை வழங்குதல், நிதிப்படுத்தல் மற்றும் வைப்புக்களை ஏற்றல்
வ.ப. பீப்பள்ஸ் மைக்ரோ பினான்ஸ் கம்பெனி	நுண்மட்ட கடனளிப்பு
வ.ப. பீப்பள்ஸ் லீசிங் ஹெவ்லொக் புரொப்பர்ட்டிஸ் டெவலப்மன்ட் கம்பனி	வெஹ்லொக் ஆதனங்களின் அபிவிருத்தி

இணை நிறுவனங்கள்

வரையறைக்கப்பட்ட பீப்பள்ஸ் மேர்ச்சன்ட் பினான்ஸ் பிஎல்சி யின் முதன்மை நடவடிக்கைகள் வர்த்த நிதி, குத்தகை, வாடகைக் கொள்வனவு, மெய்யாதனம், குறுங்கால முதலீடுகள் மற்றும் கம்பெனித் துறை நிதிச் சேவைகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

1.3. நிதிசார் கூற்றுக்களுக்கான பணிப்பாளர்களின் பொறுப்பு

இலங்கை கணக்கீட்டு தரநியமங்களின் பிரகாரம் (இலங்கை நிதிசார் அறிக்கையிடல் தரநியமங்கள் மற்றும் இலங்கை கணக்கீட்டு தரநியமங்கள் என்பவற்றின் பிரகாரம்) வங்கி மற்றும் அதன் துணை நிறுவனங்கள் என்பவற்றின் நிதிசார் கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் சமர்ப்பணம் என்பவற்றுக்கான பொறுப்பினை பணிப்பாளர் சபை கொண்டுள்ளது.

2. தயாரிப்புக்கான அடிப்படை

2.1 அளவீட்டுக்கான அடிப்படை

நிதி நிலை தொடர்பான கூற்று, அனைத்துமடங்கிய வருமானக் கூற்று, பணப்பாய்ச்சல்கள் கூற்று, பங்கு மூலதனத்தில் மாற்றங்கள் தொடர்பான கூற்று, கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய வங்கி மற்றும் குழுமம் என்பவற்றின் திரண்ட நிதிசார் கூற்றுக்கள் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட கணக்கீட்டு தரநியமங்களுக்கு இணங்கிய விதத்தில் தயாரிக்கப்படுவதுடன், பின்வருவன தவிர, வரலாற்று ரீதியான செலவு அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன:

- இலாபம் அல்லது நட்டத்திற்கூடாக நிதிசார் கருவிகளின் நியாயமான மதிப்பு நியாயமான மதிப்பில் அளவிடப்படுகின்றது.
- பெறப்படும் நிதிசார் கருவிகள் நியாயமான மதிப்பில் அளவிடப்படுகின்றன.
- விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கும் நிதிசார் கருவிகள் நியாயமான மதிப்பில் அளவிடப்படுகின்றன.
- வரையறுக்கப்பட்ட அனுகூல கடப்பாடுகளுக்கான பொறுப்பு தரவுக் கணிப்பீட்டின் அடிப்படையில் மதிப்பிடப்படுவதுடன், வரையறுக்கப்பட்ட தற்போதைய மதிப்பின் பெறுமதியிலிருந்து திட்டச் சொத்துக்களின் தேறிய மொத்தத்தை கழித்து அங்கீகரிக்கப்படுகின்றது.

பணவீக்க காரணிகள் தொடர்பான சீராக்கங்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

2.2 இணங்கியொழுகல் கூற்று

வங்கி மற்றும் குழுமம் என்பவற்றின் நிதிசார் கூற்றுக்கள் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை கணக்கீட்டு தரநியமங்களின் (இலங்கை நிதிசார் அறிக்கையிடல் தரநியமங்கள் மற்றும் இலங்கை கணக்கீட்டு தரநியமங்கள்) பிரகாரம் தயாரிக்கப்படுகின்றன.

2011 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்தையும் உள்ளடக்கிய விதத்தில் இது காலப் பிரிவில் வரையிலும் குழுமம் இலங்கை கணக்கீட்டு தரநியமங்களின் பிரகாரம் அதன் நிதிசார் கூற்றுக்களை தயாரித்தது. டிசம்பர் 31, 2012 இல் முடிவடைந்த வருடத்திற்கான இந்த நிதிசார் கூற்றுக்கள் வங்கி மற்றும் குழுமம் என்பன இலங்கை கணக்கீட்டு தரநியமங்களின் (இலங்கை நிதிசார் அறிக்கையிடல் தரநியமங்கள் மற்றும் இலங்கை கணக்கீட்டு தரநியமங்கள்) பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளன.

இவை இலங்கை நிதிசார் அறிக்கையிடல் தரநியமங்கள் (SLFRS)/இலங்கை கணக்கீட்டு தரநியமங்கள் (LKAS) என்பவற்றின் பிரகாரம் வங்கி மற்றும் குழுமம் என்பவற்றின் தயாரிக்கப்பட்ட முதலாவது திரண்ட நிதிசார் கூற்றுக்களாகும். மேலும், இலங்கை நிதிசார் அறிக்கையிடல் தரநியமம், இலங்கை கணக்கீட்டு தரநியமம் தொடர்பாக முதல் தடவையாக பிரயோகிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கணக்கீட்டு தரநியமங்கள்/இலங்கை நிதிசார் அறிக்கையிடல் தரநியமங்களை நோக்கிய மாற்றம் எவ்வாறு இடம்பெற்றது, கம்பனியின் அறிக்கையிடப்பட்ட நிதி நிலை மற்றும் நிதிசார் செயலாற்றுகை என்பவற்றின் மீது எத்தகைய தாக்கத்தை எடுத்து வந்துள்ளது போன்ற விவரங்கள் குறிப்பு 5 இல் தரப்பட்டுள்ளன.

2.3 நிதிசார் கூற்றுக்களின் சமர்ப்பணம்

வங்கி மற்றும் குழுமம் என்பன அதன் நிதி நிலை தொடர்பான கூற்றினை பரவலாக காசு நிலை ஒழுங்கில் சமர்ப்பிக்கின்றன. (நடப்பு) அறிக்கையிடும் திகதியிலிருந்து 12 மாத காலப் பிரிவுக்குள் அறவிடல் அல்லது தீர்த்து வைத்தல் தொடர்பான ஒரு பகுப்பாய்வும், (நடப்பல்லாத) அறிக்கையிடும் திகதியிலிருந்து 12 மாதங்களுக்கு மேற்பட்ட ஒரு பகுப்பாய்வும் குறிப்பு 50 இல் தரப்பட்டுள்ளது.

2.4 ஒன்று திரட்டும் அடிப்படை

வங்கி மற்றும் குழுமம் என்பவற்றின் நிதிசார் அறிக்கைகள் டிசம்பர் 31, 2012 இல் முடிவடைந்த வருடத்திற்கான வங்கி மற்றும் அதன் துணை நிறுவனங்கள் என்பவற்றின் நிதிசார் அறிக்கைகளை கொண்டுள்ளன. வங்கியின் துணை நிறுவனங்களின் நிதிசார் அறிக்கைகள், ஒன்றுதிரட்டும் நோக்கத்திற்கென ஒரே சீரான கணக்கீட்டுக் கொள்கைகளை பயன்படுத்தி மக்கள் வங்கியின் அதே அறிக்கையிடும் ஆண்டு தொடர்பாக தயாரிக்கப்படுகின்றன.

01.01.2012 இல் அல்லது அதற்கு பின்னர் மேற்கொள்ளப்பட்ட கையகப்படுத்தல்கள்

01.01.2012 இல் அல்லது அதற்கு பின்னர் மேற்கொள்ளப்பட்ட கையகப்படுத்தல்கள் தொடர்பாக, குழுமம், மாற்றல் செய்யப்பட்ட நியாயமான பெறுமதியை நற்பெயராக அளவிடுகின்றது. கையகப்படுத்தப்படுபவரின் கட்டுப்படுத்தாத ஏதாவது ஒரு நலனில் அங்கீகரிக்கப்பட்ட தொகையை உள்ளடக்கி இனங்காணப்பட்ட கையகப்படுத்தப்பட்ட சொத்துக்கள் மற்றும் ஏற்கப்பட்ட பொறுப்புக்கள் என்பவற்றின் தேறிய அங்கீகரிக்கப்பட்ட தொகையில் நியாயமான பெறுமதியை கழித்து இது மேற்கொள்ளப்படுகின்றது. அனைத்து கையகப்படுத்துப வர்களும் அனைத்தும் கையகப்படுத்தும் திகதியிலுள்ளவாறு அளவிடப்படுகின்றன.

01.01.2012 க்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட கையகப்படுத்தல்கள்

இலங்கை நிதிசார் அறிக்கையிடல் தரநியமங்களை நோக்கிய நிலைமாற்றத்தின் ஒரு பாகமாக, குழுமம், 01.01.2012 இல் அல்லது அதற்குப் பின்னர் இடம்பெற்ற வணிகக் கூட்டுக்களை மீண்டும் குறிப்பிடுவதில்லை என முடிவு செய்தது. 01.01.2012 க்கு முன்னர் இடம்பெற்ற கையகப்படுத்தல்கள் தொடர்பாக குழுமத்தின் முன்னைய கணக்கீட்டு தரநியமங்களின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட தொகை நற்பெயரை பிரதிநிதித்துவம் செய்கின்றது.

2.5 துணை நிறுவனங்கள்

குழுமத்தின் துணை நிறுவனங்கள் குழுமத்தினால் கட்டுப்படுத்தப்பட்டு வரும் நிறுவனங்களாகும். துணை நிறுவனங்களின் நிதிசார் கூற்றுக்கள், கட்டுப்பாடு ஆரம்பிக்கும் திகதியிலிருந்து கட்டுப்பாடு முடியும் திகதி வரையில் திரண்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படுகின்றன. இதே மாதிரியான சூழ்நிலைகளில் இடம்பெறும் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் ஏனைய நிகழ்வுகள் என்பவற்றுக்கான ஒரே சீரான கணக்கீட்டுக் கொள்கைகளை பயன்படுத்தி இக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

காசு பங்கிலாபங்களின் வடிவில் நிதிகளை தாய் நிறுவனத்திற்கு மாற்றல் செய்வதற்கோ அல்லது கடன்கள் மற்றும் முற்பணங்களை திருப்பிச் செலுத்துவதற்கோ துணை நிறுவனங்கள் கொண்டிருக்கும் ஆற்றலுக்கு குறிப்பிடத்தக்க எந்த வரையறைகளும் இருந்து வரவில்லை. வங்கியின் அனைத்து துணை நிறுவனங்களும் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டுள்ளன.

2.6 இணை நிறுவனங்கள்

இணை நிறுவனங்கள் என்பவை அவற்றின் நிதிசார் மற்றும் செயற்பாட்டுக் கொள்கைகளில் குழுமம் கணிசமான அளவிலான செல்வாக்கினை கொண்டிருக்கும் நிறுவனங்களாகும். ஆனால், குழுமம் அவற்றின் மீது கட்டுப்பாட்டினை கொண்டிருக்கவில்லை. குழுமம் மற்றொரு நிறுவனத்தின் வாக்களிப்பு அதிகாரத்தில் 20% தொடக்கம் 50% வரையில் வைத்திருக்கும் பொழுது, கணிசமான அளவிலான செல்வாக்கு நிலவி வருகின்றதென அனுமானிக்கப்படுகின்றது. துணை நிறுவனங்களிலான முதலீடுகள் பங்கு முறையை (பங்கு கணக்கீட்டு முதலீட்டை பெற்றுக் கொண்டவர்கள்) பயன்படுத்தி கணக்கில் எடுக்கப்படுகின்றன. ஆரம்பத்தில் அவை செலவில் அங்கீகரிக்கப்படுகின்றன. முதலீட்டுச் செலவு கொடுக்கல் வாங்கல் செலவுகளையும் உள்ளடக்குகின்றது.

திரண்ட நிதிசார் கூற்றுக்கள் இலாபம் மற்றும் நட்டம் மற்றும் ஏனைய அனைத்துமடங்கிய வருமானம் என்பவற்றின் வங்கியின் பங்கினை உள்ளடக்குகின்றன. இது கணக்கீட்டுக் கொள்கைகளை, குழுமத்தின் கணக்கீட்டுக் கொள்கைகளுடன் பொருத்துவதற்கான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்படுகின்றது. கணிசமான செல்வாக்கு ஆரம்பிக்கும் திகதியிலிருந்து அச்செல்வாக்கு முடிவடையும் திகதி வரை இவ்விதம் செய்யப்படுகின்றது.

வங்கியின் நட்டங்களின் பங்கு அதன் பங்கு கணக்கில் எடுக்கப்பட்ட முதலீட்டை பெற்றவரின் நலனை மிகைத்திருக்கும் பொழுது, அந்த நலனில் முன்கொண்டு செல்லப்படும் தொகை, எவையேனும் நீண்ட கால முதலீடுகளை உள்ளடக்கி, 'ஒன்றுமில்லை' என அறிக்கையிடப்படுகின்றது. மேலும், நட்டங்கள் குறித்த அங்கீகாரம் நிறுத்தப்படுகின்றது. முதலீட்டை பெற்றுக் கொண்டவர் சார்பில் குழு ஒரு கடப்பாட்டினை கொண்டிருக்கும் அளவுக்கு அல்லது கொடுப்பனவுகளை மேற்கொண்டிருக்கும் அளவுக்கு இது இடம்பெறுகின்றது. துணை நிறுவனம் இதனையடுத்து இலாபத்தை அறிக்கையிட்டால், வங்கி அதன் இலாபங்களின் பங்கு, அங்கீகரிக்கப்படாத நட்டங்களின் பங்குக்கு இணையாக இருந்தால் மட்டுமே அந்த இலாபங்களின் பங்கினை அங்கீகரிக்க ஆரம்பிக்கின்றது.

2.7 வணிகக் கூட்டுக்கள்

கணக்கீட்டின் கொள்வனவு முறையைப் பயன்படுத்தி வணிகக் கூட்டுக்கள் கணக்கில் எடுக்கப்படுகின்றன. இது (முன்னர் அங்கீகரிக்கப்படாத அரூபச் சொத்துக்களையும் உள்ளடக்கிய விதத்தில்) எதிர்கால மீளமைப்பை தவிர்த்து இனங்காணப்பட்ட

சொத்துக்களை அங்கீகரித்தல் மற்றும் அவசர காலப் பொறுப்புக்களை உள்ளடக்கி கையகப்படுத்தி வணிகத்தின் பொறுப்புக்கள் என்பவற்றை நியாயமான பெறுமதியில் அங்கீகரிப்பதுடன் சம்பந்தப்பட்டுள்ளது. கையகப்படுத்தப்பட்ட இனங்காணப்பட்ட தேறிய சொத்துக்களின் நியாயமான பெறுமதியை விட அதிகமாக இருக்கும். எவையேனும் கையகப்படுத்தல் செலவு நற்பெயராக அங்கீகரிக்கப்படுகின்றது. கையகப்படுத்தப்பட்ட செலவு கையகப்படுத்தப்பட்ட இனங்காணப்பட்ட தேறிய சொத்துக்களின் நியாயமான பெறுமதியிடும் பார்க்க குறைவாக இருந்து வந்தால், கையகப்படுத்தல் மீதான கழிவு கையகப்படுத்தல் வருடத்தில் வருமானக் கூற்றில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

2.8 கட்டுப்படுத்தாத நலன்களை கையகப்படுத்துதல்

கட்டுப்படுத்தாத நலன்களை கையகப்படுத்துதல்கள், பங்குதாரருடன் பங்குதாரர் என்ற அவர்களுடைய தகைமைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்கள் என கணக்கிடப்படுகின்றது. எனவே, அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் விளைவாக நற்பெயர் ஏற்படுவதாக அங்கீகரிக்கப்படுவதில்லை.

2.9 ஒன்று திரட்டலின் போது நீக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள்

குழுமத்துக்குமிடையிலான அனைத்து கொடுக்கல் வாங்கல்கள், நிலுவைகள், வருமானம் மற்றும் செலவுகள் (வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல் ஆதாயங்கள் அல்லது நட்டங்கள் தவிர) ஒன்று திரட்டலின் போது நீக்கப்படுகின்றன. குழுமத்திற்கும் அதன் இணை நிறுவனங்களுக்குமிடையிலான கொடுக்கல் வாங்கல்களில் தோன்றும் வந்து சேராத ஆதாயங்கள் மற்றும் நட்டங்கள் என்பனவும் அந்த இணை நிறுவனங்களில் குழுமம் கொண்டிருக்கும் நலன்களின் அளவுக்கு நீக்கப்படுகின்றன.

வந்து சேராத நட்டங்கள் வந்து சேராத ஆதாயங்கள் நீக்கப்படும் அதே விதத்தில் நீக்கப்படுகின்றன. ஆனால், மதிப்புக் குறைவு ஏற்பட்டிருப்பதற்கான ஆதாரம் இல்லாத அளவுக்கு மட்டுமே அது செய்யப்படுகின்றது.

2.10 பொருள்சார் ஆதாயம் அல்லது நட்டம், ஒதுக்கு மதிப்பு அல்லது தவறு திருத்துதல்கள்

முன்னைய காலப் பிரிவுகளின் போது இடம்பெற்ற வணிகக் கூட்டுக்கள் தொடர்பாக, இவ்வருடத்தின் போது இத்தகைய நிதிசார் ஆதாயங்கள் அல்லது நட்டங்கள், ஒதுக்கு மதிப்புகள் அல்லது பிழை திருத்தல்கள் அங்கீகரிக்கப்படவில்லை.

3. முக்கியமான கணக்கீட்டு முடிவுகள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள்

வங்கியின் கணக்கீட்டுக் கொள்கைகளை பிரயோகிக்கும் செயன்முறையின் போது நிதிசார் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் தொகைகளை நிர்ணயிப்பதில் முகாமைத்துவம் முடிவு, மதிப்பிடுதல் மற்றும் அனுமானங்கள் என்பவற்றை மேற்கொண்டுள்ளது. உண்மையான பெறுபேறுகள் இந்த அனுமானங்களிலிருந்து வேறுபட முடியும்.

மதிப்பீடுகள் மற்றும் அடிச்சுடரான அனுமானங்கள் என்பன தொடர்ச்சியான அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றன. கணக்கீட்டு மதிப்பீட்டுக்களுக்கான பொருத்தங்கள் மதிப்பீடு திருத்தப்படும் காலப் பிரிவிலும் அதனால் பாதிக்கப்படும் எதிர்கால காலப்பிரிவுகளிலும் அங்கீகரிக்கப்படுகின்றன.

முடிவுகள் மற்றும் மதிப்பீடுகள் என்பவற்றின் மிக முக்கியமான பயன்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளன:

3.1 தொடர்ந்து இடம்பெற்று வரும் தொழில்

தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் ஒரு தொழில் என்ற முறையில் தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றல் குறித்து வங்கியின் முகாமைத்துவம் ஒரு மதிப்பீட்டினை மேற்கொண்டிருப்பதுடன், உடனடி எதிர்காலத்தில் வணிகங்களில் தொடர்ந்து ஈடுபடுவதற்கான மூலவளங்களை அது கொண்டுள்ளது என திருப்தியடைந்துள்ளது. மேலும், தொடர்ந்து இடம்பெற்று வரும் ஒரு தொழில் என்ற முறையில் தொடர்ச்சியாக செயற்படுவதற்கான வங்கியின் ஆற்றல் குறித்து ஏதேனும் கணிசமான அளவிலான சந்தேகத்தை ஏற்படுத்தக் கூடிய பொருள்சார்ந்த நிச்சயமற்ற நிலைமைகள் இருந்து வருகின்றன என முகாமைத்துவம் கருதவில்லை. எனவே, நிதிசார் கூற்றுக்கள் தொடர்ச்சியாக தொடர்ந்து இடம்பெற்று வரும் தொழில் அடிப்படையில் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

3.2 நிதிசார் கருவிகளின் நியாயமான பெறுமதி

நிதி நிலை தொடர்பான கூற்றில் பதிவு செய்யப்பட்டிருக்கும் நிதிசார் சொத்துக்கள் மற்றும் நிதிசார் பொறுப்புக்களின் நியாயமான பெறுமதிகளை முனைப்பான சந்தைகளிலிருந்து பெற முடியாத பொழுது, கணித மாதிரிகளின் பயன்பாட்டையும் உள்ளடக்கிய விதத்தில் பல்வேறுபட்ட மதிப்பீட்டு திட்டங்களை பயன்படுத்தி அவை நிர்ணயிக்கப்படுகின்றன.

இந்த மாதிரிகளுக்கான உள்ளீடுகள் சாத்தியமான சந்தர்ப்பங்களில் அவதானிக்கத்தக்க சந்தைத் தரவுகளிலிருந்து பெற்றுக் கொள்ளப்படுகின்றன. எவ்வாறிருப்பினும், அவை கிடைக்காதிருந்தால், நியாயமான மதிப்பீடுகளை ஸ்தாபித்துக் கொள்வதற்கு ஒரு முடிவு மேற்கொள்வது அவசியப்படுகின்றது. நிதிசார் கருவிகளின் பெறுமதி மதிப்பு குறிப்பு 49 இல் இது மேலும் விரிவாக எடுத்து விளக்கப்பட்டுள்ளது.

3.3 கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான மதிப்புக் குறைவு நட்டங்கள்

வருமானக் கூற்றில் மதிப்புக் குறைவு நட்டமொன்று பதிவு செய்யப்பட வேண்டுமா என்பதனை மதிப்பிட்டுக் கொள்ளும் பொருட்டு, வங்கி முக்கியமான தனிப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள் என்பவற்றை ஒவ்வொரு நிதிக் கூற்று திகதியிலும் மீளாய்வு செய்கின்றது. குறிப்பாக, மதிப்புக் குறைவு நட்டத்தை நிர்ணயிக்கும் பொழுது, எதிர்கால காசுப் பாய்ச்சல்களின் தொகுப்பு மற்றும் கால அளவு என்பவற்றை மதிப்பிட்டுக் கொள்வதற்கு முகாமைத்துவத்தின் முடிவு தேவைப்படுகின்றது. இந்த மதிப்பீடுகள் பல்வேறு காரணிகள் குறித்த அனுமானங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதுடன், உண்மையான பெறுபேறுகள் அவற்றிலிருந்து வேறுபட முடியும்.

தனிப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் மதிப்புக் குறைவு தேவைப்படாதிருந்தால், தனிப்பட்ட முறையில் முக்கியமான அத்தகைய கடன்களும், முற்பணங்களும் பின்னர் கூட்டாக மதிப்பிடப்படுகின்றன. ஒரே விதமான இடர்ப் பண்புகளைக் கொண்டிருக்கும் சொத்துக் குழுக்களின் அடிப்படையில் இவை மதிப்பிடப்படுகின்றன. நியாயமான சான்று இருந்த போதிலும், அதன் தாக்கங்கள் இன்னமும் தென்படாதிருந்து வரும் ஏற்பட்ட நட்ட நிகழ்வுகள் காரணமாக ஒரு ஒதுக்கு மேற்கொள்ள வேண்டியிருக்கின்றதா என்பதனை நிர்ணயித்துக் கொள்வதற்கு இது அவசியமாகும். கூட்டு மதிப்பீடு (கடனளிப்பு வகைகள், நிலுவைத் தொகைகளின் மட்டங்கள், கைத்தொழில்கள் போன்றவற்றை கொண்ட), கடன் தொகுப்பிலிருந்து தரவுகளை பெற்றுக் கொள்வதுடன், இடர்கள் திரண்டிருக்கும் நிலை மற்றும் பொருளாதார தரவுகள் என்பவற்றின் தாக்கம் குறித்த முடிவுகளை மேற்கொள்கின்றது. கடன்கள் மற்றும் முற்பணங்களின் மீதான மதிப்புக் குறைவு நட்டம் குறிப்பு 22 இல் விரிவாக எடுத்து விளக்கப்படுத்தப்பட்டுள்ளது.

மதிப்புக் குறைவு மதிப்பீட்டை மேற்கொள்வதில், வங்கி குறிப்பு 49 இல் எடுத்து விளக்கியிருக்கும் அளவுகோல்களை பின்பற்றுகின்றது.

3.4 விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கும் முதலீடுகளின் மதிப்புக் குறைவு

ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியின் போதும் விற்பனை முதலீடுகளுக்கென வைக்கப்பட்டிருப்பவை என வகைப்படுத்தப்பட்டிருக்கும் பிணைப் பத்திரங்களை அவற்றில் மதிப்புக் குறைவு ஏற்பட்டுள்ளதா என கண்டறிவதற்கு வங்கி ஒரு மீளாய்வை செய்கின்றது. இதற்கும் தனிப்பட்ட மதிப்பீட்டு கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கு பிரயோகிப்பது போன்ற ஒரு முடிவு தேவைப்படுகின்றது.

விற்பனைக்கென வைக்கப்பட்டிருக்கும் பங்குமுதலீடுகள் மீதான மதிப்புக் குறைவு செலவுகளை, அவற்றின் கொள்விலையிலும் பார்க்க நியாயமான பெறுமதியில் கணிசமான அளவிலான அல்லது நீடித்த வீழ்ச்சியொன்று ஏற்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் வங்கி அவற்றை பதிவு செய்கின்றது. 'முக்கியமான' அல்லது 'நீடித்த' என்பவற்றை நிர்ணயிப்பதற்கு ஒரு முடிவு தேவைப்படுகின்றது.

விற்பனைக்கென வைக்கப்பட்டிருக்கும் முதலீடுகள் மீதான மதிப்புக் குறைவு நட்டம் குறிப்பு 23 இல் விரிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

3.5 தாமதப்படுத்தப்பட்ட வரிச் சொத்துக்கள்

தாமதப்படுத்தப்பட்ட வரிச் சொத்துக்கள், வரி நட்டங்கள் தொடர்பாக, எதிர்கால வரி செலுத்ததக்க இலாபம் நட்டங்களை பயன்படுத்திக் கொள்ளக் கூடிய அளவுக்கு இருந்து வரும் நிகழ்தகவின் அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றன. அங்கீகரிக்கத்தக்க தாமதப்படுத்தப்பட்ட வரிச் சொத்துக்களின் தொகையை நிர்ணயித்துக் கொள்வதற்கு முடிவு செய்தல் அவசியமாகும். அதாவது, எதிர்கால வரித் திட்டமிடல் உத்திகளுடன் இணைந்த விதத்தில் காலம் மற்றும் எதிர்கால வரி செலுத்த வேண்டிய இலாபங்கள் என்பவற்றை இது அடிப்படையாகக் கொண்டுள்ளது.

3.6 வரையறை செய்யப்பட்ட அனுகூலத் திட்டம்

(1996 க்கு முன்னர் பணியில் அமர்த்தப்பட்ட ஊழியர்கள் தொடர்பான) வரையறுக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்தின் செலவு ஒரு தரவுக் கணிப்பு மதிப்பீட்டை பயன்படுத்தி, நிர்ணயிக்கப்படுகின்றது. இந்த தரவுக் கணிப்பு மதிப்பீட்டு கழிவு விகிதங்கள், சொத்துக்களில் எதிர்பார்க்கப்படும் ஆதாயம், எதிர்கால சம்பள அதிகரிப்புக்கள், மரண விகிதங்கள் மற்றும் எதிர்கால ஓய்வூதிய அதிகரிப்புக்கள் போன்றவனவற்றின் மீதான எடுக்கோள்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அனைத்து எடுகோள்களும் ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியின் போதும் மீளாய்வு செய்யப்படுகின்றன. இந்தத் திட்டங்களின் நீண்ட கால இயல்பு காரணமாக அத்தகைய மதிப்பீடுகள் கணிசமான அளவிலான நிச்சயமற்ற நிலையைக் கொண்டுள்ளன. பயன்படுத்திய எடுகோள்கள் குறிப்பு 36.1 இல் காட்டப்பட்டுள்ளது.

4. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் சாராம்சம்

4.1 வெளிநாட்டு நாணயத்தை மாற்றுதல்

வங்கி மற்றும் குழுமம் என்பவற்றின் நிதிசார் கூற்றுக்கள் வங்கியினதும் அதன் அனைத்து துணை நிறுவனங்களினதும் செயற்பாட்டு நாணயமான இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டு நாணயத்திலான கொடுக்கல் வாங்கல்கள் ஆரம்பத்தில் அக்கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறும் திகதியில் நிலவி வரும் செலாவணி விகிதத்தில் பதிவு செய்யப்படுகின்றன. வெளிநாட்டு நாணயத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் நாணயச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன அறிக்கையிடும் திகதியில் நிலவி வரும் உடன் செலாவணி விகிதத்தில் மீண்டும் மாற்றல் செய்யப்படுகின்றன. வியாபாரம் சாராத நடவடிக்கைகளில் தோன்றும் அனைத்து வித்தியாசங்களும் வருமானக் கூற்றில் 'ஏனைய செயற்பாட்டு வருமானமாக' எடுக்கப்படுகின்றன.

வெளிநாட்டு நாணயமொன்றில் வரலாற்று ரீதியான செலவு அடிப்படையில் அளவிடப்படும் பணம் சாராத உருப்படிகள் அங்கீகார திகதியில் நிலவி வரும் உடன் செலாவணி விகிதங்களை பயன்படுத்தி மாற்றப்படுகின்றன. வெளிநாட்டு நாணயமொன்றில் நியாய அடிப்படையில் அளவிடப்படும் பணம் சாராத உருப்படிகள், நியாயமான பெறுமதி நிர்ணயிக்கப்பட்ட பின்னர் நிலவி வரும் உடன் செலாவணி விகிதங்களை பயன்படுத்தி மாற்றப்படுகின்றன.

4.2 நிதிசார் கருவிகள் - பூர்வாங்க அங்கீகாரம், வகைப்படுத்தல் மற்றும் அதன் பின்னரான அளவீடு

4.2.1 அங்கீகார திகதி

ஒழுங்கான அடிப்படையில் வியாபாரம் செய்யப்படும் நிதிசார் சொத்துக்களின் கொள்வனவுகள் தீர்ப்பனவுத் திகதி கணக்கீட்டை பயன்படுத்தி அங்கீகரிக்கப்படுகின்றன. தீர்ப்பனவுத் திகதி என்பது ஒரு சொத்து ஏதேனும் ஒரு நிறுவனத்திற்கு விநியோகிக்கப்படும் திகதியாகும். தீர்ப்பனவு திகதி கணக்கீடு, குறிப்பிட்ட ஒரு சொத்து அந்த நிறுவனத்திற்கு கிடைக்கும் திகதியில் அதனை அங்கீகரிப்பதனை குறிக்கின்றது. தீர்ப்பனவு கணக்கீட்டு முறை பிரயோகிக்கப்படும் பொழுது, அந்நிறுவனம் இச்சொத்தின் ஏதேனும் ஒரு நியாயமான பெறுமதி வியாபார திகதிக்கும் தீர்ப்பனவுத் திகதிக்குமிடையிலான காலப் பிரிவுக்குள் பெறப்படல் வேண்டுமென கணக்கில் எடுத்துக் கொள்கின்றது.

நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றின் ஒழுங்கற்ற கொள்வனவுகள் வர்த்தக திகதியில் அங்கீகரிக்கப்படுகின்றன. அதாவது, கருவியின் ஒப்பந்த ஏற்பாடுகளுக்கு வங்கி ஒரு தரப்பினராக வரும் திகதியையே இது குறிப்பிடுகின்றது.

ஒரு ஒழுங்கான கொள்வனவு என்பது ஒரு ஒப்பந்தத்தின் கீழ், நிதிசார் சொத்தொன்றை கொள்வனவு செய்வதாகும். இந்த ஒப்பந்தத்தின் விதிமுறைகள், சம்பந்தப்பட்ட சந்தையில் ஒரு ஒழுங்குவிதியின் மூலம் அல்லது ஒப்பந்தம் மூலம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் காலப் பிரிவொன்றுக்குள் அந்த சொத்துக்கள் விநியோகப்படுதல் வேண்டுமென்பதனை அவசியப்படுத்துகின்றன.

4.2.2 நிதிசார் கருவிகளின் பூர்வாங்க மதிப்பீடு

பூர்வாங்க அங்கீகாரத்தில் நிதிசார் கருவிகளை வகைப்படுத்துவதானது அவற்றின் நோக்கம் மற்றும் பங்குக் கூறுகள் என்பவற்றிலும், அவற்றை கையகப்படுத்திக் கொள்வதற்கான முகாமைத்துவத்தின் எண்ணத்திலும் தங்கியிருக்கின்றது. அனைத்து நிதிசார் கருவிகளும் ஆரம்பத்தில் அவற்றின் நியாயமான பெறுமதி சக கணிசமான அளவிலான கொடுக்கல் வாங்கல் செலவுகளுடன் சேர்த்து அளவிடப்படுகின்றன. இலாபம் அல்லது நட்டம் என்பவற்றுக்கூடாக நியாயமான பெறுமதியில் பதிவு செய்யப்பட்டிருக்கும் நிதிசார் சொத்துக்கள் மற்றும் நிதிசார் பொறுப்புக்கள் என்பன இவற்றுக்கு விதிவிலக்காகும்.

4.2.3 நிதிசார் சொத்துக்கள் மற்றும் நிதிசார் பொறுப்புக்கள் என்பவற்றை வகைப்படுத்தல் மற்றும் அதனையடுத்த அளவீடு

நிதிசார் சொத்துக்கள்

தொடக்கத்தில் ஒரு நிதிசார் சொத்து பின்வரும் வகைகளின் கீழ் வகைப்படுத்தப்படுகின்றது:

- இலாபம் அல்லது நட்டத்திற்கூடாக நியாயமான பெறுமதியில் வியாபாரத்திற்கென வைக்கப்பட்டிருப்பவை அல்லது இலாபம் அல்லது நட்டத்திற்கூடாக நியாயமான பெறுமதியில் குறித்துரைக்கப்பட்டது.

- விற்பனைக்கு வைக்கப்பட்டிருப்பவை
- கடன்கள் மற்றும் கிடைக்க வேண்டிய தொகைகள்
- முதிர்ச்சிக்கென வைக்கப்பட்டவை

அதனையடுத்து மேற்கொள்ளப்படும் நிதிசார் சொத்துக்களின் அளவீடு, அவற்றின் வகைப்படுத்தலை பொறுத்து அமைகின்றது.

நிதிசார் பொறுப்புக்கள்

குழுமம் அனைத்து நிதிசார் பொறுப்புக்களையும் தொடக்கத்தில் அதனை ஆரம்பித்த திகதியில் அங்கீகரிப்பதுடன், அவற்றின் நிதிசார் பொறுப்புக்களை இலாபத்திற்கூடாக அல்லது நட்டத்திற்கூடாக தவணைகளில் கழிக்கப்பட்ட செலவு அல்லது நியாயமான பெறுமதியில் அளவிடுகின்றது.

அதனையடுத்து மேற்கொள்ளப்படும் நிதிசார் சொத்துக்களின் அளவீடு, அவற்றை வகைப்படுத்தலை பொறுத்து அமைகின்றது.

4.2.4 விற்பனைக்கென வைக்கப்பட்டிருக்கும் நிதிசார் சொத்துக்கள் அல்லது நிதிசார் பொறுப்புக்கள்

வியாபாரத்திற்கென வைக்கப்பட்டிருக்கும் நிதிசார் பொறுப்புக்கள் அல்லது சொத்துக்கள் நிதி நிலை தொடர்பான கூற்றில் நியாயமான பெறுமதியில் பதிவு செய்யப்படுகின்றன. நியாயமான பெறுமதியில் இடம்பெறும் மாற்றங்கள் 'தேறிய வியாபார வருமானம்' பிரிவில் அங்கீகரிக்கப்படுகின்றன. 'தேறிய வியாபார வருமானத்தில்' பதிவு செய்யப்பட்ட வட்டி மற்றும் பங்கிலாப வருமானம் அல்லது செலவு ஒப்பந்தத்தின் விதிமுறைகளின் பிரகாரம் அல்லது கொடுப்பனவுக்கான உரிமை ஸ்தாபிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் பதிவு செய்யப்படுகின்றது.

கடன் பிணைப் பத்திரங்கள் மற்றும் முதன்மையான குறுங்கால வியாபார நோக்கத்திற்கென கையகப்படுத்தப்பட்ட பங்குகள் என்பனவும் இந்த வகைப்படுத்தலில் உட்படுத்தப்படுகின்றன.

4.2.5 இலாபம் அல்லது நட்டத்திற்கூடாக நியாயமான பெறுமதியில் பதிவு செய்யப்பட்ட மூலத்திலிருந்து தோன்றிய தொகைகள்

வங்கி முன்னோக்கிய அந்நியச் செலாவணி ஒப்பந்தங்களில் மூலத்திலிருந்து தோன்றியவற்றை பயன்படுத்தி வருகின்றன. மூலத்திலிருந்து தோன்றிய தொகைகளை நியாயமான முறையில் பதிவு செய்யப்படுவதுடன், அவற்றின் நியாயமான பெறுமதி சாதகமானவையாக இருந்து வரும் பொழுது அவை சொத்துக்களாக முன்னெடுக்கப்படுகின்றன அவற்றின் நியாயமான பெறுமதி எதிர்க் கணிய நிலையிலிருந்து வரும் பொழுது பொறுப்புக்களாக முன்னெடுக்கப்படுகின்றன. மூலத்திலிருந்து தோன்றியவைகளில் நியாயமான பெறுமதியில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் 'தேறிய வியாபார மாற்றத்தில்' உள்ளடக்கப்பட்டுள்ளன.

4.2.6 விற்பனைக்கென வைக்கப்பட்டுள்ள நிதிசார் முதலீடுகள்

விற்பனைக்கென வைக்கப்பட்டிருக்கும் நிதிசார் சொத்துக்கள், விற்பனைக்கென வைக்கப்பட்டிருப்பவை என குறித்துரைக்கப்பட்டிருக்கும் மூலத்திலிருந்து தோன்றாத நிதிசார் சொத்துக்களாகும். அவை எந்த வகைப்படுத்தலிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. பங்குப் பிணைப் பத்திரங்கள் மற்றும் குறிப்பிட்ட சில கடன் பத்திரங்கள் என்பவற்றின் மீதான குழுமத்தின் முதலீடுகள் விற்பனைக்கென வைக்கப்பட்டிருக்கும் நிதிசார் சொத்துக்கள் என வகைப்படுத்தப்படுகின்றன. பின்னர் அதற்கு வழங்கும் அங்கீகாரத்தையடுத்து அவை நியாயமான பெறுமதியில் அளவிடப்படுவதுடன், அவற்றில் ஏற்படும் மாற்றங்களும் அளவிடப்படுகின்றன.

வந்து சேராத ஆதாயங்கள் மற்றும் நட்டங்கள் என்பன ஏனைய அனைத்துமடங்கிய வருமானப் பிரிவில் அங்கீகரிக்கப்படுகின்றன. அத்தகைய ஒரு முதலீட்டின் கையுதிர்ப்பு இடம்பெறும் சந்தர்ப்பத்தில் அதன் மீதான கூட்டு ஆதாயம் அல்லது நட்டம் முன்னர் பங்கில் அங்கீகரிக்கப்பட்டது. இப்பொழுது அது 'ஏனைய செயற்பாட்டு வருமானத்தில்' அங்கீகரிக்கப்படுகின்றது. விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கும் ஏனைய நிதிசார் மூலதனங்களிலிருந்து ஈட்டப்படும் பங்கிலாபங்கள் வருமானக் கூற்றில் 'ஏனைய செயற்பாட்டு வருமானமாக' அங்கீகரிக்கப்படுகின்றன. இந்த முதலீடு மேற்கொள்ளப் பட்டிருக்கும் கம்பனியால் மேற்கொள்ளப் படும் பிரகடனத் திகதியில் இது இடம்பெறுகின்றது. அத்தகைய முதலீடுகளில் ஏற்படும் மதிப்புக் குறைவிலிருந்து தோன்றும் நட்டங்கள் வருமானக் கூற்றில் 'நிதிசார் முதலீடுகளிலிருந்து கிடைத்த தேறிய ஆதாயம்/நட்டம்' பிரிவில் அங்கீகரிக்கப்படுவதுடன், அது நிதி நிலை தொடர்பான கூற்றில் குறிப்பிடப்பட்டிருக்கும் சம்பந்தப்பட்ட சொத்து/முதலீட்டு கணக்கிலிருந்து நீக்கப்படுகின்றது.

4.2.7 முதிர்ச்சிக்கென வைக்கப்பட்டிருக்கும் நிதிசார் முதலீடுகள்

முதிர்ச்சிக்கென வைக்கப்பட்டிருக்கும் நிதிசார் முதலீடுகள் மூலத்திலிருந்து தோன்றாத நிதிசார் சொத்துக்களாக இருந்து வருவதுடன், அவை நிலையான அல்லது நிர்ணயித்துக் கொள்ளக்கூடிய கொடுப்பனவுகளையும், நிலையான முதிர்ச்சிக் காலங்களையும் கொண்டுள்ளன. அவற்றை முதிர்ச்சிக்கென வைத்திருக்கும் நோக்கத்தையும், ஆற்றலையும் வங்கி கொண்டுள்ளது. அத்தகைய முதலீடுகள் பிரதானமாக திறைசேரி முறிகளாக இருந்து வருகின்றன. முதிர்ச்சிக்கென வைக்கப்பட்டிருக்கும் நிதிசார் முதலீடுகள் பூர்வாங்க அளவீட்டினையடுத்து மதிப்புக் குறைவை கழித்து, தாக்கமான வட்டி விகிதத்தை பயன்படுத்தி கழிக்கப்பட்ட செலவில் அளவிடப்படுகின்றன. தவணைகளில் கழிக்கப்பட்ட செலவு, கையகப்படுத்தலின் போது மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் கழிவு, ஆதாயம் என்பவற்றை கவனத்தில் கொண்டு தாக்கமான வட்டி விகிதத்தின் உள்ளார்ந்த ஒரு பாகமாக இருந்து வரும் முக்கியமான கட்டணங்களை கருத்தில் கொண்டு கணிக்கப்படுகின்றது. தவணைகளில் கழிப்பது, வருமானம் தொடர்பான கூற்றில் 'வட்டி வருமானத்தில்' உள்ளடக்கப்படுகின்றது. அத்தகைய முதலீடுகளில் ஏற்படும் மதிப்புக் குறைவிலிருந்து ஏற்படும் நட்டங்கள் வருமானக் கூற்றில் 'நிதிசார் முதலீடுகளிலிருந்து கிடைத்த தேறிய ஆதாயம்/நட்டம்' என்ற பிரிவில் அங்கீகரிக்கப்படுகின்றன. முதிர்ச்சிக்கென வைக்கப்பட்டிருக்கும் முதலீடுகளில் கணிசமான ஒரு பகுதியை முதிர்ச்சித் திகதிக்கு முன்னர் (குறிப்பிட்ட திட்டவட்டமான சில நிலைமைகளில் தவிர) வங்கி விற்பனை செய்ய வேண்டி நேரிட்டால் அல்லது மீள் வகைப்படுத்த நேரிட்டால் மொத்தப் பிரிவையும் விற்பனைக்கென வைக்கப்பட்டிருப்பவை என மீண்டும் வகைப்படுத்த வேண்டியிருக்கும். மேலும், இது இடம்பெறும் சந்தர்ப்பத்தில் வங்கி அடுத்து வரும் இரண்டு வருட காலப் பிரிவுக்குள் எந்தவொரு நிதிசார் சொத்தையும் முதிர்ச்சிக்கென வைக்கப்பட்டிருக்கும் சொத்தென வகைப்படுத்துவது தடை செய்யப்படும்.

4.2.8 கடன்கள் மற்றும் கிடைக்க வேண்டிய தொகைகளாக வகைப்படுத்தப்பட்டிருக்கும் நிதிசார் சொத்துக்கள்

முனைப்பான ஒரு சந்தையில் விலை குறிக்கப்பட்டிராத நிலையான அல்லது நிர்ணயிக்கப்படாத கொடுப்பனவுகளைக் கொண்ட மூலம் சாராத நிதிசார் சொத்துக்களையும் உள்ளடக்கிய கடன்கள் மற்றும் கிடைக்க வேண்டிய தொகைகள் என வகைப்படுத்தப்பட்டிருக்கும் நிதிசார் சொத்துக்கள்:

- வங்கி உடனடியாக அல்லது உடனடி எதிர்காலத்தில் விற்பனை செய்வதற்கு கருதியிருப்பதை மற்றும் வங்கி பூர்வாங்க அங்கீகாரத்திற்கு பின்னர் இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயமான பெறுமதியில் குறித்துரைக்கும் சொத்துக்கள்
- வங்கி பூர்வாங்க அங்கீகாரத்தின் பின்னர் விற்பனைக்கு வைக்கப்பட்டிருப்பவை என குறித்துரைக்கும் சொத்துக்கள்.
- கடன் சீர்குலைவு தவிர, வங்கி அதன் அனைத்து பூர்வாங்க முதலீடுகளை கணிசமான அளவில் அறவிட்டுக் கொள்ள முடியாத சொத்துக்கள்.

பூர்வாங்க அளவீட்டின் பின்னர் 'வங்கிகளுக்கு சேர வேண்டிய தொகைகள்' மற்றும் 'வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்கள்' ஆகிய தொகைகள் தாக்கமான வட்டி விகிதத்தை பயன்படுத்தி மதிப்புக் குறைவுக்கான ஏற்பாட்டை கழித்து தவணைகளில் கழிக்கப்பட்ட செலவில் அளவிடப்படுகின்றன. தவணைகளில் கழிக்கப்பட்ட செலவு கையகப்படுத்தலின் போது இடம்பெற்ற கழிவு அல்லது ஆதாயம் மற்றும் தாக்கமான வட்டி விகிதத்தின் ஒரு உள்ளார்ந்த பாகமாக இருந்து வரும் கட்டணம் அல்லது செலவு என்பவற்றை கணக்கில் எடுத்து கணிக்கப்படுகின்றன. தவணைகளில் கழிக்கப்படும் தொகை வருமானக் கூற்றில் 'வட்டி வருமானம்' பிரிவில் உள்ளடக்கப்படுகின்றது. மதிப்புக் குறைவு காரணமாக ஏற்படும் நட்டங்கள் வருமானக் கூற்றில் 'மதிப்புக் குறைவு செலவுகள்' பிரிவில் அங்கீகரிக்கப்படுகின்றன.

4.2.9 நிதிசார் சொத்துக்களை மீள வகைப்படுத்தல்

நியாயமான பெறுமதியில் மீள வகைப்படுத்தல், மீள வகைப்படுத்தல் திகதியில் பதிவு செய்யப்படுகின்றது. அது தவணைகளில் கழிக்கப்பட்ட புதிய செலவாக கருதப்படும்.

விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கும் வகையிலிருந்து மீள வகைப்படுத்தப்பட்ட ஒரு நிதிசார் சொத்து தொடர்பான பங்கு மூலதனத்தில் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் ஏதேனும் முன்னைய ஆதாயம் அல்லது நட்டம் தாக்கமான வட்டி விகித முறையை பயன்படுத்தி முதலீட்டின் எஞ்சிய ஆயுள் காலத்தின் போது இலாபத்திற்கு அல்லது நட்டத்திற்கு தவணைகளில் கழிக்கப்படுகின்றது. தவணைகளில் கழிக்கப்பட்ட புதிய செலவுக்கும், எதிர்பார்க்கப்படும் காசுப் பாய்ச்சல்களுக்கும் இடையில் ஏதும் வேறுபாடுகள் இருப்பின், அது தாக்கமான வட்டி விகிதத்தை பயன்படுத்தி, சொத்தில் எஞ்சியிருக்கும் ஆயுள் காலத்தின் போது தவணைகளில் கழிக்கப்படுகின்றது. இந்தச் சொத்து பின்னர் மதிப்புக் குறைவு அடைந்திருப்பதாக நிர்ணயிக்கப்பட்டால், பங்குமூலதனத்தில் பதிவு செய்யப்பட்ட தொகை வருமானக் கூற்றுக்கு மீள்சுழற்சி செய்யப்படுகின்றது.

வங்கி வியாபாரத்திற்கென வைக்கப்பட்டிருக்கும் வகையிலிருந்து மூலத்திலிருந்து வராத சொத்தொன்றை மீள வகைப்படுத்த முடியும். அது கடன்கள் மற்றும் கிடைக்க வேண்டிய தொகைகள் என்ற வரைவிலக்கணத்திற்கு பொருந்துவதாக இருந்து வருமிடத்தும், அந்த நிதிசார் சொத்தை உடனடி எதிர்காலத்தில் அல்லது முதிர்ச்சிக் காலம் வரையில் வைத்திருக்கும் நோக்கத்தையும், ஆற்றலையும் வங்கி கொண்டிருக்குமிடத்து இவ்வாறு செய்ய முடியும். ஒரு நிதிசார் சொத்து மீள வகைப்படுத்தப்பட்டு, வங்கி அதனையடுத்து பணப் பெறுவனவுகளை அதிகரித்த அளவு அளவிட்டுக் கொள்ளக்கூடிய நிலையின் விளைவாக எதிர்கால பணப் பெறுவனவுகளின் மதிப்பீட்டை அதிகரித்தால் அந்த அதிகரிப்பின் தாக்கம் மதிப்பீட்டில் மாற்றம் ஏற்பட்ட திகதியிலிருந்து தாக்கமான ஒரு வட்டி விகிதத்திற்கு செய்யப்பட்ட சீராக்கமாக அங்கீகரிக்கப் படுகின்றது.

மீள வகைப்படுத்தல் முகாமைத்துவத்தின் தற்றுணிபில் மேற்கொள்ளப்பட முடியும். அது கருவிக்கு கருவி என்ற அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றது. வங்கி எந்தவொரு நிதிசார் கருவியையும் பூர்வாங்க அங்கீகாரத்திற்குப் பின்னர் இலாபம் அல்லது நட்ட வகைக்கூடாக நியாயமான மதிப்பில் மீள வகைப்படுத்துவதில்லை.

4.2.10 ஊழியர் கடன்களுக்கான 'நாள் 1' வித்தியாசம்

ஊழியர் கடன்கள் அனைத்தும் சந்தை வட்டி விகிதங்களுக்கு குறைந்த விகிதங்களில் வழங்கப்பட்டு வருவதுடன், அவை நியாயமான பெறுமதியில் அங்கீகரிக்கப்படுகின்றன. நியாயமான பெறுமதிக்கும் பகிர்ந்தளிக்கப்பட்ட தொகைக்குமான வித்தியாசம் நாள் 1 வித்தியாசம் எனக் கருதப்படுவதுடன், வருமானக் கூற்றில் கடன் காலப் பிரிவின் போது தாக்கமான வட்டி விகிதத்தை பயன்படுத்தி ஊழியர்களுக்கான செலவாக தவணைகளில் குறைக்கப்பட்டு வருகின்றது. இந்தத் தொகை வட்டி வருமானமாகவும் காட்டப்படுகின்றது. எனவே, வருமானக் கூற்றின் மீதான தேறிய தாக்கம் பூச்சியமாகும்.

4.2.11 ஏனைய நிதிசார் பொறுப்புக்கள்

இலாபம் அல்லது நட்டத்திற்கூடாக நியாயமான பெறுமதியில் குறித்துரைக்கப்பட்டிராத வங்கியினால் வெளியிடப்பட்ட நிதிசார் கருவிகள் ஏனைய நிதிசார் கருவிகள் என வகைப்படுத்தப்படுகின்றன. ஒப்பந்த ஏற்பாட்டின் விளைவாக வங்கி வைத்திருப்பவருக்கு காசை கொடுப்பதற்கான அல்லது மற்றொரு நிதிசார் கருவியை கொடுப்பதற்கான கடப்பாட்டினை கொண்டிருக்கும் பொழுது அல்லது நிலையான காசு தொகை ஒன்றின் பரிமாற்றத்தின் மூலம் அல்லது நிலையான பங்கு எண்ணிக்கைகளை கொண்ட மற்றொரு நிதிசார் சொத்தின் மூலம் அல்லாமல் கடப்பாட்டினை நிறைவு செய்து வைக்க வேண்டியிருக்கும் சந்தர்ப்பத்தில் இது இடம்பெறுகின்றது.

வாடிக்கையாளர்களின் வைப்புக்கள், வங்கிகளுக்கு செலுத்த வேண்டிய தொகைகள், வங்கிகளிலிருந்து கடன்படல்கள் மற்றும் ஏனையவை மற்றும் கடன் பத்திரங்கள் என்பவை ஏனைய நிதிசார் பொறுப்புக்களில் உள்ளடங்குகின்றன.

பூர்வாங்க அளவீட்டுக்கு பின்னர், ஏனைய நிதிசார் பொறுப்புக்கள் தாக்கமான வட்டி விகிதத்தை பயன்படுத்தி, தவணைகளில் கழிக்கப்பட்ட செலவில் அளவிடப்படுகின்றன. தவணைகளில் கழிக்கப்பட்ட செலவு வெளியீடு தொடர்பான ஏனைய கழிவு அல்லது ஆதாயம் மற்றும் தாக்கமான வட்டி விகிதத்தின் உள்ளார்ந்த பாகமாக இருந்து வரும் செலவுகள் என்பவற்றை கருத்தில் கொண்டு கணிக்கப்படுகின்றன.

4.3 நிதிசார் சொத்துக்களின் மற்றும் நிதிசார் பொறுப்புக்களின் அங்கீகார நீக்கம்

4.3.1 நிதிச் சொத்துக்கள்

ஒரு நிதிசார் சொத்து (அல்லது, பொருத்தமானவிடத்து ஒரு நிதிசார் சொத்தின் பாகம் அல்லது அதே மாதிரியான நிதிசார் சொத்துக்களின் குழுமத்தின் ஒரு பாகம்) பின்வரும் சந்தர்ப்பங்களில் அங்கீகார நீக்கம் செய்யப்படுகின்றது:

- சொத்துக்களிலிருந்து காசுப் பாய்ச்சல்களை பெற்றுக் கொள்ளக் கூடிய உரிமைகள் காலாவதியாகியிருக்கும் நிலை.
- வங்கி சொத்திலிருந்த காசுப் பாய்ச்சல்களை பெற்றுக் கொள்வதற்கு அதன் உரிமைகளை மாற்றல் செய்துள்ளது. அல்லது பெற்றுக் கொண்ட காசுப் பாய்ச்சல்களை 'செலுத்தித் தீர்க்கும்' ஏற்பாட்டின் கீழ் ஒரு மூன்றாம் தரப்புக்கு தாமதமின்றி முழுமையாக செலுத்துவதற்கன கடப்பாட்டை ஏற்கும் சந்தர்ப்பத்தில் அல்லது:
  - சொத்தின் அனைத்து விதமான நட்டவச்சங்களையும் மற்றும் வெகுமதிகளையும் வங்கி கணிசமான அளவில் மாற்றம் செய்துள்ளது அல்லது
  - வங்கி சொத்தின் அனைத்து விதமான நட்டவச்சங்களையும், வெகுமதிகளையும் கணிசமான அளவில் மாற்றம் செய்யவோ வைத்திருக்கவோ இல்லை ஆனால், அது அச்சொத்தின் கட்டுப்பாட்டை மாற்றல் செய்துள்ளது.

4.3.2 நிதிசார் பொறுப்புக்கள்

பொறுப்பின் கீழான கடப்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கும் பொழுது அல்லது ரத்து செய்யப்பட்டிருக்கும் பொழுது அல்லது காலாவதியாகும் பொழுது ஒரு நிதிசார் பொறுப்பு அங்கீகார நீக்கம் செய்யப்படுகின்றது.

தற்போதைய நிதிசார் பொறுப்புக்கு பதிலாக அதே கடனாளியிடமிருந்து கணிசமான அளவிலான வேறுபட்ட நியதிகளில் மற்றொரு பொறுப்பு பெறப்படும் சந்தர்ப்பத்தில் அல்லது தற்போதைய பொறுப்பொன்றின் விதிமுறைகள் கணிசமான அளவில் மாற்றியமைக்கப்படும் சந்தர்ப்பத்தில், அத்தகைய பரிமாற்றம் அல்லது மாற்றியமைத்தல் அசல் பொறுப்பின் அங்கீகார நீக்கம் என்று கருதப்படுவதுடன், ஒரு புதிய பொறுப்பின் அங்கீகாரம் எனவும் கருதப்படுகின்றது. அசல் நிதிசார் பொறுப்பின் முன்கொண்டு செல்லப்படும் பெறுமதி மற்றும் செலுத்தப்பட்ட தொகை என்பவற்றுக்கிடையிலான வித்தியாசம் இலாபத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது.

4.4 மீள்கொள்வனவு மற்றும் மறு மீள்கொள்வனவு ஒப்பந்தங்கள்

குறித்துரைக்கப்பட்ட எதிர்கால திகதியொன்றில் கொள்வனவு செய்யப்படுவதற்கான ஒப்பந்தங்களின் கீழ் விற்பனை செய்யப்பட்டிருக்கும் பிணைப் பத்திரங்கள், வங்கி அவற்றின் அனைத்து நட்டவச்சங்களையும், வெகுமதிகளையும் கணிசமான அளவில் வைத்துக் கொண்டிருப்பதனால் நிதி நிலைக் கூற்றிலிருந்து அங்கீகார நீக்கம் செய்யப்படுவதில்லை.

அதனையடுத்து பெறப்படும் காசுத் தொகை, நிதி நிலை தொடர்பான கூற்றில் அது சம்பந்தப்பட்ட கடப்பாட்டுடன் இணைந்த விதத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது. 'மீள் கொள்வனவு ஒப்பந்தங்களின்' கீழ் திரண்டிருக்கும் வட்டி ஒரு பொறுப்பாக கருதப்படுகின்றது. இக்கொடுக்கல் வாங்கல்களின் பொருளாதார சாராம்சம் வங்கிக்கான ஒரு கடனாக பிரதிபலிக்கின்றது. விற்பனை மற்றும் மீள் கொள்வனவுக்கிடையிலான வித்தியாசம் ஒரு வட்டிச் செலவாக கருதப்படுவதுடன், தாக்கமான வட்டி விகிதத்தை பயன்படுத்தி ஒப்பந்தத்தின் ஆயுள் காலத்தின் போது திரண்டு வருகின்றது.

இதற்கு மாற்றமாக, திட்டவட்டமான எதிர்காலமொன்றில் மீண்டும் விற்பனை செய்யப்படுவதற்கென ஒப்பந்தங்களின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணைப் பத்திரங்கள், நிதி நிலை தொடர்பான கூற்றில் அங்கீகாரம் செய்யப்படுவதில்லை. திரண்ட வட்டியையும் உள்ளடக்கிய செலுத்தப்பட்ட தொகை நிதி நிலை தொடர்பான கூற்றில் 'இரவல் வாங்கப்பட்ட பிணைப் பத்திரம் மற்றும் மறு மீள் கொள்வனவு ஒப்பந்தங்கள் மீதான காசுப் பிணை' பிரிவில் பதிவு செய்யப்படுகின்றது. கொடுக்கல் வாங்கல்களின் பொருளாதார சாராம்சம் வங்கியினால் பெறப்பட்ட கடனாக பிரதிபலிக்கின்றது. கொள்வனவு மற்றும் மீள்விற்பனை விலைகளுக்கிடையிலான வித்தியாசம் 'தேறிய வட்டி வருமான' பிரிவில் பதிவு செய்யப்படுவதுடன், தாக்கமான வட்டி விகிதத்தை பயன்படுத்தி ஒப்பந்தத்தின் ஆயுள் காலம் முழுவதும் அது திரண்டு வருகின்றது.

4.5 நியாயமான பெறுமதியை நிர்ணயித்தல்

அறிக்கையிடும் திகதியில் முனைப்பான சந்தைகளில் வியாபாரம் செய்யப்பட்ட நிதிசார் கருவிகளின் நியாயமான பெறுமதி அவற்றில் குறிக்கப்பட்ட சந்தை விலையை அடிப்படையாகக் கொண்டுள்ளது. கொடுக்கல் வாங்கல் செலவுக்கான பிடித்தங்கள் எவையும் மேற்கொள்ளப்பட வில்லை.

முனைப்பான சந்தையொன்றில் வியாபாரம் செய்யப்படாத ஏனைய அனைத்து நிதிக் கருவிகள் தொடர்பாகவும் அவற்றின் நியாயமான பெறுமதி பொருத்தமான மதிப்பீட்டு நுட்பங்களை பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்றது. மதிப்பீட்டு நுட்பங்கள் கழிவு செய்யப்பட்ட காசுப் பாய்ச்சல் முறை, ஏனைய சம்பந்தப்பட்ட மதிப்பீட்டு மாதிரிகளில் சந்தையில் அவதானிக்கப்பட்ட விலைகளில் நிலவி வரும் இதே மாதிரியான கருவிகளுடன் ஒப்பிடுதல் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

தற்போதைய சந்தைக் கொடுக்கல் வாங்கல்கள் அல்லது அவதானிக்கத்தக்க சந்தைத் தரவுகள் கிடைக்காதிருக்கும் குறிப்பிட்ட சில நிதிசார் கருவிகள் மதிப்பீட்டு நுட்பத்தை பயன்படுத்தி நியாயமான பெறுமதியில் பதிவு செய்யப்படுகின்றன. அவற்றின் நியாயமான பெறுமதி ஒரு மதிப்பீட்டு மாதிரியை பயன்படுத்தி நிர்ணயிக்கப்படுகின்றது. இந்த மதிப்பீட்டு மாதிரி விலைகளுக்கு அல்லது உள்ளீடுகளுக்கு எதிராக உண்மையான சந்தைக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக பரீட்சித்துப் பார்க்கப்பட்டுள்ளன. அது மிகப் பொருத்தமான மாதிரி எடுக்கோள்களில் வங்கியின் மிகச் சிறந்த மதிப்பீட்டை பயன்படுத்துகின்றது.

நிதிசார் கருவிகளின் நியாயமான பெறுமதிகள் தொடர்பான ஒரு பகுப்பாய்வும், அவை எவ்வாறு அளவிடப்படுகின்றன என்ற மேலும் விவரங்களும் குறிப்பு 49 இல் தரப்பட்டுள்ளன.

4.6. நிதிச் சொத்துக்களில் ஏற்படும் மதிப்புக் குறைவு

வங்கி ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும், ஒரு நிதிச் சொத்து அல்லது நிதிச் சொத்துக்களின் ஒரு குழு மதிப்புக் குறைவு அடைந்துள்ளதென்பதனை காட்டுவதற்கு போதியளவு சான்றுகள் இருந்து வருகின்றனவா என மதிப்பிடுகின்றது. ஒரு நிதிச் சொத்து அல்லது நிதிச் சொத்துக்களின் குழு பின்வரும் சந்தர்ப்பத்தில் மதிப்புக் குறைவடைந்திருப்பதாக கருதப்படுகின்றது: சொத்தின் பூர்வாங்க அங்கீகாரத்தின் பின்னர் (ஏற்பட்ட ஒரு நட்ட விகிதம்) இடம்பெற்றிருக்கும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நிகழ்வுகளின் விளைவாக மதிப்புக் குறைவு ஏற்பட்டுள்ளது என்பதனை எடுத்துக் காட்டுவதற்கு போதிய சான்றுகள் இருந்து வருதல். அந்த நட்ட நிகழ்வு (நிகழ்வுகள்) நிதிச் சொத்தின் அல்லது நிதிச் சொத்தின் குழுவில் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்கள் மீது ஒரு தாக்கத்தை கொண்டிருப்பதுடன், அதனை நம்பகமான விதத்தில் மதிப்பிடக் கூடிய நிலை.

மதிப்புக் குறைவுக்கான சான்றுகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன: ஒரு கடன் எடுத்தவர்கள் குழு கணிசமான அளவிலான நிதி நெருக்கடிகளை எதிர்கொண்டு வருவதனைக் காட்டும் குறிகாட்டிகள். அவர்கள் வங்குரோத்து நிலையை அடையக் கூடிய அல்லது ஏனைய நிதிசார் மீளமைப்புக்களை எதிர்கொள்ளக் கூடிய நிகழ்தகவு. வட்டி அல்லது அசல் கொடுப்பனவுகளை செலுத்தத் தவறுதல் அல்லது செலுத்தாது விடுதல். மதிப்பிடத்தக்க வருங்கால காசுப் பாய்ச்சல்களில், அளவிடக் கூடிய ஒரு வீழ்ச்சி இருந்து வருகின்றது என்பதனை காட்டும். அவதானிக்கத்தக்க தரவுகள் இருந்து வருதல். அதாவது, காசுத் தொகைகளில் மாற்றங்கள் அல்லது கடன்களை செலுத்தத் தவறும் விதத்திலான பொருளாதார நிலைமைகள்.

4.6.1 கழிக்கப்பட்ட செலவில் முன்கொண்டு செல்லப்படும் நிதிசார் சொத்துக்கள்

கழிக்கப்பட்ட செலவில் (வங்கிகளிலிருந்து கிடைக்க வேண்டிய தொகைகள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்கள் போன்ற) தவணைகளில் கழிக்கப்பட்ட செலவில் முன்கொண்டு செல்லப்படும் நிதிசார் சொத்துக்களை பொறுத்தவரையில் வங்கி முதலில் இந் நிதிசார் சொத்துக்கள் தொடர்பாக ஒரு மதிப்புக் குறைவு இருந்து வருவதற்கான தனிப்பட்ட சான்றுகள் உள்ளனவா என்பதனை மதிப்பிடுகின்றது. மேலும், அந்த நிதிசார் சொத்து தனிப்பட்ட முறையில் முக்கியத்துவம் இல்லாதிருக்கின்றதா அல்லது கூட்டாக நோக்கும் பொழுது முக்கியத்துவம் பெறுகின்றதா என்பதனையும் மதிப்பிடுகின்றது. தனிப்பட்ட முறையில் மதிப்பீடு செய்யப்பட்ட நிதிசார் சொத்து தொடர்பாக மதிப்புக் குறைவு இருந்து வருகின்றது என்பதனை காட்டுவதற்கான நியாயமான சான்றுகள் இல்லை என வங்கி நிர்ணயித்தால் அது அச்சொத்தை அதே மாதிரியான கடன் நட்டவச்ச பண்புக் கூறுகளை கொண்டிருக்கும் நிதிசார் சொத்துக்களின் ஒரு குழுவில் உள்ளடக்குகின்றது. பின்னர், மதிப்புக் குறைவு தொடர்பாக கூட்டாக அவற்றை மதிப்பீடு செய்கின்றது. மதிப்புக் குறைவு தொடர்பாக தனிப்பட்ட முறையில் மதிப்பிடப்பட்ட சொத்துக்கள் மற்றும் ஒரு மதிப்புக் குறைவு நட்டம் இருந்து வரும் சொத்துக்கள், அதன் தொடர்ச்சியாக இருந்து வரும் சொத்துக்கள் கூட்டு மதிப்புக் குறைவு மதிப்பீட்டில் உள்ளடக்கப்படாத சொத்துக்கள்.

மதிப்புக் குறைவு நட்டமொன்று ஏற்படுவதைக் காட்டுவதற்கான நியாயமான சான்று இருந்து வந்தால், அந்த நட்டத் தொகை சொத்தின் முன்கொண்டு செல்லப்படும் தொகைக்கும், மதிப்பிடப்பட்ட காசுப் பாய்ச்சல்களின் தற்போதைய மதிப்புக்கும் (இதுவரையில் ஏற்பட்டிராத எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்படும் கடன் நட்டங்களை தவிர்த்து) இடையிலான வித்தியாசமாக அளவிடப்படுகின்றது. சொத்தின் முன்கொண்டு செல்லப்படும் தொகை ஒரு அலவன்ஸ் கணக்கை பயன்படுத்துவதற்கூடாக குறைக்கப்படுவதுடன், நட்டத் தொகை வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது. குறைந்து வரும் முன்கொண்டு செல்லப்படும் தொகையின் மீது வட்டி தொடர்ச்சியாக திரண்டு வருவதுடன், மதிப்புக் குறைவு நட்டத்தை அளவிடும் நோக்கத்திற்கான வருங்கால காசுப் பாய்ச்சலுக்கு கழிவு வழங்குவதற்கு பயன்படுத்தப்பட்ட திரண்ட வட்டி விகிதத்தை பயன்படுத்தி அது மேற்கொள்ளப்படுகின்றது.

கடன்களும் அதனுடன் இணைந்த அலவன்சுகளும் வருங்கால வீழ்ச்சி ஏற்படுமென ஒரு யதார்த்த நிலை காணப்படாத சந்தர்ப்பத்திலும், அனைத்துப் பிணைகளை விற்று காசாக்கி கொண்டிருக்கும் சந்தர்ப்பத்திலும் அல்லது வங்கிக்கு மாற்றல் செய்திருக்கும் சந்தர்ப்பத்திலும் பதிவழிக்கப்படுகின்றன. அடுத்து வரும் வருடமொன்றில் மதிப்பிடப்பட்ட மதிப்புக் குறைவு நட்டம், மதிப்புக் குறைவு அங்கீகரிக்கப்பட்ட திகதிக்குப் பின்னர் இடம்பெற்ற ஒரு நிகழ்வின் காரணமாக அதிகரித்தால் அல்லது குறைவடைந்தால் முன்னர் அங்கீகரிக்கப்பட்ட மதிப்புக் குறைவு நட்டம் அதிகரிக்கப்படுகின்றது. அல்லது குறைக்கப்படுகின்றது. அலவன்சு கணக்கில் சீராக்கம் செய்வதன் மூலம் இது மேற்கொள்ளப்படுகின்றது. ஒரு எதிர்கால பதிவழிப்புத் தொகை பின்னர் அறவிடப்பட்டால், அந்த அறவீடு ஒரு வருமானமாக வரவு வைக்கப்படுகின்றது.

மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்களின் தற்போதைய பெறுமதிகள், நிதிசார் சொத்தின் அசல் தாக்கமான வட்டி விகிதத்தில் கழிவு செய்யப்படுகின்றன. ஒரு கடன் மாறத்தக்க வட்டி விகிதத்தை கொண்டிருந்தால், மதிப்புக் குறைவை அளவிடுவதற்கான கழிவு விகிதம் தற்போதைய தாக்கமான வட்டி விகிதமாகும். பிணையாக எடுக்கப்பட்ட நிதிசார் சொத்தொன்றின் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்களின் தற்போதைய பெறுமதியின் கணிப்பீடு பிணைகளை பெற்றுக் கொள்ளல் மற்றும் விற்பனை செய்வதற்கான செலவுகளை கழித்துக் கிடைக்கும் தொகைகளை பிரதிபலிக்கும்.

பெறுமதிக் குறைவுக்கான ஒரு கூட்டு மதிப்பீட்டு நோக்கத்திற்கென நிதிசார் சொத்துக்கள் கடன் இடர்ப் பண்புக் கூறுகளின் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றன. சொத்து வகை, தொழில்துறை வகை, உரித்து வகை, கடன் தவணை பிந்தியிருக்கும் நிலை மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட காரணிகள் என்பன இதன் போது கவனத்தில் எடுக்கப்படுகின்றன.

மதிப்புக் குறைவுக்கென கூட்டாக மதிப்பீடு செய்யப்பட்டிருக்கும் நிதிச் சொத்துக்கள் குழுவொன்றின் எதிர்கால பணப் பாய்ச்சல்கள், சொத்துக்கள் தொடர்பான வரலாற்று ரீதியான நட்ட அனுபவத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன. அதே குழுவைச் சேர்ந்த ஏனைய சொத்துக்கள் தொடர்பான கடன் இடர்ப் பண்புக் கூறுகள் இச்சந்தர்ப்பத்தில் கவனத்தில் எடுக்கப்படுகின்றன. வரலாற்று ரீதியான நட்ட அனுபவம் தற்போதைய அவதானிக்கத்தக்க தரவுகளின் அடிப்படையில் சீராக்கம் செய்யப்படுகின்றது. வரலாற்று ரீதியான நட்ட அனுபவம் அடிப்படையாகக் கொண்டிருக்கும் தற்போதைய நிலைமைகளின் தாக்கங்களை பிரதிபலிக்கும் விதத்தில் அது மேற்கொள்ளப்படுகின்றது. மேலும், தற்பொழுது நிலவி வராத, வரலாற்று காலப் பிரிவில் அந்நிலைமைகளின் தாக்கத்தை அகற்றும் விதத்திலும் அது மேற்கொள்ளப்படுகின்றது.

வருங்கால காசுப் பாய்ச்சல்களை மதிப்பிடுவதற்கு பயன்படுத்தப்படும் முறைமையியல் மற்றும் அனுமானங்கள் என்பன நட்ட மதிப்பீடுகளுக்கும், உண்மையான நட்ட அனுபவத்துக்குமிடையில் ஏற்படக் கூடிய வேறுபாடுகளை குறைக்கும் பொருட்டு காலத்துக்குக் காலம் மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றன.

4.6.2 விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கும் நிதிசார் முதலீடுகள்

விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கும் நிதிசார் முதலீடுகள் தொடர்பாக, வங்கி ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும், ஒரு முதலீடு பெறுமதிக் குறைவினை அடைந்துள்ளது என்பதற்கு நியாயமான சான்று இருந்து வருகின்றதா என மதிப்பீடு செய்கின்றது.

விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளவையென வகைப்படுத்தப் பட்டிருக்கும் பங்கு முதலீடுகளை பொறுத்தவரையில், நியாயமான சான்று, முதலீட்டின் பெறுமதியில் கணிசமான அளவிலான அல்லது நீடித்த ஒரு வீழ்ச்சி இருந்து வந்துள்ளது என்பதனையும், மதிப்புக் குறைவுக்கான சான்று இருந்து வரும் பொழுது கையகப்படுததல் செலவு மற்றும் நடப்பு நியாயமான பெறுமதி என்பவற்றுக்கிடையிலான வித்தியாசமாக அளவிடப்பட்டிருக்கும் கூட்டுமொத்த நட்டம் - வருமானக் கூற்றில் அந்த முதலீட்டில் முன்னர் அங்கீகரிக்கப்பட்டிருந்த எவையேனும் மதிப்புக் குறைவு நட்டத்தை கழித்து - பங்கிலிருந்து நீக்கப்பட்டு வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது. பங்கு மூலதனத்தின் மீதான பெறுமதிக் குறைவு நட்டங்கள் வருமானக் கூற்றுக்கூடாக திருப்பப்படுவதில்லை பெறுமதிக் குறைவின் பின்னர் நியாயமான பெறுமதியில் உருவாகும் அதிகரிப்புக்கள் ஏனைய அனைத்துமடங்கிய வருமானப் பிரிவில் அங்கீகரிக்கப்படுகின்றன.

விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கும் நிதிசார் முதலீடுகள் மீதான மதிப்புக் குறைவு நட்டங்கள் குறித்த விவரங்கள் குறிப்பு 23 இல் தரப்பட்டுள்ளன.

4.6.3 மீள பேசித் தீர்க்கப்பட்ட கடன்கள்

சாத்தியமான சந்தர்ப்பங்களில் வங்கி பிணைகளை கையகப்படுத்துவதிலும் பார்க்க கடன்களை மீள அட்டவணைப்படுத்துவதற்கு முயற்சிக்கின்றது. கொடுப்பனவு ஏற்பாட்டுக்கான கால அளவை நீடித்தல் மற்றும் புதிய கடன் நிபந்தனைகளுக்கான உடன்படிக்கை என்பவற்றை இது உள்ளடக்க முடியும். விதிமுறைகள் மீளப் பேசித் தீர்க்கப்பட்ட பின்னர் அசல் தாக்கமான வட்டி விகிதத்தை பயன்படுத்தி பெறுமதிக் குறைவு ஏதேனும் இருப்பின் அவை அளவிடப்படுகின்றன. கடன் இனிமேலும் தவணை பிந்திய கடனாக கருதப்படுவதில்லை. அனைத்து அளவுகோல்களும் நிறைவு செய்யப்பட்டுள்ளன என்பதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும், எதிர்கால கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட முடியுமென்பதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் முகாமைத்துவம் தொடர்ச்சியாக மீள் பேசித் தீர்க்கும் கடன்களை மீளாய்வு செய்கின்றது. தொடர்ந்தும் தனிப்பட்ட அல்லது கூட்டு மதிப்பீட்டுக்கு உள்ளாகி வரும் கடன்கள், அக்கடன்களின் அசல்கள் தாக்கமான வட்டி விகிதத்தை பயன்படுத்தி கணிக்கப்படுகின்றன.

4.6.4 பிணைகளை மதிப்பீடு செய்தல்

வங்கி அதன் நிதிசார் சொத்துக்கள் மீதான இடர்களை தணித்துக் கொள்ளும் பொருட்டு, பிணைகளை பயன்படுத்திக் கொள்ள முயல்கின்றது. பிணைகள் பல்வேறு வடிவங்களில் வருகின்றன. காசு, பிணைப் பத்திரங்கள், கடன் கடிதங்கள்/ உத்தரவாதங்கள், கிடைக்க வேண்டிய தொகைகள், பொருட் பட்டியல்கள், ஏனைய நிதிசார் சொத்துக்கள் மற்றும் ஏனைய கடன் அதிகரிப்புக்கள் என இவற்றை எடுத்து விளக்க முடியும்.

4.6.5 மீளப் பெறப்பட்ட பிணை அல்லது வங்கிக்கு சொத்துக்கள் வழங்கப்பட்டிருக்கும் நிலை

கடன்களைச் செலுத்தத் தவறும் வாடிக்கையாளாகளிடமிருந்து பிணைகளை பெற்றுக் கொள்வதன் மூலம் பெறப்படும் அசையா சொத்து கடன் தீர்ப்பனவின் ஒரு பாகமாக வங்கிக்குக் கிடைத்திருக்கும் ஒரு அசையா சொத்து ஒரு முதலீட்டுச் சொத்தாக அல்லது வங்கியின்

சொத்துக்களின் ஒரு பாகமாக கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டிருக்கும் பணிப்புரைகளின் பிரகாரம் இவ்வாறு செய்யப்படுகின்றது.

4.7 நிதிசார் கருவிகளை ஈடுசெய்தல்

நிதிசார் சொத்துக்கள் அல்லது நிதிசார் பொறுப்புக்கள் ஈடு செய்யப்படுவதுடன், தேறிய தொகை நிதி நிலை தொடர்பான கூற்றில் அறிக்கையிடப்படுகின்றது. அங்கீகரிக்கப்படும் தொகைகளை ஈடு செய்வதற்கென தற்பொழுது சட்டத்தின் மூலம் வலுவிடக் கூடிய உரிமை இருந்து வந்தால் மட்டும், அத்துடன், தேறிய அடிப்படையில் கடனை செலுத்தி வரும் நோக்கம் இருந்து வந்தால் அல்லது பிணையை விற்று, சொத்தை விற்று அதே நேரத்தில் பொறுப்பை தீர்த்து வைக்கும் நோக்கம் இருந்து வந்தால் மட்டும் இவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றது. இது ஈடு செய்யும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் மேற்கொள்ளப்படுவதில்லை. எனவே, சம்பந்தப்பட்ட சொத்துக்கள் அல்லது பொறுப்புக்கள் நிதி நிலை தொடர்பான கூற்றில் மொத்தமாக சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன.

4.8 குத்தகை

ஒரு ஏற்பாடு, ஒரு குத்தகை வசதியாக அல்லது அது ஒரு குத்தகை வசதியைக் கொண்டதாக இருந்து வருகின்றதா என்பதனை நிர்ணயித்தல் அந்த ஏற்பாட்டின் சாராம்சத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது. இந்த ஏற்பாட்டை பூர்த்தி செய்து வைத்தல் திட்டவட்டமான ஒரு சொத்தின் அல்லது சொத்துக்களின் பாவனையின் மீது தங்கியிருந்து வருகின்றனதா என்ற விடயத்தை மதிப்பீடு செய்வது அவசியமாகும். அந்தச் சொத்துக்கள் அல்லது ஏற்பாடு சொத்துக்களை பயன்படுத்தும் உரிமையை வழங்குகின்றதா என்பதனை மதிப்பீடு செய்ய வேண்டும்.

4.8.1 குத்தகை பெறுனராக வங்கி செயற்பாட்டு குத்தகைகள்

குத்தகைக்கு விடப்பட்ட உருப்படிகளின் உரித்துடன் சம்பந்தப்பட்ட அனைத்து விதமான இடர்கள் அனுகூலங்கள் என்பவற்றை வங்கிக்கு கணிசமான அளவில் மாற்றல் செய்யாத குத்தகைகள் செயற்பாட்டு குத்தகைகள் என அழைக்கப்படுகின்றன. செயற்பாட்டு குத்தகை கொடுப்பனவுகள் வருமானக் கூற்றில் குத்தகை காலப் பிரிவின் போது நேர்கோட்டு அடிப்படையில் ஒரு செலவாக அங்கீகரிக்கப்படுகின்றது. செலுத்தப்பட வேண்டிய அவசரகால வாடகை கட்டணம் அச்செலவுகள் ஏற்படும் காலப் பிரிவின் போது ஒரு செலவாக அங்கீகரிக்கப்படுகின்றது.

நிதிக் குத்தகை

குத்தகைக்கு விடப்பட்ட உருப்படியின் உரித்து சம்பந்தப்பட்ட அனைத்து இடர்களையும் அனுகூலங்களையும் குழுமத்திற்கு கணிசமான அளவில் மாற்றல் செய்து கொடுக்கும் குத்தகைகள், குத்தகைக்கு விடப்பட்ட சொத்தின் நியாயமான பெறுமதியில் மூலதனத்தில் சேர்க்கப்படுகின்றது. அல்லது பெறுமதி குறைவாக இருந்து வந்தால் குறைந்தபட்ச கொடுப்பனவுகளின் தற்போதைய மதிப்பில் அளவிடப்படுகின்றது. குத்தகை கொடுப்பனவுகள் நிதிக் கட்டணங்கள் மற்றும் குத்தகை பொறுப்புக்களின் குறைவு என்பவற்றுக்கிடையில் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. அதன் மூலம் பொறுப்பின் எஞ்சிய பாகத்தின் மீது நிலையான ஒரு வட்டி விகிதத்தை பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்பு கிடைக்கின்றது. நிதிக் கட்டணங்கள் வருமானக் கூற்றில் நிதிச் செலவுகளில் அங்கீகரிக்கப்படுகின்றன. குத்தகைக்கு விடப்பட்ட ஒரு சொத்து அச்சொத்தின் பயனுள்ள ஆயுள் காலத்தின் போது பெறுமதி இறக்கம் செய்யப்படுகின்றது. குத்தகை காலப் பிரிவின் முடிவின் போது குழுமம் உரித்தினைப் பெற்றுக் கொள்ளும் என்பதற்கான நியாயமான நிச்சயமற்ற தன்மை இல்லாதிருந்தால், அச்சொத்து குத்தகைச் சொத்தின் பயனுள்ள ஆயுள் காலத்தின் போது குத்தகை நிபந்தனையின் பிரகாரம் பெறுமதி இறக்கம் செய்யப்படுகின்றது.

4.8.2 குத்தகை வழங்குனராக வங்கி நிதிக் குத்தகை

சட்டபூர்வமான உரித்தினை தவிர, உரித்துடன் சம்பந்தப்பட்டிருக்கும் ஏனைய நட்டவச்சங்களையும், வெகுமதிகளையும் மாற்றல் செய்து கொடுக்கும் வாடிக்கையாளர்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டிருக்கும் சொத்துக்கள் நிதிக் குத்தகைகள் என வகைப்படுத்தப்படுகின்றன. கிடைக்க வேண்டிய குத்தகை வாடகைகள் நிதி நிலை தொடர்பான கூற்றில் மதிப்புக் குறைவுக்கான ஒதுக்குகளை கழித்து காட்டப்படுகின்றன.

4.9 காசு மற்றும் காசுக்கு இணையானவை

காசு மற்றும் குறுங்கால நிதிகள் என்பவை கையிலுள்ள காசு, வங்கிகளிலுள்ள காசு, வங்கிகளில் வைக்கப்பட்டிருக்கும் தொகைகள் மற்றும் அழைப்பிலும் குறுகிய அறிவித்தலில் கிடைக்கும் காசு என்பவற்றை உள்ளடக்குகின்றன. காசு மற்றும் குறுங்கால நிதிகள் தொடர்பான விவரங்கள் நிதிசார் கூற்றுக்களின் குறிப்பு 17 இல் தரப்பட்டுள்ளன.

4.10 சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணம்

சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பன நாளாந்த செலவுகளை தவிர்த்து, திரண்ட பெறுமதித் தேய்வு மற்றும் திரண்ட மதிப்புக் குறைவு என்பவற்றை கழித்து கொள்விலையில் குறிப்பிடப்பட்டுள்ளன. எதிர்பார்க்கப்படும் பயனுள்ள ஆயுள் காலத்தின் போது ஏற்படும் மாற்றங்கள் பெறுமதிக் குறைவு காலப் பிரிவு அல்லது முறையை மாற்றுவதன் மூலம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகின்றது. பொருத்தமான விதத்தில் அது மேற்கொள்ளப்படுவதுடன், கணக்கீட்டு மதிப்பீடுகளில் ஏற்பட்ட மாற்றம் என கருதப்படுகின்றது.

செலவு மாதிரி

அன்றாட பராமரிப்பு செலவைத் தவிர்த்து, மதிப்பில் ஏற்பட்ட திரண்ட தேய்வு மற்றும் திரண்ட பாதிப்பு என்பவற்றைக் கழித்து பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பன கொள்விலையில் காட்டப்பட்டுள்ளன. அச்செலவு அங்கீகார அளவுகோல் நிறைவேற்றப்பட்டிருக்குமிடத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றின் பாகத்திற்கு பதிலாக புதிய பாகத்தைச் சேர்த்துக் கொள்ளும் செலவையும், அச்செலவு செய்யப்படும் பொழுது உள்ளடக்குகின்றது.

மீள் மதிப்பீட்டு மாதிரி

வங்கி அதன் ஒட்டுமொத்த முழு உரித்துக் காணி மற்றும் கட்டடங்கள் தொடர்பாக மீள் மதிப்பீட்டு மாதிரியை பிரயோகிக்கின்றது. அத்தகைய சொத்துக்கள் மீள் மதிப்பிடப்பட்ட தொகையில் முன்கொண்டு செல்லப்படுகின்றன. அது பின்னர் ஒன்று திரண்ட பெறுமானத் தேய்வு ஏதேனும் இருப்பின், அதனையும் மீள் மதிப்பீட்டுத் திகதிக்குப் பின்னர் செலவு செய்யப்பட்ட பாதிப்புத் தொகை எவையேனும் இருப்பின் அவற்றை கழித்து மீள் மதிப்பீட்டு திகதியில் நிலவி வரும் நியாயமான மதிப்பை குறிக்கின்றது.

மீள் மதிப்பீடு செய்யப்பட்ட ஒரு சொத்தின் நியாயமான பெறுமதி, அதன் முன்கொண்டு செல்லப்படும் தொகையிலிருந்து பொருள்சார் ரீதியில் வேறுபடாதிருப்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு, ஒவ்வொரு 7 வருடங்களுக்கும் ஒரு முறை மீள் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஏதேனும் மீள் மதிப்பீட்டு மிகைகள் இருப்பின், அவை ஐந்தொகையின் பங்கு மூலதனப் பிரிவில் உள்ளடக்கப்பட்டிருக்கும் மீள் மதிப்பீட்டு ஒதுக்குக்கு இலாபத்தில் அல்லது நட்டத்தில், முன்னர் அங்கீகரிக்கப்பட்டிருந்த அதே சொத்தின் ஒரு மீள்மதிப்பீட்டுக் குறைவை திருப்பும் சந்தர்ப்பத்தில் தவிர, வரவு வைக்கப்படுகின்றது. அவ்விதம் திருப்பும் நிலை ஏற்படும் பொழுது, அதிகரிப்பு இலாபத்தில் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது. ஒரு மீள் மதிப்பீட்டு குறை, அது அதே சொத்து தொடர்பான ஒரு முன்னைய மிகையை நேரடியாக ஈடு செய்யும் நிலையைத் தவிர, சொத்து மீள் மதிப்பீட்டு ஒதுக்கில் இருக்கும் மிகைக்கு எதிராக நேரடியாக ஈடு செய்யப்படுகின்றது.

பின்னர் வரும் செலவு

சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரண உருப்படி ஒன்றின் ஒரு பாகத்திற்கு பதிலாக ஒரு புதிய பாகத்தை எடுத்து வரும் பொழுது, அதற்காகும் செலவு, அந்தப் பாகத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும் எதிர்கால பொருளாதார அனுகூலங்கள் குழுமத்துக்கு வரக் கூடிய சாத்தியப்பாடும், அதன் செலவை நம்பகமான விதத்தில் மதிப்பிடக் கூடிய சாத்தியப்பாடும் நிலவி வருமிடத்து, அந்த உருப்படியின் முன்கொண்டு செல்லப்படும் தொகையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

மீள எடுத்து வரும் செலவு

வருங்கால பொருளாதார அனுகூலங்களை மீள எடுத்து வருவதற்கென அல்லது பராமரிப்பதற்கென சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றின் பழுதுபார்ப்புக்கு அல்லது பராமரிப்புக்கு மேற்கொள்ளப்படும் செலவுகள், அச்செலவு ஏற்படும் சந்தர்ப்பத்தில் வருமானக் கூற்றில் செலவில் எழுதப்படுகின்றன.

இடம்பெற்று வரும் மூலதன வேலைகள்

இவை கட்டடங்கள், பாரிய பொறித்தொகுதிகள், இயந்திரம் மற்றும் முறைமை அபிவிருத்தி என்பவற்றின் நிர்மாணம் தொடர்பாக நேரடியாக ஏற்படும் மூலதன இயல்பைக் கொண்ட செலவுகளாக இருந்து வருவதுடன், பின்னர் மூலதனமயமாக்கப்படுகின்றன. இவை நிதி நிலை தொடர்பான கூற்று கொள்விலையில் காட்டப்பட்டுள்ளன.

பெறுமானத் தேய்வு

பெறுமானத் தேய்வு நேர்கோட்டு முறையை பயன்படுத்தி கணிக்கப்படுகின்றது. அதன் மூலம் சொத்து மற்றும் உபகரணம் என்பவற்றின் கொள்விலை அவற்றின் மதிப்பிடப்பட்ட ஆயுள் காலத்தின் போது எஞ்சியிருக்கும் பெறுமதிகளில் கணிக்கப்படுகின்றது. காணி தொடர்பாக பெறுமதி இறக்கம் மேற்கொள்ளப்படுவதில்லை. மதிப்பிடப்பட்டுள்ள பயனுள்ள ஆயுள் காலங்கள் வருமாறு:

சொத்து வகைகள்	பெறுமானத் தேய்வு காலம்
குத்தகைக் கட்டடம்	குத்தகை காலத்தின் போது
முழு உரித்து கட்டடம்	ஆண்டுக்கு 2%
தளபாடம், உபகரணம், இயந்திரம்	ஆண்டுக்கு 20%
முழு உரித்து, குத்தகை மோட்டார் வாகனங்கள்	ஆண்டுக்கு 25%
முன்னரே செலுத்தப்பட்ட குத்தகைகள்	குத்தகை காலத்தின் போது

அங்கீகார நீக்கம்

சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றின் ஓர் உருப்படி கையுதிர்ப்பின் மூலம் அல்லது வருங்கால பொருளாதார அனுகூலங்கள் அதிலிருந்து எதிர்பார்க்கப்படாத நிலையில், கையுதிர்ப்பின் போது அங்கீகார நீக்கம் செய்யப்படுகின்றது. அச்சொத்தின் அங்கீகார நீக்கத்திலிருந்து கிடைக்கும் ஏதேனும் ஆதாயம் அல்லது நட்டம் (தேறிய கையுதிர்ப்பு விற்று வரவுகள் மற்றும் முன்கொண்டு செல்லப்படும் சொத்தின் தொகைக்குமிடையிலான வித்தியாசமாக கணிக்கப்படுகின்றது). அந்த சொத்து அங்கீகார நீக்கம் செய்யப்படும் 'ஏனைய செயற்பாட்டு வருமானம்' வருடத்தின் வருமானக் கூற்றில் உள்ளடக்கப்படுகின்றது.

4.11 முதலீட்டு ஆதனங்கள்

முதலீட்டு ஆதனங்கள் என்பவை வாடகை வருமானத்தை ஈட்டுவதற்கென அல்லது மூலதன பெறுமதி ஏற்றத்திற்கென அல்லது இவை இரண்டுக்குமென வைக்கப்பட்டிருக்கும், ஆனால் சாதாரண வியாபார நடைமுறையின் போது விற்பனைக்கென வைக்கப்பட்டிராத சொத்துக்களாகும். பொருட்கள் அல்லது சேவைகள் என்பவற்றின் உற்பத்தி மற்றும் வழங்கல் என்பவற்றுக்கும் அல்லது நிர்வாக நோக்கங்களுக்கு பயன்படுத்தப்படாத ஆதனங்களாகும்.

அங்கீகரிக்கும் அடிப்படை

ஒரு முதலீட்டு ஆதனம் அந்த முதலீட்டு ஆதனத்துடன் சம்பந்தப்பட்டிருக்கும் எதிர்கால பொருளாதார பயன்கள் குழுமத்திற்கு வந்து சேர வேண்டிய நிகழ்தகவு நிலவி வரும் சந்தர்ப்பத்தில் அந்த முதலீட்டு ஆதனத்தின் கொள்விலையை நம்பகமாக அளவிடக் கூடிய சந்தர்ப்பத்தில், அங்கீகரிக்கப்படுகின்றது.

அளவீடு

ஒரு முதலீட்டு ஆதனம் ஆரம்பத்தில் அதன் கொள்விலையில் அளவிடப்படுகின்றது. கொள்வனவு செய்யப்பட்ட முதலீட்டு ஆதனமொன்றின் கொள்விலை, அதன் கொள்விலையையும் நேரடியாக ஏற்படக் கூடிய ஏதேனும் செலவுகளையும் உள்ளடக்குகின்றது. சுயமாக கட்டமைக்கப்பட்ட முதலீட்டு ஆதனமொன்றின் கொள்விலை கட்டமைக்கப்பட்ட திகதி அல்லது அபிவிருத்தி செய்யப்பட்ட திகதியில் அதன் கொள்விலையாக கருதப்படுகின்றது.

குழுமம் 'முதலீட்டு ஆதனம்' தொடர்பான இலங்கை கணக்கீட்டு தரநியமம் 40 இன் பிரகாரம் முதலீட்டு ஆனணங்கள் தொடர்பாக கொள்விலை மாதிரியை பிரயோகிக்கின்றது. அதன் பிரகாரம், முதலீட்டு ஆதனங்களாக வகைப்படுத்தப்பட்டிருக்கும் காணி ஒன்று திரண்டிருக்கும் மதிப்புக் குறைவு நட்டங்கள் எவையேனும் இருப்பின் அவற்றை கழித்து கொள்விலையில் குறிப்பிடப்படுகின்றன. முதலீட்டு ஆவணங்களாக வகைப்படுத்தப்பட்டிருக்கும் கட்டடங்கள் எவையேனும் திரண்ட பெறுமதித் தேய்வுகள் மற்றும் திரண்ட மதிப்புக் குறைவு நட்டங்கள் இருப்பின் அவற்றை கழித்து கொள்விலையில் குறிப்பிடப்படுகின்றன.

4.12 அருபச் சொத்துக்கள்

அங்கீகரிக்கும் அடிப்படை

வங்கியின் ஏனைய அருபச் சொத்துக்கள் கணினி மென்பொருள் பெறுமதியையும் உள்ளடக்குகின்றன. ஒரு அருபச் சொத்து அதன் கொள்விலையை நம்பகமான விதத்தில் மதிப்பிடப் கூடிய வகையில் இருந்து வரும் சந்தர்ப்பத்திலும், அச்சொத்தின் மீது கிடைக்கக் கூடிய எதிர்கால பொருளாதார பயன்கள் வங்கிக்கு வந்து சேர்ந்து வரும் நிகழ்தகவு நிலவி வரும் சந்தர்ப்பத்திலும் மட்டுமே அங்கிகரிக்கப்படும்.

அளவீடு

புறம்பாக கையகப்படுத்தப்படும் அருபச் சொத்துக்கள் ஆரம்ப அங்கீகாரத்தில் செலவில் அளவிடப்படுகின்றன. ஒரு வணிகக் கூற்றில் கையகப்படுத்தப்படும் அருபச் சொத்துக்களின் கொள்விலை கையகப்படுத்தப்பட்டுள்ள திகதியிலுள்ளவாறு அவற்றை நியாயமான பெறுமதியாகும். ஆரம்ப அங்கீகாரத்தையடுத்து அருபச் சொத்துக்கள் எவையேனும் திரண்ட பெறுமதி தேய்வு மற்றும் திரண்ட மதிப்புக் குறைவு நட்டங்கள் என்பவற்றை கழித்து கொள்விலையில் முன்கொண்டு செல்லப்படுகின்றது.

அருபச் சொத்துக்களின் பயனுள்ள ஆயுள் காலங்கள் ஒன்றில் முடிவை கொண்டவையாக அல்லது முடிவற்றவையாக மதிப்பிடப்படுகின்றன. முடிவு ஆயுள் காலங்களை கொண்ட அருபச் சொத்துக்கள் பயனுள்ள பொருளாதார ஆயுள் காலத்தின் போது பெறுமதி இறக்கம் செய்யப்படுகின்றன. முடிவை கொண்ட பயனுள்ள ஆயுள் காலத்துடன் கூடிய அருபச் சொத்தொன்றுக்கான பெறுமதித் தேய்வு காலம் மற்றும் பெறுமதித் தேய்வு முறை குறைந்தது

ஒவ்வொரு நிதியாண்டின் முடிவின் போதும் மீளாய்வு செய்யப்படுகின்றன. எதிர்ப்பார்க்கப்படும் பயனுள்ள ஆயுள் காலத்தில் ஏற்படும் மாற்றங்கள் அல்லது சொத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும் வருங்கால பொருளாதார பயன்களில் எதிர்ப்பார்க்கப்படும் நுகர்வு மாதிரி பெறுமதித் தேய்வுக் காலத்தை அல்லது முறையை மாற்றும் பொழுது பொருத்தமான விதத்தில் கவனத்தில் எடுக்கப்படுவதுடன், அவை கணக்கீட்டு மதிப்பீடுகளில் ஏற்பட்ட மாற்றங்களாக கருதப்படுகின்றன. முடிவு ஆயுள் காலங்களை கொண்டிருக்கும் அரூபச் சொத்துக்கள் மீதான பெறுமதித் தேய்வு செலவு, அரூபச் சொத்தின் செயற்பாட்டுடன் பொருந்திச் செல்லும் விதத்தில், வருமானக் கூற்றில் செலவு வகையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

அரூபச் சொத்துக்களின் கொள்விலையை அவற்றின் மதிப்பிடப்பட்டிருக்கும் பயனுள்ள ஆயுள் காலத்தின் போது நேர்க்கோட்டு அடிப்படையில் பயன்படுத்தி பெறுமதிக் குறைப்பு மேற்கொள்ளப்படுகின்றது:

அரூபச் சொத்து வகை	பயனுள்ள ஆயுள் காலம்	பெறுமதி குறைக்கப்படும் முறை
தகவு சம்பந்தப்பட்ட உருப்படிகள்	5 வருடங்கள்	நேர்க்கோட்டு அடிப்படை முறை

4.13 நிதிசாராத சொத்துக்களின் பெறுமதிக் குறைவு

அங்கீகரிக்கும் அடிப்படை

வங்கி ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியின் போதும் ஒருசொத்தில் பெறுமதிக் குறைவு ஏற்படும் என்பதனை காட்டும் எவையேனும் குறிகாட்டிகள் இருந்து வருகின்றனவா என்பதனை மதிப்பீடு செய்கின்றது. எவையேனும் குறிகாட்டிகள் இருந்து வந்தால் அல்லது ஒரு சொத்து தொடர்பாக வருடாந்த பெறுமதிக் குறைவு பரீட்சிப்பு அவசியமாக இருந்து வந்தால் வங்கி அச்சொத்தின் அறவீட்டுக் கொள்ளக் கூடிய தொகையை மதிப்பிடுகின்றது. ஒரு சொத்தின் அறவிட்டுக் கொள்ளக் கூடிய தொகை காசு உருவாக்கும் அலகின் நியாயமான பெறுமதியிலும் பார்க்க உயர்வானதாக இருந்து வருவதுடன், விற்பனை செய்வதற்கான செலவுகள் மற்றும் பாவனையிலான அதன் பெறுமதி என்பதனை கொண்டுள்ளது. ஒரு சொத்தின் அல்லது முன்கொண்டு செல்லப்படும் தொகை அதன் அறவிட்டுக் கொள்ளக்கூடிய தொகையையும் மிகைத்திருக்கும் பொழுது அச்சொத்து மதிப்புக் குறைவு ஏற்பட்டிருக்கும் ஒரு சொத்தாக கருதப்படுகின்றது. அது அறவிட்டுக் கொள்ளக் கூடிய தொகைக்கு பதிவழிப்புச் செய்யப்படுகின்றது. பாவனையிலுள்ள மதிப்பை மதிப்பிடும் பொழுது எதிர்ப்பார்க்கப்படும் எதிர்கால காசுப் பாய்ச்சல்கள் அவற்றின் தற்போதைய பெறுமதிக்கு வரிக்கு முன்னரான கழிவு விகிதத்தை பயன்படுத்திக் கழிவு செய்யப்படுகின்றது. அது பணத்தின் கால மதிப்பின் தற்போதைய சந்தை மதிப்பீடுகளை பிரதிபலிப்பதுடன், அச்சொத்துடன் சம்பந்தப்பட்ட திட்டவட்டமான நட்டவச்சங்களையும் பிரதிபலிக்கின்றது. விற்பனை செய்வதற்கான செலவுகளை கழித்து நியாயமான பெறுமதியை நிர்ணயிப்பதற்கு பொருத்தமான ஒரு மதிப்பீட்டு மாதிரி பயன்படுத்தப்படுகின்றது. இந்தக் கணிப்பீட்டிற்கு மதிப்பீட்டு பெருக்குகள், பகிரங்கமாக வியாபாரம் செய்யப்படும் துணை நிறுவனங்களில் விலை குறிக்கப்பட்ட பங்கு விலைகள் அல்லது கிடைக்கக் கூடிய நியாய விலை குறிகாட்டிகள் என்பவற்றின் பக்கபலம் பெற்றுக் கொள்ளப்படுகின்றது.

அளவீடு

நற்பெயரை தவிர்த்த சொத்து தொடர்பாக ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியின் போதும் முன்னர் அங்கீகரிக்கப்பட்ட மதிப்புக் குறைவு நட்டங்கள் இனிமேலும் இருந்து வரவில்லை அல்லது அவை குறைவடைந்திருக்க முடியும் என்பதனை காட்டக் கூடிய எவையேனும் குறிகாட்டிகள் இருந்து வருகின்றனவா என்பதனை எடுத்துக் காட்டுவதற்கு ஒரு மதிப்பீடு மேற்கொள்ளப்படுகின்றது. அத்தகைய குறிகாட்டி நிலவி வந்தால் வங்கி அச்சொத்தின் அல்லது காசு உருவாக்க அலகு அறவிடத்தக்க தொகையை மதிப்பிடுகின்றது. இறுதி மதிப்புக் குறைவு அங்கீகரிக்கப்பட்ட பின்னர் சொத்தின் அறவிடத்தக்க தொகையை நிர்ணயிப்பதற்கென பயன்படுத்தப்பட்ட அனுமானங்களில் ஒரு மாற்றம் ஏற்பட்டிருந்தால் முன்னர் அங்கீகரிக்கப்பட்ட நட்டம் மீண்டும் திருப்பப்படுகின்றது. இந்த திருப்புதல் சொத்தின் முன்கொண்டு செல்லப்படும் தொகை அதன் அறவிடத்தக்க தொகையை மிகைத்துச் செல்லாத விதத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது. அத்துடன், நிர்ணயிக்கப்படக் கூடிய முன்கொண்டு செல்லும் தொகையை மிகைக்காததாகவும் இருந்து வருதல் வேண்டும். பெறுமதிக் குறைவைக் கழித்து இது மேற்கொள்ளப்படுகின்றது. மேலும், முன்னைய வருடங்களின் போது இச்சொத்து தொடர்பாக மதிப்புக் குறைவு அங்கீகரிக்கப்பட்டிருக்கக் கூடாது. அத்தகைய திருப்புதல்கள் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

நற்பெயர் தொடர்பான மதிப்புக் குறைவு நட்டங்கள் எதிர்கால காலப் பிரிவுகள் தொடர்பாக திருப்பப்படுவதில்லை.

நற்பெயர் வருடாந்தம் அல்லது அடிக்கடி மதிப்புக் குறைவு தொடர்பாக மீளாய்வு செய்யப்படுகின்றது. நிகழ்வுகள் அல்லது சந்தர்ப்ப சூழ்நிலைகளில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்கள் முன்கொண்டு செல்லப்படும் மதிப்பின் மீது பெறுமதிக் குறைவினை ஏற்படுத்தியுள்ளனவா எனக் கண்டறிவதற்காக இது மேற்கொள்ளப்படுகின்றது. மதிப்புக் குறைவு பரீட்சிப்பு நோக்கத்திற்கென ஒரு வணிகக் கூட்டில் பெறப்பட்டிருக்கும் நற்பெயர் அந்த கையகப்படுத்தல் திகதியிலிருந்து வங்கி ஒவ்வொரு காசு உருவாக்கும் அலகுகளுக்கும் குழுக்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. அவை இந்தக் கூட்டுக்களிலிருந்து கையகப்படுத்தியவரின் ஏனைய சொத்துக்கள் அல்லது பொறுப்புக்கள் இந்த அலகுகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளனவா என்பதனை பொருட்படுத்தாது, அனுகூலங்களை பெற்றுத் தரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நற்பெயர் பகிரப்பட்டிருக்கும் ஒவ்வொரு அலகும் வங்கியின் மிகத் தாழ்ந்த மட்டங்களை பிரதிநிதித்துவம் செய்கின்றது. உள்ளக முகாமைத்துவ நோக்கங்களுக்கென நற்பெயர் கண்காணிக்கப்படுகின்றது. அது இலங்கை நிதிசார் அறிக்கையிடல் தரநியமங்கள் 8 - 'செயற்பாட்டு பிரிவுகள்' இன் பிரகாரம் ஒரு செயற்பாட்டு பிரிவிலும் பார்க்க பெரியதாக இருந்து வரக் கூடாது.

நற்பெயர் காசை உருவாக்கும் ஒரு அலகின் (அல்லது காசை உருவாக்கும் அலகுகளின் குழுவின்) ஒரு பாகமாக இருந்து வரும் பொழுது, அந்த அலகுக்குள் இடம்பெறும் ஒரு செயற்பாட்டு பாகமாக இருந்து வரும் பொழுதும் அந்தச் செயற்பாட்டுடன் சம்பந்தப்பட்ட நற்பெயர் கையுதிர்க்கப்படுவதுடன், ஒரு செயற்பாட்டின் கையுதிர்ப்பின் மீதான ஆதாயம் அல்லது நட்டத்தை நிர்ணயிக்கும் பொழுது செயற்பாட்டில் முன்கொண்டுச் செல்லப்படும் தொகையில் உள்ளடக்கப்படுகின்றது. இத்தகைய சந்தர்ப்பங்களில் கையுதிர்க்கப்படும் நற்பெயர் கையுதிர்க்கப்பட்ட செயற்பாட்டின் சார்பு ரீதியான பெறுமதிகளை அடிப்படையாகக் கொண்டும், வைத்துக் கொண்டிருக்கும் காசை உருவாக்கும் அலகின் பாகத்தை அடிப்படையாகக் கொண்டும் அளவிடப்படுகின்றது.

துணை நிறுவனங்கள் விற்பனை செய்யப்படும் பொழுது, விற்பனை விலைக்கும் தேறிய சொத்துக்கள் மற்றும் கூட்டுமொத்த மாற்றல் வேறுபாடுகள், நற்பெயர் என்பவற்றுக்குமிடையிலான வித்தியாசம் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

4.14 நிதி உத்தரவாதங்கள்

அங்கீகரிக்கும் அடிப்படை

சாதாரண வர்த்தக நடைமுறையில் வங்கி நிதி உத்தரவாதங்களை வழங்குகின்றது. இந்த உத்தரவாதங்கள் கடன் கடிதங்கள், உத்தரவாதங்கள் மற்றும் ஏற்புக்கள் என்பவற்றை

உள்ளடக்குகின்றன. நிதி உத்தரவாதங்கள் தொடக்கத்தில் நிதிசார் கூற்றுக்கள் ('ஏனைய பொறுப்புக்கள் பிரிவுக்குள்') நியாயமான பெறுமதியில் அங்கீகரிக்கப்படுகின்றன. ஆரம்ப அங்கீகாரத்தையடுத்து ஒவ்வொரு உத்தரவாதத்தின் கீழான வங்கியின் பொறுப்பு ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொகையிலும் பார்க்க உயர்வாக வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் கழிக்கப்பட்ட தொகையில் மொத்தத்தை கழித்து அளவிடப்படுகின்றது. மேலும், இந்த உத்தரவாதத்தின் விளைவாக தோன்றக் கூடிய ஏதேனும் ஒரு நிதிக் கடப்பாட்டினை தீர்த்து வைப்பதற்கு தேவைப்படும் மிகச் சிறந்த செலவு மதிப்பீட்டை கழித்து இது மேற்கொள்ளப்படுகின்றது.

அளவீடு

நிதி உத்தரவாதங்கள் தொடர்பான பொறுப்பில் ஏற்படும் ஏதேனும் ஒரு அதிகரிப்பு வருமானக் கூற்றில் 'கடன் நட்ட செலவு' பிரிவில் பதிவு செய்யப்படுகின்றது. கிடைத்த இலாபம் வருமானக் கூற்றில் 'தேறிய கட்டணங்கள் மற்றும் தரகு வருமானம்' பிரிவில் நேர்கோட்டு அடிப்படையில் உத்தரவாதத்தின் ஆயுள் காலத்தின் போது கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

4.15 ஓய்வூதிய அனுகூலங்கள்

4.15.1 வரையறுக்கப்பட்ட அனுகூல ஓய்வூதியத் திட்டம்

4.15.1.1 1996 க்கு முற்பட்ட ஓய்வூதியத் திட்டம்

01.01.1996 க்கு முன்னர் வங்கிச் சேவையில் இணைந்த நிரந்தர ஊழியர்கள் இந்த வரையறுக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்திலிருந்து பயனடைந்துள்ளார்கள். புறம்பாக நிர்வகிக்கப்பட்டு வரும் ஒரு நிதியத்துக்கு இது தொடர்பான பங்களிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டத்தின் கீழ் அனுகூலங்களை வழங்கும் செலவு, எறியமிடப்பட்ட அனுகூல தரவுக் கணிப்பீட்டு முறையை பயன்படுத்துவதன் மூலம் பெறப்படுகின்றது. தரவுக் கணிப்பு ஆதாயங்கள் மற்றும் நட்டங்கள் சம்பந்தப்பட்ட நிதியாண்டின் வருமானம் அல்லது செலவாக முழுமையாக அங்கீகரிக்கப்படுகின்றன.

வரையறுக்கப்பட்ட அனுகூலச் சொத்து அல்லது பொறுப்பு இன்னமும் அங்கீகரிக்கப்படாத கடந்த கால சேவைச் செலவுகளை கழித்து வரையறுக்கப்பட்ட அனுகூல கடப்பாட்டின் நடப்பு மதிப்பினை உள்ளடக்குகின்றது. மேலும், கடப்பாடுகள் நேரடியாக தீர்க்கப்பட வேண்டிய திட்டச் சொத்துக்களின் நியாயமான பெறுமதிகளை கழித்து, இதுவரையில் அங்கீகரிக்கப்படாத தரவு கணிப்பு நட்டங்களை கழித்து மேற்கொள்ளப்படுகின்றது. எந்த ஒரு சொத்தனதும் மதிப்பு. இன்னமும் அங்கீகரிக்கப்படாத எவையேனும் தரவுக் கணிப்பு நட்டங்கள் மற்றும் கடந்த கால சேவைச் செலவுத் தொகைக்கும், திட்டதிலிருந்து மீளளிப்புக்களின் வடிவில் கிடைக்கும் எவையேனும் பொருளாதார அனுகூலங்கள் அல்லது திட்டத்துக்கான வருங்கால பங்களிப்புக்களுக்காக வரையறுக்கப்படுகின்றது.

மிகப் பிந்திய தரவுக் கணிப்பீடு ஜனவரி 1, 2011 உள்ளவாறு அமெரிக்க தரவுக் கணிப்பாளர்கள் மற்றும் ஆலோசகர் கழகத்தின் உறுப்பினரான பியல் எஸ். குணதிலக (F.S.A) அவர்களினால் மேற்கொள்ளப்பட்டது.

01.01.2011 இல் உள்ளவாறு பெறுமதிக் கணிப்பில் பயன்படுத்தப்பட்ட முதன்மையான நிதிசார் அனுமானங்கள் வருமாறு:

வட்டி/கழிவு விகிதம்	ஆண்டொன்றுக்கு 10%
வாழ்க்கைச் செலவு படிகளில் அதிகரிப்பு	ஆண்டொன்றுக்கு 5%
அனைத்து தரங்களுக்குமன அடிப்படை சம்பள அதிகரிப்பு	ஆண்டொன்றுக்கு 7%

ஓய்வு பெற்றவர்களுக்கு பின்வரும் நிபந்தனைகளின் கீழ் ஓய்வூதியம் வழங்கப்படுகின்றது. பத்து வருட சேவையின் பின்னர் 55வயது ஓய்வூதிய வயதை எட்டியவுடன் ஓர் ஓய்வூதியத்தினை பெற்றுக் கொள்ளும் உரித்தினை அவ்வூழியர்கள் கொண்டுள்ளார்கள். ஓய்வூதியத்தின் அளவு சேவைக் காலத்தின் பல்வேறு மட்டங்களை பொறுத்து அமைகின்றது:

சேவைக் காலம்	ஓய்வூதியத்தின் அளவு
i. 10 - 20 வருடங்கள்	இறுதியாக பெற்ற சம்பளத்தின் 80%
ii. 21 - 29 வருடங்கள்	கடைசியாக பெற்ற சம்பளத்தின் 80% + 20 வருடங்களுக்கு மேற்பட்ட ஒவ்வொரு மேலதிக வருடத்திற்கும்1%
iii. 30 வ. அதற்கு மேல்	கடைசியாக பெற்றுக் கொண்ட சம்பளத்தின் 90%

ஓய்வூதிய நிதியத்தின் கணக்குகள் நாளாந்த வங்கித்தொழில் சேவைகளிலிருந்து புறம்பாக வைக்கப்பட்டிருப்பதுடன், சுயாதீனமான வெளிக் கணக்காய்வாளர்களினால் வருடாந்த கணக்காய்வுக்குட்படுத்தப்படுகின்றன. நம்பிக்கையாளர் சபை கூற்றுக்களையும், கணக்காய்வாளர் அறிக்கைகளையும் மீளாய்வு செய்கின்றது. மேலும், இதற்கான நிதிப்படுத்தல் உச்ச மட்டத்தில் மேற்கொள்ளப்படுவதனை உறுதிப்படுத்தப்பட வேண்டிய கடப்பாட்டினை வங்கி கொண்டிருப்பதனால் இந்த ஆவணங்கள் வங்கியின் வெளிப்படுத்துகை மீளாய்வுக்கெனவும் சமர்ப்பிக்கப்படுகின்றன. பயனாளியின் மரணம் வரையில் ஓய்வூதியங்கள் மாதாந்தம் செலுத்தப்படுதல் வேண்டும்.

4.15.1.2 பணிக்கொடை

01.01.1996 இல் அல்லது அதற்கு பின்னர் வங்கியில் இணைந்து கொண்ட ஊழியர்கள் 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டத்தின் கீழ் பணிக்கொடை ஒன்றினை பெற்றுக் கொள்ளும் உரித்தினைக் கொண்டுள்ளார்கள் அல்லது அவர்கள் உத்தேச புதிய 1996 க்கு பின்பட்ட ஓய்வூதியத் திட்டத்தில் சேர்ந்து கொள்ள விரும்பினால் பணிக்கொடைக்கான அவர்களுடைய உரிமையை கைவிட்டு விட வேண்டும்.

ஓய்வு பெறச் செய்வதன் மூலமாகவன்றி அச் சேவைகள் முடிவுறுத்தப்பட்டிருக்கும் ஏனைய ஊழியர்கள் 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டத்தின் கீழ், பணி முடிவுறுத்தல் பணிக் கொடையைப் பெற்றுக் கொள்வதற்கான தகைமையைக் கொண்டுள்ளார்கள். பணி முடிவுறுத்தப்பட்ட நிதியாண்டின் கடைசி மாதத்தின் போது பெற்ற மொத்தச் சம்பளத்தின் அரைவாசிப் பகுதியை அவர் தொடர்ச்சியாக சேவையிலிருந்த ஒவ்வொரு வருடம் தொடர்பாகவும் பெற்றுக் கொள்வதற்கான உரித்தினை ஐந்து வருடத்திற்கு மேல் பணியாற்றியிருக்கும் ஊழியர்கள் கொண்டுள்ளார்கள்.

அத்தகைய பணிக்கொடை கடப்பாடுகள் தொடர்பாக வங்கி ஒரு மாதாந்த ஒதுக்கை மேற்கொள்ளுவதுடன், அதன் பெறுமதி வங்கியின் ஐந்தொகையில் காட்டப்பட்டுள்ளது. அது டிசம்பர் 31, 2007 வரையில் வங்கி பணிக்கொடை சூத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு ஓர் ஒதுக்கு மேற்கொண்டது. எவ்வாறிருப்பினும், இலங்கை கணக்கீட்டுத் தரநியமங்களின் பிரகாரம் ஒரு தரவுக் கணிப்பு மதிப்பீட்டின் அடிப்படையில் பணிக்கொடைக்கான ஒதுக்கை மேற்கொண்டுள்ளது.

மக்கள் வங்கியின் துணை நிறுவனங்கள் மற்றும் இணை நிறுவனங்கள் 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டத்தின் கீழ் பணிக்கொடைகளை வழங்கி வருகின்றன. அதன் பிரகாரம், எந்தவொரு கம்பெனியிலும் ஒரு வருடத்திற்கு மேல் பணியாற்றியிருக்கும் ஊழியர்கள் தொடர்பாக பணிக்கொடைக்கான ஒதுக்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்தகைய கடப்பாடுகளுக்கு வெளியிலிருந்து நிதிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படுவதில்லை.

4.15.2 வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள்
வங்கி வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டமொன்றையும் நிர்வகித்து வருகின்றது. இத்திட்டத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய பங்களிப்பு ஊழியர்களினால் வங்கிக்கு வழங்கப்பட்ட பணிகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது. இவை 'ஆளணிச் செலவுகள்' என்ற பிரிவின் கீழ் பதிவு செய்யப்படுகின்றன. செலுத்தப்படாத பங்களிப்புக்கள் பொறுப்புக்களாக கருதப்படுவதுடன், அவ்விதம் பதிவு செய்யப்படுகின்றன.

வங்கி பின்வரும் திட்டங்களுக்கு பங்களிப்புச் செய்து வருகின்றது:

4.15.2.1 ஊழியர் சேமலாப நிதியம்
(மேலதிக வேலை நேரக் கொடுப்பனவை தவிர்த்து) ஒவ்வொரு ஊழியரினதும் மாதாந்த சம்பளத்தில் வங்கியினாலும், ஊழியர்களினாலும் முறையே 12% உம், 8% உம் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புச் செய்யப்படுகின்றது. மக்கள் வங்கியின் சேமலாப நிதியம் ஊழியர் சேமலாப சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டிருப்பதுடன், அது உள்ளக ரீதியில் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

4.15.2.2 ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம்
ஒவ்வொரு ஊழியரும், மேலதிக நேரக் கொடுப்பனவை தவிர்த்து, தனது சம்பளத்தில் 3% ஐ இந்நிதியத்திற்கு பங்களிப்புச் செய்வதுடன், இது ஊழியர் நம்பிக்கை நிதியச் சபையினால் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

4.15.3 1996 க்கு பின்னரான ஓய்வூதியத் திட்டம்
நிதியமைச்சினால் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளவாறு வங்கி 01.01.1996 க்குப் பின்னர் வங்கியில் இணைந்திருக்கும் நிரந்தர ஊழியர்களுக்கான ஒரு புதிய ஓய்வூதியத் திட்டத்தை முடிவாக்கியுள்ளது. இந்தப் புதிய ஓய்வூதியத் திட்டத்திற்கான ஆரம்ப தொகையாக வங்கி அதன் பணிக்கொடை நிதியத்திலிருந்து ரூ. 198 மில்லியனை மாற்றல் செய்துள்ளது. மேலும், மேலதிகமாக 854 மில்லியன் ரூபாவும் இந்த நிதியத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. டிசம்பர் 31 2012 இல் உள்ளவாறு இந்த நிதியத்தில் ரூ. 1.052 மில்லியன் இருந்து வந்தது. இத்தொகை ஒரு தரவுக் கணிப்பீட்டு மதிப்பீட்டை பயன்படுத்தி பெறப்பட்டது.

இத் திட்டத்தில் இணைந்து கொள்வதற்கு தகைமை பெற்றிருக்கும் 4,187 ஊழியர்களிடமிருந்து வங்கி சுமார் 3,300 விண்ணப்பங்களை பெற்றுக் கொண்டுள்ளது.

4.15.4 விதவையர்/விதுரர் மற்றும் அனாதையர் ஓய்வூதிய திட்டம் (1996 முன்னர்)
தகுதி வாய்ந்த தரவுக் கணிப்பு நிபுணர் ஒருவரின் ஆலோசனையை அடிப்படையாகக் கொண்டு வங்கி இந்நிதியத்தின் கடப்பாடுகளுக்கென ஒரு புறம்பான நிதியத்தை பராமரித்து வருகின்றது. உயிர் வாழ்ந்து வரும் விதவைகள்/விதுரர் மற்றும் அநாதைகள் ஆகியோர் தொடர்பாக வழங்கப்படும் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் நிதியத்தின் செலவில் எழுதப்படுகின்றன.

4.15.5 ஓய்வு பெற்ற பின்னர் மருத்துவ அனுகூலம்
வங்கி தேவை ஏற்படும் சந்தர்ப்பங்களில், வங்கியினால் ஒப்புதலளிக்பட்டிருக்கும் ஒரு திட்டத்தின் அடிப்படையில் ஓய்வு பெற்றவர்களுக்கான மருத்துவ அனுகூலங்களை வழங்கி வருகின்றது. வருங்காலத்தில் ஏற்படக் கூடிய அசாதாரணமான உயர் அளவிலான மருத்துவச் செலவுகளை நிறைவு செய்யும் விதத்தில் ஒரு புறம்பான மருத்துவ நிதியம் பராமரிக்கப்பட்டு வருகின்றது. தேவை ஏற்படும் சந்தர்ப்பங்களில் இந்நிதியம் முகாமைத்துவத்தின் தற்றுணிபின் பேரில் பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றது.

4.16 ஒதுக்குகள்
ஒரு கடந்த கால நிகழ்வின் விளைவாக வங்கி ஒரு நடப்பு கடப்பாட்டில் (சட்ட ரீதியான அல்லது ஆக்கபூர்வமான கடப்பாட்டினை) கொண்டிருக்கும் பொழுது ஒதுக்குகள் அங்கீகரிக்கப்படுகின்றன. பொருளாதார அனுகூலங்களை உள்ளடக்கியிருக்கும் வளங்களின் நிகழக் கூடிய வெளிப் பாய்ச்சல் இக்கடப்பாட்டினை தீர்த்து வைப்பதற்கு தேவைப்படும். மேலும், கடப்பாட்டின் தொகை குறித்து நம்பகமான மதிப்பீட்டை மேற்கொள்ள முடியும். எந்தவொரு ஒதுக்கு தொடர்பான செலவு வருமானக் கூற்றில் எவையேனும் செலவீட்டுத் தொகையை கழித்து சமர்ப்பிக்கப்படுகின்றது.

4.17 பொறுப்புக்கள் மற்றும் அவசர நிலைகள்
அறியப்பட்ட அனைத்துப் பொறுப்புக்களையும் நிர்ணயிப்பதில் உணர்ந்து கொள்ளக் கூடிய நட்டவச்சங்கள் அனைத்தும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. ஏதேனும் அவசர நிலைகள் மற்றும் வங்கி கூட்டாக அல்லது ஏனைய விதத்தில் பொருந்தக் கூடியதாக இருந்து வரும் ஒரு துணை நிறுவனத்தின் அல்லது இணை நிறுவனத்தின் மூலதனக் கடப்பாடுகள் என்பவற்றிலான வங்கியின் பங்கு பொருத்தமான வெளிப்படுத்துகைகளுடன் உள்ளடக்கப் படுகின்றது.

அவசர நிலை பொறுப்புக்கள் என்பவை, நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகள் அல்லது தற்போதைய கடப்பாடுகள் என்பவற்றின் மூலம் மட்டுமே அவற்றின் இருப்பு உறுதிப்படுத்தப்படும் பொறுப்புக்களாகும். அதாவது, பொருளாதார அனுகூலத்தின் மாற்றல் இடம்பெறக் கூடிய நிகழ்தகவு இல்லாத நிலை, அதனை நம்பகமாக மதிப்பிட முடியாத நிலை என்பன இதில் அடங்குகின்றன. அவசர நிலை பொறுப்புக்கள் நிதி நிலை கூற்றில் அங்கீகரிக்கப்படுவதில்லை. ஆனால், அவை மிக அரிதாக இருக்கும் சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தப்படுகின்றன.

4.18 வரிகள்
4.18.1 நடப்பு வரி அறவீடுகள்
தற்போதைய வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவை நடப்பு வருடம் அதே போல முன்னைய வருடம் தொடர்பாக உள்நாட்டு இறை வரி ஆணையாளர் நாயகத்திடமிருந்து அறவிட்டுக் கொள்வதற்கு எதிர்ப்பார்க்கப்படும் அல்லது அவருக்கு செலுத்துவதற்கு எதிர்ப்பார்க்கப்படும் தொகைகளை உள்ளடக்குகின்றன. ஐந்தொகை திகதியன்று அல்லது அதனையடுத்து உருவாக்கப்பட்ட விகிதங்கள் அல்லது வரிச் சட்டங்கள் என்பவற்றை பயன்படுத்தியே இந்தத் தொகை கணிக்கப்படுகின்றது. அதன் பிரகாரம், 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் மற்றும் அதற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தம் என்பவற்றின் பிரகாரம், நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்பு 14 இல் குறித்துரைக்கப்பட்டிருக்கும் விகிதங்களில் இந்த வரிக்கான ஒதுக்கு வரி அறவிடல் நோக்கங்களுக்கென சீராக்கம் செய்யப்பட்ட இலாபத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது.

4.18.2 தாமதப்படுத்தப்பட்ட வரி
சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றின் வரி அடித்தளங்களுக்கும், நிதிசார் அறிக்கையிடல் நோக்கதிற்கான முன்கொண்டு செல்லப்படும் அவற்றின் தொகைகளுக்குமிடையில் ஐந்தொகைத் திகதியில் நிலவி வரும் தற்காலிக வேறுபாடுகளின் அடிப்படையில் பொறுப்பு முறையை பயன்படுத்தி தாமதப்படுத்தப்பட்ட வரிக்கான ஒதுக்கு மேற்கொள்ளப்படுகின்றது.

4.18.2.1 தாமதப்படுத்தப்பட்ட வரி பொறுப்பு
தாமதப்படுத்தப்பட்ட வரிப் பொறுப்புக்கள் அனைத்து தற்காலிக வேறுபாடுகள் தொடர்பாகவும் அங்கீகரிக்கப் படுகின்றன. பின்வரும் நிலைமைகள் அதற்கான விதிவிலக்குகளாகும்:

- வணிக இயல்பைக் கொண்டிராத ஒரு கொடுக்கல் வாங்கலில் நற்பெயர் அல்லது ஒரு சொத்தின், ஒரு பொறுப்பின் ஆரம்ப அங்கீகாரத்திலிருந்து தாமதப்படுத்தப்பட்ட வரிப் பொறுப்பு தோன்றும் நிலை. கொடுக்கல் வாங்கல் சந்தர்ப்பத்தின் போது அது கணக்கீட்டு இலாபத்தின் மீதோ அல்லது வரி செலுத்த வேண்டிய இலாபத்தின் மீதோ அல்லது நட்டத்தின் மீதோ ஒரு தாக்கத்தை ஏற்படுத்தாதிருக்கும் பொழுது இந்நிலை தோன்றுகிறது.

- துணை நிறுவனங்கள் மற்றும் இணை நிறுவனங்களிலான முதலீடுகளுடன் சம்பந்தப்பட்டுள்ள வரி அறவிடத் தக்க தற்காலிக வேறுபாடுகளை பொறுத்தவரையில், தற்காலிக வேறுபாடுகளை திருப்புதலை மேற்கொள்ளும் நேரம் கட்டுப்படுத்தப்பட முடியும். தற்காலிக வேறுபாடுகள் உடனடி எதிர்காலத்தில் மாற்றமடையாத நிகழ்தகவைக் கொண்டுள்ளன.

4.18.2.2 தாமதப்படுத்தப்பட்ட வரிச் சொத்துக்கள்

தாமதப்படுத்தப்பட்ட வரிச் சொத்துக்கள் பிடித்தம் செய்யக் கூடிய அனைத்து வேறுபாடுகள் தொடர்பாகவும் அங்கீகரிக்கப்படுகின்றன. பிடித்தம் செய்யக்கூடிய தற்காலிக வேறுபாடுகளுக்கு எதிராக வரி செலுத்தத்தக்க இலாபங்கள் கிடைக்கும் அளவுக்கு, பயன்படுத்தப்படாத வரி வரவுகள் மற்றும் பயன்படுத்தப்படாத வரி இழப்புக்களின் முன்கொண்டு செல்லப்படும் தொகைகளும், பயன்படுத்தப்படாத வரி வரவுகள் மற்றும் பயன்படுத்தப்படாத வரி நட்டங்கள் என்பவற்றின் முன்கொண்டு செல்லப்படும் தொகைகளை பயன்படுத்திக் கொள்ள முடியும். பின்வரும் சந்தர்ப்பங்கள் இதற்கான விதிவிலக்காகும்.

- வணிக இயல்பைக் கொண்டிராத ஒரு கொடுக்கல் வாங்கலில் ஒரு சொத்தின் அல்லது பொறுப்பின் ஆரம்ப அங்கீகாரத்திலிருந்து தோன்றும் பிடித்தம் செய்யத்தக்க தற்காலிக வேறுபாடுகளுடன் தாமதப்படுத்தப்பட்ட வரிச் சொத்துக்கள் சம்பந்தப்பட்டிருக்கும் நிலை. அது கொடுக்கல் வாங்கல் சந்தர்ப்பத்தின் போது கணக்கீட்டு இலாபத்தையோ அல்லது வரி செலுத்தத்தக்க இலாபங்களையோ அல்லது நட்டங்களையோ பாதிப்பதில்லை.
- துணை மற்றும் இணை நிறுவனங்களிலான முதலீடுகளுடன் சம்பந்தப்பட்ட பிடித்தம் செய்யத்தக்க வேறுபாடுகள் தொடர்பாக தற்காலிக வேறுபாடுகள் உடனடி எதிர்காலத்தில் திருப்பப்படக்கூடிய நிகழ்தகவு இருந்து வரும் அளவுக்கு மட்டும் தாமதப்படுத்தப்பட்ட வரிச் சொத்துக்கள் அங்கீகரிக்கப்படுகின்றன. தற்காலிக வேறுபாடுகளுக்கு எதிராக பயன்படுத்தக் கூடிய விதத்தில் வரி செலுத்தத்தக்க இலாபம் கிடைக்கும் பொழுது இந்நிலைமை ஏற்படுகின்றது.

ஒரு தாமதப்படுத்தப்பட்ட வரிச் சொத்தின் முன்கொண்டு செல்லப்படும் தொகை ஒவ்வொரு ஐந்தொகைத் திகதியின் போதும் மீளாய்வு செய்யப்படுவதுடன், தாமதப்படுத்தப்பட்ட வரிச் சொத்துக்கள் அனைத்தையும் அல்லது அவற்றின் ஒரு பாகத்தை பயன்படுத்திக் கொள்ளக் கூடிய விதத்தில் போதியளவிலான வரி செலுத்தத்தக்க இலாபம் கிடைக்கும் நிலை இனியும் சாத்தியமில்லை என காணப்படும் நிலையில் அது குறைக்கப்படும். அங்கீகரிக்கப்படாத தாமதப்படுத்தப்பட்ட வரிச் சொத்துக்கள் ஒவ்வொரு ஐந்தொகைத் திகதியில் மீள் மதிப்பீடு செய்யப்படுகின்றன. எதிர்கால வரி செலுத்தத்தக்க இலாபம் தாமதப்படுத்தப்பட்ட வரிச் சொத்துக்களை அறவிட்டுக் கொள்வதற்கு இடமளிக்கும் சாத்தியப்பாடு தோன்றும் வரையில் அவை அங்கீகரிக்கப்படுகின்றன.

தாமதப்படுத்தப்பட்ட வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன சொத்துக்கள் பெறப்படும் அல்லது பொறுப்புக்கள் தீர்க்கப்படும் வருடத்தில் பிரயோகிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் விகிதங்களில் கணிக்கப்படுகின்றன. அவை ஐந்தொகைத் திகதியில் அல்லது ஐந்தொகைத் திகதிக்கு பின்னர் உருவாக்கப்பட்ட வரி விகிதங்கள் மற்றும் வரிச் சட்டங்கள் என்பவற்றின் அடிப்படையில் கணிக்கப்படுகின்றன.

4.18.3 நிதிச் சேவைகள் மீதான பெறுமதிசேர் வரி (வற் வரி)

2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச் சட்டத்தின் பிரிவு 25 அ மற்றும் அந்த சட்டத்திற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் என்பவற்றுக்கு இணங்க, வங்கியின் மொத்த சேர்க்கப்பட்ட பெறுமதி 12% பெறுமதிசேர் வரிக்கு உட்படுத்தப்படுகின்றது.

4.18.4 பொருளாதார சேவைக் கட்டணம் (பொசேகா)

2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டணங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய பொசேக குறித்துரைக்கப்பட்ட விகிதங்கில் வரி செலுத்த வேண்டிய வியாபாரத் தொகையின் மீது செலுத்தப்பட வேண்டியுள்ளது. செலுத்தப்பட்ட பொசேக வருமான வரிக் கடப்பாட்டிலிருந்து கழித்துக் கொள்ள முடியும். ஏதேனும் கோரப்படாத பொறுப்புக்கள் இருப்பின், அதனை முன்கொண்டு சென்று அடுத்து வரும் நான்கு வருடங்களின் போது செலுத்த வேண்டியிருக்கும் வருமான வரிக்கு ஈடு செய்து கொள்ள முடியும்.

4.18.5 பங்கிலாபங்கள் மீதான பிடித்து வைத்திருக்கும் வரி

உள்நாட்டு துணை நிறுவனங்களின் வரி செலுத்த வேண்டிய இலாபத்திலிருந்து பகிர்ந்தளிக்கப்பட்ட பங்கிலாபம் அம்மூலத்தில் 10% பிடித்தத்தை உள்ளடக்குவதுடன், அது வங்கியின் வரிப் பொறுப்பினை செலுத்தி தீர்ப்பதற்கு கிடைப்பதில்லை. எனவே, மூலத்திலிருந்து பிடித்து வைத்திருக்கும் வரி திரண்ட நிதிசார் கூற்றுக்களில் ஒன்று திரட்டும் ஒரு சீராக்கம் என்ற முறையில் துணை நிறுவனங்களின் வரிச் செலவுகளுக்கு சேர்க்கப்படுகின்றது.

4.19 வருமானம் மற்றும் செலவுகள் என்பவற்றின் அங்கீகாரம்

பொருளாதார பயன்கள் வங்கிக்குக் கிடைக்கும் அளவிலும் வருமானத்தை நம்பகமான விதத்தில் மதிப்பிடக் கூடிய அளவிலும் வருவாய் அங்கீகரிக்கப்படுகின்றது. வருவாய் அங்கீகாரம் மேற்கொள்ளப்படுவதற்கு முன்னர் பின்வரும் திட்டவட்டமான அங்கீகார அளவுகோல்கள் நிறைவு செய்யப்படுதல் வேண்டும்.

4.19.1 வட்டி மற்றும் அதையொத்த வருமானம் மற்றும் செலவு

கழிக்கப்பட்ட செலவில் அறவிடப்படும் அனைத்து நிதிசார் கருவிகள், விற்பனைக்கு வைக்கப்பட்டிருப்பவை என வகைப்படுத்தப்பட்டிருக்கும் வட்டி உழைக்கும் சொத்துக்கள் மற்றும் இலாபம் அல்லது நட்டத்திற்கூடாக நியாயமான பெறுமதியில் குறித்துரைக்கப்பட்டிருக்கும் நிதிசார் கருவிகள், வட்டி வருமானம் அல்லது செலவு என்பன தாக்கமான வட்டி விகிதத்தை பயன்படுத்தி பதிவு செய்யப்படுகின்றன. தாக்கமான வட்டி விகிதம் என்பது மதிப்பிடப்பட்ட எதிர்கால காசு கொடுப்பனவு அல்லது பெறுவனவுகளை நிதிக் கருவியின் எதிர்பார்க்கப்படும் ஆயுளுக்கூடாக அல்லது பொருத்தமான விடத்து ஒரு குறுகிய காலப் பிரிவில் சரியாக கழிவு செய்யும் விகிதமாகும். அதாவது, நிதிசார் சொத்தின் அல்லது நிதிசார் பொறுப்பின் தேறிய முன்கொண்டு செல்லப்படும் தொகையை இது கழிவு செய்கின்றது. இந்தக் கணிப்பு நிதிக் கருவியின் அனைத்து ஒப்பந்த விதிமுறைகள் (உதாரணமாக கொடுப்பனவு தெரிவுகள்) என்பவற்றை கவனத்தில் எடுப்பதுடன், இந்தக் கருவியுடன் நேரடியாக சம்பந்தப்பட்டிருக்கும் ஏதேனும் கட்டணங்கள் அல்லது அதிகரித்த செலவுகள் என்பவற்றையும் உள்ளடக்குகின்றது. இவை தாக்கமான வட்டி விகிதத்தின் ஒரு உள்ளார்ந்த பாகமாக இருந்து வருகின்றன. ஆனால், எதிர்கால நட்ட விகிதங்களின் ஒரு பாகமாக இருந்து வரவில்லை.

ஒரு நிதிச் சொத்தின் அல்லது அத்தகைய நிதிச் சொத்துக்கள் குழுவொன்றின் பதிவு செய்யப்பட்ட பெறுமதி மதிப்புக் குறைவு காரணமாக குறைவடைந்த பின்னர் வட்டி வருமானம் தொடர்ந்தும் அங்கீகரிக்கப்படும். மதிப்புக் குறைவு நட்டத்தை அளவிடும் நோக்கத்திற்காக எதிர்கால காசுப் பாய்ச்சல்களுக்கு கழிவினை வழங்குவதற்கு பயன்படுத்தப்பட்ட வட்டி விகிதத்தை பயன்படுத்தி அது மேற்கொள்ளப்படுகின்றது.

4.19.2 கட்டண மற்றும் தரகு வருமானம்

வங்கி அதன் வாடிக்கையாளர்களுக்கு வழங்கி வரும் பரந்த பன்முக வீச்சைக் கொண்ட சேவைகளிலிருந்து கட்டண மற்றும் தரகு வருமானத்தை ஈட்டிக் கொள்கின்றது.

கட்டண மற்றும் தரகு வருமானம் அந்தச் சேவை நிறைவேற்றப்படும் பொழுது அங்கீகரிக்கப்படுகின்றது. குறிப்பிட்ட ஒரு காலப் பிரிவின் போது சேவைகளை வழங்குவதன் மூலம் ஈட்டப்பட்ட கட்டணங்கள் அக்காலப் பிரிவு முழுவதிலும் திரண்டு வருகின்றன.

4.19.3 பங்கிலாப வருமானம்

கொடுப்பனவை பெற்றுக் கொள்வதற்கான வங்கியின் உரிமை ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் பங்கிலாப வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது.

4.19.4 தேறிய வியாபார வருமானம்

நியாயமான பெறுமதியில் ஏற்படும் மாற்றங்களிலிருந்த தோன்றும் அனைத்து ஆதாயங்கள் மற்றும் நட்டங்கள் என்பவற்றையும் உள்ளடக்கிய விதத்தில் வியாபார நடவடிக்கைகளிலிருந்து தோன்றும் பெறுபேறுகள் மற்றும் சம்பந்தப்பட்ட வட்டி வருமானம் அல்லது செலவு மற்றும் நிதிச் சொத்துக்கள் மற்றும் வியாபாரத்திற்கென வைக்கப்பட்ட நிதிப் பொறுப்புக்கள் என்பவற்றின் பங்கிலாபங்கள் என்பன இதில் அடங்குகின்றன.

4.20 சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் விற்பனையிலிருந்து இலாபம்/நட்டம்

சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் விற்பனையிலிருந்து வரும் இலாபம்/நட்டம் விற்பனை இடம்பெறும் காலப் பிரிவின் போது அங்கீகரிக்கப்படுவதுடன், ஏனைய வருமானமாக வகைப்படுத்தப்படுகின்றது.

4.21 பிரிவு ரீதியான அறிக்கையிடல்

வங்கியின் பிரிவு ரீதியான அறிக்கையிடல் பின்வரும் பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது: வங்கித்தொழில், குத்தகை மற்றும் பிரயாணங்கள் மற்றும் ஏனையவை. இது தொடர்பான தகவல்கள் குறிப்பு 47 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

4.22 காசுப் பாய்ச்சல் கூற்று

காசுப் பாய்ச்சல் கூற்றுக்கள் தொடர்பான இலங்கை கணக்கீட்டு தரநியமங்களின் பிரகாரம், காசுப் பாய்ச்சல்களை தயாரிக்கும் 'ஷமறைமுக முறையை' பயன்படுத்தி காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது. காசு மற்றும் காசுக்கு இணையானவை குறுங்கால, காசுத் தொகைகளாக உடனடியாக மாற்றிக் கொள்ளக் கூடிய உயர் அளவிலான திரவத் தன்மையைக் கொண்ட முதலீடுகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன. அவை பெறுமதியில் இடம்பெறும் மாற்றங்கள் தொடர்பாக மிகவும் அற்பமான நட்டவச்சத்திற்கு உள்ளாக்கப்படுகின்றன. காசு மற்றும் காசுக்கு இணையானவை கையிலுள்ள காசு, வங்கியிலுள்ள நிலுவைகள் மற்றும் அழைப்பிலும் குறுகிய அறிவித்தலிலும் கிடைக்கும் காசு என்பவற்றை உள்ளடக்குகின்றது.

4.23 வைப்பு காப்புறுதி திட்டம்

2010 ஆம் ஆண்டின் வங்கித்தொழில் சட்டத்தின் பணிப்புரை 5 இன் பிரகாரம் 2010 செப்டம்பர் மாதம் 27 ஆந் திகதி வெளியிடப்பட்ட 'வைப்புப் பொறுப்புக்கள் காப்புறுதி' பணிப்புரையின் பிரகாரம் உரிமம் பெற்றிருக்கும் அனைத்து வர்த்தக வங்கிகளும் தமது வைப்புப் பொறுப்புக்களை நாணயச் சபையினால் செயற்படுத்தப்பட்டு வரும் இக்காப்புறுதித் திட்டத்தில் காப்புறுதி செய்து கொள்வது அவசியமாகும். இது 2010 ஆம் ஆண்டின் இல. 1 இலங்கை வைப்புக் காப்புறுதி திட்ட ஒழுங்குவிதிகளின் கீழ் வெளியிடப்பட்டி ருக்கும் நாணயச் சட்டத்தின் பிரிவு 32 A தொடக்கம் 32 E வரையிலான பிரிவுகளின் பிரகாரம் 2010 அக்டோபர் 1 ஆம் திகதி முதல் அமுலுக்கு வருகின்றது. இதன் கீழ் காப்புறுதி செய்யப்பட வேண்டிய வைப்புக்கள் கேள்வி வைப்புக்கள், தவணை வைப்புக்கள் மற்றும் சேமிப்பு வைப்புக்கள், சேமிப்பு வைப்புப் பொறுப்புக்கள் என்பனவாகும். அது பின்வருவனவற்றை உள்ளடக்கவில்லை:

- உறுப்பு நிறுவனங்களுக்கான வைப்புப் பொறுப்புக்கள்
- இலங்கை அரசாங்கத்திற்கான வைப்புப் பொறுப்புக்கள்

2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரையினால் வரையறை செய்யப்பட்டுள்ளவாறு உரிமம் பெற்றிருக்கும் வர்த்தக வங்கிகளின் நிறுவன ஆளுகை தொடர்பாக பணிப்பாளர்கள், முதன்மை முகாமைத்துவ ஆளணியினர் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட தரப்பினர் ஆகியோருக்கான வைப்புப் பொறுப்புக்கள் வருமாறு:

- வழங்கப்பட்ட ஏதேனும் கடனுக்கு எதிராக பிணையாக வைக்கப்பட்டிருக்கும் வைப்புப் பொறுப்புக்கள்

வங்கிச் சட்டத்தின் பிரகாரம் கைவிடப்பட்ட ஆதனம் என்ற பிரிவின் கீழ் வரும் வைப்புப் பொறுப்புக்கள் மற்றும் நிதி கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் இலங்கை மத்திய வங்கிக்கு மாற்றல் செய்யப்பட்டிருக்கும் செயற்படாத வைப்புக்களின் நிதிகள் என்பனவாகும்.

நேர் முன்னைய நிதியாண்டின் முடிவில் 14% அல்லது அதற்கு மேற்பட்ட மூலதன நிறைவு விகிதத்தை வங்கி பராமரித்து வந்தால், உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் தகைமை பெறும் வைப்புப் பொறுப்புக்கள் மீது 0.10% கட்டணமொன்றை செலுத்துவது அவசியமாகும். (ஏனைய உரிமம் பெற்றிருக்கும் அனைத்து வர்த்தக வங்கிகளும் 14% க்கு குறைந்த மூலதன நிறைவு விகிதத்தை கொண்டிருக்கும்) வங்கிகளும் தகைமை பெறும் வைப்புப் பொறுப்புக்களில் 0.125% I கட்டணமாக செலுத்துதல் வேண்டும். அது காலாண்டின் இறுதியில் தகுதி பெறும் மொத்த தொகையின் அடிப்படையில் கணிக்கப்படுவதுடன், காலாண்டு முடிவிலிருந்து 15 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

4.24 முதலீட்டு நிதிய கணக்கு

2011 ஆம் ஆண்டின் வரவுசெலவு யோசனைகளில் முன்மொழியப்பட்டவாறு வங்கித்தொழில் அல்லது நிதிச் சேவை வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் ஒரு நபர் அல்லது பங்காளர் நிறுவனம் ஒரு முதலீட்டு நிதியக் கணக்கை ஸ்தாபித்து, இயக்குதல் வேண்டும்.

01.01.2011 இற்குப் பின்னர் வரிகள் செலுத்தப்படும் சந்தர்ப்பங்களில் உரிமம் பெற்றிருக்கும் வர்த்தக வங்கிகள் பின்வரும் நிதியங்களை முதலீட்டு நிதியக் கணக்குக்கு மாற்றி, வங்கியில் ஒரு நிரந்தர நிதியத்தை கட்டியெழுப்புவது அவசியமாகும்.

வற் வரிச் செலுத்துவதற்கென சட்டத்தில் குறித்துரைக்கப் பட்டிருக்கும் திகதிகளில் நிதிச் சேவைகள் மீது பெறுமதி சேர் வரியை செலுத்துவதற்கென இலாபங்களில் 8% கணிக்கப்படுகின்றது.

வரிக்கு முன்னரான இலாபத்தில் 5% வருமான வரி நோக்கங்களுக்கென கணிக்கப்படுகின்றது. சுயமதிப்பீட்டு வரி செலுத்துதலுக்கென உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் 113 ஆவது பிரிவில் குறித்துரைக்கப்பட்ட திகதிகளில் இது மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

இக்கணக்கிலிருக்கும் பணத் தொகைகளை (5 வருடங்களுக்கு மேற்பட்ட) நீண்ட கால கருத்திட்டங்கள் மற்றும் (குறித்துரைக்கப்பட்ட) சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி கடன்கள் என்பவற்றுக்கு சலுகை வட்டி விகிதங்களில் நிதிப்படுத்தலை வழங்குவதற்கு பயன்படுத்துதல் வேண்டும்.

4.25 ஒப்பீட்டு ரீதியான தகவல்

ஒரு சிறந்த சமர்ப்பணத்தை முன்வைக்கும் பொருட்டு, நடப்பு வருடத்தின் சமர்ப்பணத்தை உறுதிப்படுத்த வேண்டிய தேவை நிலவி வரும் சந்தர்ப்பத்தில் ஒப்பீட்டு ரீதியான தகவல் மீள வகைப்படுத்தப்படுகின்றது.

5. புதிய கணக்கீட்டு தரநியமங்களுக்கு நிலைமாற்றம் பெறுவதற்கான விளக்கம்

குறிப்பு 2.1. இல் குறிப்பிடப்பட்டவாறு வங்கியின் நிதிசார் கூற்றுக்கள் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிப்பட்டிருக்கும் புதிய இலங்கை கணக்கீட்டு தரநியமங்களின் பிரகாரம் (இலங்கை நிதிசார் அறிக்கையிடல் தரநியமங்கள் மற்றும் இலங்கை கணக்கீட்டு தரநியமங்கள் என்பவற்றின் பிரகாரம்) தயாரிக்கப்படுகின்றன. குறிப்பு 4 இல் எடுத்து விளக்கப்பட்டிருக்கும் கணக்கீட்டுக் கொள்கைகள் 2012 டிசம்பர் 31 இல் முடிவடைந்த இந்த வருடத்திற்கான நிதிசார் கூற்றுக்கள், 2011 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான ஒப்பீட்டு ரீதியான தகவல்கள் என்பவற்றை தயாரிப்பதிலும், 2011 ஜனவரி 01 இல் உள்ளவாறு, நிதிநிலைக் கூற்றக்கான ஓர் ஆரம்ப கூற்றினை தயாரிப்பதிலும் பிரயோகிக்கப்பட்டுள்ளன. நிதிசார் அறிக்கையிடல் தொடர்பான இலங்கை தரநியமங்கள் மற்றும் இலங்கை கணக்கீட்டு தரநியமங்கள் என்பவற்றை பின்பற்றியதன் விளைவாக (முன்னைய இலங்கை கணக்கீட்டு தரநியமங்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட) முன்னைய வருடங்களில் அறிக்கையிடப்பட்ட நிதிசார் கூற்றுக்களில் திருத்தங்கள்/சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டன. கீழே தரப்பட்டுள்ள குறிப்புக்கள், அட்டவணைகள் என்பன இந்த நிலைமாற்றம் அல்லது முதல் தடவையாக பின்பற்றல் காரணமாக ஏற்படும் தாக்கம் குறித்த ஒரு விளக்கத்தை தருகின்றன.

01.01.2011 உள்ளவாறு பங்குகளின் மீளிணக்கம்

ரூ. '000

		வங்கி			குழுமம்		
ஜனவரி 01, 2011 இல் உள்ளவாறு	குறிப்பு	முன்னைய இலங்கை கணக்கீட்டு தரநியமங்கள்	இகத மீதான நிலை மாற்ற தாக்கம்	புதிய இகத	முன்னைய இலங்கை கணக்கீட்டு தரநியமங்கள்	இகத மீதான நிலை மாற்ற தாக்கம	புதிய இகத
சொத்துக்கள்							
காசு மற்றும் காசுக்கு இணையானவை	a	46,356,928	(29,088,418)	17,268,510	48,848,408	(29,330,257)	19,518,151
மத்திய வங்கியுடனான நிலுவை		26,739,341	–	26,739,341	26,739,341	–	26,739,341
வங்கிகளில் வைக்கப்பட்டிருப்பவை		–	–	–	–	–	–
வியாபாரத்திற்கென வைக்கப்பட்டிருக்கும் ஏனைய நிதிசார் சொத்துக்கள்		20,975,857	–	20,975,857	21,033,924	–	21,033,924
கடன்கள் மற்றும் கிடைக்க வேண்டிய தொகைகள் - வங்கி	b	–	53,268,853	53,268,853	–	53,268,853	53,268,853
கடன்கள் மற்றும் ஏனைய வாடிக்கையாளர் களுக்கு கிடைக்க வேண்டியவை	c	357,336,421	1,257,219	358,593,640	398,600,386	8,449,405	407,049,791
நிதிசார் முதலீடுகள் - விற்பனைக்கு வைக்கப்பட்டிருப்பவை	d	444,506	116,924	561,430	544,516	55,824	600,340
நிதிசார் முதலீடுகள் - முதிர்ச்சிக்காக வைக்கப்பட்டிருப்பவை	e	48,978,998	1,231,128	50,210,126	48,978,998	1,974,275	50,953,273
துணை நிறுவனங்களில் முதலீடுகள்		1,519,950	–	1,519,950	–	–	–
இணை நிறுவனங்களில் முதலீடுகள்		155,500	–	155,500	248,830	–	248,830
இலங்கை அரசாங்க மீளமைப்பு முறிகள்	f	7,323,000	(7,323,000)	–	7,323,000	(7,323,000)	–
அமெரிக்க டொலர் அபிவிருத்தி முறிகள்	g	17,256,725	(17,256,725)	–	17,256,725	(17,256,725)	–
நற்பெயர் மற்றும் அரூபச் சொத்துக்கள்		196,636	–	196,636	559,203	–	559,203
சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்		7,861,555	(995,403)	6,866,152	9,223,575	(996,610)	8,226,965
முதலீட்டுச் சொத்துக்களில்		–	414,403	414,403	–	414,403	414,403
முன் செலுத்தப்பட்ட குத்தகைகள்		326,517	–	326,517	326,517	–	326,517
தாமதப்படுத்தப்பட்ட வரி சொத்துக்கள்		62,455	–	62,455	73,381	2,654	76,035
ஏனைய சொத்துக்கள்	h	12,081,440	(2,133,767)	9,947,673	16,059,671	(1,610,679)	14,448,992
மொத்தச் சொத்துக்கள்		547,615,829	(508,785)	547,107,045	595,816,475	7,648,142	603,464,618

ரூ. '000

		வங்கி			குழுமம்		
ஜனவரி 01, 2011 இல் உள்ளவாறு	குறிப்பு	முன்னைய இலங்கை கணக்கீட்டு தரநியமங்கள்	இகத மீதான நிலை மாற்ற தாக்கம்	புதிய இகத	முன்னைய இலங்கை கணக்கீட்டு தரநியமங்கள்	இகத மீதான நிலை மாற்ற தாக்கம	புதிய இகத
பொறுப்புக்கள்							
வங்கிக்கு செலுத்த வேண்டியவை	i	2,454,883	3,700,354	6,155,237	2,454,883	34,268,386	36,723,268
ஏனைய வாடிக்கையாளர்களுக்கு செலுத்த வேண்டியவை	j	462,140,255	8,829,474	470,969,729	463,727,842	17,365,822	481,093,664
ஏனைய கடன்படல்கள்	k	36,677,163	(3,684,869)	32,992,294	67,459,886	(34,467,592)	32,992,294
தற்போதைய வரிப் பொறுப்புக்கள்		1,527,448	–	1,527,448	2,133,133	111,170	2,244,303
தாமதப்படுத்தப்பட்ட வரிப் பொறுப்புக்கள்		–	–	–	36,564	515,427	551,991
ஏனைய பொறுப்புக்கள்	l	18,977,772	(7,924,758)	11,053,014	27,233,541	(8,512,066)	18,721,475
உப தவணைக் கடன்கள்		5,000,000	–	5,000,000	6,170,530	(1,170,530)	5,000,000
மொத்த பொறுப்புக்கள்		526,777,521	920,201	527,697,722	569,216,379	8,110,617	577,326,995
பங்கு							
குறிக்கப்பட்ட/ஒதுக்கப்பட்ட மூலதனம்		7,201,998	–	7,201,998	7,201,998	–	7,201,998
நியதிபூர்வ ஒதுக்கு நிதியம்		49,998	–	49,998	49,998	–	49,998
பிடித்து வைக்கப்பட்ட சம்பாத்தியங்கள்	m	5,756,881	(1,428,985)	4,327,895	11,435,444	(462,474)	10,972,971
ஏனைய ஒதுக்குகள்		7,829,431	–	7,829,431	7,829,431	–	7,829,431
மொத்த பங்குதாரர்களின் பங்கு		20,838,308	(1,428,985)	19,409,322	26,516,871	(462,474)	26,054,398
கட்டுப்படுத்தாத அக்கறைகள்		–	–	–	83,225	–	83,225
மொத்தப் பங்கு மூலதனம்		20,838,308	(1,428,985)	19,409,322	26,600,096	(462,474)	26,137,623
மொத்தப் பங்கு மற்றும் பொறுப்புக்கள்		547,615,829	(508,785)	547,107,045	595,816,475	7,648,142	603,464,618
அவசர கால பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள்		131,397,539	–	131,397,539	131,397,539	–	131,397,539

31.12.2011 இல் உள்ளவாறு பங்குகளின் மீளிணக்கம்

ரூ. '000

31. டிசம்பர் 2011 இல் உள்ளவாறு	குறிப்பு	வங்கி			குழுமம்		
		முன்னைய இலங்கை கணக்கீட்டு தரநியமங்கள்	இகத மீதான நிலை மாற்ற தாக்கம்	புதிய இகத	முன்னைய இலங்கை கணக்கீட்டு தரநியமங்கள்	இகத மீதான நிலை மாற்ற தாக்கம்	புதிய இகத
சொத்துக்கள்							
காசு மற்றும் காசுக்கு இணையானவை	a	25,431,645	(8,638,980)	16,792,665	30,383,489	(11,517,064)	18,866,425
மத்திய வங்கியுடனான நிலுவை		35,717,033	–	35,717,033	35,717,033	–	35,717,033
வங்கிகளில் வைக்கப்பட்டிருப்பவை		9,592,720	7,300,607	16,893,327	9,592,720	7,300,607	16,893,327
வியாபாரத்திற்கென வைக்கப்பட்டிருக்கும் ஏனைய நிதிசார் சொத்துக்கள்		23,891,041	–	23,891,041	24,313,670	(329,463)	23,984,207
கடன்கள் மற்றும் கிடைக்க வேண்டிய தொகைகள் - வங்கி	b	–	31,731,952	31,731,952	–	31,731,952	31,731,952
கடன்கள் மற்றும் ஏனைய வாடிக்கையாளர் களுக்கு கிடைக்க வேண்டியவை	c	464,812,240	(3,156,481)	461,655,759	540,307,612	(5,432,393)	534,875,219
நிதிசார் முதலீடுகள் - விற்பனைக்கு வைக்கப்பட்டிருப்பவை	d	412,546	9,051,665	9,464,211	562,556	8,934,978	9,497,534
நிதிசார் முதலீடுகள் - முதிர்ச்சிக்காக வைக்கப்பட்டிருப்பவை	e	45,461,567	841,489	46,303,056	45,461,567	2,336,869	47,798,436
துணை நிறுவனங்களில் முதலீடுகள்		1,419,950	–	1,419,950	–	–	–
இணை நிறுவனங்களில் முதலீடுகள்		273,100	–	273,100	377,196	50,000	427,196
இலங்கை அரசாங்க மீளமைப்பு முறிகள்	f	7,323,000	(7,323,000)	–	7,323,000	(7,323,000)	–
அமெரிக்க டொலர் அபிவிருத்தி முறிகள்	g	24,368,558	(24,368,558)	–	24,368,558	(24,368,558)	–
நற்பெயர் மற்றும் அரூபச் சொத்துக்கள்		100,807	–	100,807	450,412	10,395	460,807
சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்		8,103,702	(581,000)	7,522,702	10,329,118	(396,277)	9,932,841
முதலீட்டுச் சொத்துக்கள்		406,165	–	406,165	406,165	–	406,165
முன் செலுத்தப்பட்ட குத்தகைகள்		325,224	–	325,224	325,224	–	325,224
தாமதப்படுத்தப்பட்ட வரிச் சொத்துக்கள்		186,884	–	186,884	248,787	(53,053)	195,734
ஏனைய சொத்துக்கள்	h	15,250,971	(5,858,183)	9,392,788	18,411,268	(5,133,918)	13,277,350
மொத்தச் சொத்துக்கள்		663,077,154	(1,000,491)	662,076,663	748,578,376	(4,188,925)	744,389,451
பொறுப்புக்கள்							
வங்கிக்கு செலுத்த வேண்டியவை	i	72,799	43,278,842	43,351,641	72,799	81,060,845	81,133,645
ஏனைய வாடிக்கையாளர்களுக்கு செலுத்த வேண்டியவை	j	539,861,539	10,364,909	550,226,448	548,033,399	24,688,255	572,721,654
ஏனயை கடன்படல்கள்	k	62,747,794	(42,046,854)	20,700,940	112,484,623	(92,590,497)	19,894,126
நடப்பு வரிப் பொறுப்புக்கள்		2,806,539	–	2,806,539	3,427,708	(120,490)	3,307,218
தாமதப்படுத்தப்பட்ட வரிப் பொறுப்புக்கள்		–	–	–	410,382	(72,845)	337,537
ஏனைய பொறுப்புக்கள்	l	21,093,137	(9,190,675)	11,902,462	29,391,165	(11,129,667)	18,261,498
உப தவணைக் கடன்கள்		10,000,000	–	10,000,000	12,072,830	(2,072,830)	10,000,000
மொத்தப் பொறுப்புக்கள்		636,581,808	2,406,222	638,988,030	705,892,906	(237,227)	705,655,679
பங்கு							
குறிக்கப்பட்ட/ஒதுக்கப்பட்ட மூலதனம்		7,201,998	–	7,201,998	7,201,998	–	7,201,998
நியதிபூர்வ ஒதுக்கு நிதியம்		1,892,591	–	1,892,591	1,892,591	–	1,892,591
பிடித்து வைக்கப்பட்ட சம்பாத்தியங்கள்	m	6,226,025	(3,406,712)	2,819,313	17,525,519	(3,816,867)	13,708,652
ஏனைய ஒதுக்குகள்		11,174,731	–	11,174,731	11,507,929	–	11,507,929
மொத்த பங்குதாரர்களின் பங்கு		26,495,346	(3,406,712)	23,088,633	38,128,037	(3,816,867)	34,311,170
கட்டுப்படுத்தாத அக்கறைகள்		–	–	–	4,557,433	(134,830)	4,422,603
மொத்தப் பங்கு மூலதனம்		26,495,346	(3,406,712)	23,088,633	42,685,470	(3,951,697)	38,733,773
மொத்தப் பங்கு மற்றும் பொறுப்புக்கள்		663,077,154	(1,000,491)	662,076,663	748,578,376	(4,188,925)	744,389,451
அவசர கால பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள்		190,732,157	–	190,732,157	191,045,197	–	191,045,197

2011 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்தின் மீளிணக்கத்திற்கான வருமானக் கூற்று

ரூ. '000

டிசம்பர் 31 , 2011 இல் முடிவடைந்த வருடத்துக்குரியது	குறிப்பு	வங்கி			குழுமம்		
		முன்னைய இலங்கை கணக்கீட்டு தரநியமங்கள்	இகத மீதான நிலை மாற்ற தாக்கம்	புதிய இகத	முன்னைய இலங்கை கணக்கீட்டு தரநியமங்கள்	இகத மீதான நிலை மாற்ற தாக்கம்	புதிய இகத
வருமானம்	c,n	61,822,469	(34,031)	61,788,438	74,115,009	(467,978)	73,647,031
வட்டி வருமானம்	j	(31,703,406)	233,186	(31,470,220)	(37,454,263)	114,376	(37,339,887)
வட்டிச் செலவுகள்		30,119,063	199,155	30,318,218	36,660,746	(353,602)	36,307,144
தேறிய வட்டி வருமானம்		3,822,017	(892,205)	2,929,812	3,846,053	(657,688)	3,188,365
அந்நியச் செலாவணி ஆதாயம்		(30,194)	(366,718)	(396,912)	(30,194)	(366,718)	(396,912)
கட்டணங்கள் மற்றும் தரகு வருமானம்		3,791,823	(1,258,923)	2,532,900	3,815,859	(1,024,406)	2,791,453
வியாபாரத்தில் இருந்து கிடைத்த தேறிய ஆதாயம்	o	714,765	207,564	922,329	714,765	181,976	896,741
நிதி முதலீடுகளிலிருந்து கிடைத்த தேறிய ஆதாயம்/(நட்டம்)	p	(59,824)	59,824	–	(59,824)	59,824	–
ஏனைய செயற்பாட்டு வருமானம் (தேறிய)		2,037,184	620,491	2,657,675	1,832,379	364,310	2,196,689
மொத்த செயற்பாட்டு வருமானம்		36,603,011	(171,889)	36,431,122	42,963,925	(771,898)	42,192,027
கடன்கள் மற்றும் ஏனைய நட்டங்களுக்கான பெறுமதிக் குறைவு		(970,919)	560,476	(410,443)	965,624	(1,679,315)	(713,691)
தேறிய செயற்பாட்டு வருமானம்		35,632,092	388,587	36,020,679	43,929,549	(2,451,213)	41,478,336
ஆளணிச் செலவுகள்	c,q	(10,110,026)	(437,557)	(10,547,583)	(10,962,776)	(455,344)	(11,418,120)
ஏனைய செவுகள்		(7,777,348)	338,306	(7,439,042)	(9,169,288)	652,779	(8,516,509)
பெறுமதிசேர் வரிக்கு முன்னரான செயற்பாட்டு இலாபம் (வற்)		17,744,718	289,336	18,034,054	23,797,486	(2,253,778)	21,543,707
நிதி சேவைகள் மீதான பெறுமதி சேர் வரி (வற்)		(2,434,052)	–	(2,434,052)	(2,828,053)	93,605	(2,734,448)
பெறுமதிசேர் வரிக்கு பின்னரான செயற்பாட்டு இலாபம் (வற்)		15,310,666	289,335	15,600,001	20,969,432	(2,160,173)	18,809,259
இணை நிறுவனங்களுக்கான இலாபத்திலான பங்கு		–	–	–	33,663	–	33,663
	கரவனல்ல	936
	கலபிட்டமட	488
	ஹொரகஸ்மன்கட	518
	அள்கம	935
	கித்துல்கலை	519

வலயம்.'.பிராந்தியம்	இணைக்கப்பட்ட சேவை நிலையங்கள்	சேவை நிலைய குறியீடு
குருணாகல்	போயவலான	851
	வீரபொக்குன	577
	அம்பன்பொல	433
	தம்பதெனிய	474
	பம்மன்ன	985
	பண்டாரகொஸ்வத்த	848
	கும்புக்கெட்டே	473
	பொரலுவெவ	544
	ஹிரிப்பிட்டிய	850
	மல்லவபிட்டிய	736
	பிதுருவெல	503
	குரு/மலியதேவ	737
	தும்மலசூரிய	504
	பிஹல்பொல	545
	கந்தனேகெதர	566
	உடுபத்தாவ	868
	குருணாகல் அரச வைத்தியசாலை வளாகம்	816
	குருணாகல் மாநகர சபை வளாகம்	947
	பொல்பித்திகம	414
	நாகொல்லாகம	573
	பண்ணல	475
	பரகஹதெனிய	432
	கட்டுபொத்த	405
	நிக்கவரட்டிய	574
	கிரியுல்ல	886
	ரஸ்நாயக்கபுர	743
	கொடவெல	502
	மதவ	735
	பாணகமுவ	543
	தொடன்கஸ்லந்த	849
	மாஸ்பொத்த	878
மாத்தளை	இனாமலுவ (சீகிரிய)	499
	மடாட்டுகம	852
	தேவஹ"வ	509
	மாத்தளை - திருகாணமலை வீதி	406
	மாத்தளை - கொங்காவெல	559
	புரோசிலின் தொழிற்சாலை வளாகம்	802
	மடவல உல்பொத்த	853
	யட்டவத்த	558
	கய்காவல	887
	வரக்காமுர	585
	லக்கலை-பல்லேகம	466

வலயம்.'.பிராந்தியம்	இணைக்கப்பட்ட சேவை நிலையங்கள்	சேவை நிலைய குறியீடு
மாத்தறை	தெலிஜ்வில	463
	பல்லேகம	918
	கொட்டேகொட	487
	கெக்கனதுர	921
	தெய்யந்தர	459
	கிரிந்த - புஹ"ல்வெல	930
	மாகந்துர	440
	வல்கம	578
	கொட்டுவேகொட	408
	யட்டியன	443
	ருஹ"ணு பல்கலைக்கழக அலகு	825
	மாத்தறை வைத்தியசாலை வளாகம்	945
	பிட்டபெத்தர	417
	ஓபாத்த	942
	மாவரல்ல	579
	மிரிஸ்ஸ	468
மொனராகலை	ஒக்கம்பிட்டிய	857
	மொனராகலை	569
	தம்பகல்ல	867
	சியம்பலாண்டுவ	977
	ஹம்பேகமுவ	596
	எதிலிவெவ	976
நுவரெலியா	வட்டவல	540
	கொட்டகல	427
	டிக்கோயா	541
	சாமிமலை	552
	வலப்பனை	581
	கந்தபொல	516
	நானு ஓயா	582
	தவளந்தென்ன	876
	ஹப்புகஸ்தலாவ	913
	ராகலை	495
	அக்கரபத்தன	496
	தலவாக்கலை	517
	அதிகாரிகம	739
	பதியபெலெல்ல	470
	ஹேவாஹெட்ட	471

வலயம்.'.பிராந்தியம்	இணைக்கப்பட்ட சேவை நிலையங்கள்	சேவை நிலைய குறியீடு
இரத்தினபுரி	வெலிகேபொல	480
	பம்பஹின்ன	562
	எஹலியகொடை	430
	பதலன்கல	453
	கொலன்ன	537
	செவனகல சீனிக் கூட்டுத்தாபன வளாகம்	813
	வெலி ஓயா	771
	அயகம	477
	கரவிட்ட	478
	ஓப்பநாயக்க	479
	இரத்தினபுரி புதிய நகரம்	810
	வேவல்வத்த	940
பொலன்னறுவை	தியபெதும	563
	சிரிபுர	965
	சந்துன்புர	733
	தியசென்புர	939
	கதுருவெல	835
	லங்காபுர	580
	ஜயந்திபுர	734
	செவனபிட்டிய	933
திருகோணமலை	முள்ளிபொத்தானை	842
	கச்சக்கொடித்தீவு	959
	தோப்பூர்	958
	ஈச்சிலம்பற்று	594
	பாலைஊத்து	841
	உப்புவெளி (நிலாவெளி)	881
	குச்சவெளி	593
	மத்திய வீதி சே.அ.நி	501
வன்னி	கிளிநொச்சி நகரம்	732
	மல்லாவி சேவை நிலையம்	978
	கனகராயன்குளம்	731
	ஒட்டுசுட்டான்	599
	பளை	979
	நானாட்டான்	967
	சிலாவத்துறை	742
	பேசாலை	955
	வவுனியா நகரம்	983
	நெடுங்கேணி	595

உலகளாவிய பங்காளர்கள்



1. ஐரோப்பா
2. வட அமெரிக்கா
3. தென் அமெரிக்கா
4. ஆபிரிக்கா
5. ஆசியா
6. ஓசியானியா
7. மத்திய கிழக்கு

ஐரோப்பா

Banca Nationale del Lavoro SpA, (BNL) Rome
Bank of Ceylon, London
Bank of Cyprus Public Company Ltd., Nicosia
Barclays Bank PLC, London
BHF Bank Aktiengesellsschaft, Frankfurt am Main
BNP Paribas SA, Paris
Budapest Bank RT, Budapest
Commerzbank AG, Frankfurt am Main
Credit Suisse, Zurich
Czekoslovenka Obchodna Banca AS, Bratislava
Danske Bank A/S, Copenhagen
Deutsche Bank AG, Frankfurt am Main
Gorengska Banka DD, Ljubljana
HSBC Bank PLC, London
ING Bank NV, Amsterdam
ING Belgium SA/NV, Brussels
Intesa Sanpaolo SpA, Milano
Komercni Bank NA, Prague
MKB Bank ZET, Budapest
National Westminster Bank PLC, London
Natixis, Paris
Nordea Bank AB (Publ), Stockholm
Nordea Bank Norge ASA, Oslo
Raifaizen Bank, Vienna
SEB Bank, Tallinn
SEB Bank, Vilnius
Skandinaviska Enskilda Banken AB (Publ), Stockholm
Societe Generale, Paris
Sparkasse Kolnbonn, Cologne
Svenska Handelsbanken AB (Publ), Stockholm
The Royal Bank of Scotland NV, Amsterdam
The Royal Bank of Scotland, Athens
UBAE SPA, Italy

UBS AG, Zurich
Ukrexim Bank, Kiev
Unicredit Bank Austria AG, Vienna
Unicredit Bank, Sofia
UniCredito Italiano SpA, Milan
Portigon AG, Dusseldorf
Zagrebacka Banka DD, Zagreb

வட அமெரிக்கா

Bank of Montreal, Montreal
Bank of Nova Scotia, Canada
Canadian Imperial Bank of Commerce, Toronto
Citibank NA, New York
Deutsche Bank Trust Company Americas, New York
HSBC Bank USA NA, New York
JP Morgan Chase Bank NA, New York
MashreqBank PSC, New York
Standard Chartered Bank, New York
The Royal Bank of Scotland NV, New York
Wells Fargo Bank NA, USA

தென் அமெரிக்கா

Banco de Chile, Santiago
Banco Santander Brazil SA, Sao Paulo
BBVA Banco Continental, Lima
Deutsche Bank, Sao Paulo

ஆபிரிக்கா

ABSA Bank Ltd., Johannesburg
Bank Misr, Cairo
Barclays Bank of Kenya Ltd., Nairobi
Citi Bank - Ivory Coast
Mauritius Commercial Bank Ltd. - Port Louis
National Bank of Egypt, Cairo
Nedbank Ltd., Johannesburg

ஆசியா

Axis Bank Ltd., Mumbai
Bank for Foreign Trade - Hanoi
Bank of Ceylon, Chennai
Bank of China, China
Bank of Communications Co. Ltd.
Bank of Maldives, Male
Bank of Tokyo Mitsubishi UFJ Ltd., Tokyo
China Construction Bank, Beijing
China Development Bank
CIMB Bank Ltd., Kuala Lumpur
DBS Bank Ltd., Singapore
Exim Bank of Korea
Export Import Bank of China, Beijing
HSBC Bank, Hong Kong
ICICI Bank Ltd., Mumbai
Korea Exchange Bank, Seoul
MashreqBank PSC, Mumbai
MCB Bank Ltd., Karachi
Mizuho Corporate Bank Ltd., Tokyo
Myanmar Foreign Trade Bank, Yangon
Nepal Bank Ltd., Katmandu
Oversea-Chinese Banking Corp. Ltd., Hong Kong
Oversea-Chinese Banking Corp. Ltd., Kuala Lumpur
Oversea-Chinese Banking Corp. Ltd., Singapore
Pubali Bank Ltd., Dhaka
Rupali Bank Ltd., Dhaka
Standard Chartered Bank, Afghanistan
Standard Chartered Bank (Pakistan) Ltd., Karachi
Standard Chartered Bank, Bangladesh
Standard Chartered Bank, Nepal
Standard Chartered Bank, Tokyo
State Bank of India, Chennai
Sumitomo Mitsui Banking Corporation, Tokyo
UBAF, Singapore
Woori Bank, Hanoi

ஓசியானியா

ANZ National Bank Ltd., Wellington
Australia & New Zealand Banking Group Ltd., Melbourne
National Australia Bank Ltd., Melbourne
Westpac Bank PNG Ltd., Port Moresby
Westpac Banking Corporation, Suwa

மத்திய கிழக்கு

Ahli United Bank, Kuwait
Al Rajhi Banking & Investment Corporation, Riyadh
Bank Dhofar, Ruwi
Bank of Bahrain and Kuwait, Manama
BankMuscat SAOG, Ruwi
Byblos Bank SAL, Beirut
Commercial Bank of Dubai PSC, Dubai
Jordan Islamic Bank, Amman
MashreqBank PSC, Dubai
National Bank of Abu Dhabi, Abu Dhabi
National Bank of Oman SAOG, Muscat
UBAE S.P.A., Dubai

ஒரே பார்வையில் தசாப்தங்கள்

1961
மக்கள் வங்கி 1961 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 01 ஆந் திகதி ஸ்தாபிக்கப்பட்டது. முதலாவது கிளை கொழும்பில் டியூக் வீதியில் திறந்து வைக்கப்பட்டது. அவ்வாண்டில் மொத்தம் எட்டு கிளைகள் திறந்து வைக்கப்பட்டன. கொழும்பில் திறந்து வைக்கப்பட்ட வெளிநாட்டு கிளைக்கு மேலதிகமாக பொலன்னறுவை, இங்குரக்கொட, அம்பாந்தோட்டை, அநுராதபுரம், புத்தளம், மாத்தளை மற்றும் கண்டி ஆகிய இடங்களில் இக்கிளைகள் திறந்து வைக்கப்பட்டன. மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 169 ஆகும்.

1962
வங்கியின் தலைமை அலுவலகம் கொழும்பு 02, யூனியன் பிளேஸில் அமைந்துள்ள இரத்தினம் கட்டிடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. அவ்வாண்டின் போது மேலும் 17 கிளைகள் திறந்து வைக்கப்பட்டன.

1963
வங்கி அடகு எடுத்தல் தொழிலை ஆரம்பித்தது.

1964
கூட்டுறவு கிராமிய வங்கி முறை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

1965
வங்கியின் ஒரு சில திணைக்களங்கள் கொழும்பு 02, சேர் சித்தம்பலம் ஏ. கார்டினர் மாவத்தையில் அமைந்துள்ள GCSU கட்டிடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டன. மொத்த கிளைகளின் எண்ணிக்கை 48 ஆக அதிகரித்தது. ஹொரண, கெக்கிராவ, பதவிய, மன்னார், எம்பிலிபிட்டிய, கஹட்டகஸ்திகிலிய, ராகலை மற்றும் தலவாக்கலை ஆகிய இடங்களில் புதிய கிளைகள் திறந்து வைக்கப்பட்டன.

1967
வங்கி ஒரு புதிய விவசாய கடன் திட்டத்தை ஆரம்பித்து வைத்ததுடன், சிறு விவசாயத் துறைக்கு கடன் வழங்கும் முன்னோடி வங்கி என்ற நிலையை அடைந்தது.

1970
முறைசாரா துறையின் பொருளாதார நடவடிக்கைகளுக்கு நிதிப்படுத்தலை வழங்கும் பொருட்டு *கைமாற்று* கடன் திட்டம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. ஒழுங்கான அடிப்படையில் சேமிப்புக்களை மேற்கொள்பவர்களை கவர்ந்திழுக்கும் பொருட்டு கடனளிப்புடன் இணைக்கபட்ட ஒரு சேமிப்புத் திட்டமான முதலீட்டு சேமிப்பு கணக்குத் திட்டம் துவக்கி வைக்கப்பட்டது.

1971
வங்கியின் 100 ஆவது கிளை மறந்தகஹமுலையில் திறந்து வைக்கப்பட்டது.

1973
உற்பத்தி மற்றும் நுகர்வுக் கடன் வசதிகளை வழங்கும் பொருட்டு அனைத்துமடங்கிய கிராமிய கொடுகடன் திட்டம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. வங்கி சிங்கள, தமிழ் புத்தாண்டு தினத்தன்று சம்பிரதாயபூர்வமான கொடுக்கல்வாங்கல்களை செய்யும் கனுதெனு நடைமுறையை துவக்கி வைத்தது. இதன் மூலம் புத்தாண்டில் சுப வேளையில் வங்கிக்கு வந்து கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளக் கூடிய வாய்ப்பு வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்டது.

1975
கிளை விரிவாக்கல் நிகழ்ச்சித் திட்டம் மிகவும் தீவிரமான விதத்தில் முன்னெடுத்துச் செல்லப்பட்டதனையடுத்து எமது மொத்தக் கிளைகளின் எண்ணிக்கை 158 ஆக அதிகரித்தது.

1977
எமது இநநூறாவது கிளை கொள்ளுபிட்டியில் திறந்து வைக்கப்பட்டது. தலைமை அலுவலகம் கோட்டையில் இருந்த கட்டடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. வங்கியின் மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 5000 ஐ எட்டியது. முதலாவது கடற்றொழில் வங்கி கொரலவல்லையில் திறந்து வைக்கப்பட்டது.

1981
கிளைகளின் மொத்த எண்ணிக்கை 290 ஆக அதிகரித்தது. நீடிக்கப்பட்ட சிறுவர் சேமிப்பு கணக்குத் திட்டம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது

1982
வங்கியின் முன்னூறாவது கிளை இங்கிரியாவில் திறந்து வைக்கப்பட்டது. மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 10,000 மட்டத்தை எட்டியது.

1984
வங்கியின் துணை நிறுவனமொன்றான மக்கள் வணிக வங்கி ஸ்தாபிக்கப்பட்டது. கொம்பனித்தெருவில் அமைந்திருந்த எமது கிளை சர்வதேச பிரிவுடனும், கோட்டை வெளிநாட்டுக் கிளையுடனும் இணைக்கப்பட்டது.

1986
எமது மத்திய தலைமை அலுவலகத்திலும், தெரிவு செய்யப்பட்ட சில நகரக் கிளைகளிலும் கணினிமயமாக்கல் செயன்முறை ஆரம்பித்து வைக்கப்பட்டது. மேலும், பிளக் லைட் முறையும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. அவற்றின் விளைவாக, வாடிக்கையாளர்கள் அலுவல்களை முடித்துக் கொள்வதற்காக வங்கியில் தரித்திருக்கும் நேரம், கணிசமான அளவில் குறைவடைந்தது.

1987
எமது தலைமை அலுவலகக் கிளை வங்கியின் முதலாவது முழுமையான தன்னியக்க செயற்பாட்டை கொண்ட கிளையாக மாற்றியமைக்கப்பட்டது. இலங்கை மின்சார சபையுடன் இணைந்து கிராமிய மின்சார இணைப்புக்களுக்கான ஒரு விசேட கடன் திட்டம் அமுல் செய்து வைக்கப்பட்டது.

1989
ஊழியர் சேமலாப நிதியத்தின் நிலுவைகளை பிணையாக கொண்டு வீடமைப்புக் கடன்களை வழங்கும் ஒரு கடன் திட்டம் தொழில் அமைச்சின் அனுசரணையுடன் செயற்படுத்தப்பட்டதுடன், வங்கி அத்திட்டத்தில் பங்கேற்றது. வெளிநாட்டில் வேலை வாய்ப்புக்களை பெற விரும்புபவர்களுக்கு கடன்களை வழங்குவதற்கென இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துடன் இணைந்து ஒரு கடன் திட்டம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. 1983 ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்நாட்டு கலவரங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கடன்களை வழங்குவதற்கென ரெப்பியாவினால் துவக்கி வைக்கப்பட்ட கடன் திட்டமொன்றில் வங்கி பங்கேற்றது. இவ்வருடத்தின் போது சனசக்தி திட்டத்துடன் இணைந்த ஒரு கடன் திட்டமும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. மேலும், வங்கி இவ்வாண்டின் போது கைமாறத்தக்க சேமிப்புச் சான்றிதழ்களின் வெளியீட்டையும் ஆரம்பித்து வைத்தது.

1990
ஒரு வெகுமதி சேமிப்பு வைப்புத் திட்டம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. விஸா இன்டர்னல் நிறுவனத்துடன் இணைந்து பீப்பள்ஸ் வீஸா அட்டை அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. இவ்வாண்டின் போது 24 கிளைகள் முழுமையாக கணினிமயமாக்கப்பட்டன.

1991
முதலாவது தானியங்கி காசாளும் (ATM) இயந்திரம் எமது தலைமை அலுவலக கிளையில் நிறுவப்பட்டது.

1992
அரசாங்கத்தின் 200 ஆடைத் தொழிற்சாலைகள் நிகழ்ச்சித்திட்டத்துக்கு வங்கி ஆதரவளித்தது. வங்கிக்குள்ளேயே அபிவிருத்தி செய்யப்பட்ட ஒரு வங்கித் தொழில் நடைமுறையான பீப்பள்ஸ் தன்னியக்க வங்கித் தொழில் முறைமை (PABS) அதன் செயற்பாட்டை ஆரம்பித்தது.

1993
நாடெங்கிலும் 330 வங்கிக் கிளைகள் செயற்பட்டு வந்ததுடன், அவற்றில் 35 பிரதான கிளைகள் முழுமையாக தன்னியக்கப்படுத்தப்பட்டிருந்தன. பெண்களுக்கான *வனிதா வாசனா* சேமிப்புத் திட்டம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

1994
எட்டு புதிய தானியங்கி காசாளும் (ATM) இயந்திரங்கள் நிறுவப்பட்டன. தன்னியக்கமயமாக்கல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 160 கிளைகள் கணினிமயமாக்கப்பட்டன.

1995
அரசாங்க ஆசிரியர்களுக்கு சேவைகளை வழங்கும் புதிய வைப்புத் திரட்டல் மற்றும் கடன் திட்டமான குருசெத திட்டம் கல்வியமைச்சின் ஒத்துழைப்புடன் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

1996
அரச சுகாதாரத் துறை பணியாளர்களுக்கான கடன் திட்டமான *சுவசெவன* திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. பாடசாலை பிள்ளைகளுக்கான புதிய வைப்புத் திட்டமான சிசு உதான சேமிப்புத் திட்டம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்ட சிறு தேயிலைத் தோட்டங்கள் அபிவிருத்தி கருத்திட்டம் மற்றும் நிலையான பயிர்கள் அபிவிருத்தி கருத்திட்டம் ஆகிய கொடுகடன் திட்டங்களில் வங்கி பங்கேற்றது. வங்கிக்கு முழுமையாகச் சொந்தமான துணை நிறுவனங்களான வரையறுக்கப்பட்ட பீப்பள்ஸ் லீசிங் கம்பெனி மற்றும் பீப்பள்ஸ் டிரவல் கம்பெனி ஆகியன தமது செயற்பாடுகளை ஆரம்பித்து வைத்தன. பன்முகப்படுத்தப்பட்ட நிர்வாகத்தை மேலும் பலப்படுத்தும் பொருட்டும், மிகச் சிறந்த வாடிக்கையாளர் சேவையை பெற்றுக் கொடுக்கும் பொருட்டும் வலய அலுவலகங்கள் திறந்து வைக்கப்பட்டன.

1997
சுய தொழில் திட்டங்களுக்கு உதவி வழங்கும் பொருட்டு சுரதுர கடன் திட்டம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. வங்கி தேசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு உதவும் கருத்திட்டத்தின் கீழ் சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சிகளுக்கும் மற்றும் கைத்தொழில்களுக்கும் அதன் கடன் வசதிகளை விரிவாக்கியது.

1998
தானியங்கி காசாளும் இயந்திரங்களின் மொத்த எண்ணிக்கை 36 ஆக அதிகரித்ததுடன், அவற்றுக்கு ஊடாக PET அட்டைகளை வைத்திருந்த சுமார் 125,000 க்கு மேற்பட்ட வாடிக்கையாளர்களுக்கு சேவைகள் வழங்கப்பட்டன. 175 கிளைகள் முழுமையாக தன்னியக்கப்படுத்தப்பட்டதுடன், அடகு நிலையங்களின் எண்ணிக்கை 188 ஆக அதிகரித்தது. குடியகல்வு தொழிலாளர்களுக்கு உதவும் பொருட்டு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துடன் இணைந்து விதேசிகர என அழைக்கப்படும் ஒரு விசேட கடன் மற்றும் வைப்புத் திட்டம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

1999
பெற்றோர் மற்றும் பாதுகாவலர் ஆகியோர் தமது பொறுப்பில் இருக்கும் சிறு குழந்தைகளின் நலனை முன்னிட்டு சேமிப்புக்களை மேற்கொள்வதற்கு அவர்களை தூண்டும் இசுரு உதான வைப்புத் திட்டத்தை வங்கி ஆரம்பித்து வைத்தது.

2000
ஜனஜய சேமிப்பு மற்றும் கடன் திட்டம் துவக்கி வைக்கப்பட்டது. புதிதாக அறிமுகம் செய்து வைக்கப்பட்ட *ஜயசிரி* சீட்டிழுப்பு முறை வைப்புதாரர்களுக்கு கவர்ச்சிகரமான பரிசில்களை வழங்கியது. வங்கியின் தானியங்கி காசாளும் இயந்திரங்களின் வலையமைப்பு நாடெங்கிலும் 74 இயந்திரங்களை கொண்ட விரிவான ஒரு வலையமைப்பாக வளர்ச்சியடைந்தது. PABS கிளைகளையும், ATM இயந்திரங்களையும் இணைப்பதற்கென மத்திய ATM ஸ்விட்ச் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

2001

தனியார் வங்கித் தொழில் துறையிலிருந்து ஒரு சில பிரிவுத் தலைவர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதுடன் இணைந்த விதத்தில் வங்கியின் கூட்டு முகாமைத்துவ அணி பலப்படுத்தப்பட்டது. உபாய ரீதியான திட்டம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டதற்கு ஊடாக வங்கியின் மீளமைப்புச் செயற்பாடு துவக்கி வைக்கப்பட்டது. தானியங்கி காசாளும் இயந்திரங்களின் மொத்த எண்ணிக்கை 90 ஆக அதிகரித்தது.

2002

PABS தன்னியக்க கிளைகளின் எண்ணிக்கை 218 ஆக அதிகரித்ததுடன், 119 கிளைகள் மத்திய ATM ஸ்விட்சுடன் இணைக்கப்பட்டன. திறைசேரி பிரிவு தன்னியக்கமயமாக்கப்பட்டது.

2003

வங்கியின் 11 ஆவது பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளராக திரு. அசோக டி. சில்வா 2003 பெப்ரவரி மாதம் 1 ஆம் திகதி பதவியேற்றார். YES (இளம் அதிகாரிகள் சேமிப்பாளர்கள்) சேமிப்புத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதி நவீன கணினி தொகுதியொன்றையும், வர்த்தக சேவைகள் வசதிகளையும் வங்கிக்குள் நிறுவும் பொருட்டு, வங்கி, மலேசியாவைச் சேர்ந்த சில்வர்லேக் சிஸ்டம் SDV BUD நிறுவனத்துடன் ஓர் ஒப்பந்தத்தில் கைசாத்திட்டது. இந்தப் புதிய கணினி முறை ஆரம்பத்தில் தலைமை அலுவலகத்தை உள்ளிட்ட தெரிவு செய்யப்பட்ட 60 கிளைகளில் நடைமுறைப்படுத்தப்படும்.

2004

ஆசிய அபிவிருத்தி வங்கியின் மீள் மூலதனமாக்கல் ஒத்துழைப்பின் அடிப்படையில் வங்கியின் 2004 - 2008 காலப் பிரிவுக்கான மீளமைப்புத் திட்டத்தின் 2 ஆவது கட்டம் இலங்கை அரசாங்கத்தின் ஒப்புதலுடன், துவக்கி வைக்கப்பட்டது. வங்கி முதல் தடவையாக பிட்ச் ரேட்டிங்ஸ் லங்கா என்ற தரக் குறியீட்டு நிறுவனத்திடமிருந்து BBB + தரக் குறியீட்டினை பெற்றுக் கொண்டது. வங்கிக் கிளைகளை கணினிமயமாக்கும் நிகழ்ச்சித்திட்டம் வெற்றிகரமாக அமுல் செய்யப்பட்டது.

2005

2005 டிசம்பர் மாத தொடக்கத்தில் வங்கியின் 15 ஆவது தலைவராக கலாநிதி பி.ஏ. கிரிவந்தெனிய பதவியேற்றார். இதனை உடனடுத்து, வங்கி இலங்கை அரசாங்கத்திடமிருந்து மூலதன முதலீட்டு பங்குத் தொகையின் முதலாவது தவணைக் கட்டணமான ரூ. 2 பில்லியனை பெற்றுக் கொண்டது. அரசாங்கம், ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் வங்கி என்பவற்றுக்கிடையில் கைசாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் இந்த மூலதனத் தொகை வழங்கப்பட்டது. கணினிமயமாக்கல் திட்டம் முழு கிளை வலையமைப்புக்கும் விரிவாக்கப்பட்டது. 2004 டிசம்பர் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வீடுகள், தொழில்கள் மற்றும் மக்களுடைய வாழ்வாதாரங்கள் என்பற்றை மீளக் கட்டியெழுப்புவதற்கென அரசாங்கம் நிதியுதவிகளை வழங்கியது. இந்நிதியுதவிகளை பகிர்தளிப்பதில் வங்கியும் ஒரு முக்கிய இடைநடுவராக செயற்பட்டது.

2006

வங்கி வரையறுக்கப்பட்ட பிட்ச் ரேட்டிங்ஸ் நிறுவனத்திடமிருந்து A- தரக் குறியீட்டை பெற்றுக் கொண்டது. இது அதன் முன்னைய தரக் குறியீட்டு மட்டத்திலிருந்து ஒரு முன்னேற்றத்தைக் காட்டியது.

இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனம் மக்கள் வங்கிக்கு 2006 ஆம் ஆண்டுக்கான வங்கித் தொழில் மற்றும் நிதிச் சேவைகள் துறைக்கான POP விருதினை வழங்கியது. மூலதனத்தின் இரண்டாவது தவணைக் கட்டணமான ரூ. 1 பில்லியன் இலங்கை அரசாங்கத்திடமிருந்து கிடைத்தது.

2007

வங்கியின் 16 ஆவது தலைவராக திரு. டப்ளியு. கருணாஜீவ 2007 மே மாதத்தில் பதவியேற்றார். பிட்ச் ரேட்டிங்ஸ் நிறுவனத்தினால் வழங்கப்பட்டிருந்த A - மட்டத்திலான தரக் குறியீடு இவ்வருடத்தின் போதும் பராமரிக்கப்பட்டு வந்தது. இலங்கை அரசாங்கம் மக்கள் வங்கிக்கு மூன்றாவது மூலதன தவணைக் கட்டணமான 1.5 பில்லியன் ரூபாவை வழங்கியது. மக்கள் வங்கி தொடர்ந்தும் இரண்டாவது வருடமாக வங்கித் தொழில் மற்றும் நிதிச் சேவைகள் வணிகச் சின்னத்திற்கான மக்கள் விருதினை இவ்வாண்டிலும் வென்றது. 2007 ஆம் வருடத்தின் போது வங்கியின் மொத்த வைப்புக்கள் ரூ. 300 பில்லியன் புள்ளியை தாண்டியிருந்தன.

2008

திரு. எம். விக்ரமசிங்க வங்கியின் 12 ஆவது பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளராக பதவியேற்றார்.

இலங்கை அரசாங்கம் 4 ஆவது மூலதன தவணைக் கட்டணமான ரூ. 1.5 பில்லியனை வழங்கியது. வங்கி வருட முடிவின் போது 10.5% மூலதன நிறைவு மட்டத்தை எட்டியிருந்தது. மேலும், இவ்வருடத்தின் போது வங்கியின் முதலாவது ரூ. 2.5 பில்லியன் பெறுமதியான கடன் பத்திர வெளியீடு இடம்பெற்றது.

வெளிநாடுகளில் வேலை செய்பவர்கள் ஒரு சில நிமிடங்களில் இலங்கைக்கு பணத்தை அனுப்பி வைப்பதற்கு வசதி செய்து கொடுக்கும் பொருட்டு புதிய தொழில்நுட்பத்தின் உதவியுடன் இணையதளத்தை அடிப்படையாகக் கொண்ட People's e - Remittance திட்டம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. இச்சேவையை வங்கியின் குறிப்பிடத்தக்க ஒரு முன்னேற்றமாக கருத முடியும். இரண்டு வெளிநாட்டு நாணய வைப்புத் திட்டங்கள் துவக்கி வைக்கப்பட்டன - பிள்ளைகளுக்கென தூதரு எத்தர இசுர வெளிநாட்டு வைப்புத் திட்டமும், ஒரு விசேட வெளிநாட்டு முதலீட்டு வைப்புக் கணக்கும் [SFIDA] அறிமுகம் செய்து வைக்கப்பட்டன.

2009

வங்கியின் 13 ஆவது பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளராக திரு. பி.வீ. பத்திரண 2009 ஜனவரி மாதத்தில் பதவியேற்றார்.

வங்கி இவ்வருடத்தின் போது ரூ. 2.5 பில்லியன் பெறுமதியான அதன் இரண்டாவது கடன் பத்திர வெளியீட்டை மேற்கொண்டது.

இப்பொழுது 214 கிளைகளும், 236 சேவை நிலையங்களும் கணினியின் மூலம் இணைக்கப்பட்டுள்ளன. வங்கி உபாய ரீதியான விதத்தில் நாடெங்கிலும் சுமார் 300 க்கும் மேற்பட்ட தானியங்கி காசாளும் இயந்திரங்களை நிறுவியிருந்தது.

மொத்த வைப்புக்களின் தொகை ரூ. 400 பில்லியன் மட்டத்தை எட்டியது.

இதுவரை காலமும் பதிவு செய்யப்பட்ட ஆகக் கூடிய வரிக்கு முன்னரான இலாபமான ரூ. 6.1 பில்லியன் மட்டம் சாதிக்கப்பட்டது.

வங்கி 2008 ஆம் ஆண்டின் அதன் ஆண்டறிக்கைக்கென வங்கியின் வரலாற்றில் முதல் தடவையாக தென்னாசிய கணக்காளர் சம்மேளனத்தின் (SAFA) விருதைப் பெற்றுக் கொண்டது.

2010

வங்கியின் 14 ஆவது பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளராக திரு. எச்.எஸ். தர்மசிரி 2010 அக்டோபர் மாதத்தில் பதவியேற்றார்.

கிளை வலையமைப்பு மற்றும் சேவை நிலையங்கள் என்பன 679 ஆக விரிவடைந்திருந்தன. தானியங்கி காசாளும் இயந்திரங்களின் எண்ணிக்கை 330 ஆக அதிகரித்திருந்தது.

பீப்பள்ஸ் இன்டர்நெஷனல் வீஸா பற்று அட்டை 2010 ஜூலை மாதத்தில் துவக்கி வைக்கப்பட்டது.

வங்கி பிட்ச் ரேட்டிங்ஸ் லங்கா நிறுவனத்திடமிருந்து AA- தரக் குறியீட்டையும், RAM ரேட்டிங்ஸ் நிறுவனத்திடமிருந்து AAA தரக் குறியீட்டையும் பெற்றுக் கொண்டது.

2010 ஆம் வருடத்தின் போது மொத்த வைப்புக்கள் ரூ. 462 பில்லியன் புள்ளியை தாண்டியிருந்தன. இதுவரை காலமும் பதிவு செய்யப்பட்ட ஆகக் கூடிய வரிக்கு முன்னரான இலாபத் தொகையான ரூ. 8.7 பில்லியன் தொகை இவ்வருடத்தில் பதிவு செய்யப்பட்டது.

மக்கள் வங்கியின் ஆண்டறிக்கைக்கு நிவ்யோர்க்கில் இடம்பெற்ற விருது வைபவத்தில் இரு ARC சர்வதேச தங்க விருதுகள் கிடைத்தன.

வங்கி அதன் 2009 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கைக்கென பொதுத் துறை பிரிவின் கீழ் தென்னாசிய கணக்காளர் சம்மேளனத்தின் முதல் பரிசை வென்றது.

2011

திரு. என். வசந்த குமார் வங்கியின் 15 ஆவது பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளராக 2011 பெப்ரவரி 22 ஆந் திகதி பதவியேற்றார்.

வங்கி 2011 ஜூலை 01 ஆந் திகதி அதன் பொன்விழாவை கொண்டாடியது.

மொத்த கிளைகளின் எண்ணிக்கை 714 ஆக உயர்ந்ததுடன், அநேகமாக நாட்டின் அனைத்து பாகங்களையும் உள்ளடக்கிய விதத்தில் தானியங்கி காசாளும் இயந்திரங்களின் எண்ணிக்கை 382 ஆக அதிகரிக்கப்பட்டது.

வங்கி வ.ப. பிட்ச் ரேடிங் லங்கா நிறுவனத்திடமிருந்து தரமுயர்த்தப்பட்ட AA (உறுதியானது) தரக் குறியீட்டைப் பெற்றுக் கொண்டது.

வங்கியின் மொத்தச் சொத்துக்கள், மொத்த வைப்புக்கள் மற்றும் மொத்த கடன்கள், முற்பணங்கள் என்பன முறையே ரூ. 663 பில்லியன், ரூ. 539 பில்லியன், ரூ. 478 பில்லியன் புள்ளிகளை எட்டியிருந்தன. இதுவரை காலத்திலும் பதிவு செய்யப்பட்ட ஆகக் கூடிய வரிக்கு முன்னரான இலாபமான ரூ. 15.3 பில்லியன் தொகையும், வரிக்குப் பிந்திய இலாபமான ரூ. 10.2 பில்லியன் தொகையும் பெறப்பட்டது.

SLIM - நீல்சன் மக்கள் விருதுகள் வழங்கும் வைபவத்தில் இலங்கையின் வங்கித்தொழில் மற்றும் நிதிச் சேவைகள் துறையின் மிகப் பிரபலமான வங்கி என்ற வருடத்திற்கான சேவை விருதினை மக்கள் வங்கி பெற்றுக் கொண்டது. மேலும், SLIM நீல்சன் - 2011 வணிகச் சின்ன தரச் சிறப்பு விருது வைபவத்தில் சேவைகள் பிரிவுக்கான வெண்கல விருதையும் அது வென்றது.

2012

மொத்த கிளை வலையமைப்பு 728 ஐ எட்டியது. அதே வேலையில், ATM அமைவிடங்கள் நாடு முழுவதிலும் அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கும் விதத்தில் 420 ஆக அதிகரித்திருந்தன.

வங்கி வ.ப. பிட்ச் ரேடிங் லங்கா நிறுவனத்திடமிருந்து தர முயர்த்தப்பட்ட AA+ (உறுதியானது) தரக் குறியீட்டைப் பெற்றுக் கொண்டது. வங்கியின் மொத்தச் சொத்துக்கள், மொத்த வைப்புக்கள் மற்றும் மொத்த கடன்கள், முற்பணங்கள் என்பன முறையே ரூ. 873 பில்லியன், ரூ. 683 பில்லியன், ரூ. 660 பில்லியன் புள்ளிகளை எட்டியிருந்தன.

2012 சர்வதேச யுகஊ விருதுகள் வழங்கும் வைபவத்தில் வங்கிகள்: தேசிய வகை பிரிவில் 2011 ஆம் ஆண்டுக்கான வங்கியின் ஆண்டறிக்கை ஒரு மாபெரும் விருதையும் மூன்று தங்க விருதுகளை வென்றது.

செயலாற்றுகை மீளாய்வு 1999-2012

	1999	2000	2001	2005	2006	2007	2008	2009	2010	புதிய இலங்கை கதநி அடிப்படையில் 2011	**2012**
(இலங்கை ரூ. மில்.)											
மூலதனமும் ஒதுக்குகளும்	(4,635)	(6,474)	(6,166)	4,017	10,271	12,895	15,880	17,800	20,838	23,089	29,205
பொறுப்புக்கள்											
வாடிக்கையாளர் வைப்புக்கள்	104,688	115,007	127,543	225,600	269,947	300,956	324,489	396,158	462,140	550,226	683,951
வங்கிகளிடம், ஏனையவர்களிடம் கடன்படல்	12,405	39,744	28,369	29,134	35,840	49,063	33,714	36,884	39,132	64,053	135,150
ஏனைய பொறுப்புக்கள்	14,458	18,677	17,851	16,512	22,496	17,670	20,965	20,404	20,505	14,709	14,801
கடன் பத்திரங்கள்	–	–	–	–	–	–	2,500	5,000	5,000	10,000	10,000
	131,551	173,428	173,763	271,246	328,283	367,689	381,668	458,445	526,778	638,988	843,902
மொத்த பொறுப்புக்கள்	126,916	166,954	167,597	275,262	338,555	380,584	397,548	476,245	547,616	662,077	873,107
சொத்துக்கள்											
காசு மற்றும் குறுங்கால நிதிகள்	25,260	35,147	24,818	65,592	47,191	57,090	39,663	83,973	87,062	52,510	67,814
முதலீடுகள்	23,066	32,079	25,636	50,583	62,682	61,095	80,109	84,807	82,688	129,977	175,491
கடன்கள், கிடைக்க வேண்டிய தொகைகள் (தேறிய)	66,944	87,087	106,142	142,497	207,138	238,293	248,626	283,760	357,336	461,656	611,414
சொத்து, பொறித்தொகுதி, உபகரணம்	2,945	2,930	2,834	4,862	8,936	8,414	8,362	7,939	8,385	7,523	8,235
ஏனைய சொத்துக்கள்	8,701	9,711	8,167	11,727	12,608	15,691	20,787	15,766	12,144	10,412	10,153
மொத்த சொத்துக்கள்	126,916	166,954	167,597	275,262	338,555	380,584	397,547	476,245	547,616	662,077	873,107
கடப்பாடுகள், அவசர நிலைகள்	19,051	26,365	26,726	45,177	39,450	74,222	138,989	100,867	131,751	190,732	207,021
செயற்பாடுகள்											
மொத்த சம்பாத்தியங்கள்	14,262	18,450	25,198	27,202	35,131	47,984	58,948	69,050	62,532	68,298	94,777
தேறிய வருமானம்	5,705	8,512	10,513	14,784	19,509	21,442	24,456	30,635	31,897	36,431	43,310
மொத்த மேந்தலைச் செலவுகள்	5,459	8,160	8,867	11,070	15,038	15,736	17,159	19,719	21,305	20,421	24,186
வரிக்கு முன்னர் இலாபம்	(6,671)	(1,268)	880	4,035	4,079	5,002	5,664	6,076	8,771	15,600	15,249
வரிக்கான ஏற்பாடு	98	–	–	1,263	922	2,628	2,959	2,755	3,565	5,154	4,355
வரிக்கு பின்னர் இலாபம்	(6,573)	(1,268)	880	2,772	3,157	2,374	2,705	3,320	5,206	10,446	10,894
செயலாற்றுகை குறிகாட்டிகள்											
ஊழியர்களின் எண்ணிக்கை (நிரந்தரம்)	11,623	11,577	11,401	9,531	9,645	8,416	8,587	8,863	8,399	8,249	7,823

	1999	2000	2001	2005	2006	2007	2008	2009	2010	2011	புதிய இலங்கை கதநி அடிப்படையில் 2012
(இலங்கை ரூ. '000)											
ஊழியர் ஒருவருக்கு											
வைப்புக்கள்	9,007	9,934	11,187	23,670	27,988	35,760	37,788	44,698	55,023	66,702	87,428
முற்பணங்கள்	5,760	7,522	9,310	14,951	21,476	28,314	28,954	32,016	42,545	55,965	78,156
மொத்தச் சம்பாத்தியங்கள்	1,227	1,594	2,210	2,854	3,642	5,702	6,865	7,791	7,445	8,280	12,115
வரிக்கு பின்னர் இலாபம்	(566)	(110)	77	291	327	282	315	375	620	1,266	1,393
(இலங்கை ரூ.)											
பங்கு ஒன்றுக்கு											
வரிக்கு பின்னர் இலாபம்	(6,573)	(1,268)	880	2,772	3,157	2,374	2,705	3,320	5,206	10,446	10,894
மொத்த சொத்துக்கள்	126,916	166,954	167,597	275,262	338,555	380,584	397,547	476,245	547,616	662,077	873,107
தேறிய பெறுமதி	(4,635)	(6,474)	(6,166)	4,017	10,271	12,895	15,880	17,800	20,838	23,089	29,205
முதன்மை செயலாற்றுகை குறிகாட்டிகள்											
சொத்துக்கள் மீதான ஆதாயம் (%) வரிக்குமுன்	(5.4)	(0.9)	0.5	1.6	1.3	1.4	1.5	1.4	1.7	2.6	2.0
பங்கு மீதான ஆதாயம் (%)	2,319.1	22.8	(13.9)	139.2	44.2	20.5	18.8	19.7	26.9	49.2	41.7
செலவு/வருமான விகிதம் (%)	146.0	102.8	89.2	72.7	73.8	68.7	65.4	60.6	60.2	56.1	55.8
மூலதன நிறைவு விகிதம் (%)	–	(11.3)	(10.5)	1.9	5.6	6.9	10.5	13.4	12.8	14.8	14.0
முன்னைய SLAS அடிப்படையில்											
செயற்படாத கடன் விகிதம் (மொத்தம்) (%)	22.2	18.9	20.9	11.0	7.1	5.9	6.8	6.7	5.0	3.4	2.8
செயற்படாத கடன் விகிதம் (தேறிய) (%)	6.2	4.4	8.2	1.8	0.9	0.7	1.6	2.0	1.3	0.5	0.4
செயற்படாத கடன் உள்ளடக்க விகிதம் (%)	72.3	76.9	61.0	83.9	87.1	88.0	75.7	70.6	73.6	81.5	84.0
பிட்ச் குறியீடு				BBB+	A-	A-	A-	A	AA-	AA	AA+
RAM குறியீடு									AAA	AAA	AAA

நிதி/வங்கித்தொழில் பதங்களின் சொல்லகராதி

கணக்கீட்டுக் கொள்கைகள்
நிதிசார் கூற்றுக்களை தயாரிப்பதிலும், அறிக்கையிடுவதிலும் நிறுவன மொன்றின் முகாமைத்துவத்தினால் தெரிவு செய்யப்பட்டு, ஒரே சீரான விதத்தில் பின்பற்றப்பட்டு வரும் கோட்பாடுகள், விதிகள் மற்றும் நடைமுறைகள்.

திரண்டு வரும் அடிப்படை
காசு அல்லது அவற்றுக்கு இணையானவற்றின் பெறுவனவு அல்லது கொடுப்பனவு இடம்பெறும் வரையில் காத்திராமல், கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் ஏனைய நிகழ்வுகள் என்பவற்றின் பெறுபேறுகளை அங்கீகரித்தல்.

தவணைக் கட்டணங்களில் குறைத்தல்
தொட்டுணர முடியாத ஒரு சொத்தின் பயனுள்ள ஆயுள் காலத்தின் போது பெறுமானத் தேய்வுத் தொகையை முறையான விதத்தில் ஒதுக்குதல். பெறுமதி தேய்வு மற்றும் தவணைக் கட்டணங்களில் குறைத்தல் என்பன ஒரே பொருளைக் கொண்டுள்ளன.

தவணைகள் குறைக்கப்பட்ட செலவு
முதன்மை மீள்கொடுப்பனவுகளை கழித்து ஒன்றுதிரண்ட கழிக்கப்பட்ட தொகையை கூட்டி அல்லது கழித்து ஆரம்ப அங்கீகரிப்பில் நிதிசார் சொத்து அல்லது நிதிசார் பொறுப்பு அளவிடப்படும் தொகை; அசல் தொகைக்கும், முதிர்ச்சித் தொகைக்கு மிடையிலான வேறுபாடு இருந்தால் அதன் தாக்கமான வட்டி விகிதத்தை பயன்படுத்தி, இது மேற்கொள்ளப் படுவதுடன், மதிப்புக் குறைவு அல்லது திரட்ட முடியாத நிலை என்பவற்றுக்கான ஏதேனும் குறைப்புக்கள். (நேரடியாக அல்லது ஒரு அலவன்சு கணக்கை பயன்படுத்துவதற்கு கூடாக) அவற்றை கழித்து இது மேற்கொள்ளப்படுகிறது.

இணைக் கம்பெனி
துணை நிறுவனமல்லாத ஒரு கம்பெனி இதில் உரித்துக் கம்பெனி ஒரு பிடிப்பு அக்கறையை கொண்டிருப்பதுடன், அதன் செயற்பாட்டு மற்றும் நிதிசார் கொள்கைகளில் கணிசமான அளவிலான ஒரு செல்வாக்கையும் செலுத்துகின்றது.

விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கும் நிதிச் சொத்துக்கள்
விற்பனைக்கு வைக்கப்பட்டிருப்பவை எனக் குறித்துரைக்கப்பட்டிருக்கும் நிதிச் சொத்துக்கள் அல்லது (அ). கடன்கள் மற்றும் கிடைக்க வேண்டிய தொகைகள் (ஆ). முதிர்ச்சி முதலீடுகளுக்கென வைக்கப்பட்டி ருக்கும் தொகைகள் அல்லது (இ). இலாபம் அல்லது நட்டத்திற்கூடாக நியாயமான பெறுமதியில் வகைப்படுத் தப்பட்டிருக்கும் நிதிச் சொத்துக்கள்

கழிவு செய்யப்பட்ட உண்டியல்
முகப் பெறுமதியிலும் பார்க்க குறைவாக கொள்வனவு செய்யப்பட்ட ஒரு வாக்குறுதிச் சீட்டு அல்லது மாற்றுண்டியல் உண்டியலின் காலாவதியாகாத காலப் பகுதிக்கான வட்டி வித்தியாசத்தை பிரதிநிதித்துவம் செய்கின்றது. முதிர்ச்சியின் போது வைத்திருப்பவர் உண்டியலின் முகப் பெறுமதியை அதன் சொந்தக் கணக்கில் சேர்ப்பிக்கின்றார்.

மாற்றுண்டியல்
ஒரு நபரினால் (வரைபவர்) மற்றொரு நபருக்கு (பெறுபவர்) மூன்றாம் நபரொருவருக்கு (கொடுப்பனவைப் பெறுபவர்) குறித்துரைக்கப்பட்ட ஒரு பணத் தொகையை செலுத்துமாறு கையொப்பமிட்ட, எழுத்து மூலமான, நிபந்தனையற்ற ஒரு கட்டளை. மாற்றுண்டியல் மற்றும் வரைவோலை ஆகிய பதங்கள் அடிக்கடி மாற்றி மாற்றி பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

அழைப்பு வைப்புக்கள் அல்லது அழைப்பு பணம்
கேட்கும் பொழுது திருப்பிச் செலுத்தப் படவேண்டிய, கடனாக வழங்கப்பட்டிருக்கும் வைப்புக்கள் அல்லது நிதிகள்.

மூலதன நிறைவு நிலை
கிடைக்கக் கூடியதாக இருந்து வரும் நிதிகளை கொண்டு அதன் வைப்பு-தாரர்களினதும், ஏனைய கடன் கொடுத்-தோரினதும் தேவைகளை நிறைவேற்றி வைப்பதற்கு ஒரு வங்கி கொண்டிருக்கும் ஆற்றல். சர்வதேச தீர்ப்பனவுகளுக்கான வங்கி மற்றும் இலங்கை மத்திய வங்கி என்பவற்றின் தேவையின் பிரகாரம், உள்நாட்டு வங்கிகள் குறித்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச மூலதனமொன்றை பராமரித்து வருதல் வேண்டும்.

கடன் இடர்
ஒரு இடர் கருவிக்கான ஒரு தரப்பு ஒரு கடப்பாட்டை நிறைவேற்றி வைப்பதற்கு தவறுவதன் மூலம் அடுத்த தரப்புக்கு ஒரு நிதி இழப்பை ஏற்படுத்தும் இடர்

அடுக்கு I மூலதனம் (அடிப்படை மூலதனம்)
அடிப்படை மூலதனம் மூலதன நிதிகளின் தெரிவு செய்யப்பட்ட உருப்படிகளை உள்ளடக்குகின்றது. பங்கு மூலதனம், பங்கிலாபம், நியதிபூர்வ ஒதுக்கு நிதிகள், பிடித்து வைக்கப்பட்ட இலாபங்கள், பொது ஒதுக்குகள், நிலையான மற்றும் நீண்ட கால முதலீடுகளை விற்பனை செய்வதன் மூலம் வரியின் பின்னர் கிடைக்கும் மிகைகள்/நட்டங்கள் என்பன பிரதான அடிப்படை மூலதன உருப்படிகளாகும்.

அடுக்கு II மூலதனம் (குறைநிரப்பு மூலதனம்)
குறைநிரப்பு மூலதனம் ஒப்புதல் அளிக்கப்பட்ட மீள்மதிப்பீட்டு ஒதுக்குகள், பொது ஏற்பாடுகள் (கடன்/பங்கு மூலதனம்), கலப்பு மூலதன உருப்படிகள் மற்றும் ஒப்புதல் அளிக்கப்பட்ட குறைந்த தவணைக் கடன்கள் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

காசுக்கு இணையானவை
உடனடியாக அறியப்பட்ட காசுத் தொகை-களாக மாற்றிக் கொள்ளத்தக்க, குறுங்கால, உயரளவுக்கு திரவத்தன்மை கொண்ட முதலீடுகள். இவை பெறுமதி மாற்றங்களிலிருந்து தோன்றும் இடர்களை மிகக் குறைந்த அளவிலேயே எதிர்கொள்கின்றன.

வைப்புச் சான்றிதழ்
ஒரு வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருக்கும் நிதிகள் தொடர்பாக அந்த வங்கியினால் வெளியிடப்படும் சான்றிதழ். அது செலுத்தப்பட வேண்டிய வட்டி விகிதத்தையும், வைப்புதாரருக்கு அந்த வைப்புத் தொகை திருப்பிச் செலுத்தப்படும் திகதியையும் திட்டவட்டமாக குறிப்பிடுகின்றது. வைப்புச் சான்றிதழ்கள் பெரும்பாலும் கைமாறத்தக்க-வையாக இருந்து வருகின்றன.

வர்த்தக கடதாசி
வங்கிகளினாலும் கடன் நம்பகத் தன்மை கொண்ட நிறுவனத் துறை கடன்படுனர்-களாலும் வெளியிடப்படும் பிணையற்ற குறுங்கால வாக்குறுதிப் பத்திரங்கள்.

கடன் பொறுப்புக்கள்
ஒப்புதல் அளிக்கப்பட்டிருந்த போதிலும், ஐந்தொகை திகதியன்று வாடிக்கையாளரினால் பயன்படுத்தபடாதிருக்கும் கடன் வசதிகள்.

அவசர கால நிதிகள்
அதன் இறுதிப் பெறுபேறான ஆதாயம் அல்லது இழப்பு, ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகள் இடம்பெறுதல் அல்லது இடம்பெறாதிருத்தல் என்பவற்றின் மூலமே உறுதிப்படுத்தப்படும் ஒரு நிலை அல்லது ஒரு நிலவரம்.

நிறுவன ஆளுகை
கம்பெனித் துறை நிறுவனங்கள் நிர்வகிக்கப்படும் செயன்முறை. அது நிறுவனத்தின் முகாமைத்துவம் மற்றும் செல்வழி என்பவற்றின் மீது அதிகாரம் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றது என்பதனையும், நிறைவேற்று அதிகாரிகளின் செயல்களின் மேற்பார்வையையும், உரிமையாளர்களுக்கும் ஏனையவர்-களுக்கும் பொறுப்புக் கூறும் நிலையையும் கவனத்தில் எடுக்கின்றது.

முகவர் வங்கி
பிறிதொரு வங்கியின் முகவராக செயற்பட்டு வரும் ஒரு வங்கி. ஒரு முகவர் வங்கி பொதுவாக அவ்வங்கி அமைந்திருக்கும் பிராந்தியத்தில் ஏனைய வங்கிகளின் சார்பில் பரந்த வீச்சிலான வங்கித்தொழில் சேவைகளை வழங்குகின்றது.

செலவு வருமான விகிதம்
தேறிய வருமானத்தின் ஒரு சதவிகிதம் என்ற முறையில் செயற்பாட்டுச் செலவுகள்.

எதிர் தரப்பு
ஒரு வியாபாரம் நடத்தப்படும் அல்லது முடிக்கப்படும் (ஒரு வங்கியையும் உள்ளிட்ட) அடுத்த தரப்பு).

நாடு தொடர்பான இடர்
குறிப்பிட்ட ஒரு இடர் இருக்கும் கடனெடுப்பவர்களுக்கு கடனளிப்பதுடன் சம்பந்தப்பட்ட கொடு கடன் இடர் சில நேரங்களில் இது இறைமை இடரை உள்ளடக்கும் விதத்தில் கவனத்தில் எடுக்கப்படுகின்றது.

குறுக்கு விகிதம்
ஒரே நாணயம் தொடர்பாக இரண்டு புறம்பான விலை மனுக்களிலிருந்து கணிக்கப்பட்ட அந்நியச் செலாவணி விகிதம்.

நாணயப் பரிமாற்றம்
இரு நாணயங்களில் அசல் தொகைகளை பறிமாற்றம் செய்தல். ஒரு பின்னைய திகதியில் இந்த நாணயங்களை மீள் பரிமாற்றம் செய்து கொள்ளல், மீள் பரிமாற்றம் வரையில் பெறப்பட்ட நாணயத்தில் வட்டிக் கொடுப்பனவுகளை செலுத்துதல் என்பவற்றுக்கான ஒப்பந்தத்துடன் இணைந்த விதத்தில் இது மேற்கொள்ளப்படுகின்றது.

தாமதப்படுத்தப்பட்ட வரி
நடப்பு நிதியாண்டில் அல்லது பிறிதொரு நிதியாண்டில் செலுத்த வேண்டிய நிலை தோன்றக் கூடிய வரிகளுக்கென நிதிசார் கூற்றுக்களில் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும் தொகை.

பெறுமதி தேய்வு
சொத்துக்களின் பெறுமதித் தேய்வு தொகையை அவற்றின் பயனுள்ள ஆயுள் காலத்தின் போது முறையான விதத்தில் ஒதுக்குகளை மேற்கொள்ளல்.

மூலத்திலிருந்த கிடைக்கும் தொகை
பின்வரும் பண்புக் கூறுகள் மூன்றையும் கொண்டிருக்கும் ஒரு நிதி உபகரணம் (அ) குறித்துரைக்கப்பட்ட ஒரு வட்டி விகிதம், பிணைப்பத்திர விலை, பண்ட விலை, அந்நியச் செலாவணி விகிதம், விலைகள் அல்லது விகிதங்கள் சுட்டெண், ஒரு கடன் குறியீடு அல்லது கடன் சுட்டெண் அல்லது ஏனைய மாறிகள் (சில சந்தர்ப்பங்களில் அடிப்படையான வையென அழைக்கப்படு பவை), (ஆ) அவற்றின் ஆரம்ப தேறிய மூலதன குறியீடு தேவைப்படுவதில்லை அல்லது ஏனைய வகைகளுக்கு தேவைப்படுவதிலும் பார்க்க சிறியளவிலான ஆரம்ப தேறிய மூதலீடு

தேவைப்படுவதில்லை, (அ) அது ஒரு எதிர்கால திகதியில் தீர்க்கப்படுகின்றது.

இடையீட்டின்மை
வங்கித் துறைகளிலிருந்து நிதிகளைப் பெற்றுக் கொள்ளாது கடனெடுப்ப வர்கள் மூலதனச் சந்தைகளிலிருந்து நேரடியாக நிதிகளை பெற்றுக் கொள்வதைக் குறிப்பதற்கனெ அடிக்கடி பயன்படுத்தப்பட்டு வரும் ஒரு பதம். இது பொதுவாக மிக வலுவான கடன் குறியீட்டுப் புள்ளிகளைக் கொண்டிருக்கும் கடன் எடுப்பவர்களி னால் மேற்கொள்ளப்படுகின்றது.

ஆவண உண்டியல்
கப்பல் ஏற்றுமதி ஒப்பந்தச் சீட்டு, பொருள் விபர பட்டியல், காப்புறுதிப் பத்திரம் போன்ற பல்வேறு ஆவணங்களுடன் இணைந்த ஒரு மாற்றுண்டியல்.

ஆவணக் கடன்
கொடுப்பனவை மேற்கொள்ளும் பொருட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்களை குறித்துரைக்கும் ஒரு கடன் கடிதம்.

வரைவோலை
பொதுவாக மாற்றுண்டியலுக்கு இணையாக பயன்படுத்தப்பட்டு வரும் ஒரு பதம். ஆனால், சில சந்தர்ப்பங்களில் வங்கிகளுக் கிடையிலான உண்டியல்களை குறிப்பதற்கு குறிப்பாக இது பயன்படுத்தப்படுகின்றது. ஒரு வங்கியாளரின் வரைவோலை, ஒரு வங்கியினால் வரையப்பட்ட அல்லது ஒரு வங்கியின் சார்பில் வரையப்பட்ட, கேட்கும் பொழுது பணம் செலுத்தப்பட வேண்டிய ஒரு வரைவோலையாகும்.

தாக்கமான வட்டி விகித முறை
ஒரு நிதிசார் சொத்தின் அல்லது நிதிசார் பொறுப்பின் கழிக்கப்பட்ட செலவை கணிக்கும் முறை மற்றும் வட்டி வருமானம் அல்லது வட்டிச் செலவை சம்பந்தப்பட்ட காலப் பிரிவின் போது ஒதுக்கல் முறை.

பங்குக் கருவி
அதன் பொறுப்புக்கள் அனைத்தையும் கழித்த பின்னர் ஒரு நிறுவனத்தின் சொத்துக்களில் எஞ்சியிருக்கும் வட்டி இருந்து வருகின்றது என்பதற்கு சான்றாக இருந்து வரும் ஒப்பந்தம்.

நியாயமான பெறுமதி
விடயங்களை அறிந்திருக்கும், இணங்கும் தரப்புகளுக்கிடையில் மேற்கொள்ளப்படும் ஒரு சொத்து பரிமாறிக் கொள்ளப்படும் அல்லது ஒரு பொறுப்பு தீர்த்து வைக்கப்படும் ஒரு தொகை.

நிலையான கட்டணம்
சட்டபூர்வமான அடமானத்தின் கீழ் வழங்கப்பட்டிருக்கும், வழமையாக முழு உரித்து அல்லது குத்தகை உரித்து ஆவணம் அல்லது பொறித்தொகுதி மற்றும் இயந்திரம் மீதான கட்டணம்.

நிதிசார் கருவி
நிறுவனத்தின் நிதிசார் கருவி யொன்றின் தோற்றத்திற்கு மற்றும் மற்றொரு நிறுவனத்தின் நிதிசார் பொறுப்புக்கு அல்லது பங்கு கருவிக்கு வழிகோலக் கூடிய ஒரு ஒப்பந்தம்.

மிதக்கும் கட்டணம்
பங்குகள், கடன் பட்டோர் அல்லது காசு போன்ற சொத்துக்கள் மீதான ஒரு முற்பணத்திற்கு பிணை வழங்குவதற்காக கடனெடுப்பவர் ஏற்கும் பொறுப்பு. அது அச்சொத்துக்களை அக்கம்பெனி அதன் சாதாரண வர்த்தக நடைமுறைகளின் போது தொடர்ச்சியாக பயன்படுத்துவதற்கும், கையுதிர்ப்பதற்கும் இடமளிக்கின்றது. கம்பெனி கடனை திருப்பிச் செலுத்த தவறும் சந்தர்ப்பத்தில் அப்பொறுப்பு நிலையானதாக மாற்றமடைகின்றது.

அந்நியச் செலாவணி வருமானம்
வெளிநாட்டு நாணயங்களில் குறிக்கப்-பட்டிருக்கும் சொத்துக்களை அல்லது பொறுப்புக்களை ஐந்தொகை திகதியில் நிலவும் விகிதங்களில் இலங்கை ரூபாவுக்கு மாற்றும் பொழுது பெறப்படும் ஆதாயம். அது ஆரம்பத்தில் அல்லது முன்னைய ஐந்தொகை திகதியில் நிலவி வந்த விகிதங்களிலும் பார்க்க வேறுபடுகின்றது. அந்நியச் செலாவணிகளில் வர்த்தகம் செய்வதிலிருந்தும் அந்நியச் செலாவணி வருமானம் கிடைக்கின்றது.

முன்னோக்கிய ஒப்பந்தம்
ஒப்பந்தத் திகதியில் நிர்ணயிக்கப்படும் நியதிகளின் கீழ் குறித்துரைக்கப்பட்ட எதிர்கால திகதியொன்றில் ஒரு பரிமாற்றத்தை செய்து கொள்வதற்கு இரு தரப்பினரின் கடப்பாட்டினைப் பெற்றுக் கொள்ளும் ஓர் ஒப்பந்தம்.

முன்னோக்கிய விகிதம்
குறிப்பிட்ட திகதிக்கு அப்பால் ஒரு முதிர்ச்சியைக் கொண்டிருக்கும் நாணயத்தின் விலை. முன்னோக்கிய விகிதங்கள் விலைகளை பொறுத்தவரையில் அதே இட விகிதங்களாக அல்லது வேறுபட்டவையாக இருந்து வர முடியும். முதலாவது விடயத்தில் முன்னோக்கிய விகிதம் தட்டையானதாக உள்ளது. இரண்டாவது விடயத்தில் விலை ஒரு ஆதாயத்துடன், உயர்வாக அல்லது ஒரு கழிவுடன் குறைவாக இருந்து வருகின்றது.

முன்னோக்கிய விகித ஒப்பந்தம்
ஒரு குறிப்பிட்ட வட்டி விகிதச் சுட்டெண் மற்றும் உடன்பட்டிருக்கும் நிலையான விகிதம் என்பவற்றுக்கிடை யிலான வித்தியாசத்தை அடிப்படை யாகக் கொண்டு குறித்துரைக்கப்பட்ட ஓர் எதிர்கால திகதியில் கொடுப்பனவு களை பரிமாறிக் கொள்வதற்கான ஓர் ஒப்பந்தம்.

குழுமம்
ஒரு குழுமம் என்பது தாய் கம்பனியும் அதன் அனைத்து துணை நிறுவனங்களுமாகும்.

நட்டத்தடை பேரம்
(வட்டி விகிதங்கள், விலைகள், பண்டங்கள் முதலியவற்றின்) சாதகமற்ற விலை மாற்ற-றங்களின் விளைவாக தோன்றும் இடருக்கு எதிரான ஒரு பாதுகாப்பு வழியாக பயன்படுத்தப்பட்டு வரும் ஒரு முறை.

முதிர்ச்சிக்கென வைக்கப்பட்டிருக்கும் முதலீடுகள்
நிலையான அல்லது நிர்ணயிக்கத்தக்க கொடுப்பனவுகள் மற்றும் ஒரு நிறுவனம் முதிர்ச்சிக்கென வைத்துக் கொள்வதற்கான நோக்கத்தையும் அதற்கான ஆற்றலையும் கொண்டிருக்கும் நிர்ணயிக் கத்தக்க கொடுப்பனவுகள் மற்றும் நிலையான முதிர்ச்சி என்பவற்றை கொண்டிருக்கும் ஒரு நிதிக் கருவி; ஆரம்ப அங்கீகாரத்தில் நிறுவனம் வியாபாரத்திற்கு வைத்திருப்பவை அல்லது விற்பனைக்கு வைத்திருப்பவை என குறித்துரைக்கும் சொத்துக்கள் தவிர; அல்லது கடன்கள் மற்றும் கிடைக்க வேண்டிய தொகைகள் என்ற வரை விலக்-கணத்தை நிறைவு செய்யும் சொத்துக்கள்.

மதிப்புக் குறைவு
அறவிடக் கூடிய தொகை முன்கொண்டு செல்லப்படும் தொகையிலும் பார்க்க வீழ்ச்சியடையும் பொழுது இந்நிலைமை தோன்றுகின்றது.

முன்காப்பீடு (Indemnity)
ஓர் ஒப்பந்தத்தில் ஒரு தரப்பினர் அல்லாத நபர் ஒருவர், ஒப்பந்தமொன்றின் தரப்பினர் ஒருவருக்கு ஏற்படும் நட்டத்தை பொறுப்பேற்பதற்கு உடன்படுவது குறித்த ஓர் ஒப்பந்தம். முன்காப்பீட்டினை வழங்கும் நபர், இரண்டாம் நிலைப் பொறுப்பினை ஏற்றுக் கொள்ளும் பிணைதாரரைப் போலன்றி முதன்மைப் பொறுப்பினை ஏற்றுக் கொள்கின்றார்.

வட்டி விகித இடர்
நிதிக் கருவியொன்றின் எதிர்க்கால காசுப் பாய்ச்சல்களின் நியாயமான பெறுமதி சந்தை வட்டி விகிதங்களில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக தளம்பல் நிலையை எதிர்கொள்ளக் கூடிய இடர்.

முதன்மை முகாமைத்துவ ஆளணியினர்
நிறுவனத்தின் செயற்பாடுகளை திட்டமிட்டு, நெறிப்படுத்தி, கட்டுப்படுத்துவதற்கான அதிகாரத்தையும், பொறுப்பினையும் கொண்டிருக்கும் நபர்கள்.

கடன் கடிதம்
ஆவணத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் விதிகள் மற்றும் நிபந்தனைகள் என்பவற்றுக்கு அமைவாக, ஒரு மூன்றாம் தரப்பினருக்கு, குறிப்பிட்ட தொகை வரையில் பணத்தை முற்பணமாக வழங்குமாறு பிறிதொரு வங்கியை அல்லது வங்கிகளை கேட்டுக் கொள்ளும் விதத்தில் ஒரு வங்கியினால் வெளியிடப்படும் ஓர் ஆவணம்.

காசு இடர்
காசு அல்லது ஏனைய நிதிச் சொத்துக்களை வழங்குவதன் மூலம் தீர்த்து வைக்கப்படும் நிதிசார் பொறுப்புக்களுடன் இணைந்த கடப்பாடுகளை தீர்த்து வைப்பதில் நிறுவனம் சிரமங்களை எதிர்கொள்ளும் இடர்.

சந்தை குறித்தல்
நிலைமைகளை காலத்துக்கு காலம் அவற்றின் தற்போதைய சந்தைப் பெறுமதியில் அல்லது நியாயமான பெறுமதியில் கூட்டிக் கொள்ளும் அல்லது குறைத்துக் கொள்ளும் கொள்கை.

சந்தை இடர்
ஒரு நிதிசார் கருவியின் நியாயமான பெறுமதி அல்லது எதிர்கால காசுப் பாய்ச்சல்கள் சந்தை விலைகளில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக தளம்பல்களை ஏற்றகக் கூடிய ஒரு நிலை. சந்தை இடர் மூன்று பிரதான இடர்களை உள்ளடக்குகின்றது: நாணய இடர், வட்டி விகித இடர் மற்றும் விலை இடர்.

சிறுபான்மை பங்குதாரர் நலன்
தாய் நிறுவனத்தினால் துணை நிறுவனங்-களுக்கூடாக நேரடியாக அல்லது மறைமுகமாக உரித்தினை கொண்டிராத பங்கு நலனுக்கு செலுத்தப்பட வேண்டிய துணை நிறுவனமொன்றின் இலாபம் அல்லது நட்டம் மற்றும் தேறிய சொத்துக்களின் ஒரு விகிதம்.

அடமானம்
ஒரு கடனுக்கு பிணையாக எடுத்திருக்கும் மெய்யாதனம் மீது கொண்டிருக்கும் ஈடு செய்யும் உரித்து.

கைமாறத்தக்க உபகரணம்
ஒரு மூன்றாம் தரப்பினருக்கு சுதந்திரமாக விற்பனை செய்யப்படக் கூடிய (அதாவது ணகைமாற்றத்தக்கணு) ஒரு பிணையம் அல்லது ஏனைய நிதிசார் கருவி. வங்கித் தாள்கள், முறிகள், மாற்றுண்டியல்கள் மற்றும் காசோலை என்பன பொதுவாக கைமாற்றத்தக்க உபகரணங்களாக இருந்து வருகின்றது.

தேறிய வட்டி இலாபம்
சராசரி வட்டி உழைப்பு சொத்துக்களின் ஒரு சதவீதம் என்ற முறையில் வட்டி வருமானம்.

செயற்படாத கடன்
அசல் தொகை அல்லது வட்டிக் கொடுப்பனவுகள் உரிய திகதிகளில் செலுத்தப்படாதிருக்கும் ஒரு கடன் அல்லது கடனாளி கடனின் பிறிதொரு விதியை அல்லது நிபந்தனையை நிறைவேற்றத்

தவறியிருக்கும் ஒரு கடன். செயற்படாத கடன்கள் பொதுவாக வருமானம் திரண்டு வராத நிலையிலேயே வைக்கப்படுகின்றன.

நொஸ்ட்ரோ (NOSTRO) கணக்கு
மற்றொரு வங்கியில், வழமையாக ஆனால் அவசியமாக அன்றி, ஒரு வெளிநாட்டு முகவர் வங்கியில் பராமரிக்கப்பட்டு வரும் அந்நியச் செலாவணி நடைமுறைக் கணக்கு. அடுத்த வங்கியில் இந்த வைப்பு ஒரு நொஸ்ட்ரோ கணக்கு என அழைக்கப்படுகின்றது.

நியாயமான சான்று
பகுப்பாய்வு, அளவீடு, அவதானிப்பு மற்றும் ஏனைய அத்தகைய ஆராய்ச்சி முறைகள் என்பவற்றுக்கூடாக நிரூபிக்கக் கூடிய விடயங்களை அடிப்படையாகக் கொண்ட தகவல்கள்.

ஐந்தொகைக்கு வெளியிலான கொடுக்கல் வாங்கல்கள்
ஐந்தொகையில் சொத்துக்களாக அல்லது பொறுப்புக்களாக அங்கீகரிக்கப்பட்டிராத கொடுக்கல் வாங்கல்கள். ஆனால், இவை அவசர நிலைமைகளையும், கடப்பாடுகளையும் எடுத்து வருகின்றன.

நிலை
குறிப்பிட்ட ஒரு நாணயத்தில் அல்லது வட்டி விகிதத்தில் தேறிய மொத்தக் கடப்பாடுகள். ஒரு நிலை தட்டையானதாக அல்லது (வெளியில் தெரியாத) சதுரமானதாக, நீளமானதாக (விற்பனை செய்வதிலும் பார்க்க அதிகளவிலான நாணயங்களை கொள்வனவு செய்தல்) அல்லது குறுகியதாக (கொள்வனவு செய்வதிலும் பார்க்க அதிகளவு நாணயங்களை விற்பனை செய்தல்) இருந்து வர முடியும்.

முதன்மை விகிதம்
ஒரு வங்கி, பெருமளவுக்கு கடன் நம்பகத் தன்மையைக் கொண்ட அதன் நிறுவனத் துறை வாடிக்கையாளரிடம் அறவிடும் வட்டி விகிதம்.

வாக்குறுதிச் சீட்டு
ஒரு நபரினால் பிறிதொரு நபருக்கு எழுத்து மூலம் வழங்கப்படும் நிபந்தனையற்ற ஒரு வாக்குறுதி. குறிப்பிட்ட ஒரு நபருக்கு அல்லது எடுத்து வருபவருக்கு அல்லது அவர்கள் கட்டளையிடுபவர்களுக்கு குறிப்பிட்ட ஒரு தொகையை கேட்கும் பொழுது அல்லது நிலையான அல்லது நிர்ணயித்துக் கொள்ளத்தக்க எதிர்காலத் திகதியொன்றின் போது செலுத்துவதாக வாக்குறுதி அளிப்பவர் இதில் கைசாத்திடுவார்.

சம்பந்தப்பட்ட தரப்பினர்
ஒரு தரப்பு அடுத்த தரப்பை கட்டுப்படுத்தும் ஆற்றலைக் கொண்டிருத்தல் அல்லது நிதிசார் மற்றும் செயற்பாட்டு முடிவுகளை மேற்கொள்வதில் மற்றைய தரப்பின் மீது கணிசமான அளவிலான செல்வாக்குச் செலுத்தக் கூடிய ஆற்றலைக் கொண்டிருத்தல்.

மீள் கொள்வனவு ஒப்பந்தம் (REPO)
விற்பனை அல்லது மீள் கொள்வனவு ஒப்பந்தத்தை குறிக்கும் சொல்.

ஒதுக்குச் சொத்துக்கள்
மத்திய வங்கியுடனான அதன் ஒதுக்குத் தேவைகளின் ஒரு பாகமாக இருந்து வரும் நிதி நிறுவனமொன்றின் சொத்துக்கள்.

தலைகீழ் ஒப்பந்தம் (REVERSE REPO)
ஒரு மீள்கொள்வனவு ஒப்பந்தத்தின் எதிர்ப்பதம், அதாவது ஒரு கொள்வனவு அல்லது மீள்விற்பனை ஒப்பந்தம்.

சுழலும் கடன்
கடன் பெறுபவரின் தற்றுணியின் பேரில் அவ்வப்பொழுது தொகைகளைப் பெற்று, அவ்வப்பொழுது கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு இடமளிக்கும் ஒரு கடன் வகை. கடன் பெறுபவருக்கு கிடைக்கும் நிதிகள் அசல் தொகையின் மீள்கொடுப்பனவுகள் மூலம் குறைநிரப்புச் செய்யப்படுகின்றன.

பிணைகளை காசாக்குதல்
இது ஒரு தொகுதி வருமானத்தை உருவாக்கும் சொத்துக்களின் ஒரு தொகுதியை, ஒரு கடனை வழங்குவதற்கு ஊடாக (வழமையாக பத்திரங்கள் அல்லது வர்த்தக கடதாசி) இக்கொள்வனவை நிதிப்படுத்தும் ஒரு வாகன கம்பெனிக்கு மாற்றிக் கொடுப்பதனைக் குறிக்கின்றது.

பிரிவு ரீதியான பகுப்பாய்வு
ஒரு தொழில் முயற்சியின் பிரிவுகளின், அடிப்படையில் குறிப்பாக, அது செயற்பட்டு வரும் பல்வேறு பூகோள பிரதேசங்களின் அடிப்படையில் நிதிசார் தகவல்களை பகுப்பாய்வு செய்தல்.

பிரிவு ரீதியான அறிக்கையிடல்
வங்கித்தொழில் செயற்பாடுகள், குத்தகைச் செயற்பாடுகள், பங்கு வர்த்தகம், பிணைப்பத்திரங்கள் வியாபாரம், சொத்து மற்றும் காப்புறுதி போன்ற வணிகப் பிரிவுகளிலிருந்து பெறப்பட்ட வருமானத்தின் பங்களிப்பினை பிரிவு ரீதியான அறிக்கையிடல் சுட்டிக் காட்டுகின்றது.

தீர்ப்பனவு திகதி
பணத்துக்காக உண்மையான பிணையங்களின் பரிமாற்றத்தின் மூலம் ஒரு பிணையங்கள் கொடுக்கல் வாங்கல் பூர்த்தி செய்யப்படும் திகதி.

குறுகிய நிலை
சொத்துக்களுக்கு (மற்றும்/அல்லது முன்னோக்கியகொள்வனவுஒப்பந்தங்களுக்கு) பொறுப்புக்கள் (மற்றும்/அல்லதுமுன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்கள்) மிகையாக இருந்து வரும் நிலை. தேறிய கொள்வனவுகள் மற்றும் விற்பனைகள் ஒரு தேறிய விற்பனை அல்லது மிகை விற்பனை நிலையை எடுத்து வரும் பொழுது ஒரு வியாபாரியின் நிலை.

துணைக் கம்பெனி
துணைக் கம்பெனி என்பது (தாய் கம்பெனி என அழைக்கப்படும்) பிறிதொரு தொழில் முயற்சியினால் கட்டுப்படுத்தப்பட்டு வரும் ஒரு தொழில் முயற்சியாகும்.

தொங்கல் கணக்கு
சரிபார்ப்புக்கெனவும், அதன் பின்னர் உரிய கணக்குகளுக்கு மாற்றல் செய்வதற்கெனவும் தற்காலிகமாக வைக்கப்பட்டிருக்கும் உருப்படிகளை பதிவு செய்வதற்கென பயன்படுத்தப்பட்டு வரும் ஒரு கணக்கு.

கூட்டாக வழங்கப்படும் கடன்
ஒரு கூட்டு முயற்சியின் வடிவில் பல வங்கிகள் இணைந்து நிதிகளை வழங்கும் ஒரு கடன் ஏற்பாடு. அத்தகைய கடன்களை அவ் வங்கிகள் தாம் மட்டும் தனியாக வழங்குவதற்கு விரும்புவதில்லை அல்லது அதற்கான ஆற்றலை அவை கொண்டிருப்பதில்லை. இத்தகைய கூட்டுக் கடன்கள் பாரியளவிலான நிதிப்படுத்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வரும் வாடிக்கையாளருக்கு வழங்கப்படுகின்றன. தனியொரு வங்கி, அதன் கடன் தொகுப்பில் திரிபுகளை ஏற்படாத விதத்தில் அத்தகைய வாடிக்கையாளர்களின் கடன் தேவைகளை நிறைவு செய்து வைப்பது சாத்தியமற்றதாக இருந்து வரும்.

தவணை வைப்பு
குறித்துரைக்கப்பட்ட ஒரு காலப் பிரிவுக்கு பின்னர் மட்டுமே மீளப் பெறுவதற்கு அமைவாக வைக்கப்பட்டிருக்கும் வட்டியுழைக்கும் ஒரு வைப்புக் கணக்கு.

மொத்த மூலதனம்
இது அடுக்கு I மூலதனம். (அடிப்படை மூலதனம்) மற்றும் அடுக்கு II மூலதனம் (குறை நிரப்பு மூலதனம்) என்பவற்றின் மொத்தத் தொகையாகும்.

வியாபார நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்
ஒரு நிதிச் சொத்து அல்லது நிதிப் பொறுப்பு பின்வரும் நிலைகளிலிருந்து வந்தால் வியாபாரத்திற்கு வைக்கப்பட்டுள்ளதென வகைப்படுத்தப்படுகின்றது: (அ) விற்பனை செய்யும் அல்லது குறுகிய காலத்தில் மீளக் கொள்வனவு செய்யும் நோக்கத்திற்கென கையகப்படுத்தப்பட்ட அல்லது முதன்மையாக செலவு செய்யப்பட்டிருந்தால் (ஆ) கூட்டாக முகாமைத்துவம் செய்யப்படுவதுடன், அண்மையில் குறுங்கால இலாபமீட்டும் உண்மையான ஒரு மாதிரி அவதானிக்கப்பட்டிருக்கும் இனங்காணப்பட்ட நிதிக் கருவித் தொகுதிகளின் ஒரு பாகமாக இருந்து வந்தால்; (இ) ஒரு மூலத்திலிருந்து கிடைக்கும் தொகை (குறித்துரைக்கப்பட்ட மற்றும் தாக்கமான ஒரு பேரத் தடை கருவியாக இருந்து வரும் மூலத்திலிருந்து தோன்றிய தொகை தவிர)

கொடுக்கல் வாங்கல் செலவுகள்
ஒரு நிதிசார் சொத்தின் அல்லது பொறுப்பின் கையகப்படுத்தல், வெளியீடு அல்லது கையுதிர்ப்பு என்பவற்றுடன் நேரடியாக சம்பந்தப்பட்டிருக்கும் மேலதிக செலவுகள்.

திறைசேரி முறி
இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்படும் நீண்ட கால திகதியிடப்பட்ட ஒரு பிணையம். திறைசேரி முறிகள் ஒரு கழிவு வட்டி விகிதத்தைக் கொண்டுள்ளன.

சேர்க்கப்பட்ட பெறுமதி
சேர்க்கப்பட்ட பெறுமதி என்பது வங்கிச் சேவைகளை வழங்குவதன் மூலம் உருவாக்கப்படும் செல்வத்தை குறிக்கின்றது. அச்சேவைகளுக்காகும் செலவைக் கழித்த பின்னரேயே இது கணிக்கப்படுகின்றது. சேர்க்கப்பட்ட பெறுமதி ஊழியர்களுக்கு மத்தியிலும், அரசாங்கத்திற்கு மூலதனத்தை வழங்குபவர்களுக்கு மத்தியிலும், வரிகள் மற்றும் விரிவாக்கம், வளர்ச்சி என்பவற்றுக்கென பிடித்து வைக்கப்பட்டிருக்கும் தொகைகளின் மூலம் பகிர்ந்தளிக்கப்படுகின்றது.

இடர் பெறுமதி
சந்தை வட்டி விகிதங்கள் அல்லது செலாவணி விகிதங்கள் என்பவற்றில்ள குறிப்பிட்ட ஒரு காலப் பிரிவின் போது ஏற்படும் மோசமான நகர்வுகளிலிருந்து தோன்றக் கூடிய நட்டத்தை மதிப்பீடு செய்யும் ஒரு இடர் முகாமைத்துவ முறைமையியல்.

வொஸ்ட்ரோ கணக்கு (VOSTRO ACCOUNT)
ஒரு வங்கி பிறிதொரு வங்கியில் பராமரித்து வரும் உள்நாட்டு நாணயத்திலான நடைமுறைக் கணக்கு (நொஸ்ட்ரோ கணக்குடன் ஒப்பிடவும்).

விளைவு வளைகோடு
ஒரு முதிர்ச்சிக் கருமம் என்ற முறையில் சந்தை வட்டி விகிதங்களை காட்டும் ஒரு வரைபடம். சாதாரணமாக விளைவு வளைகோடு மேல் நோக்கி வளைந்திருக்கும்: அந்த உபகரணத்தின் கால அளவுடன் இணைந்த விதத்தில் வட்டி விகிதம் அதிகரிக்கின்றது.

நிறுவனத் தகவல்

வங்கியின் பெயர்
மக்கள் வங்கி

சட்ட அந்தஸ்து
1961ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் மூலம் ஒரு வர்த்தக வங்கியாக கூட்டிணைக்கப்பட்டு, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் உரிமம் பெற்றிருக்கும் ஒரு வர்த்தக வங்கி.

தலைமை அலுவலகம் (பதிவு அலுவலகம்)
இல. 75, சேர் சித்தம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை,
கொழும்பு 02, இலங்கை.
தந்தி: JANABANK
தொலைபேசி: +9411 2327841 (6 இணைப்புக்கள்),
+94 112446316 (15 இணைப்புக்கள்),
+94 112481481
மின்னஞ்சல்: info@peoplesbank.lk
இணையதளம்: www.peoplesbank.lk
வற் வரி பதிவு இல. 409000037-7000

கணக்காய்வாளர்கள்
கணக்காய்வாளர் நாயகம்
கணக்காய்வாளர் நாயகம் திணைக்களம்
இல. 306/72, பொல்துவ வீதி,
பத்தரமுல்லை,
இலங்கை.

KPMG,
(பட்டயக் கணக்காளர்கள்),
32 A, சேர் மொஹமட் மாக்கான் மாக்கார் மாவத்தை,
த.பெ. இல. 186,
கொழும்பு 0300,
இலங்கை

செயலாளர்
திரு. ரொஹான் பத்திரகே, எல்.எல்.பி., வங்கி முகாமைத்துவத்தில் முதுநிலைப் பட்டம், சட்டத்தரணி

தொகுதி வங்கித் தொழில் பிரிவு
த.பெ.இல. 437
ANCL (லேக் ஹவுஸ் கட்டடம்)
இல. 35, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 10, இலங்கை
தொலைபேசி: +94 112320651-6,
+94 112437239-41, +94 112392101-3
மின்னஞ்சல்: inter@peoplesbank.lk
SWIFT PSBKLKLX

கடல் கடந்த வங்கித்தொழில் அலகு
மக்கள் வங்கி, 1ஆம் மாடி,
தலைமை அலுவலகம், இல. 75,
சேர் சித்தம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை,
கொழும்பு 02, இலங்கை.
தொலைபேசி: +94 112206703, +94 112206704
தொலை நகல்: +94 112458752 / 2458821
டெலெக்ஸ்: 21500 (PBSWTCE)
மின்னஞ்சல்: fcbu@peoplesbank.lk
SWIFT PSBKLKLX

வெளிநாட்டு வாடிக்கையாளர் சேவைகள்
இல. 59, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 10, இலங்கை.
தொலைபேசி: +94 112332746, +94 112334278,
+94 112446409
டெலெக்ஸ்: 21486 PBKFMS CE
மின்னஞ்சல்: fastcash@peoplesbank.lk
nrfc@peoplesbank.lk, teletran@peoplesbank.lk
SWIFT PSBKLKLX

மக்கள் வங்கியின் துணை நிறுவனங்கள்
வ.ப. பீப்பள்ஸ் டிரவல்ஸ் நிறுவனம்
இல. 59, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 10, இலங்கை
தொலைபேசி: +94 112470190, +94 112478385,
+94 112396296
தொலை நகல்: 2434530
மின்னஞ்சல்: ptravel@peoplesbank.lk
இணையதளம்: www.peoplestravels.com

பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
1161, மருதானை வீதி, பொரளை, கொழும்பு 08.
தொலைபேசி: +94 112631631
தொலை நகல்: +94 112631000

மக்கள் வங்கியின் உப துணை நிறுவனங்கள்
(பீப்பள்ஸ் லீசிங் கம்பெனி பிஎல்சியின் துணை நிறுவனங்கள்)
பீப்பள்ஸ் பினானஸ் பிஎல்சி
இல. 385, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: +94 112376476
தொலை நகல்: +94 112376477

பீப்பள்ஸ் இன்சூரன்ஸ் லிமிட்டட்
இல. 53, தர்மபால மாவத்தை, கொழும்பு 03.
தொலைபேசி: +94 112206406
தொலை நகல்: +94 112206399

பீப்பள்ஸ் லீசிங் புரொப்பட்டீஸ் டெவலப்மன்ட் லிமிட்டட்
1161, மருதானை வீதி, பொரளை, கொழும்பு 08.
தொலைபேசி: +94 112631631
தொலை நகல்: +94 112631000

பீப்பள்ஸ் லீசிங் பிளீட் மனேஜ்மன்ட் லிமிட்டட்
1161, மருதானை வீதி, பொரளை, கொழும்பு 08.
தொலைபேசி: +94 112631631
தொலை நகல்: +94 112631000

பீப்பள்ஸ் மைக்ரோ பினான்ஸ் லிமிட்டட்
1161, மருதானை வீதி, பொரளை, கொழும்பு 08.
தொலைபேசி: +94 112631631
தொலை நகல்: +94 112631000

பீப்பள்ஸ் ஹவ்லொக் புரொப்படீஸ் லிமிட்டட்
1161, மருதானை வீதி, பொரளை, கொழும்பு 08.
தொலைபேசி: +94 112631631
தொலை நகல்: +94 112631000

மக்கள் வங்கியின் இணை நிறுவனம்
பீப்பள்ஸ் மேர்ச்சண்ட் பினான்ஸ் பிஎல்சி
இல. 21, நவம் மாவத்தை, கொழும்பு 2,
இலங்கை
தொலைபேசி: +94 112300191-4
தொலை நகல்: +94 112300190

★
Produced by **Smart Media** The Annual Report Company © Copyright Reserved

மக்கள் மனமறிந்த வங்கி

மக்கள் வங்கி

இல. 75, சேர் சித்தம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை,
கொழும்பு 2, இலங்கை.

தொலைபேசி: 2327841 (6 இணைப்புக்கள்),
2446316 (15 இணைப்புக்கள்), 2481481
மின்னஞ்சல்: info@peoplesbank.lk
இணையதளம்: www.peoplesbank.lk

★

இந்த ஆண்டறிக்கை
கார்பன் கலப்பற்றதாகும்

ஆண்டறிக்கைகளை உருவாக்கும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஒரு கார்பன் கலப்பற்ற நிறுவனமான ஸ்மார்ட் மீடியா கம்பெனியினால் மக்கள் வங்கியின் இந்த ஆண்டறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இது தவிர, இந்த ஆண்டறிக்கையின் தயாரிப்புக்கென, கடதாசியின் உபயோகம் மற்றும் அச்சிடல் என்பவற்றை உள்ளிட்ட விதத்தில் ஸ்மார்ட் மீடியா நிறுவனத்தினால் வெளியிலிருந்து பெற்றுக் கொள்ளப்படும் நடவடிக்கைகளின் விளைவாக தோன்றும் பச்சை இல்ல வாயு வெளியேற்றங்கள் சரிபார்க்கப்பட்ட மூலங்களுக்கு ஊடாக ஈடு செய்யப்படுகின்றன.

SMART MEDIA
The ANNUAL REPORT Company

www.smart.lk

PARTNER Carbonfree Carbonfund.org

www.carbonfund.org